கம்பன் களஞ்சியம்

ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

கம்பன் களஞ்சியம்

ச. சிவகாமி

திட்ட உதவியாளர் - செல்வி பி. ஜானகி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்

பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Kampan Kaḷañciyam
Author	:	DR. S. SIVAKAMI Professor International Institute of Tamil Studies CIT Campus, Chennai - 600 113 Project Fellow P. Janaki, M.A., M.Phil., International Institute of Tamil Studies CIT Campus, Chennai - 600 113
Publisher	:	International Institute of Tamil Studies, Second Main Road, CIT Campus, Tharamani, Chennai - 600 113. Phone : 044-22542992, 22542781
First Edition	:	2009
Publication No.	:	621
Language	:	Tamil
Paper used	:	18.6Kg
Size of the Book	:	Demmy 1/4
Printing type used	:	11
No. of Pages	:	458
No.of Copies	:	1200
Price	:	**280/-** (Rupees Two Hundred and Eighty only)
Printed by	:	UNITED BIND GRAPHICS 189, (101-D), Royapettah High Road, Mylapore, Chennai - 600004. Ph. : 24987562, 24661807
Subject	:	Encyclopaedia of Kamparamayanam

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' எனும் நாட்டார் வழக்கு வழியே கம்பனையும் கம்பராமாயணத்தையும் நாட்டுப்புறத்தார் முதல் ஏட்டுப் புறத்தார் வரை பல நிலைகளில் தமிழ் மக்கள் அறிந்தும் புரிந்தும் கொண்டுள்ளனர். தமிழரின் விழா எனுமாறு இன்று கம்பன் விழா நாட்டின் பல திசைகளிலும் நிகழ்ந்துவருவதைக்காண முடிகிறது. "கம்பன் என்றொரு மானுடன் இருந்ததும்" எனும் பாரதியின் தொடரினைத் தமிழர்கள் இன்று வியந்து போற்றுகின்றனர்.

- **அறம்** (அறம்வெல்லும் பாவம்தோற்கும் 4929, 9574)
- **கற்பு** (குலம் பொறை கற்பு இவை சுமந்த கோசலை 2196)
- **உறவுகள்** (குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு, பின். . . 6507)

எனும் உயரிய விழுமியங்களை முன் வைத்தக் காப்பியக் கட்டமைப்பு, தமிழ்ப்பற்று மற்றும்

ஒன்றேஎன்னின் ஒன்றே ஆம், பல என்று உரைக்கின், பலவே ஆம்
அன்றே என்னின் அன்றே ஆம், ஆமே என்னின் ஆமே ஆம்
இன்றே என்னின் இன்றே ஆம், உளது என்று உரைக்கின் உளதே ஆம்
நன்றே நம்பி குடி வாழ்க்கை நமக்கு இங்கு என்னோ பிழைப்பு அம்மா (6059)

எனச் சமயப் பொதுமை ஆகிய பல தளங்களில் ஆய்வுத்தளங்களைப் பரவலாக்கிப் பயில்வோர் சிந்தனைகளைக் கம்பன் பால் கருத்துத் தோய்ந்திடுமாறு சிந்தித்திட வாய்ப்பளிக்கும் அரிய பெட்டகமாகக் கம்பன் களஞ்சியம் எனும் இந்தச் சிறப்பு மிக்க நூலினைப் பேரா. ச. சிவகாமி அவர்கள் தமிழ் உலகம் காலந்தோறும் பெருமை கொள்ளத்தக்கவகையில் வெளிக் கொண்டுவந்துள்ளார்.

கம்பன் படைத்துள்ள பாத்திரங்களைக் கம்பனின் அடைமொழி வழியே எடுத்துத் தரும் நூலாசிரியர் அரக்கர் குறித்து நமக்குச் சொல்லும் போது அவுணர், தானவர், நிருதர், நிசிசரர், கண்டகர், யாதுதானர், வயவர், புலையர் எனப் பலவாறாகச் சுட்டப் படும் அரக்கரின் அழிவே காப்பியத்தின் அடிப்படை இலக்காகும் என்று சொல்லி இவ்வரக்கர் "அறநெறியை அறவே துறந்தவர்" எனக் கம்பனை உள்வாங்கிய நிலையில் பளிச்சென விளங்கிட எடுத்துரைத்துள்ளார் (ப.108). இந்நூல்,

கதைமாந்தர்
சமூகவியல்
பண்பாட்டியல்
இயற்கை

எனும் நான்கு பகுதிகளாகப் பகுக்கப்பட்டு கம்பன் படைப்புச் செழுமை அவன் கவித் தொடர்களால் விளக்கப்பட்டுள்ளது. மக்கட்பாகுபாடு, தொழில்கள், உணவு, அணிகலன், மலர்கள், பயிர்கள், மரங்கள், மணப்பொருள்கள் என எண்ணிறந்து காணப்படும் கூறுகளை விண்வெளி, பயிரியல், உயிரியல் உலோகங்கள், நாடுகள், தீவுகள், மலைகள், நீர்நிலைகள், ஆறுகள். . . எனப்

பலவாக வகை தொகைப்படுத்திக் கம்பன் கவித்திறனுக்குக் கவனமாக ஆதாரங்கள் காட்டியுள்ள ஆசிரியர் எஞ்சியனவற்றைப் புறனடையாகத் தந்துள்ளார். கம்பன் கையாண்டுள்ள சொற்கள், அடைமொழிகள், விளக்கங்கள், கவித்துவ மொழி நடைகள்அனைத்தும் எண்ணிப்பார்க்கத்தக்க வகையில் கம்பன் களஞ்சியமானது அமைந்து கம்பர் கவி ஆளுமைக்கு ஓர் பதமாக விளங்குகிறது என நூலாசிரியர் சொல்லியுள்ளமை மிகவும் ஆழ்ந்த கருத்துக்கிடமாக அமைகிறது. தமிழர்கள் தமிழின் பெருமையை மார்தட்டிச் சொல்லிக் கொள்ள உரியனவற்றுள் எம் நிறுவனத்தின் வெளியீடான **கம்பன் களஞ்சியம்** என்பதும் ஒன்று. நூலாசிரியரின் கடின உழைப்பினைத் தமிழர்கள் கணக்கில் கொண்டு நன்றி பாராட்டுவர்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்நிறுவன முன்னாள் இயக்குநரும், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தருமான **முனைவர் ம. இராசேந்திரன்** அவர்களுக்கும் என் நன்றி.

இப்பெருந்திட்ட ஆய்வு இந்நிறுவனத்தில் நடந்தேறுவதற்குத் துணைநின்ற மேனாள் இயக்குநர் **முனைவர் சா. கிருட்டினமூர்த்தி** அவர்களுக்கும், இத்திட்டப்பணிக்கு நிதிநல்கிய பல்கலைக்கழக மானியக் குழுவினர்க்கும் நன்றி உரித்தாகுக.

இந்த அரும் பெரும் பெட்டகம் வெளிவரப் பல வகைகளிலும் துணைநின்ற இந்நிறுவனப் பணியாளர்களுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

நன்றிக் கொழுந்து

கம்பன் களஞ்சியம் எனும் இன் கரும்பைச் சுவைக்க பொருளுதவிய பல்கலைக்கழக நல்கைக் குழு;

'யான் கண்டனையர் என் இளையர்' என்ற பிசிராந்தை சொல்லுக்குச் சான்றாக, இத்திட்டப் பணியில் எனக்கு இராமன் கை வில் போன்று செயல்பட்ட செல்வி. பி.ஜானகி;

இப்பேராய்வுத் திட்டப் பணிக்கு அனுமதி வழங்கி, தேவையான உதவிகளனைத்தையும் உரிய நேரத்தில் அளித்த நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி;

கம்பன் ஆய்வில் கால் பதிக்கச் செய்து வழி காட்டிய எனது ஆசிரியப் பெருந்தகை முனைவர் ச.வே.சுப்பிரமணியம்;

இக்களஞ்சியப் பணிக்கு வித்தூன்றி, அவ்வப்போது தேவையான உதவிகளை நல்கிய நிறுவன மேனாள் பேராசிரியர் முனைவர் அன்னிதாமசு;

இதன் செயலாக்கத்தில் நான் தொடர்பு கொண்ட போதெல்லாம் இன்முகத்துடன் வழி நடத்திய கம்பன் ஆய்வாளர் முனைவர் லீ. ரூத்ஜாய்;

தம் பல்வேறு பணிகளுக்கிடையிலும் இப்பணி சிறப்புற அமைய தம் மேலான கருத்துகளை வழங்கிய,

முனைவர் ச. அகத்தியலிங்கம்
முனைவர் இரா. காசிராசன்
முனைவர் குளோரியா சுந்தரமதி
முனைவர் வ.அய். சுப்பிரமணியம்
முனைவர் சுப. திண்ணப்பன்
பேரா.பா. தேவேந்திரன்
முனைவர் கி. நாச்சிமுத்து
திரு. பலவேசம்
முனைவர் அ.பிச்சை
திரு. ஸ்ரீதரன் நாயர்

மற்றும்

பல்கலைக் கழக நல்கைக் குழுவின் தேர்வாளராக இருந்த முனைவர் டேனியல் தேவ சங்கீதம், இடைநிலை மதிப்பீட்டாளராக இருந்து மதிப்புரை வழங்கிய முனைவர் வ.ஜெயதேவன், முனைவர் எம். ரவீந்திரன்;

எண்ணம் போல் இப் பேராய்வுத் திட்டம் நிறைவு பெற பல்லாற்றானும் துணைநின்ற நிறுவன மேனாள் இயக்குநர் முனைவர் மா.இராசேந்திரன்; அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ள நிறுவன இயக்குநர் பேரா.முனைவர் கரு.அழ. குணசேகரன்;

நிறைவுப் பணியில் முழுமையான ஒத்துழைப்பும் உதவியும் நல்கிய எனது அன்பு ஆய்வு மாணாக்கர்கள் திருமதி ரா.ராஜேஸ்வரி, திருமதி இரா.மோகனா, திரு.ச.கண்ணதாசன்;

நிறுவன துணை இயக்குநர் திரு.க.ந.வீரபாகு சுப்பிரமணியம் மற்றும் அவர் தலைமையிலான நிறுவன அலுவலகத்தார், நூலகர் திருமதி இரா.பார்வதி, கணினிப் பயன்பாட்டில் உதவிய (மறைவு) திருமதி இரா.வெண்ணிலா, கணினிப் படியினைப் பொறுமையுடன் மிகச் சிறப்பாகச் செம்மைப்படுத்தித் தந்துள்ள திரு. சு. கண்ணன்;

என. இவர்கள் அனைவருக்கும் என் இதயங் கனிந்த நன்றி.

பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலின் பெரிது - குறள் 103

ச. சிவகாமி

ஓராயிரம் ஆண்டு ஓடிவிட்ட பின்னாலும்
பல்லாயிரம் பாட்டுப் பாடி வைத்த கம்பனுக்கு
சொல்லாயிரம் கொண்டு துதி செய்யப் போந்தவர்கள்
எல்லார்க்கும் முன்னுரையில் என் வணக்கம் கூறுகிறேன்

- கண்ணதாசன்

ஆசை பற்றி அறையலுற்றேன்

உலகம் யாவையும் தாம் உளஆக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார் – அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே

பொய் இல் கேள்விப் புலமையினோர் புகல் தெய்வ மாக்கவியாம் கம்பனின் மாட்சி தெரிவிக்க அடங்கா ஆசை கொண்டேன். அவ் ஆசைப்பயிர் கம்பன் களஞ்சியமாய்த் தழைத்துள்ளது. அது விளைந்துள்ள முறைமை இங்குப் பேசப்படுகிறது.

நோக்கம்

கம்பராமாயணத்தின் எப்பொருள் குறித்து அறிய விரும்பினாலும் அது உடனடியாக, எளிதாக, தேவையான விளக்கங்களுடன் அறியத்தக்க வகையில் 'கம்பன் களஞ்சியம்' அமைய வேண்டும்; கம்பன் ஆய்வாளருக்கு முழுநிலையில் துணை நிற்கும் கையேடாகவும் கம்பன் அகராதியாகவும் செயல்பட வேண்டும்; ஆய்வாளர் மட்டுமின்றிக் கம்பன் ஆர்வலர் யாவருக்கும் கம்பர் அறிவின் ஆழமும் அகலமும், தமிழின் பெருமையும் உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டப்பட வேண்டும்; எனவே எந்த ஒரு சிறு கூறும் விடுபடாதவாறு மிகுந்த எச்சரிக்கையுடன் 'கம்பன் களஞ்சியம்' தொகுப்புப் பணி நடை பெற வேண்டும்; கம்பனுக்குப் பல் நோக்கில் அமையும் களஞ்சியமாக மட்டுமல்ல; முழுமையான ஆய்வு நோக்குடன் உருவாக்கப்படும் ஆய்வேடு என்ற வகையிலும் கருத்துச் செலுத்தப்பட வேண்டும் - என்ற நோக்குடன் இப்பணி தொடங்கப்பட்டது. இவ் இலக்கினின்றும் விலகாது குறித்த மூன்றாண்டு கால (சூலை2003 - சூன்2006) எல்லையில் இயன்றவை இவண் அளிக்கப்பட்டுள்ளன. அதன் பின் பிற பணிகளுக்கிடையே நேரம் கிடைத்த பொழுதெல்லாம் முயன்று முழுமையாகச் செப்பம் செய்யப்பட்டு இன்று நூலாக வெளி வருவதில் பெரிதும் மகிழ்கின்றேன்.

அமைப்பு

கம்பன் களஞ்சியத்துட் புகுமுன் அவன் புலமையைப் புலப்படுத்து முறையிலும் கம்பராமாயணத்தின் செழுமையைக் காட்டும் வகையிலும் ஒரு முன்னுரையாகக் 'கம்பன்' எனும் கட்டுரை அமைகிறது. கம்பன் பெருமையை உணர்த்தும் நோக்கில் அதற்கு எழுந்துள்ள பதிப்புகளும் மொழிபெயர்ப்புகளும் குறித்த விளக்கங்கள் தொடர்ந்து அமைகின்றன.

கம்பன் களஞ்சியப் பேராய்வுத் திட்டம் நான்கு பகுதிகளாக அமைகின்றது. முதல் பகுதி கதைமாந்தரின் தொகுப்பாகும். இக்கதை மாந்தர் 1. கதையுள் நேரடியாகத் தனித்து இடம் பெறுவோர், 2. தொகையாக இடம் பெறுவோர், 3. கதை மாந்தர் வழி அறியப்படுவோர் என மூவகையாகின்றனர். இம்மூவகையினரும் தனித்தனியே அகர வரிசைப் படுத்தப்பட்டுள்ளனர்.

கதை மாந்தரின் உருவ வருணனை, பண்பு வெளிப்பாடு, செயல்திறன், குறியீடுகள், சிறந்த சொல்லாட்சிகள் என்பன தொகுக்கப்பட்டுள்ளன. அவை பாடல் எண் வரிசையில் அடுக்கப்பட்டுள்ளன. கதை மாந்தர் பற்றிய முழு வரையறையை உணர்த்தும் வண்ணம் இத்தொகுப்பு அமைகிறது.

கதை மாந்தர் பற்றிய அறிமுகத்தோடு, தொகுத்த குறிப்புகளை அணுகினால் கூடுதல் பயன் பெறலாம் என்ற எண்ணம் எழுந்தது. எனவே அவரவர் பற்றிய அறிமுகத்தின் பின்பே கம்பன் குறிப்புகள் தொடர்கின்றன. நேரடியாக இடம் பெறும் தனியர் 199, தொகையினர் 37, கதை (மாந்தர்) வழி அறியப்படுவோர் 67 என்ற எண்ணிக்கையை இதன் வழி அறிய முடிகிறது.

நேரடியாக இடம் பெறும் தனியரில் ஆண் 165, பெண் 34 என்ற தன்மையையும் காணலாம். இவருள்ளும் அரக்கர் 73, வானரம் 44, மானுடர் 40, வானவர் 33, கரடி 3, பறவை 3, பாம்பு 1, நதி 1 மலை 1 என்ற வகைப்பாடும் பெறப்படுகிறது. இவர் தம்முள் பெயரின்றிச் சுட்டப்படுவோர் எழுவர் ஆவார். கும்பன், சதவலி, திரிசரா, துன்முகன், மருத்தன், மாலி என ஒரே பெயரில் இருவர் அமைதலும் சுட்டற்பாலது.

இரண்டாம் பகுதி - சமூகவியல், மூன்றாம் பகுதி - பண்பாட்டியல், நான்காம் பகுதி - இயற்கை எனவும் அமைகின்றன. தொகுப்பு அமைப்பில் ஒன்றாகவே இவை அமைகின்றன. தமிழ், மக்கட் பிரிவு, உறவுப் பெயர்கள், ஊர்திகள், அளவைப்பெயர்கள் என்பன சமூகவியல் பகுதியாகின்றன. உணவு, உடை, ஒப்பனை, அணிகலன், கலை, நம்பிக்கை, தொன்மம், வேள்வி, பழக்க வழக்கம், பழமொழிகள், மரபுத்தொடர், பொழுது போக்கு, வாழ்வியல் ஆகியவை பண்பாட்டியலில் அமைகின்றன. காப்பியக் களனுள் கொண்டுள்ள ஆளுமை காரணமாக, போர்த்தொழில் எனும் பகுதி மக்கட் பிரிவு எனும் பெரும் பிரிவில் அமையும் தொழில் எனும் உட்பகுப்பினின்றும் தனியே எடுத்து அதன் இறுதியில் காட்டப் பட்டுள்ளது. இதுபோன்றே தொன்மங்களும் நம்பிக்கை எனும் பெரும் பிரிவின் இறுதியில் தனியாக உணர்த்தப்பட்டுள்ளன.

இயற்கையுள் தாவரங்கள், விலங்குகள், உலோகங்கள், மணிகள், இடங்கள், நீர் நிலைகள், நிறங்கள் என்பன அடங்குகின்றன. மேற்கண்ட தொகுதிகளுள் இடம் பெறாத, கட்டாயமாக உணர்த்தப்பட வேண்டும் எனக் கருதியவற்றின் தொகுப்பாக எஞ்சியன அகர வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. கதைத் தலைவன் இராமனைப் பிற கதைமாந்தர் துதிக்கும் துதிகளுடன் கம்பன் களஞ்சியம் நிறைவுறுகிறது.

தலைப்புச் சொல், அதற்கான மாற்றுச் சொல் (வேறு பெயர்), வருணனை, சிறப்புச் செய்திகள் என்பன பொதுப்பண்பாக இப் பிரிவுகளில் பின்பற்றப்பட்டுள்ளன. கம்பன் களஞ்சியம் கருத்துக்கு முதன்மை அளித்திருப்பதால் அகரவரிசை முழுமையாகப் பின்பற்றப்படவில்லை. தொடர்புடையன ஒருங்கே இணைக்கப்பட்டுள்ளன. எனவே பொருளுக்குத் தக உள்வரிசைப்படுத்தலில் மாற்றம் காண்பதும் இயல்பாகும். இதனைப் பெரும் பகுப்புகளுக்கு இடையே அமையும் உட்பகுப்புகளின் தலைப்பு கொண்டு எளிதாகப் பின்பற்றலாம். சிறப்புக்குரியன எனக் கருதப்பட்டவை அவ்வவற்றின் இறுதியில் இடம் பெறுகின்றன. பொருள் தெளிவு, சிறப்பு, கம்பர் கவிநலம் காட்டல் எனத் தேவையான இடங்களில் முழுப்பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இது போன்று தேவைக்கு விளக்கங்களும் அடைப்புக் குறியுள் தரப்பட்டுள்ளன. சில குறிப்புகள் அவற்றின் இன்றியமையாமை கருதி ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இடம் பெற்றுள்ளன.

இராவணனை ஆரியன் என்றே சுட்டுதல்; அவன் ஆட்சியில் ஆராய்ச்சி மணி மண்டபம் இருந்தமை; சீதை கன்னிமாடத்தைச் சுற்றி அகழி இருத்தல்; சார்த்தலளவை தருவதில் தனிவிழைவு காட்டுதல், ஊழிக்காலத்தைப் பாராட்டுதல், சைவ - வைணவ ஒருமைப்பாட்டை உருவாக்குதல், அந்தணர்களுக்கு மிக உயர்ந்த மதிப்பளித்தல், தோள்களில் சூலம், மழு வரைதல் போன்ற எண்ணற்ற செய்திகள் இக்களஞ்சியம் வாயிலாகப் பெறப்படுகின்றன.

பயன்

1. தமிழ்த் திறனாய்வுத் துறைக்கு இது முன்னோடிப் படைப்பாகும்.
2. பிற காப்பியங்களுக்கும் புராணங்களுக்கும் இத்தகு களஞ்சியம் படைத்தற்கு வழிகாட்டியாகும்.
3. கம்பன் ஆர்வலர், ஆய்வாளர் அனைவருக்கும் பயனாகும்.
4. கம்பன் காலச் சமுதாயம், அரசியல், சமய நிலை, வாழ்வியல் எனப் பலவும் ஒருங்கே காணக்கிடைக்கும்.
5. பல மொழி, நாடுகளிடையே அமையும் இராமாயணங்களின் ஒப்பியல் கல்விக்கு மிகவும் இன்றியமையாத துணையாக இக்கம்பன் களஞ்சியம் திகழும்.
6. கம்பன் பெருமைக்கு அணிசேர்க்கும் இக்களஞ்சியப்பணி தமிழின் மேன்மையையும் வலியுறுத்தும்.

கம்பன் சொற்களஞ்சியம், கம்பன் அணிகள் களஞ்சியம், கம்பன் கதைக் களஞ்சியம் என்பனவும் உருவாக்கப்படல் வேண்டும் என்பது இப்பணியில் உணரப்பட்ட எண்ணமாகும்.

முழுமையை எதிர்நோக்கி முயற்சித்த இப்பணியில் என் அறியாமை காரணமாக விடுபாடுகளும், குறைகளும் இருக்கலாம். அறிஞருலகம் பொறுத்தருள வேண்டுகிறேன்.

பிறவிப் பயனை உணர்த்தி
வானேறினும் தோன்றாத் துணையாய்
வழிநடத்தும் பெற்றோர்
வ.தி. சங்கரலிங்கம் - மீனாட்சியம்மாள்

ஆகியோருக்கு நிறைந்த நெஞ்சுடன் இப்பெரும் பணியைக் காணிக்கையாக்குவதில் மன நிறைவும் மகிழ்வும் கொள்கிறேன்.

நன்றி

கம்பன் களஞ்சிய அடிப்படை நூல்கள்

கம்பராமாயணம் (இராமாவதாரம்), கம்பன் கழகம், சென்னை, 1976.

கம்பராமாயணம் (8 தொகுதிகள் உரையுடன்), கம்பன் அறநிலை, கோயமுத்தூர், 1994.

(மிகைப்பாடல்கள் விலக்கப்பட்டுள்ளன)

பத்தாயிரம் கவிதை
முத்தாக அள்ளி வைத்த
சத்தான கம்பனுக்கு ஈடு – இன்னும்
வித்தாக வில்லை என்று பாடு!
காலமெனும் ஆழியிலும்
காற்றுமழை ஊழியிலும்
சாகாது கம்பனவன் பாட்டு – அது
தலைமுறைக்கு எழுதி வைத்த சீட்டு

- கண்ணதாசன் (கம்ப சூத்திரம்)

கம்பர்

'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பாட்டுக்கொரு புலவன் பாரதியை மார்தட்டச் செய்த (பாரதி பாடல்கள் - ஆய்வுப் பதிப்பு, பாடல் 240:3) பெருமையுடையது கம்பராமாயணம். இந்திய மொழிகள் அனைத்திலும் புகழ் பெற்று இந்திய இலக்கியமாகத் திகழும் சீருடையது இராமாயணம். அதன் படைப்பாளர் எண்ணற்றோருள்ளும் முதன்மைச் சிறப்புறும் மூவருள் (கம்பர், வால்மீகி, துளசிதாசர்) முன்னிற்பவராகத் தமிழில் இராமகாதை படைத்த கம்பர் மாண்புறுகிறார். கி.பி. பத்தாம் நூற்றாண்டினராகக் கருதப்படும் கம்பர் தம் இராமாயணத்திற்கு இட்ட பெயர் 'இராமாவதாரம்' என்பதாம். எனினும் 'கம்பன்' என்றாலே அது அவர் படைத்த இராமாயணத்தைக் குறித்து நிற்றல் அதன் புகழுக்கு ஓர் விளக்கம். (கம்பன் என இக் களஞ்சியத்துள் சுட்டப்படுவது கம்பராமாயணத்தைக் குறிக்கும்)

தமிழில் விளங்கும் தன்னிகரற்ற இலக்கியப் படைப்புகளின் முன்வரிசையை அணிசெய்வது; தமிழின் முதல் ஆய்வுநூலைப் பெற்ற பெருமைக்குரியது; கல்வியாளர், பொதுமக்கள் என இருபாலாராலும் போற்றப்படும் சிறப்புடையது; எதிர்ப்பியக்கம் ஒருபுறம் நிலவிக் கொண்டேயிருப்பினும் தமிழகத்திலும் அதற்கப்பாலும் மிக்க புகழுடன் விளங்குவது; எண்ணற்ற வழிநூல் கண்டது; கழகங்கள் வழி தமிழுள்ளங்களைக் கொள்ளை கொண்டது; பின் தோன்றல்கள் பலருக்கும் வழிகாட்டியானது; தோற்றம் முதல் இன்றுவரை தனக்கென ஒரு மெய்யன்பர் கூட்டத்தைப் பெற்றிருப்பது; இவற்றிற்கெல்லாம் மேலாக எண்ணற்ற ஆய்வுகளைப் பெற்று காலந்தோறும் தமிழன்னைக்கு விருந்து படைப்பது எனப் பலவாறான சிறப்பிற்குரியது கம்பராமாயணம்.

கம்பராமாயணம்

கம்பர் தமக்கு மூலநூலாக வால்மீகியின் இராமாயணத்தைச் சுட்டினும், தமது படைப்பை அதன் மொழிபெயர்ப்பாக மொழிந்திடினும் (10), ஆய்வாளர் வழி நூலாகவே அதனைக் கொள்வர். தமிழில் எழுந்துள்ள முதனூல், மூலநூல் தான் கம்பராமாயணம் என வலியுறுத்துவோரும் உண்டு (கு.திருமேனி, கம்பனுக்குக் கதை கொடுத்தவர் வான்மீகரா?). எனினும் கம்பர் தமது காப்பியம் மொழிபெயர்ப்புத்தான் என்பதை,

அன்னானொடு போயின தானை அளந்து கூற
என்னால் அரிதேனும் இயம்பு வான்மீகன் என்னும்
நல்நான் மறையான் அது நாற்பது வெள்ளம் என்னச்
சொன்னான்; பிறர் யார் உணர்ந்து கொடுக்க வல்லார் (8025)

என்பது போன்று வெளிப்படுத்துகிறார். ஆறு காண்டங்களில் 118 படலங்களில் 10368 பாடல்களுடன் 1293 மிகைப்பாடல்களையும் இது கொண்டுள்ளது (சென்னை கம்பன் கழகப் பதிப்பு, 1976).

கம்பர் தமது இராமாயணத்தைத் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் மாற்றி இராமகாதைக்குப் புத்துயிர் தந்து மெருகூட்டினார் என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை. இத்தன்மைக்குத் தமிழகத்தில் இராமாயணம் தொடர்பாக வழங்கப்படும் சுமார் 100 வழக்குக் கதைகள்; 35 நாட்டுப்புற நாடகங்கள், கதைப் பாடல்கள்; 80 பழமொழிகள்; 20 விடுகதைகள்; அவருக்கு முன்னெழுந்த தமிழ் இராமாயணங்கள்; பிற இலக்கியங்களில் அமைந்த இராமாயணப் பதிவுகள் என்பனவும் துணை நிற்கின்றன. எனவேதான், கம்பராமாயணம் மொழிபெயர்ப்போ, தழுவலோ அன்று மூலமே எனும் கருத்து ஆதரவு பெறுகிறது. தமிழ் இலக்கியத்திற்குக் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவிலேயே இலக்கணம் வகுத்த தொல்காப்பியத்தின் விதிமுறைகள் அதிலும் பின்பற்றப்பட்டிருப்பது (ச. சிவகாமி, தொல்காப்பியரும் கம்பராமாயணமும், ஆய்வுக்கோவை, தொகுதி 2, 1995) இக்கருத்திற்கு மேலும் வலுசேர்க்கிறது.

கம்பராமாயணத்திற்கு எதிரான பிரச்சாரத்தைச் சிலர் திட்டமிட்டு உருவாக்கி வளர்த்த போதும், கம்பன் அமுதை நஞ்சாகக் காட்டியபோதும், நெருப்பில் நீறாகட்டுமெனத் தாண்டவமாடிய போதும், எதிர்நூல் படைத்து இன்புற்ற போதும் அவர்களது நோக்கம் எதிர் விளைவே கண்டது.

ஓலை எரியும் தாளெரியும் உள்ளத்து எழுதி வைத்து நிதம்
காலை மாலை ஓதுகவி கனலில் வெந்து கரிந்திடுமோ?

எனும் கவிமணி தேசிக விநாயகம் கூற்றே உண்மையானது; நிலையானது. இன்று தமிழகம் மற்றும் அயல்நாடுகளில் தோன்றியுள்ள ஐம்பதிற்கு மேற்பட்ட கம்பன் கழகங்கள் அதன் பெருமையைப் பட்டிதோறும் பறைசாற்றுகின்றன. எதிர்ப்பு அலைகளை அடக்கி, தடைச்சுவர்களைத் தகர்த்து இன்று தமிழகம் கம்பக் கடலாடிக் களிக்கின்றது. தமிழ்ச்சக்கரவர்த்தியாக, உலகப் பெருங்கவிஞருள் ஒருவராகப் போற்றப்படும் கம்பரின் இவ் இமாலய வெற்றிக்கு அவரது படைப்புத் திறன் முதற் காரணமாகிறது.

கம்பர் தம் காப்பியத்துள் ஆங்காங்கே கவிதைக்கும் கவிஞருக்கும் உவமை, வருணனை வழி இலக்கணம் காட்டுகிறார். அவையனைத்தும் அவர் படைப்பிற்கும் பொருந்தி நிற்றலை உரையாசிரியரும் (உ.வே.சாமிநாதையர்), திறனாய்வாளரும் (ச.வே. சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள், பக்.5-27) வெளிப்படுத்தியுள்ளனர். கவிதைப் பண்பினை, இயல்பினை இராமனின் அம்பாக வடித்துக் காட்டும்,

நல் இயல் கவிஞர் நாவில் பொருள் குறித்து அமர்ந்த நாமச்
சொல்என, செய்யுள் கொண்ட தொடை என தொடையை நீக்கி
எல்லையில் சென்றும் தீரா இசைஎன பழுது இலாத
பல் அலங்காரப் பண்பே காகுத்தன் பகழி மாதோ (7293)

எனும் பாடலை இவண் சான்றாக்கலாம். தமிழ்க் கவிக்குத் தானே இலக்கணமும் இலக்கியமுமாய் நின்று சிறக்கிறது கம்பராமாயணம்.

படைப்பு நோக்கம்

அனுமன், பரதன், இலக்குவன், குகன், தயரதன் போன்று இராமன் மீது கம்பர் கொண்ட மாளாக் காதலே இக்காப்பியப் படைப்பிற்கு அடிப்படை நோக்காக, இலக்காக அமைகிறது. இதனை அவரின் அவையடக்கப் பாடல்கள் மிகத் தெளிவாக (4,6) இயம்புகின்றன. கம்பரின் ஆளுடை நாயகனாக இராமன் சுட்டப்படுதலும் (8627) இதனைக் குறிக்கும்.

சைவ, வைணவ ஒருமைப்பாட்டினை வலியுறுத்த இக்கதையைக் கம்பர் தேர்ந்தார் எனக் கொள்வதற்கும் பேரிடன் உண்டு. 'அரன் அதிகன்; உலகு அளந்த அரி அதிகன் என்று உரைக்கும் அறிவிலோர்க்குப் பரகதி சென்று அடைவு அரிய பரிசே' (4470) என இருவருக்குமிடையே வேற்றுமை பாராட்டுவாரை அறிவிலார் என்றும் அவர்கள் முக்திநிலை பெறுதல் அரிது எனவும் விளம்புகின்றார். 'மாமாயக் கூத்தனாக' இராமனைச் சுட்டி (7584) வருணனையிலும் இவர் தம் இணைவைக் காட்டி இன்புறுத்துகிறார். நீறு அணிந்த கடவுளாகிய சிவன் போன்று வெளுத்திருந்த மேகம் கடல் நீர் மேய்ந்தபின் திருமகளைத் தன் மார்பில் உடைய திருமாலின் நிறத்தைப் போன்று மாற்றம் கொண்டதாகக் (13) கூறுகிறார். இராமனின் அவதார நிலையிலும் இவ்விணைவு,

மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த காரணன் – கைவில் ஏந்தி
ஆலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான் (5884)

என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிவமைந்தரின் புகழும் பலவாறாகப் பேசப்பட்டுள்ளது. 'மயில் ஊர் கந்தனை அனையவர் கலை தெரி கழகம்' (79) என இளைஞரும், 'முருகற் செவ்வியர்' என இராம இலக்குவரும் (3774) உவமிக்கப்படுதல்; இலக்குவன் இளங்குமரனாதல் (7512), 'முருகன் செவ்வியான்' ஆகப் பரதன் சுட்டப்படுதல் (2148),

கும்பகருணனை எதிர்த்து நிற்கும் அங்கதனை, 'குமரன் உற்ற சீற்றமும் தானும் நின்றான்' எனக் காட்டுதல் (7459); வெந்திறல் வேல் கொடு சூர் ஆடும் வீரச் சுந்தரன் (3600); முருகன் தந்த அத்தளிரியல் பாகத்தான் (3917) என்பன போன்று முருகவேளும், அரிதாக ஐங்கரக்கரி (7879) என விநாயகப் பெருமானும் சிறப்பிக்கப்படுதல் இக்கருத்துக்கு அரணாகும்.

கம்பரைச் சைவ சமயம் சார்ந்தவராகக் கருதுதலையும், காப்பியத்துள் சிவன் பெறுமிடத்தைத் தனிப் பெருநூலாகத் தொகுத்து விரித்துரைத்துள்ளதையும் (ராய.சொக்கலிங்கம், கம்பனும் சிவனும்) இவண் இணைத்து நோக்கலாம்.

காப்பியக் கொள்கைகள் (பாவிகம்)

இலக்கியம் வாழ்க்கைக்குப் பயனுடையதாக அமைய வேண்டும் என்பதில் கம்பர் மிகுந்த அக்கறை கொண்டவராகக் காணப்படுகிறார். வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அடிப்படைப் பண்புகள் சிலவற்றைத் தம் காப்பியக் கொள்கைகளாக்கிக் கதை நெடுகிலும் அவற்றைப் படரவிட்டுள்ளார். காப்பியத்தின் உயிர் நாடியாக அவை திகழ்கின்றன.

1. **அறம்** : அறவழி நிற்றலையே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொளல் வேண்டும் என்பதை,

அறம் வெல்லும் பாவம் தோற்கும் (4929, 9574)

வெல்லாது அறத்தினைப் பாவம் (8234)

அறத்தினைப் பாவம் வெல்லாது (9109)

எனப் பன்னிப்பன்னிக் கூறுகிறார். இதனை வலியுறுத்துவதற்காக இது தம் கருத்து மட்டுமல்ல அறிஞர் அறிவுரையுமாம் என்பதை 'அறம் தலை நின்றார்க்கு இல்லை அழிவு அறிஞர் வார்த்தை' (9173) என உணர்த்துகிறார். அறமே முடிவற்றது, என்றும் நிலையானது என்பதனை 'அறத்திற்கு ஈறு உண்டோ' (5136) என வினவி 'அறமும் ஈறு இன்றால்' (5138) எனப் பேசுகிறார். 'ஊனம் இல் அறநெறி' (126) எனப் புகழ்கின்றார்.

முதன்மைக் கதை மாந்தர்களை அறத்தொடு தொடர்புபடுத்தியே காட்டுகின்றார். 'மண்ணிடை யாவர் இராகவன் அன்றி மாதவம் அறத்தொடும் வளர்த்தார்?' (97); 'தொல் அறச் சான்று என நின்றவன்' (10267) எனப் பெருமிதம் கொள்ளும் கம்பர் அவனை 'அறம் அன்னான்' (4692), 'இறையவன் இராமன் என்னும் நல் அற மூர்த்தி' (9166), 'அறம் வளர்க்கும் கண்ணாளன்' (9903), 'அறம் உன்னுவான்' (9874) எனப்பலபட பேசுகிறார். இலக்குவனை, அறத்தின் இன்னுயிர் அனையவன் என்றும் 'அறத்தின் வழாதாய்' (8521) எனவும் காட்டுகின்றார். அனுமனை அறவன் (5512) எனப் போற்றுபவர், சீதையை அறம் கொள் கொம்பு (5860) ஆகவும் சுமித்திரையை, 'அறம் தானே என்கின்ற அயல் நின்றாள்' (2369) ஆகவும் புகழ்கின்றார். அறங்கள் நாறும் மேனியரான (3937) இராம இலக்குவரைக் கும்பகருணன், அறப்பெருந்துணைவர் (7404), அறம் என நின்ற நம்பர் (7405), அறம் தரு சிந்தையோர் (8840) எனப் பாராட்டுவதும் சுட்டத்தக்கது. எதிர்த்தலைவன் இராவணன் கூட சீதையை 'அறம் தரும் செல்வம் அன்னீர்' (7646) என விளிப்பதும் இலக்குவனை இராவணனிடம் அவன் ஒற்றன் சாரன் என்பான், 'அறக்கண் அல்லது ஒரு கண் இலன் ஆகி' என அறிமுகப்படுத்துவதும் (6881) நோக்கத்தக்கன. 'அறம் துணை ஆவது அல்லால் அரு நரகு அமைய நல்கும் மறம் துணை ஆகி, மாயாப் பழியொடும் வாழமாட்டேன்' (9105) என வீடணன் உரைப்பதும் உன்னத்தக்கது.

எதிர் நிலை மாந்தரான அரக்கரை, 'அறங்கொளாதவர்' (3030), 'அறத்துறைத் திறம்பினர்' (4248), 'அறத்தைத் தின்று அருங் கருணையைப் பருகி வேறு அமைந்த மறத்தைப் பூண்டு, வெம்பாவத்தை மணம் புணர் மணாளர்' (9304) என ஏசுகிறார். 'அறம் தலை நின்றவனாக' இராமனைச் சுட்டியவர் (6381) 'அறம் தலை நின்றிலாத அரக்கன்' என இராவணனைக் (3532) குறிக்கின்றார். இராமன் அழகில் தன்னை இழந்த சூர்ப்பணகை அவனைக் கவர்வதற்காகத் தன்னை, 'ஆய்வுறு மனத்தேன் ஆகி, அறம் தலை நிற்பது ஆனேன்' என இயம்புவதும் எண்ணற்பாலது.

அறத்தின் பெருமையை,

ஆய்வினை உடையவர் ஆகி, அறம் பிழையாதார்க்கு எல்லாம்
ஏய்வன நலனே அன்றி, இறுதி வந்து அடைவது உண்டோ?
மாய்வினை இயற்றி, முற்றும் வருணன் மேல் வந்த சீற்றம்
தீவினை உடையார் மாட்டே தீங்கினைச் செய்தது அன்றே (6668)

எனப் பேசுகிறார். அறத்தின் வழி நிற்போர்க்கு எப்பொழுதும் நன்மையே கிடைக்கும் என்பதனை வருணன் மீது விட்ட இராகவன் அம்பு அவன் மீது குற்றமிலாமையால் அவனை விடுத்து தீவினை புரிந்தார் பக்கமே சென்று தீங்கிழைத்ததன்வழி நிறுவுகிறார். 'தீயது தீயவர்க்கு எய்தல் திண்ணம்' (5106) என்றும் வலியுறுத்துகிறார். மாயமான் குரல் கேட்டு இராமன் பால் சீதை துரத்த இலக்குவன் அவள் பாதுகாப்பிற்குச் செய்வது அறியாது கையறுநிலையில், 'அறம் தனால் அழிவு இலது ஆகல் ஆக்கலாம்' (3336) என மனந்தேறிச் செல்வது கொண்டும் விளக்குகிறார்.

அறம் எது என்ற வினாவிற்கும் ஆங்காங்கே விடை தருகிறார் கம்பர். பிறருக்கு உதவுதல் பேரறம் எனும் கருத்தை 'உடைந்தவர்க்கு உதவான் ஆயின் உள்ளது ஒன்று ஈயான் ஆயின் அடைந்தவர்க்கு அருளான் ஆயின் அறன் என் ஆம்?' (6572) என்பதில் புலப்படுத்துகிறார். அறத்துள் ஈகை முதலிடம் பெறுதலை 'ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் ஈட்டி வைத்த பாவ பண்டாரம்' (6857) போல்வனவற்றில் (51,67,159) காட்டுகிறார். முதல்நாள் போரில் தோல்வி கண்ட இராவணனுக்கு இராமன், அறத்தினால் அன்றி அமரர்க்கும் அரும்சமம் கடத்தல் மறத்தினால் அரிது என்பதை மனத்திடை வலித்தி (7266) என அறிவுறுத்துவதும் படையிலானை 'இன்று போய் போர்க்கு நாளைவா' (7271) எனப் போர் அறம் காட்டுவதும் எண்ணற்பாலன. மற்றும் இந்திரசித்து மீது போர் தொடுக்கச் செல்லும் இலக்குவனுக்கு,

தம்பியைத் தழுவி, 'ஐய தாமரைத் தவிசின் மேலான்
வெம்படை தொடுக்கும் ஆயின், விலக்குவது அன்றி, வீர
அம்பு நீதுரப்பாய் அல்லை; அனையது துரந்த காலை,
உம்பரும் உலகும் எல்லாம் விளியும், அஃது ஒழிதி' (8936)

என நினைவூட்டுவதும் நவிலற்பாலது. தன் பகை அழிவிற்காகப் பிறரைப் பலியிடல் கூடாது எனும் நல்லறம் இங்கு உணர்த்தப்படுகிறது.

காப்பியம் இரு அரச இனத்தவரிடையே நிகழும் போரினைக் குறிப்பதாதலின் அரசியலறமும் பெரிதும் பேசப்படுகிறது. தன்னுயிர் போன்று மன்னுயிர் காக்கும் தசரதன் அவன் நாட்டு மக்கள் எல்லாம் உயிராக உறைவது ஆகிய உடலாகச் சிறப்பிக்கப்படுகிறான். சிறந்த ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அவன் 'வையகம் முழுதும் வறிஞன் ஓம்பும் ஓர் செய்' எனக் காத்து இனிது அரசு செய்கின்றான் (179) என்பார். இராமனுக்கு முடிசூட்டு நாள் குறித்த வேளையில் தயரதன் வேண்டுதல் படி வசிட்டன் இராமனுக்கும் (1413-1427), தன்னால் அரசனாக்கப்பட்ட சுக்கிரீவனுக்கு இராமனும் (4121-4131) அரசியல் அறம் உணர்த்துதல் குறிக்கத்தக்கது.

இலக்கியம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக நிற்றல் வேண்டும் என்ற கோட்பாட்டினரான கம்பரிடம் வாழ்வியல் அறம் மலிந்து நிற்றல் இயல்பே. நல் வாழ்க்கையறத்தைக் கம்பர் தமது கோசலத்தைக் காட்சிப்படுத்துகையில் காட்டுகிறார். தன்னைக் கோசலை ஐயுறுகின்றாளோ என அஞ்சிய பரதன் உரைக்கும் வஞ்சினம் அறத்திற்கு எதிரான மறத்திற்கு, ஒவ்வாத வாழ்க்கை நெறிக்கு நீண்ட பட்டியலிடுகிறது (2199-2217). கைகேயியின் செயலை அவன், 'அறம் தனை வேரறுத்து அருளைக் கொன்றனை' (2149) எனக் கண்டிப்பதும் எண்ணத்தக்கது. பிறன்மனை நயத்தலாகிய பாவம் மனையறம் ஆகாது என்பதற்கு 'அறம் தொலைவுற சீதையை மனத்து அடைத்த' (9937) இராவணனே பெருஞ்சான்றாகின்றான்.

அறவழி நின்றோர் வெற்றிபெறும் பொழுது அவ்வறமே கூத்தாடுவதாகக் காட்டிக் களிக்கின்றார் கம்பர். மறம் புரியும் இராவணன் நாட்டில் இனி அறம் தழைக்கப்போவதை, இலங்கையில் அனுமன் சீதையைத் தேடும் பொழுது நிலவு தோன்றுவதன் வழி உணர்த்துகிறார்.

தீண்ட அருந் தீவினை தீக்கத் தீந்து போய்
மாண்டு, அற உலர்ந்தது மாருதிப் பெயர்
ஆண்தகை மாரி வந்து அளிக்க, ஆயிடை,
ஆண்டு அறம் முளைத்தென முளைத்தது இந்துவே (4886)

என்பது அப்பாடல். சம்புமாலியை வதைத்த அனுமனைக் கண்டு, 'இன்று இங்கு இவனாலே சரிந்தது அரக்கர் வலி' என்று எண்ணி அறமும் தளிர்த்ததால் (5598) என இன்புறுகிறார். முளைத்து தளிர்த்த அறம் கூத்தாடி மகிழ்ந்ததைக் கும்பகருணனின் வீழ்ச்சியில் 'அறத்தொடு வேதங்களும் கூத்தாடின' (7618) என இணைப்பார்.

அறத்தை மீறுவோரின் நிலையை, முதல் நாள் போரில் தோல்வி கண்ட இராவணனிடம்,

'அறம் கடந்தவர் செயல் இது' என்று உலகு எலாம் ஆர்ப்ப
நிறம் கரிந்திட, நிலம் விரல் கிளைத்திட நின்றான்
இறங்கு கண்ணினன், எல் அழி முகத்தினன், தலையன்
வெறுங்கை நாற்றினன், விழுதுடை ஆல் அன்ன மெய்யன் (7265)

எனச் சுட்டுவார். விழுதுகள் பல பரப்பி நிற்கும் ஆலமரம் போன்ற பருத்த உடலும் வலிமையும் கொண்ட இராவணன், உடல் கறுத்து, ஒளி இழந்த முகத்தினனாய், தலைகவிழ்ந்து, கால்களால் நிலத்தில் கோலமிட்டு வெறுங்கையுடன் நாணிச் செயலிழந்து தன் பகைவன் முன் அவமானப்பட்டு நிற்கிறான். அறம் பிழைத்தோரின் முடிவு இதுதான் என உலகம் ஆரவாரம் செய்கிறது என்பதாக இக்காட்சி அமைகிறது.

இங்கு இராவணன் ஆலமரமாகச் சுட்டப்படுதலும் பொருள் பொதிந்ததாகக் காணப்படுகிறது. ஆலமரம் நீண்ட நெடுங்காலம் வலிமையுடன் வாழும் ஒன்றாயினும் அதன் கீழ் பிற தழைக்க முடியாதது போல அவனின் கீழ்யாரும் உயர்வடைய முடியாது; அறத்தைக் கொன்ற மறத்தின் பின் செல்வோருக்கும் வாழ்வில்லை என்பதனை இது தெளிவாக்குகிறது. இராவணனுடன் இணைந்த அனைவரும் அவனின் முன்பே முடிதலும் நோக்கத்தக்கது. அறம் பிழைத்தோரைவிட, அவருக்குத் துணை நின்றோர் முதலில் தண்டிக்கப்படுவர் எனும் கருத்தையும் உள்ளுணர்த்துகிறது. 'வாழ்மை தான் அறம் பிழைத்தவர்க்கு வாய்க்குமோ' (6374) என அறமறந்தார் வாழ்க்கை அவலமும் அழிவுமே என்பதை வலியுறுத்துகிறார்.

2. கற்பு: அறன் வலியுறுத்துதலுக்கு இணையாகக் கம்பரால் போற்றப்படும் ஒழுக்கமாகக் கற்பு அமைகிறது. காப்பியத் தொடக்கமாக அமையும் முதற் பாடலே (12) கோசல மகளிரின் கற்பைப் புகழ்ந்துரைக்கக் காணலாம். ஆணாதிக்கத்தின், உச்சத்தைத் தமிழ்ச் சமுதாயம் எட்டிய காலச் சூழல் கம்பர் காலம் போலும் என எண்ணத்தக்க வகையில் கற்பு பற்றிய விளக்கங்களும், காட்சிகளும் அமைகின்றன. கற்பு எனும் திண்மை (10017), கற்பு எனும் அவ்வரம்பு (2176), ஈற்பு எனும் இருஞ்சிறை (3459), திட்டியின் விடம் அன்ன கற்பு (7351) எனக் கற்பு பேசப்படுகிறது. கற்பு எனின் மன உறுதி என்பதை, 'நமனை இன்று இவன் கண்ணிடை நிறுத்துவென் என்னும் கற்பினான்' (7576) என்பதிலும் அறியலாம். பெண்களிடம் உள்ள மிக்க வலிமையுடைய பண்பு கற்பு; அதுவே அவர்களது பெருமைக்கு, புகழுக்கு, பண்பு அளவீட்டிற்கு அளவு கோலாக அமைகிறது; பெண்ணுக்கு வேலியாகவும் நிற்கிறது எனக் கருதுகிறார் கம்பர். எனவேதான் கற்பினைக் கண்ணிலேயே நஞ்சினைக் கக்கும் திட்டிவிடம் எனும் பாம்பிற்கு உவமையாக்குகிறார். கற்பினை எரியோடு இணைத்து கற்பு எனும் பொங்கு வெந்தீ (11042); தீயைச் சுட்டது ஓர் கற்பு எனும் தீயினாள் (5840) எனக் காட்டுவதுடன் அதனை, 'கனிந்து உயர் கற்பு எனும் கடவுள்' (10040) எனத் தெய்வத்தன்மை பொருந்தக் காட்டுவதும் எண்ணற்பாலன.

'குலம் பொறை கற்பு இவை சுமந்த கோசலை' (2196); 'மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்' (1560) என்பனவற்றால் பெண்ணின் இன்றியமையாப் பண்பாக இதனை உணர்த்துகிறார். 'அரியை ஈன்ற ஒப்பு எழுது ஒண்ணாத கற்புடையாள்' (10175), 'கற்பு உறுத்திய கற்புடையாள்' எனக் கோசலையும் (1620) அருந்ததி கற்பின் (5207) என அருந்ததியும் கற்பிற்கு எடுத்துக்காட்டாகின்றனர். தம் வாழ்க்கைத் துணைவரின் சொற்படி நிற்றலே பெருங்கற்பு என்பதை வலியுறுத்துவதாக, 'தங்கள் நாயகரின் தெய்வம் தான் பிறிது இலை என்று எண்ணும் மங்கைமார் சிந்தை போல் தூயது' (408) என்பது அமைகிறது. தன் பிரிவினை ஏற்க மறுக்கும்

கோசலையிடம் இராமன், 'அருங் கற்பினோய் பொய்த்திறத்தினன் ஆக்குதியோ - - - நம் வேந்தனை நீ' (1619) எனக் கேட்பதிலும் இதனை அறியலாம். இத்தகு அருங் கற்புடை மானமங்கையரால் (9947) காவல் திண் கற்பு அமைந்தோரால் (2858) தான் நாட்டில் அறமும் மழையும் தவறாது பொழிவதாகவும் கம்பர் கருதுவதை, 'மாதரார் அற்பின் நின்றன அறங்கள் அன்னவர் கற்பின் நின்றன காலமாரியே' (90) என்பதில் புலப்படுத்துகிறார். கற்புடை பெண் அருங்கலம் (10257) என்பது அவரது துணிபு.

கதைத் தலைவி சீதையைக் கற்பினாள் (3351), அருங்கற்பினாள் (5884), கேடு அருங் கற்பினாள் (5767), வான் உயர் கற்பினாள் (6039), மறு இல் கற்பினாள் (3357, 5333), நவையில் கற்பினாள் (5109), படி ஏழும் தலை மேல் கண்ட கற்பினாள் (6065), அலகில் கற்புடை சானகி (7350), கற்புடையவள் (6274), தருமக் கற்பின் தெய்வம் (8903) என்று இயம்பி மகிழும் கம்பர் அவளை, 'தேவர்க்கும் தேர்வு அரிய தெய்வக் கற்பின் பேர் மகள்' (9927); கற்பின் அரசி (3649,10011), பொருஇல் கற்புடைத் தேவி (4513), கற்பு அழியாக் குலமகள் (5061), கற்புத்தவம் (5140), கற்பின் காவலோ (5143), கற்பினுக்கு அணி (9994), கற்பின் வாழ்வு (10012) எனப் பலவாறாகப் பாராட்டியுரைப்பதில் பெரு விருப்பு காட்டுகிறார்.

கதைப்போக்கில், காப்பியப்படைப்பில் தாம் கற்பிற்கு அளித்துள்ள முதன்மைச் சிறப்பைத் தவறாது பலவிடங்களிலும் சுட்டிச் செல்வதும் இங்கு நவிலத்தக்கதாகும். இரவில் காட்டுக்குள் புகுந்த சீதை, இராம இலக்குவரைக் குறிப்பிடும் பொழுது,

தையல் தன் கற்பும், தன் தகவும், தம்பியும்
மையறு கருணையும் உணர்வும் வாய்மையும்
செய்ய தன் வில்லுமே சேமமாகக் கொண்டு
ஐயனும் போயினான், அல்லின் நாப்பணே (1886)

எனப் பாடுகிறார். இங்கு இரவுப் போதில் அவர்களுக்குத் துணையாயவற்றுள் சீதையின் கற்பினை முதலில் சுட்டியிருப்பது நோக்கத்தக்கது. இதுபோன்றே சீதையைத் தேடி இலங்கை சென்ற அனுமனை, 'ஆயிடை அணங்கின் கற்பும், ஐய நின் அருளும், செய்ய, தூய நல் அறனும் என்று இங்கு இனையன தொடர்ந்து காப்ப' (6044) எனக் காட்டி இங்கும் சீதையின் கற்பினை முன்னிறுத்துகிறார். மட்டுமின்றிச் சீதையை, 'வினைகளைக் கற்பின் வென்ற விளக்கு' (7635) எனவும் பாராட்டுகிறார். கற்பிற்கும் எரிக்கும் உள்ள தொடர்பினைச் சீதையின் செயல்களிலும் வெளிப்படுத்துகிறார்.

தன்னிடம் வந்து தனக்கு உயிரளித்து உணர்வூட்டிய அனுமன் வாலில் தீ வைத்த செய்தியைக் கேட்ட சீதை, 'நீயே உலகுக்கு ஒரு சான்று; நிற்கே தெரியும் கற்பு; அதனின் தூயேன் என்னின் தொழுகின்றேன்; எரியே அவனைச் சுடல் என்றாள்' (5937). அவள் வேண்டுதல் ஏற்கப்பட்டதை அனுமனும், 'சனகன் பாவை கற்பினால் இயன்றது' (5935) என உணருகின்றான்.

இராவணனுக்கு அறமுரைக்கும் வீடணன்,

கோ நகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி எனும் பெயர் உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால் வெந்தது அல்லது ஓர்
வானரம் சுட்டது என்று உணர்தல் மாட்சியோ (6145)

என, இலங்கை எரியுண்டது அனுமனால் அன்று; சீதையின் கற்புத் தீயினால் தான் என உறுதிபடக் கூறுகிறான். இலங்கை மாந்தரும், 'மயில் இயல் சீதை தன் கற்பின் மாட்சியால் எயிலுடைத் திருநகர் சிதைப்ப எய்தினன்' (5819) என முன் மொழிந்திருக்கக் காணலாம். பின்னாளில் மாலியவானும் இதனை ஏற்றுரைக்கக் காணலாம் (9294). இறுதியில் தன் கற்பின் தூய்மையை அவளும் எரிமூழ்கியே காட்ட வேண்டியிருந்த போது அதனை, 'தீய்ந்தது அவ் எரி அவள் கற்பின் தீயினால்' (10036) எனக் கனல்கிறார்.

அருந்ததி அனைய கற்பின் காதலாள் (3527) ஆன சீதை 'அசோக வனச் சிறையில், அருஞ் சிறையின் மீட்ட நாள் இல்புகத் தக்கலை என்னில் யானுடைக் கற்பினை எப்பரிசு இழைத்துக் காட்டுகேன்? (5247) அவ்

இராமனுக்கு' என ஏங்குவதும் அனுமனிடம் உடன் வரமறுக்கும் பொழுது, 'இற்பிறப்பும் ஒழுக்கும், இழுக்கம் இல் கற்பும், யான் பிறர்க்கு எங்ஙனம் காட்டுகேன்?' (5361) எனக் கவலைப்படுவதும் எண்ணத்தக்கன.

அசோகவனத்தில் சீதையைப் பார்த்த அனுமன், சீதையின் கற்பிற்கு எவ்விதக் குறையும் நேரவில்லை என்பதை, 'காசுண்ட கூந்தலாள் கற்பும் காதலும் ஏசுண்டது இல்லையால்' (5136) எனத் தெளியும் பொழுது, 'கேழ் இலாள் நிறை இறை கீண்டதாம் எனின் ஆழியான் முனிவு எனும் ஆழி மீக்கொள ஊழியின் இறுதி வந்துறும்' (5139) என நவில்கிறான். சீதையின் கற்பிற்குச் சிறிது அழிவு நேரினும் இராமனின் சினத்தால் இவ்வுலகமே அழிந்துவிடும் எனும் அவன் கருத்து பெண்மையின் கற்பிற்குக் காப்பியம் அளிக்கும் சிறப்பினை வெளிப்படுத்துகின்றது. சீதையைக் கண்டு திரும்பும் அனுமனைப் பார்த்த அளவில் குறிப்பினால் உணரும் கொள்கையனான இராமன், 'வண்டு உறை ஓதியும் வலியள் மற்று இவன் கண்டதும் உண்டு அவள் கற்பும் நன்று', எனக் கொண்டதாகக் (6029) கம்பர் தருவார். மற்றும் அனுமன் 'கற்பு எனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்' (6035) என நவில்வதும் இணைத்துக் கருதத்தக்கது. கற்பின் வலிமையை உணர்த்த விரும்பிய கம்பர் அதன் எல்லையாய் வான் கற்பிற்கு ஒப்பு இல்லாதவளான சீதை (10097), வானவரை ஏவல் கொள்வதும் (5937) அனுமனுக்கு அழியா வரம் நல்குவதும் (5298, 10007) எனக் காட்டுகிறார்.

மானிடப் பிறவியில் மட்டுமின்றிக் கதைமாந்தராக இடம்பெறும் வானவர், குரக்கினம், அரக்கர் எனப் பிறவற்றிலும் இக்கற்பு வலியுறுத்தப்படுவதும் சுட்டத்தக்கது. வாலியின் மனைவி தாரையை விதவைக் கோலத்தில் காட்டுவதும் (4320), தம் துணைவர் மறைந்தவுடன் அவர் சிதையில் உடன் அரக்கியரும் மறைதலும் (8368), இராவணனுடன் மண்டோதரி உயிர் பிரிதலும் (9946), தன் கணவன் கரன் வீழ்த்தப்பட்டது அறிந்த அவன் மனைவி,

பெருந்திருக்கழித்தல் ஆற்றாள், கணவனைக் கொன்று பேர்ந்தோன்
கருந்தலைக் கலத்தின் அல்லால் கடனது கழியேன் (8407)

என வஞ்சினமுற்றிருப்பதும் இதனை உணர்த்துகின்றன. தேயும் கற்பினாள் (2757) எனச் சூர்ப்பணகையை அறிமுகப்படுத்துவதுடன் மூக்கறுபட்ட அவளைக் கண்ட இலங்கை மக்கள் 'கற்பு இழந்தாள் எனத் தமையன் கரன் இவள் உறுப்புக் குறைத்தான் போலும்' எனக் (3098) கூறுவதும் இவண் உரைக்கத்தக்கது.

பிறன்மனை நயந்த பொருந்தாக் காமமே இராவணனின் அழிவிற்கும் காப்பிய மலர்ச்சிக்கும் அடிப்படையாதலும் இங்குக் கூறற்பாலது. 'பெண்கள் பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்' (41), 'மங்கையரால் வரும் காமம் இல்லை எனின் கடுங்கேடு எனும் நாமம் இல்லையே' (1427) என்பதுடன் கன்னியை அழி செயக் கருதினோனையும், குருவின் பத்தினியை நோக்கியவனையும் பெரும் பாவிகளாகக் (2211) குறிக்கிறார். காப்பிய மையக் கரு தேவமகள் வேகவதியின் வசையுள் (சாபம்) அடங்கியிருப்பதையும் வீடணனின்,

தீயிடைக் குளித்த அத் தெய்வக் கற்பினாள்
வாயிடை மொழிந்த சொல் மறுக்க வல்லமோ?
'நோய் உனக்கு யான்' என மூவன்மூளாள் அவள்
ஆயவள் சீதை, பண்டு அமுதின் தோன்றினாள் (6151)

எனும் மொழி வழி உணர்த்துகிறார்.

3. உறவுகள்: உயிரினங்கள் எல்லாவற்றின் வாழ்க்கையிலும் உறவுகள் இன்றியமையாத இடம் பெறுகின்றன. மனித வாழ்க்கை உறவுகளைச் சுற்றியே அமைந்துள்ளது. ஒருவரின் வாழ்க்கை வெற்றிக்கும் தோல்விக்கும் உறவுகளின் பங்கு குறிப்பிடத்தக்களவு சிறப்பிடம் பெறுகிறது. இல்ல உறவுகள் சமூக உறவுகளுக்கு இட்டுச் செல்வதாக, வழி நடத்துவதாக அமைதல் சமூக ஒப்புரவிற்கும் ஒருமைப்பாட்டிற்கும் மிகத் தேவை என்பதைக் கம்பர் வலியுறுத்த விரும்புகிறார். இதற்காகவே தம் காப்பியத்தைப் பத்தாயிரம் பாடல்களுக்கு மேற்பட்டதாக விரித்தார் எனவும் கொள்ளலாம். இதனைக் கதைப் போக்கில் கதை மாந்தர் வாயிலாக உணர்த்துகிறார். உறவின் பெருமையை அவர் தலைமை மாந்தரிடம் மட்டுமின்றி எதிரணியினரிடமும் மாண்புறச் செய்திருப்பது சுட்டற்பாலது. கதைத் தலைவன் இராகவனின்,

குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு; பின், குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம்; எம் உழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்
புகல் அரும் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் தூந்தை (6507)

எனும் மொழியில் புலப்படுத்துகிறார். இப்பாடலுள் கம்பர் பல கருத்துகளைப் புதைத்துள்ளார். அவற்றுள் நட்பு உறவாதல், இல்ல உறவு சமூக உறவாக விரிவடைதல், உள்ளங்கள் கனிந்து ஒன்றாதல் என்பன இங்கு விளக்கம் பெறத்தக்கன.

அ. நட்பு உறவாதல் : மேற்கண்ட பாடலில் இராமன் சுட்டும் குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகியோர் அவனுடைய நண்பர்களாகவே இணைகின்றனர். ஆனால் உடன் பிறப்புகளாக ஒன்றிவிடுகின்றனர். நட்பை விட உடன் பிறப்புணர்வே பெரியது, உயர்ந்தது என்பது அவரின் எண்ணம் போலும். இதனை இராமனோடு தொடர்புடையோரும், நண்பராக இணைந்தோரும் மனமுவந்து ஏற்றுக்கொள்வது மிகத் தெளிவாகக் காப்பியத்துள் விளக்கம் பெற்றுள்ளது. சான்றிற்கு இராமன் - குகன், நட்பைச் சுட்டலாம். சீதை தன் தனிமைத் துயரின் போது,

ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு, 'எம்பி நின் தம்பி; நீ
தோழன்; மங்கை கொழுந்தி' எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி (5091)

மயங்குகிறாள். குகனைப் பரதன், 'இன் துணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்' எனக் கோசலையிடம் அறிமுகப்படுத்தியவுடன் (2367) அவள் அவர்களை, 'நைவீர் அலீர் மைந்தீர் - - - - களிறு அனைய காளை இவன் தன்னொடும் கலந்து நீவிர் ஐவீரும் ஒருவீர் ஆய், அகல் இடத்தை நெடுங்காலம் அளித்தீர்' (2368) என வாழ்த்துவதும் நோக்கத்தக்கன. முதலில் பரதன் மீது ஐயம் கொண்டாலும் பின் அருகில் அவனைப் பார்த்தவுடன் தெளிந்து, வந்ததன் நோக்கம் அறிந்ததும் 'ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ' (2337) எனத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறான். அவனையும் உடன் வந்தோரையும் இராமனிடம் அழைத்துச் சென்று, இராமனின் எண்ணத்தைத் (தன் உடன் பிறந்தார் நண்பருக்கும் உடன் பிறந்தார்) தனதாக்கிக் காட்டுகிறான். இராமன் சுக்கிரீவனை, 'பரதன் நீ' எனப் பாராட்டுதலும் (4401) குறிக்கத்தக்கது. தயரதன் சடாயு நட்பால், சடாயு இராம இலக்குவரைத் தன் மைந்தராகவும் சானகியை மருமகளாகவும் ஏற்று துணையிருத்தலும் (2731) அவன் மறைந்தபின் அவனுக்கு இராம இலக்குவர் ஈமக்கடன் ஆற்றுதலும் (3540) இணைத்துக் காணத்தக்கன.

இராவணன் - வாலி நட்பிலும் இராவணன் உறவுச் சார்பு காட்டுவதை அங்கதன் இராமனால் தூது அனுப்பப்படுகையில் காண்கிறோம். வாலியின் மைந்தன் அங்கதன் என அறிந்தவுடன் இராவணன் அவனிடம்,

உந்தை என் துணைவன் அன்றே? ஒங்கு அறச் சான்றும் உண்டால்
நிந்தனை இதன்மேல் உண்டோ, நீ அவன் தூதன் ஆதல்
தந்தனென் நினக்கு யானே வானரத்தலைமை; தாழா
வந்தனை; நன்று செய்தாய், என்னுடை மைந்த (6998)

எனத் தன் அரவணைப்பைக் காட்டுகிறான். மறைந்த நண்பனின் மகனுக்கு வேண்டியதைச் செய்வது தன் கடமை எனவும் கருதுவதை அவன் கூற்று உணர்த்துகிறது.

ஆ. இல்ல உறவு சமூக உறவாக விரிவடைதல்: இராமனின் நண்பர் பலதரப்பட்டோராக, பலசமூகத்தினராக அமைகின்றனர். குகன் ஏழை வேடுவன்; சுக்கிரீவன் உணர்ச்சி வயப்படுபவன், அதனால் தவறுகளும் செய்பவன். இராமனுடன் இணைத்து எண்ணத்தக்க அறிவோ, ஆற்றலோ கொண்டவனல்லன், நண்பனையே ஐயப்படும் தெளிவற்றவன், குரக்கினம் சார்ந்தமை இதற்குக் காரணமாகலாம்; வீடணன் மாற்றானின் தம்பி, அரக்கர் குலத்தவன். எனினும் இவர்கள் நட்பால் ஒன்றுபடுகின்றனர். நண்பர் சுற்றத்தைத்

தம் சுற்றமாக ஏற்றுக்கொள்கின்றனர். தம்மால் இயன்றவழி ஒருவருக்கொருவர் துணைநிற்கின்றனர். தனித்தனியே அவரிடமமைந்த இல்லவுறவு இந்நட்பெனும் பெரும் பொருளால் வெளிப்போந்து கிளை பரப்பி மாற்றாரையும் அரவணைத்துக் கொள்கிறது. எனவே ஓரில்லம் பல இல்லங்களின் இணைவான சமூகமாக உருக்கொள்கிறது. தனது முடிசூட்டினைக் காணவந்த நண்பர்களை வழியனுப்பும் பொழுது இராமன், 'நினைவதற்கு அரிது நும்மைப் பிரிக என்றல்; நீவிர் வைப்பும் எனது; அது காவற்கு இன்று என் ஏவலின் ஏகும்' என்றான் (10363) என்பதில் இதனைக் காணலாம். இது மேலும் தெளிவுபடும் வகையில் விபீடணனின் செயல் அமைவதை எடுத்துக்காட்டாக்கலாம். அனைவரும் இராமனிடம் விடைபெற்ற பின் வீடணன்,

குகனைத் தன்பதியின் உய்த்து, குன்றினை வலம் செய்தேரோன்
மகனைத் தன் புரத்தில் விட்டு, வாள் எயிற்று அரக்கர் சூழ
ககனத்தின் மிசையே ஏகி, கனை கடல் இலங்கை புக்கான் (10366)

எனக் காட்டுவார் கம்பர். தன் நண்பனின் நண்பர்களைத் தனக்கும் உறவாக்கி அவர்கள் தேவையையும் மனமுவந்து நிறைவேற்றும் வீடணனின் செயல் இதனால் ஏற்படும் மற்றொரு பயனான அன்பின் விரிவையும் காட்டுகிறது. தயரதன் மறைவு அறிந்து இறக்கத் துணிந்த நண்பன் சடாயு, பின் அவன் மைந்தர்க்காக அந்நினைவு ஒழித்தலும் (2717-2719) இதன்பாற்படுவதே. தன்னைச் சந்திக்க வந்த சுக்கிரீவனிடம் அவன் குடிமக்கள் நலத்தை இராமன் விசாரிப்பதும் (4396), சுக்கிரீவன் மாளிகையில் மணியாசனத்தில் அமர மறுத்த இலக்குவன் நிலை கண்டு அங்குக் கூடியிருந்த மைந்தர், முதியோர், மகளிர் அனைவரும் நொந்து தளர்ந்ததும் (4378) இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்தக் காணலாம்.

இ. உள்ளங்கள் கனிந்து ஒன்றாதல் : நட்பு உறுதிப்பட்டு உறவுப் பாலம் வலுவடையும் போது அங்கு இணையும் உள்ளங்கள் அனைத்தும் ஒத்த கருத்தினவாய் ஒன்றாகக் காண்கிறோம். மற்றவரின் இன்ப துன்பங்கள் அனைத்தும் தமதேயாய் உணர்கின்றனர். நட்புக்காகச் சுக்கிரீவன் தன் படை அனைத்தையும் இராம - இராவணப் போரில் ஈடுபடுத்துகிறான். சீதையை எண்ணி இராமன் மனம் தளரும் போதெல்லாம் அவனை ஆற்றுவித்தலும் அவன் பணியாகிறது (3910-3918, 6020-6022). சீதையின் பிரிவால் அவன் படும் துயர் கண்டு முதலில் அதனை முடிக்க வேண்டுகிறான் (3918). வீடணனின் உதவியின்றேல் அரக்கரின் மாயையை அழித்துச் சீதையை மீட்டல் என்பது இராம இலக்குவர்க்கு இயலாத செயல் என்பதும் உண்மையே. ஒன்றிய உள்ளத்தின் வெளிப்பாடுகளுக்கு இவை போதுமான சான்றுகளாம். இராவணனை ஒழிக்காது திரும்பிய சுக்கிரீவனின் புலம்பலைக் கம்பர்,

காட்டிலே கழுகின் வேந்தன் செய்தன காட்ட மாட்டேன்
நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்க மாட்டேன்
கேட்டிலேன் இன்று கண்டும், கிளி மொழி மாதராளை
மீட்டிலேன், தலைகள் பத்தும் கொணர்ந்திலேன், வெறுங்கை வந்தேன் (6933)

என்றும் 'உயிர் சுமந்து உழலா நின்றேன்' என்றும் பிறவாறும் காட்டுவார் (6934-6936).

உறவுகளுக்கிடையே உடன்பிறப்பு நேயம் மிக இயற்கையானதாகும். எனினும் நேயம் பகையாக மாறுதலும் உண்டு. இம்மாற்றம் அழிவைத் தரும்; உடன்பிறப்பின் ஒன்றிய அன்புநிலை உலகையே தன் கீழ்க் கொணரும் ஆற்றலுடையது என்பதைக் கம்பர் மிக அழகாகத் தம் காப்பியத்துள் அறிவிக்கிறார். தயரதன் புதல்வர் நால்வரின் ஒருவருக்கொருவர் போட்டியிடுவதாக அமையும் அன்புச்சூழல் அனைவரும் அறிந்த ஒன்றே. இதனோடு ஒப்ப பறவை, குரங்கு, அரக்கர் இனத்திலும் காட்டி உடன் பிறப்பு அன்பினைத் தம் காப்பியக் கொள்கையாக்குகிறார் கம்பர். வானுலகைக் காணும் விருப்பில் உயர உயரப் பறந்த சடாயுவை விண்ணில் கதிரவன் எரிக்கத் தொடங்க, ஆற்றாத அண்ணன் சம்பாதி தன் சிறகைத் தம்பிக்குப் போர்வையாக்கிக் காத்தான்; சிறகிழந்தான் (4700-4702). தனக்குக் கூற்றுவனை அழைத்து வந்த தம்பி சுக்கிரீவனுக்காக வாலி இராமனிடம், 'மது அருந்தி இவன் தன்னிலை மறந்து தவறிழைப்பின் அதனைப் பொருட்படுத்தாது மன்னித்தல் வேண்டும்; தண்டித்தல் கூடாது' (4068) என்பதுடன்,

இன்னம் ஒன்று இரப்பது உண்டால்; எம்பியை உம்பிமார்கள்
தன் முனைக் கொல்வித்தான் என்று இகழ்வரேல் தடுத்தி தக்கோய்
முன்முனே மொழிந்தாய் அன்றே, இவன் குறைமுடிப்பது ஐயா
பின் இவன் வினையின் செய்கை அதனையும் பிழைக்கல் ஆமோ (4069)

எனத் தம் தம்பியைப் பிறர் குற்றஞ்சாட்டுதல் கூடாது எனத் துடிக்கும் பேருள்ளம் கல்லையும் கனிவிக்கும் தன்மையது. அண்ணனைக் கொல்வித்த சுக்கிரீவனும் அவன் வீழ்ந்தவுடன், 'உடன் பிறப்பு எனும் பாசத்தால் பிணிப்புண்ட அத்தம்பியும் பசுங்கண் நேசத்தாரைகள் சொரிதர நெடுநிலம் சேர்ந்தான்' (4011) என்பார். இங்கும் பகை ஒழிந்து அன்பே நிலைபெறுவதைப் புலப்படுத்துகிறார்.

வாலி போன்றே தன்னைப் பிரிந்து பகைவனுடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் தம்பி விபீடணனை இராவணனிடம் இருந்து பாதுகாக்கக் கும்பகருணனும் இராமனிடம் வேண்டுவதும் (7627) கூறத்தக்கது. தன் தம்பி அக்ககுமாரனை அழித்த இலக்குவனை அழிக்காமல், 'நகர்க்கு இனி வாரலென்; வாழ்வும் வேண்டேன்' என்று இந்திரசித்து (8010) வஞ்சினம் உரைப்பதும் உடன்பிறப்பு நேயத்தின் வலிமையைக் காட்டுவதாகும். இதனையே இராமன் 'தம்பி உடையான் பகை அஞ்சான்' (9183) என உறுதிப்படுத்துகிறான்.

வாழ்க்கையின் செழுமைக்கு நட்பும், உடன்பிறப்பும் துணையாவது போல் அதன் சீர்மைக்கு, நேர்மைக்குப் பெற்றோர் - பிள்ளை உறவு சிறப்பாக அமைதலும் வேண்டற்பாற்று எனும் பொது உண்மையையும் கம்பர் தம் காப்பியத்துள் இணைத்துள்ளார். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என இராமன் காடேகுதலும், தந்தையின் கட்டளைப்படி அங்கதன் இராமனிடம் தொண்டு புரிதலும், இராவணனுக்காக 'வெற்றி உனது ஆக விளையாது ஒழியின் என்னைப் பெற்றும் இல்லை; யான் நெறி பிறழ்ந்தும் இலென்' (6130) என்ற இந்திரசித்து முதலான அவன் மைந்தர் அனைவரும் போரில் வீழ்தலும் என ஒருபுறம் அமைகிறது. மறுபுறம் இராமன் காடேகும் சூழலால் தயரதன் உயிரிழக்கிறான்; அதற்குக் காரணமான மனைவியையும் துறக்கிறான். இந்திரசித்து மறைந்த உடன் அவனின் உடல் கண்டு இராவணன், 'எனக்கு நீ செய்யத்தக்க கடன் எலாம், ஏங்கி ஏங்கி, உனக்கு நான் செய்வதானேன், என்னின்யார் உலகத்து உள்ளார்?' எனத் துடிக்கிறான் (9224). மூலக்கதை மாந்தரிடம் மட்டுமின்றிக் கிளைக்கதையிலும் பெற்றோர் மகன் உறவுச் சிறப்பைக் கண்தெரியாத சல போசன முனிவர் - மகன் சுரோசனன் (1677-1692) வழி உயர்த்துகிறார்.

உறவுகள் வாழ்க்கைச் சோலையில் இன்பம் நுகர மட்டுமல்ல; மனவளமும் பொருள்வளமும் தடுமாறுகையில் அது வீழ்ச்சியாக மாறிவிடாது தடுத்து நிறுத்தற்குமாம் என்பதையும் கம்பர் தெளிவாக்கியுள்ளார். பரதன் கைகேயியின் முறையற்ற செயலைக் கண்டிப்பதும், இராமன் காடேக வேண்டும் என்பதறிந்ததும் சினங்கொண்டெழுந்த இலக்குவனை இராமன் அடக்குவதும், திடீரெனத் தகுந்த பாதுகாப்பின்றி இராவணன் மேல் பாய்ந்த சுக்கிரீவனுக்கு அவன் அறிவுறுத்தலும் எண்ணத்தக்கன. சிறியோர் வழி தவறும் போது மூத்தோர் கண்டித்தல் அவர் தம் பொறுப்பு என்பதனைப் பாட்டன் பேரன் உறவில் அமையும் மாலியவான், இராவணன் உரையாடலில் புலப்படுத்துகிறார் (6817-6827). மூத்தவர் பிழைபுரிந்தாலும் அதனைத் திருத்த முனைதல் இளையவர் கடமை என்பதும் இராவணனுக்குத் தம்பி கும்பகர்ணனும் (7350-7361), மகன் இந்திரசித்தும் (9118-9121) சீதையை விட்டுவிட வேண்டுதலில் காட்டுகிறார்.

ஆதலால் அஞ்சினேன் என்று அருளலை; ஆசைதான் அச்
சீதைபால் விடுதி ஆயின், அனையவர் சீற்றம் தீர்வர்
போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர் உன்மேல்
காதலால் உரைத்தேன் என்றான் உலகெலாம் கலக்கி வென்றான் (9121)

என்று கம்பர் இந்திரசித்தின் வாய்மொழியில் பணிவையும் அன்பையும் விரவிப் பெரியோரிடம் எதிர்க்கருத்துரைக்கும் நெறியை வெளிப்படுத்துகிறார். இங்குத் தன் மேல் உள்ள காதலால் தன் மனைவியையும் அவளால் பெற்ற மைந்தனையும் தயரதன் துறந்ததால் அவர்களுக்கு ஏற்பட்ட இழிவினை, குறையினை நீக்க இராமன் அவனிடம், 'தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும், தாயும் தம்பியும் ஆம் வரம் தருக' எனத் (10079) தாழ்ந்து வேண்டுதலும் சுட்டத்தக்கது.

பெற்றோர், உடன் பிறந்தோர், நண்பர் என இம் மூன்று உறவுகளே வாழ்க்கைப் பாதையைப் புற உலகில், சமுதாயத்தில் உயர்ந்தோங்கச் செய்வதில் பெரும்பங்காற்றுகின்றன என்பதைக் கம்பராமாயணம் தெளிவாக்குகிறது. கணவன் மனைவியர் உறவு அகவாழ்க்கையாதலாலும், ஆணை முன்னிறுத்திய சமுதாயமாதலாலும் பிற உறவுகளின் பெருமையை வலியுறுத்தல் போல் இதில் அமையவில்லை. காப்பியத்தின் முதல் திருப்பு முனையாகக் கைகேயி தயரதனிடம் பெறும் வரம்; நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு எனச் சீதை இராமனைப் பின்தொடர்தல்; வாலிக்குத் தாரை இராம - சுக்கிரீவர் நட்பினை அவனுக்கு முன்பே அறிந்து வாலி - சுக்கிரீவர் போரைத் தடுத்துரைத்தல்; இராவணன் மறைவால் மண்டோதரியும் மரணத்தைத் தழுவுதல் என இவ்வுறவில் பிணக்கும் நெருக்கமும், அக்கறையும், அவலமும் வெளிப்படினும் ஏனையவற்றைச் சிறப்பித்தலிலேயே கம்பர் அதிக அக்கறை காட்டுவதாகத் தோன்றுகிறது. தன்னைப் பிரிந்த சீதையைத் திரும்பப் பெற வேண்டும் என்ற துடிப்பை விட, அதனால் ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்க வேண்டும் என்ற உணர்வே இராமனிடம் மேலோங்கி நிற்றலைச் சீதை மீட்சியின் போது,

உன்னை மீட்பான் பொருட்டு, உவரி தூர்த்து, ஒளிர்
மின்னை மீட்டுறு படை அரக்கர் வேர் அற
பின்னை மீட்டு, உறுபகை கடந்திலேன்; பிழை
என்னை மீட்பான் பொருட்டு இலங்கை எய்தினேன் (10014)

எனச் சினப்பதில் காணலாம். பொதுவாக நோக்குமிடத்து உறவுகள் எக்குலத்தினர், எப்பண்பினர் ஆயினும் உள் அன்பு பிணைக்க வாழுதல் வாழ்க்கைப் பயிர்க்கு உரமாக நீராக வேலியாக அமைந்து இன்றியமையாமை பெறுவது காப்பியத்துள் நன்கு சிறப்பிக்கப்பட்டுள்ளது.

காப்பியக் கட்டமைப்பு

கிளைக்கதைகளும், துணைக்கதைகளும் இடைமிடைய நீண்ட நெடுங்காப்பியமாய், இதிகாசமாய் மலர்ந்துள்ள கம்பராமாயணத்தின் பெரு வெற்றி அதன் தொய்வற்ற கதைப்போக்கு, முரண்படா கதை மாந்தர் பண்பு நலன், உணர்ச்சி பொங்கும் நாடகத்திறன், கற்பனை வளத்தின் எல்லை, உவமைகளின் பேராற்றல், கவித்துவத்தின் உச்சம், உளவியலின் ஆழமான வெளிப்பாடு, முன்னிகழ்வும் பின்னிகழ்வும் எவ்விதத்திலும் முரணாகாவாறு திறம்பட கொண்டுகூட்டியமைதல், நிகழ்வுகளின் இசை (ஒலி) நயம், தமிழ்க்கடலின் ஆழ அகலங்களை வெளிப்படுத்தும் சொல்லாட்சிப் பெருமை, தமிழ்ப் பண்பின் மாட்சி, உயரிய கோட்பாடுகள் - - - - எனப் பலவற்றால் எதனாலும் அசைக்கவியலாவாறு ஆழ வேரூன்றியுள்ளது. 'கல்வியில் பெரியவன் கம்பன்'; 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' எனும் வழக்குகள் தமிழ்ச் சமுதாயத்தில் அவர் கற்றோரவையிலும் மற்றோர் அவையிலும் பெற்ற விருதுகள். இவை அவரது படைப்புத்திறனுக்கு நற்சான்றாய், சாட்சியாய் விளங்குகின்றன.

கடவுள் கொள்கை

பரம்பொருள் ஒன்று; அது சிவன், திருமால், பிரம்மன் என மூவரினும் உயர்ந்தது; அதுவே ஆதியானது, முதன்மையானது; அது இராமன் எனக் கொள்ளும் கம்பர், முப்பெரும் தெய்வங்களின் இயக்கமும் அவனால் நிகழ்வதாகக் கருதுகிறார். இதனைச் சீதையின் மீட்சியின் போது பிரமதேவனின் வாய்மொழியாக (10050-10062) வலியுறுத்துகிறார். மற்றும் வேண்டியோர்க்கு வேண்டியாங்கு அருள்புரிதல் அத்தெய்வத்தின் இயல்பு என்பதை யுத்த காண்டத்தில் கடவுள் வாழ்த்தாக, தம் கடவுள் கொள்கையாகக் காட்டுகிறார்.

ஒன்றே என்னின், ஒன்றே ஆம்; பல என்று உரைக்கின், பலவே ஆம்;
அன்றே என்னின் அன்றே ஆம்; ஆமே என்னின், ஆமே ஆம்
இன்றே என்னின், இன்றே ஆம் உளது என்று உரைக்கின் உளதே ஆம்
நன்றே நம்பி குடி வாழ்க்கை நமக்கு இங்கு என்னோ பிழைப்பு? அம்மா! (6059)

சமயப் பொதுமையைச் சுட்டி அமையும் இப்பாடலும், 'உலகம் யாவையும் தாம் உளவாக்கலும், நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா அலகு இலா விளையாட்டு உடையார் அவர் தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே' (1) என்பதான கம்பரின் முதற்கவியும் எண்ணற்பாலன. எத்தனை பெயர் கொண்டு எத்தனை

வடிவத்தில் இறைவனை வழிபட்டாலும் அவை அனைத்தும் திருமாலின் அவதாரமான இராமனையே குறிக்கின்றன என்பது கம்பரின் கடவுள் பற்றிய எண்ணமாகும். மாலியவான் அனுமனை 'என்னோ, கோள் இலா வேதம் கூறும் இறைவர்கள் என்பது? எண் இலார் எண்ணமே தான்; அறைகழல் அனுமனோடும் நால்வரே முதல்வர் அம்மா' (8844) எனப் பாராட்டுவதும் இணைத்துக் கருதத்தக்கது. வேதங்களை அங்கங்கே பெருமைப்படுத்தும் கம்பர்(3) இராமனை வேதநாயகன் (5869), வேத வேந்தனாகப் (10066) போற்றுவதும் குறிக்கத்தக்கது.

தமிழ்ப்பற்று

கம்பரின் தமிழ்ப்பற்று பிற கவிஞரினின்றும் முற்றிலும் மாறுபட்டது. சொற் சித்திரங்களால் தமிழ்வெறி காட்டாது தமிழுக்கு ஆக்கம் தருவதாக, வளப்படுத்துவதாக அவரின் தமிழ்த் தொண்டு அமைந்து தனித்தன்மை காட்டுகிறது. இயன்றவிடங்களிலெல்லாம் தமிழைச் சிறப்பித்தல், தமிழ் மரபைப் போற்றுதல், புதிய சொற்களை உருவாக்குதல், பிறமொழிச் சொற்களுக்குத் தமிழாக்கம் தருதல் என்பதாக அவரின் தமிழ்ப்பற்று உயர்ந்துள்ளது.

முத்தும் முத்தமிழும் தந்து முற்றலால் பாண்டியநாடு கம்பருக்குச் சொர்க்க பூமியை விட உயர்வாகிறது (4645). வண்தமிழுடைத் தென்திசை (4522), தமிழ் முனி (8942), இனிய தென் தமிழ்நாடு (4644), தண் தமிழ்த் தென்றல் (3546), தன் பால் தழுவும் குழல்வண்டு தமிழ்ப்பாட்டு இசைக்கும் தாமரை (3736), தென் தமிழ்நாட்டு அகன் பொதியில் திருமுனிவன், தமிழ்ச் சங்கம் (4474), இது தமிழ் முனிவன் வைகுமியல் தருகுன்றம் (10213) என வருணனைகளில் தமிழைப் போற்றியுள்ளார்.

தமிழ் மரபைப் போற்றுதல் பலவாறாகப் பரந்துபட்டமைகிறது. சீதையை அவளிருந்த மண்ணோடு தொடாது இராவணன் கடத்துதல், சீதை - இராமன் காதல் மணம், தாரை விதவை நிலை எனத் தமிழ்ப்பண்பாடு பாராட்டுதல் அதில் ஒரு கூறாகும். காப்பியத்தை 'உலகம் யாவையும்' எனத் தொடங்கிப் பாட்டியல் மரபு காக்கின்றார். போர்க்களக் காட்சிகளில் தமிழிலக்கண மரபைப் பேணுதலும் குறிக்கத்தக்கது. போரில் வெற்றி பெறுவதற்குக் கொற்றவையை வழிபடும் தமிழ் மரபை, இந்திரசித்தை வீழ்த்தி வென்று வந்த இலக்குவனைக் கண்ட இராமனை, 'தம்பி கொற்றவை தழீஇய பொன் தோள்மலை நோக்கும்' என்றுரைத்து (9183) நினைவூட்டுகிறார். வாலி சேய் தூசி செல்ல (9174) என அங்கதன் முன்னணிப் படையினருக்குத் தலைமை தாங்கிச் செல்வதைக் காட்டுகிறார். 'உழிஞையைத் துடைக்க நொச்சி உச்சியில் கொண்டது உன் ஊர்' எனும் நிகும்பன் கூற்றில் மதில் போரினை உணர்த்துகிறார். போரில் ஏற்படும் அழிவுகளை அல்லது மறச் செயலை 'நூழில்' எனல் மரபு. இதனைக் கம்பர் 'நூக்கிய களிறும் தேரும் புரவியும் நூழில் செய்ய' (7162, 8053), 'வெய்தினின் உற்றதானை முறைவிடா நூழில் வெம்போர் செய்தன' (8413) எனக் காட்சிப்படுத்துகிறார். கவந்த மாடல் காட்டப்பட்டிருப்பதும் குறிக்கத்தக்காகும்.

அகப்பொருளிலக்கணத்தையும் சிறப்பிப்பதை இராவணன் கூற்றில் காணலாம். காமத்தால் தோன்றும் அவத்தைகள் பத்து என்பது (காட்சி, வேட்கை, உள்ளுதல், மெலிதல், ஆக்கம்செப்பல், நாணுவரையிறத்தல், நோக்குவதெல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு) பொய்; அதனை விட அதிகமான துன்பத்தைத் தான் அனுபவிப்பதாகச் சீதையிடம் 'பாயிரம் உணர்ந்த நூலோர் காமத்துப் பகுத்த பத்தி - ஆயிரம் அல்ல போன ஐ இரண்டு என்பர் பொய்யே' (7645) என மொழிகிறான். தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல் எண்ணுங்காலைக் கிழத்திக்கு இல்லை (1064) எனும் தொல்காப்பியச் சிந்தனையைச் சூர்ப்பணகையின் கூற்றில் (2776) தருகிறார். எடுத்த கதையின் மூலம் வடமொழியாயினும் அதனை இயன்றளவு தமிழுக்குரியதாகக் காட்ட வேண்டும் என்ற கம்பரின் வேட்கையையே இவை காட்டுகின்றன.

நாகம் (யானை-6285), வீரை (கடல்-6283), கஞ்சுகன் (சட்டையணிந்த போர் வீரன்-6798), கந்துகம் (பந்து-6917), அயிர் (நுண்மணல்-7190) என்பன போன்ற பழந்தமிழ்ச் சொற்களைப் பயன் கொண்டு அவை மறையாது காக்க முனைந்துள்ளார். கோவலன் கண்ணகியை ஆருயிர் மருந்தே என வருணிப்பதைக் கருத்தில் கொண்டு தானும் 'தாரமாம் அருமருந்து' (3852) என நவின்று இளங்கோவடிகளுக்குச் சிறப்புச் செய்கிறார். இவண் பாரதியார், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாடியதற்குக் கம்பர் அனுமனைப் பாராட்டும் போது 'செவிக்குத் தேன் என இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்' (4966) என வழிகாட்டியிருப்பதையும் எண்ணலாம்.

செல்வத்திற்கு அதிபதியாதலால் குபேரன் 'தனதன்' (10093), பாதுகாப்பவன் 'அரணியன்' (6366), இராவணனின் மைந்தன் 'இராவணி' (8162,8163), அருகில் உள்ளோர் 'நணியர்' (6787), உன்னுடைய அண்ணன் 'நுமையன்' (10076), ஓவியம் போன்ற செயலற்ற நிலை 'ஓவினேன்' (9978), ஒன்றைப் போன்று அமைவதால் 'போலியை' (10011), இறுதி ஆசையை உணர்த்தும் 'கடைக்கூட்டு' (7624), வீரத்தை உடையவன் 'வீரதை' (6939), குருதி 'கறைநீர்' (7192), உடல் முழுவதும் போரில் ஏற்பட்ட காயங்களால் 'உதிரப் போர்வையான்' (7556), சிறுமையுடைய செயல் 'சிற்றியல்' (8998), வெற்றி பெறுபவர் 'வெற்றியர்' ((7660), போரில் பின் வாங்குவோர் 'பின்றலினோர்' (8306), பிள்ளைமை (மழலை, 6142), வரவற்று (6368, வரக்கூடியது), ஆதர் (அறிவிலிகள், 6459), வினையம் (செயல் 9300), இனையர் (இவர்கள் 9300) என்பன போன்று எண்ணற்ற புதிய சொற்களை உருவாக்கித் தமிழுக்கு வளம் சேர்த்துத் தம் தமிழ்ப்பற்றைப் பெருமைப்படுத்தியுள்ளார்.

தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றில் கம்பரின் பங்கும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். பல வடசொற்களை அவர் தொல்காப்பிய விதிமுறைக்கேற்ப (வடசொற் கிளவி வட எழுத்து ஒரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே - 884) தமிழ்ப்படுத்தியும், மொழிபெயர்த்தும் வழிகாட்டியுள்ளார். இலக்குவன், வீடணன், இந்திரசித்து, தயரதன், ஆனி (ஹானி-துன்பம் 6272) போல்வன முதல்நிலைக்குச் சான்றுகளாகும். கனகன் (இரணியன், 6222), மானுட மடங்கல் (நரசிங்கம், 6319), வேதத்து உச்சியின் மெய்ப்பொருட் பெயர் (நமோ நாராயணாய, 6208), உயிருக்கு நேயம் (ஜீவகாருண்யம், 6385), இசிகப்படை (இஷீகாஸ்திரம், 9064), அருளின் வேலை (கருணைக்கடல், 6415), வேள்வியின் பகைஞன் (6552), மாபெரும் பக்கன் (6554), மகரக் கண்ணன் (8408), நேமிப்புள் (சக்கரவாகம், 6384), குடப்பெருஞ் செவிக் குன்றம் (கும்பகருணன் 9815), சூரியன் பகை (பானுகோபன், 6553), வச்சிரத்து எயிற்றவன் (வச்சிரநந்தன், 6098) என்பன மொழிபெயர்ப்புக்கு எடுத்துக்காட்டுகளாம். கம்பரைத் தமிழுக்கும் தமிழருக்கும் எதிரியாகக் காண்போர் அவரின் இத்தமிழ்ப் பணியை உணராமலேயாம் என்பது இவற்றால் வெளிப்படை.

தமிழ் தந்த அகத்தியனை, 'நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்' (2666); 'என்றும் உள்ள தென் தமிழ் இயம்பி இசை கொண்டான்' (2677); தமிழ்த் தலைவன் (2287) எனப் பாராட்டி அவர் புகழ்பாடும் (2667-2671) கம்பர் எண்ணம், அவரை முன்வைத்துத் தமிழைப் போற்றுவதே என்பதும் கூறத்தக்கது. ஏற்கெனவே தமிழில் இராமாயண நூல்கள் எழுந்திருக்க தாமும் அதனைப் படைக்க முனையும் பொழுது அது பிறவற்றினும் தனித்து நின்று வெற்றி பெற வேண்டுமானால் அது உண்மையில் ஓர் தமிழ்க் காப்பியமாகவே மலர வேண்டும் என்ற தமிழ் மக்கள் உளமறிந்த உளவியலறிஞர் கம்பர் என்பது இவற்றால் எளிதாகப் புலனாகும்.

கம்பர் யார்

எந்த ஒரு படைப்பாளியும் விரும்பியோ, விரும்பாமலோ எப்படியேனும் தம்மைத் தம் படைப்புள் இனங்காட்டிவிடுவர். ஏதேனும் ஒரு கதைமாந்தர், கதை நிகழ்ச்சி, ஏதேனும் ஒன்றைத் திரும்பத் திரும்ப பலவிதமாகக் கூறுதல் போன்றவற்றில் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ வெளிப்படுவர். அம்முறையில் கம்பராமாயணத்தில் வெளிப்படும் கம்பர் யார் எனக் காண விழைந்த பொழுது கீழ்க்கண்ட எண்ணங்கள் வெளிப்பட்டன.

1. தமிழ், அகத்தியர், வள்ளுவர் மீது மாளாக் காதல் கொண்டவர். தமிழ்ப்பற்றும் அகத்தியர் பற்றும் தனித்து முன் காட்டப்பட்டுள்ளன. திருக்குறளின் தொடர்களையும், கருத்துகளையும் பெருமளவு கையாண்டும் அவ்வப்போது உரையாசிரியராகப் (8272) பொலிந்தும் தம் வள்ளுவக் காதலைத் தெரிவிக்கிறார். வள்ளுவரை எப்படியெல்லாம் தம் நூலுள் கம்பர் போற்றியுள்ளார் என்பதனை மிக விளக்கமாகவும், தெளிவாகவும் ச.தண்டபாணிதேசிகர் தம் 'வள்ளுவரும் கம்பரும்' நூலுள் பேசியுள்ளார். ஆய்வாளர் கருத்துக்கு இந்நூல் அரணாகும்.

2. கல்வியிற் பெரியவர் கம்பர். தமக்கு முன் தோன்றிய தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்து தோய்ந்தவர். வடமொழிப் பயிற்சியும் மிக்கவர் என்பதுடன் அதன் பற்றாளர் என்பதிலும் ஐயமில்லை. உளவியல் அறிவும் நிறைந்தவர்.

3. அரசியல் அறிவு மிக்கவர் என்பது மட்டுமின்றிச் சிறந்த சமூகச் சிந்தனையாளரும் ஆவர் என்பதை அவரது இன்பக்கனவுலகான கோசலமே மெய்ப்பிக்கும்.

4. தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலுக்குக் காப்பியத்துள் அவரளித்துள்ள இடம் அவரை செய்ந்நன்றி மறவாத பண்பாளராக வெளிப்படுத்துவது அனைவரும் அறிந்ததாம்.

5. வாழியர் அந்தணர், வாழி நல் அறம் (5168), கரியமாலினும் - - - பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால் (1413), அறநெறி அந்தணாளரின் (2201), உறையுளை எரித்தோன் பாவி (2205), அந்தணர்க்கு ஆகும் நாம் அரக்கர்க்கு ஆகுமோ (4249), அறம் தவா நெறி அந்தணர் தன்மையை மறந்த புல்லர் வலி தொலையேன் எனின் இறந்து போகினும் நன்று (2649) என்பன போன்ற தொடர்களால் அந்தணர் மீது மிகுந்த மதிப்புடையவர் என்பது தெளிவாகிறது.

6. ஊழின் மீதுள்ள தம் நம்பிக்கையை, 'எக்குலங்களின் யாவரே ஆயினும் இருவினை எல்லோருக்கும் ஒக்கும் ஊழ்முறை அல்லது வலியது ஒன்று இல்' (5039) என்பது போன்றவற்றால் நிறுவுகிறார். மறுபிறப்பில் நம்பிக்கை கொள்வதை, 'நல்வினைப் பயன்கள் எல்லாம் மாறிய பிறப்பில் தேடி வருவபோல்' (395); 'மாசுஉறு பிறவி போல வருவது போவது ஆகி' (488) என்பனவற்றால் அறியலாம். விதியிலும் ஆழ்ந்த நம்பிக்கை பெற்றிருப்பதை, பிறவியின் இன்ப துன்பம் தான் விதிவயம் என்பதை மேற்கொளாவிடின் மதிவலியால் விதிவெல்ல வல்லமோ,' (3508) என்பதாலும், பிறவிடத்தும் இதனை வலியுறுத்தியிருப்பதாலும் (3146, 3510) தெரியலாம்.

7. வறுமைத் துன்பத்தை அணு அணுவாக அனுபவித்தவர் என்பதும் உணர முடிகிறது. தமது கற்பனைக் கோசலத்துள் உழவரை 'வறியவர்க்கு உதவி, மிக்க விருந்து உண மனையின் உய்ப்பார்' (51) எனக் காண்பதும், 'சிலர்க்கு பழங்கணோடு இரந்தவர் பரிவு தீர்தர வழங்கவும் பொழுது போம்' (159) என நவில்வதும், பூவையரிடம் 'பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால் வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்தும் அன்றி விளைவன யாவையே' (67) என வியப்பதும், 'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்' (84) என மொழிவதும் இவற்றிற்கெல்லாம் மேலாக 'எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ' (166) எனப் பொதுவுடைமை பேசுவதும் வறுமைத்தாக்கத்தின் விளைவே எனக் கருத இடமளிக்கின்றன.

8. அனைவரும் மதிக்கும் உயிரினை 'உயிர் கள்' எனல் (3844), மகிழ்ச்சிப் பெருக்கினை 'கனிந்த இன்களி கள்ளினில் காட்டுமோ' (9974) என வியத்தல், அன்பின் ஆரவாரத்தை 'ஒரு கள்ளின் தோன்றிற்றன்றே' (10202) எனக் காட்டல், தாம் பெரிதும் போற்றும் தமிழை உவமமாக்கித் 'தமிழ்நிகர் நறவம்' (4557) எனப் போற்றுதல் முதலானவற்றை நோக்கும் பொழுது கள்ளுண்டு களித்தலில் பெருவிருப்புடையராய் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

நிறைவு

இராமனின் மேனியழகை வருணிக்கும் கம்பர்,

தோள் கண்டார், தோளே கண்டார், தொடு கழல் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார், தடக்கை கண்டாரும் அஃதே
வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்? (1081)

என்பார். கம்பர் காப்பியக் கடலுள் புகும் அன்பர் நிலையும் அதுவே. எண்ணற்ற ஆய்வுகள் கம்பராமாயணத்துக்கு எழுந்துள்ளன. எனினும் அவை யாவும் முழுமையாகக் கம்பரின் அறிவை, திறமையை, மாட்சிமையைப் புலப்படுத்தியுள்ளன எனக் கூற இயலாது. கம்பரின் கம்பன் அள்ள அள்ளக் குறையாத ஆழ்கடல்; சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாத இன்னமுது; தொட்டனைத்து ஊறும் இன்பக் கேணி; நூலுக்கு இலக்கணம்; அறிவுச் சுரங்கம்; தமிழின் தமிழரின் நற்பயன். அதன் ஒவ்வொரு பாடலும் முத்துடைச் சிப்பி. அறிவுச் சூரியராம் கம்பரின் காப்பியப் பெருமை இக்கட்டுரையில் சிறுதுளியளவே தொட்டுக் காட்டப்பட்டுள்ளது. முழுமையை அறியும் பொழுது வியப்புக் கடலிலிருந்து மீளல் இயலாது என்பது பேருண்மை.

கம்பன் பதிப்புகள் (முழுமை)

எண்	காலம்	பதிப்பாசிரியர்	பகுதிகள்	இயல்பு
1.	1840-1843	திருவேங்கடாசல முதலியார்	?	மூலம்
2.	1858	சுப்பராய முதலியார் & சுப்பராயபிள்ளை	?	மூலம்
3.	1861-1864	கோமளபுரம் இராச கோபாலப்பிள்ளை	?	மூலம்
4.	1863-1864	புங்கத்தூர் அ.கந்தசாமி முதலியார்	?	மூலம்
5.	1884-1885	தேவராச கவிராயர்	2	மூலம்
6.	1885-1887	சாத்தம்பாக்கம் கிருஷ்ணசாமி முதலியார்	2	மூலம்
7.	1896	திருமயிலை சண்முகம் பிள்ளை	?	உரை
8.	1894முதல்	வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்	7	உரை
9.	1911	அ.சுந்தரநாதபிள்ளை	2	மூலம்
10.	1914	அ.இரங்கசாமி முதலியார் & சன்ஸ்	2	மூலம்
11.	1914-1928	தி.சி.பார்த்தசாரதி ஐயங்கார்	2	மூலம்
12.	1926	க.இராமரத்ன ஐயர்	?	மூலம்
13.	1929	வித்துவான் இராமசாமி நாயுடு	?	உரை
14.	1942	மு.இராகவையங்கார் (வெ.நா. ஸ்ரீநிவாஸையங்கார் வெளியீடு ஆழ்வார் திருநகரிப்படி)	பால	குறிப்புரை
	1944-1954	பக்ஷிராஷையங்கார் (வெ.நா.நிவாஸையங்கார் வெளியீடு, ஆழ்வார் திருநகரிப்படி)	அயோத்தி - யுத்தம் வரை	குறிப்புரை
15.	1953-1955	டி.கே.சிதம்பரநாத முதலியார்	3	அரும்பதவுரை
16.	1955-1970	அண்ணாமலைப் பல்கலைக் கழகம் (பதிப்புக்குழு)	16 குழுவினர்	உரை
17.	1957-1963	உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்	10 உ.வே.சா.	உரை
18.	1958-1959	மர்ரே எஸ்.இராஜம் (பதிப்புக்குழு)	9	மூலம்
19.	1976	சென்னை, கம்பன் கழகம் (பதிப்புக்குழு)	1	குறிப்புரை
20.	1984-1986	பூவண்ணன்	8	தெளிவுரை
21.	1993	கோவை, கம்பன் அறநிலை (பதிப்புக்குழு)	8	உரை
22.	1998	சென்னை, திருமகள் நிலையம்	?	தெளிவுரை
23.	1999	சென்னை, கங்கை புத்தக நிலையம் (அ.ச.ஞானசம்பந்தன் & தெ.ஞானசுந்தரம்	6	குறிப்புரை
24.	2002	”	1	”
25.	2004	சென்னை வர்த்தமானன் பதிப்பகம்	9	தெளிவுரை
26.	2008	ச.வே. சுப்பிரமணியன்	1	குறிப்புரை

கம்பன் உரையாசிரியர்

எஸ்.கிருஷ்ணசாமி முதலியார் (1861, பால)

வி.கோவிந்த பிள்ளை (1871, சுந்தர)

சேஷ சாஸ்திரி (1889, அயோத்தி)

வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் (1894 முதல்)

மயிலை சண்முகம் பிள்ளை (1896 முதல்)

எம்.ஆர்.கந்தசாமிக் கவிராயர் & எஸ்.வெங்கடராயுலு நாயுடு (1900, பால-சுந்தர)

இராமசாமி நாயுடு (1904, பால)

சுப்பராய செட்டியார் (1904, அயோத்தி)

அ.குமாரசாமிப் பிள்ளை & தி.த.கனகசுந்தரம்பிள்ளை (1918, பால)

ஸ்ரீநிவாஸ முதலியார் (1922, பால)

வை.மு.சடகோபராமானுஜாசாரியார் & சே.கிருஷ்ணமாசாரியார் & வை.மு.கோ.
(1922 - கிட்கிந்தா, 1924 - சுந்தர, 1936 - ஆரணிய)

டி.என்.சேஷாசலம் (1930-பால)

உ.வே.சாமிநாதையர் (1957-1963)

பூவண்ணன் (1984-1986)

கோ.வில்வபதி (1993, பால)

திருமகள் நிலையப் பதிப்பு : எம்.நாராயணவேலுப்பிள்ளை & வ.த.இராமசுப்பிரமணியம் & துரை இராசாராம் (1998-2001)

அனுஜன் (1999, பால)

அண்ணாமலைப் பல்கலைக்கழக உரையாசிரியர் குழு (1955-1970)

ரா.பி.சேதுப்பிள்ளை, மு.இராகவையங்கார், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், கோ.சுப்பிரமணிய பிள்ளை, லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார், ஏ.சிதம்பரநாதச் செட்டியார், பி.ஸ்ரீ. ஆச்சாரியார், நீ.கந்தசாமிபிள்ளை, ஏ.சி.பால்நாடார், தி.கி.இராமாநுஜ ஐயங்கார், ச. தண்டபாணி தேசிகர்

கம்பன் அறநிலை விளக்கஉரைக் குழு (1993)

அமுதன், அரங்கசாமி, நா.அரங்கநாதன், மு.இராமசாமி, எஸ்.கே.இராமராசன், ம.ரா.போ.குருசாமி, வே.சிவசுப்பிரமணியன், வி.இரா.சிவராசன், அ.ச.ஞானசம்பந்தன், தெ.ஞானசுந்தரம், தரணிபாஸ்கர்

வர்த்தமானன் பதிப்பகம் பதிப்பு : பூவண்ணன் & ஜெ. ஸ்ரீசந்திரன் & அ. மாணிக்கம் (2004)

காண்க : **இருபதில் கம்பன்**, ச. சிவகாமி, மாதவி பதிப்பகம், சென்னை, 2002, பக்.52-75

கம்பன் மொழிபெயர்ப்புகள்

English

1. Kambaramayana (Bharat Milap); C.Rajagopalachari, 1955, Delhi, Government of India.
2. Leaves from Kamban (Rendering into English from the Tamil Ramavatara by Kamba), A.Srinivasaragavan, 1955, 28, Madras.
3. The Ayodhya Canto of the Ramayana as told by Kamban, C.Rajagopalachari, 1961, 1970, 128, Delhi, Sahitya Akademi.
4. Kambaramayana (A Condensed Verse in English Verse & Prose); V.S.Mudaliar, 1970, 333+2, Madras, Palaniappa Bros.
5. The Ramayan (Suggested by the Tamil version of Kamban), R.K.Narayan, 1973, 11 + 171, Mysore, Indian thought Publication.
6. Kambaramayanam - Seetha kalyanam (in English Verse); S.D.S.Yogi;-;-;-;-.
7. Kamban (The script of light and sound spectacle - Translation with original);-;-;- Madras; Chinmaya yuvakendra.
8. Kambaramayanam (Hiranya Vadai Padalam or the slaying of Hiranya); V.Shanmuga Mudaliar; 1954; Tamil Culture - Vol VI No.2;-
9. Kamban; S.Maharajan; 1972; 2+80; New Delhi; Sahitya Akademi.
10. The Forest Book of the Ramayana of Kampan; George L.Hart; 1998;-;Berkeley; University of California.
11. Kambaramayanam; P.S.Sundaram; 1991; Government of Tamil Nadu; Chennai.
12. கம்பராமாயணக் கருப்பொருள் மூலமும் உரையும் ஆங்கிலேய மொழிபெயர்ப்புடன்;-; 1910; 100+16; கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை (Translation of Ramayana Karupporul).

French

13. Ramayana de Kampar - Sundara kandam (Live de La Beaute); Gnanon Diagou; 1972; Pondicherry.

Hindi

14. Kambaramayanam - 1; N.V.Rajagopalan,; 544; Patna.
15. -, Saraswathi, Ramanathan,-,-,-,-

Kannada

16. Kampan; Kusalappa Guade; -91; New Delhi; Sahitya Akademi (From English Translations of S.Maharajan).

Malayalam

17. Kamparudaiya Ramayana Katha; C.Cuññi Rama Menon; 1922; Trichur; Mangalothayam.
18. Vali Mostham; Ā talparru; 1933; 76; Trichur; Keralothayam Press.
19. kamparamayana Katha;- 1937; 440; Kunnam-Kulam; A.R.P.

20. Kerala Pashakanam; G.Ramakrishna Pillai; 1954; 830; Trivandrum; Thiruvithankur University.

21. Kambaramayanam; Sridharunni; 1958; 276; Quilon; Sri Rama Vilasam.

22. Kerala Pasha Katyam; Kavunkal Nilakanda Pillai; 1959; 398; Quilon; S.T.Reiyar.

23. Kambaramayanam - Bala Kandam; S.K.Nayar; 1963; 214; kottayam; National Book Stall.

24. Kambaramayanam - Balakandam - Vol.1 (A Translation and transliteration in Malayalam), S.K.Nayar; 1967; Madras; University of Madras.

25. Kambaramayanam - 2 (Ayodhaya Kandam - translation and transliteration in Malayalam); S.K.Nayar; 1969; 398; Madras; University of Madras.

26. Kambaramayanam - 3 (Aranya Kandam - translation and transliteration in Malayalam); S.K.Nayar; 1987; 389; Madras; University of Madras.

27. Kambaramayanam; Narayanan; - ; 393; (Translation in Prose).

Sanskrit

28. Kambaramayanam in Sanskrit (Balakandam); S.N.Srirama Desikan; 1964;-

29. Srirama Caritam; S.Nilakanda Sastri;-;

Telugu

30. Kambaramayanam - 1; R.R.Reddi; 1950; 542; Chittoor, Sahitya Pracari House.

காண்க : 1 Bibliography on Translations; S.Sivakami; International Institute of Tamil Studies; Chennai; 1983.

2. இருபதில் கம்பன், பக். 76-94

இதயத்தை விரிவாக்கி இன்பம் சேர்க்கும்
எந்நாளும் அழியாத அன்பை ஆர்க்கும்
விதிமாத்த நடையழகில் வியப்பைக் கூட்டும்
வெவ்வேறு வருணனைகள் சிறப்பைக் காட்டும்
பதத்துக்குப் பதம் உயர்ந்த பண்பை ஆக்கும்
பக்குவமாய் அஞ்ஞான இருட்டை நீக்கும்
கதை சொல்லும் வேகத்தில் கருத்தை ஊர்க்கும்
கம்பன் செய் ரசவாதக் கலைதான் என்னே!

- கம்பன்மலர் (கம்பன் கழகம், கோவை) 1984

உள்ளே. . . . . .

கதைமாந்தர்

அ) நேரடியாக இடம் பெறும் தனியர்

				பக்
1.	அக்ககுமாரன்	--	அரக்கர்	1
2.	அக்கயன்	--	வானரம்	1
3.	அகத்தியன்	--	மானுடம்	1
4.	அகம்பன்	--	அரக்கர்	1
5.	அகலிகை	--	மானுடம்	2
6.	அங்கதன்	--	வானரம்	2
7.	அங்காரதாரை	--	அரக்கர்	3
8.	அத்திரி	--	மானுடம்	3
9.	அதிகாயன்	--	அரக்கர்	3
10.	அயோமுகி	--	அரக்கர்	3
11.	அரன்	--	அரக்கர்	3
12.	அருணன்	--	வானவர்	3
13.	அனசூயை	--	மானுடம்	4
14.	அனலன்	--	அரக்கர்	4
15.	அனிலன்	--	அரக்கர்	4
16.	அனுமன்	--	வானரம்	4
17.	ஆதிசேடன்	--	பாம்பு	10
18.	ஆன்பெயர்க் கண்ணன்	--	வானரம்	10
19.	ஆனிறக் கண்ணன்	--	வானரம்	10
20.	இடபன்	--	வானரம்	10
21.	இடும்பன்	--	கரடி	11
22.	இந்திரசித்து	--	அரக்கர்	11
23.	இந்திரன்	--	வானவர்	12
24.	இராமன்	--	மானுடம்	14
25.	இராவணன்	--	அரக்கர்	30
26.	இலக்குவன்	--	மானுடம்	36
27.	இராம இலக்குவர்	--	மானுடர்	40
28.	இலங்காதேவி	--	வானவர்	42
29.	உதாசித்து	--	மானுடம்	42
30.	உமையாள்	--	வானவர்	42
31.	உருப்பசி	--	வானவர்	42
32.	உருமை	--	வானரம்	42
33.	உரோமபதன்	--	மானுடம்	42
34.	எரிக்கடவுள் (அக்னி)	--	வானவர்	43
35.	கங்கை	--	நதி	43
36.	கசகோமுகன்	--	வானரம்	43
37.	கணியன்	--	மானுடம்	43
38.	கரன்	--	அரக்கர்	43
39.	கலுழன் (கருடன்)	--	பறவை	44
40.	கலைக்கோட்டு முனிவன்	--	மானுடம்	44
41.	கலைமகள்	--	வானவர்	45
42.	கவந்தன் (தனு)	--	வானவர்	45
43.	கவயன்	--	வானரம்	45
44.	கவயாக்கன்	--	வானரம்	45
45.	கனகன்	--	வானரம்	45
46.	கார்த்தவீரியார்ச்சுனன்	--	மானுடம்	45
47.	காலசங்கன்	--	அரக்கர்	45
48.	காலன்	--	அரக்கர்	45
49.	குகன்	--	மானுடம்	46
50.	குசத்துவசன்	--	மானுடம்	46
51.	கும்பகருணன்	--	அரக்கர்	46
52.	கும்பன் (1)	--	வானரம்	47
53.	கும்பன் (2)	--	அரக்கர்	47
54.	கும்பானு	--	அரக்கர்	48
55.	குமுதன்	--	வானரம்	48
56.	குமுதாக்கன்	--	வானரம்	48
57.	குருதிக் கண்ணன்	--	அரக்கர்	48
58.	குலிசன்	--	அரக்கர்	48
59.	கூற்றுவன்	--	வானவர்	48
60.	கெந்தமாதனன்	--	வானரம்	48
61.	கேகயன்	--	மானுடம்	49
62.	கேசரி	--	வானரம்	49
63.	கைகேயி	--	மானுடம்	49
64.	கோசலை	--	மானுடம்	50
65.	கௌதமன்	--	மானுடம்	51

66. சங்கன் -- வானரம் 51
67. சசி -- வானவர் 51
68. சடாயு -- பறவை 51
69. சத்துருக்கன் -- மானுடம் 52
70. சதவலி (1) -- வானரம் 52
71. சதவலி (2) -- வானரம் 52
72. சதானந்தன் -- மானுடம் 52
73. சம்பரன் -- அரக்கர் 52
74. சம்பாதி (1) -- பறவை 52
75. சம்பாதி (2) -- அரக்கர் 53
76. சம்புமாலி -- அரக்கர் 53
77. சயந்திரன் -- வானவர் 53
78. சரபங்கன் -- மானுடம் 53
79. சரபங்கன் மனைவி (பெயரில்லை) -- மானுடம் 53
80. சரபன் -- வானரம் 53
81. சலபோசனன் -- மானுடம் 54
82. சலபோசனன் மனைவி (பெயரில்லை) -- மானுடம் 54
83. சவரி -- மானுடம் 54
84. சனகன் -- மானுடம் 54
85. சாந்தை -- மானுடம் 54
86. சாம்பவான் -- கரடி 55
87. சார்த்தூலன் -- அரக்கர் 55
88. சாரன் -- அரக்கர் 55
89. சிங்கன் -- அரக்கர் 55
90. சிவன் -- வானவர் 55
91. சீதை -- மானுடம் 59
92. சுக்கிரன் -- அரக்கர் 67
93. சுக்கிரீவன் -- வானரம் 67
94. சுகன் -- அரக்கர் 69
95. சுசேடணன் -- வானரம் 70
96. சுடேணன் -- வானரம் 70
97. சுதீக்கணன் -- மானுடம் 70
98. சுபாகு -- அரக்கர் 70
99. சுபாரிசன் -- அரக்கர் 70
100. சுமந்திரன் -- மானுடம் 70
101. சுமித்திரை -- மானுடம் 70
102. சுயம்பிரபை -- வானவர் 71
103. சுரசை -- வானவர் 71
104. சுரோசனன் (பெயரில்லை) -- மானுடம் 71
105. சூர்ப்பணகை -- அரக்கர் 71
106. சூரியன் பகைஞன் -- அரக்கர் 72
107. சேனைக் காவலன் -- அரக்கர் 72
108. சோணிதக் கண்ணன் -- அரக்கர் 72
109. ஞாயிறு -- வானவர் 72
110. ததிமுகன் -- வானரம் 74
111. தம்பன் -- வானரம் 74
112. தயரதன் -- மானுடம் 74
113. தரீமுகன் -- வானரம் 77
114. தாடகை -- அரக்கர் 77
115. தாரன் (பெயரில்லை) -- வானரம் 78
116. தாருகன் -- அரக்கர் 78
117. தாரை -- வானரம் 78
118. தானிமாலி -- அரக்கர் 78
119. திங்கள் -- வானவர் 78
120. திரிசடை -- அரக்கர் 79
121. திரிசரா (1) -- அரக்கர் 80
122. திரிசரா (2) -- அரக்கர் 80
123. திருமகள் -- வானவர் 80
124. திருமால் -- வானவர் 81
125. திலோத்தமை -- வானவர் 85
126. தீர்க்கபாதன் -- வானரம் 85
127. துந்துபி -- அரக்கர் 85
128. தும்புரு -- வானவர் 85
129. துமிந்தன் -- வானரம் 85
130. துமிரன் -- அரக்கர் 86
131. துவிந்தன் -- வானரம் 86
132. துன்மருடன் -- வானரம் 86
133. துன்முகன் (1) -- வானரம் 86
134. துன்முகன் (2) -- அரக்கர் 86
135. தூடணன் -- அரக்கர் 86
136. தூமநாட்டத்தன் -- அரக்கர் 86
137. தூமன் -- வானரம் 86
138. தூமிரன் -- கரடி 86
139. தேவராந்தகன் -- அரக்கர் 86
140. நராந்தகன் -- அரக்கர் 87

141. நளன் -- வானரம் 87
142. நாரதர் -- வானவர் 87
143. நான்முகன் -- வானவர் 87
144. நிகும்பன் -- அரக்கர் 89
145. நிலமங்கை -- வானவர் 89
146. நீலமாலை -- மானுடம் 90
147. நீலன் -- வானரம் 90
148. பதுமுகன் -- வானரம் 90
149. பரசுராமன் -- மானுடம் 90
150. பரத்துவாசன் -- மானுடம் 91
151. பரதன் -- மானுடம் 91
152. பனசன் -- வானரம் 93
153. பிசாசன் -- அரக்கர் 93
154. பிரகத்தன் -- அரக்கர் 94
155. புகைநிறக் கண்ணன் -- அரக்கர் 94
156. பூதம் -- வானவர் 94
157. போர்மத்தன் -- அரக்கர் 94
158. மகரக்கண்ணன் -- அரக்கர் 94
159. மகோதரன் -- அரக்கர் 94
160. மண்டோதரி -- அரக்கர் 95
161. மதங்கன் -- மானுடம் 95
162. மதன் -- வானரம் 95
163. மந்தரை (கூனி) -- மானுடம் 95
164. மயன் -- அரக்கர் 95
165. மயிடன் -- அரக்கர் 96
166. மயிந்தன் -- வானரம் 96
167. மருத்தன் (1) -- அரக்கர் 96
168. மருத்தன் (2) -- அரக்கர் 96
169. மன்மதன் -- வானவர் 96
170. மனகதி -- அரக்கர் 97
171. மாதலி -- வானவர் 97
172. மாபெரும்பக்கன் -- அரக்கர் 97
173. மாமேகன் -- அரக்கர் 97
174. மாயாவி -- அரக்கர் 97
175. மாரீசன் -- அரக்கர் 97
176. மாலி (1) -- அரக்கர் 98
177. மாலி (2) -- அரக்கர் 98
178. மாலியவான் -- அரக்கர் 98
179. முரபன் -- வானரம் 98
180. மேனகை -- வானவர் 98
181. மைநாகம் -- மலை 98
182. வச்சிரத்து எயிற்றவன் -- அரக்கர் 99
183. வச்சிர முட்டி -- அரக்கர் 99
184. வசிட்டன் -- மானுடம் 99
185. வயமத்தன் -- அரக்கர் 100
186. வருணன் -- வானவர் 100
187. வன்னி -- அரக்கர் 100
188. வாயு (காற்று) -- வானவர் 100
189. வாயுவேகன் -- அரக்கர் 101
190. வாலி -- வானரம் 101
191. விசுவகர்மா (பெயரில்லை) -- வானவர் 102
192. விசுவாமித்திரன் -- மானுடம் 103
193. விந்தன் -- வானரம் 104
194. வியாழன் -- வானவர் 104
195. விராதன் -- வானவர் 104
196. விலங்குநாட்டத்தன் (வீருபாக்கன்) -- அரக்கர் 104
197. வினதன் -- வானரம் 104
198. வீடணன் -- அரக்கர் 104
199. வே(க)தவதி (பெயரில்லை) -- வானவர் 106
200. வேள்வியின் பகைஞன் -- அரக்கர் 106

ஆ) நேரடியாக இடம் பெறும் தொகையினர்

1. அந்தணர் 107
2. அமைச்சர் 107
3. அரக்கர் 108
4. அரக்கரில் பூசுரர் 112
5. அரசர் 112
6. அரம்பையர் 112
7. ஆடவர் 113
8. இராவணன் மனைவியர் 113
9. இருவர் 113
10. உரகர் 113
11. ஒற்றர் 113
12. கணிதர் (சோதிடர்) 114
13. குசத்துவன் மகளிர் 114

14. சான்றோர் 114
15. சிந்தர் 114
16. சேனைத்தலைவர் ஐவர் 115
17. தயரதன் தேவியர் (அறுபதினாயிரவர்) 115
18. திசைக் காவலர் 115
19. தூதுவர் 115
20. நால்வர் (1) 115
21. நால்வர் (2) 115
22. நால்வர் (3) 115
23. படைவீரர் 116
24. பணியாளர் 116
25. பப்பரர் 116
26. பருவத்தேவர் 116
27. பொதுமக்கள் 116
28. மகளிர் 117
29. மாகதர் 117
30. முனிவர் 117
31. முனிவர் மனைவியர் 119
32. மெய்க்காப்பாளர் 119
33. வந்திகர் 119
34. வள்ளுவர் 119
35. வாயிற்காப்பாளர் 119
36. வானரர் 119
37. வானவர் 120

இ) கதை(மாந்தர்) வழி அறியப்படுவோர்

1. அஞ்சனை -- வானரம் 122
2. அத்திரி -- மானுடம் 122
3. அதிதி -- மானுடம் 122
4. அம்பரீடன் -- மானுடம் 122
5. அயன் -- மானுடம் 122
6. அருந்ததி -- மானுடம் 122
7. இக்குவாகு -- மானுடம் 122
8. இரணியகசிபு -- அரக்கர் 122
9. இரணியன் -- அரக்கர் 122
10. ஏமை (பெயரில்லை) -- வானவர் 123
11. ஐராவதம் -- யானை 123
12. காகுத்தன் -- மானுடம் 123
13. காசிபன் -- மானுடம் 123
14. காதி -- மானுடம் 123
15. காலகேயர் -- அரக்கர் 124
16. காளி -- வானவர் 124
17. குசநாபன் -- மானுடம் 124
18. குசநாபன் மகளிர் -- மானுடம் 124
19. குசன் -- மானுடம் 124
20. குபேரன் -- வானவர் 124
21. குவலையாசுவன் -- மானுடம் 124
22. கேகசி (பெயரில்லை) -- அரக்கர் 125
23. கைடவன் -- அரக்கர் 125
24. கௌசிகை -- மானுடம் 125
25. சகரர் -- மானுடம் 125
26. சடையன் -- மானுடம் 125
27. சத்தியவிரதன் (பெயரில்லை) -- மானுடம் 125
28. சமதக்கினி -- மானுடம் 125
29. சமய வாதியர் -- மானுடம் 125
30. சாலகடங்கடன் -- அரக்கர் 125
31. சிபி -- மானுடம் 126
32. சுதாசன் -- மானுடம் 126
33. சுந்தோப சுந்தர் -- அரக்கர் 126
34. சுமாலி -- அரக்கர் 126
35. சுரபி (காமதேனு) -- பசு 126
36. சுனச்சேபன் -- மானுடம் 126
37. திரிசங்கு -- மானுடம் 126
38. திலீபன் -- மானுடம் 127
39. துந்து -- அரக்கர் 127
40. துர்க்கை -- வானவர் 127
41. தேவராதன் (பெயரில்லை) -- மானுடம் 127
42. நந்தி -- வானவர் 127
43. நரசிங்கம் -- வானவர் 127
44. நிமி -- மானுடம் 127
45. நிருதி -- அரக்கர் 127
46. பகீரதன் -- மானுடம் 127
47. பிரகலாதன் -- அரக்கர் 127
48. பிரகலாதன் குரு (பெயரில்லை) -- அரக்கர் 128
49. பிரமதத்தன் -- மானுடம் 128
50. பிருகு -- மானுடம் 128

51.	பிருது (பெயரில்லை)	--	மானுடம்	128
52.	மது	--	அரக்கர்	128
53.	மனு	--	மானுடம்	128
54.	மாந்தாதா	--	மானுடம்	129
55.	மார்க்கண்டேயன்	--	மானுடம்	129
56.	மாவலி	--	அரக்கர்	129
57.	முசுகுந்தன்	--	மானுடம்	129
58.	முருகன்	--	வானவர்	129
59.	யமதங்கி	--	மானுடம்	129
60.	ரகு	--	மானுடம்	129
61.	ரிசிகன்	--	அரக்கர்	129
62.	ரேணுகா	--	மானுடம்	130
63.	வசிட்டன் புதல்வர்	--	மானுடம்	130
64.	வான்மீகி	--	மானுடம்	130
65.	விசுவாமித்திரன் புதல்வர்	--	மானுடம்	130
66.	விநாயகன்	--	வானவர்	130
67.	விபாண்டகன்	--	மானுடம்	130

சமூகவியல்

மொழி (தமிழ்) (பக். 132-133)

தமிழ் - முத்தமிழ், இயற்றமிழ் - இராமாயணம், புன்கவி, கவிஞர் / படைப்பாளர், அகத்தியன், கல்விவலார் - இசைத் தமிழ் - நாடகத் தமிழ் - தமிழ்நாடு

மக்கட்பாகுபாடு (பக். 133 - 185)

பொது - தொல்காப்பியமரபு - அந்தணர், அந்தணர்க்குரியன, முனிவர், முனிவர்க்குரியன - அரசர், பொது, அரசர் வரிசை, அரசாட்சி, அரசியலறம், அரசர் கடமை, அரசர் பண்புகள், அரசர்க்குப் பழிதருவன, அரசர் துணை, அரசர் அவை, அரசர் மந்திரம் - அரசர்க்கு உரியன - வணிகர் - வேளாளர் - **நில அடிப்படை** - குறிஞ்சி - முல்லை - மருதம் - நெய்தல் - பாலை

தொழில் / பணி நிலை (பக். 143) பொது - அடிமை - அடுதல் / சமைத்தல் - அமைச்சர் - ஆசிரியர் - ஆலைத்தொழில் - இரவலர் - உழவுத் தொழில் - ஏவலர் - இலங்கை மாநகரில் வானவர் பணி - ஒப்பனையாளர் - ஒற்றர் - கஞ்சுகி / மெய்க்காப்பாளர் - கடிகையர் / நாழிகைக் கணக்கர் - கணிதர் / சோதிடர் - கம்மியர் / பொற் கொல்லர் - கள்ளர் - குயவர் - கொல்லர் - சாயம் தோய்த்தல் - சுற்றுப்புறத் தூய்மையாளர் - தச்சன் - கட்டடத்தொழில், வெள்ளையடித்தல் - தூது - தேனெடுத்தல் - தையல் - நெய்தல் - பாகர் - பாரம் சுமப்பவர் / பல்லக்குத் தூக்கிகள் - பூசுரர் - மருத்துவர் - முத்துக்குளித்தல் - மீகாமர் / மாலுமி - வணிகம் - வந்திகர் - வள்ளுவர் - விலைமகளிர் - பிற

போர்த்தொழில் (பக். 149) பொது - போர் நிகழிடம் - போர் நடைபெறும் பொழுது - போர்க்கல்வி - போர் உத்தி - போர் ஆற்றல் - போர் அறம் - போர் வீரர் - வீரர் இயல்பு, வீரர்வகை, காவலர், வீரர் கூட்டம் / படை - படையளவு, படைத்தலைவர் -

படைக் கலன்கள் (பக்.155) பொது, அங்குசம், ஈட்டி, உலக்கை, எழு, கல், கணையம், கதை, கப்பணம், கவண்கல், கழு, கன்னகம், கிடுகு, குணில், குந்தம், குலிசம், குன்று, கூடம், கேடகம், கோல், சக்கரம், சத்திரம், சூலம், தண்டு, தாரை, தூண், தோமரம், நாஞ்சில், பந்தம், பரிகம், பாசம், பாலம், மத்திகை, மரம், மழு, மாயப்படை, முசலம், வல்லையம், வலயம், வளை, வாள் - வாள் உறை, சிறப்புடை வாள்கள், விட்டேறு, வில் - புகழுடை வில்கள், வில் ஆற்றல், அம்பு, அம்பு உறுப்புகள், அம்பு வகைகள், சிறப்புடை அம்புகள், அம்பறாத் தூணி, வேல் - வேல் உறை, புகழுடை வேல்கள், உடல் உறுப்புகள் படைக்கலனாதல், படைக்கலன்கள் இணைவு, வானரப்படை படைக்கலன்கள், தெய்வப் படைக்கலன்கள், பிற, நாகபாசம் - கருடன் வர நாகபாசம் விடுபடல், மாயப்படை - ஞானமாக் கடுங்கணை, மோகப் படை, போர் இசைக்கருவிகள்

போர்த்தூது / முன்னறிவிப்பு (பக்.172) போர்க்கோலம் / போர்ப்புறப்பாடு - பொது, மெய்க்காப்பு, படை எழுச்சி, பாசறை, போர் அணி வகுத்தல், அகழி தூர்த்தல், முற்றுகையிடல் - போர் - போர் நிகழ்வினைக் குறிப்பன, போர்த் தொடக்கம், போர் நிகழ்முறை - வஞ்சின முரைத்தல் / வீரவுரை, ஆர்ப்பொலி, சங்கொலித்தல், போரிடைப் பிற ஒலிகள் - சாரி திரிதல், கரடிப் போர், மற்போர், விற்போர் - வழிபாடு, நாண் ஒலித்தல், அம்பு எய்தல், அம்பு மதிலமைத்தல், ஒரு படைக்கு மாற்று ஆகும் படை, அனுமன் அங்கதன் இராம இலக்குவர்க்குப் போர் ஊர்தியாதல் - மாயப் போர், மாயையும் மாற்றும், உதவிப்படை, போர்க்களத்திற்கு அரசர் வருநிலை, போர் இறுதி - போர் வெற்றிக் கொண்டாட்டம் - போர் வெற்றி - அன்பளிப்பு

பிற - ஆயுதங்களின் இருப்பிடம் - படைக்கலச் சாலை அழிவு - அம்பில் பெயர் பொறித்தல் - படைக் கருவிகளுக்கு வழிபாடு - படைக் கலன்களைப் பாதுகாத்தல் - நஞ்சு பூசிய கருவிகள் - போரில் சமாதான முயற்சி - படைகளுக்கு உணவு - தோல்வியுற்றோர் - புறங் கொடுத்தல் - கவந்தம் ஆடுதல்

உறவுகள் (பக். 186-192)

உறவு - பொதுச் சொல் - வழித்தோன்றல் (வாரிசு) - குழந்தை - பெற்றோர் - உடன் பிறந்தோர் - முன்னோர் - மூத்தோர் - பெரியோர் - சிறுவர் - தாய் - தந்தை - சிற்றன்னை - வளர்ப்புத்தாய் - சிறியதந்தை - கணவன் - மனைவி - தமையன் / அண்ணன் - தம்பி - தமக்கை / அக்கா - தங்கை - மகன் - மகள் - அக்கா / தங்கை கணவன் - அண்ணன் மனைவி - கணவன் தம்பி - அத்தை / மாமி - மாமன் - மருமகன் - மருமகள் - பங்காளிகள் - பாட்டன் / தாத்தா - பாட்டி - பேரன் - கொள்ளுப்பேரன் - கொள்ளுப் பேத்தி - நண்பர் - ஆசிரியர் - மாணாக்கன் - தலைவர் - விருந்து - பிறர் - உறவு அற்றநிலை - பகைவர்

ஊர்திகள் (பக்.192-197)

பொதுச்சொல் - நில ஊர்திகள் - உருவாக்கியவை - தேர், தேர்செய்ம்முறை, தேர் உறுப்புகள், தேர் இழுப்பன, தேர்ப்பாகன், இந்திரசித்து தேர், இராமன் தேர், இராவணன் தேர், கும்பகருணன் தேர் - நீர் ஊர்தி, உறுப்புகள், மாலுமி, செலுத்துதல் - வானூர்தி - பிற - அனுமன் பறத்தல்

அளவைப் பெயர்கள் (பக்.197-234)

பொது - அளவிடமுடியாமை - எண்ணல் அளவை - பொது - எண்ணுப்பெயர் ஒன்று - ஓர், ஒரு, ஒற்றை - முதன்மையைச் சுட்டுவன, ஏகம், தலை, முதல், முதல்வர், முதல்வன், முதலி / முதலா / முதலிய - இரண்டு, இரு,இணை, ஈர், துணை, பாடு, இரட்டித்தல் / இருமடங்கு, மூன்று - மு, மும், மூ,மூவர், திரி, மும்மடி / மும்மடங்கு - நான்கு, நால், சதுர், பிற - ஐந்து, ஐ, அஞ்சு, பிற, ஐந்து மடங்கு - ஆறு, பிற - ஏழு, ஏழ், எழு, பிற, ஏழுமடங்கு - எட்டு, எண், அட்ட, பிற - ஒன்பது - பத்து, ஒருபது, தசம், பிற, பதின்மடங்கு -

பன்னிரண்டு - பதின்மூன்று - பதினான்கு - பதினாறு - பதினேழு - பதினெட்டு - இருபது - பிற இருபத்தொன்று - இருபத்தைந்து - ஐம்பது - ஐம்பத்தொன்று - அறுபது - நூறு, சதம், பிற நூற்றைம்பது - இருநூறு - முந்நூறு - அறுநூறு எழுநூறு - தொள்ளாயிரம் - ஆயிரம், பிற ஆயிரத்து இருநூறு - ஆயிரத்து நானூறு இரண்டாயிரம் - ஆறாயிரம் - எட்டாயிரம் எண்ணாயிரம் - பத்தாயிரம் / பதினாயிரம் - பிற பன்னிரண்டாயிரம் - பதினான்காயிரம் நாற்பத்தெட்டாயிரம் - ஐம்பதினாயிரம் ஐம்பத்தாறாயிரம் - அறுபதினாயிரம் எழுபதாயிரம் - எண்பதாயிரம் - பல்லாயிரம் - நூறாயிரம் / இலட்சம் - ஒன்றேகால் இலட்சம், இருநூறாயிரம் - மூன்று நூறாயிரம் - ஐந்து நூறாயிரம் - பத்து நூறாயிரம் - அறுபது நூறாயிரம் -

கோடி (பக்.218) இரண்டு கோடி - இரண்டரைக் கோடி - மூன்று கோடி - நான்கு கோடி - ஐந்து கோடி - ஆறுகோடி - எட்டுக்கோடி - ஒன்பது கோடி, பத்துக்கோடி - பன்னிருகோடி - பதினான்குகோடி - பதினாறு கோடி - இருபது கோடி - முப்பது கோடி - முப்பத்திரண்டு கோடி - ஐம்பது கோடி - அறுபத்து நான்கு கோடி - அறுபத்தேழுகோடி - தொண்ணூறு கோடி - நூறு கோடி - தொள்ளாயிரங் கோடி - ஆயிரங் கோடி - ஆயிரத்து அறுநூறு கோடி - இரண்டாயிரம் கோடி - மூவாயிரம் கோடி - நாலாயிரம் கோடி - எட்டாயிரம் கோடி - ஒன்பதாயிரம் கோடி - பத்தாயிரம் கோடி - பன்னிரண்டாயிரம் கோடி - பதினான்காயிரம் கோடி - இருபத்தையாயிரம் கோடி - முப்பதினாயிரம் கோடி - நாற்பத்தொன் பதினாயிரம் கோடி - எண்பதினாயிரம் கோடி - நூறாயிரம் கோடி - பல்லாயிர கோடி - பத்து நூறு ஆயிர கோடி - இருபது நூறு ஆயிரகோடி - ஐம்பது நூறு ஆயிரகோடி, கோடி கோடி - கோடி கோடி நூறாயிரம் - கோடி கோடியின் இரட்டி - எண்ணற்ற கோடி

இணைவு - அக்குரோணி - பதுமம் - தாமரை - வெள்ளம் - சமுத்திரம் - உறை - எண்ணற்றவை, சில், சில, சிலசில, பல், பல, பலப்பல - முதலும் முடிவும் / ஆதியோடு அந்தம் - அளவிடற்கரிய பருப்பொருள் - கணக்கிடு அழகு / உத்தி

நிறுத்தல் அளவை (பக். 227) முகத்தலளவை - நீட்டல் அளவை, பொது, நீட்டல் அளவுகள், குறிப்பு நிலை, அளவிடற்கரியன - கால அளவை, பொது, மிகச் சிறிய காலம் / சிறு பொழுது, நீண்டபொழுது, காலத்தின் / பொழுதின் சிறு கூறுகள், நாட்காலப் பிரிவு, நாள், நாள்தோறும்,

எந்நாளும் எப்பொழுதும், திங்கள் / மாதம், ஆண்டு, அளவற்ற ஆண்டு, பருவகாலம், முக்காலம், பொது, இறந்த காலம், முன்னிகழ்வைச் சுட்டுதல், நிகழ் காலம் - இணைவு - எதிர்காலம் - நீண்டகாலம் - அளவு இல் காலம் - குறிப்பிட்ட நாள் - ஆயுட் காலம் / வாழ்நாள் - **ஊழி** - **ஒலியளவை** - **பார்வை அளவை** - விரைவின் அளவை கணிப்பு - பிற - அளவிடற்கரியன நுண்பொருள்

பண்பாட்டியல்

உணவு (பக்.235-238)

பொதுச் சொல் - உண்டலைச் சுட்டுவன - திடப் பொருள், நவதானியம் - காய் - கிழங்கு - கனி - பிற - நீர்ப் பொருட்கள் - ஊன் உணவு - இணைவு - பிற - உண்கலங்கள் - உணவுக் கலங்கள்

உடை (பக். 239-240)

பொதுச் சொல் - அம்பரம் - ஆடை - உத்தரியம் - கச்சு - கஞ்சுகம் - கலிங்கம் - கலை - காழம் - கூறை - கோசிகம் - செச்சை - சேலை - தானை - துகில் - தூசி - தோல் - நீவி - பட்டு - மரவுரி / சீர் - வடகம் - வார் - புலி வால் - மான் உரி - அரக்கர் ஆடை

ஒப்பனை (பக்.240-253)

பொது - ஒப்பனையாளர் - ஒப்பனைக்குரிய நறுமணப் பொருட்கள் - இணைவு - ஒப்பனை செய்தல் - கூந்தல் (மகளிர்), சிகை (ஆடவர்), நெற்றி, கண், தோள், தொய்யில் (ஆடவர்), மார்பு, பிற, இணைவு, தொய்யில் எழுதுதல் - செம்பஞ்சுக் குழம்பு - கை - கை விரல் - விரல் நகம் - அடி - கால் விரல் - பிற - ஒப்பனை (நகர்), தோரணம் - விலங்கு

அணிகலன் (பக்.246) பொது - தலையணிகள், இணைவு - காதணிகள் - இணைவு - கழுத்தணி / மார்பணிகள் - தோளணிகள் - மார்பணிகள் - கை அணிகள் - இடையணிகள் - தொடையணிகள் - கால் அணிகள் - இணைவு - விலங்குகள் ஒப்பனை.

கலைகள் (பக்.253 - 261)

பொது - ஆடல், ஆடுபவர், பிற - ஆடலும் பாடலும் - கூத்து, கூத்தாடுவார், கூத்துவகைகள், - நாடகம் - **இசை** - பொது - பண் - இசைப்பவர் / பாடுபவர் - இசைக்கருவிகள், பொது - பிற - இணைவு - இசைக்கு உரிய பண்கள் - இசைப்பாடல்கள் - இசை இலக்கணம் - பிற - **ஓவியம்** ஓவியக்கலைஞர் - **சிற்பம்** - கலை நிகழிடம்

நம்பிக்கை (பக்.261-290)

அறம் - பாவம் - புண்ணியம் - இறைவன் - திருமால் பெருமை, எட்டெழுத்து, இறைக் கொள்கை - ஊழ்வினை - தவம் - துறவு - நிமித்தங்கள் - பொது, நன்னிமித்தம் - தீய நிமித்தம், பிற - இணைவு - கனவு - துறக்கம் / வீடுபேறு - முக்தியடைதல் - நரகம் - நிலையாமை - புனித நீராடல் / தீர்த்தமாடல் - மந்திரம் - மறுமை - மறை / வேதம் - வசைமொழி / சாபம் - பிற - பிற நம்பிக்கைகள் -

தொன்மம் (பக்.272) இடங்கள் - ஊழி, ஊழியின் அழிவு - உருத்திரன், ஊழிக் கால இடி, ஊழிக் காற்று, ஊழித்தீ, ஊழிப்புனல், ஊழி மழை இணைவு, ஊழி - காலன், அழிவின் பின் - கடல், கடல் வற்றியது, பாற்கடல், பாற்கடல் கடைதல் - கதைமாந்தர் தொடர்புடையன - கிரகங்கள் - பெண் தெய்வங்கள் - முப்பெருந் தெய்வங்கள் - நான்முகன் - திருமால் - திருமால் அவதாரங்கள் - சிவன் - முருகன் - வானோர் / தேவர் - கற்பகமரம் - விலங்குகள் - பிற தொன்மங்கள் - அண்டம், அணங்கு, அரக்கர், ஆலகாலவிடம், கவந்தம், துருவச் சக்கரம், தெய்வமணி, நாவல் மரம், புட்பக விமானம், பேய், பூதம், வடவை, வலம்புரிச் சங்கு

வேள்வி (பக்.288) பொது - வேள்வி நிகழிடம் - வேள்விக்கு உரியன - அவி உணவு - நிகழ்த்துமுறை - வேள்வி வகைகள் - நிகழ்முறை - வேள்வி செய்தோர் - வேள்விப்பயன்

பழக்கவழக்கம் (பக்.290-306)

அரசிளங்குமரர் பிறப்புச் சிறப்பு, அரசிளங்குமரர் கல்வி, அரசு உரிமை, அரசர் உரிமை, அரசர் நூலணிதல், அரசர் முடிசூடுதல், அரசவைக் காட்சி, உலாவரல், அரசர் செலவு (பயணம்), அரசரை எதிர்கொளல் (வரவேற்பு) வழியனுப்புதல் / விடை கொடுத்தல் / விடைபெறல், அரசர் அன்பளிப்பு - வரிசையறிதல், அடைக்கலம் புகுதல் - அடைக்கலம் ஏற்றல், அரசர் இருப்பிடம் பிறர் சார்தல், இறப்புச் சடங்கு, ஆட்சிமாற்றம், அரசர் - பிற -

பிற பழக்கவழக்கங்கள் (பக்.298) அடித்தளமிடல் - அந்தணர் பிறரை வணங்குவது இல்லை - உணவு அருந்துமுறை - உடன் கட்டை ஏறுதல் - ஈகை - கடைக்கூட்டு (இறுதி ஆசை) - கண்ணேறு கழித்தல் - கள்ளுண்ணல் - காப்புச் செய்தல் - காலமறிதல் - கூடல் இழைத்தல் - கையுறை - கொண்டாட்டம் -

சமூகவிதிகள் (பக். 299) பொது - பெண் பற்றியன - ஆண் பற்றியன - சாட்சி - தற்கொலை - திருமணம் - துக்கச் சூழல் - தூய்மை செய்தல் - நலம் வினாவுதல் - நாமமிடல் - நாள் பார்த்தல் / சோதிடம் - நிகழ்வுத் தொடக்கம் - நீராடல் - நோன்பு - பலி கொடுத்தல் - பழி - பழியஞ்சுதல் - பிறந்த குழந்தையைக் காணுமுறை - புத்திடம் புகுதல் - புதுமனை புகல் - பெயர் சூட்டல் - பெரியோரிடம் பழகுமுறை, பெரியோருக்குப் பதில் அளித்தல் - பெரியோரைப் பணிதல் - பொழுது அறிவித்தல் - வஞ்சினம் - சூளுரை (போர்க்களத்தின் புறம்) வரவேற்பு - வலம் வருதல் - வழிபாடு - வாக்குறுதி / வரம் வேண்டல் - வாக்குறுதி / வரம் அளித்தல் - வாழ்த்து - விருந்து - விளக்கேற்றுதல்

பழமொழிகள் (பக்.306-307)

பொது - பழமொழிகள்

மரபுத் தொடர் (பக்.307-309)

பொழுதுபோக்கு (பக்.309-311)

பொது - பொழுதுபோக்கு இடம் - அம்மானை - ஆடல்,குரவை ஆடல் - ஆடல் பாடல் - உண்டி வில் / கவண்கல் - ஊசல் - கழங்கு - காற்றாடி விடுதல் - சிற்றில் - சூது - நீர் விளையாட்டு - பட்டி மண்டபம் - பந்து - பறவை வளர்ப்பு - வட்டு - விலங்குப் போர் - விலங்கு வளர்ப்பு - இணைவு

வாழ்வியல் (பக்.311-326)

வாழ் நெறி - பண்பு / செயல் அடிப்படையில் மக்கள் - ஞானியர், பெரியோர், பெரியோர் இயல்பு, சிறியோர், வஞ்சகர், யோகியர், வள்ளியோர், இரவலர் - **வாழ்வியல் சிந்தனைகள்** - அடைக்கலம், அறம் - அறிவு - அறிவின்மை - அன்பு - ஆசை - ஆண் / ஆண்மை - இல்லறம் - இறப்பு - ஈகை - ஈகையின்மை - உதவி - உலகியல் - உள்ளம் - உறவு - ஊனமுற்றோர் - ஒழுக்கம் - கல்வி - கற்றல் - கற்பித்தல் - கற்றோர் - கல்லாதார் - கள்ளுண்ணாமை - காமம் - செஞ்சோற்றுக்கடன் - சொல் - தவம் - துணிவு - துணிவற்றோர் - துறவு - நட்பு - தீ நட்பு நடுவுநிலைமை - நிலையாமை - பகை - பழி பிறவி - புகழ் - பெண் / பெண்மை பொறையுடைமை - வினை செயல்வகை தீவினை - பிற

இயற்கை

விண்வெளி (பக்.327-328)

அண்டம் - மண்டலம் - வான் - கோள்கள் - விண்மீன் - ராசி - இணைவு - திதி

பயிரியல் (பக்.328-341)

பொது - வித்து - முளை - தளிர் - கொழுந்து - இலை - பூக்கள் - பொது - மலர்வகை - அசோக மலர், அடப்ப மலர், அல்லி, அனிச்சம், இலவங்கம், இலவம், ஊமத்தம், எருக்கு, எள், கரந்தை, கருவிளை, காந்தள், காயாம்பூ, குசும்பை, குமிழ், குரவம், குருந்தம், குவளை, கூதாளி, கொன்றை, கோங்கு, செங்கிடை, செருந்திமலர், தாழம்பூ, நந்தியாவட்டை, நரந்தம், நாகப்போது / வெட்சிப்பூ, நொச்சி, பித்திகை, பிடவம், புன்னை, பூளை, மகிழம்பூ, மந்தாரம், மல்லிகை, முருக்க மலர், முல்லை, வாகை, வேங்கை - பிற

தாமரை (பக்.332) - பாளை - வடு - குரும்பை - காய் - கனி - புல் - புல் வகைகள் - பூண்டு - கொடி - புதர் - பயிர்கள் - களை - கொம்பு - கிளை - வேர் - மரங்கள் - உலவை - மரவகைகள் - அகில், அசோகம், அத்தி, ஆச்சா மரம் / மராமரம், ஆல், கணையம், கமுகு / பாக்கு, குங்குமம் - குரவம், குருந்தம், கொன்றை, கோங்கு, சண்பகம், சந்தனம், சுரபுன்னை, செக்காரம், தமாலம், தாழை, தென்னை, தேக்கு, தேவதாரு, தேற்றா மரம், நரந்தம், நொச்சி, பலா, பனை, பாதிரி, பாலை, பிடவம், புளியமரம், புன்னை, மருதம், மாமரம், முள் முருங்கை, மூங்கில், மந்தாரம், வன்னி, வாழை, வேங்கை - காடு - பிற - மணப் பொருட்களாய்ப் பயன்படுவன

உயிரியல் (பக்.341-358)

விலங்கு - பொது - புழுக்கள் - கணுக்காலிகள் - ஈ, எறும்பு, கொசு, சிலந்தி, தேள், நண்டு, மின்மினி, வண்டு, விட்டில் - மெல்லுடலிகள் - இப்பி, சங்கு, சலஞ்சலம், நத்தை, மீன்கள் - நிலம் நீர் வாழ்வன - தவளை, தேரை, ஊர்வன - ஆமை, ஓதி / பச்சோந்தி, பாம்பு, முதலை - பறவைகள் (பக்.345) பொது, அன்றில், அன்னம், ஆண்டலை,

உளில் / உள்ளான், கவுதாரி, கழுகு, காகம், கிலுக்கம், கிளி, கின்னரம், குணாலம், குயில், குரண்டம் (கொக்கு), குருவி, குறும்பூழ், கூகை, கோழி, நீர்க்கோழி, சக்கரவாகம், சிரல், சிவல், சென்னம், நாரை, நீர்க்காக்கை, புறா, பூவை / நாகண வாய்ப்புள், மகன்றில், மயில் - பாலூட்டிகள் (பக். 349) - அசுணமா, ஆடு, எலி, ஒட்டகம், கரடி, கழுதை, குதிரை, குரங்கு, சிங்கம், நரி, நாய், நீர் நாய், பன்றி, புலி, பூனை, மாடு, மான், முயல், யானை, யாளி

உலோகங்கள் (பக்.358)

இரும்பு - செம்பு - பொன் - வெள்ளி

நவமணிகள் (பக்.358-360)

பொது - கோமேதகம் - கௌத்துவம் - நீலமணி - பதுமராகம் - பவளம் - மரகதம் - மாணிக்கம் - முத்து - வயிரம் - பிற

நிறங்கள் (பக்.360-369)

பொது - கருமை - உவமை, குறியீடு, சிவப்பு - சிவப்பு பொருள் தருவன, உவமை - நீல நிறம், உவமை - பச்சை, பசுமைக் குறியீடு - பொன் நிறம் - வெண்மை, உவமை, குறியீடு - பிற - கருமை சிவப்பு இணைவு - சிவப்பு வெண்மை - சிவப்பு நீலம் - கருமை, சிவப்பு, வெண்மை - பிற, கதை மாந்தர் நிறங்கள்

இடங்கள் (பக். 370-381)

பொது - உலகம் - பிற - நாடு - உத்தரகுரு, கலிங்கம், கொங்கணம், கோசலம், குலிந்தம், சேரநாடு, சோழநாடு, தசநவநாடு, தொண்டை நாடு, பாண்டிய நாடு, மிதிலை, விதர்ப்ப நாடு, பிற - நகர் - பொது, அமராவதி, அயோத்தி, அளகை, கந்தருப்பம், கிட்கிந்தை, சித்திரகூடம், சிருங்கபேரம், தண்டகாரணியம், நந்தியம்பதி, நிகும்பலை, முப்புரம், வெண்ணெய் நல்லூர் - இலங்கை, நாடு, நகர், இலங்கை - பெருமை, பிற - அகழி - மதில், மதில் உறுப்புகள், இலங்கை மதில் - வாயில் - தெரு - தீவுகள் / அரக்கர் உறைவிடம் - குகை - பிலம் - வயல் / மருதம் - புதர் / முல்லை - பாலைவனம் - பிற - குழி, மேடு, பாதாளம், சோலை, - முண்டகத்துறை - உறைவிடம் - கதைமாந்தர் உறைவிடம் -முற்றம் - பரண்கள் - பாசறை / பாடி வீடு - சுடுகாடு - பிற - கோபுரம் - தனிச்சிறப்பின சேது / அணை - அணை கட்டுதல்

மலைகள் (பக்.381-386)

பொது - குன்று / குன்றம் - செய்குன்று - மலையுச்சி - மலைச்சாரல்- அத்தகிரி - அருந்ததி - இமய மலை - இயக்கர் மலை - இரலை மலை / ருசிய முகமலை - உதயமலை - ஏமகூடம் - கந்தமாதனம், கயிலை - கிட்கிந்தை மலை - கிரவுஞ்சம் - சக்கரவாளகிரி - சந்திரகாந்தகமலை - சித்திரகூடமலை - சுவேல மலை - தாலிமலை - திரிகூட மலை / திரிகோணமலை - திருமாலிருஞ் சோலை மலை - நிடதமலை - நீலமலை - பவள மலை - பாண்டுமலை - பொதிகை - மந்தரமலை - மயேந்திரமலை - மரகதமலை - மருத்துமலை - மாலியவான்மலை - மேருமலை - மைந்நாகம் - விந்தியமலை - வேங்கடமலை

நீர்நிலைகள் (பக்.386-393)

நீர் - நீர் நிலைகள் - அருவி - ஆறு - கங்கை, காவிரி, கோதாவரி, கோமதி, கௌசிகநதி, சங்கமுக நதி, சம்பூ, சரயு, சரசுவதி, சோணை / சுவணகம், திரிவேணி, நருமதை, பெண்ணை, பொருநை / தாமிரபரணி, யமுனை - பிற - ஊருணி - ஊற்று - ஓடை - கடல் - பிற - கயம், குட்டம், குளம் - கேணி - சுனை - பொய்கை - மடு - வாவி - பிற - நீர்த்துளி - சுழி

எஞ்சியன (பக்.393 - 403)

துதிகள் (பக்.403-408)

இந்திரன் துதி - கவந்தன் துதி - கருடன் துதி - சுக்கிரீவன் துதி - பிரகலாதன் துதி - பிரமன் துதி - வருணன் துதி - வாலி துதி - விராடன் துதி

துணை நூற்பட்டியல் (பக்.409-411)

My sincere special Thanks to the authorities of the UGC
(University Grants Commission)
New Delhi for funding this Project

முதற்பகுதி

கதைமாந்தர்

(அ) நேரடியாக இடம் பெறும் தனியர்

அக்ககுமாரன்

இராவணன் - மண்டோதரிக்குப் பிறந்த இரண்டாம் மகன். இந்திரசித்துவின் தம்பி. அசோகவனத்தை அழித்த அனுமனுக்கு எதிராகப் போரிடச் சென்று உயிர் நீத்தவன். அட்சகுமாரன் என்பதைக் கம்பர் அக்ககுமாரன் எனத் தமிழ்ப்படுத்தியுள்ளார்.

வனை கழல் வயிரத் திண் தோள் மைந்தன் - 5673

கள் அவிழ் அலங்கலான் - 5684

அஞ்சனக் குன்றம் அன்னான் - 5687

வன் தொழில் அரக்கன் - 5688

அரம் சுடர் வேல் தனது அனுசன் - 5718

காய்ப்புண்ட நெடும் படை கை உளதாத் தேய்ப்புண்டவன் - 7736

இராவணன் புதல்வன் - 8028

திருகு வெஞ்சினத்து அக்கன் - 9292

அக்கயன்

இராமன் துணைக்காக, சுக்கிரீவன் அழைக்க வந்த முப்பதினாயிரம் கோடி வானரங்களைக் கொண்ட படைக்குத் தலைவன்.

அக்கயன் எனும் பெயரன் - 4417

அகத்தியர்

பத்து ஆண்டுகளைத் தண்டகவனத்தில் கழித்த இராமன், இலக்குவன் சீதையுடன் சென்ற இடம் அகத்தியர் உறைந்த வனப்பகுதி யாகும். கம்பர் தமக்குள்ள தமிழ்ப்பற்றை இத்தமிழ் முனிபால் வெளிப்படுத்துகிறார். அகத்தியர், அங்கிருந்து இராமன் விடைபெற்ற போது தம்மிடமிருந்த தெய்வப் படைக்கலன்களை அவனுக்கு வழங்கினார்.

அகத்தியர், சிவனிடமிருந்து தமிழ் பெற்றது, பொதிகையை இடமாகக் கொண்டது, கடலைக் குடித்தது, வாதவி என்னும் அரக்கனை அழித்தது, காவிரியைக் கொணர்ந்தது எனும் செயல்களால் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் தலைவன் - 2287

குறியவன் - 2288

நீண்ட தமிழால் உலகை நேமியான் அளந்தான் - 2666

பண்டு, 'அவுணர் மூழ்கினர்; படார்கள் என வானோர், 'எண் தவ! எமக்கு அருள்க' எனக் குறையிரப்பக் கண்டு, ஒரு கை வாரினன் முகந்து, கடல் எல்லாம் உண்டு, அவர்கள் பின், 'உமிழ்க என்றலும், உமிழ்ந்தான் - 2667

மாய - வினை வாள் அவுணன் வாதவி தன் வன்மைக் காயம் இனிது உண்டு, உலகின் ஆர் இடர் களைந்தான் - 2668

நிழல் பொலி கணிச்சி மணி நெற்றி உமிழ் செங் கண்தழல் புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ்-தந்தான் - 2671

எண் திசையும் ஏழ் உலகும் எவ் உயிரும் உய்ய, குண்டிகையினில், பொரு இல் காவிரி கொணர்ந்தான் - 2676

என்றும் உள தென் தமிழ் இயம்பி இசை கொண்டான் - 2677

உயர் சென்னித் துண்ட மதி வைத்தவனை ஒத்த முனி - 2681

வருக்க மறையோய் - 2684

தென் தமிழ் நாட்டு அகன் பொதியில் திரு முனிவன் - 4477

குறுமுனி - 4754

தென் தமிழ் உரைத்தோன் - 5201

குறுமுனிப் பெயரினான் நிறைதவர்க்குஇறை - 6157

தமிழ் முனி - 8543

மாறு இலாத் தமிழ் முனி... ஊறு இலா முனிவரன் - 10213

குடங்கையில் வாரிதி அனைத்தும் கொண்டவன் - 10214

கரை செயல் அரிய வேதக் குறுமுனி - 10288

அகம்பன்

இராவணன் துணைவருள் ஒருவன். சுமாலி என்னும் அரக்கனின் மகன். தீய சகுனம் கண்டு கரனை, இராமனை எதிர்த்துப் போருக்குச் செல்ல வேண்டாம் என்று தடுத்தவன். அதிகாயன் இலக்குவனை எதிர்த்து இலங்கையில் போரிட்ட பொழுது துணை நின்றவன். முருகனால் அழிக்கப்பட்ட தாருகாசுரனே இப்பொழுது அகம்பனாய்ப் பிறந்துள்ளான் என்பர்.

அகம்பன் - 2943

உகம் பல் காலமும் தவம் செய்து பெரு வரம் உடையான், சுகம் பல் போர் அலால் வேறு இலான், பெரும் படைத் தொகையான், நகம் பல் என்று இவை இல்லது ஓர் நரசிங்கம் அனையான், அகம்பன் என்று உளன்; அலை கடல் பருகவும் அமைவான் - 6548

அம் பொன் கழல் வீரன் அகம்பன் - 7742
அள் இலைப் படை அகம்பன் - 8535
வீர வாழ்க்கை அகம்பன் - 8562
மலைப் பெருங் கழுதை ஐஞ்ஞூற்று இரட்டியான், மனத்தின் செல்லும் தலைத் தடந்தேரன், வில்லன், தாருகன் என்னும் தன்மைக் கொலைத் தொழில் அவுணன்; பின்னை இராக்கத வேடம் கொண்டான், சிலைத் தொழில் குமரன் கொல்ல, தொல்லை நாள் செருவில் தீர்ந்தான் - 8563
அல்லினால் வகுத்தது அன்ன மேனியான் - 8573
மய்யொடும் பகைத்து நின்ற நிறத்தினான் .... வெய்யவன் - 8576

அகலிகை

கௌதம முனிவரின் மனைவி. கௌதமன் வேடத்தில் வந்த இந்திரனுடன் கூடியவள். அதனால் கௌதமனால் கல்லாகும்படிச் சபிக்கப் பெற்றவள். தாடகை வதம் முடித்து மிதிலை நோக்கி வந்த இராமன் கால் துகல் பட மீண்டும் பெண்ணுரு கொண்டவள். பின் கௌதமருடன் விசுவமித்திரர், இராமன் துணையுடன் இணைந்தாள்.

மனையின் மாட்சியை அழித்து இழி மாதவன் பன்னி- 464
நவ்விபோல் விழியினாள் - 468
நிரந்தரம் உலகில் நிற்கும் நெடும் பழி பூண்டாள் - 471
நெஞ்சினால் பிழைப்பு இலாள் - 478
மாசு அறு கற்பின் மிக்க அணங்கினாள் - 479
மெய் கொள் மங்கை - 563
அரத்தம் உண்டனைய மேனி அகலிகை - 1067
நெடிய கற் படிவம் ஆம் அகலிகை - 3791

அங்கதன்

வாலியின் மைந்தன். இந்திரனின் பேரன். மிகுந்த வலிமை படைத்தவன். வாலி இறக்கும் தறுவாயில் அவனால் இராமனிடம் அடைக்கலமாக ஒப்படைக்கப்பட்டவன். சீதையைத் தேடித் தென்திசை சென்ற வானரப்படைக்குத் தலைவன். தேடுவதற்கு அளித்த காலம் கடந்தும் அவள் கிடைக்காமையால் உயிர்விடத் துணிந்தவன். இராமனால் இராவணனிடம் தூதாக அனுப்பப் பட்டவன். இராம - இராவணர் போரில் சிறந்த பங்காற்றியவன்.

மருவலர்க்கு அசனி அன்ன வாலியும் மகனும் - 205
கைத் தலத்து உவரி நீரைக் கலக்கினான் பயந்த காளை - 4080
குண்டலம் அலம்புகின்ற குவவுத் தோள் குருசில் - 4082
வாலி காதலன் - 4140
அளவு இலா ஆற்றல் ஆண்மை அங்கதன் - 4147
வாலி மகன் - 4284
தோன்றல் - 4285
தாரை முன்நாள் தந்த மடங்கல் வீரன் - 4291
அரசு இளங் கோள் அரி - 4294
போதகமே அனான் - 4294
இந்திரற்கு மகன் மகன் - 4295
செறி பொன் தார் அலங்கல் வீரன் - 4348
தாரை மைந்தன் - 4455
அங்கதக் குரிசில் - 4520
ஐயன் அங்கதன் - 4599
தாரை சேய் - 4602
விசயம் வீற்றிருந்து எழுவொடும் மலையொடும் இகலும் தோளினான் - 4657
ஆண் தகை அரசு இளங் குமரன் - 4658
பொருப்பு உறழ் வயிரத் திண் தோள் பொரு சினத்து ஆளி போல்வான் - 4663
போர் வாகையாய் - 4665
வாலி அளிக்கும் வீர வயப் போர் வசை இல்லான் - 4714
அங்கதன் - 5417
அமுது எழ ஆழியைக் கலக்கினான் மகன் - 6714
வாலி மாமகன் - 6821
அரசன் மைந்தன் - 6951
செந்தனிச் சுடரோன் சேய் - 6971
நம்பி.... ஆண்தகை - 6983
அயில் கடந்து எரிய நோக்கும் அரக்கரைக் கடக்க ஆழித் துயில் கடந்து அயோத்தி வந்தான் சொல்கடவாத தூதன் - 6987
நெடுந்தகை விடுத்த தூதன் - 6992
வன்திறல் வாலி சேய் வேத நாயகன் மேல் நின்ற விதிக்கு நாயகன் தான் விட்ட தூதன் - 6994
மல் குலாவு வயப் புயத்து அங்கதன் - 7096
ஊழியின் அங்கதன் - 7117
குமரன் - 7459
கலுழனின் தாங்கி நின்ற கோமகன் - 7908
வாலி சேய்தன் விறல் கெழு சிகரத் தோள் - 8458
போர் அங்கதன் - 8517
ஆலத்தினும் வெய்யவன் அங்கதன் - 7974
விடையே நிகர் அங்கதன் - 7976
இந்திரன் மகன் மைந்தன் - 8152
வென்றி அங்கதன் - 8189
தூண் ஒத்த திரள் தோள் வீரன் - 9348
நீடு வாலி மா மைந்தன் - 10222

தோடு அணை மவுலிச் செங்கண் வாலி சேய் - 10293
எள்ளல் இலாத மொய்ம்பீர் - 10342
இந்த உலகினில் ஒப்பு இலாதாய் - 10350
நலம் கொள் பேர் உணர்வின் மிக்கோன் நலம் உறும் நெஞ்சன் - 10364
சரத மா நெறியும் வல்லோன் - 10365

அங்காரதாரை

மைந்நாக மலையினின்று அனுமன் கடல் தாவி இலங்கைக்குச் சென்ற பொழுது இடையே வழிமறித்த அரக்கி. அனுமனை இவள் விழுங்க, இவள் வயிறு கிழித்துக் கொன்று அவன் வெளியேறினான்.

அங்காரதாரை. . . . பெரிது ஆலாலம் அன்னாள் - 4815
அறத்தை அருளோடும் தின்றாள் ஒருத்தி இவள் - 4818
கள் வாய் அரக்கி - 4823

அத்திரி

இராம இலக்குவரும், சீதையும் சித்திர கூடத்தினின்றும் நீங்கித் தண்டகவனம் செல்லும் வழியில் அவர்களை வரவேற்று விருந்தளித்த முனிவர். அத்திரி எனில் காம வெகுளி மயக்கங்கள் அற்றவன் என்பது பொருளாகும். இவரது மனைவி அனசூயை ஆவாள்.

அத்திரிப் பெயர் அருந்தவன் - 2517
காமம் முதல் ஆம் முக் குறும்பு அற எறிந்த வினை, வால், முனிவன் - 2518

அதிகாயன்

இராவணன் மகன். தானியமாலிக்குப் பிறந்தவன். மது கைடவரில் கைடவன் இப்பிறப்பில் அதிகாயனாகப் பிறந்துள்ளான். இராம இராவணப் போரில் இலக்குவன் நான்முகனின் படையால் இவனைக் கொன்றான்.

அதிகாயன் - 4978
தன்னையும் தெறும் என்று இறை மனம் தாழான் முன்னவன் தரப் பெற்றது ஓர் முழு வலிச் சிலையான் - 6565
விதி காயினும் வீரம் வெலற்கு அரியான் அதிகாயன் - 7733
வெந்திறலோன் - 7743
கார் ஏறு என வந்த கதத் தொழிலோன் - 7781
தவத் தொழிலான் - 7787
அறன் அல்லது நல்லது மாறு அறியான்; மறன் அல்லது பல் பணி மாறு அணியான்; திறன் அல்லது ஓர் ஆர் உயிரும் சிதையான்; "உறல் நல்லது, பேர் இசை" என்று உணர்வான்; - 7790
அதிகாயனும் வடமேருவைத் துணிப்பான் - 7898
இகல் அதிகாயன் - 7904
தார் ஒலி கழற் கால் மைந்தன் - 7906
இராவணன் மகன் - 7913
கூற்றின் வெய்யோன் - 7914
வெற்பினை வெதுப்பும் தோளான் - 7917
குபேரனை ஆடல் கொண்டான் - 7918
வெகுளி மிக்கோன் - 7922
ஆற்றல் ஓயான். . . . தெழிக்கும் சொல்லான் - 7928
பொன் நின்ற வடிம்பின் வாளி மழை எனப் பொழியும் வில்லான் - 7929
அதிகாயனாம் சிங்கம் - 8077
நாயகன் மகன் - 8092

அயோமுகி

ஓர் அரக்கி. சீதையைத் தேடி அலைந்த இராமனின் நீர் வேட்கை தணிவிக்க நீர் தேடிச் சென்ற இலக்குவன் மீது காமம் கொண்டவள். அவன் மறுத்ததால் அவனைத் தூக்கிச் செல்ல முயன்றபோது அவனால் தண்டிக்கப் பட்டவள்.

அயோமுகி - 3579
வெங் கண் அரக்கி. . . அழுந்திய சிந்தை அரக்கி - 3581
தீயினும் வெய்யாள் - 3582

அரன்

இராவணன் அமைச்சன். வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்த பொழுது உடன் வந்த நால்வரில் ஒருவன்.

அரன், வினையவன், கனை கழல் காலினன், கருமச் சூழ்ச்சியன் - 6377
தூ நிறச் சுடு படைத் துணைவன் - 6380
கல்வி சால் சூட்சியின் கிழவன் - 6382
பொருள் உற உணர்ந்த அப் புலன் கொள் கேள்வியான் - 6387

அருணன்

சூரியனின் தேரைச் செலுத்துபவன், சடாயு, சம்பாதி இவன் புதல்வராவர்.

அருணன் - 453

முட்டு அமைந்த நெடு முடக்கோன் - 3562
ஆய்கதிர்க் கடவுள் தேர் ஊர் அருணன் - 4700
முற்றிய கதிரவன் முளைக்கும் முந்து வந்து
உற்று எழும் அருணனது உதயம் - 7559

அனசூயை

அத்திரி முனிவரின் மனைவி. இராமர் சீதை கானக வாழ்க்கையின் போது தம்மிடம் வந்த இவர்களை வரவேற்று உபசரித்தவள். சீதைக்கு ஆடை அணிகலன்களை அன்பளிப்பாக அளித்தவள்.

கற்பின்அனசூயை - 520

அனலன்

வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்த பொழுது உடன் சென்றவன். வீடணன் அயோத்தி சென்று மீண்டது வரை அவன் சார்பில் அரசு புரிந்தவன்.

அனலன், வினையவன், கனை கழல்
காலினன், கருமச் சூழ்ச்சியன் - 6377
தூ நிறச் சுடு படைத் துணைவன் - 6380
கல்வி சால் சூட்சியின் கிழவன் - 6382
பொருள் உற உணர்ந்த அப் புலன் கொள்
கேள்வியான் - 6387
இடி கொள் சொல்லன் அனலன் - 9960
விலங்கல் நாண மிடைதரு தோளினான் - 9961

அனிலன்

இராமனிடம் வீடணன் அடைக்கலம் புகுந்த பொழுது உடன் சென்றவருள் ஒருவன்.

அனிலன், வினையவன், கனை கழல் காலினன்
கருமச் சூழ்ச்சியன் - 6377
தூ நிறச் சுடு படைத் துணைவன் - 6380
கல்வி சால் சூட்சியின் கிழவன் - 6382
பொருள் உற உணர்ந்த அப் புலன் கொள்
கேள்வியன் - 6387

அனுமன்

காற்றுக் கடவுளின் மகன். அஞ்சனையின் புதல்வன். இராம அவதாரத்தின் போது காற்றுக் கடவுள் மற்றும் சிவனின் கூறாகப் பிறந்த வானரம். கதிரவன் பின் சென்று கற்றவன். வேண்டிய உருவம் எடுக்கும் வல்லமை பெற்றவன். ஐம்புலன் வென்று இல்லறம் துறந்தவன். தீ, நீர், காற்று மற்றும் தெய்வப் படைகளால் அழிக்க இயலாதவன். இராமனால் 'சொல்லின் செல்வன்' எனப் பாராட்டப்பட்டவன். அறிவு, ஆற்றல், அறவழி ஒழுகுதல் என அனைத்திலும் ஒப்பற்றவன். சுக்கிரீவனின் அமைச்சன். இராம-சுக்கிரீவர் நட்பை உருவாக்கியவன். வாலி அழிவிற்கு வழி வகுத்தவன்.

சீதையைத் தேடத் தென்திசைக்கு அங்கதன் தலைமையிலான வானரவீரருடன் சென்றவன். சீதையின் அங்க அடையாளத்தையும் தூதுச் செய்தியையும் இராமன் கூறக்கேட்டவன். தேடிச்செல்லும் வழியில் எதிர்ப்பட்ட பாலைவனத்தின் வெம்மை தாங்காது அருகிருந்த பிலத்தினுள் வானரவீரருடன் புகுந்தவன். அவ்விருள் பிலத்துள் மறைந்திருந்த அழகிய நகருள் யாருமின்றித் தனித்துத் தவம் செய்து கொண்டிருந்த சுயம்பிரபையைக் கண்டவன். பேருருக் கொண்டு, பிலத்தின் உச்சியை இடித்து அனைவரும் வெளிவரச் செய்தவன். இதனால் சுயம்பிரபைக்குச் சாபவீடு அளித்தவன்.

மயேந்திரமலையில் சம்பாதியைக் கண்டு சீதை இலங்கையில் சிறைவைக்கப் பட்டிருப்பதை அறிந்தவன். உடன் வந்தோர் வாழ்த்த பேருருக் கொண்டு வான் வழியே கடல் கடந்தவன். எதிர்ப்பட்ட மைநாகத்திடம் அன்பு காட்டியவன். தன் வலிமையை ஆராய வானவரால் அனுப்பப்பட்ட சுரசையை வீழ்த்தியவன். தன்னை உண்ண வந்த அரக்கி அங்காரதாரையை அழித்தவன்.

பேருரு அடக்கிக் குறுகிய வடிவுடன் இலங்கை உட்செலச் சரியான காலம் பார்த்துக் கொண்டிருந்தபோது அதன் காவல் தெய்வம் இலங்கை மாதேவியுடன் போரிட்டு அவளுக்கும் சாபவீடு அளித்தவன். இலங்கையை முழுமையாக ஒவ்வொரு பகுதியாக அலசி ஆராய்ந்து, இராவணன் முதலான அனைத்து அரக்கரின் வலிமையையும், இயல்பையும் அறிந்து பின் இராமனுக்கு உணர்த்தியவன். அசோகவனத்தில் சீதையைக் கண்டு, தற்கொலை புரிய முனைந்த வளைக் காத்தவன். இராமனின் தூதுரைத்து அவளை உயிர்ப்பித்தவன். அசோக வனத்தையும் அதிகாயன் முதலானோரையும் அழித்தவன். இந்திரசித்து தொடுத்த பிரம்மாத்திரத்திற்குக் கட்டுப்பட்டு இராவணன் அவை சென்றவன். அங்கு இராமன் தூதுரைத்துத் தன் வீரம் காட்டியவன். இலங்கையை எரித்து இராமனிடம் மீண்டவன். வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்தபோது அவனை ஆதரித்தவன்.

முதல்நாட் போரில் இராவணனுடன் மோதியவன். அப்பொழுது அனுமன் இராவணன் மார்பில் குத்திய குத்தினால் அங்குப் பதிந்திருந்த திசையானையின் தந்தம் அவன் முதுகு வழி வெளியேறியது. பிரம்மாத்திரப் படையால் இலக்குவன், சுக்கிரீவன் உட்பட அனைத்து வானரங்களும் உயிர் விட்ட போதும், இராவணனின் வேலேற்று மீண்டும் இலக்குவன் இறந்த போதும் இருமுறை மருத்துமலை கொணர்ந்து அனைவருக்கும் உயிர் அளித்தவன். போர்க்களத்தில் இராமனுக்கும் இலக்குவனுக்கும் தேராய்த் தோள் கொடுத்தவன். அவ்வப்போது போரில் தன் தனி வல்லமையையும் காட்டியவன். மாயா சீதையை இந்திரசித்து வெட்டியதைக் கண்டபோது அலறித் துடித்தவன். சீதைக்கு இராவணனின் அழிவை முதலில் தெரிவித்தவன். இராமன் அயோத்தி திரும்பும் முன் நந்தியம்பதி சென்று எரிமூழ்க இருந்த பரதனைக் காப்பாற்றியவன். இராமன், சீதை இருவராலும் என்றும் அழியாதிருக்கும் வரம் பெற்றவன். சுந்தரகாண்டம் முழுமையும் இவன் புகழ்பாடுகிறது. இராமன் திருவடியாகப் போற்றப்படுபவன்.

அனுமான், மாருதி, மாருதேயன் என்றும் அழைக்கப்படுவான்.

மாருதி. . . . காற்றின் சேய் - 206
காலின் மா மதலை - 3752
அஞ்சனைக்கு ஒரு சிறுவன் - 3754
தன் பெருங்குணத்தால் தன்னைத் தான் அலது ஒப்பு இலாதான் - 3759
செவ் வழி உள்ளத்தான் - 3764
யான் காற்றின் வேந்தற்கு அஞ்சனை வயிற்றில் வந்தேன் - 3765
எம் மலைக் குலமும் தாழ, இசை சுமந்து, எழுந்த தோளான் - 3766
ஆற்றலும், நிறைவும், கல்வி அமைதியும், அறிவும் என்னும் வேற்றுமை இவனோடு இல்லை - 3767
சொல்லின் செல்வன் - 3768
ஆணி இவ் உலகுக்கு எல்லாம் என்னலாம் ஆற்றற்கு ஏற்றசேண் உயர் பெருமை - 3769
மெய்ம்மையின் வேலி போல்வான் - 3775
பாழிஅம் தடந் தோள் வென்றி மாருதி - 3780
பொன் உருக் கொண்ட மேரு, புயத்திற்கும் உவமை போதாத் தன் உருக் கொண்டு நின்றான், தருமத்தின் தனிமை தீர்ப்பான் - 3781
பண்டை நூல் கதிரோன் சொல்ல, படித்தவன் - 3782
குரக்குச் சீயம் - 3785
மந்தரம் மணிப் புய நெடும் புகழினான் மா. . . . மதியினான் - 3786
மேலவன் - 3787
மந்திரம் கெழுமு நூல் மரபு உணர்ந்து உதவுவான் - 3800
பொன்னையே பொருவுவாய் - 3801
அஞ்சனை சிறுவன் - 3813
அஞ்சனை சிங்கம் - 3814
பொய் இலாதவன் - 3853
சமீரணன் மகன் - 3857
நல் நெடுங் குன்றமும் நாணும் தன் துணைத் தனி மாருதி - 3864
பொய் இல் மாருதி - 3879
வன் திறல் மாருதி - 3928
நீதி சால், வன் தாள் மால்வரை அன்ன, மாருதி - 4111
மெய்ப் போர் மாருதி - 4117
பொய்த்தல் இல் உள்ளத்து அன்பு பொழிகின்ற புணர்ச்சியான் - 4142
பெரும் பொறை அறிவினோன் - 4143
தருமம்தானே போன்றவன் - 4144
கோது இல் சிந்தை அனுமன் - 4294
மந்திரத் தனி மாருதி - 4295
வன் துணை வயிரத் திண் தோள் மாருதி - 4328
அந்தம் இல் கேள்வி நீ. . . . இயம்ப வல்லான் - 4329
அரிக் குலத்தவன் - 4337
நயம் தெரி அனுமன் - 4349
நெறி வல்லோய் - 4386
நன்கு உணர் மாருதி - 4402
இம்பர் ஞாலத்தும் வானத்தும் எழுதிய சீர்த்தி நம்பன் - 4411
அண்ணல் அனுமன். . . . புவனம் மூன்றும் நின் தாதையின் புக்கு உழல் தவன வேகத்தை - 4451
நீதி வல்லோய் - 4478
மாறு இலா ஆறு-சான்றோய் - 4497
நெடிது காண்பாய் - 4498
நல்லோய் - 4510
அறிஞன் - 4519
பொன் நெடுங் கிரி எனப் பொலிந்த தோளினான் - 4551
வெவ் விழைவு இல் சிந்தை நெடு மாருதி - 4575
உயிர் உயிர்க்க அருள் செய்த பெரியோன். . . . வழுத்த அரிய மாருதி - 4587
மருத்து மகன் - 4589
உருத்து, உலகு எடுத்த கருமாவினையும் ஒத்தான் - 4589

மாருதேயன். . . . ஆரியன் - 4602
நுணங்கு கேள்வியான் - 4676
மின் பிறந்தாலென விளங்கு எயிற்றினான் - 4678
கோது இலான் - 4679
வன் திண் தோள் வரை அன்ன மாருதி - 4685
மெய்ம்மையோன் - 4690
பேர் இசை வைக்கும் நவை இல்லோன் - 4717
காரியம் எண்ணிச் சோர்வு அற முற்றும் கடனாலும், மாருதி ஒப்பார் வேறு இலை. . . . சீரியன் - 4718
மேலை விரிஞ்சன் வீயினும் வீயா மிகை நாளீர், நூலை நயந்து, நுண்ணியது உணர்ந்தீர், நுவல் தக்கீர், காலனும் அஞ்சும் காய் சின மொய்ம்பீர், கடன் நின்றீர், ஆலம் நுகர்ந்தான் ஆம் என வெம் போர் அடர்கிற்பீர் - 4719
வெப்புறு செந் தீ, நீர், விளியாலும், விளியாதீர், செப்புறு தெய்வப் பல் படையாலும் சிதையாதீர், ஒப்பு உறின், ஒப்பார் நும் அலது இல்லீர், ஒருகாலே குப்புறின், அண்டத்து அப் புறமேயும் குதிகொள்வீர் - 4720
நல்லவும் ஒன்றோ, தீயவும் நாடி, நவைதீரச் சொல்லவும் வல்லீர், காரியம் நீரே துணிவுற்றீர், தோள் வலி என்றும் குறையாதீர் - 4721
மேரு கிரிக்கும் மீது உற நிற்கும் பெரு மெய்யீர், மாரி துளிக்கும் தாரை இடுக்கும் வர வல்லீர், பாரை எடுக்கும் நோன்மை வலத்தீர், பழி அற்றீர், சூரியனைச் சென்று ஒண் கையகத்தும் தொட வல்லீர் - 4722
மதி வல்லீர் - 4723
ஓர்வு இல் வலம் கொண்டு, ஒல்கல் இல் வீரத்து உயர் தோளீர், தேர் முன் நடந்தே ஆரிய நூலும் தெரிவுற்றீர் - 4724
வாய்மை அமைந்தீர், நினைவாலும் மாதர் நலம் பேணாது வளர்ந்தீர், மறை எல்லாம் ஓதி உணர்ந்தீர், ஊழி கடந்தீர், உலகு ஈனும் ஆதி அயன்தானே என யாரும் அறைகின்றீர் - 4725
அண்ணல் அம் மைந்தர்க்கு அன்பு சிறந்தீர், புண்ணியம் ஒன்றே என்றும் நிலைக்கும் பொருள் கொண்டீர் - 4726
மடங்கல் முனிந்தாலன்ன வலத்தீர், முற்றும் முடிக்கும் தொழில் அல்லால், இடம் கெட, வெவ் வாய் ஊறு கிடைத்தால் இடையாதீர் - 4727
ஈண்டிய கொற்றத்து இந்திரன் என்பான் முதல் யாரும் பூண்டு நடக்கும் நல் நெறியானும் பொறையானும் பாண்டிதர் நீரே, வேண்டிய போதே வேண்டுவ எய்தும் வினை வல்லீர் - 4728
தாழ் வதனத் தாமரை நாப்பண் ஆம்பல் விரிந்தாலன்ன சிரிப்பன் - 4730
திருவடி - 4736
தார் நிழல் பரப்பும் தோளான் - 4737
ஆண் தகை - 4741
அந்தம் இல்லான் - 4743
சுருதி அன்ன சேவகன் - 4759
நாயகன் தூதன் - 4763
மாணி ஆம் வேடம் தாங்கி, மலர் அயற்கு அறிவு மாண்டு,ஓர் ஆணி ஆய் உலகுக்கு எல்லாம், அறம் பொருள் நிரப்பும் அண்ணல் - 4766
முடிவுக் காலத்து அழிவுறக் கடுக்கும் வேகத் தாதையும் அனையன் ஆனான் - 4767
விசும்பு உறப் படர்ந்த தோளான் - 4770
கூலத்தன் - 4772
குன்றொடு குணிக்கும் குவவுத் தோள் குரக்குச் சீயம் - 4775
விலங்கு அயில் எயிற்று வீரன் - 4776
பொரு அரும் உருவத்து அன்னான் - 4778
அழுங்கா மனத்து அண்ணல் - 4791
உயர்விற்கும் உயர்ந்த தோளான் - 4795
கார் மேகவண்ணன் பணி பூண்டனன் . . . . நீதி நின்றான் - 4796
நல் தாயினும் நல்லன். . . பொன் தார் அகல் மார்பன் - 4797
மெய்ம்மை பூண்டான் - 4801
விசும்பு நிரம்பு மெய்யன், கோள் ஒத்த பொன் மேனி - 4804
மூன்று உற்ற தலத்திடை முற்றிய துன்பம் வீப்பான் ஏன்றுற்று வந்தான் - 4805
நல் அறிவாளன் - 4808
பொன் மேனியான் - 4812
ஆய் திறத்தவன் - 4818
பெரிய கோள் அரி - 4822
சார்கா வரத் தலைவரில் திலகம் அன்னான் - 4824
இராகவன் தூதன் - 4887
எண்ணுடை அனுமன் - 4891
நம்பி - 4899
தூண் ஆம் என்னும் தோள் உடையான் - 4909
புகழ் கொண்டான் - 4919
எண்ணம் பிழையாதான் - 4922
பழி இல்லான் - 4923
யாரும், யாவையும், எல்லா உலகத்தும், தொழும் தாள் வீரன் - 4926
அறிவன் - 4931
தேவருக்கு அமுதம் ஈந்த குன்று என, அயோத்தி வேந்தன் புகழ் என, குலவு தோளான் - 4934
கருங் கடல் கடந்த தாளான் - 4935

செவிக்குத் தேன் என் இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன் - 4966
இராகவன் புகழ் எனும் நலத்தான் - 4967
மணிகொள் வாயிலில் சாளரத் தலங்களில் மலரில் கணிகொள் நாளத்தில் கால் என, புகை என, கலக்கும் நுணுகும் வீங்கும்-மற்று அவன்நிலை யாவரே நுவல்வார்? அணுவில் மேருவில் ஆழியான் எனச் செலும் அனுமன் - 4968
புகை புகா வாயிலும் புகுவான் - 4974
இராகவன் சரம் என, புகழோன் - 4978
தனிக் கடக் களிறு என ஒரு துணை இலான், கனிக்கு அடல் கதிர் தொடர்ந்தவன் - 4980
வினைப் பகையை வென்றான் - 5000
விழைந்த வெவ் வினை வேர் அற வீசினான் - 5003
இராவணன் எடுப்பு அருங் கிரி எனத் திரள் தோளான் - 5037
நூல் பெருங்கடல் நுணங்கிய கேள்வியன் - 5040
உலகை முற்றுவிக்கும் முறை தெரினும், காலம் பார்த்து, இறை வேலை கடவாத கடல் ஒத்தான் - 5056
அண்ணல் அவ் இராமன் ஏவிய வெவ் விடை அனைய போர் வீரத் தூதன் - 5122
குரு நிறத்து ஒரு தனிக் கொண்டல் ஊழியான் - 5131
ஊழிதோறும் புதிது உறும் கீர்த்தியான் - 5168
தூயன். . . . நவை இலன் - 5243
அண்டர் நாயகன் அருள் தூதன் - 5249
பழியை வென்றான் - 5263
உத்தமன் - 5297
மும்மை ஆம் உலகம் தந்த முதல்வற்கும் முதல்வன் தூது, அம்மை ஆய், அப்பன் ஆய அத்தனே, அருளின் வாழ்வே - 5298
பாழிய பணைத் தோள் வீர! துணை இலேன் பரிவு தீர்த்தவாழிய வள்ளலே! யான் மறு இலா மனத்தேன் என்னின்ஊழி ஓர் பகலாம் ஓதும் யாண்டு எலாம், உலகம் ஏழும் ஏழும் வீவுற்ற ஞான்றும், இன்று என இருத்தி (சீதை) - 5299
தூண் திரள் தடந் தோளான் - 5300
காலம் ஓர் மூன்றும் வல்லான் - 5321
அன்பினன் - 5322
உருவொடு வளைந்த மூர்த்தியான் - 5326
ஏண் இலது ஒரு குரங்கு ஈது என்று எண்ணலா ஆணி - 5330
நெடுந்தகை - 5332
காற்றாம் அன்ன கடுமையாய் - 5336
அண்ணற் பெரியோன் - 5341
ஏய நல் மொழி எய்த விளம்பிய தாயை முன்னிய கன்று அனையான் - 5345
கோது இலான் - 5370
இரவி சந்திரன் இயங்கும் குன்றம் இரு தோள் அனைய தன் உருவு கொண்டான் - 5436
அண்ணல் அனுமன் - 5448
தனிப்போர் நாகம் அனையான் - 5450
அறவன் - 5458
ஐயன் - 5469
தமியன், ஏழினொடு ஏழு நாடும் அளந்தவன் எனலும் ஆனான், ஆழியின் நடுவண் நின்ற அருவரைக்கு அரசும் ஒத்தான், ஊழியின் இறுதிக் காலத்து உருத்திரமூர்த்தி ஒத்தான் - 5474
பொன் மலை என நின்ற புனிதன் - 5475
தாதை ஒப்பான் - 5477
புலவர் போற்றும் மூவரின் ஒருவன் என்று புகல்கினும், முடிவு இலாத ஏவம் அக் குரங்கு - 5487
விண் தோய் கயிலையின்மலை என நின்றான் - 5508
எவரினும் அதிகம் உயர்ந்தவன் - 5509
ஆடல் மாக் களிறு அனையவன் - 5531
மாருதி வெய்யவன் ஒத்தான் - 5534
மாருதி மந்தரம் கடுத்தான் - 5535
அனுமனும் கலுழனே ஒத்தான் - 5536
ஆள்அரி ஒத்தனன் அனுமன் - 5537
நல் அற வீரன் - 5541
ஆழியின் நடுவண் தோன்றும் அருக்கனே அனையன் - 5565
ஐயனும், அமைந்து நின்றான், ஆழியான் அளவின் நாமம் நெய் சுடர் விளக்கின் தோன்றும் நெற்றியே நெற்றியாக, மொய் மயிர்ச் சேனை பொங்க, முரண் அயில் உகிர் வாள் மொய்த்த கைகளே கைகள் ஆக கடைக் கூழை திரு வால் ஆக - 5570
மானம் மாற்று அரு மாருதி - 5607
கற்று உணர் மாருதி - 5627
அஞ்சனை தோன்றல் - 5648
மிடல் தொழிலான் - 5654
வெஞ்சின வீரருள் வீரன் - 5656
திரண்டு உயர் தோள் இணை அஞ்சனை சிங்கம், ஒள் இகல் வீரன் அருக்கனை ஒத்தான் - 5658
அவனும் நல் அறிவை ஒத்தான் - 5664
குரக்குச் சீயம் - 5685
அஞ்சனைக்கு உரிய குன்றம். . . தார்த் தனி வீரன் - 5691
காற்றின் செம்மல் - 5693
ஐம் புலன் வென்றவன் - 5695
அனல் ஒத்தான் ; மாருதம் ஒத்தானே - 5697
ஒரு நாளே பலர் உயிர் உண்ணக் கற்றோனும் - 5699
அறவோன் - 5701

ஊழியின் உலகு ஏழ் தேயினும், ஒரு தன் புகழ் இறை தேயாதான் - 5705

குரங்கு அது எந்தாய் சங்கரன், அயன், மால் என்பார்தாம் எனும் தகையது - 5726

ஆண் தொழில் குரங்கு - 5728

வீறுடை மாருதி - 5739

மாயம் மிகும் திறல் வானர வீரன் - 5745

அந்தம் இல் கேள்வியன் - 5749

குன்றம் எனும் புய வானர வீரன் - 5751

ஆழி அனுமன் - 5756

மூண்டு முப்புரம் சுட முடுகும் ஈசனின், ஆண்தகை வனை கழல் அனுமன் - 5765

மிக்கான் - 5769

மிகை எழும் சினத்து அனுமன் - 5775

சிறிய தாய் சொன்ன திருமொழி சென்னியில் சூடி, நெறியில் நின்ற தன் நாயகன் புகழ் என நிமிர்ந்தான் - 5782

நீண்ட வீரன் - 5784

வாழிப் போர் வலி மாருதி - 5785

கொற்ற மாருதி - 5786

ஏறு சேவகன் தூதன் - 5788

குன்றுபோல் நெடு மாருதி - 5791

சண்ட வேகத்த மாருதி - 5797

பெரு மாருதி - 5798

கறுத்த மாசுணம், கனக மா மேனியைக் கட்ட, அறத்துக்கு ஆங்கு ஒரு தனித் துணை என நின்ற அனுமன், மறத்து, மாருதம் பொருத நாள், வாள் அரா அரசு புறத்துச் சுற்றிய மேரு மால் வரையையும் போன்றான் - 5803

வச்சிர உடல் - 5807

பைங் கழல் அனுமன் - 5816

உற்று உண்டாய விசும்பை உருவினாய், முற்றுண்டாய், கலை யாவையும் முற்றுறக் கற்றுண்டாய் - 5836

அடர் கடந்த திரள் புயத்த ஐயன் - 5837

பெருந்தகைப் பெரியோன் - 5841

அருந்தூதன், வேத நாயகன் தனித் துணைவன் - 5869

அரி உருவான ஆண்தகை, சிவன் எனச் செங்கணான் எனச் செய் சேவகன் - 5871

வில்லிதன் தூதன் - 5878

வாலி சேய் விடுத்த தூதன் - 5887

சமீரணன் தனயன் - 5889

உன்ன அருங் குணத்தினான் - 5894

நவை அற்றான் - 5925

தாயே அனைய கருணையான் - 5931

அற்பின் நார் அறாத சிந்தை அனுமன் - 5935

கற்று உணர் மாருதி - 5995

கலை கற்றான் - 5999

தெள்ளிய மாருதி - 6006

வன்திறல் உரவோய். . . மருத்தின் மைந்தன் - 6014

அளியம் எம்மைச் சாதல் தீர்த்து அளித்த வீரன் - 6018

வித்தகத் தூதன் - 6019

திண் திறல் அனுமன் - 6021

வேத நல் நூல் உய்த்துள காலம் எல்லாம் புகழொடும் ஒக்க நிற்பான் - 6052

எரி உற மடுப்பதும் எதிர்ந்துளோர் படப் பொரு தொழில் யாவையும் புரிந்து போவதும் வருவதும் குரங்கு - 6105

அயிந்திரம் நிறைந்தவன் - 6403

ஓத நீர் கடந்து பகை கடந்து உலகை உய்யக் கொண்டான் - 6466

பேர் அறிவாளன் - 6467

பொன் செய் தோளினாய் - 6586

பாக்கியம் உருக் கொண்டது ஒப்பாய் - 6587

உரவோன். . . . நெடியோன் - 6588

நிறை நல் நூல் கற்று உணரும் மாருதி - 6750

நகும் கதிர் முன்பு தொடர்ந்தவன், உலகம் சுற்றும் எயிற்றின் இடந்து எழுந்தவனை ஒத்தான், வேலை கடந்தவன் - 6884

சிவன்காண் அயன்காண் எனும் தூதன் - 6889

சிவந்த நல் கனி என்று சொல்ல பருதிமேல் பண்டு பாய்ந்தவன் - 6897

நூல் வலி காட்டும் சிந்தை நும் பெருந் தூதன் - 6936

காற்றினுக்கு அரசன் மைந்தன் - 6965

காற்றின் மா மகன் - 7097

சுருதியே அனைய தோளான். . . காலின் தோன்றல் - 7149

அனுமான் - 7176

உலகு அளந்தான் என நிமிர்ந்தான் - 7177

உலகு எல்லாம் அடுத்தான் குறள் அளந்தான் திருவடியின் வரவு அன்னான்மடுத்து ஆங்கு உற வளர்ந்தாலென வளர்கின்றவன் - 7178

விறலோய் - 7183

மறவோய் - 7197

வள்ளல் - 7201

வாரின் பெய் கழல் மாருதி - 7232

தகுதியாய் நின்ற வென்றி மாருதி, வேதம் பொதுவுறப் புலத்து நோக்கும் பகுதியை ஒத்தான் - 7237

காய் கதிர் இரவிமேல் பாய்ந்த போர் அனுமன் - 7260

கூனுடைக் குரங்கு - 7363
அனல் மடுத்து அரக்கர்தம்மை வென்றவன் - 7462
வெம் முனை வீரன் மைந்தன் - 7463
தன்னின் நேர் பிறர் தான் அலாது இல்லவன் - 7503
அரியன முடிப்பதற்கு அனைத்து நாட்டினும் ஒரு தனி உளை - 7533
கருங் கடல் கடந்த அக் காலன் - 7544
காய் கதிர்ப் புதல்வன் - 7545
அரும்பு இயல் துளவப் பைந்தார் அனுமன் - 7689
மாருதத்தின் காதல் - 7715
தனி வேல் எனத் தகையான் - 7881
முதிர் மதயானையை அனையான், முதல் அரி போல் வரு திறலான், வார் தாங்கிய கழலான், புகழ் கொண்டான் - 7882
வய வானரக் குலத்தோர்க்கு ஏறு - 7893
மடல் தோகையர் வலி வென்றவன் - 7895
காலற்கு இரு கண்ணான் - 7896
பொன்னால் உயர் நெடு மால் வரை போல்வான் - 7898
வட மலை ஆம் எனும் நிலையான் - 7901
கோமான் தனிப் பெருந் தூதன் - 7902
அடல் மாருதி - 7975
ஊர் கொன்றவன் - 8007
வன் திறல் மாருதி - 8034
குன்று நின்றனைய வீர மாருதி - 8079
வதையின் மற்றொரு கூற்று என மாருதி - 8128
கூற்றம் - 8141
சீயம் - 8143
ஆண்தகை அனுமன் - 8182
காலுடைச் சிறுவன் - 8193
அஞ்சனை பயந்த வள்ளல் - 8199
தூது நடந்தவன் - 8315
வகை நின்று உயர் தாள் நெடு மாருதி - 8369
மெய் அஞ்சனை கான்முளை - 8370
ஊழிப் பெயர் கார் நிகர் ஒண் திறலோன் - 8371
நெடியன் குறியன் எனும் நீர்மையினான் - 8391
இகல் மாருதி - 8392
சமீரணன் சிறுவன் - 8456
மாருதி அலங்கல் மாலை மணி அணி வயிரத்தோள் - 8458
அஞ்சனை மதலை - 8475
காய் சினத்து அனுமன் என்னும் கடல் கடந்தான் - 8712
உலகம் மூன்றும் தலையின் மேல் கொள்ளும் தூயான் - 8715
காலின் செம்மல் - 8717
அந்தம் இல் குணத்தினன் - 8721
கொன் இயல் வயிரத்தோளான் - 8724
பொய்ம் மருங்கின் நில்லாதாய் - 8731
விசையத் தோளான் - 8734
வேண்டு உருவம் கொண்டு எழுந்து விளையாடு கின்றான் - 8740
கடலைத் தாவிச் செரு வென்றவன் - 8741
வாயுவின் தனயன் - 8746
மன்னவன் இராமன் தூதன் - 8747
தருமம் போல்வான் - 8751
இணை இலாதான் - 8757
கால் திசை சுருங்கச் செல்லும் கடுமையான், தவத்து மிக்கான் - 8758
பெரியவன், அயனார் செல்வம் பெற்றவன், பிறப்பும் போந்தான், அரியவன் - 8761
ஆய்ந்தவன் - 8763
உலகு எல்லாம் தவழ்ந்த சீர்த்தியான் - 8766
பெருந் திறல் அனுமன், அருந் துயர் முடிக்குறும் அளவு இல் ஆற்றலான் - 8787
உவமை தற்கு இலான் - 8800
தாயின் அன்பன் - 8810
ஒன்றும் இன்னல் நோய் உறுகிலாது நீ என்றும் வாழ்தியால் இனிது என் ஏவலால்(இராமன்) - 8815
வரம்பு இல் ஆற்றலான் - 8817
குரிசில் - 8818
அலங்கல் அம் தடந் தோள் அண்ணல் அனுமன் - 8842
வான் உயர் அனுமன் - 8854
நெடுந்தகை மாருதி - 8865
அறை அரவக் கழல் மாருதி - 8866
வெங்கண் காற்றின் மகன் - 8867
அந்தம் இல் மாருதி - 8869
தூயவன் - 8881
கல்விக்கும் நிமிர்ந்த கீர்த்திக் காகுத்தன் தூதன் - 8887
தருமம் காப்பான் - 9011
உயர் நெடு மாருதி - 9053
குணம் குணிப்பு இல்லவன் - 9054
இகல் அனுமன் என்னும் சேடன் - 9185
ஆம்பல் அம் பகைஞன்தன்னோடு அயிந்திரம் அமைந்தோன் - 9343
உலகு எலாம் நிமிர்ந்தவன் - 9569
மருத்தின் காதலன் - 9570
எந்தாய் (இலக்குவன்) - 9573
பெற்றனன் உன்னை என்னை பெறாதன பெரியோய் என்றும் அற்ற இடையூறு செல்லா ஆயுளை ஆக (இராமன்) - 9576

வாயுவின் தோன்றல் - 9953
நீதி வித்தகன் - 9976
நின்னை என் தலையினால் தொழவும் தகும் தன்மையோய் (சீதை) - 9979
வேத நல் மணி வேகடம் செய்தன்ன தூதன் - 9980
மன்னும் மாருதி - 9985
தூய்மையோய் - 9985
யாரினும் மேன்மையான் - 10024
அறை கழல் அனுமன் - 10204
அருக்கன் மாணாக்கன் - 10209
போர் வித்தகத் தூதன் - 10210
முது நீர் தாவி வன்பினால் இலங்கை முற்றும் எரிக்கு உணவாக வைத்தோன் - 10236
வன் திறல் அனுமன் - 10238
தொல் அறச் சான்று என நின்றவன் - 10267
இருந்து உய்ய மருந்து தந்தான் - 10319
எள்ளல் இலாத மொய்ம்பீர் - 10342
பைம் பூண் போர் உதவிய திண் தோளான் - 10351
அந்நாள் இடர் அறிந்து உதவினான் - 10353
நலம் கொள் பேர் உணர்வின் மிக்கோன் நலன் உறும் நெஞ்சன் - 10364
சரத மா நெறியும் வல்லோன் - 10365

ஆதிசேடன்

ஆயிரம் தலைகளையுடையது; பாற்கடலில் திருமாலுக்குப் படுக்கையாக அமைவது; இந்த உலகைத்தாங்குவது; பிற பாம்புகளுக்கு எல்லாம் அரசன்; இலக்குவனாக அவதரித்தது. அனந்தன் என்ற வேறு பெயரும் உண்டு.

வடவை தீ தர விளை தரு கடுவுடை விரிகொள் பாயல் - 201
படம் கிளர் பல் தலைப் பாந்தள் - 285
அரி மணப் பணத்து அரா-அரசன் - 354
வள்ளல் சேக்கை - 620
பணி அரங்கம் - 638
பாரைத் தாங்கி வேரெனக் கிடந்த நாகம் - 700
அரா-அணை - 1206
பன்னக மணி - 1226
இரும் பியல் அனந்தன் - 1328
சேடன் - 3112
அனந்தன் - 4469
அணங்கு அரா அரசர் கோன் - 4879
சார்தரும் கடுவின் எயிறுடைப் பகு வாய் அனந்தன் - 5162
படம் தாழ் அரவு - 5336
அரவினது அரசன் - 5505
நிரந்தரம் புவி முழுவதும் சுமந்த நீடு உரகன் - 5777
உரகர்கோன் - 5845
தறுகண் பல் தலைப் பூமி தாங்கு ஒருவன் - 5874
பள்ளி அரவு - 6068
வாள் எயிற்று ஆயிர நனந் தலை அனந்தன் - 6201
ஓங்கிய சேடன் - 6740
தூயோன் இன் அணை - 6819
பாரகம் சுமந்த பாம்பு - 6939
ஏந்து அகல் ஞாலம் எல்லாம் இனிது உறைந்து இயற்கை தாங்கும் பாந்தள் - 9004
ஆயிரம் பணந் தலை அனந்தன் - 9268
பாந்தளுக்கு அரசு - 9478

ஆன்பெயர்க் கண்ணன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன். சுவாட்சன் எனும் வடமொழிப் பெயரினைக் கம்பர் ஆன்பெயர்க் கண்ணன் எனத் தமிழ்ப்படுத்தியுள்ளார்.

முனியும்ஆம் எனின் அருக்கனை முரண் அற
முருக்கும், தனிமை தாங்கிய உலகையும் சலம்
வரின் குமைக்கும், இனிய மாக் குரங்கு ஈர்-இரண்டு
ஆயிர கோடி அனிகம் முன் வர,-ஆன் பெயர்க்
கண்ணன்- வந்து அடைந்தான் - 4413

ஆனிறக்கண்ணன்

வானரப் படை வீரருள் ஒருவன். மிக்க வலிமையுடையவன். இலங்கைக்கு அணைகட்ட உதவிய நிலை பாராட்டப்பட்டுள்ளது.

ஆனிறக் கண்ணன் என்று ஒருவன், அங்கையால்
கான் இறு மலை கொணர்ந்து எறிய, கார்க் கடல்
தூ நிற முத்துஇனம் துவலையோடு போய்,
வான் நிறை மீனொடு மாறு கொண்டவே. - 6685

இடபன்

இராமனுக்குத் துணையாக வந்த சுக்கிரீவனின் வானரப்படைத் தலைவருள் ஒருவன். இடவன் என்றும் சுட்டப்படுகிறான்.

இடபன் - 4424
இப் போர்க்கு எலாம் தானே ஏன்று நின்றவன் இடபன் - 6891
இடவன் - 8057

இடும்பன்

இராம இராவணர் முதற்போரில் இராமன் பக்கம் இருந்து போர் புரிந்த கரடி இனத்தவன்.

கண்டு நின்ற கரடியின் காவலன்
எண் திசா முகம் எண்ணும் இடும்பன் - 7079

இந்திரசித்து

இராவணன் - மண்டோதரி ஆகியோரின் தலைமகன். தேவரை வென்று இந்திரனைச் சிறை பிடித்தமையால் இந்திரசித்து என அழைக்கப் பட்டவன். குழந்தைப் பருவத்திலேயே இரு சிங்கங்களை அடக்கிக் கொணர்ந்த வலிமைக் குரியவன். வீரர்களுக்கெல்லாம் வீரனாகப் போற்றப்படும் இவன் விற்போரிலும் மாயையிலும் வல்லவன். சித்துகள் கைவரப் பெற்றவன். பகற்பொழுதில் மட்டுமே அழியக் கூடியவன். அசோக வனத்தையும் அக்க குமாரன், பஞ்சசேனாபதியர் முதலானோரையும் அழித்த அனுமனைப் பிரம்மாத்திரத்தால் கட்டியவன். இராம - இராவணப் போரில் இராவணனுக்கு மிகப் பெரிய துணையாக நின்றவன். மாயை துணை கொண்டு நாகபாசத்தாலும், பிரம்மாத்திரத் தாலும் இலக்குவன் முதலானோரை வீழ்த்தியவன். இறுதியாக அனைவரையும் அழிக்க நிகும்பலை யாகம் மேற்கொண்ட பொழுது வீடணன் துணையுடன் இலக்குவனால் அழிக்கப்பட்டவன்.

புரந்தரசித்து, மேகநாதன் எனவும் அழைக்கப்படுவான்.

மேகநாதன் - 188
தானவரைக் கரு அறுத்து, சதமகனைத் தளை இட்டு, வானவரைப் பணி கொண்ட மருகா (சூர்ப்பணகை) - 2842
கணிச்சியான் மகனோ அளையில் வாள் அரி அனையவன் - 4975
ஆண்தகை. . . . இந்திரத்து தெவ் அழிதர உயர் விசயச் சீர்த்தியான் - 5717
வயிரக் கண்ணான் - 5723
மீளிபோல் மொய்ம்பினான் - 5724
அமரர் கோவைப் புகழொடு கொண்டு போந்தான் - 5728
புரந்தரசித்து - 5735
கள்ள அரக்கன் - 5744
யாளி அனான் - 5748
வெந் திறலாய் - 5750
ஊழி வெங் கடலின் உற்ற ஒரு தனி நடுவண் நின்ற பாழி மா மேரு ஒத்தான் வீரத்தின் பன்மை தீர்ப்பான் . . . - 5755
வீரத்தே நின்ற வீரன் - 5756
இலை குலாம் பூணினான் - 5757
கறுப்புண்ட மனத்தன் - 5761
தோன்றல் - 5765
ஒண்மையான் - 5768
முக் கால் உலகம் ஒரு மூன்றையும் வென்று முற்றிப் புக்கான் - 5769
பணைத் தோள் வீரர் வீரன் - 5776
இந்திரன் பகைஞன் - 5781
மேகநாதன் - 5783
பாழித் தோளவன் - 5785
மாறு இல் வெஞ்சினத்து இராவணன் மகன் - 5788
அமரரைத் தொலைத்தவன் - 5790
எண்ணின் மீச் சென்ற ஏறுழ் வலித் திறலுடை இகலோன் - 5793
மின் எனும் எயிற்றான் - 5794
அந்தரம் திரிவான் - 5795
கடவுளர்க்கு அரசனைக் கடந்த தோன்றல் - 5829
பெருந் தகைப் பெரியோனைப் பிணித்த போர் முருந்தன் - 5841
கடலின் ஆர் அமுது ஊட்டிய உம்பரை உலைய ஓட்டினான் - 5870
அமரர் போர் வென்றான் - 5922
உறு பொருள் புகலும் பூட்சியோன் - 6136
ஒள்ளிய புதல்வன் - 6142
மூளும் வெஞ் சினத்து இந்திரசித்து - 6564
இந்திரன்தன்னை ஓர் தனு வலம்தன்னால் வானில் வென்ற என் மதலை (இராவணன்) - 7220
வில்லாளரை எண்ணின் விரற்கு முன் நிற்கும் வீரன் - 8006
வானை வென்றவன் - 8016
வான வேந்தன் - 8023
பேர்ச்சி இல்லான் - 8027
அமரர் வேந்தனை வென்றவன் - 8028
இகல் அமரர் வேந்தனைப் போர் கடந்தவன் - 8029
இலங்கைக் கோ மகன் - 8034
மிடல் வலோன் - 8062
கண்டன் - 8070
தீயவன் - 8092
செறி கழல் நிருதன் - 8099
தசமுகன் தனயன் - 8112
இராவணன் புத்திரன் - 8124
இந்திரன்தனை வென்றவன் - 8136
தேவர்கள் ஊர் அழித்த உயர் வலித் தோளவன் - 8149

கடியவன் - 8153

தேவரை வென்றவன் - 8160

சித்திர வில் வலோன் - 8178

நிசாசரன் - 8179

வித்தக வில்லினான் - 8182

மின்குலாம் கழல்கால் வீரன் - 8184

தீயன், தீங்கு இழைப்பவர்க்கு எல்லாம் சீரியன், மாயச் செல்வன் - 8185

தணிவு அறப் பண்டு செய்த தவத்தினும், தருமத்தானும்
பிணி அறுப்பவரில் பெற்ற வரத்தினும் பிறப்பினானும்
மணி நிறத்து அரக்கன் செய்த மாய மந்திரத்தினானும்
அணு எனச் சிறியது ஆங்கு, ஓர் ஆக்கையும்
உடையன் ஆனான் - 8186

கள்வன் - 8224

வெற்றித் தாழ்வு உறு சிந்தையோன் - 8236

பதகன் - 8264

குன்று எனக் குவிந்த தோளான் - 8442

தூய அச் சுடர்கள் எல்லாம் சுற்றுற, நடுவண்
தோன்றும் நாயகப் பரிதி போன்றான் - தேவரை
நடுக்கம் கண்டான் - 8451

இந்திரசித்து என்று ஓதும் வீரருள் வீரன் - 8464

பொன் தேர்த் தீயவன் - 8474

மஞ்சினும் கரிய மெய்யான் - 8477

இராவணன் தனயன் - 8499

இராவணன் தோன்றல் - 8500

இராவணன் சிறுவன் - 8509

தசமுகன் தனி மகன் - 8518

இராவணன் காதலன் - 8602

குலம் சுரந்து எழு கொடுமையான் - 8604

மாயையின் பெருமையான் - 8605

ஆற்றல் சான்ற இந்திரசித்து - 8708

நல் மகன் - 8853

மாற்றல் இல் மாயை வகுக்கும் வலத்தான் - 8867

நான்முகனுக்கு ஒரு நால்வரின் (நான்காம் தலைமுறையில்) வந்தாய், நூல்முகம் முற்றும் நுணங்க உணர்ந்தாய் - 8872

சீதையை, திருவை, தீண்டிச் சிறை வைத்த தீயோன் சேயே - 8886

வஞ்சன் - 8921

பாதகன் - 8926

வெஞ் சிலை மைந்தன் - 8930

அமரர்தங்கள் கூற்று - 8938

நமனுக்கும் நமனாய் நின்றான் - 9023

வில் எடுத்து உருத்து நின்ற வீரருள் வீரன் - 9024

மேருவின் குவிந்த தோளான் - 9026

கார் ஆயிரம் உடன் ஆகியது எனல் ஆகிய கரியோன் - 9035

தீயோன் - 9038

திக்கு ஆசு அற வென்றான் மகன் - 9052

மனம் கரியான் - 9063

தெறு காலனின் கொடியோன் - 9093

உருமின் வெய்யோன் - 9110

கூற்றுக்கும் கூற்றம் அன்னான் - 9112

எண்ணுடை மகன் - 9116

உலகு எலாம் கலக்கி வென்றான் - 9121

வீரர் என்பார்கட்கு எல்லாம் முன் நிற்கும் வீரர் வீரன் - 9145

பகலின் அல்லால் விளிகிலன் இருளின் வெய்யோன் - 9147

ஆர் அழியாத சூலத்து அந்தணன் அருளின் ஈந்த தேர் அழியாத போதும், சிலை கரத்து இருந்த போதும், போர் அழியான், இவ் வெய்யோன் - 9151

மல்லின் மா மாரி அன்ன தோளினான் - 9155

காளை வீரன் - 9156

பேர் எழில் வீரன் - 9160

அப்பொய் அறச் சிறிது என்று எண்ணும் பெருமையான் புதல்வன் - 9162

சோரன் - 9168

வில்லாளர் ஆனார்க்கு எல்லாம் மேலவன் - 9171

போர்த் தொழில் கடந்த வெய்யோன் - 9177

மாயத்தோன் - 9178

செழு வில் சேவகன் - 9202

தாள் அரிச் சதங்கை ஆர்ப்பத் தவழ்கின்ற பருவந் தன்னில், கோள் அரி இரண்டு பற்றிக் கொணர்ந்தனை (மண்டோதரி) - 9234

'அம்புலி! அம்மவா!' என்று அழைத்தலும், அமர் வெண்திங்கள் இம்பர் வந்தானை அஞ்சல் என இரு கரத்தின் ஏந்தி, வம்புறும் மறுவைப் பற்றி 'முயல்' என வாங்கும் வண்ணம், எம் பெருங் களிறே! காண ஏசற்றேன்(மண்டோதரி) - 9235

ஏழு குன்றமும் எடுக்குறும் மிடுக்கன் - 9287

புரந்தரன் பெரும் பகைஞன் - 10077

குன்று அரிந்தவனை வென்ற விட நிகர் மேகநாதன் - 10116

இந்திரசித்து என்று ஒதும் விலக்கு அரு வலத்தினான் - 10299

இந்திரன்

தேவர்களுக்குத் தலைவன். அமராவதி நகர் இவன் இருப்பிடமாகும். குலிசைப்படை வெள்ளை யானை, கற்பகத் தரு முதலானவற்றை உடையவன்.

கிழக்குத் திசையின் காவலன். நூறு யாகம் செய்ததால் இந்திரப் பதவியைப் பெற்று சதமகன் ஆனவன். பாகன் என்னும் அரக்கனை அழித்ததால் பாக சாதனன் ஆனவன். அகலிகை காரணமாகக் கௌதம முனியின் சாபம் பெற்று ஆயிரங்கண்ணன் ஆனவன். இந்திரசித்தால் சிறைப்பட்டவன்.

புரந்தரன், வாசவன் எனப் பிற பெயர்களும் உண்டு. இராமகாதையுள் இவன் கூறாக வாலியும் அவன் மகன் அங்கதனும் பிறந்தனர்.

அயில் முகக் குலிசத்து அமரர்கோன் - 96

பாகசாதனன் - 188

தருவுடைக் கடவுள் வேந்தன் - 205

சுரர்க்கு வேந்தன் - 269

வாசவன் - 283

தளை அவிழ் தருவுடைச் சயிலகோபன் - 284

புரந்தரன் - 322

செறி சுடர்க் குலிசத்து அண்ணல் - 468

அமரர் வேந்தன் - 584

விண் முழுது ஆளி - 586

நறைத் தரு உடைய கோன் - 597

குலிசி - 613

மேல் வானவர்க்கு அரசு ஆம் பொன்னின்
வார் கழல் புரந்தரன் - 1380

சதமகன் - 2437

ஆயிரமாம் தவ்வாது இரவும் பொலி தாமரையின்
வெவ்வேறு அலர், கண்ணினன், விண்ணவர்
கோன் - 2588

பின்னிச் சுடரும், பிறழ் பேர் ஒளியான் - 2589

வானில் பொலி தோகையர் கண்மலர் வண்
கானில் படர் கண்-களி வண்டொடு, தார்
மேனித் திரு நாரதன் வீணை இசைத்
தேனில் படியும் செவி வண்டு உடையான் - 2590

அனையின் துறை ஐம்பதொடு ஐம்பதும், நூல்
வினையின் தொகை வேள்வி நிரப்பிய மா
முனைவன் முது தேவரில் மூவர் அலார்
புனையும் முடி துன்று பொலங் கழலான் - 2591

செம்மா மலராள் நிகர் தேவியொடும்
மும் மா மத வெண் நிற முன் உயர் தாள்
வெம் மா மிசையான்; விரி வெள்ளி விளங்கு
அம் மா மலை அண்ணலையே அனையான்; - 2592

ஒளிர் வெண் குடையான் - 2593

சாமரையான் - 2594

தேரில் திரி செங் கதிர் தங்குவது ஓர் ஊர் உற்றது
எனப் பொலி ஒண்முடியான்... போர் வித்தகன் - 2595

பொன்றாத பொலங் கழலோன் - 2600

சொல் பொங்கு பெரும் புகழோய் (சரபங்கன்) - 2604

வான் உடையாய் - 2606

இமையோர் இறை - 2610

பொன் ஒளிர் நெடுமுடிப் புரந்தரன் - 2618

இந்திரற்கு ஆயிரம் நயனம் - 2743

பூ அராவு வேல் புரந்தரன் - 3017

சந்த மலர்த் தண் கற்பக நீழல் தலைவர் - 3238

அந்தரம் உற்றான்... அகலிகை பொற்பால்
அழிவுற்றான் - 3248

விண்ணின் வேந்தன் - 3444

குலிசக்கையினான் - 3513

வள்ளல் இந்திரன் - 3874

வான் உளோர் வான் உளான் - 3891

தேவர் இறை - 4581

இமையோர் கோன் - 4723

ஈண்டிய கொற்றத்து இந்திரன் - 4728

அம்பர வேந்தன் - 5090

பொரு திசை யானை ஊரும் புனிதன் - 5561

அண்டர் கோன் - 5670

விழிகள் ஆயிரமும் கொண்ட வேந்தன் - 5687

மாக வன் திசை பத்தொடும் வரம்பு
இலா உலகிற்கு ஏக நாதன் - 5783

வயிர வாட் படையால் செறிந்த வான் பெரு
மலைகளைச் சிறகு அறச் செயிரா எறிந்த
இந்திரன் - 5787

உம்பருக்கு இறைவன் - 6152

அமரர் கோன் - 6153

முளரி ஆயிரம் கணான் - 6342

தே மன் - 6363

பெரு வலி இந்திரன் - 7345

செயிர் ஒப்புறும் இந்திரர் - 7788

ஆயிரம் கண்ணினான் - 8237

வானவர் தம் கோமான் - 8380

அறத்தோர் கோன் - 9065

யாகசாதனன் - 9205

அரி - 9232

புயலவன் - 9610

விரி சினத்து இகல் விஞ்சையர் வேந்தன் - 9614

சுரர்க்கு இறைவன் - 9699

குலம் கொள் தார் வாசவன் சங்கு - 9734

இமையவர்க்கு இறைவன் - 10053

குன்று அரிந்தவன் - 10116

குணபால் அண்ணல் - 10239

இராமன்

இராமகாதையின் கதைத்தலைவன். தேவர்கள் வேண்ட திருமாலின் அவதாரமாக, அரக்கர்களை வேருடன் அழித்து அறத்தை வாழ்விக்க இராமனாகத் தோன்றியவன். அயோத்தி வேந்தன் தயரதன் நடத்திய மகவருள் வேள்வியின் பயனாகக் கோசலை வயிற்றில் உதித்தவன். தயரதனுக்கு மகன் என்பதைவிட அவன் உயிர் என நின்றவன். இளவல் இலக்குவன் முதலான தம்பியருக்கும் உயிராய் அமைந்தவன். அயோத்தி மக்களின் அன்பினை முழுமையாகப் பெற்றவன். பெற்றவள் கோசலையாயினும் கைகேயியால் வளர்க்கப்பட்டவன்.

பல கலைகளும் கற்று பிற கல்வி கேள்விகளில் தேர்ந்து வளர்ந்து வருகையில் விசுவாமித்திரனால் வேள்வி காக்க அழைத்துச் செல்லப்பட்டவன். உடன் வந்த இலக்குவன் முனியின் வேள்விக்குப் பாதுகாப்பாய் நிற்க, அதற்குத் தடையாய் எதிர்த்து வந்த தாடகை முதலான அரக்கரை அழித்தவன். தன் கன்னிப்போர் வெற்றிக்காக விசுவாமித்திரனிடம் படைக்கலன்களைப் பரிசிலாகப் பெற்றவன். வேள்வி முடித்து முனியோடும் இளவலோடும் மிதிலை செல்லும் வழியில் கல்லாய்க் கிடந்த அகலிகை மீது தன் கால் துகள் பட அவள் உயிர்த்தெழ வியந்தவன். 'கைவண்ணம் அங்குக் கண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்' என்று விசுவாமித்திரனால் பாராட்டப் பெற்றவன். பின் அவள் கதையறிந்து அவளைக் கணவன் கௌதமனிடம் விசுவாமித்திரனோடு சென்று ஒப்படைத்தவன்.

மிதிலையில் சீதையைக் கண்டு காதலுற்றவன். சனகன் அவையில் விசுவாமித்திரன் குறிப்பறிந்து சிவனின் வில்லாகிய கார்முகத்தை ஒடித்தவன். வீதி உலா வந்த இராமன் அழகில் மயங்கி நின்ற மிதிலையார்,

> தோள் கண்டார், தோளே கண்டார், தொடு கழல்
> கமலம் அன்ன, தாள் கண்டார், தாளே கண்டார்;
> தடக் கை கண்டாரும், அ.தே; வாள் கொண்ட
> கண்ணார் யாரே, வடிவினை முடியக்கண்டார்?
> ஊழ் கொண்ட சமயத்து அன்னான் உருவு
> கண்டாரை ஒத்தார் - 1081

என்பார் கம்பர். வில்லை வளைப்பார்க்கே சீதை உரியவள் என்ற விதிப்படிச் சீதையை மணந்தவன். திருமணத்திற்காக மிதிலை வந்த தன் தாய், தந்தை, தம்பியர் முதலானோருடன் அயோத்தி திரும்பிய பொழுது பகையோடு வந்த பரசுராமனின் வில்லை வளைத்து நாணேற்றியவன். அதற்கு இலக்காக அமைந்த அவனின் தவ வலிமை முழுமையையும் பெற்றவன்.

தயரதனால் முதற்கண் அயோத்தி அரசனாக அறிவிக்கப்பட்டவன். இதனால் வசிட்டனிடமிருந்து அரசியல் கல்வியைப் பெற்றவன். சிறு வயதில் கூனி மீது உண்டை யெறிந்து விளையாடியதால் சினமுற்றிருந்த அவளால் கைகேயியின் மனம் மாற்றம் அடைய நாடிழந்தவன். பரதன் அரசனாகவும் இராமன் பதினான்கு ஆண்டுகள் வனத்தில் வாழவும் கைகேயி தசரதனிடம் வரம் பெற்றதனால் தந்தை சொல் காக்க வசிட்டன் முதலானோர் தடுத்தும் காடு சென்றவன். இதனால் சினம் கொண்டு போருக்கெழுந்த இலக்குவனை அமைதிப் படுத்தியவன். தம்பி இலக்குவனும் மனைவி சீதையும் இராமன் இருக்குமிடமே தங்களுக்கு உயிர் இருக்குமிடம் எனப் பின் தொடர்ந்தனர்.

> நீர் உளஎனின் உள, மீனும் நீலமும்;
> பார் உளஎனின் உள, யாவும்; பார்ப்புறின்,
> நார் உள தனு உளாய்! நானும் சீதையும்
> ஆர் உளரெனின் உளம்! அருளுவாய்! - 1757

என இலக்குவன் கூறியதால் தவிர்க்க இயலாத நிலையில் அவர்களுடன் காடேகியவன்.

தகவலறிந்த அயோத்தி மக்களும் பின் தொடர்ந்து இராமன் பால் தமக்குள்ள அளவிடற்கரிய அன்பினை வெளிப்படுத்தினர். அயோத்தி எல்லை வரை செல்ல சுமந்திரன் இராமன் மனதை மாற்றலாம் என்ற நோக்கோடு தேரோட்டி வந்தான். மக்களின் மனநிலை உணர்ந்து அனைவரும் உறங்கியபொழுது சுமந்திரனை அழைத்துத் தேரை அயோத்திக்குத் திரும்பச் செய்தவன். சுமந்திரன் தன் முயற்சியில் தோல்வியுற்று நாடு திரும்ப, சீதை இலக்குவருடன் நடந்து வனம் நோக்கிச் சென்றவன். விழித்தெழுந்த அயோத்தி மக்கள் தேர்த்தடம் கொண்டு நாடு திரும்பினான் எனக் கருதி தாமும் திரும்பினர். சுமந்திரன் வாய்மொழியாக இராமன் காடு சென்றதை அறிந்த தயரதன் உயிர்நீங்கினான்.

கங்கைக்கரை அடைந்தபோது அங்கிருந்த முனிவர்களால் வரவேற்கப் பெற்றவன். அங்குத் தன்னைக் காணவந்து வணங்கிய வேடர் குலத் தலைவன் குகனின் அன்பு கண்டு அவனைத் தன் தம்பியாக ஏற்றுக் கொண்டவன். அவன் தன்னுடனேயே பதினான்கு ஆண்டுகளையும் கழிக்கும்படி வேண்ட மறுத்தவன். அவன் துணையுடன் கங்கையைக் கடந்தவன். அங்கிருந்து வனம் நோக்கிச் சென்றபோது பரத்துவாச முனிவனைக் கண்டவன். அவரின் விருந்தினைப்

பெற்று மகிழ்ந்து பின் சித்திரகூடம் சென்றவன். அங்குத் தன்னைத் திரும்ப அழைத்துச் சென்று முடிசூட்டும் விருப்போடு வந்த பரதனிடம் தந்தை சொற்படி பதினான்காண்டுகள் வன வாழ்க்கையை நிறைவு செய்தபின் ஏற்றுக் கொள்வதாக வாக்களித்தவன். அதுவரை, பரதனையே அரசு ஆணைப்படி நாடாளச் செய்தவன். பரதன் வேண்ட தன் பாதுகைகளை அளித்தவன். இவன் அயோத்தி திரும்பியது வரை அவையே அரியணையை அலங்கரித்தன. பின் தந்தைக்கு நீர்க்கடன் செய்தவன்.

சித்திரகூடத்திலிருந்து தண்டகவனம் புகும் வழியில் அத்திரி முனிவனைக் கண்டு அவனருள் பெற்றவன். தொடர்ந்து செல்கையில் சீதையைத் தன் பசி தீர்க்க விராதன் எனும் அரக்கன் கைப்பற்ற அவனைத் தம்பியுடன் இணைந்து கொன்றவன். இறந்தவன் கந்தர்வனாக உருவும் உயிரும் பெற்று எழுந்து தன் பழங்கதைகளைக் கூறி வழிபட்டான். பின், இவ்வுலக வாழ்விலிருந்து விடுபடுதற்காகத் தன் வரவு நோக்கிக் காத்திருந்த சரபங்கனைக் கண்டு அவன் ஆவலை நிறைவேற்றியவன்.

தண்டகவனத்தில், அங்கிருந்த முனிவர்களுக்கு அபயமளித்துப் பத்து ஆண்டுகள் தங்கியவன். பின் அகத்தியரைப் பார்க்கச் செல்லும் வழியில் சுதீக்கணனால் உபசரிக்கப்பட்டவன். அகத்தியரைக் கண்டு அவரிடமிருந்த படைக்கலன்களைப் பெற்றவன். பின் பஞ்சவடி செல்லும் வழியில் தன் தந்தையின் நண்பன் சடாயுவைக் கண்டு அவன் துணையோடு அங்கு வதிந்தவன்.

வனத்தில் மகிழ்ச்சியாகக் காலம் கழித்துக் கொண்டிருந்த பொழுது சூர்ப்பணகை தோன்றினாள். இராமன் அழகில் மயங்கிய அவள் சீதையைக் கடத்த முயன்றபோது இலக்குவனால் மூக்கறுபட்டாள். அதனால் அங்கு வாழ்ந்த தன் தமையன்மார் கரன், திரிசரன் ஆகியோரைப் படையுடன் போர்க்கு அழைத்து வந்தாள். அவர்களை இராமன் அழிக்கவே இலங்கை சென்று இராவணன் நெஞ்சில் சீதை பற்றிய ஆசையை வளர்த்து இராமாவதார நோக்க நிறைவேற்றத்திற்குக் கால் கோளிட்டாள்.

சீதைபால் கொண்ட வெறியால் இராவணன் மாரீசனை மாய மானாகச் சீதைமுன் உலவவிட்டான். சீதை வேண்டிய படி அதைப் பிடிக்கச் சென்றவன்; அதன் மாயமுணர்ந்து கொன்றவன். இறந்த மாரீசன் எழுப்பிய வஞ்சனைக் குரலால் இலக்குவனும் சீதையைப் பிரிய, இராவணன் அவளைத் தங்கியிருந்த பர்ணசாலையோடு தூக்கிச் சென்று இலங்கையில் சிறைவைத்தான். இதைத் தடுக்க முயன்ற சடாயுவும் தோல்வியுற்று வீழ்ந்தான்.

சீதை கடத்தப்பட்டதை அறிந்து, செய்வதறியாது திகைத்து, தேர்த்தடம் நோக்கி வந்த பொழுது வீழ்ந்து கிடந்த சடாயுவைக் கண்டு உண்மை அறிந்தவன். அப்பொழுது சடாயு உயிர்நீக்க அவனுக்கு ஈமக்கடன் செய்தவன். நீர் கொணரச் சென்று அயோமுகியால் இலக்குவன் காலந்தாழ்த்திய போது மனங்கவன்று, தன் தம்பிபால் கொண்ட நேயத்தைப் புலப்படுத்தியவன். சீதையின் பிரிவால்,

> கைத்த சிந்தையன், கணங் குழை அணங்கினைக்
> காணான், உய்த்து வாழ்தர வேறு ஒரு பொருள்
> இலான்; உதவ, வைத்த மா நிதி, மண்ணொடும்
> மறைந்தன, வாங்கிப், பொய்த்துளோர் கொள,
> திகைத்து நின்றானையும் போன்றான் - 3474

என உயிரற்ற உடலாய்த் திரிந்தவன்.

சீதையைத் தேடி தொடர்ந்து அலைந்த போது கவந்தன் கைப்பட்டு, அவனை அழித்து அவனுக்கும் சாப விமோசனம் அருளியவன். அக்கந்தருவன் சுக்கிரீவன் துணைபெறுமாறு அறிவுறுத்தினான். அவன் வழி காட்டியபடி சவரியிடம் சென்று சுக்கிரீவன் இருப்பிடமான இரலைமலையும் அங்குச் செல்லும் வழியும் அறிந்தவன். அங்குச் சென்று அனுமன் மூலமாகச் சுக்கிரீவன் நட்பைப் பெற்றவன். ஏழு மராமரங்களை ஒரே அம்பால் வீழ்த்தித் தன் வலிமையை அவனுக்குக் காட்டியவன். நண்பனும் தம்பியுமான சுக்கிரீவனின் மனைவியைக் கவர்ந்த வாலியைத் திட்டமிட்டு மறைந்திருந்து கொன்றவன். தன் தவறுணர்ந்து வருந்திய வாலி,

> தாய் என உயிர்க்கு நல்கி, தருமமும், தகவும்,
> சால்பும், நீ என நின்ற நம்பி! நெறியினின் நோக்கும்
> நேர்மை நாய் என நின்ற எம்பால், நவை அற
> உணரலாமே? தீயன பொறுத்தி - 4061

என்றான். அவன் மகன் அங்கதனை அடைக்கலமாகப் பெற்றவன். இலக்குவனைக் கொண்டு சுக்கிரீவனுக்குக் கிட்கிந்தை யரசாக முடிசூட்டியவன். அவனுக்கு அரசியலறம் சுற்பித்தவன்.

சுக்கிரீவன் உதவிய வானரப் படை கொண்டு சீதையை உலகெங்கும் தேடியவன். அவள் பிரிவுத் துன்பம் மிகுந்த பொழுதெல்லாம் தம்பியும் நண்பனும் தேறுதல் மொழியத் தேறியவன். தென்திசை சென்ற அனுமன் மீது கொண்ட நம்பிக்கையால் சீதையின் அங்க அடையாளங் களையும், அவளுக்கான அடையாள மொழிகளையும்

அவனிடம் கூறி கணையாழியையும் கொடுத்து அனுப்பியவன். அவன் எண்ணப்படியே அனுமன் சீதையைக் கண்டு அவளிடமிருந்து சூடாமணி பெற்றுத் திரும்பினான். சீதை இருப்பிடமும் அவள் நிலையும் உணர்ந்தான். அனைவரும் போருக்கு எழுந்தனர்.

பன்னிரு நாட்களில் அனைவரும் தென்திசைக் கடல் வந்தடைந்தனர். ராவணனால் துரத்தப் பட்ட வீடணன் தன் நண்பரோடு வந்து அடைக்கலமானான். அவனையும் தன் தம்பியாக ஏற்றுக் கொண்டவன். அவனுக்கும் இலக்குவன் மூலமாக இலங்கைக்கு அரசனாக முடிசூட்டியவன். தன் கானுறை வாழ்க்கை, தந்தைக்குப் புதல்வர்களை எழுவராக்கியது எனக் கூறி மகிழ்ந்தவன்.

கடல் கடக்க வருணன் உதவி வேண்டித் தவமிருந்தவன். மறுகோடியில் மீன்களுக் கிடையே நிகழ்ந்த போரினை நீக்கும் பணியில் நின்றதால் அவன் வரக் காலதாமதமாகச் சினமுற்றவன். அவன் மீது அம்பெய்ய முற்பட்டவன். விரைந்தோடி வந்த வருணன் நிகழ்ந்ததுரைக்கச் சினந்தணிந்தவன். தொடுத்த அம்பிற்கு ஏதேனும் இலக்கு வேண்டுமாதலால் மருகாந்தாரம் எனும் தீவில் வாழ்ந்த நூறு கோடி அரக்கர்களை அழித்தவன்.

வருணன் கூறியபடி நளன் தலைமையில் இலங்கைக்குக் கடலில் சேது கட்டியவன். போருக்குமுன் முறைப்படி அங்கதனைத் தூதாக இராவணனிடம் அனுப்பியவன். முதற்போரில் இராவணனைத் தோல்வியுறச் செய்தவன். எல்லாப் படைக்கலன்களையும் இழந்து நின்ற அவனுக்குக் கருணை உள்ளத்தோடு 'இன்று போய் நாளை வா' என்று அருள்பாலித்தவன்.

கும்பகருணன் போருக்கு வந்த போது வீடணனை அனுப்பித் தன்னைச் சேரும்படித் தூண்டியவன். செஞ்சோற்றுக் கடனுக்காகக் கும்பகர்ணன் மறுக்கவே போரில் வீழ்த்தியவன். அவன் வேண்டுதல்படி மூக்கறுபட்டுக் குறையுற்ற அவன் தலையைக் கடலுள் ஆழ்த்தியவன். இறக்குந் தறுவாயில் கும்பகருணன் இவனிடம் உடன்பிறப்பின் அருமை அறியா இராவணனிட மிருந்து வீடணனைக் காத்தருள வேண்டினான்.

போரில்மாயம்செய்துபல்வேறுஉருவங்களைக் காட்டி மயக்கிய மகரக்கண்ணனை வீழ்த்தியவன். வஞ்சனை செய்து இந்திரசித்து வீசிய பிரம்மாத்திரத்தால் இலக்குவன் மற்றும் சுக்கிரீவன், அங்கதன் முதலான அனைத்து வானர வீரர்களும் மடிந்தது கண்டு அரற்றித் துவண்டவன். மருத்துமலை கொணர்ந்து அனுமன் மீட்டபின்பே மன அமைதி கொண்டவன். மூலபலப்படை வந்தபோது அஞ்சி ஓடிய வானரங்களைப் பாதுகாக்கும்படி இலக்குவனை அனுப்பியவன். தானே தனித்து நின்று அப்படை முழுவதையும் அழித்தவன்.

இறுதிப்போரில் இந்திரன் அனுப்பிய தேர் மீதேறி இராவணனுக்குத் தன் இணையற்ற வில்லாற்றல் காட்டியவன்.

வெள் எருக்கஞ் சடை முடியான் வெற்பு எடுத்த
திரு மேனி, மேலும் கீழும்,
எள் இருக்கும் இடன் இன்றி, உயிர் இருக்கும்
இடன் நாடி, இழைத்தவாறோ?
கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும் எனக் கருதி, உடல் புகுந்து,
தடவியதோ ஒருவன் வாளி? - 9940

என மண்டோதரி புலம்பி நிற்ப அவன் உயிர் பிரித்தவன். இராவணன் முதலான அரக்கர்களுக்கு வீடணனைக் கொண்டு இறுதிக்கடன் ஆற்றச் செய்தவன்.

அனுமனை, வீடணனை அனுப்பிச் சிறையிருந்த செல்வியைத் தன்பால் அழைத்து வரச் செய்தவன். தன் சின மொழிகளால் சீதையைத் தீக்குளிக்கச் செய்து, அவள் கற்பினை உலகறியச் செய்தவன். பிரமன், சிவன் முதலான வானோர் வந்து உண்மையை உணர்த்த உணர்ந்தவன். மண்ணுலகு மீண்டு வாழ்த்திய தந்தை தசரதன் கேட்க 'தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும் தாயும் தம்பியும் ஆம் வரம் தருக' என வேண்டித் தன் பற்றைப் புலப்படுத்தியவன். தேவர்களிடம்,

கோட்டு வார் சிலைக் குரிசிலை அமரர்தம்
குழாங்கள் மீட்டும் நோக்குறா, வீர! நீ வேண்டுவ
வரங்கள் கேட்டியால், என, 'அரக்கர்கள் கிளர்
பெருஞ் செருவில் விட்ட, மாண்டுள குரங்கு
எலாம் எழுக!' என விளம்பி - 10084

பின்னும் ஓர் வரம், 'வானரப் பெருங் கடல்
பெயர்ந்து, மன்னு பல் வனம், மால் வரைக்
குலங்கள், மற்று இன்ன துன் இடங்கள்,
காய் கனி கிழங்கோடு தேன் துற்ற, இன் உண்
நீர் உளவாக! என இயம்பிடுக' என்றான் - 10085

எனப்போரில் இறந்த வானரங்கள் மீண்டும் உயிர் பெற்று எழவும், அவை வாழுமிடம் நல்ல காய்கனிகளோடும் நீரோடும் நிறைந்திருக்கவும் வேண்டியவன். இதனால் தன் நன்றியுணர்வை, செய்ந்நன்றியறிதலை யாவரும் அறியச் செய்தவன்.

பதினான்கு ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் அயோத்திக்கு நண்பர் சுற்றம் அனைத்துடனும் வீடணனின் புட்பக விமானத்தில் திரும்பியவன். வழியில் இரலை மலையில் வானர மாதரும் இணைந்தனர். பரத்துவாச முனி அழைக்க அங்கு இறங்கி அவர் தந்த விருந்துண்டவன். அயோத்தியில் இருக்க வேண்டிய காலம் நெருங்கியமையால், சூளுரைத்த பரதன் கூறியபடி எரிமூழ்கி விடாது காப்பாற்ற அனுமனை அனுப்பியவன். பரதன் அவனால் சரியான பொழுதில் காப்பாற்றப்பட்டான். அனுமனின் அளப்பரிய உதவிகளால் மனம் நெகிழ்ந்து,

தீவினை யாம் பல செய்ய, தீர்வு இலா
வீவினை முறை முறை விளைவ, மெய்ம்மையாய்!
நீ அவை துடைத்து நின்று அழிக்க நேர்ந்ததால்;
ஆயினும், அன்பினாய்! யாம் செய் மா தவம் - 10264

என்று போற்றியவன். பரத்துவாச முனியிடத்தில் குகனும் படைப்பரிவாரங்களோடு வந்து சேர்ந்தான். பின் அனைவரும் அயோத்தி திரும்பினர். பிரிந்தோர் இணைந்து மகிழ்ந்தனர்.

நண்பர்களுக்கு அயோத்தியைச் சுட்டிக் காட்டி அவர்களை மகிழ்வித்தவன். பின்னொரு நன்னாளில் அனைவரும் வாழ்த்த கோசலத்து மன்னனாக முடிசூடிக் கொண்டவன். பின் நண்பர்களை வாழ்த்தி அவரவர் தகுதிக்கேற்ப பரிசில் அளித்து விடை கொடுத்து அனுப்பியவன். மனையாளோடும் தம்பியரோடும் இனிதே நல்லாட்சி நடத்தியவன்.

இராமனின் அழகையும், பண்பையும், செயல்திறனையும் புலப்படுத்துவதில் கம்பர் பெரு விருப்பு காட்டியுள்ளார். எப்படிச் சிறப்பிப்பினும் அவருக்கு அதிலோர் மன நிறைவின்மையையும் சுட்டி தம் அளப்பரிய இராம காதலைப் புலப்படுத்தியுள்ளார்.

அறிவின் உம்பரான், எழுத அரிய திருமேனிக் கருங்கடல், முளைக்கலா மதிக் கொழுந்து போலும் வாள் முகத்தினன், காவியும் குவளையும் கடிகொள் காயாவும் ஒத்து ஓவியம் சுவை கெடப் பொலிவது ஓர் உரு, ஆயிர நாமச் சிங்கம், அறத்தின் மூர்த்தி, வையகப் போகனன், மண்ணிய மணிநிற வண்ணன், நீல மாமுகில், கால மாக் கணிக்கும் நுண்மைக் கணக்கையும் கடந்து நின்ற மூலம் ஆய் முடிவு இலாத மூர்த்தி, மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகுடையான், துப்புடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணல், அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன், அன்னையே அனைய அன்பின் அறவோன், அந்நான்மறையின் கனி, இருண்ட மேகத்தின் கொழுந்து என நின்ற குரிசில், புண்டரீகங்கள் பூத்துப் புயல் தழீஇப் பொலிந்த திங்கள் மண்டலம் உதயம் செய்த மரகதக்கிரி அனான், அறங்கள் நாறும் மேனியன், அரந்தை வெம்பிறவி நோய்க்கும் அருமருந்து அனைய ஐயன், படி எடுத்து உரைத்துக் காட்டும் படித்து அன்று படிவம், புன் புறப் பிறவியின் பகைஞன் என்பன சில காட்டுகள்.

அண்ணல். அமரன், அழகன், அற்புதன், அறவோன், அன்பன், அனகன், ஆரியன், ஆழி, ஆழியான், இருட்கனி, ஏந்தல், ஒள்ளியோன், கருஞாயிறு, காதலன், காலவேலி, காவலன், காளை, கொண்டல், கோளரி, சுந்தரவில்லி, சுந்தரன், செம்மல், செவ்வியோன், சேவகன், தீர்த்தன், தோன்றல், நண்பன், நாராயணன், நெடியோன், பண்ணவன், பருணிதன், புண்ணியன், புலவன், புனிதன், பெருந்தகை, பெருமகன், மஞ்சன்,மருத்துவன், முன்பன், முனைவன், மொய்ம்பினான், வரதன், வள்ளல், வான்மழை, விமலன், வீரன் என்பன போன்று இராமனைக் குறிக்கும் ஒற்றைச் சொற்களும் உணர்ந்து இன்புறத்தக்கன.

காசு இல் கொற்றத்து இராமன் - 4

மராமரம் ஏழ்துளை எய்த எய்தவற்கு எய்திய மாக்கதை - 5

நடையின்நின்று உயர்நாயகன் தோற்றத்தின் இடை நிகழ்ந்த இராமாவதாரப் பேர்த் தொடை நிரம்பிய தோம் அறு மாக்கதை - 11

மண்ணிடை யாவர் இராகவன் அன்றி மா தவம் அறத்தொடும் வளர்த்தார்... எண் அருங்குணத்தின் அவன் - 97

செங் கண் மால் பிறந்து, ஆண்டு அளப்ப அருங்காலம் திருவின் வீற்றிருந்தனன் - 98

மெய் மாண் கழலோன் - 168

ஒரு பகல் உலகு எலாம் உதரத்துள் பொதிந்து அரு மறைக்கு உணர்வு அரும் அவன்.... அஞ்சனக் கரு முகிற் கொழுந்து எழில் காட்டும் சோதி - 282

காவியம் ஒளிர்தரு கமலமும் எனவே ஓவிய எழிலுடை ஒருவன் - 301

வானவர் தனிமுதல்வன் - 304

ஐயன் - 306

வரதன் - 307

வீரன் - 308

மறையும் தடவுதல் அறிவு அருதனி முதல்வன் - 310

இறைவன் - 311

முப் பரம் பொருளுக்கு முதல்வன் - 313

சிறுவன், கரிய செம்மல் - 324
திருவின் கேள்வன், அறிவின் உம்பரான் - 330
நம்பி - 331
உலகம் தாங்கினான் - 333
எவர்க்கும் மேல் நின்றான் - 338
ஆரணத்து உறையுளாய் - 340
கோக் குமரன் - 356
வள்ளல் - 357
ஆடவர் பெண்மையை அவாவும் தோளினன் - 362
அலங்கல் முகில் - 364
மைந்தன் - 365
சங்கு உறை கரத்து ஒரு தனிச் சிலை தரித்தவன்- 366
கைவரை எனத் தகைய காளை - 367
பெருந்தகை - 374
செறிந்த தாரவன் - 375
மணிப் பூணினான் - 376
கறங்கு அடல் திகிரிப் படி காத்தவர் பிறங்கடைப் பெரியோய் - 379
கூற்று உறழ் வேலினான் - 380
கங்கைத் தீம் புனல் நாடன் - 384
பொன் நெடுங் குன்றம் அன்னான் - 389
காசு உலாம் கனகப் பைம் பூண் காகுத்தன் - 392
வில் கொண்ட மழை அனான் - 393
அண்ணல் - 395
பூவைப்போல் நிறத்தினான்(காயாம்பூ) - 396
முனைவன் - 397
செம்மல் - 407
சிலை குழாம் தோளினன் - 429
அரு வினை அறுக்கும் ஆரியன் - 431
காண்தகு குமரன் - 432
மன்னன் மைந்தன் - 433
காளை வீரன் - 434
போர்த் தொழில் குமரன் - 435
தாமரைக் கண்ணன் - 441
அஞ்சனவண்ணன் - 442
திருமகள் நாயகன் - 444
துணர்த்த பூந் தொடையலான் - 445
சுந்தர வில்லி - 447
கோசலை குருசில் - 450
காகுத்தன் - 465
மா இரு விசும்பின் கங்கை மண் மிசைக் கொணர்ந்தோன் மைந்தன் - 466
பூமி கேள்வன் - 467
செவ்வியோன் - 468
தசரதராமன் - 474
மழை வண்ணத்து அண்ணல் 475
தீது இலா உதவிசெய்த சேவடிக் கரிய செம்மல்- 476
அஞ்சன வண்ணத்தான் - 478
குணங்களால் உயர்ந்த வள்ளல் - 479
கமலச் செங் கண் ஐயன் - 480
மதுகையான் - 515
வரிசிலை அண்ணல் - 516
வசை இல் ஐயன் - 517
நறை கமழ் அலங்கலான் - 519
வரி சிலைத் தடக் கையன், மார்பின் நூலினன், அரசிளங் குமரன் - 534
குமரன் - 538
நீங்கா மாயையவர் - 555
மின்னின் மின்னிய மேனி கண்டான் - 561
தீது அறு மொய் கொள் வீரன் - 563
வென்றி வீரன் - 568
மெய் வள்ளல் - 569
இருட்கனியும் போல்பவன் - 618
தையும் மலர்த் தார் அண்ணல் - 629
கொல் ஆழி நீத்து, அங்கு ஓர் குனி வயிரச் சிலைத் தடக் கைக் கொண்ட கொண்டல் அல் ஆழிக் கரைக் கண்டான் - 633
பைந் தார் வடித்த குனி வரிசிலைக் கைம் மைந்தன் - 635
குலக் குமரன். . . பெருந் தகைமைத் தயரதன் தன் புதல்வன் - 636
இருங் கடகக் கரதலத்து இவ் எழுத அரிய திருமேனிக் கருங்கடல் - 656
தலை ஆய பேர் உணர்வின் கலைமகட்குத் தலைவர் ஆய் சிலை ஆயும் தனு வேதம் தெவ்ரைப் போல் பணி செய்ய கலை ஆழிக் கதிர்த் திங்கள் உதயத்தில் கலித்து ஓங்கும் அலை ஆழி என வளர்ந்தார் மறை நான்கும் அனையார்கள் - 659
புதல்வன் - 660
பூங்கழலான் - 661
அலை உருவக் கடல் உருவத்து ஆண்தகை - 662
கரியோன் - 665
சங்கொடு சக்கரம் தரித்த செங் கை அச் சிங்க ஏறு - 670
நேமியான் - 674
போதகம் அனையவன் - 676

போர் ஏறு. . .வனைந்தனைய திருமேனி வள்ளல் - 690
மானவன் - 696
தயரதன் புதல்வன், தாமரைக் கண்ணன், புயல் இவன் மேனி, பூவையே பொருவும் என்பார் - 707
குரிசில் - 708
முளைக்கலா மதிக்கொழுந்து போலும் வாள் முகத்தினான், வளைக்கலாத விற் கையாளி - 715
எங்கு நின்று எழுந்தது, இந்த இந்து - 716
வெங்கடம் துதைந்த காரி யானை அன்ன காளை - 717
பூங் கணை மயல் விளை மதனற்கும் வடிவு மேன்மையான் - 723
மரா மரம் இவை என வலிய தோளினான் - 724
பூண் இயல் மொய்ம்பினன், ஆண்தகை - 725
கோ முனியுடன் வரு கொண்டல் - 727
தோன்றல் - 728
செல்வன் - 733
தலை மகன் - 735
வானவன் குலத்து எமர் வரத்தினால் வரும் வேனில் வேள் - 738
எந்தை - 772
தன்னையே அனையவன் - 1047
காவியும், குவளையும் கடி கொள் காயாவும் ஒத்து, ஓவியம் சுவை கெடப் பொலிவது ஓர் உருவொடே, தேவரும் தொழு கழல் சிறுவன் - 1050
கற்றை வார் சடையினான் கைக் கொள்ளும் தனு இற, கொற்ற நீள் புயம் நிமிர்த்தருளும் அக் குரிசில் - 1053
பொரு இல் நான்மறை எனும் நடையினான் - 1056
கோதை சூழ் குஞ்சி அக் குமரன் - 1058
ஆதி வானவர் பிரான் - 1062
மஞ்சு அன மேனியான்தன் மணி நிறம் - 1072
வையம் முற்றும் வயிற்றின் அடக்கிய ஐயன் - 1082
பொருப்பு வில்லை பொடி செய்த புண்ணியன் - 1084
செய் தவன் - 1085
அனகன் - 1089
தீர்த்தன் - 1094
பெரும் பருணிதன் - 1097
சேவகன் - 1099
கோரவில்லி - 1103
திருவின் நாயகன் - 1105
அறம் செய் காவற்கு அயோத்தியில் தோன்றினான் - 1106
வெள்ளத்தின் சடிலத்தான் தன் வெஞ் சிலை இறுத்த வீரன் - 1122
கன்னி அமிழ்தத்தை எதிர் கொண்ட கடல் வண்ணன் - 1146
இராமன் என வந்தோன், சங்கினொடு சக்கரமுடைத் தனி முதற் பேர் அம் கண் அரசு - 1148
வையம் நுகர் கொற்றவன் - 1150
பச்சை மலை ஒத்த படிவத்து அடல் இராமன் - 1152
கணங் குழை கருத்தின் உறை கள்வன் எனல் ஆனான், வணங்கு வில் இறுத்தவன் - 1155
கரு மா முகில் போல்பவன் - 1167
அஞ்சன ஒளியான், மஞ்சன் - 1180
அரா-அணை துறந்து போந்து அயோத்தி எய்திய இராகவன் - 1206
அழிவரு தவத்தினோடு, அறத்தை ஆக்குவான், ஒழிவு அருங் கருணை ஓர் உருவு கொண்டென, எழுத அரு வடிவு கொண்டு, இருண்ட மேகம் - 1209
தேனுடை மலர்மகள் திளைக்கும் மார்பு - 1217
தணிவு அருங் கருணையான் - 1218
தேவரும் முனிவரும், தெரிக்கலா முதல் மூவரும், தான் - 1219
பன்னக மணி விளக்கு அழலும் பாயலுள் அன்னவர் தவத்தினால் அனந்தல் நீங்கினான் - 1226
முப் பரம் பொருளிற்குள் முதல், மூலம், இப் பரம் துடைத்தவர் எய்தும் இன்பம், அப்பினுள் அமிழ்தம் - 1227
பாலமை உணர்ந்தவன் - 1230
அமைவு அரு மேனியான் - 1232
வெஞ் சினத் தனுவலான் - 1236
வென்றி நெடுந்தகை வீரன் - 1244
வெய்ய கனல்தலை வீரன் - 1248
கால் கடல்போல் கருணைக்கடல் - 1257
ஆயிர நாமச் சிங்கம் - 1258
அம் கண் அரசன் - 1278
பொன் ஆர் கலை அணிந்தவன் - 1286
நீதியான், இங்கு யாவர்க்கும் ஆதி, அலங்கல் நேமி - 1299
பொன்னுடை வளை கழல் பொலம் கொள் தாளினான் - 1300
மண்ணிய மணி நிற வண்ணன், வண் துழாய்க் கண்ணிய யாவர்க்கும் களைகண் ஆகிய புண்ணியன் - 1302
அமலன் - 1303
மெய்மை இச் சிறுவனே, வினை செய்தோர்களுக்கு, இம்மையும் மறுமையும்' ஈயும் - 1306
ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறத்தும் உளன் - 1313
பெருமகன், அருமகன் - 1341
அறத்தின் மூர்த்தி - 1349
குல மைந்தன் - 1351

கண்ணினும் நல்லவன், கற்றவர் கற்றிலாதவரும் உண்ணும் நீரினும் உயிரினும், அவனையே உவப்பார் - 1352
முதல் மணிப் புதல்வன் - 1359
கொண்டல் - 1363
அண்டர் நாயகன் - 1367
கனி வாய்ச் சீதை கொண்கன் - 1371
சுந்தரத் திரள் தோள் அமைந்த மைந்தன் - 1384
சேவகம் செகுத்த சேவகன் - 1389
கொண்டல் வண்ணன் - 1401
நெடும் புதல்வன் - 1402
வில் இயல் தோளவன் - 1409
மனுகுல நாயகன் - 1410
ஒது நூல் மல்கு கேள்வியர் வள்ளல் - 1411
வையகப் போகனன் - 1428
நாகணை வள்ளல் - 1429
கவி அமை கீர்த்தி அக்காளை - 1432
கள் அவிழ் கோதையான் - 1435
விராவ அரும் புவிக்கு எலாம் வேதமே அன இராமன் - 1453
கோடிய வரி சிலை இராமன் - 1456
முறைமையின் உலகம் காத்த மன்னனின் இளையன் அன்றோ கடல் வண்ணன் - 1475
நளினம் போல் கையான் - 1527
நெடியன் - 1529
யாரும் மறக்கிலா நாம நம்பி - 1543
சிரித்த பங்கயம் ஒத்த செங் கண் இராமன், திருமால் - 1544
நாம விற் கை இராமன் - 1545
ஆழியான் - 1549
ஐயறும் சுடர் மேனியான் - 1550
வையம் ஏழும் ஓர் ஏழும் ஆர் உயிரோடு கூட வழங்கும் ஆம் மெய்யன் வீரருள் வீரன், மா மகன் - 1553
மூவர் ஆய் முதல் ஆகி, மூலம் அது ஆகிய தேவ தேவர் பிடித்த போர் வில் ஒடித்த சேவகன் - 1556
நறுந்துழாயின் அலங்கலான் - 1565
காதல் புதல்வன், அற்புதன் - 1567
பிள்ளை - 1573
குன்று இவர் தோளினான் - 1574
பைந் துழாய்த் தெரியலான் - 1582
நீல மா முகில், காலமாக் கணிக்கும் நுண்மைக் கணக்கையும் கடந்து நின்ற மூலம் ஆய், முடிவு இலாத மூர்த்தி இம் முன்பன் - 1585
தார் கெழு திரள் தோள் - 1586
அடல் வீரன் - 1593
உலகத்து எங்கும் உள்ளவை, உணர்ந்தார் உள்ளம் பூத்தவை வடிவை ஒப்பான் - 1595
செப்ப அருங் குணத்து இராமன் - 1602
குன்றினும் உயர்ந்த தோளான் - 1605
மழைக் குன்றம் அனையான் - 1606
வனைந்த பொன் கழற் கால் வீரன் - 1607
தழைக்கின்ற தூய சிந்தை அத் தோம் இல் குணத்தினான் - 1611
காதலன் - 1615
மகன் - 1638
ஆண் நாயகன், மழையே அனையான் - 1644
உயர்ந்தான் உரைசால் குமரன் - 1659
வில்லால் அடுமா வல்லாய் - 1661
பொன்னின் முன்னம் ஒளிரும் பொன், புகழின் புகழ், மின்னின் மின்னும் வரி வில் குமரன், மெய்யின் மெய் - 1663
பொன் ஆர் வலயத் தோளான் - 1677
ஒண்தார் முகில் - 1695
ஏந்து தடந் தோள் இராமன், திரு மடந்தை காந்தன் - 1696
பிறந்து உலகம் முற்று உடைய கோ - 1712
தன் நேர் இலாத தலைமகன் - 1713
கோதை வரி வில் குமரன் - 1714
செந்தாமரைத் தடங்கண் செவ்வி அருள்நோக்கம் - 1715
நீண்டவன் - 1731
செல்லும் சொல் வல்லான் - 1740
தென் சொல் கடந்தவன், வடசொல்-கலைக்கு எல்லை தேர்ந்தான் - 1741
கார் வானம் - 1748
நார் உள தனு உளாய் - 1757
செவ்விய குமரன் - 1762
வில் தடந் தாமரைச் செங் கண் வீரன் - 1766
பன்னகப் பாயலின் பள்ளி நீங்கினான் - 1767
தோன்றிய நல் அறம் நிறுத்தத் தோன்றினான் - 1769
முளரிப் போதிலும் குற்றம் இல் முகத்தினன் - 1771
வரை புயத்து அண்ணல் - 1786
அஞ்சன மேனி இவ் அழகன் - 1789
முழுவதே பிறந்து உலகு உடைய மொய்ம்பினோன் - 1791
இயங்கு பல் உயிர்க்கு ஓர் உயிர் என நின்ற இராமன் - 1818
காரை ஒத்தவன் - 1835
கோதை வில்லவன் - 1837

செவ்விய குரிசில் - 1858
அங்கி மேல் வேள்வி செய்து அரிதின் பெற்ற (நின்) சிங்க ஏறு - 1863
அடக்கும் ஐம் பொறியொடு கரணத்து அப் புறம் கடக்கும் வால் உணர்வினுக்கு அணுகும் காட்சியான் - 1865
மறைகளை மறைந்து போய் வனத்துள் வைகுவான்-1876
போர் வலான் - 1879
ஏறு சேவகன் - 1880
அஞ்சனக் குன்றம் அன்ன அழகன் - 1890
தருமத்திற்கு உறுதி பார்ப்பான் - 1894
அந்தணனோடு எல்லாம் ஈன்றவன் - 1901
அருள் இருக்கும் பெருந் தாமரைக் கண் கரு முகில்- 1918
தக்கான் - 1923
மையோ, மரகதமோ, மறிகடலோ, மழை முகிலோ ஐயோ, இவ் வடிவு!'என்பது ஒர் அழியா அழகு உடையான் - 1926
விடை அன்னது ஒர் நடையான் - 1927
கண்ணன் - 1965
சிங்கஏறு அனைய வீரன் - 1968
கார் குலாம் நிறத்தவன் - 1969
கோதை வில் குரிசில், கருணையின் மலர்ந்த கண்ணன் - 1970
அஞ்சன நாயிறு அன்ன ஐயன் - 1977
நாமத் தோள் முதற்கு அமைந்த வில்லான் - 1978
அகம் நிறை அருள் மிக்கான், பகலவன் அனையான் - 1987
பவ நோயின் மருத்துவன் அனையான் - 2018
நினையும் தேவர்க்கும் நமக்கும் ஒத்து, ஒரு நெறி நின்ற அனகன், ஆம் கணன், ஆயிரம் பெயருடைய அமலன் - 2046
மனையில் மெய் என்னும் மா தவம் புரிந்தவன் மைந்தன் - 2082
அறிவை நோக்கினான் - 2086
தவத்தின் எய்தினான் - 2088
இலை கொள் பூண் இளங்கோன் எம்பிரான் - 2104
முதலவன் முதலிய முந்தையோர் பழங் கதையையும் புதுக்கிய தலைவன், கண்ணுடைய நுதலவன் சிலை விலின் நோன்மை நூறிய புதல்வன் - 2151
எந்தையும், யாயும், எம் பிரானும் எம் முனும், அந்தம் இல் பெருங் குணத்து இராமன் - 2159
ஓதாநின்ற தொல் குல மன்னன் - 2181
வில் ஆர் தோளான் - 2183
படித்தலம் காவலன் - 2192
இந் நகர் முறைமை வேந்தன் - 2264
காசையின் கரியவன் - 2270
வில் அணைத்து உயர்ந்த தோள் வீரன் - 2301
துப்புடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணல் - 2308
நின்ற கொடைக் கை என் அன்பன் - 2323
அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன் - 2344
யாவர்க்கும் தொழு குலம் ஆம் இராமன் - 2369
கருணை ஆர்கலி - 2370
இறைவன் - 2378
அரம் சுட அழல் நிமிர் அலங்கல் வேலினன் - 2415
முழுது உணர் சிந்தையான் - 2423
கார்ப் பொரு மேனி அக் கண்ணன் - 2424
நியாயம் அத்தனைக்கும் ஓர் நிலயம் ஆயினான் - 2429
குவவுத் தோள் கோளரி - 2441
சீலமும் தருமமும் சிதைவு இல் செய்கையான் - 2447
எண் தகு குணத்தினான் - 2451
ஏந்தல் - 2454
ஒக்க நின்று உயிர்தொறும் உணர்வு நல்குவான் - 2455
தருமம் நோக்கிய தோன்றல் - 2463
முந்தை நான்முகத்தவற்கும் முந்தையான் - 2464
படம் செய் நாகணைப் பள்ளி நீங்கினான் - 2468
முற்ற நோக்கினான் - 2478
ஒள்ளியோன் - 2492
ஏத்த அரும் பெருங் குணத்து இராமன் - 2505
அன்பினன் - 2508
தன் புகழ் தன்னினும் பெரிய தன்மையான் - 2508
சித்திரக் குனி சிலைக் குமரன் - 2517
காளை மைந்தன் - 2536
இலை கொள் வேல் அடல் இராமன், எழு மேக ஒருவன் - 2539
அஞ்சனக் கிரி அனான் - 2540
ஓம் அ ராமரை, ஒருங்கும் உணர்வோர் உணர்வுறும் நாமர் ஆம் அவரை, நல் அறம் நிறுத்த நணுகித் தாம் அரா-அணை துறந்து தரை நின்றவன் - 2546
அன்னையே அனைய அன்பின் அறவோன் - 2555
ஊழி முதல்வன் - 2556
மீளி மொய்ம்பினன் - 2558
நண்பன் - 2562
தருமத்தின் தனி மூர்த்தி - 2568
கள்ள மாய வாழ்வு எலாம் விள்ள, ஞானம் வீசு தாள் வள்ளல் - 2578
தூண்ட நின்ற தொன்மைதான் வேண்ட நின்ற வேத நூல் பூண்ட நின் பொலம் கொள் தாள் - 2583

கை கொள் கால வேலி - 2586
செவ் வேலவன் - 2588
ஆன்ஏறு, ஆள் அரிஏறு - 2609
கரு ஞாயிறு, அரு நான்மறையின் கனி - 2610
ஆண் நாதன், அந்தணர் நாயகன் - 2611
வானவர் தலைவன் - 2619
வரி சிலை உழவன் - 2624
இனியவர் இன்னலின் இரங்கும் நெஞ்சினன் - 2631
இருண்ட மேகத்தின் கொழுந்து என நின்ற அக் குரிசில் வீரன் - 2639
வையகம் காவலன் மதலை - 2641
உருளுடை நேமியால் உலகை ஓம்பிய பொருளுடை மன்னவன் புதல்வன் - 2646
பகலவன் குல மைந்தன் - 2647
உயர் மன்னர் மன்னவன் மைந்தன் - 2655
செருக்கு இல் சிந்தையன் - 2658
உவமை நீங்கிய தோன்றல் - 2661
மாண்ட வரதன் - 2666
வெந் திறல் அரக்கர் விட வேர் முதல் அறுப்பான் வந்தனன் மருத்துவன் - 2674
வான மழை - 2675
அருட்கு அரசு - 2679
ஆழி உழவன் புதல்வன் - 2683
மேக நிற வண்ணன் - 2689
வனை கழல் வரி சிலை மதுகை மைந்தன் - 2700
தாமரைச் செங் கண் இத் தடக் கை வீரன் - 2702
தயரத ராமன் - 3056
இனிய சிந்தை இராமன் - 3061
மீனுடை நெடுங் கொடியினோன் அனையவன் - 3116
வந்தனை முனித்தலைவர்பால் உடையான்; வானத்து இந்துவின் முகத்தன் - 3119
விற் கலையன், வேதம் உறை நாவன் - 3120
தராவலய நேமி உழவன், தயரதப் பேர்ப் பராவ அரு நலத்து ஒருவன், மைந்தர் பழி இல்லான் - 3123
எல் ஒன்று கமலச் செங் கண் இராமன் - 3130
யாவர்க்கும் எழுத ஒணாத தன்மையன் - 3133
இராமன் உலகு ஈன்றான் - 3249
போர் வில்லி - 3253
வெற்றிச் சிலை வீரன் - 3284
அஞ்சனக் குன்றம் அன்னான் - 3292
அழகன், கொற்றவன் மைந்தன் - 3297
தேவரை இடுக்கன் தீர்ப்பான் - 3299
சதுமுகன் தாதை - 3301
புரவலன் - 3304
சிந்துரப் பவளச் செவ் வாய் முறுவலன், சிகரச் செவ்விச் சுந்தரத் தோளினன் - 3306
சங்கு அடுத்த தனிக் கடல் மேனியன் - 3319
கார் எனக் கரிய அக் கமலக் கண்ணன் - 3325
பண்ணவன் - 3329
பெருமகன் - 3331
தயரதன் தொல் குலத் தனையன் - 3355
அறம் தரு வள்ளல் - 3372
வாள் அரி வள்ளல் - 3375
கவினும் வெஞ் சிலைக் கை வென்றிக் காகுத்தன் - 3385
உலையா வலியர் - 3393
செஞ் சேவகனார் - 3394
வில்லாளன் - 3414
உண்மையினோன் - 3417
வான் ஆள்பவன் மைந்தன் - 3418
தழல்வண்ணன் தடக் கை வில்லைத் தோளால் இறுத்தான் - 3432
பொற்பு அழியா வலம் பொருந்தும் போர்வலான் - 3450
பஞ்சு அணை பாம்பணை ஆகப் பள்ளி சேர் அஞ்சனவண்ணனே இராமன் - 3457
புண்டரீகத் தடங் காடு பூத்த ஒரு கொண்டல் வந்து இழிந்தன கோலத்தான் - 3464
நீல மேனி அந் நெடியவன் - 3477
மற்கு நோக்கிய திரள் புயத்து அண்ணல் - 3481
திருவின் நாயகன் - 3493
தன் நேர் இலாதான் - 3502
பகழி வில் வலாய் - 3513
புள்ளிற்கும், புலன் இல் பேய்க்கும், தாய் அன்ன புலவு வேலோன் - 3514
துணிந்த நெஞ்சினன் - 3522
செவ்வியோன் - 3523
வெவ் வலி வீரன் - 3523
நாள்செய்த கமலத்து அண்ணல் - 3524
அம்பு இழை வரி வில் செங் கை ஐயன் - 3526
புயல் நிற வண்ணன் - 3528
வேதங்கள் காண்கிலாமை, வெளிநின்றே மறையும் வீரன் - 3530
ஆடவர்க்கு அரசன் - 3531
யாண்டும் வென்றியான் - 3533
நிரம்பும் நல் நுதல் மந்திர நெறியின் வல்லான் - 3637
தே மரு தெரியல் வீரன் - 3544
விமலன் - 3565

நீலமான நிறத்தன் - 3567
புகழோன் - 3572
ஆடும் களி மா மத யானை - 3615
கரியவன் - 3620
தன் அலாது ஒரு பொருள் தனக்கு மேல் இலான் - 3626
நுணங்கு கேள்வியான் - 3661
ஆண்டான் - 3668
பேர் இசையாளன் - 3571
ஆளும் நாயகன் - 3680
விரிஞ்சனே முதலினர் யார்க்கும் கண்ணில் நின்றவன் இவன், எண் இல் அன்னவன் குணங்கள் - 3681
நெறி நின்றார் நேர் நின்றான் - 3691
முன் இவற்கு இது என்று எண்ணல் ஆவது ஓர் மூலம் இல்லான் - 3700
கேள்வியால் செவிகள் முற்றும் தோட்டவர் உணர்வின் உண்ணும் அமுதத்தின் சுவையாய் நின்றான் - 3705
திருமுகம் - 3715
கருணையோன் - 3764
மஞ்சு எனத் திரண்ட கோல மேனியன் - 3765
பதுமச் செங்கண் ஆழியான் - 3780
புண்டரீகக் கண் ஆழிப் புரவலன் - 3782
தாள் படாக் கமலம் அன்ன தடங் கணான் - 3783
நல் உறுப்பு அமையும் நம்பியரில் முன்னவன் - 3792
அதிசயத் திறலினான் - 3795
புண்டரிகங்கள் பூத்துப் புயல் தழீஇப் பொலிந்த திங்கள் மண்டலம் உதயம் செய்த மரகதக் கிரி அனான் - 3802
நொடிவு அருங் கமலத்த அண்ணல், ஆக்கிய உலகம் எல்லாம் அன்றுதொட்டு இன்றுகாறும், பாக்கியம் புரிந்த எல்லாம் குவிந்து, இரு படிவம் ஆகி, மேக்கு உயர் தடந்தோள் பெற்று, வீரர் ஆய் விளைந்த - 3803
அவா முதல் அறுத்த சிந்தை அனகன் - 3806
நாயகம் உலகுக்கு எல்லாம் என்னல் ஆம் மிக்கோன் - 3808
தூண் திரள் தடந் தோள் மைந்தன் - 3814
யாரினும் புனிதன் - 3819
அடலின் வெற்றியான் - 3830
ஆயிரம் பெயருடைய அமரர்க்கும் அமரன் - 3853
சங்கு சக்கரக் குறி உள தடக் கையில், தாளில், செங் கண் விற் கரத்து இராமன், அத் திரு நெடு மாலே - 3859
வானவர்க்கு இறைவன் - 3866
அரிந்தமன் - 3878
ஆளுடை வில்லி - 3879
அறத்தினுக்கு ஆர் உயிர்த் துணைவன் - 3882
தடம் பெருங் கண்ணன் - 3910
சுருதி நூல் வலாய் - 3912
திரு உறை மார்பன் - 3919
நெடுங் குன்று இவர் தோளினான் - 3928
சாது ஆம், என்ற அத் தனுவின் செல்வன் - 3934
உழைத்த வல் இரு வினைக்கு ஊறு காண்கிலாது, அழைத்து அயர் உலகினுக்கு அறத்தின் ஆறு எலாம் இழைத்தவன் - 3965
இருமையும் நோக்குறும் இயல்பினான், அருமையின் நின்று, உயிர் அளிக்கும் ஆறுடைத் தருமம் - 3966
தன் துணை ஒருவரும் தன்னில் வேறு இலாதவன் -3968
தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர் இம்பரின் இலது என எண்ணி ஏய்ந்தவன் அருளின் ஆழியான் - 3969
வீரத் திறலோன் - 3979
மும்மை சால் உலகுக்கு எல்லாம் மூல மந்திரம் - 4013
முற்றும் தம்மையே தமர்க்கு நல்கும் தனிப் பெரும் பதம், தானே இம்மையே, எழுமை நோய்க்கும் மருந்து - 4013
மறை திறம்பாத வாய்மை மன்னர்க்கு முன்னர் சொல்லும் துறை திறம்பாமல் காக்கத் தோன்றினான் - 4016
வாய்மையும் மரபும் காத்து, மன் உயிர் துறந்த வள்ளல், தூயவன் மைந்தன், தாய்மையும் அன்றி, நட்பும் தருமமும் தழுவி நின்றவன் - 4018
ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தான் - 4020
கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன் - 4023
அறை கழல் வீரர் ஆயவர் புரிவது ஆண்மைத் துறை எனல் ஆயிற்று, தொன்மையின் நல் நூற்கு எல்லாம் இறைவன், முனிவு இலாதான் - 4024
விறல் வீரன் - 4031
பேர் எழில் தழைத்த வீரன் - 4045
நிணமும் நெய்யும் இணங்கிய நேமியான் - 4047
மாண்ட செவ்வியோன் - 4058
அறன் திறன் அழியச் செய்யான் புவியுடை அண்ணல் - 4060
தாய் என உயிர்க்கு நல்கி, தருமமும், தகவும் சால்பும் நீ என நின்ற நம்பி - 4061
அரந்தை வெம் பிறவி நோய்க்கும் அரு மருந்து அனைய ஐயன் - 4062
வானினும் உயர்ந்த மானக் கொற்றவன் - 4067
ஓவிய உருவம் - 4068
ஆழி, வானினும் உயர்ந்த தோளான் - 4071

மறைகளும், முனிவர் யாரும், மலர்மிசை அயனும், மற்றைத் துறைகளின் முடிவும், சொல்லும் துணி பொருள், துணி வில் தூக்கி, அறை கழல் இராமன் ஆகி, அற நெறி நிறுத்த வந்தவன் - 4073
திரு மறு மார்பன் - 4076
பதவியை எற்கும் நல்கும் பண்ணவன் - 4077
பேர் எழிலாளன், மன்னவர்க்கு அரசன் மைந்தன் - 4079
தன்னின் மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப் பொருள், மால் தரும் பிறவி நோய்க்கு மருந்து - 4089
மன்னுயிர்க்கு உறுதி செய்வான் - 4090
கொற்றப் பொன் திணி வயிரப் பைம் பூண் புரவலன் - 4091
பொய் உடை உள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவன் - 4092
ஆல் இலைப் பள்ளியான் - 4095
அரு மருந்து அற்றம் அகற்றும் வில்லியான் - 4110
அருட்கு நாயகன் - 4116
அருள் நின்ற அண்ணல் - 4117
நல் நெறிக்கு இறையோன் - 4119
முற்றிய சொல்லின் எல்லையான் - 4120
சுந்தரன் - 4131
வான் உயர் தோற்றத்து அன்னான் - 4139
மெய்த் தலை நின்ற வீரன் - 4142
ஊழி நாயகன் - 4145
ஞான நாயகன் - 4191
சாலும் நூல் உணர் கேள்வி வீரன் - 4212
அறிஞன் - 4214
தொல்லையோன் - 4217
வித்தகன் - 4231
வான் உறப் பிறங்கிய வைரத் தோளன் - 4233
சுந்தரத் தனு வலாய் - 4249
மன்னவன் தலைமகன் - 4258
முன்னை வீரன் - 4269
புகழ்ப் பூணினான் - 4276
(இலக்குவன்) தன் துணைத் தமையன் - 4283
திருமகள் தலைமகன் - 4375
மாறு இல் கொற்றவன் - 4432
வினையின் கூற்றுவன் - 4434
தன் அலது ஒப்பு இலன் என நின்ற இராமன் - 4440
நீண்ட நூல்வலான் - 4446
நீண்டவன் - 4478
புனையும் வார் கழலினான் - 4519
வில்லி - 4661
திண் தேரான் - 4688
தெளித்த ஆடத் தகு தீர்த்தன் - 4690
அறம் அன்னான் - 4692
நீல மேனியன் - 4696
தெருண்டான், வானவர் கோன் - 4698
சுடர் விற் கை ஆரியன் - 4712
பார் நிழல் பரப்பும் பொன் தேர் வெயில் கதிர்ப் பரிதி மைந்தன் - 4737
மறைகளுக்கு இறுதி ஆவார் - 4740
மனுவின் வந்த திறத் தகை இராமன் - 4769
ஒருவு அருங் குணத்து வள்ளல் - 4778
விண் பாலவர் நாயகன், வண்மை நீங்கா நெடு மரபின் வந்தவன் - 4808
இகழ்வு அரும் பெருங் குணத்து இராமன் - 4894
யாரும், யாவையும், எல்லா உலகத்தும், தொழும் தாள் வீரன் - 4926
புண்டரீக நயனத்தான் - 5061
எள் உறையும் ஒழியாமல் யாண்டையுளும் உளனாய், தன் உள் உறையும் ஒருவன் - 5068
துப்பினால் செய்த கையொடு கால் பெற்ற துளி மஞ்சு ஒப்பினான் - 5076
சுருதி நாயகன் - 5077
அறம் தரு சிந்தை என் ஆவி நாயகன் - 5102
கமலக் கண்ணன் - 5133
அரவணைத் துயிலின் நீங்கிய தேவன் - 5134
புனை கழல் இராகவன், வனை கழல் இராமன் - 5165
கரு மேகம், நெடுங் கடல், கா அனையான் - 5230
வில்லாளன் - 5231
நிழல் வீரை அனான் - 5232
நாராயணன், தனி நாயகன் - 5233
அறை இருங் கழலவன், புனிதன் - 5238
உயிர்க்கு இறைவன் - 5241
கருந் தனி முகில் - 5246
அண்டர் நாயகன் - 5249
வென்றியான் - 5261
படி எடுத்து உரைத்துக் காட்டும் படித்து அன்று, படிவம் - 5265
மும்மை ஆம் உலகம் தந்த முதல்வற்கும் முதல்வன் - 5298
கைக் குரல் வரி வில்லான் - 5302
புண்டரிகக் கணான் - 5303
கொண்டல் ஒப்பான் - 5312
உயர் போதகமும் வேதமும் காண்கிலாதான் - 5317
துணி கொண்டு இலங்கும் சுடர் வேலவன் - 5318
எழுவினும் எழில் இலங்கு இராமன் தோள் - 5334

ஆழி நெடுங் கை ஆண்தகை - 5337
கண்ணன் - 5416
கோமகன் - 5420
அந்தம் இல் சேவகன் - 5426
படுத்தான் வானவர் பற்றாரை , தடுத்தான் தீவினை - 5395
நல்வினை எந் நாளும் கொடுத்தான் - 5395
விண் உறு கலுழன்மேல் விளங்கும் விண்டுவின் கண்ணன் - 5416
தாயவள் சொல் மாறாது தவம் புரிந்து அறத்தில் நின்ற நாயகன் - 5731
ஆண்ட நாயகன் - 5778
சிறிய தாய் சொன்ன திரு மொழி சென்னியில் சூடி நெறியில் நின்ற (தன்) நாயகன் - 5782
அம் கண் நாயகன் - 5868
அல்லி அம் கமலமே அனைய செங் கண் ஓர் வில்லி - 5878
'அனையவன் யார்? என, அறிதியாதியேல், முனைவரும், அமரரும், மூவர் தேவரும், எனையவர் அனையவர், யாவர், யாவையும், நினைவு அரும் இருவினை முடிக்க, நின்றுளோன்; (அனுமன்) - 5879
எல்லைப் பூவலயத்தை ஆண்ட புரவலன் - 5881
மெய் அறமூர்த்தி வில்லோன் - 5882
கடை இலா மறையின்கண்ணும் ஆரணம் காட்ட மாட்டா அறிவினுக்கு அறிவும் அன்னோன் - 5883
மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய காலமும், கணக்கும், நீத்த காரணன் கைவில் ஏந்தி, சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு, -அயோத்தி வந்தான் - 5884
அறம் தலைநிறுத்தி, வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித் திறம் தெரிந்து, உலகம் பூணச் செந் நெறி செலுத்தி, தீயோர் இறந்து உக நூறி, தக்கோர் இடர் துடைத்து, ஏக, ஈண்டு பிறந்தனன்-தன்-பொன்-பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பான் - 5885
அஞ்சன மேனியான் - 5888
ஓவியர்க்கு எழுத ஒண்ணா உருவத்தன் - 5890
மறை பிழையாதவன் - 5907
வீரர் ஆய் மெய்மை ஒர்வார் - 5920
தாயே அனைய கருணையான் - 5931
பொன் பொழி தடக் கை அப் பொரு இல் வீரன் அன்புறு சிந்தையன் - 6027
ஏந்தல் - 6028
குறிப்பினால் உணரும் கொள்கையான் - 6029
தூண் திரண்டனைய தோளான் - 6055
மாயன் - 6062
சிலை மேற்கொண்ட திரு நெடுந் தோளன் - 6065
தன்னின் முன்னிய பொருள் இலா ஒரு தனித் தலைவன் - 6181
தாட்சி இல் பொருள் தரும் தரும மூர்த்தி - 6382
எல்லை இல் பெருங் குணத்து இராமன் - 6383
புன் புறப் பிறவியின் பகைஞன் - 6384
தொல்லை யாவர்க்கும் நாயகன் - 6386
பாருடைக் கொற்றவன் - 6401
பகலவன் வழி முதல் பாரின்நாயகன் - 6406
தருமமும் ஞானமும் தவமும் வேலியாய், கருணை அம் கோயிலுள் இருந்த கண்ணன் - 6411
புண்டரீகத் தடம் புரையும் பூட்சியான் - 6412
அருளின் வேலை - 6415
தட மலர்க் கண்ணன் - 6420
நனி முதல் வேதங்கள் நான்கும், நாம நூல் மனு முதல் யாவையும் வரம்பு கண்டவன், விதிக்கும் மேல் உளான் (சுக்கிரீவன்) - 6421
மேலவன் - 6439
அறிவின் மேல் உளான் - 6447
வண்டு உளர் அலங்கலாய் - 6451
தேவர்க்கும், தானவர்க்கும், திசைமுகனே முதலாய தேவ தேவர் மூவர்க்கும், முடிப்ப அரிய காரியத்தை முற்றுவிப்பான் மூண்டு நின்றாய், கொற்ற வேந்தன். . . . - 6464
வேத நூல் எனத் தகைய திருவுளத்தன் - 6466
தெய்வ நாயகன் - 6482
துறவியின் உறவு பூண்ட தூயவர் துணைவன் - 6490
ஒருத்தரை நலனும் தீங்கும் தேரினும், உயிரின் ஒம்பும், கருத்தினன் அன்றே, தன்னைக் கழல் அடைந்தோரை - 6491
திரள் மரம் ஏழும் தீய எய்தவன் - 6492
நாற் கடல் உடுத்த பாரின் நாயகன் புதல்வன் நாமப் பாற்கடல் சுற்ற, விற்கை வடவரை பாங்கு நிற்ப கார்க் கடல் கமலம் பூத்தது எனப் பொலிவான் - 6493
வெள்ளி வெண் கடலுள் மேல்நாள் விண்ணவர் தொழுது வேண்ட, பள்ளி தீர்ந்து இருந்தான் என்னப் பொலிதரு பண்பினான் - 6494
வாணுதல் சீதை கண்ணின் மணி - 6495
சுந்தரத் தோளினான் - 6496
கற்றை வெண் நிலவு நீக்கி, கருணைஆம் அமிழ்தம் காலும் முற்றுறு கலையிற்று ஆய முழுமதி முகத்தினான், பெற்றவன் அளித்த மோலி இளையவன் பெற, தான் பெற்ற சிற்றவை பணித்த மோலி பொலிகின்ற சென்னியான் - 6497

செங் கண் அஞ்சன மலை, கார் முகில் கமலம் பூத்தது - 6498

பெருந்தவம் இயற்றினோர்க்கும் பேர்வு அரும் பிறவி நோய்க்கு மருந்து என் நின்றான் - 6500

மரங்களும் உருக நோக்கும் காதலன், கருணை வள்ளல் - 6501

செழுந் தனி மலரோன் - 6511

சில் இல் கோதையை நினைந்து தேம்பிய வில்லி பாழி மாக் கடல் கடைந்துளான் உரத்தோடும் கரனொடும் உருவ ஒங்கிய மரத்தொடும் தொலைத்தவன் - 6525

முழுது உணர் புலவன், முளரிக் கண்ணினான், உரவோன் - 6531

கருணைஅம் கடல் - 6593

ஊழியில் சினவும் பருதி மண்டிலம் எனப் பொலி முகத்தினன் - 6603

வைய நாயகன் - 6615

தெய்வ நாயகன் - 6620

இரக்கம் வந்து எதிர்ந்த காலத்து உலகு எலாம் ஈன்று மீளக் கரக்கும் நாயகன் - 6650

உற்று ஒரு தனியே, தானே தன்கணே, உலகம் எல்லாம் பெற்றவன் - 6651

நவை அறும் உலகிற்கு எல்லாம் நாயகன் - 6655

சுருதி மூர்த்தி - 6656

ஆயிர நாமத்து ஐயா (வருணன்) - 6661

உலகத்து நலிவு தீர குன்று என உயர்ந்த தோளான் - 6665

நேடி நூல் தெரிந்துளோர் தம் உணர்விற்கும் நிமிர நின்றான் - 6667

தவத்தின் மிக்கோன் - 6671

கருணைக் கொண்டல் - 6708

ஞான நாதன் - 6742

வைய நாதன் - 6745

அண்ட முதல்வன் - 6747

ஊழி முதல் நாயகன் - 6749

வீரப் பொன் திரள் புயக் கரு நிறக் களிறு - 6750

ஓம நெறி வாணர் மறை வாய்மை ஒரு தானே ஆம் அரசன் மைந்தர் - 6756

மன்னுயிர்க்கு எல்லாம் தாயினும் அன்பினன் - 6762

பங்கய நயனத்து அண்ணல் - 6764

வயிரச் செங்கைப் பொன் நெடுந் திரள் தோள் ஐயன் - 6767

பாம்பு இழைப் பள்ளி வள்ளல் - 6772

அகன் உறப் பொலிந்த வள்ளல் - 6773

புன்கணார் புன்கண் நீக்கும் புரவலன் - 6776

சுடர்போல் ஒளிர் வெற்றி வீரன் - 6809

வாய்மைய வானவன் - 6811

பொரு திரைப் புணரி வேலித் தேசத்துக்கு இறைவன் ஆன தெசரதன் சிறுவனாக, மாசு அற்ற சோதி வெள்ளத்து உச்சியின் வரம்பில் தோன்றும் ஈசற்கும் ஈசன் - 6818

தருமத்தின் தலைவர்தாமே மானுட வடிவம் கொண்டார் - 6824

நம் பரத்து அடங்கும் மெய்யன் - 6826

மன்னவர்க்கு அரசன் - 6835

இரு திறல் வேந்தர் தாங்கும் இணை நெடுங் கமலக்கையான், அரிஅரசு அனையன் - 6837

கரு ஞாயிறு ஒத்தான் - 6838

விமலத் திண் சிலையன், அமலத் திண் கரமும் காலும் வதனமும் கண்ணும் ஆன, கமலத் திண்காடு பூத்த காள மா மேகம் ஒத்தான் - 6839

மல் குவடு அனைய திண் தோள் மானவன் - 6840

ஆரணத்தை, அரிய மறை தேடும் காரணத்தை - 6876

கரிய கொண்டல் - 6900

எழிலி வண்ணன் - 6920

கருணையின் நிலையம், ஆழித் துயில் கடந்து அயோத்தி வந்தவன் - 6975

பூத நாயகன், நீர் சூழ்ந்த புவிக்கு நாயகன், வேறு உள்ள தெய்வ நாயகன், வேத நாயகன், மேல் நின்ற விதிக்கு நாயகன் - 6994

உலக நாதன் - 6995

இடை உரு கருமத்தின் எல்லை கண்டவர் கடை உரு நோக்கினின் காணும் காட்சியான் - 7125

மால் கடல் வண்ணன் - 7133

உலகம் செய்த பாக்கியம் அனைய வீரன் - 7162

இகல் கரன் படை படுத்த அக் கரியோன் - 7220

இலை கொள் தண் துழாய் இலங்கு தோள் இராமன் - 7227

தொகை ஒருங்கிய ஞானம் ஒன்று எவரினும் தூயான் - 7229

கையும் கால்களும் நயனமும் கமலமே அனைய பொய் இலாதவன் - 7230

புங்கவன் - 7231

வீரன் மேலைத் தன் பதமே ஒத்தான் - 7237

மூரி நீர் அண்டம் எல்லாம் வயிற்றிடை முன்னம் கொண்ட ஆரியன் - 7238

சுருதி ஆளும் நாயகன் - 7244

முளரி அம் கண்ணன் - 7256

கோசல நாடுடை வள்ளல் - 7271

தாபதன் - 7294

பெரு வலி இராமன் - 7352

ஏந்து எழில் இராமன் - 7380

ஞாலம் உண்டவன் - 7393
அறப் பெருந் துணைவர் - 7404
அறம் என நின்ற நம்பன் - 7405
ஏற்றிய வில்லோன் யார்க்கும் இறைவன் இராமன் - 7407
திருவுறை மார்பன் - 7409
இருள் உறு சிந்தையேற்கும் இன் அருள் சுரந்த வீரன் - 7410
மூவர்க்கும் தலைவர் ஆன மூர்த்தியார், அறத்தை முற்றும் காவற்குப் புகுந்து நின்றார் காகுத்த வேடம் காட்டி - 7421
வேத நாயகன் - 7424
கார்க் கோல மேனியான் - 7426
தும்பி அம் தொடையில் வீரன் - 7429
வேதியர் தேவன் - 7436
முத்தனார் - 7532
ஆயிரம் பெயரவன் - 7545
மழையின் மேனியான் - 7546
வதனம்,வாய்,கண்,கை, கால், எனப் புண்டரீகத் தடம் பூத்து, பொன் சிலை மண்டலம் தொடர்ந்து, மண் வயங்க வந்தது ஓர் கொண்டலின் பொலிதரு கோலத்தான் - 7550
அம்பு இயல் சிலையினான் - 7553
முற்றிய பொருட்கு எலாம் முடிவுளான் - 7561
வேந்தன் - 7564
ஆடவர்க்கு அரசன் - 7578
வில் வினை ஒருவன் - 7583
மாய மாக் கூத்தன் - 7584
ஊழியின் ஒருவன் - 7585
தனி நாதன் - 7593
வாசியும் மானமும் மறத்துறை வழுவாத கொற்ற நீதியும் குலமுதல் தருமமும் என்று இவை குடியாகப் பெற்றவன் - 7596
நெடுங் கொற்றவன் - 7612
தனு வல்லான் - 7616
கண் நின்ற சுந்தரப் பொன் தோளான் - 7623
அரசர் உருக்கொண்டு அமைந்த வேதியன் - 7625
என் ஆசையின் கனி (சீதை) - 7652
இரக்கம் அல்லால் தனக்கு உயிர் வேறு இன்றாகி, தாமரைக் கண்ணது ஆகி, கனக் கரு மேகம் ஒன்று கார்முகம் தாங்கி, ஆர்க்கும் மனக்கு இனிது ஆகி, நிற்கும் - 7655
தயரதன் சிறுவன் - 7657
புலவர் கோமான், மைத் திரு நிறத்தான் - 7686
கமலக் கண்ணன் - 7688
வயிரத் திண் தோள் ஆயிர நாமத்து ஆழி அரி - 7698
வேதம் முதல் நாயகன் - 7772
தொழுவார் தொழு தாள் அரி - 7779
நாரணன் - 7780
கோமான் - 7902
தாசரதி - 8001
தனி வள்ளலாம் மன் - 8076
எம்பிரான் - 8080
ஒப்பு ஆரும் இல்லான் - 8202
ஆயிர நாமத்து அண்ணல் - 8219
வானின் வெய்யவன் தன்னைச் சேர்ந்த நீல் நிற மேகம் ஒத்தான் - 8222
மெய்யே பிறந்தேயும் பிறந்திலாதான் - 8223
அளவையின் நிமிர நின்றான் - 8226
கேடு இலாதான் - 8227
பாவுண்ட கீர்த்தியான் - 8232
ஆழி அம் செல்வன் - 8236
தேன் விடு துளவத் தாராய் - 8238
இமையவர் இடுக்கண் தீர்ப்பான், தன் துணைத் தம்பிதன்மேல் துணைவர்மேல் தாழ்ந்த அன்பான் - 8242
பிறவியின் பகைஞன் - 8271
அறம் தரு சிந்தையின் ஐயன் - 8273
நீல நிறத்தான் - 8306
ஈசன் - 8330
அரக்கர் என்ற பேர் இருளினை இராமன் ஆம் இரவி துரக்க - 8357
ஞாலம் உடையான் - 8378
உலகு ஏழினொடு ஏழு பெயர்ந்து அளந்தான் - 8379
மீளா வினை நூறும் விடை - 8383
தண்டலை மருத வைப்பின் கங்கை நீர் தழுவும் நாட்டுக் கொண்டல் - 8416
இசையினுக்கு இசைந்த தோளான் - 8419
தேவுண்ட கீர்த்தி அண்ணல் - 8422
ஆழி மன்னன் - 8423
நூற்று இதழ்க் கமலக் கண்ணன் - 8427
தேவர் தம்பிரான் - 8431
முறுவல் வாள் முகத்தினன் - 8485
ஆழியை அகற்றித் தனு வலம் கொண்ட தாமரைக் கண்ணவன் - 8609
செங்கண் நாயகன் - 8624
அண்டன் - 8661
கரு ஆய் அளிக்கும் களைகண்ணே, திரு வாழ் மார்பன் - 8667

கனத்தின் நிறத்தான் - 8677
அயோத்தியர் தம் கோ - 8679
அருள் நாயகன் - 8682
கருணாகரன் - 8683
பண்ணவன், மறையின் தெளிவு - 8684
களிறு - 8685
பூணெலாம் ஆகி நின்ற எந்தன் பொரு சிலை மேகம் - 8701
புலவர் கோமான் - 8703
வேதத்தின் வேதம் அன்ன அரிந்தமன் - 8723
ஆதியான் - 8755
உத்தமன் - 8767
இருமையும் துடைப்பவன் - 8793
மூஉலகத்தவரும், முதலோரும் மேவின வில் தொழில் வீரன் இராமன் - 8864
கல்விக்கும் நிமிர்ந்த கீர்த்திக் காகுத்தன் - 8887
செஞ்சிலை உரவோன் - 8888
உலகுடை ஒருவன் - 8892
கற்பகம் அனைய வள்ளல் - 8896
வேதமும் காணா வள்ளல் - 8900
பொலங் கொண்டல் அனைய மேனிப் புரவலன் - 8946
அண்ணல் கரியான் - 8953
மூவகை உலகும் காக்கும் முதலவன் - 9011
மூவகை உலகும் ஏத்தும் முதல்வன், எவர்க்கும் மூத்த தேவர்தம் தேவன் - 9107
வேதியர் வணங்கற்பால இறைவன் இராமன் என்னும் நல் அற மூர்த்தி - 9166
தென்தலை ஆழி தொட்டோன் சேயருள் சிறுவன் - 9177
தனித்து ஒன்று இல்லான் - 9182
பூவை வண்ணத்தன் - 9301
மேகமே அனையான் - 9352
வீரியன் - 9366
அறத்தின் வாழ்வு - 9369
மறையவர் வலி - 9369
நாரஆளி, ஞால ஆளி, ஞான ஆளி, நாந்தகப் பார ஆளி, வீர ஆளி, ஏக ஆளி - 9391
செய்ய மள்ளர் கமலத்தோடு நெல் அறுக்கும் திரு நாடன் - 9398
ஊழி இறுதிக் கடுகு மாருதமும் ஒத்தனன் இராமன் - 9439
மூல முதலாய், இடையும் ஆய், இறுதி ஆய் எவையும் முற்றும் முயலும் காலம் எனல் ஆயினன் இராமன் - 9440
அறம் ஒக்கும் நெடியோன் - 9441
கோள் உழுவை - 9450
அற முதல்வன் - 9463
இவன் நெடு மாயக் கள்வன் - 9472
நல்லான் - 9492
இறுதிநாள் வந்து, கூட மண்டு நாள், மறித்தும் காட்ட, மன்னுயிர் அனைத்தும் வாரி உண்டவன் தானே ஆன தன் ஒரு மூர்த்தி ஒத்தான் - 9528
கடக் களிறு எனத் தகைய கண்ணன் - 9678
மன்னவர்தம் மன்னன் மகன் - 9694
மின் நகு வரி வில் செங்கை இராமன் - 9706
அம்புயம் அனைய கண்ணன் - 9712
தேவரில் மெய்யன் - 9733
ஆழி நாதன் - 9738
அறிவினின் அறிவான் நாயகன் - 9792
சிட்டர்தம் தனித் தேவன் - 9805
ஏந்தல் பல் மணி எறுழ் வலித் திரள் புயத்து இராமன் - 9806
இந்திரை கொழுநன் - 9822
கருப்புக் கார் மழை வண்ணன் - 9823
சிரத்தின் நான்மறை இறைஞ்சவும் தொடரவும் சேயோன் - 9825
தான் அறியாதே பிறந்தான் - 9833
அவ் வேத முதல் காரணன் - 9837
சிறக்கும் செல்வன் - 9854
உயிர்களின் முதலில் வைத்த ஒர் எழுத்தினன் - 9856
ஆண்ட வில்லி - 9862
அறிவின் தனி நாயகன் - 9863
ஆண்தகை வீரன் - 9868
இமையோர்களை உய் திறம் துணிந்தான், அறன் உன்னுவான் - 9874
வீர விற்கை இராமன் - 9879
நாரணன் படை நாயகன் - 9887
சுடரோன் மகன் - 9895
கார்க் குன்றம் அனையான் - 9900
காதலித்த உரு ஆகி, அறம் வளர்க்கும் கண்ணாளன் - 9903
திருவாளன் - 9904
ஓர் ஆசை ஒருவன் - 9922
இராமன்தான் யாவருக்கும் இறைவன் - 9924
வெற்றி வீரன் - 9950
திருக் கொள் மார்பன் - 9962
மறை தந்துளான் - 9963
தாயர் சொல் நோக்கினான் - 9964
ஆரியச் சூழி யானை - 9967

வேதியர் தேவன் - 9990

நீலக் குன்று அன தோளினான் - 9992

செங்கண் வேதநாயகன், கோது இலா தவன் - 10005

பச்சிலை வண்ணமும் பவள வாயும் ஆய்க் கைச் சிலை ஏந்தி நின்றவன் - 10008

ஆர்க்கு எலாம் கண்ணவன் - 10026

புனத் துழாய்க் கணவன் - 10035

சுருதி ஞானத்தின் கொழுந்து - 10037

கருணை உள்ளத்தான் - 10048

இணர்த் துழாய்த் தொங்கல் இராமன் - 10049

முன்பு பின்பு இரு புடை எனும் குணிப்பு அரு முறைமைத் தன் பெருந் தன்மை தான் தெரி மறைகளின் தலைகள், மன் பெரும் பரமார்த்தம் என்று உரைக்கின்ற மாற்றம், அன்ப! நின்னை அல்லால், மற்று இங்கு யாரையும் அறையா (பிரமன்) - 10052

முன்னை ஆதி ஆம் மூர்த்தி - 10063

வேத வேந்தன் - 10066

கங்கை நாடுடைக் கணவன் - 10072

உயர் குணத்தோய் - 10078

உம்பரும் உலகும் பரவும் மெய்யினுக்கு உயிர் அளித்து உறு புகழ் படைத்தோன் - 10083

கோட்டு வார் சிலைக் குரிசில் - 10084

அரந்தை வெம் பிறப்பு அறுக்கும் நாயகன் - 10086

இனிய சிந்தனை இராகவன் - 10096

ஈறு இலாப் புகழோன் - 10101

வையம் ஆளுடை நாயகன் - 10116

தெவ் அடும் சிலைக் கை வீரன் - 10122

மா மேரு விட்பு அகத்து உறை கோள் அரி எனப் பொலி வீரன் - 10133

ஞான நாதன் - 10137

சூரியன் மருமான் - 10138

முனிவர் வானவர் மூவுலகத்துளோர் யாவரும் துனி உழைத்திடத் துயர் தரு கொடு மனத் தொழிலோர் நனி மடிந்திட, அலகைகள் நாடகம் நடிப்ப, குனியும் வார் சிலைக் குரிசில் - 10139

மரகத மேனிச் செங்கண் வள்ளல் - 10142

அரக்கர் வேந்தன் இருபது என்று உரைக்கும் நீலக் குன்று உரைத்தனைய தோளும், குலவரைக் குவடும் ஏய்க்கும் என்று உரைத்தனைய மௌலித் தலை பத்தும் இறுத்த வீரன் - 10145

விரைசெறி கமலக்கண்ணன் - 10150

சேயோன் - 10152

இரவி குலத்து உளான் வாக்கில் பொய்யான் - 10157

எண்ணும் கீர்த்தி இராமன் - 10158

அரி - 10175

தாய் சொல் கேட்டலும், தந்தை சொல் கேட்டலும் பாசத்து அன்பினைப் பற்று அற நீக்கலும், ஈசற்கே கடன் - 10187

அண்டர் நாதன் - 10194

குன்று உறழ் வரி சிலைக் குரிசில் - 10211

தடங் கணான் - 10214

பாகின்ற கீர்த்தி அண்ணல் - 10219

வேலி மா மதில்கள் சூழும் இலங்கையில் வேட்டம் கொண்ட நீல மாமுகில் - 10237

வண்ணக் குனிசிலைக் குரிசில் - 10245

முழுது உணர் கேள்வி மேலோன் - 10250

அலர்ந்த தாமரைக் கண்ணன் - 10257

பொன் ஒளிர் மேருவின் பொதும்பில் புக்கது ஓர் மின் ஒளிர் மேகம் போல் வீரன் - 10259

சக்கரத்து அண்ணல் - 10262

எளிவரும் உயிர்க்கு எல்லாம் ஈன்ற தாய் எதிர்ந்தது ஒத்தான்; அளி வரும் மனத்தோர்க்கு எல்லாம் அரும் பத அமுதம் ஆனான்; ஒளி வரப்பிறந்தது ஒத்தான், உலகினுக்கு; ஒண்கணார்க்குத் தெளிவு அருங் களிப்பு நல்கும் தேம் பிழித் தேறல் ஒத்தான் - 10271

ஆவி அங்கு அவன் அல்லால் மற்று இன்மையால், அனையன்நீங்க, காவி அம் கழனி நாடும், நகரமும் கலந்து வாழும் மா இயல் ஒண்கணாரும், மைந்தரும், வள்ளல் எய்த, ஓவியம் உயிர் பெற்றென்ன ஓங்கினர், உணர்வு பெற்றார் - 10272

மாறு இலா வீரன் - 10287

குருதி கொப்பளிக்கும் வேலோன் - 10291

கருந் தட முகிலினார் - 10310

சந்திர கவிகை ஓங்கும் தயரத ராமன் - 10314

அவ்வியம் அவித்த சிந்தை அண்ணல் - 10316

பூண் உற்ற திரள் தோள் வீரன் - 10321

கடலின் வந்த தெள்ளிய திருவும், தெய்வப் பூமியும், சேரும் தோளான் - 10328

கரு முகிற்கு அரசு செந்தாமரை மலர்க் காடு பூத்து, ஓர் அரியணைப் பொலிந்தது என்ன, இருந்தனன், அயோத்தி வேந்தன் - 10333

பாம்பு அணை அமலன் - 10334

வருக்கமோடு அரக்கர் யாரும் மடிதர, வரி வில் கொண்ட திருக் கிளர் மார்பினான் - 10345

அங்கதம் இலாத கொற்றத்து அண்ணல் - 10349

வயங்கு சீரான் - 10352

உலகம் முந்து உதவினான் - 10354

சதுமுகத்தவனைத் தந்தான் - 10356
கிளர் மணி முழவுத் தோளான் - 10357
களன் அமர் கமல வேலிக் கோசலக் காவலோன் - 10358
நாகணைத் துயிலைத் தீர்ந்தான் - 10361
அலங்கல் வேல் மதுகை அண்ணல் - 10364
அம்பரத்து அனந்தர் நீங்கி, அயோத்தியில் வந்த வள்ளல் - 10368

இராவணன்

இராமகாதையின் எதிர்த்தலைவன். விச்சுரவசு - கேகசியின் புதல்வன். பத்துத் தலைகளும் இருபது கைகளுமுடைய அரக்கன். சிவபக்தன். கும்பகர்ணன், வீடணன், சூர்ப்பணகை ஆகியோர் உடன் பிறந்தவன். மயன் மகள் மண்டோதரி, தானிமாலி முதலான பல மனைவியர் உடையவன். அரக்கியர், இயக்கியர் எனப் பல குலத்தவரில் எண்ணற்றோரை மணந்தவன். இந்திரசித்து, அக்ககுமாரன், அதிகாயன் எனும் புதல்வர்களைப் பெற்றவன். மாலியவானின் பேரன். தாடகை, கரன், மாலி, சுபாகு முதலானோரின் உறவினன். சிவன் முதலான தேவர்களிடம் தவமிருந்து பெற்ற வரத்தால் மிகுந்த ஆணவம் கொண்டவன். அதன் காரணமாக இந்திரன் முதலான தேவர்கள் அனைவரையும் வென்று அடிமைப்படுத்தியவன். விண்ணவர் அனைவரும் இவன் இட்ட பணியைச் செய்யும் கொடுமைக்காளாயினர். அவர்கள் செல்வங்களைக் கொள்ளையடித்தவன். திசை யானைகளை வென்று அவற்றின் தந்தங்களைத் தன் மார்பில் பெற்றவன். அனைத்து உலகிலும் உள்ள அரக்கர்க்கெல்லாம் அரசனாக, குபேரனிடமிருந்து பெற்ற இலங்கையிலிருந்து அரசாண்டவன். எதிர்ப்பாரின்றித் தனியாட்சி செலுத்தியவன். அரக்கர் இவனால் நலமும் வளமும் பெற்றனர். பிறர் வாழ்விழந்தனர். இவன் நல்லாசியுடன், அரக்கர் பிறரை விருப்பம் போல் துன்புறுத்தி இன்புற்றனர்.

இவனின் வரம்பு மீறல்கள் காரணமாக, 'விருப்பமற்ற பெண்ணைத் தொடின் உடன் இறந்து படுவாய்' என்று பிரமனின் வசைமொழி பெற்றவன். திருமாலை மணம் செய வேண்டித் தவமிருந்த வேதவதியைத் தீண்டி அவளால் 'நானே உனக்கும் உன் குலத்திற்கும் எமன்' என்ற வசவுரை பெற்றவன். ஆணவத்தால் சிவனின் கயிலையைத் தூக்க முனைந்து துன்புற்றவன். தன் கை நரம்புகளால் இசைமீட்டிச் சிவனை மகிழ்வித்து அதிலிருந்து விடுபட்டவன். சிவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வாலியின் வாலில் விளையாடியவன். சீற்றமுற்ற வாலி அவ்வாலால் அவனைக் கட்டிப் போகுமிடமெல்லாம் இழுத்துச் சென்று துன்புறுத்தினான். இறுதியில் அவன் வலியறிந்து தன் நண்பனாக்கிக் கொண்டவன்.

தங்கை சூர்ப்பணகையின் ஆசைச் சொற்களில் மயங்கிச் சீதைபால் மயக்கமுற்றவன். பஞ்சவடி சென்று மாரீசனை மாயமானாக்கிச் சீதையிடம் அனுப்பினவன். மாயமானைப் பிடிக்க இராமனும், மாரீசனின் வஞ்சனையால் இலக்குவனும் பிரிய தனித்திருந்த சீதையை அவளிருந்த குடிலோடும் எடுத்துச் சென்றவன். வழியில் சடாயு தடுக்க அவனைக் கொன்றவன். சீதையை இலங்கை அசோக வனத்தில் அரக்கியர் காவலுக்கிடையே சிறை வைத்தவன்.

தன் வீரம், வீரச் செயல்கள், செல்வ வளம், தேவர்கள் ஏவல் செய்யும் பெருமை, எதிர்ப்பார் யாருமிலாமை போன்றவற்றாலும், கடுமையான சொற்களால் அச்சுறுத்தியும் சீதையின் மனத்தை மாற்ற முயன்று தோற்றவன். அரக்கியரைக் கொண்டு அச்சுறுத்தியும் மருத்துவனை மாய சனகனாக்கிச் சீதை முன் நிறுத்தியும் களத்தே வீழ்ந்து கிடந்த இராம - இலக்குவரைக் காட்டியும் அவளை அச்சுறுத்தி வதைத்தவன். எனினும் சீதையை அடையத் துணிந்த அவன் எண்ணம் பாழ்பட்டது.

இராம தூதனாக வந்து அசோகவனத்தையும், தன் மகன் அக்கனையும், பஞ்சசேனாபதியரையும் அழித்த அனுமன் வாலில் தீ வைக்க, அத்தீயால் இலங்கையை அவன் எரித்தான். வானவத் தச்சனைக் கொண்டு மீண்டும் இலங்கையைப் புதுப்பித்தவன். வானரப்படையுடன் இராமன் இலங்கையை நெருங்கியது அறிந்து மந்திராலோசனை நடத்தினவன். கும்பகர்ணன், வீடணன் அறிவுரைகளை ஏற்காது வீடணனை நாட்டை விட்டுத் துரத்தினவன். அவன் இராமனிடம் அடைக்கலம் புகுந்தான். அங்கதன் தூது வந்தபோதும் எதிர்த்துரைத்தவன். சுக்கிரீவனால் மகுடபங்கமுற்றவன்.

முதற்போரில் இராமனால் நிராயுதபாணி யாக்கப்பட்டு 'இன்று போய் நாளை வா' என அவமானப்பட்டவன். கும்பகர்ணன், அதிகாயன், படைத்தலைவர், இந்திரசித்து என ஒவ்வொரு வராகத் தன் சுற்றத்தைப் போரில் இழந்தவன். இவற்றிற்கெல்லாம் வீடணனே காரணம் என அவனைக் கொல்ல வேல் எறிந்தவன். அதனை இலக்குவன் தன் மார்பில் ஏற்றதால் அவன் பிழைத்தான். போர்க்களத்தில் அனுமனிடம் பெற்ற குத்தால் அவன் மார்பில் பதிந்திருந்த திசையானைத் தந்தங்கள் வெளியேறின. தன் மூலபலமும் அழிய இறுதியில் இராமனிடம் தோற்று மடிந்தவன்.

மகேந்திரனைக் கொண்டு செய்த மாயங்கள் முதலில் எண்ணியதை நிறைவேற்றிடினும் இறுதியில் தோல்வியையே அவனுக்குத் தந்தன. சீதை, மாலியவான், மாரீசன், கும்பகர்ணன், வீடணன் - இறுதியில் இந்திரசித்து எனப் பலர் பலவிதமாக அறிவுறுத்திய போதும் ஆணவத்தால் பிறன்மனை நயந்த தன் பிழையை உணர மறுத்தவன். உறவும் சுற்றமும் நட்பும் என அனைத்தையும் இழந்த பின் போரில் பின் வாங்குதல் வீரத்திற்கு இழுக்குத் தரும்; அது தகாது என்று தன் வீரம் காட்ட முனைந்தவன். மூலபலமும் மூழ்கி, நேருக்கு நேர் நிற்க வேண்டிய சூழல் ஏற்பட்ட பின்பே அவனின் அறிவுக் கண் திறந்தது.

சிவனோ? அல்லன்; நான்முகன் அல்லன்; திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய் வரம் எல்லாம் அடுகின்றான்;
தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன் அல்லன்;
இவனோதான் அவ் வேத முதல் காரணன்? என்றான்
- 9837

யாரேனும் தான் ஆகுக! யான் என் தனி ஆண்மை
பேரேன்; நின்றே வென்றி முடிப்பென்; புகழ்பெற்றேன்;
நேரே செல்லும் கொல்லும் எனில் தான் நிமிர்வென்றி,
வேரே நிற்கும்; மீள்கிலென் என்னா, விடலுற்றான்- 9838

என்று தன் வீரத்தை நிலை நாட்டினவன்.

குணங்கள் தீயோன், அறம் தலை நின்றிலாத அரக்கன், நஞ்சின் கொடியான், மதி இலா நிருதர் கோன், கண்டகன், அழிவினை எய்துவான் அறிவு நீங்கினான், தகவிலன், நரகன், வஞ்சகன், நீசன், பாதகன், நெஞ்சு பாழ்பட்டான், கீழ்மையான், பாவகாரி, அல் எலாம் திரண்டன்ன நிறத்தன், கூற்றின் தன்மையான், துன்மதி, மறம் தரு சிந்தையான், கள்வன், பொய்யன், பதகன், மூர்க்கன், புன்மகன், வெய்யவன், மத்தன், அறத்தைப் பொறை தீர்ப்பான் என்பன போன்றவற்றால் இராவணன் கொடுமையைக் கம்பர் வெளிப்படுத்துவார்.

இருபது கரம், தலை ஈர்-ஐந்து என்னும் அத் திரு இலி - 189

ஐ-இரு தலையினோன் - 196

இலங்கை அரசன் - 364

தலைகள் தோறும் முடியுடை அரக்கன் - 390

இன்னல் செய் இராவணன் - 1445

இலங்கையின் நிருதன் - 1565

எல் வான் சுடர் மாலை இராவணன் - 2599

நீல மா மணி நிற நிருதர் வேந்தன் - 2739

திக்கின் மா எலாம் தொலைத்து, வெள்ளிமலை எடுத்து, உலகம் மூன்றும் காவலோன் - 2770

செங்கண் வெவ் உரு அமைந்தோன் - 2771

உலகம் மூன்றிற்கு ஒங்கு ஒரு தலைவன் - 2784

தழல் எடுத்தான் மலை எடுத்த தனி மலை - 2832

ஊழியினும் சலியாத மூவர்க்கும், தானவர்க்கும், வானவர்க்கும், வலியன் - 2833

ஆர்த்து, ஆனைக்கு -அரசு உந்தி, அமரர் கணத் தொடும் அடர்ந்த போர்த் தானை இந்திரனைப் பொருது, அவனைப் போர் தொலைத்து, வேர்த்தான் - 2834

காற்றினையும், புனலினையும், கனலினையும், கடுங்காலக் கூற்றினையும், விண்ணினையும், கோளினையும், பணி கொண்டற்கு ஆற்றினை சிவன் தடக்கை வாள் கொண்டாய் (சூர்ப்பணகை) - 2835

நெருப்பு அடியில் பொடி சிதற, நிறைந்த மதத் திசை யானை மருப்பு ஒடிய, பொருப்பு இடிய, தோள் நிமிர்த்த வலியோன் - 2836

தேனுடை நறுந் தெரியல் தேவரையும் தெறும் ஆற்றல் தான் உடை இராவணன் - 2837

தெவ் உரை என்று ஓர் உலகும் இல்லாத சீற்றத்தான்; வெவ் இலை வேல் இராவணனாம், விண் உலகம் முதல் ஆக எவ் உலகும் உடையான் - 2848

தயமுகனார் - 2856

இரு கோளும் சிறை வைத்தான் - 2871

அலங்கல் வேல் இராவணன் - 3000

வென்றி மாதர் வலிய நெடும் புலவியினும் வணங்காத மகுட நிரை வயங்கு மன்னன் - 3069

வண்டு அலங்கு நுதல் திசைய வயக் களிற்றின் மருப்பு ஒடிய அடர்ந்த பொன்-தோள் - 3070

அளவு இல் ஆற்றலின் பொருந்திய இராவணன் - 3089

மூன்று உலகு உடையவன் - 3092

நெய்ந் நிலைய வேல் அரசன், நேருநரை இல்லான் - 3107

அங்கையின் அரன் கயிலை கொண்ட திறல் ஐயன் - 3109

மாகத் தோள் வீரன் - 3142

வள்ளல் - 3143

எயிலுடை இலங்கை நாதன் - 3151

திக்கயங்கள் எட்டும் வென்ற தோள் - 3156

இலங்கை வேந்தன் - 3164

நீலத்து ஆர் அரக்கன் மேனி - 3170

வெஞ் சினத்து அரக்கன், அரசன் - 3172

கருங் கழல் காலன் அஞ்சும் காவலன் - 3177

மதியாலே, தண் அம் தாமரையின் தனிப் பகைஞன் என்னும் தன்மை, ஒருதானே உணர்ந்தான் - 3179

நீலச் சிகரக் கிரி அன்னவன் - 3198

குணங்கள்-தீயோன் - 3200

நெய்ந் நின்ற கூர் வாளவன் - 3214

அற்ற கரத்தோடு, உன் தலை நீயே அனல் முன்னில் பற்றினை உய்த்தாய்; பற்பல காலம் பசி கூர உற்று, உயிர் உள்ளே தேய, உலந்தாய்; பினை அன்றோ பெற்றனை செல்வம்? (மாரீசன்) - 3245

திறத் திறனாலே, செய் தவம் முற்றித் திரு உற்றாய், மறத் திறனாலோ?....சொல் ஆய் மறை வல்லாய்! அறத் திறனாலே எய்தினை அன்றோ? (மாரீசன்) - 3246

தகவிலோன் - 3257

அரக்கர் பதி - 3263

வளை எயிற்று இராவணன் - 3338

தேவரும் மருள்தரத் தெரிந்த மேனியான் - 3342

ஆசை மேல் மூண்டு எழு சிந்தனை முறை இலோன் - 3351

கடுந்தொழில் அரக்கன் - 3353

இரக்கம் இல் அரக்கன் - 3387

உலகம் தாங்கும் மலையினும் வலிய தோளன் - 3388

தீயவன் - 3390

வாழ்க்கைநாள் வறிது வீழ்ப்பான் - 3398

மாண்பு இலான் - 3408

நிருதர்க்கு இறை - 3419

நரகன் - 3448

வஞ்சகன் - 3454

படை உடையான். - 3501

தலை பத்து உள்ளான் - 3524

அறம்தலை நின்றிலாத அரக்கன் - 3532

மின் நினைந்த விலங்கும் எயிற்றினான் - 3551

நஞ்சின் கொடியான் - 3605

மதி இலா நிருதர் கோன் - 3799

மிடல் இராவணன் - 3833

வெருவரச் செய்துள வெய்யவன் - 3913

இத் திசைகள் தாங்கும் கறையடிக்கு அழிவு செய்த கண்டகன் - 4084

வண்ண வில் கரதலத்து அரக்கன், வாளினன் - 4167

மழைக் கரு மின் எயிற்று அரக்கன் - 4232

களவு செய்தவன் - 4243

வள்ளல் தேவியை வஞ்சித்து வௌவிய கள்ள வாள் அரக்கன் - 4454

வேல் இராவணன் - 4536

இகல் இராவணன் - 4558

எழு சலத்தால், காம்பு அனைய தோளியை ஒளித்த படு கள்வன் - 4563

வெங் கோல் வஞ்சன் - 4687

கொலை வாள் அரக்கன் - 4688

புன் தொழில் அரக்கன் - 4705

பாதக அரக்கன் - 4706

நீசன் - 4707

அயில் எயிற்று அரக்கன் - 4751

அண்ணல் வாள் அரக்கன் - 4765

தடக்கை நால்-ஐந்து பத்துத் தலைகளும் உடையான் - 4768

மறத் தொழில் அரக்கன் - 4769

செங் கண் வாள் அரக்கன் - 4852

கயிலையை எடுத்தவன் - 4856

திண்மை நீங்காதவன் - 4880

அலங்கல் அயில் வஞ்சகன் - 4897

வெவ் வள அரக்கன் 4898

குணம் இலன் - 4964

போர் இராவணன் - 4976

ஆழி வெஞ் சினத்து அரக்கன் - 4981

தீயவன் - 5000

போர் இயற்கை இராவணன் - 5001

ஆணை அரக்கன் - 5006

பாதகன் - 5008

அம் கை நரம்பினால் நாடி, நால் பெரும் பண்ணும் நயப்பு உறப் பாடினான் - 5012

மகரிகை நெடு முடி அரக்கன் - 5026

எரியும் வெஞ் சினத்து இகல் அடு கொடுந் திறல் இராவணன் - 5027

மூன்று உலகிற்கும் நாயகன் - 5029

மால் பெருங்கடல் வதிந்ததே அனையது ஓர் வனப்பினன் - 5040

நெஞ்சு பாழ்பட்டான் - 5044

முழு வானவர் ஆய் உலகம் ஒரு மூன்றும் காக்கும் முதல் தேவர் மழு, வாள், நேமி, குலிசத்தின் வாய்மை துடைத்த மார்பினன் - 5050

கற்றைப் பூங் குழலாளைச் சிறை வைத்த கண்டகன் - 5057

குன்று அன்ன தோளவன் - 5059

எல் அரக்கும் அயில் நுதி வேல் இராவணன் - 5064

அடல் அரக்கன் - 5067

வாள் அரக்கன் - 5070

உலகு எலாம் ஒறுப்பான் - 5080

அண்ணல் அவ் இராவணன் - 5108

ஆண்தகை இராவணன் - 5110
மூவகை உலகையும் முறையின் நீக்கிய பாவி - 5134
ஏறுழ் வலி அரக்கர் ஏந்தல் - 5165
ஆசையால் உயிர் ஆசு அழிவான் - 5167
வெவ் விடத்தை அமிழ்து என வேண்டுவான் - 5169
பழி பார்க்கலான் - 5182
அங்கண் மாஞாலமும், விசும்பும், அஞ்சவாழ் வெங்கணான் - 5194
வையம் தந்த நான்முகன், மைந்தன் மகன் மைந்தன் - 5222
புன் தொழில் அரக்கன் - 5261
கயத் தொழில் அரக்கன் - 5309
இகல் அரக்கன் - 5352
கண்ட வாள் அரக்கன் - 5359
கீழ்மையான் - 5364
அரக்கன் - 5368
தாக்கு இகல் இராவணன் - 5404
வலத்தின் திண்திறல் அரக்கன் - 5432
அடல் இராவணன் - 5448
வெந் தொழில் அரக்கன் - 5481
அரி படு சீற்றத்தான் - 5484
தோட்டு அலர் இன மலர்த் தொங்கல் மோலியான் - 5548
பொன் திணிந்த தோள் இராவணன் - 5622
பல் தலை அரக்கன் - 5687
அயன் மகன் மகன் மகன் - 5715
தறுகணான் - 5724
திக்கய வலியும் மேல்நாள் திரிபுரம் தீயச் செற்ற முக்கணன் கைலையோடும் உலகு ஒரு மூன்றும் வென்றாய்(இந்திரசித்து) - 5727
மாறு இல் வெஞ்சினத்து இராவணன் - 5788
நீல் நிறத்து இராவணன் - 5827
குடை கெழு மன்னன் - 5829
தொல்லை நாள் மாதிரம் கடந்தவன் - 5830
உலகு ஒரு மூன்றையும் அருந் தவப் பயனால் அரசு ஆள்கின்றான் - 5841
வலம் கொள் தோளினான் மண் நின்று வான் உற எடுத்த, பொலம் கொள் மா மணி வெள்ளியங்குன்று - 5842
பாவகாரி - 5854
எண் திசைக் கிழவன் - 5859
கொல்லலாம் வலத்தனும் அல்லன்; கொற்றமும் வெல்லலாம் தரத்தனும் அல்லன். . . . அல் எலாம் திரண்டன நிறத்தன் - 5865
வென்றி சால் ஏதில் வாள் அரக்கன் - 5869
புவனம் எத்தனை அவை அனைத்தும் போர் கடந்தவன் - 5871
கூற்றின் தன்மையான் - 5873
வேரொடும் அமரர்தம் புகழ் விழுங்கினான் - 5877
துணர்த்த தாரவன் - 5894
வறிது வீழ்த்தனை வாழ்க்கையை; மன் அறம் சிறிதும் நோக்கலை; தீமை திருத்தினாய் (அனுமன்) - 5896
மா தவத்தால் வந்த தூய்மை, தூயவள்தன்வயின் தோன்றிய நோய்மையால் துடைக்கின்றனை; (அனுமன்) - 5899
வென்றி என்று ஒன்றுதான் அன்றி வேறு இலான் - 5911
அண்ணல் அரக்கன் - 5915
இந்திரன் கருமம் ஆற்றும் இறைவன் நீ - 5916
இலங்கைக்கோன் அவ் வானவர் பதி கொண்ட நாள் - 5981
யாவரும் தொடரா ஆழி வெஞ் சினத்து ஆண் தொழில் இராவணன் - 5983
ஆழித் தேரவன் - 5986
அண்டரை வென்றான் - 5989
மொய் கழல் மன்னன் - 6072
பொரு கழல் இராவணன் - 6074
அரம்பையர் கவரியோடு ஆடும் தாரினான் - 6076
கொற்ற ஆணையால் வண்டொடு காலையும் வரவு மாற்றினான் - 6078
வண்டு அமர் அலங்கலான் - 6088
செற்றநர், எதிர் எழும் தேவர், தானவர், கொற்றமும் வீரமும் வலியும் கூட்டு அற, முற்றி மூன்று உலகுக்கும் முதல்வன் - 6089
குலம் கெழு காவல் - 6090
வெள்ளிஅம் கிரியினை விடையின் பாகனோடு அள்ளி, விண் தொட எடுத்து, ஆர்த்த ஆற்றலான் - 6095
ஆயிரம் மறைப் பொருள் உணர்ந்து, அறிவு அமைந்தாய் தீயினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தாய் (கும்பகருணன்) - 6118
மீனுடை நெடுங் கடல் இலங்கை வேந்தன், தேனுடை அலங்கலான் - 6147
வரம்பு இல் ஆற்றலான் - 6150
நஞ்சின் வெய்யவன் - 6187
அழிவினை எய்துவான் அறிவு நீங்கினான் - 6372
வெந் தொழில் தீவினை பயந்த மேன்மையான், இலங்கையர் மன்னன் - 6399
துன்மதி - 6408
மறம் தரு சிந்தையான், மதியின் நீங்கினான் - 6409

களவு இல் வஞ்சனை இலங்கை காவலன் - 6413
முரண் புகு தீவினை முடித்த முன்னவன் - 6415
ஏந்து எழில் இராவணன் - 6418
வார்க்குறு வனை கழல் தம்முன் - 6427
முரணுடைக் கொடியோன் - 6471
பஞ்சு எனச் சிவக்கும் மென் கால் தேவியைப் பிரித்த பாவி வஞ்சன் - 6487
களவு இயல் அரக்கன் - 6506
கள்வன் - 6526
நான்முகன் தகை மகன் சிறுவன் - 6567
தசமுகக் கூற்றம் - 6572
இராவணன் என்னும் குன்று உலைப்பினும் உலைப்பு இலாத் தோளினான் - 6574
கதிர் வாள் இலங்கை வேந்தன் - 6581
பொய்யன் - 6714
கொத்துறு தலையான் - 6779
இலங்கையர் மன்னவன் - 6784
பணியும் தானவர் ஆதியர் பல் முடி மணியினால் விளங்கும் தாளினான் - 6787
வயங்கு எரி மேய வெங் கண் விறல் கொள் இராக்கதர் நாயகன் - 6799
உயிர் கொள்ள வாய் வெருவும் கொடுங் கூற்று அனான் - 6801
தார் உலாம் மணி மார்பன் - 6806
கவடு உகப் பொருத காய் களிறு அன்னான், அவள் துயக்கின் மலர் அம்பு உற வெம்பும் சுவடுடைப் பொரு இல் தோள்கொடு, அனேகம் குவடுடைத் தனி ஓர் குன்று என, நின்றான் - 6860
சூல் நீர் அணைத்த முகில் ஆம் என நின்றான் - 6876
சினம் கொள் திண் திறல் அரக்கன் - 6894
நாறு தன் குலக் கிளை எலாம் நரகத்து நடுவான் சேறுசெய்து வைத்தான், புன் தொழில் இராவணன் - 6896
திண் திறல் இராவணக் குன்று - 6898
திசை வென்று உயர் தடந் தோள் பத்தினொடு பத்துடையவன் - 6902
கதிர் வேலான் முடித் தலைகள் பத்து - 6904
மைக் கொடு நிறத்தவன் - 6907
தசமுகத்தான் - 6909
இரக்கம் இல் அரக்கன் - 6911
காரினொடு மேரு நிகர் காய் சின அரக்கன் - 6913
சினத் திறல் அரக்கன் - 6916
தெய்வ வெம் படையும் தீரா மாயமும் வல்ல தீயோன் - 6922
குணங்கள் தீயோன் - 6923
புன் புலத்து அரக்கன் - 6928
கருணை இல்லோன் - 6930
பாரகம் சுமந்த பாம்பின் பணாமணி பறிக்க வேண்டின் வார்கழல் காலினாலே கல்ல வல்லவன் - 6939
வடி மணி வயிர ஒள் வாள் சிவன்வயின் வாங்கிக் கொண்டான் - 6941
வெங் கழல் அரக்கன் - 6944
மாய வல் உருவத்தான் - 6948
முழை உறு சீயம் அன்னான் - 6949
அளித் தகவு இல்லா ஆற்றல் அமைந்தவன் - 6969
பதகன் - 6972
கள்ளன் - 6974
வழி அலா வழி மேல் செல்வான் - 6977
கொடுந் தொழில் மடங்கல் அன்னான் - 6992
தன் குலம் முழுதும் கொல்லும் பாவி - 7004
மாயம் இயற்றி ஆயிழையை வௌவும் வளை எயிற்று அரக்கன் - 7006
மூர்க்கன் - 7016
விளையும் வென்றி இராவணன், இகழும் தன்மையன் ஆய இராவணன் - 7023
தன்மைக்குத் தலையாய தசமுகன் - 7028
வன்கணான் - 7106
கயிலை இடந்தவன் - 7110
ஓதுறு கருங் கடற்கு ஒத்த தானையான், தீது உறு சிறு தொழில் அரக்கன் - 7123
இரக்கம் இல் இராவணன் - 7141
எடுக்கின் நானிலத்தை ஏந்தும் இராவணன் - 7143
அண்ணல் வாள் அரக்கன் - 7145
அமரரை அலக்கண் செய்தான் - 7150
இலங்கை வேந்தன் - 7153
ஆற்றல் சால் அரக்கன் - 7159
அறம் மறுத்தான் - 7175
கொடியான் - 7178
காரின் கரியவன் - 7183
வினை கடியான் - 7188
அறம் வலித்தான் - 7193
கள்ளக்கறை உள்ளத்து அதிர்கழல் வெய்யவன் - 7201
கறுத்த சிந்தையன் - 7208
நஞ்சினால் செய்த நெஞ்சினான் - 7224
தூ நவின்ற வேல் அரக்கன் - 7231
ஆளி மொய்ம்பின் அவ் அரக்கன் - 7244
தும்பை சூடிய இராவணன் - 7247
மூரி வெஞ் சிலை இராவணன் - 7254

அமர் பொருமேல் வெல்லும் அத்தனை அல்லது தோற்றிலா விறலோன் - 7263
விழுதுடை ஆல் அன்ன மெய்யன் - 7265
சிறு தொழில் கீழோன் - 7268
கிடந்த போர் வலியார் மாட்டே கெடாத வானவரை எல்லாம் கடந்து போய் உலகம் மூன்றும் காக்கின்ற காவலாளன் - 7273
கோள் ஒத்த சிறை வைத்து ஆண்ட கொற்றவன் - 7275
நெடு வயிரத் தோளான் - 7282
மன்றல் தங்கு மாலை மார்பன் - 7317
எண்ணினும் பெரியன் ஆன இலங்கையர் வேந்தன் - 7329
இலங்கையர் அண்ணல் - 7342
உருமின் வெய்யவன் - 7395
வெம்பு வெஞ்சினத்து இராவணன் - 7509
வெல்லுமா நினைக்கின்ற வேல் அரக்கன் - 7626
மாதிரம் கடந்த தோளான் - 7633
தொட்டது ஓர் சுரிகையாளன் - 7639
எரி உகு கண்ணன் - 7656
காய் கரி அனையான் - 7662
இமையவர் ஏற்றம் எல்லாம் வாங்கும் வாள் அரக்கன் - 7669
புன்மகன் - 7690
வெய்யவன் - 7691
புரந்தரன் செல்வத்து ஐயன் - 7703
திக்கு அனைத்தும் போர் கடந்தான், தீ விழியான் - 7722
அந்தம் இல் கொடுந் தொழில் அரக்கன் - 7725
எழுந்து எரி வெகுளியான் - 7727
அரக்கர் பிரான் - 7739
தொடு கழல் அரக்கர்க்கு எல்லாம் மன்னவன் - 7986
தரு வனம் அனைய தோளான் - 7991
தார் கொன்றையினான் கிரி சாய்த்தவன் - 8007
தார்த் தட மார்பன் - 8302
உலகு ஏழும் வென்றவன் - 8323
தானவர்கோன் - 8380
வஞ்சனையான் - 8402
பருந்தினுக்கு இனிய வேலான் - 8407
பெருந்தகை - 8513
அறத்தைப் பொறை தீர்ப்பான் - 8663
அரக்கர்க்கு இறைவன் - 8670
நெறி இல்லான் - 8671
மாய வாழ்க்கை கள்ளன் - 8709
வெய்ய நீசன் - 8710
மத்தன் - 8835
சூலியைப் பொருப்பினோடும் தூக்கிய விசயத் தோளான் - 8846
வெந் திறல் அரக்கர் வேந்தன் - 8849
வஞ்சனை மன்னன் - 8861
பாதக அரக்கன் - 8886
திக்கு ஆசு அற வென்றான் - 9052
எழுதி ஏர் அணிந்த திண் தோள் இராவணன் - 9102
பொய் அறச் சிறிது என்று எண்ணும் பெருமையான் - 9162
அரக்கர் கோமான் - 9239
போர் உளதனையும் வென்று, புகழ் உளதனையும் உள்ளாய்(மகோதரன்) - 9241
புலத்தியன் மரபின் வந்து, புண்ணிய விரதம் பூண்டான் - 9244
நெடு விறலோன் - 9257
மறவோன் - 9279
பெரிய திண் புயன் - 9280
தேவர் மெய்ப் புகழ் தேய்த்தவன் - 9301
நாயகன் தலை பத்து உள கையும் நால் ஐந்து - 9339
செய் தவத்து இராவணன் - 9480
நள் இருள் அடைந்த காளி போன்றனன் இராவணன் - 9547
இகல் முகத்து இமையோர் தந்த வென்றியான் - 9625
நிருதர் கோமான் - 9659
களித்த சிந்தை ஏதலன் - 9709
வீழி வெங்கண் இராவணன் - 9738
ஆறா விறல் மறவோன் - 9756
மிடல் வெம் போர் வல்லான், செரு அறிந்தான் - 9757
தெறு தொழில் மறவோன் - 9792
ஐந்தொடு ஐந்துடைத் தலையான் - 9807
அக் கடுந் திசைக் களிற்றின் மருப்புக் கல்லிய தோளவன் - 9849
வெய்யவர்க்கு ஆதியன் - 9850
விளங்கு ஒளி வயிர வாள் அரக்கன் - 9860
மீளி மொய்ம்பன் - 9867
பண்டு தேவர்தம் ஊரின்மேலும் பவனி உலாவுவான் - 9872
தேர்க் குன்ற இராவணன் - 9900
சிகரம் போல்வான் - 9901
போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப் போர் வீரன் - 9904
அசுரர்கள் தம் பிரளயம் - 9921
திருத்தமே அனையவன் - 9935
உரம் கிளர் மதுகையான் - 9938
ஏந்து புயத்து இராவணனார் - 9942

அவை ஏழும் ஏழும் அஞ்சும் வீரனார் - 9945
ஆழி ஆன அரக்கன் - 9967
வெங் குலப் போர் வெம்பு வெஞ் சினத்து இராவணன் - 10088
தசம் தொகு அக் கிரீவன் - 10101
இருபது தடக் கையான் - 10218
செறி புயத்து அரக்கன் - 10225

இலக்குவன்

தயரதன் புதல்வன். சுமித்திரைக்குச் சத்துருக்கனுடன் பிறந்தவன். இராமனை நிழல் போல் தொடர்ந்த தம்பி. பாற்கடல் அனந்தனான இவன் இராமாவதாரத்தில் இலக்குவனாகப் பிறந்தவன். சனகனின் தம்பி மகள் ஊர்மிளையை மணந்தவன். இணையற்ற வீரன். மிகுந்த சினத்தவன். இராமனுக்காகத் தன் வாழ்வையே துறந்தவன். சீதையைத் .தெய்வமாகப் போற்றுபவன். என்றும் எப்பொழுதும் அண்ணன் சொல் மீறாதவன்.

விசுவாமித்திரன் வேண்ட அவன் வேள்வி காக்க இராமனுடன் சென்றவன். வழியே இடைப்பட்ட பாலையின் வெம்மை தாங்க அவனிடமிருந்து இரு மந்திரங்களைக் கற்றவன். தாடகை வதையின் பின் மிதிலைக்கு விசுவாமித்திரன் அழைத்து வர, இராமனுடன் வந்தவன். இராமன் வில்லிறுத்ததை உடனிருந்து கண்டு களித்தவன். இராமன் சீதை திருமணத்தின் பின் பரத, சத்துருக்கனரோடு தானும் மணவினை மேற்கொண்டவன். கைகேயி சூழ்ச்சியால் இராமன் காடேக, பரதன் நாடாள்வான் என்பது கேட்டுச் சீறிப் போருக்கெழுந்தவன். இராமன் அடக்க அடங்கி அவனுடன் காடேகியவன். தாய் சுமித்திரையும் இதற்கு மனம் உவந்து ஒப்புதல் அளித்து,

‘ஆகாதது அன்றால் உனக்கு; அவ் வனம் இவ் அயோத்தி;
மா காதல் இராமன் நம் மன்னவன்; வையம் ஈந்தும்
போகா உயிர்த் தாயர் நம் பூங் குழல் சீதை என்றே
ஏகாய்; இனி, இவ் வயின் நிற்றலும் ஏதம்’ என்றாள் - 1751

பின்னும் பகர்வாள், ‘மகனே! இவன் பின்செல்; தம்பி
என்னும்படி அன்று, அடியாரின் ஏவல் செய்தி;
மன்னும் நகர்க்கே இவன் வந்திடின், வா; அது
அன்றேல் முன்னம் முடி’ - 1752

என அறிவுரையும் வழங்கினாள். இதற்கேற்பவே இலக்குவனின் செயற்பாடுகளும் அமைந்தன. அண்ணனுக்கும் அவன் துணைவிக்கும் வேண்டியன கொணர்ந்து உணவளித்துப் பின் தானுண்டவன். இரவுப் பொழுதில் அவர் பாதுகாப்பிற்காகத் தன்னுறக்கம் துறந்தவன். இராமனும் சீதையும் தங்கத் தன் கைகளாலேயே அழகிய குடில் செய்தவன். குகனுக்கு இராமன் முடியிழந்த வரலாற்றைத் தெரிவித்தவன். இராமனை அழைத்துச் செல்ல வந்த பரதனைத் தவறாகக் கருதிப் பின் உண்மை உணர்ந்தபோது வருந்தியவன்.

காட்டுவழியே சென்ற போது, சீதையைக் கைக்கொண்ட விராதனை இராமனுடன் இணைந்து வீழ்த்தியவன். இராமன் குறிப்பறிந்து பஞ்சவடி செல்லும் வழியில் சந்தித்த சனகனுக்குத் தாம் வனம் புகுந்த வரலாறு உரைத்தவன். இராமன் பால் காமுற்ற சூர்ப்பணகை, சீதையைத் தூக்கிச் செல்ல முனைந்த போது அவளது மூக்கறுத்தவன். மாய மானாக மாரீசன் வந்த பொழுது அதன் உண்மை உணர்த்தியவன். மாயமானைப் பிடிக்கச் சென்ற இராமனுக்குத் தீங்கு நேர்ந்ததாகச் சீதை கருத அதனை நீக்க முயன்றவன். அவள் மனந்தேறாது வற்புறுத்த அவளைத் தனியே விடுத்து இராமன் பால் சென்றவன். இதனால் சீதையை இராவணன் கடத்திச் செல்ல, செய்வதறியாது திகைத்த இராமனை ஆற்றுப்படுத்தி மேற்செயன்மை காட்டியவன்.

சீதையைத் தேடி வரும் வழியில், இராவணனுடன் எதிர்த்துப் போரிட்டு வீழ்ந்த சடாயுவைக் கண்டு தகவலறிந்து, பின் உயிர் நீத்த சடாயுவுக்கு அண்ணனோடு இணைந்து இறுதிக்கடன் இயற்றியவன். இராமனுக்கு நீர் கொணரச் செல்கையில் தன்னைத் தடுத்துக் காமம் மொழிந்த அயோமுகி எனும் அரக்கியையும் உடற்குறை செய்தவன். சீதையைத் தேடி வரும் வழியில் எதிர்ப்பட்ட கவந்தனுக்கு முன்னைக் கந்தர்வ வடிவத்தை அண்ணன் துணையோடு நல்கியவன். அவன்வழிச் சுக்கிரீவன் நட்பைப் பெற, இராமனுடன் சவரி வழி காட்ட இரலை மலை சென்றவன்.

அங்குத் தம்மைக் கண்ட அனுமனிடம் தங்கள் நிலை கூறியவன். இராம - சுக்கிரீவர் நட்பின் ஒரு நிலையாக வாலியை மறைந்திருந்து கொல்வதற்கு உடன்படாதவன். எனினும் அவனை வீழ்த்தியபின், அவன் தன்னை மறைந்திருந்து வீழ்த்தியதற்கு இராமனிடம் காரணம் கேட்டபோது அவன் தயங்க இவனே பதிலுரைத்தவன். துந்துபியின் உடலைத் தன் கால் விரலால் எட்டி உதைக்க அது விண்ணுலகு சென்று மீண்டு அவன் வலிமை காட்டியது. சுக்கிரீவனுக்கு, வானரர் தலைவனாக, கிட்கிந்தை அரசாக முடி சூட்டியவன். சொன்ன நேரத்தில் சுக்கிரீவன் வராததால் சினமுடன் கிட்கிந்தை

சென்றவன். தாரையால் சினந்தணிவிக்கப் பெற்று வானர வீரர் வருகையறிந்து சுக்கிரீவனுடன் மீண்டவன்.

இராமனுடன் இருந்த காரணத்தால் இராம இராவணப் போரில், சீதை மீட்புப் பணியில் இலக்குவனின் பங்கும் பெரிதாய் அமைகிறது. இராமன் ஏவல்படி அடைக்கலம் புகுந்த வீடணனுக்கு இலங்கை அரசாக முடிசூட்டினவன். இவன் போரில் பெற்ற பல வெற்றிகளுக்கு, குறிப்பாக இந்திரசித்தை அழித்தமைக்கு வீடணனின் துணையும் அறிவுரையும் காரணங்களாகின்றன. தன் வீரத்தை இராவணன், கும்பகருணன் போன்ற பெரு வீரர்களோடுப் போராடி நிலை நாட்டினவன். கும்பகருணனால் பாராட்டப் பெற்றவன். தன் வில்லில் எழுப்பும் நாண் ஒலியால் அரக்கர்க்கு அச்சத்தை விளைவித்தவன். இராவணன் எறிந்த வேற்படையால் மயக்கமுற்று வீழ்ந்தபோது, இவனைத் தூக்கிச் செல்ல, கயிலைமலையைத் தூக்கிய இராவணன் முயன்றும் முடியவில்லை. தேவைக்கேற்ப போர்க்களத்தே அனுமன், அங்கதன் தோள் மீதேறிப் போர் புரிந்தவன்.

சிறிய தந்தையைக் கொன்று தன் தந்தையின் வலிய தம்பியை இழக்கச் செய்த இராமனைப் பழிவாங்க, தன்னைக் கொல்லச் சூளுரைத்து வந்த அதிகாயனை வீழ்த்தினவன். இந்திரசித்தின் நாகபாசத்தால் அனைத்து வானரப் படைகளுடன் பிடிப்புண்ட போது கருடன் வரவால் விடுபட்டவன். அவன் வீசிய பிரம்மாத்திரத்தாலும், இராவணன் வீடணனை நோக்கி வீசிய வேலினை அவனைக் காப்பாற்ற தன் நெஞ்சில் ஏற்றபோதும் உயிரிழந்து, பின் அனுமன் மருத்துமலை கொணர இரு முறை உயிர் திரும்பப் பெற்றவன்.

தாருகன், காலன், வேள்விப் பகைஞன் போன்ற அரக்க வீரரை அழித்தவன். மாயம் வல்ல இந்திரசித்தின் நிகும்பலை யாகத்தை அழித்து அவனைக் கொன்றவன்.

சீதை மீட்சியின் பின், இராமனுக்குத் தன் கற்பினை உறுதிப்படுத்த அவள் தீக்குளிப்பதற்கு, அவளது ஆணை காரணமாகத் தீ மூட்டிக் கொடுத்தவன். பின் இராமன் சீதை மற்றும் துணைவர்களோடு அயோத்தி மீண்டவன்.

இளைய மைந்தன், தகையுடைத் தம்பி, பழியிலான், செம்மல், புண்ணியன், பேர் அறிவினான், அழகினான், அறங்கள் நாறும் மேனியான், வில்லி, துயில் பிரிந்தான், தீர்த்தன், தூயோன், ஆடவர் திலகன் என்றெல்லாம் போற்றப்படுபவன். இராமன் தம்பி எனச் சுட்டுவதில் கம்பர் பெருவிருப்பு காட்டுகிறார். அவன் இராமன் பால் கொண்ட ஆழ்ந்த அன்பும், அவனின்றித் தானில்லை என்ற இயல்பும், இராமனின் துயரச் சூழல்களிலெல்லாம் துணை நின்று அவன் துயர் துடைத்தமையும் இலக்குவனின் பெருமைகளாக உணர்த்தப் படுகின்றன. இராமன் பால் அன்பு, பல்துறை அறிவு, போர் ஆற்றல் எனும் இம்மூன்றும் இவனின் தனிச் சிறப்புகளாகும்.

இளையவன் - 284

விலக்குஅரு மொய்ம்பின் விளங்கு ஒளி நாமம்
இலக்குவன் - 298

இளவல் - 306

இளைஞர் - 308

இளையவீரன் - 313

சிறுவர் - 324

தம்பி - 331

கோக் குமரன் - 356

இளையவன் - 396

இளைய கோ - 407

காண்தகு குமரன் - 432

மன்னன் மைந்தன் - 433

காளை வீரன் - 434

வென்றி வீரன் - 568

மனக்கு இனிய தம்பி - 634

பெருந்தகைமைத் தயரதன் தன்புதல்வன் - 636

அரு வலிய திறலினர் ஆய், அறம் கெடுக்கும்
விறல் அரக்கர் வெரு வரு திண் திறலார்கள்,
வில் ஏந்தும் எனில் செம் பொன் பருவரையும்,
நெடு வெள்ளிப் பருப்பதமும் போல்வார்
இருவர் (இலக்குவன், சத்துருக்கன்) - 658

தலை ஆய பேர் உணர்வின் கலைமகட்குத்
தலைவர் ஆய் சிலை ஆயும் தனு வேதம்
தெவ்வரைப்போல் பணி செய்ய, கலை ஆழிக்
கதிர்த்திங்கள் உதயத்தில் கலித்து ஓங்கும்
அலை ஆழி என வளர்ந்தார் மறை நான்கும்
அனையார்கள் - 659

புதல்வன் - 660

பூங் கழலான் - 661

இளைய பைங்குரிசில் - 1052

கரியவன் பின்பு சென்றவன், பொரு அருங் குமரன் - 1055

பொரு இல் நான்மறை எனும் நடையினான் - 1056

கோதை சூழ் குஞ்சி அக் குமரன் - 1058

குனி சிலைத் தம்பி - 1231

தன் (இராமன்) ஏர் புரை தரு தம்பி - 1266

பிரியா வண்ண வெஞ் சிலைக் குரிசில் - 1362

தூய தம்பி - 1370
அண்ணல் பெரியோன் - 1717
கங்கைக்கு இறைவன் கடகக் கை - 1718
ஞாலத்தவர் கோமகன் - 1724
ஆற்றல் துணைத் தம்பி - 1725
பொன் ஒத்த மேனி புயல் ஒத்த தடக் கையான் - 1727
மின் குற்று ஒளிரும் வெயில் தீக் கொடு அமைந்த வேலோன் - 1733
மகன் - 1744
அன்பன் - 1756
வரைத் தடந் தோளினான் - 1761
செவ்விய குமரன் - 1762
சீரை ஆடையன் பொரு அருந் துயரினான், தொடர்ந்து போகின்றான், இருவரைப் பயந்தவள், ஈன்ற கான்முளை - 1793
மூரி விற் கை இளையவன் - 1835
தன்னது (இராமன்) ஆர் உயிர்த் தம்பி - 1839
இளைய மைந்தன் - 1880
அழகன்தன்னை எஞ்சல்இல் பொன் போர்த்தன்ன இளவல் - 1890
பண்ணவன் - 1965
பருவரல் தம்பி - 1972
படர் உறு உளன் உம்பி - 1996
கோலை வந்து உமிழ் சிலைத் தம்பி - 2088
அரும் பெறல் அன்பினன் - 2094
இலை கொள் பூண் இளங்கோன் - 2104
இளைய ஆளி - 2300
மொய் புலி அன்னான் ஒர் பின்னவன் - 2318
பொங்கு உலத் திரளொடும் பொருத தோளினான் - 2417
ஆர்ப்பு உறு வரிசிலை இளைய ஐயன் - 2424
சித்திரைக் குனிசிலைக் குமரன் - 2517
காளை மைந்தன் - 2536
சுவண வண்ணன் - 2553
அன்னையே அனைய அன்பின் அறவோன் - 2555
மீளி மொய்ம்பினன் - 2558
கை கொள் கால வேலினான் - 2586
தோன்றல் பின் தோன்றினான் - 2726
இளைய மொய்ம்பினோன், சூர நெடுந்தகை - 2851
ஏற்ற வளை வரி சிலையோன் - 2853
இளங்குமரன் - 3289
கனை கழல் தம்பி - 3292
வரி சிலை மறை வலோன் - 3295
நோக்கத் தெளிவுடைத் தம்பி - 3298
தகையுடைத் தம்பி - 3301
பொலன் கொள் தாரான் - 3304
மந்திரத்து இளையோன் - 3306
செம்மல் - 3337
இள வீரன் - 3466
பொன் துன்னும் வில் கை இள வீரன் - 3467
சுமித்திரை சிங்கம் - 3493
இளைய கோமகன் - 3506
ஆற்றலோன் - 3507
அம்பு இழை வரி வில் செங் கை ஐயன் - 3526
சிறுவன் - 3535
வெவ் விடைபோல் இளைய வீரன், வில்லவன் - 3578
சிங்கம் எனத் தமியன் - 3579
கோளரி - 3589
பூங் கழல் வார் சிலை மீளி - 3601
என் (இராமன்) ஆவித் துப்புடை மால் வரை - 3602
பேரா இடர் வந்தன பேர்க்க வலான் - 3609
இளங் களிறு - 3611
கமையாளொடும் என் உயிர் காவலில் நின்று இமையாதவன் (இராமன்) - 3616
எழு என மலை என இயைந்த தோளினான் - 3625
செரு வலி வீரன் - 3629
மனு முதல் மரபினோன் - 3632
ஐயற்கு இளைய வீரன் - 3668
தன் நேர் இலாத தம்பி - 3676
அன்பு எனும் ஒர் ஆணி பூண்ட தம்பி - 3742
வார் கழல் இளைய வீரன் - 3775
பரிந்த தம்பி - 3878
வாள் தொழில் இளவல் - 3900
தா அரும் பெரு வலித் தம்பி, நம்பி - 3915
வில் தாங்கு வெற்பு அன்ன விலங்கு எழில் தோளன் - 3978
மதி சால் தம்பி - 4116
நல் நெறிக்கு இறையோன்தன் இளையோன் - 4119
சூழி மால் யானை அன்ன தம்பி - 4145
ஏண் உறு கல்வி உள்ளத்து இளையவன் - 4209
தகை அழிந்து அயர்ந்த தம்பி - 4211
உர விலோன் - 4242
மொய்ம்பினோன் - 4269
மானவன் தம்பி - 4280
பொன் ஒளிர் மேனியான் - 4282
அமர் கொண்ட சீற்றத்து இளையோன் - 4284
ஆண் தொழிலான், மன்னன் மைந்தன் - 4285

இராமற்கு இளையவன் - 4292
ஆண் தகை ஆளி - 4309
புரசை யானை அன்னான் - 4312
பனையினும் பெரிய தோளன் - 4315
ஆழி வேந்தன் அடி இணை பிரிகலாதான் - 4318
தார் குலாம் அலங்கல் மார்பன் - 4319
வள்ளல் - 4320
நன்று உணர் கேள்வியாளன் - 4328
முனிவினும் முளைக்கும் அன்பான் - 4329
மத யானை அனைய மைந்தன் - 4334
ஆண் தகை ஆளி மொய்ம்பின் ஐயன் - 4335
வனை கழல் வயிரத் திண் தோள் மன் இளங் குமரன் - 4337
ஆன்ற நூல் அறிஞன் - 4343
மானவற்கு இளையோன் - 4347
தருமத்தின் அமைதி உன்னுவான் - 4373
மனுவின் கோ மகன் - 4377
அஞ்சன வண்ணனுக்கு அனுசன் - 4379
சங்கை இல் இலக்குவன் - 4387
நோன் கழல் ஐய வில் குமரன் - 4392
ஒர் உயிர்த் தம்பி - 4778
ஏத்தும் வென்றி இளையவன் - 5375
விற் கை வட வரை - 6493
துஞ்சல் இல் நயனத்து ஐயன் - 6505
மந்தரத் தடந் தோள் வீரன் - 6513
வெம்பிக் குருதி வெங் கனல் உமிழ்கின்ற கண்ணினன் - 6603
வெற்றி புனை தம்பி - 6750
வில் படி திரள் தோள் வீரன் - 6847
நல் நெறி அறிஞன் - 6850
கோல் நிறக் குனி வில் செங்கைக் குமரன் - 6852
கோள் அவாவு அரி ஏறு அன்ன குரிசில் - 6853
கொற்ற வான் சிலைக் கை வீரன் - 6854
வாகை வெஞ் சிலைக் கை வீரன் - 6855
காவலன் பயந்த வீரக் கார்முகக் களிறு - 6856
நாள்மலர்த் தெரியல் மார்பன் - 6858
துறக்கம் எய்தியவரும் துறவாத உறக்கம் என்பதனை ஓட முனிந்தான் - 6881
வாழிய வரி சிலைத் தம்பி - 7134
வீரன் தம்பி - 7159
உலகம் செய்த பாக்கியம் அனைய வீரன் தம்பி - 7162
துயில் பிரிந்தான் - 7174
ஆம் குஞ்சரம் அனையான், சுடர் வேலவற்கு இளையான் - 7175
ஏறு சேவகன் தம்பி - 7217
இராமனுக்கு இளையவன் - 7226
வாள் அரிஏறு அனான் - 7230
மாற்ற அருந் தம்பி - 7407
ஒரு தனிச் சுமித்திரை சிங்கம் - 7479
வேனிலான் அன்ன இலக்குவன் - 7492
இளைய வள்ளல் - 7501
இளங் கோளரி - 7502
துன்னு பேர் ஒளி இலக்குவன் - 7503
இராமனுக்கு இளையான் - 7511
செம்பொன் குன்று நின்றனைய தம்பி - 7654
நன் மகன் - 7690
மிகும் திறம் வேறொன்று இல்லா இருவர் - 7705
வில்லாளன் இளங்கிளையோன் - 7774
முழை வாள் அரி அனையான் - 7901
பரு வலி படைத்தோர்க்கு எல்லாம் ஆணிப்பொன் அனான் - 7905
திண் தேர் இளவல் - 7905
வில்லியர் திலதம் அன்ன (நின்) திருமேனி புனிதன் (அங்கதன்) - 7907
அமலன் தம்பி - 7908
மன்னவன் தம்பி - 7913
குரிசில் - 7919
காளை வீரன் - 7930
கொற்ற வில்லான் - 7932
அதிகாயன் என்னும் பேர் கொன்றவன் வென்றி இலக்குவன் - 8007
வீர வெந் தொழிலினான், ஆரியன் - 8029
புகழின் பூணினான் - 8031
நம்பி தம்பி - 8080
இந்திர வில்லினோடும் பொன் புரை மேகம் ஒன்று வருவது போல்கின்றவன் - 8091
இராமன் பாதம் சூடிய தோன்றல் தம்பி - 8093
ஆளிபோல் மொய்ம்பினான் - 8102
கொண்டல் - 8109
தாமரைக் கண்ணன் தம்பி - 8112
அந் நரன்; அல்லன் ஆகின், நாரணன் அனையன் அன்றேல், பின், அரன், பிரமன் என்பார்ப் பேசுக; பிறந்து வாழும் மன்னர், நம் பதியின் வந்து, வரி சிலை பிடித்த கல்வி இந் நரன் தன்னோடு ஒப்பார் யார் உளர், ஒருவர்? (இந்திரசித்து) - 8121
அந்திவண்ணன் - 8136
கொற்றவில்லி - 8141
சேவகன் - 8143
ஆரியற்கு இளையவீரன் - 8163

ஐயன் - 8173
பொன் குலாம் மேனி மைந்தன் - 8184
நாயகற்கு இளைய கோ - 8188
காகுத்தற்கு இளைய காளை - 8190
தெய்வ நாயகன் தம்பி - 8199
ஆரியன் தனித் தம்பி - 8351
மீளா வினை நூறும் விடைக்கு இளையான் - 8383
தோள் வித்தகன் - 8386
மல்லல் தட மார்பன் - 8387
ஏற்று சிலை ஆண்மை இலக்குவன் - 8400
வல்லவன் - 8484
அறிவன் - 8485
படம் கொள் பாம்பு - அணை துறந்தவற்கு இளையவன் - 8515
சிங்கஏறு அன்ன இலக்குவன் - 8518
உணர்வுடைத் தம்பி - 8521
தீர்த்தன் - 8527
அருளுடைக் குரிசில் - 8587
வில்லின் செல்வன் - 8596
கோ இளங் களிறு - 8598
தேவர்க்கும் தேவன் தம்பி - 8599
ஆழியை அகற்றித் தனு வலம் கொண்ட தாமரைக் கண்ணவன் தம்பி - 8609
கந்தன் இருந்தாய் நீ என நின்றேன் - 8645
கொழுந்தன் - 8679
தொங்கலின் குழன்ற பூங் குஞ்சியான் - 8804
புகழின் மிக்கோன் - 8937
கூற்றம் ஒப்பான் - 8938
சாப நூல் நெறி மறப்பிலாதான் - 8939
தாணுவின் தோற்றத்தான் - 8943
தருமச் செல்வன் - 8945
வென்றிச் சிலை வீரன் - 8960
கொல்வென் என்று உன்னைத்தானே (இந்திரசித்து) குறித்து ஒரு சூளும் கொண்ட வில்லி - 9010
மூவகை உலகும் காக்கும் முதலவன் தம்பி - 9011
தூயோன் - 9038
முத்தன் - 9061
பகலோன் குல மருமான் - 9071
உயிர்தோறும் உற்றுளன் தோத்திரத்து ஒருவன் என உரைக்கும் அயிரா நிலை உடையான் இவன் - 9075
மொய் வித்தகன் - 9094
செய்யோன் - 9095
நூல் ஒன்று வரி விலான் - 9112
அமலன் - 9136
பகலவன் மருமகன் - 9141
புகழ் அழியாத பொன் - தோள் வீரன் - 9151
வில்லின் விச்சையின் கணவன் - 9152
உலகம் எல்லாம் நிறைந்தவன் - 9157
மொய் அற மூர்த்தி அன்ன மொய்ம்பினான் - 9162
அயோத்தி வேந்தற்கு இளையவன் - 9165
உலகு எலாம் நிறுத்தி நின்றான் - 9166
கொற்றவை தழீஇய பொன் தோள் - 9181
ஆடவர் திலகன் - 9185
என் (இராமன்) பின்னே திரு நகர் தீர்ந்து போந்த யானை - 9364
வில்லும் கூற்றுவற்கு உண்டு என திரிகின்ற வீரன் - 9544
கடவுள் மாப் படை தொடுக்கின், மற்று அவை முற்றும் கடக்க விடவும் ஆற்றவும் வல்லனேல், யாரையும் வெல்லும்; தடவும் ஆற்றலைக் கூற்றையும்; தமையனைப் போலச் சுடவும் ஆற்றும் எவ் உலகையும்; எவனுக்கும் தோலான் (இராவணன்) - 9552
பெரியோன் - 9558
உலகுடைச் செல்வன் - 9565
பொன் அரும்பு உறு தார்ப் புயப் பொருப்பினான் - 9568
இள வாள் அரி - 9702
இளைய மைந்தன் - 9785
இருந் தவத்து இளையோன் - 9952
மணம் கொள் வேல் இளங் கோளரி - 10097
மெய்ப் புகழ்த் தம்பி - 10215
வண்ண வில் குமரன் - 10257
தன் நிகர் இலாத வென்றித் தம்பி - 10277
கனை கழல் அமரர் கோமாற் கட்டவன் படுத்த காளை - 10280
தனிமை நீங்கி காடு உறைந்து உலைந்த மெய் - 10281
ஏழ் உயர் மதமா அன்ன இலக்குவன் - 10292

இராம இலக்குவர்

இருவருக்கும் பொதுவாக அமையும் கூற்றுகள் இங்கே இடம் பெறுகின்றன. இவர்களைப் பற்றித் தனித்தனியே இராமன், இலக்குவன் எனும் பகுதிகளில் காணலாம்.

தெவ் அடுசிலைக்கை என் சிறுவர் செவ்வியர் (கைகேயி) - 1452
செவ் வேலவர் - 2588

இனியவர், இன்னலின் இரங்கும் நெஞ்சினர், குனி வரு திண் சிலைக் குமரர் - 2631
செருக்கு இல் சிந்தையர் - 2658
வனை கழல் வரி சிலை மதுகை மைந்தர் - 2700
தாமரைச் செங்கண் இத்தடக்கை வீரர்கள் - 2702
உலகு ஒரு மூன்றும் தம் உடைமை ஆக்குறும் அலகு அறும் இலக்கணம் அமைந்த மெய்யினர், இச் சிலை வலி வீரர் - 2703
கருமலை செம்மலை அனைய காட்சியர், திரு மகிழ் மார்பினர், செங்கண் வீரர் - 2704
சினப்படை வீரர், கனப்படை வரி சிலைக் காளை(யர்) - 2705
கனைகழல் நெடுநிலம் காவல் ஆழியான், வனை கழல் தயரதன், மைந்தர் - 2706
முழுவது ஏழ் உலகு உடைய மைந்தன்மீர் - 2713
அவ் விலங்கல் தோளார் - 2715
மருவ இனிய குணத்தவர் - 2716
பூ அராவு பொலங் கதிர் வேலினீர் - 2721
பொன் உருவப் பொரு கழலீர் - 2864
தரை அளித்த தனி நேமித் தயரதந்தன் புதல்வர் - 2867
தரும நீரர், தயரதன் காதலர் - 2878
மன்னன் காதலர் - 2888
நெறி கொள் மாதவர் - 2935
மீனுடை நெடுங் கொடியினோன் அனையர் - 3116
வந்தனை முனித்தலைவர் பால் உடையார்; வானத்து இந்துவின் முகத்தர் - 3119
விற் கலையர், வேதம் உறை நாவர் - 3120
தராவலய நேமி உழவன், தயரதப் பேர்ப் பராவ அரு நலத்து ஒருவன், மைந்தர், பழி இல்லார் - 3123
உலையா வலியர் - 3393
முத் தேவரின் மூல முதற் பொருள் ஆம் அத் தேவர் இம் மானிடர் - 3416
கொற்றவர் - 3503
புண்ணியர் - 3504
சுந்தரத் தோளினர் - 3512
அம்பு இழை வரி வில் செங்கை ஐயன்மீர் - 3526
மின்னும் சிலையார் - 3572
ஆசை சுமந்த நெடுங் கரி அன்னார் - 3573
ஆரியர் - 3575
நுணங்கு கேள்வியார் - 3661
சந்தப் பூண் அலங்கல் வீரர் - 3693
கணை உலாம் சிலையினீர் - 3694
மானவக் குமரர் - 3698
வெஞ் சமத் தொழிலர் - 3754
தருமமும் தகவும், இவர் தனம் எனும் தகையர் - 3757
கதம் எனும் பொருண்மை இலர்; கருணையின் கடல் அனையர்; இதம் எனும் பொருள் அலது, ஒர் இயல்பு உணர்ந்திலர் - 3758
மும்மை ஏழ் உலகும் காக்கும் முதல்வர் நீர், முருகற் செவ்வி உம்மையே புகல் புக்கேம் (அனுமன்) - 3774
மின் உருக் கொண்ட வில்லோர் - 3781
ஆர் உயிர்க்கு அமுதமே போல் உளார் - 3788
பாழியால் உலகு எலாம் ஒரு வழிப் படர வாழ் ஆழியான், மைந்தர் - 3789
அழகினார் - 3789
ஊழியார் - 3789
நீதியார், கருணையின் நெறியினார், நெறிவயின் பேதியா நிலைமையார், எவரினும் பெருமையார், போதியாது அளவு இலா உணர்வினார், புகழினார், காதி சேய் தரு நெடுங் கடவுள் வெம் படையினர் - 3790
தூண் திரள் தடந் தோள் மைந்தர் - 3814
சிங்கஏறு - 3935
அறங்கள் நாறும் மேனியர் - 3937
வீரத் திறலோர் - 3979
அரு மைந்து அற்றம் அகற்றும் வில்லியார் - 4110
தாயினும் நல்லர் - 4324
செம்மை சேர் உள்ளத்தீர் - 4326
தேவரும், தவமும், செய்யும் நல் அறத் திறமும், மற்றும் யாவையும், நீரே. மூவகை உலகும் காக்கும் மொய்ம்பினீர் - 4332
எவ்விய வரி விற் செங்கை இருவர் - 5308
வரி வெஞ் சிலையினர் - 5349
வெற்றி நாணுடை வில்லியர் - 5360
வீரர் ஆய் மெய்ம்மை ஓர்வார் - 5920
நல் நெறிக் குமரர் - 6058
இருவரும் ஒருவரும் எதிர் இலாதார், முனைவரும் அமரரும் முழுது உணர்ந்தவர்களும், மற்றும் நினைவு அருந்தகையர், நம் வினையினால் மனிதராய் எளிது நின்றார் - 6155
நிறைதவர் - 6157
எல் வரம் பெரிய தோள் இருவர், நிருதர் வேர் முதலும் வீயக் கொல்வர் - 6161
ஒம நெறி வாணர் மறை வாய்மை ஒரு தானே ஆம் அரசன் மைந்தர் - 6756
சுடர்போல் ஒளிர் வெற்றி வீரர் - 6809
தருமத்தின் தலைவர்தாமே மானுட வடிவம் கொண்டார் - 6824
தஞ்சமை தருமமும் தகவுமே அவர் நெஞ்சமும் கருமமும் உரையுமே - 7356

சிறு தொழில் மனிதர் - 7361
மானிடர் இருவர் - 7363
அம் பொன் தனு உடையவர் - 7432
மிகும் திறம் வேறொன்று இல்லா இருவர் - 7705
தராதல வேந்தன் மைந்தர் - 8440
சிங்கஏறு அனைய வீரர் - 8472
மல் கொள் தோளவர் - 8525
அறம் தரு சிந்தையோர் - 8845
நாராயண நரர் என்று இவர் உளராய், நமக்கு எல்லாம் வேராய், முழு முதல் காரணப் பொருளாய் வினை கடந்தோர்; ஆராயினும் தெரியாதது ஒர் நெடு மாயையின் அகத்தார்; பாராயண மறை நான்கையும் கடந்தார்; இவர் பழையோர்; - 9073
அறத்தாறு அழிவு உளது ஆம் என அறிவும் தொடர்ந்து அணுகாப் புறத்தார், புகுந்து அகத்தார் எனப் புகுந்து, அன்னது புரப்பார், மறத்தார் குலம் முதல் வேரற மாய்ப்பான், இவண் வந்தார்; திறத்தால் அது தெரிந்து, யாவரும் தெரியாவகை திரிவார்; (சிவன்) - 9074

இலங்கா தேவி

இலங்கையின் காவல் தெய்வமாகப் பிரமனால் அனுப்பப்பட்டவள். வலிமை வாய்ந்த குரங்கு ஒன்றின் கைகளால் அவள் தாக்கப்படும் வரை இலங்கையைக் காத்தல் வேண்டும் என்றும் அதன்பின் அதிலிருந்து அவளுக்கு விடுதலை; மீண்டும் விண்ணுலகம் செல்லலாம் என்றும் அறிவிக்கப்பட்டவள். இதன்படி, சீதையைத் தேடி வந்த அனுமனை இலங்கை மாநகருக்குள் செல்ல விடாதபடித் தடுத்தபோது அவன் கைகளால் குத்துப்பட்டவள். முன்னறிவிப்புப்படி இலங்கையின் காவல் தொழிலினின்றும் நீங்கினவள். இனி இலங்கை அழியும் என்பதற்கு ஓர் முன்சுட்டும் ஆகிறவள்.

நாள் நாளும் தான் நல்கிய காவல் நனி மூதூர் வாழ்நாள் அன்னாள், சுடரோனைக் காணா வந்த கட்செவி என்னக் கனல் கண்ணாள் - 4909
எட்டுத் தோளாள், நாலு முகத்தாள், உலகு ஏழும் தொட்டுப் பேரும் சோதி நிறத்தாள், சுழல் கண்ணாள், முட்டிப் போரில் மூஉலகத்தை முதலோடும், கட்டிச் சீறும் காலன் வலத்தாள், கமை இல்லாள் - 4910
வேல், வாள், சூலம், வெங் கதை, பாசம், விளி சங்கம், கோல், வாள், சாபம் கொண்ட கரத்தாள்; வட குன்றம் போல்வாள்; திங்கள்-போழின் எயிற்றாள்; புகை வாயில் கால்வாள்; காணின், காலனும் உட்கும் கதம் மிக்காள் - 4912
அருள் இல்லாள் - 4913
பொங்கு அழல் என்னப் புகை கண்ணாள் - 4916
எரி ஒப்பாள் - 4923
தகவு இல்லாள் - 4924

உதாசித்து

பரத சத்துருக்கனர் தம் பாட்டனார் இடத்திற்குச் சென்றபோது உடன் துணையாகச் சென்றவன்.

உளை விரி புரவித் தேர் உதாசித்து எனும் வளை முரல் தானையான் - 1310

உமையாள் (உமா தேவி)

சிவனின் ஒரு பாதியாக விளங்கும் உமாதேவி அவ்வப்போது சிவனுடன் காட்சி தருதல் காணப்படுகிறது.

உமையாள் - 504
பங்கு உறை உமை - 677
மலை மகள் - 857
தைய லாள் - 1241
கலை ஊர் பெண் - 1352
பாகத்தாள் - 6040
ஓங்கு முக்கணான் தேவி - 6604
பிணை ஒன்று கண்ணாள் - 7430
மழ விடையோன் பங்கின் உறையும் குயில் - 8675
நன்னுதல் - 8747
சேயிழை - 8753

உருப்பசி

இந்திரன் அவையில் நடனமிடும் வானுலக மங்கை. இராவணன் வானுலகை வென்றதால் அவன் பணிப்பெண்ணாக இலங்கையில் பணிபுரிந்தாள்.

உருப்பசி உடைவாள் எடுத்தனள் தொடர - 5147
வானகத்தினில் உருப்பசி - 6865
மெல்லென் தேன் நகு மழலை இன் சொல் உருப்பசி - 8821

உருமை

சுக்கிரீவனின் மனைவி. வாலியால் கவரப்பட்டவள். இதன் காரணமாகவே இராமன் வாலியைக் கொன்றான்.

உருமை - 3852
அமிழ்தம் மாறு இலா மொழி உருமை - 4410

உரோமபதன்

மனுக்குல மரபில் வந்த உத்தானபாதனின் மகன். அங்க நாட்டுக்கு அரசன். தன் நாட்டில் மழையின்மையால் வளங் குன்றிய பொழுது கலைக்கோட்டு முனியைத் தன் நாட்டிற்கு வரவழைத்தவன். முனிவன் வந்ததும் மழை பொழிய நாட்டில் வளம் பெருகிற்று. அதற்கு நன்றியாகத் தன் மகள் சாந்தையை முனிவனுக்கு அளித்துத் தன்னுடன் வைத்துக் கொண்டவன். தயரதன் வேண்டக் கலைக்கோட்டு முனியை அவன்பால் அழைத்து வந்தவன்.

மனுகுலத்தே வந்து உதித்தோன், இலங்கும் மோலி உத்தான பாதன் அருள் உரோபதன் - 214
குவவுத் தோளினான் - 227
வள் உறு வயிர வாள் மன்னன் - 230
கழற் கால் வேந்தன் - 237
வய வேந்தன் - 238
தெவ்வர் ஊன் செய்த சுடர் வடி வேல் உரோமபதன் - 239
தோடு துற்ற மலர்த் தாரான் - 240
வய வேந்தன் - 242
வெவ் அரம் தின்று அயில் படைக்கும் சுடர் வேலோன் - 244
குனி சிலை வயவன் - 245

எரிக்கடவுள் (அக்னி)

இராமாயணத்துள் சிறப்பிடம் கொள்ளும் வானவன். இவன் காற்றின் நண்பனாக, உலகை அழியச் செய்யும் ஊழித் தீயாக, நெடு நெருப்பாக, நெருப்பின் அரசனாகச் சுட்டப்படுகிறவன். அங்கி, அனலி, கனலி, வன்னி எனவும் அழைக்கப் படுகிறவன். சீதை வேண்ட, அனுமனின் வாலில் அரக்கர் வைத்த நெருப்பைக் குளிர்வித்தவன், எரிமூழ்கிய சீதையின் கற்புத்திறத்தை இராமனுக்கு உணர்த்தியவன்.

எரி சுடர்க் கடவுள் - 343
மங்கல அங்கி - 1258
அனலி - 2205
எரிக் கடவுள் - 3084
வெங் கனல் கடவுள் - 4429
வெங்கனலவன் - 5932
வன்னி - 5933
பால் வரு பசியன், கனலி - 5942
உலகம் உண்ணும் நெருப்பினுக்கு அரசன் - 6821
ஊழி நெருப்பு - 7076
நெடு நெருப்பு - 7179
எரி முகக் கடவுள் - 7927
அன்பு அடை உள்ளத்து அண்ணல் அனலி - 7944
அநிந்தனை அங்கி - 10040
பவனனுக்கு இனிய நண்பன் - 10355

கங்கை

விண்ணக நதி. பகீரதனால் மண்ணுலகிற்குக் கொண்டுவரப் பெற்றது. சிவனின் சடைமுடியில் தங்கியது. அவனைக் கணவனாகப் பெற்றது. இராவணனின் அரக்கக் குணத்தால் அவன் பணிப்பெண் ஆயது.

கங்கை சூடும் ஈசன் - 210
வெள்ளம் - 695
காண் தகும் சடைக் கங்கை - 2052
கங்கையே முதலிய கடவுட் கன்னியர் கொங்கைகள் சுமந்து இடை கொடியின் ஒல்கிட, செங் கையில் அரிசியும் மலரும் சிந்தினர், மங்கல முறை மொழி கூறி, வாழ்த்தவே - 3087
கங்கையின் கணவன் அக்கறை மிடற்று இறைவன் - 3889
வானக மணிநீர்க் கங்கை தாங்கினான் - 8187

கசகோமுகன்

வானரப் படைத் தலைவருள் ஒருவன். மயந்தன் உடன் வந்தவன்.

மல் கசகோமுகன் - 4420

கணியன் (பெயர் சுட்டப் படாதவன்)

தயரதன் அவையில் இடம் பெற்ற சோதிடன். அதில் திறம் பெற்றவனாதலால் 'நினைவாளன்' என்கிறார். திருமணம் முடித்து இராமன் சீதையுடன் தசரதன் அயோத்தி திரும்பிய பொழுது எதிர்ப்பட்ட பறவை நிமித்தத்தின் பலன்களை உணர்த்தியவன்.

நினை வாளன், புள்ளின் குறி கொள்வான் - 1268

கரன்

இராவணனின் உறவினன். திரிசரன், தூடணன் ஆகியோரின் தமையன். தண்டகாரண்யத்தில் வாழ்ந்தவன். சூர்ப்பணகை பொருட்டு இராமனை எதிர்த்து அழிந்தவன்.

கதிர் கொள் கால வேல் கரன் - 2828
"அரனேயோ? அரியேயோ? அயனேயோ?" என்னும் ஆற்றல் கரன் - 2838

கல் ஈரும் படைத் தடக் கை, ஆடல், கரன் - 2844
காற்றினிலும் கனலினிலும் கடியான், கொடியான் - 2874
ஒளிறு வேல் கரன் - 2895
வெம்பு படை விற் கை விசயக் கரன் - 3036
கடுங் கரன் எனப் பெயர் படைத்த கழல் வீரன் - 3043
ஆழி வரி விற் கரன் - 3047
கங்குல் அன்ன கரன் - 3064
வெகுளி பொங்கக் கன்றிய மனத்து வென்றிக் கரன் - 3374
கரன் முதல் கருணை அற்றவர் - 3795
சிந்த மா நகரைச் செரு முருக்கிய கரன் - 6167
காந்தும் வாளியின் கரன் - 6583
கரிய மால் வரை நிகர் கரன் - 9286

கலுழன்(கருடன்)

ரிசிப முனிவர் - விநதையின் புதல்வன். சூரியனின் சாரதியாகிய அருணனின் தம்பி. இந்திரசித்து வீசிய நாகபாசத்தால் வீழ்ந்த இலக்குவன் முதலானோரை அதனின்றும் விடுவித்தவன். பறவைகளின் தலைவனாகவும் திருமாலின் ஊர்தியாகவும் விளங்குபவன்.

கலுழன் - 191
சிறை உறு கலுழன் - 608
உவண பதி - 4469
விண் உறு கலுழன் - 5416
வெஞ் சிறைக் கலுழன் - 6277
அண்ணல் கலுழன் - 8244
சிறையான் - 8246
முளையாத திங்கள் உகிரான் - 8267
பறவையின் குலங்கள் காக்கும் பாவகன் - 8271
எறுழ் வலிக் கலுழன் - 8289
வான் உறை கலுழன் - 8295
அருணன் தம்பி - 8299
பறவைக்கு ஏறு - 9478

கலைக் கோட்டு முனிவன்

காசிபனின் மைந்தனான விபாண்டகனின் புதல்வன். மானின் கொம்பைத் தலையில் கொண்டமையால் கலைக்கோட்டு முனி என அழைக்கப்பட்டவன். இருசிகசிருங்கர் என்பது வடமொழிப் பெயர். உரோமபதன் நாட்டில் மழையின்றி வளம் குன்றியமையால் அவன் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டவன். வந்த அளவிலேயே மழை பொழிந்து நாடு வளம் பெற்றது. மகிழ்ந்த உரோமபதன் தன் மகள் சாந்தையை இம்முனிக்கு மணம் செய்வித்தான். தயரதன் வேண்ட புதல்வரை அளிக்கும் வேள்வியைச் செய்தவன். முனிவரில் மிக உயர்ந்தோனாக, தவ ஆற்றலில் மிக்க சிறப்புடையோனாகப் போற்றப்படுகிறவன்.

மாசு அறு சுரர்களொடு மற்றுளோர் தம்மையும்
ஈன்ற காசிபன் அருளும் மைந்தன், விபாண்டகன்,
கங்கை சூடும் ஈசனும் புகழ்தற்கு ஒத்தோன்,
இருங் கலைபிறவும் எண்ணின் தேசுடைத்
தந்தை ஒப்பான், திருவருள் புனைந்த மைந்தன் - 210
ஒரு கலை முகச் சிருங்க உயர் தவன் - 211
புகழ்தற்கு ஒத்த சாந்தன் - 212
தீங்கு அறு குணத்தால் மிக்கு செழுந் தவன் - 213
கலைக் கோட்டுமுனி வரின் வான் பிலிற்றும் - 215
மனிதர் விலங்கு எனவே உன்னும் கோது இல்
குணத்து அருந் தவனை - 216
ஏசு அறு தவன் - 218
கலை வலாளன் - 219
நவை இல் மாதவன் - 222
காமமும், வெகுளியும், களிப்பும் கைத்த
அக் கோமுனி - 226
மா தவக் குன்று எதிர்ந்தனன் - 227
வர முனி - 229
எள்ள அரு முனிவன் - 230
மருள் ஒழி உணர்வுடை வரத மா தவன் - 231
திருந்து மா தவத்து அறிஞன் - 234
அவ்வியும் நீத்து உயர்ந்த மனத்து அருந்தவன் - 241
அரு மறை நூல் வடிவம் கொண்டது அன்ன
முனிவரன், அடிகள் - 242
கலை வலாளன் - 244
அரு மறை வடிவு போன்று ஒளிர் முனிவன் - 245
முதிர்ந்த மா தவமுடை முனி - 249
நல் தவம் அனைத்தும், ஒர் நவை இலா உருப்
பெற்று, இவண் அடைந்ததெனப் பிறங்குவான்
சுற்றிய சீரையும், உழையின் தோற்றமும்,
முற்று உறப் பொலிதரு மூர்த்தியான் தனை,
அண்டர்கள் துயரமும், அரக்கர் ஆற்றலும்,
முற்று உறப் பொலிதரு மூர்த்தியான் - 250
அண்டர்கள் துயரமும், அரக்கர் ஆற்றலும்,
விண்டிடப் பொலிதரும் வினை வலாளன்,
குண்டிகை குடையொடு, குலவு நூல் முறைத்
தண்டொடும், பொலிதரு தடக் கையான் - 251
முதிய நான்மறைக் கொழுந்து மேல் படர்தரக்
கொழுக்கொம்பு ஆயினான் - 252
கலை வலாளன் - 253
அரு மறை வடிவு போன்று ஒளிர் வசிட்டன் - 255

சுருதியே நிகர் கோ முனி - 256
சான்றவர் சான்றவன். தருமம் மா தவம், போன்று ஒளிர் புனிதன் - 257
தகவுடை முனி - 264
அந்தணன் - 271
இரலை நல் சிருங்க மா இறைவன் - 276
ஒண் தவன் - 277
மாதவரில் பெரியோன் - 654
பன்னு மறைப் பொருள் உணர்ந்த பெரியோன் - 655
சொல் பெற்ற நோன்பின் துறையோன் - 2435

கலைமகள்

பிரமதேவனின் துணைவி. கல்விக் கடவுளாதலின் கலைமகள், வாக்கினாள் என்று போற்றப்படுபவள்.

வாக்கினாள் - 1241
கலைமகள் - 1352
வாணி - 3079

கவந்தன் (தனு)

தனு எனும் கந்தர்வன். ஒரு சாபத்தின் காரணமாகத் தலையற்று வயிற்றிலேயே வாயும் கண்ணும் உடைய பூத உருவினன் ஆனவன். கொடிய பசியால் துன்புறுபவன். சீதையைத் தேடி வந்த இராம இலக்குவரால் சாப வீடு பெற்று பழைய அழகிய வடிவம் திரும்பப் பெற்றவன். இராம இலக்குவர், சுக்கிரீவனின் நட்பைப் பெற அறிவுறுத்திச் சவரியிடம் ஆற்றுப்படுத்தியவன்.

இருந்தே நீட்டி எவ் உயிரும் கையின்வளைத்து வயிற்று அடக்கும் கவந்தன் - 3643
ஈண்டிய வயிற்றிடை வாய் எனும் மகர வேலையான் - 3653
வேத நூல் வரன்முறை விதிக்கும் ஐம் பெரும் பாதகம் திரண்டு, உயிர் படைத்த பண்பினான் - 3657
ஓலம் ஆர்கடல் என முழங்கும் ஓதையான் ஆலமே என இருண்டு அழன்ற ஆக்கையான், நீல மால், நேமியான் தலையை நீக்கிய கால நேமியைப் பொரும் கவந்தக் காட்சியான் - 3660
நீர் புகும் நெடுங் கடல் அடங்கும், நேமி சூழ் பார் புகும், நெடும் பகு வாய் - 3662
மாதங்கம் தின்று உய்ந்து இவ் வனத்தின்தலை வாழும் பூதம் - 3673
விடத்தின் கனல் பூதம் - 3675
ஐயம் நீங்கிய பேர் எழில் உவமையன் - 3679
தனு என்னும் நாமத்தேன் - 3693
திக்கு அவம் தர, நெடுந் திரள் கரம், சினவு தோள், அக் கவந்தன் - 3797
விறல் கெழு கவந்தன் - 10140
மன்னிய கவந்தன் - 10220

கவயன்

சீதையைத் தேடித் தென்திசை சென்ற வானர வீரர்களுள் ஒருவன். சீதை மீட்புப் போரில் தன் வீரம் காட்டியவன்.

கவயன் - 5343
கயம் குடைந்து ஆடும் வீரக் களிறு ஒத்தான் கவயன் - 8060
கால வெந் தொழில் கவயனும் - 8616

கவயாக்கன்

சீதையைத் தேடித் தென்திசை சென்ற வானர வீரருள் ஒருவன். பசுவின் கண் போன்ற கண்ணினைப் பெற்றமையால் இப்பெயர் என்பர். கவயாக்ஷன் எனும் வட சொல்லின் தமிழ் வடிவம் இப்பெயர்.

கவயாக்கன் - 5343

கனகன்

இராமனுக்குத் துணையாக, இராம - இராவணப் போரில் ஈடுபட்டவன். இந்திர சித்தின் பிரமாத்திரத்தால் வீழ்ந்தவன்.

கனகன் ஆயிரம் கணை பட விண்ணிடைக் கலந்தான் - 8617

கார்த்தவீரியார்ச்சுனன்

ஆயிரத் தோள்களை உடையவன். அரசர்க் கெல்லாம் அரசனாகக் கோலோச்சியவன். இராவணனை அடக்கியவன். பரசுராமனால் அழிக்கப்பட்டவன்.

அடல் மற மன்னவர் திலகன் - 1274
கான் உயர் வரை நிகர் கார்த்தவீரியன் - 5195
தூயவன் - 5203
ஆயிரம்தோளவன் - 6149
தீட்டுறு மழு வாள் வீரன் தாதையைச் செற்றான் - 6781

காலசங்கன்

அதிகாயனுடன் துணைவந்த அரக்கன், இலக்குவனால் போரில் கொல்லப்பட்டவன்.

காலசங்கன் - 7849

காலன்

அதிகாயனுக்குத் துணைவந்து இலக்குவனால் போரில் கொல்லப்பட்ட அரக்கன்.

காலன் - 7849

குகன்

கங்கைக் கரைவாழ் வேடர்களுக்கு அரசன். ஆயிரக்கணக்கான படகுகளுக்குத் தலைவன், உள்ளம் தூயவன், தாயினும் நல்லவன், நாடு துறந்து வந்த இராமனைக் கங்கைக் கரையில் கண்டு அழுது தொழுது நின்றவன். இராமனை நண்பனாகப் பெற்ற பெரும்பேறுடையவன். தன்னுடனேயே தங்குமாறு அவனை வேண்ட, அவன் மறுத்ததால் அவன் விருப்பப்படி சித்திரகூடத்திற்கு அழைத்துச் சென்றவன். இராமனைத் தேடி வந்த பரதனை முதலில் பிழையாக உணர்ந்து, பின் அவன் கோலம் கண்டு உண்மை உணர்ந்து வருந்தியவன். பரதன் முதலானவரையும் இராமனிடம் அழைத்துச் சென்றவன். இராமன் விருப்பின் படி உடன்செலாது சிருங்கிபேரத்தில் தங்கி இனிது ஆண்டவன். இராமன் நாடு திரும்பிய போது உடன் அயோத்தி சென்று அவன் மகுடம் சூடியது கண்டு களித்தவன்.

ஆயிரம் அம்பிக்கு நாயகன் போர்க் குகன் எனும் நாமத்தான், தூய கங்கைத் துறை விடும் தொன்மையான், காயும் வில்லினன், கல் திரள் தோளினான் - 1953

துடியன், நாயினன், தோற் செருப்பு ஆர்த்த பேர் அடியன், அல் செறிந்தன்ன நிறத்தினான் - 1954

பிச்சராம் அன்ன பேச்சினன் - 1959

சீற்றம் இன்றியும் தீ எழ நோக்குவான், கூற்றம் அஞ்சக் குமுறும் குரலினான் - 1960

நாவாய் வேட்டுவன் - 1963

உள்ளம் தூயவன்; தாயினும் நல்லான்; எற்று நீர்க் கங்கை நாவாய்க்கு இறை; குகன்; பரிவினன் - 1965

எல்லை நீத்த அருத்தியன் - 1966

தீராக் காதலன், யாதினும் இனிய நண்பன்! - 1970

அம்பியின் தலைவன் - 1975

ஆள் முதற்கு அமைந்த கேண்மை அன்பன் - 1978

மெய் உயிர் அனையான் - 1986

குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான் - 2309

வில்லின் கல்வியான் - 2310

வெங்கரியின் ஏறு அனையான், வில் பிடித்த வேலையினான் - 2327

அற்கு ஆணி கண்டனைய அழகு அமைந்த மேனியான் - 2328

துன்று கரு நறுங் குஞ்சி எயினர் கோன் - 2330

கிராதர் வேந்தன், பொய் இல் உள்ளத்தன் - 2336

புளிஞர்கோன் - 2339

தெவ் இடைதர நின்று ஆர்க்கும் செறி கழல் புளிஞர் கோமாஅன் - 2346

கை வீரக் களிறு அனைய காளை - 2368

ஆழ நீர்க் கங்கை அம்பி கடாவிய ஏழை வேடன் - 5091

கிராதர் கோன் - 10246

புளிஞர் கோன் - 10249

முழுது உணர் கேள்வி மேலோன் - 10250

முழு நீர்க் கங்கை தழுவு இரு கரைக்கும் நாதன், தாயினும் உயிர்க்கு நல்லான், வழுவு இலா எயினர் வேந்தன், குகன் எனும் வள்ளல் - 10250

கல் திரள் வயிரத் திண்திரள்தோள் கடுந்திறல் மடங்கல் அன்னான் எற்று நீர்க் கங்கை நாவாய்க்கு இறை குகன் - 10341

எள்ளல் இலாத மொய்ம்பீர் (இராமன்) - 10342

மறு அறு துணைவன் - 10362

நலம் கொள் பேர் உணர்வின் மிக்கோர்(ன்) நலன் உறும் நெஞ்சர் (ன்) - 10364

சரத மா நெறியும் வல்லோர்(ன்) - 10365

குசத்துவசன்

சனகனின் தம்பி, இவன் மகள் மூவரைப் பரதன், இலக்குவன், சத்துருக்கன் ஆகியோர் மணந்துகொண்டனர்.

குசத்துவசப் பேர் நெய்ந் நிறை வேலவன் - 1260

கும்பகருணன்

புலத்தியன் வழித்தோன்றல். விச்சுரவசுவின் மகன். இராவணன் தம்பி. விபீடணனின் அண்ணன். கும்பன், நிகும்பன் இருவரின் தந்தை. குடம் போன்ற காதுகளை யுடையவனாதலால் கும்பகருணன் ஆனான். தேவர்களின் வஞ்சனையால், தன் தவமுடிவில் எப்பொழுதும் தூங்கிக் கொண்டிருக்கும் வரம் பெற்றவன். எனவே வாழ்நாளின் பெரும்பகுதியைத் தூக்கத்திலேயே கழித்தவன். மிகப் பெரிய உடலும் அதற்கேற்ப பெரும் வீரமும் உடையவன். அதனால் வானரரைத் துன்புறுத்தியவன்.

மாற்றான் மனை கவர்ந்து இராவணன் பெரும்பிழை புரிந்த பொழுது அதனைக் கண்டித்தவன். அவன் அதற்கு செவி கொடாது

போருக்கு எழுந்தபோது செஞ்சோற்றுக் கடனுக்காய்ப் போரில் ஈடுபட்டு உயிர் துறந்தவன். போர்க் களத்தில் இராமன் பக்கம் வரும்படி விபீடணன் அழைத்தபோது, அண்ணன்பால் பாசம் முன்னிற்க, 'தம்பியை இன்றி மாண்டு கிடப்பனோ தமையன் மண்மேல்' (7429) என்று வர மறுத்தவன். நீலன், அங்கதன், அனுமன், இலக்குவன், சுக்கிரீவன் முதலியோரிடம் தன் வீரம் காட்டியவன். இறுதியில் இராமனால் அழிக்கப்பட்டவன்.

இறக்குந் தறுவாயிலும் அண்ணனுக்காக மனம் வருந்தியவன். இராமனிடம் தம்பி வீடணனைப் பாதுகாக்கும்படி வேண்டியவன். கை கால்களை இழந்தபின் தன் தலையினைக் கடலுள் ஆழ்த்தும்படி இராமனிடம் வேண்ட அவனும் அவ்வாறே செய்தான்.

கொல் ஈரும் படைக் கும்பகருணன் - 2844
மலையின் வைகும் கயக்கம் இல் துயிற்சி கும்பகருணன் - 4955
கேழ் இல் வெங் கொடியவன் - 4961
கும்பகருணன் - 6117
கும்ப மாக் கிரிக் கோடு இரு கைகளால் கழற்றி, செம் பொன் மால் வரை மதம் பட்டதாம் எனத் திரிந்தான் கும்பகன்னன் என்று உளன் பண்டு தேவரைக் குமைத்தான் - 6563
குன்றினும் உயர்ந்த தோளான் - 7314
இடை பேரா இளையான் - 7326
எண்ணினும் பெரியன் ஆன இலங்கையர் வேந்தன் பின்னோன் - 7329
கதிர வாள் வயிரப் பணைக் கையினான், கதிர வாள் வயிரக் கழற் காலினான் - 7334
சூல மேகம் எனப் பொலி தோற்றத்தான் - 7336
பாம்பு உறங்கும் படர் செவிப் பாழியான் - 7340
குன்று அன கொள்கையான் - 7341
வன் துணைப் பெருந் தம்பி - 7343
அறிவுடை அமைச்சன் - 7361
பிறையுடை எயிற்றவன் - 7377
ஏந்தல் - 7380
தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குறின் நாள் பல கழியுமால், நடுவண் நின்றது ஓர் தாளுடை மலைகொலாம் - 7382
கார் இயல் காலன் அன்ன கழல் கும்பகருணன் என்னும் கூரிய சூலத்தான் - 7385
ஊன் உயர்ந்த உரத்தினான், மேல் நிமிர்ந்த மிடுக்கினான்; தான் உயர்ந்த தவத்தினான், வான் உயர்ந்த வரத்தினான் - 7391
வெந் திறலவன் - 7400
நீதி அறத்தொடும் தழுவி நின்றான் - 7412
மடலுடை அலங்கல் மார்பன் - 7417
தார்க் கோலமேனி மைந்தன் - 7426
அரக்கன் தம்பி - 7458
பெரு வலி அரக்கன் - 7461
புண் திறப்புற வலாளன் - 7467
எவ்வம் இல் ஆற்றலான் - 7470
புலத்தியன் மருமான் - 7499
வளை கொள் வெள் எயிற்று அரக்கன் - 7501
வெம்பு வெஞ் சினத்து இராவணற்கு இளையவன் - 7509
கொடியோன் - 7512
வெம் மலை வேழம் - 7527
அளவு இல் ஆற்றலான் - 7529
சினக் கொடுந் திறலவன் - 7549
காந்து இல் அரக்கன் - 7564
நுணங்கு கல்வியான் - 7577
ஊழித் தீ அவிய ஊதுவான் - 7580
கருணன் - 7584
கருங்கழல் அரக்கன் - 7606
சலத்த காலன், தறுகணர்க்கு அரசன், தருக்கினின் பெரியான் - 7616
தீயினால் செய்த கண்ணுடையான் - 7621
சுந்தரப் பொன் கிரி ஆண்மைக் களிறு அனையான் - 7623
குன்று என நீண்ட கும்பகருணன் - 7704
மதக் களிறு - 7717
சில சில் கணையால் ஆய்ப்புண்டவன் - 7736
கடக் கரியான் - 7755
அம் தார் இளவல் - 7759
சையப் படிவத்து ஒரு தந்தை - 7776
கொற்ற வெஞ் சிலைக் கும்பகன்னன் - 9290
குடப் பெருஞ் செவிக் குன்றம் - 9815

கும்பன் (வானரம்)

வானர சேனையில் ஒரு தலைவன்.

கும்பன் - 4428

கும்பன் (அரக்கன்)

கும்பகர்ணனின் மகன்; அதிகாயனுக்குத் துணையாகப் போரிட வந்தபொழுது சுக்கிரீவனால் அழிக்கப்பட்டவன்.

தும்பி ஈட்டமும் இரதமும் புரவியும் தொடர்ந்த அம்பொன் மாப்படை ஐ- இரு கோடி கொண்டு அமைந்தான் செம்பொன் நாட்டு உள சித்தரைச் சிறையிடை வைத்தான் கும்பன் என்று உளன்; ஊழி வெங் கதிரினும் கொடியான் - 6550

வென்றிக் கும்பன் - 7962
ஆளித் தொழில் அன்னவன் - 7968
தீயவன் - 7971

கும்பானு

முதற்போரில் இராவணன் படைவீரனாக வந்தவன். இராமன் துணையான இடும்பனால் வீழ்ந்தவன்.

கும்பானு - 7078

குமுதன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன். இவன் வலிமை நாகபாசப் படலத்துள் பேசப்பட்டுள்ளது.

குமுதன் - 4422
வயக்குமுதன் - 5343
வெங் கதக் குமுதன் - 8056
கொற்றக் குமுதன் - 8352

குமுதாக்கன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன். குமுதக் கண்ணன் என்றும் அழைக்கப்படுபவன்.

குமுதாக்கன் - 5343
மாறு இல் சயம் தரு குமுதக்கண்ணன் - 10339

குருதிக்கண்ணன்

அரக்கன். மகரக்கண்ணனுக்குத் துணையாகப் போருக்கு வந்து அழிந்தவன்.

குருதியின் கண்ணன், வண்ணக்கொடி
நெடுந்தேரன் கோடைப் பருதியின் நடுவண்
தோன்றும் பசுஞ் சுடர் மேகப் பண்பன் - 8433

குலிசன்

அதிகாயனுக்குத் துணையாகப் போரிட வந்து இலக்குவனால் கொல்லப்பட்ட அரக்கன்.

குலிசன் - 7849

கூற்றுவன்

காலன், மறலி, அந்தகன், நமன், எமன், நிருதி எனப் பலப் பெயர்களுடைய கூற்றுவன் வானவன் ஆவான். தென்திசைக் காவலன். உயிர்களின் ஆயுட்காலம் முடிந்தவுடன் அவற்றைக் கவர்ந்து செல்பவன். கையில் பாசம், தண்டு முதலான படைக்கலன்களைக் கொண்டவன்.

கொடுங் கூற்று - 324
அனல் தறுகண் அந்தகன் - 368
காலன் - 386
கரு நிறச் செம் மயிர்க் காலன் - 541
எண்மரின் வலியன் - 586
மறலி - 916
தென்புலக் கோமகன் - 1861
வெஞ் சினக் கூற்று - 2170
கான்ற இன் உயிர் காலன் - 3028
பிரகர நெடுந் திசைப் பெருந் தண்டு ஏந்திய கரதலத்து அண்ணல் - 3077
தென் திசை நமன் - 3114
கருங் கழல் காலன் - 3177
அந்தகன் - 3238
தென் புலக் கிழவன் - 3887
பாச வெங் கரத்துக் கூற்று - 4707
உயர் காலன் - 4821
நச்சு அறாக் காலன் - 5407
தென் திசை நமன் - 5567
மறலி - 5587
ஏசு இல் தென் திசைக் கிழவன் தன் எரி முனை எழு - 5617
நின்று இசைத்து உயிர் கவர் நீலக் காலன், தென் திசைக் கிழவன் - 5875
எவர்க்கும் இன் உயிர் மற்றும் முறைமை சால் வலியின் மாண்பு அமை கூற்றுவன் - 6094
வெஞ் சினக் கூற்று - 6476
வன்திறல் யமன் - 6537
உம்பர் வாகனத்து ஒரு தனி நமன் - 6577
கொடுங் காலன் - 7074
தென் புலக் கிழவன் - 7135
செங் கண் கூற்று - 7259
பாசக் கையான் - 8055
தென் திசையான் - 8402
வெந் தொழிற் செய்கையன் - 8481
நிருதி - 9266
உலகத்து உறும் உயிர் யாவையும் உண்ண வரு காலனும் அவன் தூதரும் நமன் - 9404

கெந்தமாதனன்

வானரப் படையுள் ஒருவன்.

கெந்தமாதனன் - 8618

கேகயன்

கேகய நாட்டு அரசன். கைகேயியின் தந்தை

கைகயன் - 268

கேகயர்க்கு இறை - 1469

நந்தல் இல் கேகயன் - 1844

கேசரி

அஞ்சனையின் கணவன். அனுமனின் தந்தை. வானரப் படைத்தலைவருள் ஒருவன்.

இம்பர் ஞாலத்தும் வானத்தும் எழுதிய சீர்த்தி நம்பனைத் தந்த கேசரி - 4411

சிவன் காண் அயன்காண் எனும் தூதனைப் பெற்ற செல்வன் அவன்காண் நெடுங்கேசரி என்பவன் ஆற்றல் மிக்கான் - 6889

கேசரி பெரும் போர் பெற்றான் - 8060

கைகேயி

கேகய நாட்டு மன்னன் கேகயனின் மகள். தயரதனின் இரண்டாம் மனைவி. எனினும் அவனின் பிற மனைவியரைவிட முழுமையான அன்பினைப் பெற்றவள். பரதனின் தாய். இராமனை முதலில் தன் புதல்வன்போல் வளர்த்து அன்பு காட்டியவள். அவன்முடிசூடப் போகிறான் என்பது கேட்டு மகிழ்ந்தவள். பின் கூனியாகிய மந்தரையின் சொல்லாற்றலால் மனம் மாறி இராமனைக் காட்டுக்கு அனுப்பத் துணிந்தவள். அவள் அறிவுரைப்படி தயரதன் (சம்பரன் என்னும் அரக்கனுடன் நிகழ்த்திய போரில் துணை செய்தமைக்காக) வழங்கிய இரு வரங்களில் ஒன்றினால் பரதன் முடிசூடவும், மற்றொன்றினால் இராமன் பதினான்கு ஆண்டுகள் வனம் செல்லவும் சூழ்ச்சி செய்தவள்.

தயரதன், 'பரதன் ஆளட்டும் இராமன் காடேக வேண்டாம்' எனப் பன்முறை பலவிதமாகக் கெஞ்சியும் அதற்கு உடன்பட மறுத்தவள். இதனால் தயரதன் அவளையும் அவள் பெற்ற பரதனையும் தன் மனைவி மற்றும் மகன் ஆகார் எனத் துறந்தான். வசிட்டர் முதலானோர் வேண்டியும் உடன்படாது தானே இராமனிடம் அரசன் ஆணை எனக் கூறிக் காடேகச் செய்தவள். தயரதன் உயிர்விடக் காரணமானவள்.

கேகய நாடு சென்றிருந்த பரதன் அயோத்தி திரும்பி உண்மையறிந்து கைகேயியை வெறுத்தான். இறுதிவரை இராமன் இவளிடம் தூய அன்பு பாராட்டினான். இராவணவதை முடிவில் தன்னை வாழ்த்த வந்த தயரதனிடம் இராமன் பெற்ற வரத்தால் மீண்டும் தயரதன் மனைவியானவள்.

மிகத் தூய அன்பினளாக முதலில் பாராட்டப்பெற்றவள், கூனியின் சொற்களால் மனம் மாறியதால் தீயவை யாவினும் சிறந்த தீயள் ஆனவள். தயரதனைத் துன்புறுத்தி வரம் பெற்ற கைகேயியின் எண்ணம் ஈடேறாததால் (பரதன் முடிசூடினும் அயோத்தி வராது நந்தியம் பதியில் துறவு வாழ்க்கை மேற்கொண்டான்; சத்ருக்கனே அவனது சார்பாக ஆட்சிப் பணி புரிந்தான்) அதன்பின் இறுதிவரை அமைதி காத்தவள்.

கைகயன் தனையை - 268

மாசு அறு கேகயன் மாது - 283

கேகயர்கோன் மகள் - 657

கைகயர் வேந்தன் பாவை - 794

சிறிய கோத்தாய் - 1313

பஞ்சி மென் தளிர் அடிப் பாவை - 1331

தொண்டைவாய்க் கேகயன் தோகை - 1447

பாற்கடல் படு திரைப் பவளவல்லியே போல்... கிடந்தாள் - 1448

தெய்வக் கற்பினாள் - 1450

வேற்கணாள் - 1452

ஆழ்ந்த பேர் அன்பினாள் - 1454

ஆயிழை - 1455

மங்கை - 1457

தூயவள் - 1458

கேகயர்க்கு இறை திருமகள் - 1469

வஞ்சி போலி - 1474

தூமொழி மடமான் - 1484

கேகயன் அன்னம் - 1485

மாழை ஒண் கணி - 1486

நளிர் மணி நகையாய் - 1487

யாழ் இசை அஞ்சிய அம் சொல் ஏழை - 1495

படைத் தடங்கண் மென் தோள் ஆயிழை - 1496

மன்றல் அருந் தொடை மன்னன் ஆவி அன்னாள் - 1498

கள் அவிழ் கோதை - 1501

உரம் கொள் மனத்தவள் - 1503

தீயவை யாவையினும் சிறந்த தீயாள் - 1504

நாகம் எனும் கொடியள் - 1505

அம்பு அன கண்ணவள் - 1510

வண்மைக் கேகயன் மான் - 1522

நேர் இல்லாத் தீயவள் - 1524

மரம்தான் என்னும் நெஞ்சினள் - 1528

பசை அற்றாள் - 1536

எரிந்து ஆறாதே இன் உயிர் உண்ணும் எரி அன்னாள் - 1537
வாள் நிலா நகை மாதராள் - 1540
கேகயத்து அரசன் பயந்த விடம், மா கயத்தி - 1542
நெடும் கொடும் பழி கொண்டு அரும் புகழ் சிந்தும் அத் தீ அடங்கிய சிந்தையாள் - 1547
வெம் பாபம் முற்றிய பேதை - 1555
பெண்டிரில் கூற்றம் - 1573
சிற்றவை - 1575
துண்ணெனும் சொல்லாள் - 1578
தோகை - 1591
இரும் பினால் இயன்ற நெஞ்சின் கொன்று உழல் கூற்றம் என்னும் பெயர் இன்றிக் கொடுமை பூண்டாள் - 1599
மாணா உரையாள் - 1644
முனியும் செய்கைக் கொடியாள் - 1646
புகழோடு உயிரைச் சுடு வெந் தீ - 1650
நாவில் நஞ்சம் உடைய நங்கை - 1651
கள்ளக் கைகேசி - 1666
வன் மாயக் கைகேசி - 1676
கேகயர்கோன் கொம்பு - 1695
தீட்டாத வேல் கண் சிறு தாய் - 1716
வேற்றுக் கொடியாள் - 1725
மையின் கரியாள் - 1728
மாயாப் பழியாள் - 1747
தீரா மனத்தாள் - 1748
வெவ் வினையவள் - 1765
தெவ்வர் அம்பு அனைய சொல் தீட்டினாள் - 1768
நிலம் கடிந்தாள் - 1792
அவ் வெவ்விய தாய் - 1858
வடித் தாழ் கூந்தற் கேகயன் மாது - 1905
மையிற் கொடியாள் - 1914
அன்னை - 2142
அசனிஏறு என வெவ் உரை வல்லவள் - 2160
நஞ்சே அனையாள் - 2183
பன்ன அருங் கொடு மனப் பாவி - 2189
கனங்குழை கேகயன் மகள் - 2294
படர் எலாம் படைத்தாள், பழி வளர்க்கும் செவிலி - 2371
நோவது ஆக இவ் உலகை நோய் செய்த பாவகாரி - 2473
சிற்றவை - 2722
அளவு இல் கற்பு உடைய சிற்றவை - 3793
ஈரம் நீங்கிய சிற்றவை - 3854
மாசு அறு கேகயன் மாது - 5422
கொடுங் கைகேசி - 8685
முடியினைப் பறித்து இவ் விரத வேடம் மற்று உதவிய பாவி - 10080
தெவ் வரம்பு அறு கானிடைச் செலுத்தினாள் - 10082
வஞ்சனை இயற்றிய மாயக் கைகையார் - 10201

கோசலை

உலக முதல்வனாகப் போற்றப்படும் இராமனை ஈன்ற பெருமைக்குரியவள். தயரதனின் முதல் தேவி. மிகச் சிறந்த பண்புகளுடையவள். எனவே தயரதன் புதல்வன் நால்வரையும் வேற்றுமையின்றித் தன் மக்களாகவே ஏற்றவள். சுமித்திரையுடன் தோழமை கொண்டவள். தயரதன் இறக்கும் தறுவாயில் அவனுக்கு ஆறுதல் மொழிந்தவள். பரதன் இவள்பால் மிக்க பற்றுடையவன்; தன் தாயாகப் போற்றும் சிறப்புடையவள். இராமன் குகனுடன் நட்புக் கொண்டபோது அவனையும் தன் மகனாகக் கொண்டு,

> நைவீர் அலீர் மைந்தீர்! இனித் துயரால்;
> நாடு இறந்து காடு நோக்கி,
> மெய் வீரர் பெயர்ந்ததுவும் நலம் ஆயிற்று
> ஆம் அன்றே! விலங்கல் திண் தோள்
> கை வீரக் களிறு அனைய காளை இவன்
> தன் னோடும் கலந்து, நீவிர்
> ஐவீரும் ஒருவீர் ஆய், அகல் இடத்தை நெடுங்
> காலம் அளித்திர் (2368)

என வாழ்த்திய மாண்புடையவள்.

தூம மென் சுரி குழல் தொண்டைத் தூய வாய்க் காமரு கோசலை - 267
திறம் கொள் கோசலை - 282
செங் கனி வாய்க் கவுசலை - 656
வள்ளலைப் பயந்த நங்கை - 796
கொண்டல் வண்ணனை நல்கிய கோசலை - 1401
உலகும் யாவையும் மன்வயிற்றின் அடக்கிய மாயனைத் தன்வயிற்றின் அடக்கும் தவத்தினாள் - 1406
ஆற்றல் சால் கோசலை - 1457
விரியும் சிந்தனைக் கோசலை - 1477
நால்வர்க்கும் மறு இல் அன்பினில், வேற்றுமை மாற்றினாள் - 1609
கற்பு உறுத்திய கற்பு உடையாள் - 1620
மெய்த் திறத்து விளங்கிழை - 1631
கணவன் குறையக் குறைவாள் - 1657
கணவன் புகழுக்கு அழிவாள் - 1658
மயில் குலம் அனைய நங்கை கோசலை - 1900

இருந்த அந்தணனோடு எல்லாம் ஈன்றவன் தன்னை ஈனப் பெருந் தவம் செய்த நங்கை - 1901
ஆழி வேந்தன் பெருந்தேவி - 1908
கோது இல் குணத்துக் கோசலை - 1912
அரிவை - 1915
குலம் பொறை கற்பு இவை சுமந்த கோசலை - 2196
கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி, மூன்று உலகும் ஈன்றானை முன் ஈன்றாள் - 2366
உயர் கோசலை - 8685
அரியை ஈன்ற ஒப்பு எழுத ஒண்ணாத கற்புடையாள் - 10175
மனம் தூய்மையாள் - 10184

கௌதமன்

அகலிகையின் கணவன். இந்திரனால் ஏமாற்றப்பட்டு அவனுக்கும் அகலிகைக்கும் சாபமளித்தவன். அகலிகைக்குச் சாபவீடு தந்து இராமன் அழைத்து வர ஏற்றுக் கொண்டவன்.

அவ்வியம் அவித்த சிந்தை முனிவன் - 468
பொய் இலா உள்ளத்தான் - 469
சரம் தரு சாபம் அல்லால் தடுப்ப அருஞ் சாபம் வல்ல வரம் தரு முனிவன் - 471
செய்ய தூயவன் - 472
அன்பால் அழல் தருங் கடவுள் அன்னாய்! - 474
மா தவன் - 476
அருந் தவன், மெய்ம் முனி - 477
கஞ்ச மா மலரோன் அன்ன முனிவன் - 478
கோதமன் - 479

சங்கன்

வானரப்படைத் தலைவருள் ஒருவன்.

தலச் சங்கன் - 4428
சங்கன் என்று உரைக்கின்ற சிங்கம் - 6892

சசி

இந்துராணி (இந்திரன் மனைவி).

சசி - 1241
செம் மா மலராள் நிகர் தேவி - 2592

சடாயு

சூரியனின் தேர்ப்பாகனாகிய அருணனின் மகன். கழுகுகளுக்கு அரசன். சம்பாதியின் தம்பி. தயரதனின் ஆருயிர் நண்பன். பஞ்சவடி வந்த இராம, இலக்குவருக்கும் சீதைக்கும் தந்தையாய் நின்று துணை செய்தவன். சீதையை இராவணன் கடத்திச் சென்ற போது அதைத் தடுத்துச் செய்த போரில் உயிரிழந்தவன். தன் உயிரை இராமனுக்காக இழந்தவன். சீதை இராவணனால் கடத்தப்பட்டதை இராம இலக்குவர்க்கு அறிவித்தவன். இராம இலக்குவரால் நீர்க்கடன் செய்யப் பெற்றவன்.

கழுகின் வேந்தன் - 2690
மந்தரகிரி என வயங்குவான் - 2692
கண் அகல் நீல் நிற வரையினில் பவள நீள் கொடி போல் நிறம் பொலிந்தென, பொலிகின்றான் - 2693
தூய்மையன், இருங்கலை துணிந்த கேள்வியன், வாய்மையன், மறு இலன், மதியின் கூர்மையன், ஆய்மையின் மந்திரத்து அறிஞன் ஆம் எனச் சேய்மையின் நோக்குறு சிறு கணான் - 2694
கோள் இரு-நாலினொடு ஒன்று கூடின ஆளுறு திகிரிபோல் ஆரத்தான், நீளுறு மேருவின் நெற்றி முற்றிய வாள் இரவியின் பொலி மௌலியான் - 2696
அல் பங்கம் உற வரும் அருணன் செம்மலை சிற்பம் கொள் பகல் எனக் கடிது சென்றுதீர் கற்பங்கள் எனைப் பல கண்டுளான் - 2697
வீரன் - 2698
எறுழ் வலிக் கலுழன் - 2699
அருணன் தன் புதல்வன், சம்பாதி பின் பிறந்த சடாயு - 2714
நெறி நீங்கலான் - 2718
கிளர் மௌலியான் - 2727
தூய சிந்தை அத் தோம் இல் குணத்தினான் - 2730
நெருப்பு இடைப் பரப்பும் கண்ணன மின் என விளங்கும் வீரத்துண்டத்தன்; மேரு என்னும் பொன் நெடுங் குன்றம் வானில் வருவதே பொருவும் மெய்யான் - 3403
எருவையின் மன்னன் - 3408
நெடு மூக்கு எனும் நேமியன் - 3426
புள்ளின் வேந்தன் - 3428
பறவைக்கு இறை - 3430
தாதை தன் அன்பின் தோழன் - 3432
எருவைக்கு இறை - 3434
நல்லவன் - 3448
நீள் நிலை அறநெறி நின்றுளோர்க்கு எலாம் ஆணி - 3449
நல் இயல் அருங் கடன் கழித்த நம்பி - 3451
வள்ளியோன் - 3495
சான்றோன் - 3500
எருவைகட்கு இறைவன் - 3523
புண்ணியன் - 3528

தோடு அலர் குழலிதன் துயரின் சென்று அமர் வீடிய சடாயு - 4668
தாக்க அருஞ் சடாயு - 4676
அறம் கடக்கலான் - 4688
மெய்மையோன் - 4689
வன் தோளான் - 4696
எருவைகட்கு அரசன் - 5081
பறவை - 5088
தன் உயிர் புகழுக்கு விற்ற சடாயு - 5305
ஆண் தொழில் தாதை - 5309
வெம் புள்ளின் வேந்தன் - 8918

சத்துருக்கன்

தயரதனின் நான்காம் புதல்வன். சுமித்திரைக்கு இலக்குவனுடன் பிறந்தவன். இராமனுக்கு இலக்குவன் போல் பரதனுடன் இணைபிரியாது வாழ்பவன். இராமன் வரவேண்டிய காலம் கடந்துவிட்டதாக எண்ணிப் பரதன் எரிமூழ்கத் துணிந்து, அரசாட்சியை ஏற்கும்படி இவனிடம் ஆணையிட்டபோது மிகவும் துன்புற்றுத் தனக்கு இராமன்பால் உள்ள அன்பைப் புலப்படுத்தியவன்.

சத்துருக்கன் - 299
இளவல் - 307
இளைஞன் - 308
இளைய வீரன் - 313
பொலங் கழல் குமரன், திரு வளர் மார்பர் தெய்வச் சிலையினன் - 802
அருங் காதலின் பெரியவன் தம்பி, பொரு அருங் குமரன் - 1055
பொரு இல் நான்மறை எனும் நடையினான் - 1056
கோதை சூழ் குஞ்சி அக் குமரன் - 1058
ஏர் புரை தரு தம்பி - 1266
இளையவன் - 1311
தெவ் அரு சிலைக் கை என் சிறுவன் செவ்வியன் - 1452
குரு மணிப் பூண் அரசிளங் கோளரி - 2139
இளைய தோன்றல் - 2237
நம்பி - 2265
கோது இலா அரு மறை குலவும் நூல் வலான் - 2299
தோன்றல் - 2307
பின்னுளோன் - 4662
அம்பரத்து அமைந்த வல் வில் சம்பரன் ஆவி வாங்கி, உம்பருக்கு உதவி செய்த ஒருவனுக்கு உதயம் செய்தநம்பி, முதல்வர் ஆன மூவர்க்கும், நால்வர் ஆன தம்பி - 9005
மூவருக்கும் பின் உளான் - 10167
முத்து உருக் கொண்டு அமைந்தனைய முழு வெள்ளிக் கொழு நிறத்து, முளரிச் செங் கண் சத்துருக்கன் - 10174
மூவருக்கும் இளைய வள்ளல் - 10282

சதவலி (1)

வானரப் படைத்தலைவருள் ஒருவன்; நூறு மடிப்புகளை முகத்தில் உடையவன் என்பது பொருள். சீதையைத் தேடி வடதிசை சென்ற வானரப்படைக்குத் தலைமை தாங்கியவன்.

சதவலி - 4408
வட திசைக் கண் சதவலி - 4456
சதவலி ஆய தக்கோன் - 6890
முனையின் வாளியின் சதவலி என்பவன் முடிந்தான் - 8617

சதவலி (2)

வானரப் படையின் மற்றொரு தலைவன்.

விந்தம் அன்ன தோள் சதவலி - 8618

சதானந்தன்

கௌதமனின் மகன். சனகனின் அவைக்கள முனிவர். சீதையின் திருமணத்திற்காக வைத்திருந்த வில்லின் பெருமையை இராமனுக்குக் கூறியவர்.

மெய் கொள் அருள் முனி மேவினான் - 563
கோதமன் தரு கோ முனி - 565
பூந்தேன் சேக்கைப் புனிதனையே பொரு கேண்மைச் சதானந்தன் என்று உரை வாய்ந்த மாதவன் - 566
வடித்த மாதவன் - 567
ஈறு இலா வன் தபோதனன் - 568
ஈறு இலான் - 616
கோதமன் காதலன் - 617

சம்பரன்

அரக்கர்களுக்கு அரசன்; தயரதனால் வீழ்த்தப்பட்டவன்.

தோடு இவர்ந்த தார்ச் சம்பரன் - 1487
சம்பரன் அனைய அத் தானைத் தானவர் - 2154
சம்பரப் பெயருடைத் தானவர்க்கு இறைவன் - 6152

சம்பாதி

கதிரவனின் தேர்ப்பாகனாகிய அருணனின் மகன். சடாயுவின் அண்ணன். தம்பி சடாயுவுடன் வானுலகு காணச் சென்றபோது, கதிரவன் வெப்பத்தால் இருவரும் தளர்ச்சியுற்றனர். சடாயுவை அவ்வெப்பத்தினின்றும் காக்க அவன் மேல் தன் சிறகினை விரித்துப் பறந்தவன். கதிரவன் வெப்பத்தால் சிறகுகள் தீய, சிறகுகளை இழந்தவன். கீழே விழுந்தவனிடம், "சீதையைத் தேடி வரும் வானர வீரர் 'இராமநாமம்' சொல்ல மீண்டும் சிறகுகள் முளைக்கும்" எனக் கதிரவன் அருள் பெற்றவன்.

அதன்படி, சீதையைத் தேடி மயேந்திர மலை வந்தடைந்த அனுமன் முதலான வானரவீரர் வழி சடாயுவின் மரணம் அறிந்தவன். அவர்களுக்குச் சீதையின் இருப்பிடம் இலங்கை என அறிவித்து அங்குச் செல்ல வழிகாட்டியவன். அவர்கள் அனைவரும் இணைந்து இராமநாமம் சொல்ல மீண்டும் சிறகுகள் பெற்று, கழுகுகளின் வேந்தன் ஆனவன்.

காவல்செய் எருவையின் தலைவன் - 3337
எருவை வேந்தன் - 4669
தரணியில் தவழ் வெள்ளி அம் பெரு மலை பொருவு மேனியான் - 4673
செங்கணான் - 4686
வம் திண் தோள் வலி மாறு இலாதவன் - 4693
சிறையினால் விசும்பு போர்ப்பான் - 4710
பொய் உரைசெய்யான் புள்அரசு - 4711
எருவைக்கு முதல் ஆய சம்பாதி - 5066

சம்பாதி (அரக்கன்)

வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்த போது உடன் வந்தவன்.

சம்பாதி, வினையவன், கனை கழல் காலினன், கருமச் சூழ்ச்சியன் - 6377
தூ நிறச் சுடு படைத் துணைவன் - 6380
கல்வி சால் சூட்சியின் கிழவன் - 6382
பொருள் உற உணர்ந்த அப் புலன் கொள் கேள்வியன் - 6387

சம்புமாலி

அரக்கர் படைத்தலைவருள் ஒருவன். பிரகத்தனின் மகன். அசோகவனத்தில் இராவணன் ஏவலால் அனுமனைப் பிடிக்கச் சென்றவன். அங்கு அனுமனால் கொல்லப்பட்டவன்.

நின்ற குன்று எனக் குவவுத் திண் தோள் பாம்பு இவர் தறுகண் சம்புமாலி - 5550
இலங்கை வேந்தன் போர்ச்சினம் போவது ஒப்பான் - 5551
பெரும் போர் பெற்றான் - 5552
வில் இடும் எயிற்று வீரன் - 5563
சம்புமாலி காலன் தன்மையான் - 5590

சயந்திரன் (சயந்தன்)

இந்திரன் மகன்; காகமாக வந்து சீதையைத் துன்புறுத்தியபோது இராமனால் ஓர் கண் இழக்கும்படித் தண்டிக்கப்பட்டவன்.

இந்திரன் கர்தல் - 5096

சரபங்கன்

இராமனின் காட்டு வாழ்க்கையின் போது தன் இருப்பிடத்திற்கு அவன் வரக் காத்திருந்த முனிவன். வந்தபின் மனைவியுடன் எரிமூழ்கிப் பரமபதத்தை அடைந்தவன். இந்திரனே நேரில் வந்து வானுலகடைய அழைத்தபோதும் அதனை மறுத்தவன்.

நெடுந் தவன் - 2600
பொன் ஆர் சடை மாதவன் - 2601
வால் அறிவான் - 2603
தலை மாதவர் - 2608
தன் (இந்திரன்) நிகர் முனிவன் - 2618
போனவன் அக நிலை புலமையின் உணர்வான் - 2619
ஊழியின் முதல் முனி - 2620
அறிஞன் - 2621
மறை உழவன் - 2624
மான் வரு தனி உரி மார்பன் - 2625
ஒருநெறி-புகலா வேதமும் அறிவு அரு மிகு பொருள் உணர்வோன் - 2628
புனிதன் - 2631

சரபங்கன் மனைவி (பெயரில்லை)

தன் கணவனுடன் தீப்புகுந்து வீடு பெற்றவள்.

நல்லாள் - 2603
காதலி - 2628

சரபன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன். எண்காற் புள்ளாகிய சரபம் போன்ற வலிமையுடையவன் என்பது பொருள்.

சரபன் - 4425
வர பல் நகம்தன்னையும் வேரொடு வேண்டின் வாங்கும் சரபன் - 6890

சலபோசனன்

தயரதன் அறியாது செய்த பிழையால் கண்ணிழந்த தனக்கும் தன் மனைவிக்கும் நீர் கொணர்ச் சென்ற மகன் சுரோசனன் உயிர்விட்டதறிந்து உயிர்விட்டவன். தயரதனுக்கு 'நீயும் என் போல் மகனைப் பிரிந்து துன்புற்று வானுலகை அடைய வேண்டும்' என்று சாபமிட்டவன்.

ஒரு மா முனிவன் - 1677
வள மா தவன் - 1684

சலபோசனன் மனையாள்

பெரும்பாதுகாப்பாக இருந்த மகன் இறந்த துக்கத்தால் தன் கணவனோடு மாய்ந்தவள்.

ஒரு மாமுனிவன் மனை - 1679

சவரி

மதங்கனது தவப்பள்ளியில் இராமனது வரவு நாடி தவமிருந்த தையல். இராமன்பால் மிகுந்த பற்று கொண்டு, அவன் வர அவனுக்கு விருந்தளித்து மகிழ்ந்தவள். இராம இலக்குவருக்குச் சுக்கிரீவனின் இருப்பிடம் செல்ல வழி காட்டியவள். பின் தன் தவ வலிமையால் வீடடைந்தவள்.

தாயினும் உயிர்க்கு நல்கும் சவரி - 3696
ஆண்டுநின்று அளவு இல் காலம் தன்னையே (இராமன்) நினைந்து நோற்கும் சவரி - 3700
அருந் தவத்து அரசி - 3703
வினை அறு நோன்பினாள் - 3704
உழந்து பெற்ற யோகத்தின் பெற்றியாலே தன் உடல் துறந்து தான் அத் தனிமையின் இனிது சார்ந்தாள் - 3706
அமரர் தாழ் சவரி - 3797
மை அறு தவத்தின் வந்த சவரி - 3809
தன்னையே (இராமன்) மறப்பிலாத சவரி - 10220

சனகன்

மிதிலை அரசன். சீதையின் தந்தை. மற்போரில் வல்லவன். சிவன் தன் கார்முகத்தைச் சனகனின் முன்னோன் தேவராதனிடம் ஒப்படைத்தான். வேள்விச் சாலையில் உழுத பொழுது தோன்றிய சீதையைத் தன் மகளாகக் கொண்டு, அக்கார்முகத்தை வளைப்போர்க்கு உரியவள் அவள் என வளர்த்தவன். இறுதியில் இராமன் அவ்வில் ஒடிக்க சீதையை இராமனுக்கு மணம் புரிவித்தவன்.

மதிலையர் கோமான் - 451
தாழும் மா மணி மௌலித் தார்ச் சனகன் - 634
முடிச் சனகர் பெருமான் - 635
மணி அரங்கு நெடு முடியாய் - 638
பொருது உறை சேர் வேலினாய் - 641
விறல் மன்னர் தொழு கழலாய் - 642
மின் உயிர்க்கும் நெடு வேலாய் - 643
தெவ் வேந்தர் உடல் தோட்ட நெடு வேலாய் - 644
கோளுடை விடை அனான் - 679
மல் காக்கும் மணிப் புயத்து மன்னன் இவன் - 688
வள்ளல் - 695
கோன் - 696
கொற்ற நாம வேல் சனகன் - 701
மண் உறை வேந்தன் செல்வம் - 704
மல் வலான் - 731
தாண்டு மா புரவித் தானைத் தண்ணளிச் சனகன் என்னும் தூண் தரு வயிரத் தோளான் - 1031
மங்கையைப் பயந்த மன்னன் - 1033
சனகனாம் ஏ வரும் சிலையினான் - 1040
கந்தையே பொரு கரிச் சனகனும் - 1044
வழு இல் சிந்தனையினான் - 1046
தானை ஏர் சனகன் - 1049
ஆடல் மா மத ஆனைச் சனகர் கோன் - 1115
ஒண்ணுதல் தாதை - 1116
தா இல் வெண் கவிகைச் செங்கோல் - 1117
இடம் படு புகழ்ச் சனகர் கோன் - 1160
மானவர் பெருமானும் - 1178
எள்ளல் இல் கொற்றவன் - 1259
நெய்ந் நிறை வேலவன் - 1260
கனி வாய்ச் சீதை தந்தை, மாதுலன் - 1480
மிதிலைவேந்தன் - 2800
சென்னி நீள் மாலையான் - 4513
ஆழியான் - 4515
செங்கோலான் - 4687
கம்ப மதத்துக் களி யானைக் காவல் சனகன் - 9183

சாந்தை

உரோமபதன் மகள். கலைக்கோட்டு முனியின் மனைவி.

சாந்தை - 233
செவ்வி நுதல் திரு - 244
வனிதை - 245

சாம்பவான் (சாம்பன்)

பிரம்ம தேவனின் மகன். கரடிகளுக்கு அரசன். சுக்கிரீவன் துணைவன். மிக்க அறிவுடையவன். வயதால் மிக மிக முதிர்ந்தவன். மாலியைக் கண்டேன் பண்டை மாலியவானைக் கண்டேன். இரணியன் தன்மையும் கண்டேன், ஆலமாவிடமும் கண்டேன், மதுவினை அனுசனோடும் வேலையைக் கலக்கக் கண்டேன், (9350) எனும் இவன் சொல்லால் இவன் முதுமையை உணரலாம். சாவாத் தன்மை பெற்றவன்.

திருமால் வாமன அவதாரம் எடுத்து மாபலியை வென்ற போது அதை உலகிற்கு முரசு அறைந்து அறிவித்தவன். அப்போது மேருமலையில் மோதியதால் கால்களில் வலு இழந்தவன். சீதையைத் தேடித் தென்திசை சென்ற வானர வீரருள் ஒருவன். இராம - இராவணப் போரில் பங்கேற்றவன். மருத்துமலை பற்றிய செய்திகளை அனுமனுக்குக் கூறி, அவனை எடுத்துவரச் செய்தவன். இதனால் பிரம்மாத்திரத்தால் வீழ்ந்த இலக்குவன் முதல் வானரங்கள் வரை அனைவரும் உயிர்த்தெழ வழிகாட்டியவன்.

சாம்பவானின் சுருக்கமாகச் சாம்பன் என்றழைக்கப்படுகிறான்.

எண்கின் வேந்தன் - 204
சாம்பவான் - 739
தட நெடுவரையை ஏய் உருப் புயச் சாம்பன் - 4418
சாம்பன் - 4455
வரம்பு இல் ஆற்றலான் - 4665
நாலுமுகத்தான் உதவுற்றான் - 4716
அயன் மைந்தன் - 4718
விரிஞ்சன் மகன் - 4729
அலகு இல் கேள்வியின் தன் நிகர் பிறர் இலாத் தகைய சாம்பன் - 6433
கரடிப் பெரும் படை விருத்தன் - 6715
முக் காலமும் மொய்ம் மதியால் முறையின் உணர்வான் புக்கு ஆலம் எழப் புணரிப் புலவோர் கலக்கும் அக் காலம் உள்ளான், கரடிக்கு அரசு ஆகி நின்றான், இக் காலம் நின்றும் உலகு ஏழும் எடுக்க வல்லான் - 6887
கரடிக்கு இறை - 7715
சங்கம் ஏறிய பெரும் புகழ்ச் சாம்பன் - 8614
தன்பெரும் தகைமைக்கு ஒத்த சாம்பன் - 8716
வயிரத் தோளான் - 8719
ஊற்றம் மிக்கான் - 8722
அறிவின் மிக்கான் - 8729
மறைக்கும் எட்டாத பரஞ்சுடர் இவ் உலகம் மூன்றும் தன் இரு தாள் அடக்கிப் பொலி போழ்தின் யான் முரசம் சாற்றும் வேலை - 8730
புலவன் - 8762
கரடிக்கு அரசு - 8769
ஆம்பல் அம் பகைஞன் தன்னோடு அயிந்திரம் அமைந்தோன் அன்னான் - 9343
சாம்பவனாம் எண்கின் வேந்தன் - 9928
வன் திறல் சாம்பன் - 10224

சார்த்தூலன்

முதற்போருக்கு இராமன் முதலாயினோர் செய்துள்ள ஏற்பாட்டை ஒற்றறிந்து இராவணனுக்குக் கூறியவன்.

அறிஞன் - 6949
சார்த்தூலன் - 6953

சாரன்

இராவணனின் ஒற்றன். போருக்கு முன் இராமனின் வானரப் படையை அறிந்து வர அனுப்பப்பட்டவன். வானர உருக்கொண்டு பிற வானரங்களுடன் கலந்து ஒற்றறிந்த பொழுது வீடணனால் வெளிப்படுத்தப்பட்டவன். இராமனால் மன்னிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவன்.

இராவணன் தந்த ஒற்றர்....அவனும் சாரன் - 6773
கரு மன நிருதக் கள்வன் - 6774

சிங்கன்

அரக்கன். மகரக்கண்ணனுக்குத் துணையாக இராவணனால் போருக்கு அனுப்பப்பட்டவன். அதில் பனசனால் கொல்லப்பட்டவன்.

சிங்கன் - 8410
அழற் கொழுந்து ஒழுகும் கண்ணான், சிங்கன் வெங்கணையன், வில்லன் - 8437

சிவன்

முப்பெருந் தெய்வத்துள் ஒருவன். கைலாயத்தில் உறைபவன். ஐந்து முகங்களைக் கொண்டவன். சிவந்த நிறத்தினன். நெற்றிக்கண் கொண்ட முக்கண்ணினன். உமையை மனைவியாகக் கொண்டவன். அவளுக்குத் தன்னில் ஒரு பாதியளித்து உமையொருபாகன் ஆனவன். வானுலக கங்கையைப் பகீரதன் மண்ணுலகுக்குக் கொண்டு வந்த பொழுது அது வீழும் வேகத்தைக் கட்டுப்படுத்த தன் சடைமுடியில் தாங்கியவன். ஐங்கரனையும் ஆறுமுகனையும் பெற்றவன். பிறைச் சந்திரனைச் சூடியவன். கொன்றை மாலை பூண்டவன். புலித் தோலாடை அணிந்தவன். யானை உரியை மேலாடையாகப் போர்த்தியவன். மானைக் கரத்தேந்தியவன். மழுவாயுதப் படையினன். திரிபுரம் எரித்தவன். பாற்கடலில் அமுது கடைந்த பொழுது அதில் தோன்றிய நஞ்சுண்டவன். அதனால் கண்டம் கறுத்தவன். நந்தி வாகனன். காளியோடு நடனம் ஆடியவன். இராவணன் முதலான அரக்கர்க்கு வரமருளியவன். இதனால் இராவணன் கயிலையைத் தூக்கத் துணிந்தான்.

தன்னிடமிருந்த வில்லைச் சனகன் முன்னோனிடம் ஒப்படைத்தவன். அவ்வில்லில் நாணேற்றுபவனே சீதையின் நாயகனாவான் எனும் உறுதி பெற்றது அவ்வில். இராமாவதாரத்தின் போது காற்றின் சேய் அனுமனானவன்.

இராமன் சீதை திருமணத்தை விண்ணின்று கண்டவன். அனுமன் மருத்து மலை கொண்டு வரச் சென்ற போது கண்டு வாழ்த்தியவன். இராவணனின் மூலபலங்களைக் கண்டு அஞ்சிய தேவர்களுக்கு, அவர்களை இராமன் அழிப்பான் என்று ஆறுதல் கூறியவன். இராவண வதையின் இறுதியில் சீதை மீட்சியின் போது இராமனுக்கு அவன் உண்மையை உணர்த்தியவன்.

நம்பன், பரமன், ஈசன், புராரி, முக்கணான், சம்பு, மழவிடையோன், புனிதன், சந்திரமௌலி, பிஞ்ஞகன், இறைவன், மழுவாளன், அட்ட மூர்த்தி, உருத்திரன், நீலகண்டன், சங்கரன், பித்தன் முதலான பல பெயர்களால் அழைக்கப்படுபவன்.

காப்பியத் தலைவன் திருமாலின் அவதாரமாயினும் சிவனும் நன்கு மதிக்கப் பட்டுள்ளான். சைவ வைணவ ஒருமைப்பாட்டை விரும்புபவர் கம்பர் என்பதனைச் சிவனும் திருமாலும் இணைந்த சங்கர நாராயணனைக் 'கண்ணுதல் பொருந்த வரு கண்ணன்' எனச் சுட்டுவது கொண்டறியலாம்.

நீறு அணிந்த கடவுள் - 13
நம்பன் - 14
உமைக்கு ஒரு பாகத்து ஒருவன் - 95
பரமன் - 186
கறைமிடற்று இறை - 192
மதி வளர் சடை முடி மழுவலாளன் - 195
சுடர்மதி சூடினோன் - 203
கங்கை சூடும் ஈசன் - 210
புராரி - 212
தவள் மதி புனை அரன் - 303
பனி நீர்க் கங்கை புடை ஊற்றும் சடையான் - 326
திங்கள் மேவும் சடைத்தேவன் - 339
வாரணத்து உரிவையான் - 340
சுழி படு கங்கைஅம் தொங்கல் மோலியான் - 358
நாள்மதிச் செஞ் சடைக் கடவுள் - 442
செங் கண் ஏற்றவன் செறிசடைப் பழுவத்தில் நிறை தேன் பொங்கு கொன்றை - 456
தாழா முக்கணான் - 470
அழல் தருங் கடவுள் - 474
ஈசன் - 499
வடவரை வல்லி - 581
கறைத் தரு களன் - 597
விடைவலோன் - 607
எயில்(எ)உரித்தவன் - 610
குண்டை ஊர்தி - 613
பாதி மா மதி சூடி - 614
புதை இருளின் எழுகின்ற புகர் முக யானையின் உரிவைப் போர்வை போர்த்த உதைய கிரி என்னும் கடவுள் நுதல் கிழித்த விழி - 629
கண்ணுதல் வானவன் கனகச் சடை - 632
ஏடு அவிழ் கொன்றைப் பூ நின்ற மவுலி - 645
இமைய வில் வாங்கிய ஈசன் - 677
முக் கண் எண் தோளவன் - 678
சம்பு - 679
வார் சடை அரன் - 680
உருத்த புலித் தானை களிற்று உரிவைப் போர்வையான் - 685
மழவிடையோன் - 688
வெள்ளம் அணைத்தவன் - 695
புனிதன் - 725
கற்றை வார் சடை முடிக் கணிச்சி வானவன் - 736
கண்ணுதல் பொருந்த வரு கண்ணன் - 831
மலைமகள் கொழுநன் சென்னி - 857

ஈறு இலான் கயிலை - 964
தழலையே அனையவன் - 1047
கற்றை வார் சடையினான் - 1053
வெள்ளத்தின் சடிலத்தான் - 1122
கார் விடக் கறையுடை கணிச்சி வானவன் வார் சடைப் புடையின் ஓர் மதி மிலைச்ச - 1212
இளஞ் சந்திர மௌலி - 1241
தனி உமை கேள்வன் - 1273
உமையாள் கேள்வன் - 1289
திரிபுரம் எரித்த தேவன் - 1291
நெற்றியில் கண்ணன் - 1292
வெண் மதிப் பாதியான் - 1299
பிஞ்ஞகன் - 1354
உமைக்கு நாதன் - 1421
வனிதை ஓர் கூறினன் - 1438
மான் மறிக் கரத்தான் மழு - 1630
இறைவன் - 1662
முற்றா மதியம் மிலைந்தான் - 1737
பொன் மான் உரியான் - 1743
வெங் கண் நாகக் கரத்தினன், வெண் நிறக் கங்கை வார் சடைக் கற்றையன், கற்புடை மங்கை காண நின்று ஆடுகின்றான், வகிர்த் திங்கள் சூடிய செல்வன் - 1943
தேவதேவன் செறி சடைக் கற்றையுள் கோவை மாலை எருக்கொடு கொன்றையின் பூவும் - 1946
நெடு முடி நிவந்த தூண்டு மா மணிச் சுடர் சடைக் கற்றையின் மாண்ட வால் நிற அருவி அம் மழ விடைப் பாகன் காண் தகும் சடைக் கங்கை - 2052
இந்துமோலி - 2375
முப்புரம் சுடும் ஒருவன் - 2415
மழுவாளி - 2574
விரி வெள்ளி விளங்கு அம் மா மலை அண்ணல் - 2592
ஊர் அறுத்த ஒருவன் - 2652
நிழல் பொலி கணிச்சி மணி நெற்றி உமிழ் செங் கண் தழல் புரை சுடர்க் கடவுள் - 2671
மழுவாலாளன் - 2701
ஈசற்கு முந்திய மலர் கண் ஓர் மூன்று - 2743
முப்புரங்கள் செற்ற சே-வலோன் - 2770
சிவன் - 2863
விடைச் சங்கரன் - 2896
நாகத் தனி ஒரு வில்லி - 2971
பொன்றா மூவர் - 3017
கறுத்த மணிகண்டர் கடவுள் - 3045
புலியின் அதள் உடையான் - 3069
சந்திரமௌலி - 3094
ஓத விடம் உண்டவன் - 3126
இரு-மூன்று வதனத்தோன்தன் தந்தை - 3141
பாகத்தில் ஒருவன் - 3142
தாது உண் சடிலத் தலை வைத்ததண் தரங்கம் மோதும் கடலிற்கிடை முந்து பிறந்த போதே ஓதும் கடுவைத் தன் மிடற்றில் ஒளித்த தக்கோன் - 3201
விடம் உண்ட ஒருத்தன் - 3206
திரிபுரம் எரித்த புங்கவன் - 3327
நாரி பாகத்தன் - 3363
விழி தரும் நெற்றியான் - 3401
புரம் பற்றிய போர் விடையோன் - 3417
எல் இட்ட வெள்ளிக் கயிலைப் பொருப்பு ஈசன் - 3431
தழல்வண்ணன் - 3432
இலக்கு முப்புரங்களை எய்த வில்லியார் - 3510
வீங்கிய வெஞ்சின வீழ்மத வெம்போர் ஓங்கல் உரிக்குள் உருத்திரன் - 3601
பதும பீடத்து உழிப் பெருந் தகைமை சான்ற அந்தணன் உயிர்த்த எல்லாம் அழிப்பதற்கு ஒருவன் ஆன அண்ணலும். . . . ஒழிப்ப அருந் திறல் பல் பூத கணத்தொடும் உறையும் உண்மை - 3695
வெவ் விடத்தினை மறுகு தேவர், தானவர், வெருவல் தவ்விட, தனி அருளு தாழ் சடைக் கடவுள் - 3753
விடைவலான் - 3768
ஆலம் உண்டவன் - 3787
நெடுங் கடவுள் - 3790
பல் இறுத்தவன் - 3792
ஆறு கொள் சடிலத்தான் - 3804
சூலி - 3822
அட்ட மூர்த்தி - 3825
செறுக்கும் வன் திறல் திரிபுரம் தீ எழச் சினவிக் கறுக்கும் வெஞ் சினக் காலன்தன் காலமும் காலால் அறுக்கும் புங்கவன் ஆண்ட பேர் ஆடகத் தனி வில் - 3860
கங்கையின் கணவன் அக் கறை மிடற்று இறைவன் - 3889
முருகன்-தந்த அத் தளிரியல் பாகத்தான் - 3917
நீலகண்டன் - 4006
காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான் - 4055
புரம் எலாம் எரி செய்தோன் - 4064
பஞ்சின் மெல் அடியாள் பங்கன் - 4086
அணங்கு ஆர் பாகன் - 4101

அருங் கடல் நஞ்சம் நுங்கிய கண்ணுதல் - 4150
பரஞ்சுடர்ப் பண்ணவன் - 4168
கண்ணுதல் நுதலினன் கணிச்சி வானவன் - 4246
தேவர்கள் தேவன் - 4689
நாரி ஓர் பாகத்து அண்ணல் - 4708
கயிலையில் இருந்த தேவு - 4751
கண்டத்திடைக் கறையுடைக் கடவுள் - 4817
அகன் கயிலையில் தொலைவு இலோன் - 4825
கரிந்த முன்று எயிலுடைக் கணிச்சி வானவன் - 4878
தொல் புரம் அட்டான் - 4918
சூழ் திரை ஆழி நஞ்சம் கொண்டவன் - 4920
கூடி நான்கு உயர் வேலையும் கோக்க நின்று ஆடினான் - 5012
குழந்தை வெண் மதிக் குடுமியன் - 5043
ஆலம் பார்த்து உண்டவன் - 5056
தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணான் - 5089
பாலமே தரித்தவன் - 5126
நல் மத்தை நாகத்து அயல் சூடிய நம்பன் - 5311
முழு முதல் கண்ணுதல் முருகன் தாதை கைம் மழு - 5646
இமையா முக்கண் ஈசன் - 5671
புரம் சுட வரிசிலைப் பொருப்பு வாங்கிய பரஞ்சுடர் ஒருவன் - 5718
தேவர்க்கும் தேவர் ஆய மூர்த்தி - 5720
சங்கரன் - 5726
மேல்நாள் திரிபுரம் தீயச் செற்ற முக்கணன் - 5727
கயிலையின் ஒரு தனிக் கணிச்சி வானவன் - 5819
தள் இல் முக்கணான் - 5843
நெடுங் கணிச்சி - 5874
புரம் பிழைப்பு அருந் தீப் புகப் பொங்கியோன் - 5907
முத் தலை எ கன் - 5919
முப்புரம் முருங்கச் சுட்ட கொற்றவன் - 5933
துன்னவர் புரத்தை முற்றும் சுடு தொழில் தொல்லையோன் - 5939
துப்பு உறழ் மேனி அண்ணல் - 5940
ஆலம் உண்டவன் - 5941
யாவரும் இறைவர் என்று இறைஞ்சும் மேன்மையன் - 6093
விடையின் பாகன் - 6095
சிகை நிறச் சூலி - 6115
அந்த மான் இடவன் - 6167
தழல் நிறத்தவன் - 6172
மூவரில் பெற்றம் உடையவன் - 6175
நீலகண்டன் - 6178
பித்தன் ஆகிய ஈசன் - 6186
காதும் கண்ணுதல் - 6189
கற்றை அம் சடைக் கடவுள் - 6190
ஐம் முகன் - 6198
மான் இடன் - 6203
முக் கண் தேவன் - 6232
முக்கணான் - 6342
இடைந்தவர்க்கு "அபயம் யாம்!" என்று இரந்தவர்க்கு, ஏறி நீர் வேலை கடைந்தவர்க்கு, ஆகி, ஆலம் உண்டவர் - 6472
நஞ்சினை மிடற்று வைத்த நகை மழுவாளன் - 6476
தாழ் சடைக் கடவுள் - 6487
விடை வரு பாகன் - 6535
முச் சிரத்து அயில் தலைவன் - 6555
எள் இல் ஐம் பெரும் பூதமும் யாவையும் உடைய புள்ளிமான் உரி ஆடையன் உமையொடும் பொருந்தும் வெள்ளியம் பெருங் கிரி - 6568
தேவன் - 6649
துண்டம் கொள் பிறையான் சண்டம் கொள் வேகமாகத் தனி விடை உவணம் தாங்கும் துண்டம் கொள் மறையான் - 6780
சூலம் ஏய் தடக் கை அண்ணல் - 6831
ஆலம் உண்டவன் அடுந் திறல் மிக்கான் - 6885
ஆலவிடம் அன்று வர நின்ற சிவன் - 6901
திரி திறத்து எயில் கணத்து அன்று எரித்தவன் - 6908
கரு மணி கண்டத்தான் - 6940
கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல் - 6996
ஒருங்கே தொடுத்த எண் வகை மூர்த்தி - 7226
கயிலை ஈசன் - 7239
தேவதேவன் - 7241
முளை அமை திங்கள் சூடும் முக்கணான் - 7287
பேய் இருங் கணங்களோடு சுடு களத்து உறையும் பெற்றி ஏயவன் - 7295
மழு வாள் அங்கை ஈசன் - 7301
திரி புரம் எரிய ஆங்கு ஓர் தனிச் சரம் துரந்த செல்வன் - 7307
பிணை ஒன்று கண்ணாள் பங்கன் - 7430
மும் முனை நெடு வேல் அண்ணல் - 7463
திரிபுரஞ் செற்ற தேவன் - 7499
பித்தன் - 7532
யாவர்க்கும் அறிவு அரும் தனி மேனி புனையும் நல் நெடு நீறு - 7601
கண் இமையா ஆலம் கொளீ மிடற்றவன் - 7786

ஆலாலம் உண்டவன் - 7887
உமையொரு பாகன் - 7904
உமை ஒரு கூறன் - 7915
தார் கொன்றையினான் - 8007
சூலமும் மழுவும் தாங்கித் தோள் இரு நான்கும் தோன்ற மூலம் வந்து உலகை உண்ணும் உருத்திர மூர்த்தி - 8055
வானக மணி நீர்க்கங்கை தாங்கினான் - 8187
எண் தோளன் - 8390
ஏழை பங்கத்தன் - 8454
உமைக்கு ஒரு பாகன் - 8463
மூன்று புரமும் பண்டு எரித்துளோன் - 8564
தேவர் காண இருளிடைச் சுடலை ஆடும் எண் புயத்து அண்ணல் வண்ணச் சுருளுடைச் சடையின் கற்றைச் சுற்று எனச் சுடர்வ - 8587
பொன் மலை வில்லினான் - 8596
கொன்றை அலங்கலான் - 8600
முக் கண் புனிதன் - 8739
பரமன் - 8746
ஆயிரம் அருக்கர் ஆன்ற காய் கதிர் பரப்பி ஐந்து கதிர் முகக் கமலம் காட்டி, தூய பேர் உலகம் மூன்றும் தூவிய மலரின் சூழ்ந்த சேயிழை பாகத்து, எண் தோள் ஒருவன் - 8753
வன்னி நாட்டிய பொன் மௌலி வானவன் - 8760
தாணுவின் தோற்றத்தான் - 8943
பாகத் திங்களின் மோலி அண்ணல் - 8944
மூவா முதல் ஈசன் - 8961
பண்டை ஈசனார் - 9007
விடம் துடிக்கின்ற கண்டத்து அண்ணல் - 9009
கயிலையான் - 9019
விடைமேல் வரு விமலன் - 9056
கண்ஆர் நுதல் பெருமான் - 9072
அடும்பு ஆக்கிய தொடைச் செஞ்சடை முதலோன் - 9076
சிவன் ஐம் முகம் உடையான் - 9090
இறுகாலையின் உலகு யாவையும் அவிப்பான் - 9093
கந்தனார் தந்தையார் - 9099
திசைமுகன் மகன் - 9140
ஆர் அழியாத சூலத்து அந்தணன் - 9151
செம்மை காட்டும் ஆலம் கொண்டு இருண்ட கண்டத்து அமரர்கோன் - 9164
மான் மறிக் கரத்து வள்ளல் - 9172
கரந்தை சூடி - 9196
நீரு பூசி - 9197
நீலம் காட்டிய கண்டன் - 9203
கங்கை அம் சென்னியான் - 9243
ஐம்முகன் - 9271
நஞ்சு அடை கண்டன் - 9322
புரம் கடந்த அப் புனிதன் - 9336
புரங்கள் எய்த புங்கவன் - 9372
புரம் சுடு கடவுள் - 9469
பண் அமை குண்டையின் பாகன் - 9472
கண்ணுதல் பரமன் - 9514
ஆனையின் உரி போர்த்தவன் - 9753
நீலம் கொண்டு ஆர் கண்டன் - 9827
வடி மழு வாள் படையான் - 9924
பிறை சூடும் பிஞ்ஞகன் - 9925
வெள் எருக்கஞ் சடை முடியான் - 9940
பரசுடைக் கடவுள் - 10004
எண் வகை ஒருவன் - 10053
உமைகோன் - 10060
ஏறு அமர் கடவுள் - 10063
வரதர்க்கும் வரதன் - 10064
ஆதியான் - 10066
நெற்றியின் அழலும் செங் கண் நீறு அணி கடவுள் நீடு கற்றை அம் சடையில் மேவு கங்கை - 10121
மின்னை ஏய் உமையினான் - 10146
திருமூர்த்தி - 10164
விடையை ஊரும் நாரி ஓர் பாகத்து அண்ணல் - 10231
வேளையே பொடிதாக விழிக்கும் நீள் நுதலின் வெண்பூம் பூளையே சூடுவான் -10317

சீதை

கதைத்தலைவி. இராமனின் மனைவி. சனகன் புதல்வி. சனகன் வேள்விக்காக நிலத்தைத் தோண்டிய போது கிடைத்தவள். திருமகளின் அவதாரம். இராவணனுக்கு வசைமொழிந்து தீக்குளித்த வேதவதியின் மறுபிறப்பு என்றும் கூறுவர். மிதிலைக்கு முனிவர் மற்றும் தம்பியுடன் வந்த இராமனைக் கண்டு காமுற்றவள். இராமன் வில்லொடித்தது கேட்டு மகிழ்ந்தாலும் தன் உள்ளங்கவர் கள்வன் அவன் தான் என்பதனை உறுதிப்படுத்திக் கொண்ட பின்பே மணந்தவள்.

இராமன் காடேகியபோது, 'நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு' என வினவி உடன் சென்றவள். அங்கு அத்திரி முனிவரின் மனைவி அனுசுயை அளித்த அன்பளிப்புகளைப் பெற்றவள். தண்டகவனத்தில் இவளை உணவிற்காகக் கவர்ந்து சென்ற விராதனிடமிருந்து இராம - இலக்குவரால்

மீட்கப்பட்டவள். பஞ்சவடியில் தயரதன் நண்பனான சடாயு காவலிருக்க மகிழ்வுடன் நாட்கள் கழித்தவள். அப்பொழுது சூர்ப்பணகையின் வரவால் சீதை வாழ்வு தடம் புரண்டது. இராமனை அடைய சீதைதான் தடையாய் இருக்கின்றாள் என்று எண்ணி அவளைக் கவர முற்பட்டு இலக்குவனால் சூர்ப்பணகை மூக்கறுபட்டாள். இராவணனிடம் சென்ற அவள், சீதையின் அழகை வருணித்து அவனிடம் காமத்தீ மூட்டினாள். இதனால் இராவணன் மாரீசனை மாயமானாகச் செய்து சீதை முன் விட்டான். அதன் அழகில் மயங்கி இராமனிடம் அதனைப் பிடித்துத் தர வேண்டியவள். திட்டப்படி மாயமான் இராமன் துரத்த வெகுதூரம் ஓடியது. அரக்கர் மாயை உணர்ந்த இராமன் அம்பெய்து அதனைக் கொல்ல, இறக்கும் தறுவாயில் இராமன் குரலில் இலக்குவ, சீதை என்று அலறியது. இதனால் அஞ்சித் துணை நின்ற இலக்குவனை இராமன் பால் அவன் அமைதிப்படுத்தவும் ஏற்காது வற்புறுத்தி அனுப்பியவள்.

இச்சமயம் பார்த்துக் காத்திருந்த இராவணனால் தங்கியிருந்த பர்ணசாலையோடு வான்வழி கவர்ந்து செல்லப்பட்டவள். வழியில் சடாயு கண்டு எதிர்த்தும், காப்பாற்ற இயலவில்லை. தான் அணிந்திருந்த அணிகலன்களைக் கழற்றித் துணியில் பொதிந்து வானிலிருந்தபடி கீழே போட்டவள். அது சுக்கிரீவன் முதலானோர் இருந்த இரலை மலையில் வீழ்ந்தது. சிறையெடுத்த அரக்கனால் இலங்கை அசோக வனத்தில் அரக்கியர் நடுவே சிறைவைக்கப்பட்டவள். அங்கு வீடணனின் மகள் திரிசடை, தாய் போல் துணையாகி, அரக்கியரிடமிருந்தும் அரக்கனின் வஞ்சனைகளிலிருந்தும் பாதுகாத்தாள். தான் கண்ட கனவு மற்றும் நிமித்தம் இவற்றின் பலனை, திரிசடை கூற மனந்தேறினவள்.

பிரம்மனிடமிருந்து பெற்ற வசைமொழியால் இவளைத் தீண்ட அஞ்சிய இராவணனின் கொடுஞ் சொற்களாலும் அவன் விதித்த காலக் கெடுவாலும் மனம் சோர்ந்து தற்கொலைக்கு முயன்றவள். சரியான சமயத்தில் இராம தூதனாக அவளைத் தேடி வந்த அனுமன் தோன்றி அச்செயலை நீக்கினான். அவன் வழி இராமனின் அப்போதைய நிலையறிந்தவள். அவன் கொண்டுவந்த கணையாழியினைப் பெற்றுக் கொண்டவள். அனுமன் இராமனிடம் தான் சேர்த்து விடுவதாக அழைக்க, யாருடைய உதவியுமின்றித் தன்னாலேயே சிறை வீடு பெற இயலும் என்ற போதிலும் இராமனே வந்து மீட்டுச் செல்லுதலே அவனுக்கும் அவளுக்கும் பெருமை என மறுத்துரைத்தவள். அவன் வந்து சென்றதற்கடையாளமாகத் தன்னிடமிருந்த சூடாமணியைக் கொடுத்தனுப்பினவள். அனுமனுக்குச் சாகா வரமளித்து, இன்னும் இருதிங்கள் மட்டுமே தான் இங்குக் காத்திருப்பதாகவும், அதற்குள் இராமனால் மீட்கப்பட வேண்டும் என்றும் கூறியனுப்பியவள். இராவணன் ஆணையால் அனுமன் வாலில் நெருப்பிடப்பட்டதையறிந்து, 'எரியே நீ அவனைச் சுடாதே' என வேண்டிக் குளிர்வித்தவள்.

அறிவுரைகளாலும் சுடுமொழிகளாலும் இராவணனைத் திருத்த முயன்று தோற்றவள். மாயா சனகனைக் கொணர்ந்து அவன் இவளைத் துன்புறுத்தியபோதும், பிரம்மாத்திரத்தால் அனைவரும் மாண்டதறிந்து அவர்களுடன் இராமன் மயங்கிக் கிடந்ததைக் காணுமாறு செய்தபோதும் துன்பத்தின் எல்லை கண்டவள். திரிசடை இவற்றின் பொய்ம்மையை எடுத்துரைத்துத் தேற்றத் தெளிந்தவள்.

இராவணன் அழிந்தபின் அவ்வெற்றிச் செய்தியை அனுமன் வழி முதலில் அறிந்தவள். இராமன் கூறியபடித் தன்னை அலங்கரித்துக் கொண்டு அவனைக் காணச் சென்றவள். அங்கு இராமனின் சுடுமொழிகளால் துயருற்று இலக்குவனைத் தீமூட்டச் செய்து அதில் மூழ்கித் தன் கற்பின் வலிமையைக் காட்டியவள். பின் இராமன் ஏற்றுக்கொள்ள அவனுடன் அயோத்தி திரும்பியவள். இராமன் முடிசூட அவன் பட்டத்தரசியும் ஆனவள்.

தனக்குத் துயரிழைத்த அரக்கியரைக் கொல்ல அனுமன் அனுமதி வேண்டியபோது அதைத் தடுத்து அவர்களைக் காத்துத் தன் இரக்கக் குணத்தைக் காட்டியவள். நாடு திரும்புகையில் தனக்குப் பல்லாற்றானும் துணையாய் நின்ற திரிசடையை இலங்கையின் காக்கும் தெய்வமாக்கித் தன் நன்றிக்கடன் செலுத்தியவள். இராமன் முடிசூடல் கண்டு, வந்திருந்தோர் அனைவரும் திரும்பியபோது அனுமனுக்குத் தனக்குக் கலைமகள் தந்த பருமுத்த மாலை வழங்கி அவனைப் பெருமைப்படுத்தியவள்.

சீதையின் அழகும், கற்பின் பெருமையும் நூல் முழுமையும் சிறப்பிக்கப்படுகிறது. கற்பின் கனலியான இவள் பெண்ணுக்கு அரசியாகப் போற்றப்படுகிறாள். சனகி, சானகி, வைதேவி, சுந்தரி, திரு எனவும் அழைக்கப்படுகிறாள். புரவலன் தேவி, ஆரியன் தேவி, உத்தமன் தேவி, காகுத்தன் மனைவி என்பன போன்று இராமனுடன் இணைத்து இவள் பெருமை

சுட்டப்படுகிறது. குயில், மயில், அன்னம், மான், கிளி, தேவி, பொன், பெண்கனி என இக்கற்புத் தீ பலவாறாகப் போற்றப்படுதலும் அறியத்தக்கது.

செய்யவள் - 480

வரம்பு இல் பேர் அழகினாள் - 481

சீதை - 483

பொன்னின் சோதி, போதினின் நாற்றம், பொலிவேபோல் தென் உண் தேனின் தீம் சுவை செஞ் சொற் கவி இன்பம், அன்னம் - 502

உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக் கரம் வைக்கும் கமையாள் - 504

உம்பர் அளிக்கும் அமுது ஒத்தாள் - 505

தன் நேர் இல்லா மங்கையர், 'செங்கைத் தளிர் மானே! அன்னே! தேனே! ஆர் அமிழ்தே!' என்று அடி போற்றி, முன்னே, முன்னே, மொய்ம் மலர் தூவி, முறை சார, பொன்னே சூழும் பூவின் ஒதுங்கிப் பொலிகின்றாள் - 509

சதகோடி மின் சேவிக்க மின் அரசு என்னும்படி, நின்றாள் - 510

குன்றும் சுவரும் திண் கல்லும் புல்லும் கண்டு உருக பெண் கனி நின்றாள் - 511

மங்கையர்க்கு இனியது ஒர் மருந்தும் ஆயவள் - 512

எண்ண அரு நலத்தினாள் - 514

அணங்கு அனையவள் - 515

வாள் கண் நங்கை - 516

மருங்கு இலா நங்கை - 517

பைந்தொடி ஒவியப் பாவை போன்றவள் - 518

பிறை எனும் நுதலவள் - 519

மிளிர்ந்திடும் அயில் கொள் கண்ணினாள் - 522

பொலங் குழை மயில் - 524

காதொடும் குழை பொரு கயற்கண் நங்கை - 525

மென் மலர்க் கொம்பு - 528

உருகு பொற் பாவை - 531

அன்ன மென் நடையவள் - 540

எளியள் பெண் - 547

பூவை - 558

விண்ணின் நீங்கிய மின் உரு - 619

நங்கை - 666

கன்னி - 673

தேர் முக அல்குலாள் - 680

உழுகின்ற கொழு முகத்தின், உதிக்கின்ற கதிரின் ஒளி பொழிகின்ற, புவி மடந்தை திரு வெளிப் பட்டென, புணரி எழுகின்ற தெள் அமுதோடு எழுந்தவளும், இழிந்து ஒதுங்கித் தொழுகின்ற நல் நலத்துப் பெண் அரசி தோன்றினாள் - 682

குணங்களை என் கூறுவது? கொம்பினைச் சேர்ந்து அவை உய்யப் பிணங்குவன; அழகு இவளைத் தவம் செய்து பெற்றது; கணங் குழையாள் - 683

திரு - 684

கல் வில்லோடு உலகு ஈந்த கணங் குழை - 686

பொம்மென்ன வண்டு அலம்பும் புரி குழல் - 687

மலர்க் குழல் சீதை - 689

நாணுடை நங்கை, வாள் நுதல் மங்கை - 693

நரந்த நறைக் குழல் நங்கை - 694

பீன தனத்தவள் - 696

தேட அரு மா மணி சீதை எனும் பொன் சூடக வால் வளை - 698

கொம்பு - 708

சிற்றிடை, பெரிய கொங்கை, சேயரிக் கரிய வாள் கண் பொன்தொடி மடந்தை - 709

விரைக் கருங் குழலி - 1067

போது அரிக் கண் பொலன் குழைப் பூண் முலைச் சீதை - 1086

தேம்பு சிற்றிடைச் சீதை - 1093

தூமத்து ஆர் குழல் தூ மொழித் தோகை - 1102

திங்கள் தங்கள் குலக்கொடி சீதை - 1114

ஒண்ணுதல் - 1116

மா இயல் நோக்கினாள் - 1117

பெண்ணுக்கு அரசி - 1118

மொய் கொள் சீறடியைச் சேர்ந்த முளரிக்கும் செம்மை ஈந்த தையலாள் - 1125

தலை அவிழ் கோதை ஓதிச் சானகி - 1127

சில் இயல் ஒதி - 1128

ஆடல் பை அரவு அல்குலாள் - 1130

வையக மடந்தைமார்க்கும், நாகர் கோதையர்க்கும், வானத் தெய்வ மங்கையர்க்கும், எல்லாம், திலகம் - 1132

கை வளர் மயில் அனாள் - 1134

கஞ்சத்துக் களிக்கும் இன் தேன் கவர்ந்து உணும் வண்டு போல, அம் சொற்கள் கிள்ளைக்கு எல்லாம் அருளினாள் - 1135

அருந்ததி அனைய கற்பின் நங்கையும் நம்பி ஒத்தாள் - 1137

நந்தல் இல் விளக்கம் அன்ன நங்கை - 1139

மண் முதல் அனைத்து உலகின் மங்கையருள் எல்லாம், கண்மணி எனத் தகைய கன்னி - 1142

கன்னி அமிழ்தம் - 1146

அல்லி மலர் புல்லும் மங்கை - 1148

துன்று புரி கோதை - 1149

நைவளம் நவிற்று மொழி - 1150
போதினை வெறுத்து, அரசர் பொன் மனை புகுந்தாள் - 1151
நச்சுடை வடிக் கண் மலர் நங்கை - 1152
அருங் கலன் அணங்கு அரசி - 1154
கணங்குழை - 1155
வல்லி பொரு சிற்றிடை மடந்தை - 1156
ஆடக வளைக் குயில் - 1161
தேன் அமர் குழலாள் - 1178
அலர் மிசை உறைவாள் - 1180
ஒலி கடல் உலகினில், உம்பர், நாகரில், பொலிவது மற்று இவள் பொற்பு - 1213
ஆர்வத்து இன் துணை அன்னம் - 1244
தையல் - 1248
மடம் படு சிந்தையள் - 1249
நல் மகனுக்கு இவள்நல் அணி - 1254
சங்க வளைக் குயில் - 1255
பெண்ணின் அணங்கு அனையாள் - 1256
மால் கடல் பொங்கும் மனத்தவள் - 1257
சனகன் தரு தயல் - 1263
மழைவாய் மின்னே புரை இடையாள் - 1266
மண்ணினும் நல்லவள்; மலர் மகள்; கலை மகள், கலை ஊர் பெண்ணினும் நல்லவள்; பெரும் புகழ்ச் சானகி - 1362
சிவந்த வாய்ச் சீதை - 1461
சனகி ஆம் கடி கமழ் கமலத்து அவ்வை - 1494
வாம மேகலை மங்கை - 1543
தகுதற்கு ஒத்த சனகன் தையல் - 1664
எழுது பாவை - 1819
சீரை சுற்றித் திருமகள் - 1835
தாமரைப் பொன் - 1839
வாழ்வினை நோக்கி(யவள்) - 1877
சோர்வு இலாள் - 1879
வெஞ் சிலைப் புருவத்தாள் - 1890
மிதிலைப் பொன் - 1898
பொய்யோ எனும் இடையாள் - 1926
கடல் அமுதின் தெளிவு அன்னது ஓர் மொழியாள், நிறை தவம் அன்னது ஓர் செயலாள், வெளி அன்னது ஓர் இடையாள் - 1927
மங்கையர்க்கு விளக்கு அன்ன மான் - 1941
பஞ்சி மெல் அடிப் பாவை - 1945
பால் உடை மொழியாள் - 1987
அணி இழை மயில் - 1998
வாளும் வேலும் விட்டு அளாயின அனைய கண் மயில் - 2047
குருதி வாள் எனச் செவ் அரி பரந்த கண் குயில் - 2048
உவரிவாய் அன்றிப் பாற்கடல் உதவிய அமுது - 2050
ஆடுகின்ற மா மயிலினும் அழகிய குயில் - 2057
வில்லி வாங்கிய சிலை எனப் பொலி நுதல் விளக்கு - 2058
ஒருவு இல் பெண்மை என்று உரைக்கின்ற உடலினுக்கு உயிர் - 2059
வீறு பஞ்சினில் அமிழ்த நெய் மாட்டிய விளக்கு - 2060
சீலம் இன்னது என்று அருந்ததிக்கு அருளிய திரு - 2061
வில் கொள் வாள் நுதல், விளங்கு இழை, இளந் தளிர்க் கொழுந்து - 2062
சுழித்த செம்பொனின் தொளைபுரை உந்தியின் துணை - 2066
நினைந்த போதினும் அமிழ்து ஒக்கும் நேரிழை - 2069
மடந்தைமார்களில் திலகம் - 2072
குழுவு நுண் தொளை வேயினும் குறி நரம்பு எயிற்று, எழுவு தண் தமிழ் யாழினும், இனிய சொல் கிளி - 2073
வடுவின் மா வகிர் இவை எனப் பொலிந்த கண் மயில் - 2075
அலம்பு வார் குழல் ஆய் மயில் பெண் அருங்கலம் - 2077
தெரிவைமார்க்கு ஒரு கட்டளை எனச் செய்த திரு - 2078
ஏந்திழை - 2082
தேவி - 2300
நல் நெடுங் கூந்தல் - 2459
சனகன் பூ - 2466
முத்து இருத்தி, அவ் இருந்தனைய மொய்ந் நகை - 2517
அணிகலன், துன்னு தூசினொடு சந்து, இவை சுமந்த சனகன் பொன் - 2520
மானே அனையாள் - 2609
இந்து-நன்னுதல் - 2656
செருக்கு இல் சிந்தையள் - 2658
பாகு அனைய சொல்லி - 2689
மலர்மகட்கு உவமையாள் - 2703
பெய் வளை அன்னம் அன்ன அணங்கு - 2725
பெண்ணிடை அரசி - 2788
மீன் சுடர் விண்ணும் மண்ணும் விரிந்த போர் அரக்கர் என்னும் கான் சுட முளைத்த கற்பின் கனலி - 2789
அமுதின் வந்த அருந்ததிக் கற்பின் அம் சொல் வேய் இடை தோளினாள் - 2796
மிதிலைவேந்தன் பொன் - 2800
மாண்ட கற்புடையாள் மலர் மா மகள் - 2819
படி இலாள் - 2821

இந்து நோக்கிய நுதலி - 2822
குழையுறு மதியம் பூத்த கொம்பனாள் - 2939
யாவர்க்கும் எழுத ஒணாத தன்மையன் இராமனோடும் தாமரை தவிரப் போந்தாள், மின்வயின் மருங்குல் கொண்டாள், வேய்வயின் மென் தோள் கொண்டாள், பொன்வயின் மேனி கொண்டாள் - 3133
மேகத்தில் பிறந்த மின்னை வென்ற நுண் இடையினாள் - 3142
பிள்ளைபோல் பேச்சினாள் - 1343
சிற்றிடை சீதை என்னும் மான் - 3145
மயிலுடைச் சாயலாள் - 3151
மிதிலை சூழ்ந்த செந்நெல் அம் கழனி நாடன் திரு மகள் - 3176
துப்பு அழி செவ் வாய் வஞ்சி - 3242
புரவலன் தேவி - 3272
நன் மான் அனையாள் - 3279
வைதேவி - 3281
நெற்றிப் பிறையாள் - 3284
பூண் துஞ்சு பொலங் கொடி - 3287
புனையிழை - 3292
ஐய நுண் மருங்குல் நங்கை - 3298
கான் இயல் மயில் அன்னாள் - 3304
பொன் அனாள் - 3305
சந்திரற்கு உவமை சான்ற வதனத்தாள் - 3306
மழைக் கண் ஏழை - 3316
கொங்கு அடுத்த மலர்க் குழல் கொம்பனாள் - 3319
தூ மனத்து அருந்ததி - 3341
பாகு இயல் கிளவி - 3343
பொற்பினுக்கு அணி, புகழின் சேக்கை, கற்பினுக்கு அரசி - 3344
தூங்கல் இல் குயில் கெழு சொல்லின் உம்பரும் ஓங்கிய அழகினாள் - 3345
சேயிதழ்த் தாமரைச் சேக்கை தீர்ந்து இவண் மேயவள் மணி நிற மேனி - 3347
கற்பினாள் - 3351
காகுத்தன் மனைவி, மறு இல் கற்பினாள் - 3357
ஆயிழை - 3358
சேயிழை - 3370
கவினும் வெஞ் சிலைக் கை வென்றிக் காகுத்தன் கற்பினள் - 3385
பொறைதான் உரு ஆனது ஒர் பொற்பு உடையாள் - 3389
உத்தமன் தேவி - 3407
அணங்கு - 3409
பேர் உலகின் மாதா அனையாள் - 3411
படர் கற்பினாள் - 3436
மெல்லியலாள் - 3438
ஆரியன் தேவி - 3458
வஞ்சி - 3461
பயில் பூவை அன்ன குயில், ஆணிப் பசும் பொன் அனையாள் - 3472
தோடு இவர்ந்த பூஞ் சுரி குழலாள் - 3473
கனங் குழை அணங்கு - 3474
அம் சொல் மயில், அருந்ததி - 3505
பிள்ளைச் சொல் கிளி அன்னாள் - 3514
வடுக் கண் வார் கூந்தலாள் - 3515
அருந்ததி அனைய கற்பின் காதலாள் - 3527
பெண் இயல் தீபம் அன்ன பேர் எழிலாள் - 3545
பொடித்த தண் தளிர்ப் பூவொடு மால் கரி ஒடித்த கொம்பு அனையாள் - 3549
வேத வேள்வி விதிமுறை மேவிய சீதை - 3555
வெள்ளம் சிலம்பு பாற்கடலின் விரும்பும் துயிலை வெறுத்து, அளியும் கள்ளும் சிலம்பும் பூங்கோதைக் கற்பின் கடலின் படிவாள் - 3568
குயிலும், கரும்பும், செழுந் தேனும், குழலும், யாழும், கொழும் பாகும், அயிலும், அமுதும் சுவை தீர்த்த மொழி - 3569
பொன் - 3572
மண்படி செய்த தவத்தினில் வந்த கள்படி கோதை - 3574
நாரி - 3575
பொன்னைப் பொருகின்ற பொலங் குழையாள் - 3610
பொன் தோடு இவர்கின்ற பொலங் குழையாள் - 3611
கமையாள் - 3616
தண் நறுங் கருங் கழல் சனகன் மா மகள் - 3639
நிலம் பொறை இலது என, நிமிர்ந்த கற்பினாள், நலம் பொறை கூர்தரும் மயில் - 3642
தேமொழி - 3648
தோகை - 3664
இன் சொல்லாம் வல்லி - 3666
இணை இலாள் - 3694
புரிகுழல் - 3715
கற்பு எனும் கிளிப் படா மொழியவள் - 3717
மலர்க் கொம்பு அனைய மடச் சீதை - 3738
உயர் புகழ்த் தேவி - 3912
திருமகள் அனைய அத் தெய்வக் கற்பினாள் - 3913
வாள் நெடுங் கண்ணி - 3921
திருந்திழை - 3923
கரும்பு அழி சொல்லி - 3925
சனகன் பெற்ற அன்னம், அமிழ்தின் வந்த தேவி - 4020

வனிதை - 4071
யாழ் இசை மொழி - 4135
ஓவியமே என ஒளிக் கவின் குலாம் தேவி - 4148
இன் நகைச் சனகி - 4162
அணங்கு அருஞ் சீதை - 4186
சனகன் மான் - 4191
கிளவி தேனினும் அமிழ்தினும் குழைத்தவள் - 4197
தூவி அன்னம் அன்னாள் - 4198
இழை வாள் நுதலாள் - 4202
ஓடை வாள் நுதலினாள் - 4207
தாமரை மறந்த தையல் - 4208
மடந்தை - 4212
நின் (ராமன்) தனு எனும் திரு நுதலி - 4214
மைத் தகு மணிக் குறு நகைச் சனகன் மான் - 4231
அப்பு உருக் கொண்ட வாள் நெடுங் கண் ஆயிழை துப்பு உருக் குமுத வாய் - 4238
ஆய்வளை - 4240
மயில் - 4241
பைந்தொடி - 4249
மிதிலை நாட்டு அன்னம் - 4259
அரசன் தேவி - 4381
வள்ளல் தேவி - 4454
யாம யாழ் மழலையாள் - 4480
நரம்பையும், அமிழ்தம் நாறும் நறவையும், நல் நீர்ப் பண்ணைக் கரும்பையும் கடந்த சொல்லாள் - 4482
சட்டகம் தன்னை நோக்கி, யாரையும் சமைக்கத் தக்காள் - 4484
அரவிந்தம் துறந்தாள் - 4488
நன் கையாள் - 4491
அன்னம் அன்ன நல் இயலாள் - 4506
குயில் - 4507
மீன் நின்ற கண்ணினாள்தன் மென் மொழி - 4509
பா வரும் கிழமைத் தொன்மைப் பருணிதர் தொடுத்த, பத்தி நா அருங் கிளவிச் செவ்வி நடை வரும் நடையள் - 4510
எந் நிறம் உரைக்கேன்?_மாவின் இள நிறம் முதிரும்; மற்றைப் பொன் நிறம் கருகும்; என்றால், மணி நிறம் உவமை போதா; மின் நிறம் நாணி எங்கும் வெளிப்படா ஒளிக்கும்; வேண்டின், தன் நிறம் தானே ஒக்கும்; மலர் நிறம் சமழ்க்கும் அன்றே! (இராமன்) - 4511
திங்கள் வாள் முகத்தினாள் - 4512
மின் திசைத்திடும் இடைக் கொடி - 4522
சில் அல் ஓதி - 4525
ஏழை மான் - 4537
அருந்ததி எனத் தகைய சீதை - 4570
நாள்மலர்ப் பெண் - 4604
வினைய வார் குழல் திரு - 4616
களி உறக் கனிந்த காமர் பண் உறு கிளவிச் செவ் வாய், படை உறும் நோக்கினாள் - 4619
அரக்கனால் வஞ்சிப்புண்ட சீதை - 4620
தொழுகின்ற சனகன் வேள்வி தொடங்கிய சுருதிச் சொல்லால் உழுகின்ற பொழுதின், ஈன்ற ஒரு மகள் - 4621
ஆய் வளை மயில் - 4623
அழகினுக்கு அழகு செய்தாள் - 4626
சுரி குழல் தோகை - 4631
துன்று அல் ஓதி - 4646
உழைத் தடங் கண்ணி - 4648
பூ வரு புரி குழல் பொரு இல் கற்புடைத் தேவி - 4650
நளினத்தாள் - 4654
சனகி என்று உலகம் சாற்றும் விரத மா தவத்தின் மிக்க விளக்கு - 4662
நல் நுதல் தேவி - 4667
தோடு அலர் குழலி - 4668
பைந் தார் எங்கள் இராமன் பத்தினி, செந் தாள் வஞ்சி - 4991
சனகன் காதல் பெண் - 4703
பாகு ஒன்று குதலையாள் - 4706
பொலங் குழை மயில் - 4731
பெண்மை நீங்காத கற்புடைய பேதை - 4880
அந்தம் இல் கீழ்த் திசை அளக வாள் நுதல் சுந்தரி முகம், சிறையின் எய்திய செல்வி - 4987
நாயகற்கு உயிரினும் இனியாள் - 5030
கான் உயர்த்த தார் இராமன்மேல் நோக்கிய காதல் காரிகையார் - 5035
காந்தள் மெல் விரல் சனகி - 5044
காவி அம் கண்ணி - 5047
வார் தேன் உகும் தகை மொழியாள் - 5048
வாள் ஆற்று கண்ணாள் - 5053
பொன் துன்னும் மணிப் பூணாள் - 5059
கற்பு அழியாக் குல மகள் - 5060
ஊழியான் பெருந் தேவி - 5063
வடித்து ஆய் பூங் குழலாள் - 5067
மயில் இயல் குயில் மழலையாள் - 5072
ஒவியம் புகையுண்டதே ஒக்கின்ற உருவாள் - 5079
நவை இல் கற்பினாள் - 5108
மென் சொலாள் - 5120

அழகன் தேவி - 5129
விரி மழைக் குலம் கிழித்து ஒளிரும் மின் - 5131
இரு நிறத்து உற்றவேற்கு இயைந்த காந்தம் - 5131
கமலக் கண்ணார் உள்உறை உயிர் - 5133
கமலச் செல்வி - 5134
தேவி - 5135
காசுண்ட கூந்தலாள் - 5136
வனிதையர் திலகம் - 5137
கேழ் இலாள் - 5139
சந்திர வதனத்து அருந்ததி - 5149
பெண்ணின் விளக்கு எனும் தகையாள் - 5166
சானகி - 5168
புனித மா தவத்து அணங்கு - 5208
பழிப்பு இலாதாய் - 5215
போது அரிக் கண்ணினாள் - 5218
நல்லாள் - 5225
நெறிந்து ஆர் ஒதிப் பேதை - 5227
தொண்டை வாய் மயில் - 5249
நெய் உறு விளக்கு - 5252
சுந்தரி - 5306
பவளக் கொடி அன்னவள் - 5312
வில் கூடு நுதல் திரு - 5321
வஞ்சிஅம் மருங்குல் அம் மறு இல் கற்பினாள் - 5333
தூண்டல் இல் விளக்கு அனாள் - 5335
திருவின் முகத்துத் திருஆனாள் - 5340
புண்டரிகை போலும் இவள், அண்ட முதல் நாயகன் ஆவி - 5345
பொன் திணி பொலங்கொடி - 5347
நெறிந்த குழல் - சீதை - 5348
அன்னை - 5349
மருந்து அனைய தேவி - 5350
இந்து நுதல் - 5353
அம் சொல் இள வஞ்சி - 5354
உலகுடை நாயகன் தன் துணைப் பெருந்தேவி - 5371
நல்லோய் - 5386
பூண்டாள், கற்புடையாள், பொய்யாள் - 5390
சனகி என்று ஒரு தழல் - 5403
குரா வரும் குழலி - 5418
மெல்லியல் - 5426
மெய்ப் புகழ் கொண்டவள் - 5427
விழி மான் - 5430
செறி குழல் சீதை - 5473
நன்னுதல் - 5475
கேடு அருங் கற்பினாள் - 5767
மிதிலை நாடி - 5825
தீயைச் சுட்டது ஓர் கற்பு எனும் தீயினாள் - 5840
ஏக நாயகன் தேவி - 5849
பூவை சானகி - 5854
காந்தள் மெல் விரல் சனகி - 5855
அறம் கொள் கொம்பு - 5860
சேவகன் தேவி - 5861
மங்கை - 5868
தீயின் தூயவள் - 5897
வெளுத்த மென் தகையவள் - 5932
ஞால நாயகன் தன் தேவி - 6013
வெறிக் கருங் குழலி - 6023
முளரி நீங்கிய தையல் - 6028
வண்டு உறை ஒதி - 6029
கற்பினுக்கு அணி - 6031
உன் (இராமன்) பெருந் தேவி என்னும் உரிமைக்கும் உன்னைப் பெற்ற மன் பெரு மருகி என்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன் தன் பெருந் தனயை என்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள் என் பெருந் தெய்வம் (அனுமன்) - 6032
பொன் அலது இல்லை பொன்னை ஒப்பு என பொறையில் நின்றாள் தன் அலது இல்லைத் தன்னை ஒப்பு என; தனக்கு வந்த நின் அலது இல்லை என்னை ஒப்பு என, நினக்கு நேர்ந்தாள் என் அலது இல்லை நின்னை ஒப்பு என, எனக்கும் ஈந்தாள் - 6033
உன் குலம் உன்னது ஆக்கி, உயர் புகழுக்கு ஒருத்தி ஆய தன் குலம் தன்னது ஆக்கி, தன்னை இத் தனிமை செய்தான் வன் குலம் கூற்றுக்கு ஈந்து, வானவர் குலத்தை வாழ்வித்து, என் குலம் எனக்குத் தந்தாள் - 6034
வீங்கு இலங்கை வெற்பில், நற் பெருந் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன்அல்லேன்; இற் பிறப்பு என்பது ஒன்றும், இரும் பொறை என்பது ஒன்றும், கற்பு எனும் பெயரது ஒன்றும், களி நடம் புரியக் கண்டேன் - 6035
தவம் செய்த தவம் ஆம் தையல் - 6037
வான் உயர் கற்பினாள் - 6038
இரக்கம் என்ற ஒன்று தானே ஏந்திழை வடிவம் எய்தி, தருக்கு உயர் சிறை உற்றன்ன தகையள், அத் தமியள் - 6042
சங்கின் பொலிந்த தகையாள் - 6061
படி ஏழும் தலை மேல் கொண்ட கற்பினாள் - 6065
இந்து அன்ன நுதல் பேதை, தவப் பாவை - 6067

வாள் நுதல் பஞ்சு அன மெல் அடி மயில் - 6086
சானகி எனும் பெயர் உலகின் தம்மனை ஆனவள் - 6145
மானுட மடந்தை - 6147
பண்டு அமுதின் தோன்றினாள் - 6151
இந்துவின் திரு முகத்து இறைவி - 6164
அசைவு இல் கற்பின் அவ் அணங்கு - 6169
கற்பு உடையவள் - 6274
குவளை நோக்கி - 6388
கற்புடைத் தேவி - 6417
இறைவி - 6438
பஞ்சு எனச் சிவக்கும் மென் கால் தேவி - 6487
மொழிந்த சொல் அமிழ்தம் அன்னாள் - 6511
சில் இயல் கோதை - 6519
வாள் கொள் நோக்கி, பாக்கியம் பழுத்தன்ன மயில் - 6584
கிளிமொழிச் சீதை - 6585
தருண மங்கை - 6593
பார்த்தனில் பொறையின் மிக்க பத்தினி - 6664
தோடு சேர் குழலாள் - 6740
அருந்ததியும் வந்தனை செய் அம் சொல் இள வஞ்சி - 6758
செயிர்ப்பினும் அழகு செய்யும் திரு முகத்து அணங்கு - 6766
தாய் தெரிந்து உலகு காத்த தவத்தி - 6777
தாழ்வு இலாத் தவத்து ஓர் தையல் - 6782
யார்க்கும் சேயவள், எளியள், தூயவள் அமிழ்தினோடும் தோன்றினாள், தோன்றாத் தாய் அவள் உலகுக்கு எல்லாம் - 6823
தாயினும் உயிர்க்கு நல்லாள் - 6825
அருந்ததி அனைய நங்கை - 6836
பிணை நெடுங் கண்ணி - 6841
வெள்ளம் போல் கண்ணி - 6899
நல் நுதல் சீதை - 6932
கிளி மொழி மாதராள் - 6933
பொலம் கெழு சீதை - 6968
தேசி - 6977
அணி பறித்து அலகு செய்யும் அணங்கு - 6991
துன்று இருங் குழலாள் - 7010
பண் நிறை பவளச் செவ் வாய் பைந் தொடிச் சீதை - 7281
வேல் நெடுங் கண், செவ்வாய் மெல் இயல், மிதிலை வந்த சானகி - 7282
வேய் எனத் தகைய தோளி - 7301
அலகில் கற்புடைச் சானகி - 7350
கிளர் பொன் சீதை, திட்டியின்விடம் அன்ன கற்பின் செல்வி - 7351
வினைகளைக் கற்பின் வென்ற விளக்கு - 7635
பண்களால் கிளவி செய்து, பவளத்தால் அதரம் ஆக்கி, பெண்கள் ஆனார்க்குள் நல்ல உறுப்பு எலாம் பெருக்கின் ஈட்ட, எண்களால் அளவி ஆம் மானக் குணம் தொகுத்து இயற்றினாள் - 7638
மாதரார் வடிவு கொண்ட நஞ்சு தோய் அமுதம் - 7641
அறம் தரும் செல்வம் அன்னீர், அமிழ்தினும் இனியீர் - 7646
அமுதச் சொல்லீர் - 7647
காரிகை - 7680
கெண்டைத் தடங் கண்ணாள் - 7718
பழிப்பு அறு மேனியாள் - 8275
சான்றோர் மாது - 8654
பொன் தார் குழையாள் - 8676
கயலை கமலத்தால் சினத்தின் அலைப்பாள் - 8677
இராமன் மேனி தைத்தவேல் தடங் கணாள் - 8702
கிளி அனாள் - 8848
பெருஞ் சிறைக் கற்பினாள் - 8885
தெய்வப் பத்தினி, தவத்துளாள் - 8886
தவத்தி, தருமக் கற்பின் தெய்வம் - 8903
கோதையர் - 8908
ஓவியம் ஒக்கின்றாள் - 8928
தேவி கற்பினில் சிறந்துளாள் - 9107
கம்ப மதத்துக் களி யானைக் காவல் சனகன் பெற்றெடுத்த கொம்பு - 9183
ஓர் சீதை என்று இருந் தவத்து இயைந்தாள் பொது இயற்கை தீர் கற்புடைப் பத்தினி - 9294
மன்றல் அம் குழல் சானகி - 9667
தளிர் இயல் - 9907
தாயினும் தொழத்தக்காள் - 9912
ஓர் ஆசை ஒருவன்மேல் உயிர் ஆசைக் குலமகள் - 9922
அன்று எரியில் விழு வேதவதி இவள்காண் உலகுக்கு ஓர் அன்னை - 9923
சீர்மகள், தேவர்க்கும் தெரிவு அரிய தெய்வக் கற்பின் பேர் மகள் - 9927
கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகி - 9940
காந்தையருக்கு அணி அனைய சானகியார் - 9942
பாம்பு கான்ற பனி மதிப் பான்மையாள் - 9972
நெடு மனையின் மாசு துடைத்த மனத்தினாள் - 9975
மா மதி தனக்கு மாமறுத் தந்த முகம் - 9987
பெண்மைக்கு எல்லாம், கற்பினுக்கு அணி, பொற்பின் ஆணி, அமிழ்தின் வந்த அமிழ்து, அறத்தின் தாய் - 9994
அருங் குலக் கற்பினுக்கு அணி - 10000
ஓர் நவை இலாள் - 10008

கற்பினுக்கு அரசி, பெண்மைக் காப்பு, பொற்பினுக்கு அழகு, புகழின் வாழ்க்கை, தற் பிரிந்து அருள் புரி தருமம் போலி - 10011
கற்பின் வாழ்வு - 10012
பார்க்கு எலாம் பத்தினி - 10026
பதுமைப் போதினாள் - 10030
தேவர்க்கும் தாய் - 10031
கனிந்து உயர் கற்பு எனும் கடவுள் தீ - 10040
அன்னை கற்பு எனும் பொங்கு வெந்தீ - 10042
எம்மை மூன்று உலகையும் ஈன்று இம் மனையின் மாட்சியை வளர்த்த எம் மோய் - 10062
முன்னை ஆதி ஆம் மூர்த்தி நீ மூவகை உலகின் அன்னை சீதை ஆம் மாது நின் மார்பின் வந்து அமைந்தாள் - 10063
தொல்லை எவ் உலகும் பிறக்கும் பொன் வயிற்று அன்னை - 10064
பெண் பிறந்தவர், அருந்ததியே முதல் பெருமைப் பண்பு இறந்தவர்க்கு அருங் கலம் ஆகிய பாவாய், மண் பிறந்தகம் உனக்கு நீ வான்நின்றும் வந்தாய் - 10074
மலர்மேல் விரவு பொன் - 10083
வான் கற்பினுக்கு இணங்கர் இன்மையாள் - 10097
சனகன் மா மயில் - 10110
படை அமை விழியாள் - 10113
நல் சீதை - 10114
பொன் தொடித் தெரிவை - 10118
கருகு வார் குழல் சனகி - 10136
துப்பு உறச் சிவந்த வாய்த் தோகை - 10215
உம்பர் நாயகி - 10231
பொலங் குழை மயிலி - 10252
விளங்கிழை - 10253
கற்புடைப் பெண் அருங்கலம் - 10257
மிதிலை நாட்டு அன்னம் - 10296
செய்ய இரு குழை தொடரும் வேற் கண் மயில் - 10325
தாமரைக் கிழத்தி - 10332
பூ மலர்த் தவிசை நீத்து, பொன் மதில் மிதிலை பூத்த தேமொழித் திரு - 10353
மிதிலைப் பொன் - 10365

சுக்கிரன்

அரக்கர் குரு; இராவணன் அவையிலும் காணப்பட்டவன்.

வெள்ளி - 417
மந்திரி - 426

சுக்கிரீவன்

கதிரவனின் மைந்தன். திருமால் இராமாவதாரம் செய்தபொழுது கதிரவனின் கூறாகச் சுக்கிரீவன் தோன்றினான். வாலியின் தம்பி. அரக்கன் மாயாவியைக் கொல்ல வாலி, பிலத்துள் புகுந்தபொழுது கிட்கிந்தையின் ஆட்சிப் பொறுப்பைத் தமையன் ஏவலால் பெற்றவன். நாற்பத்தொன்பது ஆண்டுகள் கடந்தபின்னும் வாலி திரும்பாமையால் பிலம்புக இருந்தவனைத் தடுத்துப் பிற வானரத் தலைவர்கள் வற்புறுத்தியதால் ஆட்சியைத் தொடர்ந்தவன். பிலம்புகுந்த மாயாவி திரும்பாதிருத்தற்காக அதன் வாயிலை மலைகளைக் கொண்டு அடைத்தனர். மாயாவியைக் கொன்று திரும்பி வந்த வாலி அதனைக்கண்டு மிக்க சினம் கொண்டான். நிகழ்ந்ததை எடுத்துக் கூறியும் அதனை ஏற்காத வாலியால் ஓட ஓடத் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டவன். எனவே வாலி வரமுடியாத இரலை மலையை இருப்பிடமாகக் கொண்டவன். தன் மனைவி உருமையை வாலி கைப்பற்றிக் கொள்ளத் தனியன் ஆனவன். கவந்தன், சவரி அறிவுரைப்படி இராம இலக்குவர் வர, அவர்களுடன் அனுமன் உதவியால் நட்புக் கொண்டவன். தனக்காக வாலியைக் கொன்று, கிட்கிந்தை ஆட்சியையும் உருமையையும் மீட்டுத் தருவதாக இராமன் வாக்களிக்க, தன் வானரப் படைகளைச் சீதை மீட்சிக்கு உதவுவதாக வாக்களித்தவன்.

இராமனின் வலிமையை மராமரங்களை வீழ்த்தச் செய்து உறுதி செய்து கொண்டபின் வாலியைப் போருக்கழைத்துப் போரிட்டவன். இராமன் மறைந்து நின்று அம்பெய்து வாலியைக் கொன்று தன் வாக்கினை நிறைவேற்றினான். தனது எழுபது வெள்ள வானரப் படைகளை இராமனுக்கு உதவி முதலில் சீதையின் இருப்பிடத்தை அறியச் செய்தவன். பின் இலங்கைக்குப் பாலம் அமைக்கச் செய்தவன். இராமன் இராவணனிடமிருந்து சீதையை மீட்கத் துணைநின்றவையுள் இவனது வானரப் படையும் இன்றியமையாததாகும்.

இராமன் சீதையை எண்ணியும், இலக்குவனுக்காகவும் வருந்திய போதெல்லாம் ஏற்புடையன கூறி ஆற்றுவித்தவன். மது உண்டமையால் இலக்குவன் வரவு உணராது மயங்கிக் கிடந்த தவறுணர்ந்து மது அருந்துதலை ஒழித்தவன். இராவணனின் மகுடங்களைப் பறித்து வந்து தன் வலிமையைக் காட்டியவன். இராம இராவணப் போரில் இராவணன்,

கும்பகர்ணன், இந்திரசித்து போன்ற பெரும் வீரர்களுடன் போரிட்டுப் போர்த்திறம் காட்டியவன்.

தன் தந்தையின் பகைவனான சூரியன் பகைஞனைக் கொல்வித்து அவன் பகை முடித்துத் தன் கடன் ஆற்றியவன். வச்சிரமுட்டி, கும்பகருணனின் மகன் கும்பன் முதலானோரைப் போரில் வீழ்த்தியவன். கும்பகருணனால் மயங்கிய நிலையில் இலங்கைக்குத் தூக்கிச் செல்ல முற்பட்டபோது இராமனால் காப்பாற்றப் பட்டவன். வீடணன் மீது இராவணன் வேல் வீசியபொழுது அதனைத் தடுத்துத் தன் மேல் ஏற்க முற்பட்டவன்.

இராமனால் அரசியல் கற்பிக்கப்பட்டவன். வாலியைக் கொல்ல இராமனை அழைத்து வந்தாலும் அவன் மறைவால் மிகவும் துன்புற்றவன். இறுதிவரை இராமனுக்கு இனிய நண்பனாக, துணைவனாக அமைந்தவன். சீதை மீட்பின் பின் இராமனுடன் அயோத்தி சென்று முடிசூட்டு விழாவில் பங்கேற்று பின் தன்னாடு திரும்பி நல்லாட்சி புரிந்தவன்.

இரவி மற்று எனது கூறு அங்கு அவர்க்கு (வாலி) இளையவன் - 205
கதிரவன் சிறுவன் ஆன கனக வாள் நிறத்தினான் - 3697
வெய்ய துணை பரித் தேரோன் மைந்தன் - 3704
நோன்மை சால் கவி அரசு - 3751
எரி கதிர்ப் பரிதிச் செல்வன் செம்மல் - 3766
கவிக் குலத்து அரசன் - 3770
இரவிதன் புதல்வன் - 3772
கவிக் குலக் குரிசில் வீரன் - 3784
பொரு சினத்து அரசன் - 3786
திருமகன் - 3787
இரவிதன் சிறுவன் - 3798
தவம் இழைத்து. . . . நெடு மனம் தூயையா உடையை (அனுமன்) - 3799
புந்தியின் பெருமையாய் - 3800
அரியின் வேந்து - 3806
அருக்கன் சேய் - 3808
அரிக் குலத்து அரசன் - 3809
குரக்கு வேந்தன் - 3811
கவியின் வேந்தன் - 3818
செங் கதிர்க் கோமகன் - 3843
ஆதவன் புதல்வன், மெய்ம்மை ஆம் ஆறினான் - 3846
மறு இலான் - 3866
வசை இலான் - 3884
நெய்த்தலைப் பால் கலந்தனைய நேயத்தான் - 3904
எரி கதிர்க் காதலன் - 3919
கோமகன் கடுங் கதிரோன் மகன் - 3929
தெவ் அடக்கும் வென்றியான் - 3944
வான் இயங்கு தேரினான் மகன் - 3945
தேரில் திரிவான் மகன் - 3979
ஊகங்களின் நாயகன் - 3984
கதிர் மகன் - 3997
வெய்யவன் தரு மதலை - 4002
கோது இலான் - 4036
குன்றினும் உயர்ந்த தோளான் - 4072
எண்ணம் மிக்கோன் - 4073
பொன் குன்றம் அனைய தோளான் - 4074
கதிரோன் மைந்தன் - 4116
பொய் இலான் - 4120
குவவுத் தோளான் - 4126
பாழி அம் தடந் தோள் வீரன் - 4135
சூரியன் மகன் - 4146
அடல் வாலிதன் தம்பி - 4280
பொன்னின் வார் கழல் தாதை - 4285
புள்ளி மா நெடும் பொன் வரை புக்கது ஓர்வெள்ளி மால் வரை என்ன விளங்குவான் - 4287
அருக்கன் மைந்தன் - 4322
கவியின் வேந்தன் - 4333
கவிக் குலக் கோன் - 4335
ஆரியன் - 4336
அருக்கன் தோன்றல் - 4355
இணர்த் தொகை ஈன்ற, பொன்-தார் எறுழ் வலித் தடந் தோள் எந்தாய் (அங்கதன்) - 4356
நிறைந்த சீரான் - 4366
செய் தவச் செல்வன் - 4369
கவிக் குலத்து அரசன் - 4370
இரவி காதலன் - 4377
வானர வேந்தன் - 4384
இரவி கான்முளை - 4385
செங் கதிரோன் மகன் - 4387
மின் பொரு பூணினான் - 4388
பரிதி மைந்தன் - 4391
புண்ணியன் - 4393
புயல் பொரு தடக் கை - 4396
வான் உருளுடைத் தேரினோன் புதல்வன் - 4397
பரதன் நீ (இராமன்) - 4401
சூரியன் கான்முளை - 4402

அழி மா பரித் தேரவன் காதலன் - 4433
அருக்கன் தனையன் - 4434
வெய்யவன் மகன் - 4435
பூண்ட தேரவன் காதலன் - 4446
செங்கதிர்ச் செல்வன் - 4520
இறைவன் - 4667
சூரியன் வெற்றிக்காதலன் - 4712
கோ முதல்வர்க்கு ஏறு ஆகிய கொற்றக் குமரன் - 4717
நவையின் தீர்ந்தான் - 5256
அன்பின் தூயான் - 5320
வாலி இளவல் - 5343
கவியின் வேந்தன் - 5389
சூரியன் தோன்றல் - 5888
கோமான் - 5890
சோதியான் மகன் - 5910
சூரியன் புதல்வன் - 6022
கடன் அறிக் காவலன். சுடர் நெடு மணி முடிச் சுக்கிரீவன் - 6420
அருக்கன் தந்த இரு குன்றம் அனையதோளான் - 6483
எழுவின் தோளார் - 6484
கதிரவன் சிறுவன் - 6485
சிங்க ஏறு அனையான் - 6486
திருத்திய உணர்வு மிக்க செங் கதிர்ச் செல்வன் செம்மல் - 6491
செய்தவம் பயந்த வீரன் - 6492
குன்றுசூழ்வான் மகன் - 6507
பகலவன்சேய் - 6512
மந்தரத்தடந்தோள்வீரன் - 6513
சூரியன்காதலன் - 6676
கானவாழ்க்கை கவிக்குல நாதன் - 6744
வெய்யவன் புதல்வன். யாரினும் வெய்யான் - 6882
சுருதி அன்னவன் - 6897
கால இருள் சிந்து கதிரோன் மதலை - 6901
ஆலவிடம் அன்று வர நின்ற சிவன் அன்னான் - 6901
தூர நெடு வானின் மலையும் சுடரவன் சேய் - 6913
செங் கதிரவன் சிறுவன் - 6914
வெங் கதிரவன் சேய் - 6915
மன்னுயிர் அனைய காதல் துணைவன் - 6920
ஒன்றிய உணர்வே ஆய ஓர் உயிர்த் துணைவன் - 6921
தமியேனுக்கு (ராமன்)உயிர் தந்து உதவியோன் - 6922
அன்பன் - 6928
துணைவன் - 6929
கல்லினும் வலிய தோளான் - 6930
வானர மன்னன் - 6937
தொடி மணி இமைக்கும் தோளான் - 6941
செங் கதிர் மைந்தன் - 6944
வெற்றிச் சூரியன் மகன் - 6950
குரக்கினத்து இறைவன் - 6976
பொறிப் புண்டரீகம் போலும் ஒருவன் - 7009
அருக்கன் மாமகன் - 7058
கோடு அணை குரங்கினுக்கு அரசு - 7142
தானைப் புரவலன் - 7462
செம் மலை அனைய வெங் களிறு - 7527
எல்லவன் கான்முளை - 7530
பருதி கான்முளை - 7535
எழும் கதிர் இரவிதன் புதல்வன் - 7542
திக்கு உற விளக்குவான் சிறுவன் - 7543
ஏந்தல் - 7564
கவி அரசு - 7566
பெரியோன் - 7965
சுடரோன் மகன் - 7971
வானரேந்திரன் - 8031
இரவி காதல் - 8070
கவியின் குலம் ஆளுடையான் - 8388
செங் கதிர்ச் செல்வன் சேய் - 8456
அரி குல மன்னன் - 8561
தூண் திரண்டனைய திண் தோள் சூரியன் சிறுவன் - 9582
வானரத் தலைவன் - 9785
சோதியான் மகன் - 9953
அரிகுலத்து அரசு - 10106
தேனுடை அலங்கல் மௌலிச் செங் கதிர்ச் செல்வன் சேய் - 10112
மன்னவன் இரவி மைந்தன் - 10117
நூல் இயல் தரும் நீதி நுனித்து அறம் குணித்த மேலோர் போல் இயல் தபனன் மைந்தன் - 10124
வானரேசன் - 10137
ஒற்றை ஆழி வள்ளல் தன் மகன் - 10234
காதல் சூரியன் மகன் - 10235
ஆழி ஒன்று உடையான் மைந்தன் - 10311
சோதியான் மகன் - 10323
வெய்யோன் மகன் - 10340
அள்ளல் இலாத மொய்ம்பன் - 10342
அலரி காதலன் - 10348
அருக்கன் தந்த கனை கழல் காலினான் - 10363
நலம் கொள் பேர் உணர்வின் மிக்கோன் சரத மா நெறியும் வல்லோன் - 10365
குன்றினை வலம் செய் தேரோன் மகன் - 10366

சுகன்

இராமன் படைவலி அறிய இராவணனால் அனுப்பப் பெற்ற ஒற்றன். அரக்கன். வானரர் உருவில் வானரப் படையில் கலந்து ஒற்றறிந்த போது விபீடணனால் கண்டு பிடிக்கப்பட்டவன். இராமனால் மன்னிக்கப்பட்டு இராவணனிடம் திரும்பியவன்.

சுகன் - 6773

கருமன நிருதக் கள்வன் - 6774

சுசேடணன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன்.

ஊன்றி மேருவை எடுக்குறும் மிடுக்கினோடு
உரிய தேன் தெரிந்து உண்டு தெளிவுறு
வானரச் சேனை, ஆன்ற பத்து நூறு ஆயிர
கோடியோடு அமையத் தோன்றினான்,
வந்து சுசேடணன் எனும் பெயர்த் தோன்றல் - 4409

சுடேணன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன். சீதையைத் தேடிக் குடதிசை சென்ற வானரங்களுக்குத் தலைவன்.

குட திசைக்கண் சுடேணன் - 4456

சுடேணன் மூதறிவொடு தொடர்ந்தான் - 6891

சுதீக்கணன்

அகத்தியரைக் காணச் செல்லும் வழியில் காட்டுவாழ்க்கையின்போது இராம இலக்குவர் சந்தித்த முனிவர். நான்முகன் வழித் தோன்றல்.

சுடரும் மேனிச் சுதீக்கணன் என்னும் அவ்
இடர் இலான் உறைசோலை - 2657

அருக்கன்அன்ன முனிவன் - 2658

மாதவன் - 2659

சொன்ன நான்முகன்தன் வழித் தோன்றினர்
முன்னை யோருள் உயர்தவம் முற்றினா(ன்) - 2660

நவமை நீங்கிய நல் தவன் - 2661

மறைவலான் - 2662

சுபாகு

தாடகையின் மைந்தன். அரக்கன். தாடகை வதத்தின்போது உடன் அழிந்தவன்.

வெருவரு தாடகை பயந்த வீரர்கள் இருவரில்
ஒருவன் - 444

கொடுமையாள் புதல்வன் - 3791

மருந்தினும் இனிய (இராவணன்) மாமன் - 7005

சுபாரிசன்

முதல்நாட் போரில் தெற்கு வாயிலில் நின்ற அரக்கர் சேனைத் தலைவன். அங்கதனால் வீழ்த்தப்பட்டவன்.

பொன்குலாவு சுபாரிசன் - 7096

சுமந்திரன்

தயரதனின் தலைமை அமைச்சரும் தேர்ப்பாகனும் ஆனவன். மிகச் சிறந்த தேர்ப்பாகன். தயரதன், இராமன்பால் மிகுந்த அன்புடையவன். நல்லறிவு கொண்டவன். காடு செல்ல முனைந்த இராம இலக்குவர் சீதையை நாட்டு எல்லை வரை கொண்டு சென்று விட்டுவந்தவன். இராமன் அரசவையிலும் இடம்பெற்றவன்.

பணி தலைநின்ற காதல் சுமந்திரன் - 1572

ஊனம்இல் பெருங் குணம் ஒருங்கு உடையன் - 1856

தேர் வலான் - 1858

யாவையும் திறத்துளி உணர்வது ஒர் செம்மை
உள்ளத்தான் - 1866

தனித் திண் தேர் வலான் - 1877

வேறு இலா அன்பினான் - 1880

தேரிடை வித்தகன் - 1884

கண்ணில், வற்றா நீர் கொண்ட நெடுந் தேர்ப்பாகன் - 1895

சோதி மணித் தேர்ச் சுமந்திரன் - 1912

சேனாதிபதியின் சுமந்திரன் - 1916

சுமந்திரப் பெயர் பொன் தடந் தேர் வலான்,
புலமை உள்ளத்தான், கொற்றவர்க்கு உறு
பொருள் குறித்த கொள்கையான் - 2246

முரிய தேர் வல்லான் - 2326

எள் அரிய தேர் தரு சுமந்திரன் - 5289

சுந்தரத்தடந் தோள் வெற்றிச் சுமந்திரன் - 10285

ஐயம் இல் சிந்தையான் அச் சுமந்திரன் - 10326

சுமித்திரை

தயரதனின் மூன்றாம் மனைவி. இலக்குவன், சத்ருக்கனைப் பெற்றவள். தயரதன் இவள் பாலும் மிகுந்த நேயமுடையவன் என்பதை, மகட்பேறு

வேள்வியின்போது பூதம் தந்த பிண்டத்தினைத் தேவியர் மூவருக்கும் பகிர்ந்தளித்தபின் எஞ்சியதையும் இவளிடமே அளித்தது கொண்டறியலாம். கோசலைக்கு நல்ல தோழியானவள்.

இராமன் வனம் செல்ல வேண்டிய கட்டாயத்தின் போது தன் மகன் இலக்குவனையும் உடன் அனுப்பத் துணிந்தவள். 'இராமன் இருக்குமிடமே அயோத்தி; அவன் உடன் மட்டுமே அயோத்தி திரும்ப வேண்டும்; இராமனின் தம்பியாக அன்றித் தொண்டனாகச் சென்று, அவனுக்கு ஏதேனும் அவல முடிவு ஏற்படுமாயின் அவனுக்கு முன் இலக்குவன் தன்னுயிரை முடித்தல் வேண்டும்' என அறிவுறுத்தி இராமன் பால் தனக்குள்ள பக்தியைக் காட்டியவள்.

சுமித்திரை - 269
இளைய மென் கொடி - 284
விடம் கிளர் விழியினாள் - 285
இருவரைப் பயந்த நங்கை - 795
தூய சுமித்திரை - 1253
சொல் மாண்புடை அன்னை சுமத்திரை, தூய நங்கை - 1750
முறைமையால் ஏற் பயந்தெடுத்த மூவர்(இராமன்) - 1876
தோழி அன்ன சுமித்திரை - 1908
இளைய மாது - 1912
அன்பின் நிறைந்தாள் - 2369

சுயம்பிரபை

வானுலக மடந்தை. தன் தோழியின் காதல் வாழ்விற்குத் துணை செய்தமையால் இந்திரனால் சபிக்கப்பட்டவள். அதன் காரணமாக இருட் பிலத்தினுள் அமைந்த ஒளிமிகுந்த நகருள் தனியாகத் தவம் செய்து கொண்டிருந்தவள். சீதையைத் தேடிக் கொண்டிருந்த அனுமன் முதலானோர் அங்கு வர அவர்களுக்கு விருந்தளித்து மகிழ்ந்தவள். பெரு உருக் கொண்டு அனுமன் பிலத்தின் முகட்டினை உடைத்ததால் சாபவீடு பெற்றவள்.

ஒண் சுடரினுள் ஓர் நல் தவம் அனைத்தும் உரு நண்ணி, ஒளி பெற்ற கற்றை விரி பொன் சடையினாள் - 4565
அணங்கு - 4572
பார் புகழ் தவத்தினாள் - 4577
மன்னு புலன் வென்று வரு மாது - 4586
நீள் நுதலி, நல் நுதலி - 4592

சுரசை

அனுமன் கடல் கடக்க முயன்றபோது அவன் வலிமையை அறிதற்காக வானவர் அனுப்பிய வான்மகள். அரக்கி உருவில் தோன்றி அனுமனை விழுங்க இவள் வாய் திறக்க அவன் தன் நீண்ட வடிவினைக் காட்டி வாய் புகுந்து உடனே மிகச் சுருக்கி அக்கணமே வெளியேறினான்.

சுரசைப் பெயர்ச் சிந்தை தூயாள் - 4805
அவள், தாயினும் அன்பு தாழ. . . . இனிது ஏத்தி நின்றாள் - 4812

சுரோசனன் (பெயரில்லை)

சலபோசனன் மகன். கண்ணில்லா தன் பெற்றோருக்காக நீர் கொண்டு வரச் சென்றவன். உருவம் காணாது, நீர் எடுக்கும் ஓசையை மட்டும் கேட்டு யானை எனத் தவறாக எண்ணிய தயரதனால் அம்பெய்யப்பட்டு இறந்தவன். இவன் காரணமாகவே தயரதனுக்கு, 'புதல்வன் பிரிவால் துன்புற்று மரணம்' என்ற சாபத்தை இவன் தந்தை வழங்கினான்.

பொய் ஒன்று அறியா மைந்தன் - 1681
சந்தம் கமழும் தோளான் - 1684
பொய்யா வாய்மைப் புதல்வன் - 1685

சூர்ப்பணகை

பிரம்மனின் மகனாகிய புலத்தியனின் மகன் விச்சிரவசுவின் மகள். தாய் கேகசி ஆவாள். தாடகை பாட்டி முறையாவாள். குபேரன் மற்றும் இராவணனின் தங்கை. மாரீசனின் மருமகள். அரக்கரை வீழ்த்த அவதாரம் செய்த இராமனின் நோக்க நிறைவேற்றத்திற்கான திருப்புமுனையாக அமைந்தவள். பஞ்சவடியில்இராமனைக் கண்டு காமுற்றவள். இராமன் ஏற்க மறுக்க, அதற்குக் காரணம் சீதை என எண்ணி அவளைத் தூக்கிச் செல்ல முயன்றவள். அது கண்டு இலக்குவனால் மூக்கும் முலையும் அறுபட்டவள். இதற்குப் பழிவாங்க கரன், திரிசரன், தூடணன் முதலான அரக்கரை அழைத்து வந்தவள். இராமனுடன் ஏற்பட்டப் போரில் இவர் அனைவரும் அழிந்தனர். எனவே சூழ்ச்சி மேற்கொண்டு இராவணனிடம் சென்று சீதையின் அழகை எடுத்துரைத்து அவள்பால் அவனைக் காமுறச் செய்தவள். மாயமான் மூலம் அவன் சீதையைக் கவர்ந்து சென்றதால், சீதை மீட்புப் போராக இராம - இராவண யுத்தம் நிகழ்ந்தது. அரக்கர்

அனைவரும் அழிந்தனர். எனவே அரக்கர் குலம் வேரோடும் அழிய இவள் காரணமானவள்.

நீல மா மணி நிற நிருதர் வேந்தனை மூல நாசம்பெற முடிக்கும் மொய்ம்பினாள் - 2714

வைகலும் தமியள் அவ் வனத்துள் வைகுவாள், நொய்தின் இவ் உலகு எலாம் நுழையும் நோன்மையாள் - 2741

வஞ்ச மகள் - 2762

பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி, முப்புரங்கள் செற்ற சே-வலோன் துணைவன் ஆன செங்கையோன் தங்கை - 2770

செங்கண் வெவ் உரு அமைந்தோன் தங்கை - 2771

இமையவர் தலைவனேயும் எளிமையின் ஏவல் செய்யும் அமைதியின் உலகம் மூன்றும் ஆள்பவன் தங்கை - 2773

இராவணன் தங்கை - 2783

காய் எரி அனைய கள்ள உள்ளத்தாள் - 2796

புன்மையோள் - 2815

அடல் அரக்கி - 2848

நின் அன்னை (கேகசி) தன்னை நல்கும் தாடகை - 2866

தான் தொடர் குலத்தை எல்லாம் தொலைக்குமா சமைந்து நின்றாள் - 2940

மூன்று உலகு உடையவன் தங்கை - 3092

வேந்தனுக்கு இளையவள் - 3104

அங்கையின் அரன் கயிலை கொண்ட திறல் ஐயன் தங்கை - 3109

வன் தாள் நிருதக் குலம் வேர் அற மாய்த்தல் செய்வாள் - 3213

பொய்ந் நின்ற நெஞ்சின் கொடியாள் - 3214

நின் (மாரீசன்) மருகி - 3240

இள நங்கை - 3256

திண் திறலாள் - 3590

கானிடை அத்தை - 5760

இளையவள் - 5920

படை இலங்கையர் மன்னன் தங்கை - 6880

பெய் தவத்தினோர் (இராவணன் முதலானோர்) பெண்கொடி - 7506

பாதக அரக்கி - 10216

சூரியன் பகைஞன்

இராவணன் மந்திரச் சுற்றத்துள் ஒருவன். அவன் படைத்தலைவன். இராம - இராவணப் போரில், முன்னொரு நாள் தான் வென்ற சூரியனின் மகனான சுக்கிரீவனால் கொல்லப் பட்டவன்

சூரியன்பகைஞன் என்று ஒருவன் - 6113

'மண் உளாரையும் வானில் உள்ளாரையும் வகுத்தால் உண்ணும் நாள் ஒரு நாளின்' என்று ஒளிர் படைத் தானை எண்ணின் நால்இரு கோடியன், எரி அஞ்ச விழிக்கும் கண்ணினான், உளன், சூரியன் பகை என்று ஓர் கழலான் - 6553

நேர்விண் தைவரு சூரியசத்துரு - 8322

சூரியன் பெரும்பகைஞனும் - 8351

விலங்கலின் மேனியன், பின்றாத வலத்து உயர் பெற்றியன் - 8388

சேனைக் காவலன்

இராவணன் சேனையின் தலைவன். இராவணன் மந்திரத்துள் இடம்பெற்றவன். முதல்நாட் போரில் கொல்லப்பட்டவன்.

சேனை நீள் கடல் தரம்பெறு தலைவன் - 6076

கன்றிய கருங்கழல் சேனைக் காவலன் - 6085

அனீகத் தலைமகன் - 7101

சோணிதக் கண்ணன்

அரக்கன். மகரக்கண்ணனுக்குத் துணையாக இராவணனால் போருக்கு அனுப்பப்பட்டவன்.

சோணிதக்கண்ணன் - 8410

ஞாயிறு

அருக்கன், அலரி, ஆதவன், இரவி, எல்லவன், ஒளியோன், ஒற்றை ஆழி வள்ளல், ஒற்றை வான் உருளைத் தேரோன், கதிர் , கதிர்க்கடவுள், கதிரவன், கோளின் வேந்தன், சுடர், சுடரோன், சூரியன், செங்கதிர்ச் செல்வன், செஞ்சுடர்க் கடவுள், சேண் உலாம் தனித்தேரவன், சோதியான், ஞாயிறு, தபனன், தினகரன், தேருடை நெடுந்தகை, தேரோன், நேமியன், பகலவன், பதங்கன், பரிதி, பருதி, பானு, வான்சுடர், வானிடை வயங்கு வள்ளல், வெய்யவன், வெய்யோன், வெயில், வெயில்கதிர் வேந்தர், வைகலான் எனப் பலவாறாக அழைக்கப்படும் வானவன். இராமாவதாரத்தின் போது சுக்கிரீவனைத் தனது கூறாகக் கொண்டவன்.

இயற்கை வருணனையில் மிகுதியாக இடம் பெறுவதைக் காணமுடிகிறது.கதிரின் எழுச்சியும் வீழ்ச்சியும் காப்பியக் களனுக்குத் தகுந்தபடி தற்குறிப்பேற்றமாக அமைந்து இன்பம் பயக்கிறது.

பானு - 14

யாணர் எண் திசைக்கும் இருள் அற இமைக்கும் இரவிதன் குலமுதல் நிருபர் - 105

எள்ள அருங் கதிரவன் இள வெயிற் குழாம் - 120

எழும் இடத்து அகன்று, இடை ஒன்றி, எல் படு பொழுதிடைப் போதலின், புரிசைப் பொன் நகர், அழல் மணி திருத்திய அயோத்தியாளுடை நிழல் எனப் பொழியுமால் நேமி வான் சுடர் - 133

இரவியின் சுடர் மணி - 155

வெம் பருதி - 178

சுடரோன் - 236

திமிரம் அது அற வரு தினகரன் - 302

பருதிவானவன் - 343

சூரியன் - 347

காலன் மேனியின் கருகு இருள்கடிந்து, உலகு அளிப்பான் நீல ஆர்கலி, தேரொடு நிறை கதிர்க் கடவுள் - 455

பல் கதிர் - 482

செழுங் கதிர் - 596

சுடர்க் கதிர்க் கடவுள் - 601

தமம் திரண்டு உலகு யாவையும் தாவுற, நிமிர்ந்த வெங் கதிர்க் கற்றை - 611

செய்ய வெய்யோன் - 629

அசையாத நெடுவரையின் முகடு தொறும் இளங்கதிர் சென்று அளைந்து - 630

வான் அரங்கில் நடம் புரி வாள் இரவி - 632

எல் ஆழித் தேர் இரவி - 633

வானின் ஓடும் வேஞ் சாயையுடைக் கதிர் - 878

கால் வானகத் தேருடை வெய்யவன் - 882

மீனுடை எயிற்றுக் கங்குல்-கனகனை வெகுண்டு, வெய்ய கானுடைக் கதிர்கள் என்னும் ஆயிரம் கரங்கள் ஓச்சி, தானுடை உதயம் என்னும் தமனியத் தறியுள்நின்று, மானுட மடங்கல் என்ன, தோன்றினன், வயங்கு வெய்யோன் - 890

அருக்கன் - 892

வெய்யவன் - 960

அண்ணல் மரபின் சுடர் - 1142

மின்னு சுடர் ஆதவன் - 1159

தினகரன் - 1180

குலம் வரு கனக வான் குன்றை நின்று உடன் வலம் வரு கதிர் - 1222

தகை உடை வாள் எனும் தயங்கு வெய்யவன் நகை இள வெயில் - 1223

ஒற்றை ஆழிக் கதிர் - 1229

மேரு மால் வரையில் சேரும் செஞ் சுடர்க் கடவுள் - 1236

ஒரு கால் வரு கதிர் - 1288

திணி சுடர் இரவி - 1434

விசும்பின் ஊரும் சுடர் - 1569

திக்கினை நிமிர்த்த கோலச் செங்கதிர்ச் செல்வன் - 1596

அருள் அற்றிட உற்று ஒளிரும் இரவி - 1636

பிறவா வெய்யோன் - 1976

தேரில் தோன்றும் வெஞ் சுடர்ச் செல்வன் - 1977

சுருதிபோல் தெளி மரகதக் கொழுஞ் சுடர் சுற்ற பருதி வானவன் - 2048

சீறு வெங் கதிர் - 2060

அலர் கதிர் - 2071

வைகலான் - 2586

பரிதி - 2802

பகலவன் - 2927

பல் ஆயிரம் இருள் கீறிய பகலோன் - 2963

முருங்கிய கனலின் மூரி விடத்தினை முருக்கும் சீற்றத்து, அருங் கதிர் அருக்கன் - 3177

வெங் கதிர்ச் செல்வன் - 3511

வெஞ்சுடர்க் கடவுள் - 3522

சேண் உலாம் தனித் தேரவன் - 3561

வெங் கதிர்க் கடவுள் - 3749

வெயில் - 3817

தேருடை நெடுந்தகை - 4593

வீறு செஞ்சுடர்க் கடவுள் - 4604

வளையான் நேமியன் - 4681

பாய் திரைப் பரவை ஞாலம் படர் இருள் பருகும் பண்பின் ஆய் கதிர்க் கடவுள் - 4700

காய் கதிர்க் கடவுள், தீயையும் தீக்கும் தெய்வச் செங் கதிர்ச் செல்வன் - 4701

வானிடை வயங்கு வள்ளல் - 4703

பார் உலகு எங்கும் பேர் இருள் சீக்கும் பகலோன் - 4724

ஒர் ஆழிச் சூரியன் தனித் தேர், கதிர் - 4855

ஒற்றை வான் உருளைத் தேரோன் - 4931

வெயில் கதிர் வேந்தன் - 4932

மஞ்சு அலங்கு ஒளியோன் - 5425

கோளின் வேந்தன் - 5426

சோதியான் - 5910

கொற்றச் சண்ட வெங் கதிர ஆகித் தழங்கு இருள் விழுங்கும் தா இல் மண்டலம் - 5934

மண்டலம் தரு கதிரவன் - 6200

அழல் தரு கதிரோன் - 6339

உருளுறு தேரவன் - 6387

குன்று சூழ்வான் - 6507

கொழுங் கதிர் - 6592
பொறை தீர் வாழி வெங் கதிர் - 6594
மாக ராக நிறை வாள் ஒளியோன் - 6878
தகையத் செங்கரம் பரப்பிய தன் (சுக்கிரீவன்)
பெருந்தாதை உதயக் குன்று - 6898
கால இருள் சிந்து கதிரோன் - 6901
ஊரினொடு கோள் கதுவு தாதை - 6913
மண்டலம் தொடர் வயங்கு வெங்கதிரவன் - 7262
மூடும் பனி துடைத்து உலகம் சுற்றும் பரிதி - 7432
உருப் பதங்கன் - 7483
எல்லவன் - 7530
எழும் கதிர் இரவி - 7542
திக்கு உற விளக்குவான் - 7543
வயங்கு வெய்யவன் - 7548
முற்றிய கதிரவன் - 7559
ஒளியவன் - 7707
திவசத்து எழு கதிரோன் - 9057
தூண் திரண்டனைய திண் தோள் சூரியன் - 9582
அலரி - 9693
தபனன் - 10124
ஒற்றை ஆழி வள்ளல் - 10234
குன்றினை வலஞ் செய் தேரோன் - 10238

ததிமுகன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன். மிகுந்த சினமும் வலிமையும் உடையவன். ததியின் வதனன் என்றும் குறிக்கப்பெறுகிறான். மதுவனம் காக்கும் வீரர்க்குத் தலைவன்.

ததியின் வதனன் இம்பர் உலகோடு எவ் உலகும் எடுக்கும் .... - 5344
வெதிர் கொள் குன்று எலாம் வேரொடும் வாங்கி மேதினியை முதுகு நொய்து எனச் செய்தவன் கனலையும் முனிவோன்.... ததிமுகன் - 6892
தண் தார் நயம் தெரி ததிமுகன் - 10339

தம்பன்

வானரப்படைத் தலைவருள் ஒருவன்

தம்பன்.... இம்பர் உலகோடு எவ் உலகும் எடுக்கும் மிடுக்கர் - 5344
புனையும் அம்பினில் தம்பனும் பொருப்பு எனப் புரண்டான் - 8617

தயரதன்

சூரிய குல மரபினன். அயனின் புதல்வன். கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகிய முப்பெருந்தேவியருடன் அறுபதினாயிரம் மனைவியர் கொண்டவன். வசிட்டர் வழிகாட்ட கலைக்கோட்டு முனியால் மகட்பேறு வேள்வி செய்து இராமன் முதலான நால்வரைப் பெற்றவன். இராமன்மீது எல்லையற்ற அன்புடையவன். கோசல நாட்டை அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆண்டவன்.

தன் நாட்டை வறியவன் பாதுகாக்கும் ஒரு செய் நிலம் போன்று கண்ணும் கருத்துமாகக் காத்தவன். தன் நில மக்களை எல்லாம் தன் உயிராகக் கொண்டவன். வேந்தர் வேந்தனாக நில உலக மன்னர்கள் எல்லாம் போற்றும்படி அரசாண்ட வலிமை மிக்கவன். வசிட்டரைக் குலகுருவாகத் தன் அவையுள் கொண்டவன். சுமந்திரன் முதலான நல்லமைச்சரைக் கொண்டவன். சடாயுவின் நண்பன்.

தேவர்களை வருத்திய சம்பரனைப் போரில் வென்று இந்திரனுக்கு வானுலக ஆட்சியை மீட்டுத் தந்தவன். இப்போரில் தனக்குத் தேரோட்டிய கைகேயிக்கு இரண்டு வரம் வழங்கியவன். அவள் அவ்வரம் ஒன்றால், பரதன் கோசலத்தை ஆளவும், மற்றொன்றால், இராமன் பதினான்கு ஆண்டுகள் வனம் ஆளவும் செய்தாள். சுரோசனன் உருவம் காணாது, நீர் எடுக்கும் ஓசையை மட்டும் கேட்டு யானை எனத் தவறாக எண்ணி அம்பெய்து கொன்றதால் அவன் தந்தை முனிவன் சலபோசனன் சாபத்தின்படி மகன் இராமனின் பிரிவுத்துயர் தாங்காது மறைந்தவன். இவனுடன் இவனின் அறுபதினாயிரம் மனைவியரும் உடன்கட்டை ஏறினர்.

கைகேயியிடம் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தவன். அவள் பெற்ற வரங்களால் அவளைப் பரதனுடன் துறந்தவன். சீதை மீட்பின்பின் இராமன் கேட்ட வரத்திற்காக மீண்டும் அவர்களை மனைவியும் மகனுமாகக் கொண்டவன்.

மாலின் அவதாரமான இராமனுக்கே தந்தையாதலால் உலகினர் அனைவருக்கும் தந்தையாக இவனைக் கம்பர் போற்றுவார். இவன் ஆட்சிச் சிறப்பும் போர் வலிமையும் காப்பியத்துள் சிறப்பாகப் பேசப்படுகின்றன. பல்வகை வேள்விகளையும் செய்தவனாக, தேவர்களின் தோழனாகப் போற்றப்படுகின்றான். வாய்மை இவனுக்கு உயிராக அமைய, தன் சொல் காப்பாற்ற உயிர்விட்டமை இவனின் தலையாய

புகழாகிறது. தயரதன் = வாய்மை, வாய்மை = தயரதன் என்றளவில் பாராட்டப்படுகிறான்.

முறை அறிந்து, அவாவை நீக்கி, முனிவுழி முனிந்து, வெ.ஃகும் இறை அறிந்து உயிர்க்கு நல்கும், இசை கெழு வேந்தன் - 50

அரசர்க்கு அரசன், நல் அற மூர்த்தி அன்னான் - 168

தாய் ஒக்கும் அன்பின்; தவம் ஒக்கும் நலம் பயப்பின்; சேய் ஒக்கும் முன் நின்று ஒரு செல் கதி உய்க்கும் நீரால்; நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும்; நுணங்கு கேள்வி ஆயப் புகுங்கால், அறிவு ஒக்கும் எவர்க்கும் அன்னான்- 171

தள்ள அரும் பெரும் புகழ்த் தயரதப் பெயர் வள்ளல், மன்னர் மன்னன் - 173

வயிர வான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான், உயிர் எலாம் தன் உயிர் ஒக்க ஓம்பலால், செயிர் இலா உலகினில், சென்று, நின்று, வாழ் உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான் - 177

வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர் செய் எனக் காத்து, இனிது அரசு செய்கின்றான் - 179

அறுபதினாயிரம் ஆண்டும் மாண்டு உற, உறு பகை ஒடுக்கி, இவ் உலகை ஓம்பினேன் - 182

அரசர்தம் கோமகன் - 184

மாதிரம் பொருத திண் தோள் மன்னன் கொழுந்து ஓடிப் படர் கீர்த்திக் கோவேந்தன் - 237

அரசர்பிரான், கதிர் கொண்ட சுடர் வேலான் - 238

வான் செய்த சுடர் வேலோய் - 239

தேன் செய்த தார் மௌலித் தேர் வேந்தன், சுரர் நாடு ஈந்தான், ஏடு துற்ற வடிவேலோன் - 240

தேர் வேந்தன், ஆன்ற செவ்வி முடியோய், - 241

மன்னர்பிரான் - 242

புறவு ஒன்றின் பொருட்டாகத் துலை புக்க பெருந்தகைதன் புகழில் பூத்த அறன் ஒன்றும் திரு மனத்தான், அமரர்களுக்கு இடர் இழைக்கும் அவுணர், ஆயோர் திறல் உண்ட வடி வேலான், "தசரதன்" என்று, உயர் கீர்த்திச் செங்கோல் வேந்தன் - 243

மாதிரம் பொருத தோள் மன்னர்மன்னன் - 247

அதிர்ந்து எழு முரசுடை அரசர் கோமகன் - 249

வேந்தர்தம் வேந்தன் - 252

நிருபர்க்கு ஏந்தல் - 262

நமித்திரர் நடுக்குறு நலம் கொள் மொய்ம்புடை நிமித் திரு மரபுளான் - 269

பெருந்தகை - 270

உலகு காவலன் - 271

நேமி வேந்தன் - 278

அரசர் கோமகன் - 289

இறைவன் - 300

உலகடை வேந்தர்தம் வேந்தன் - 301

அரசர்தம் பெருமகன் - 314

மடங்கல்போல் மொய்ம்பினான் - 317

இகல் கடந்த புலவு வேலோ(ன்) - 321

முரைசு எய்து கடைத் தலையான் - 323

கால வேலான் - 325

கொற்றவன் - 330

ஐயன் ஆம் மன்னன் - 334

பெருந் தகைமைத் தயரதன் - 636

அயன் புதல்வன் தயரதன் - 649

பகை வென்று படி காப்போன், தனு அன்றித் துணை இல்லான், தருமத்தின் கவசத்தான், மனு வென்ற நீதியான் - 650

நிறை குணத்துத் தசரதன் - 655

திறையோடும் அரசு இறைஞ்சும் செறி கழற் கால் தசரதன் - 660

கய ரத துரகமாக் கடலன், கல்வியன், தயரதன் எனும் பெயர்த் தனிச் செல் நேமியான் புயல் பொழி தடக் கையான் - 723

ஈறு இல் வண் புகழினான், மாறு அதிர் கழலினான் - 734

வெற்றிவேல் மன்னவன் - 736

குன்று என உயரிய குவவுத் தோளினான் - 737

விடை பொரு நடையினான் - 740

அழுந்திய உயிர்க்கு எலாம் அருட் கொம்பு ஆயினான் - 754

முத்து அணி வயிரப் பூணான் - 803

மற்று ஒரு கதிரோன் - 806

அடா நெறி அறைதல்செல்லா அரு மறை அறைந்த நீதி விடா நெறிப் புலமைச் செங்கோல் வெண் குடை வேந்தர் வேந்தன் - 1029

இரு நிலக் கிழவன் - 1031

இந்திர திருவன் - 1032

கங்கை நீர் நாடன் - 1033

இலை குலாவு அயிலினான் - 1034

தா இல் மன்னவர்பிரான் - 1040

மாறு இலா மதுகையான் - 1043

உலகு உளோர் தந்தையே அனைய அத் தகவினான் - 1044

உழுவை முந்து அரி அனான், எவரினும் உயிரினான் - 1046

நெடுந் தாதை - 1049

மனு எனும் தகையன் - 1051

விளைதரும் புகழினான், எவரினும் மிகுதியான் - 1052

கோல் வரும் செம்மையும், குடை வரும் தண்மையும், சால் வரும் செல்வம், என்று உணர் பெருந் தாதை - 1056

சான்று எனத் தகைய செங்கோலினான், உயிர்கள்தாம் ஈன்ற நல் தாய் எனக் கருது பேர் அருளினான் - 1057

அறம் செய் காவலன் - 1106

வெங் கண் ஆனையினான் - 1114

வையம் நுகர் கொற்றவன் - 1150

நெடு மன்னன் - 1151

சொல் உயர் களிற்று அரசர் கோமகன் - 1156

நீதி விரத மெய்த் தாதை - 1237

உரவோன் - 1264

மறவோன் - 1265

நெடு முடி மன்னவன் - 1266

நாகம் அனன், நெறி வந்தான் - 1267

குன்றே புரை தோளான் - 1268

ஐயன்தனை அரிதின் தரும் அரசன் - 1277

மானம் மணி முடி மன்னவன் - 1287

தளிர்ப்பு உறு மத கரித் தானையான் - 1304

மண்ணுறு முரசு இனம் வயங்கு தானையான் - 1308

பண்ணுறு படர் சினப் பரும யானையான் - 1314

ஒக்க நின்று உலகு அளித்து, யோகியின் எய்திய சக்கரத்தவன் எனத் தமியன் - 1315

பூ வரு பொலன்கழல் பொரு இல் மன்னவன் - 1317

ஏற்ற சொல் துறை அறி பெருமையான் - 1324

திரண்ட தோளினான் - 1344

தகவோன் - 1347

புண்ணியம் தொடர் வேள்விகள் யாவையும் புரிந்த அண்ணல் - 1348

இக் கடலிடைக் கிழவோன் - 1363

வாள் உழவன் - 1371

செவ்வியோன் - 1392

பனை அவாம் நெடுங் கரம் பரும யானையான் - 1395

செய் கழல் பெருந் திண் மால் யானையான் - 1408

புல்கு காதல் புரவலன் - 1411

வீரன் தாதை - 1457

முறைமையின் உலகம் காத்த மன்னன் - 1475

ஆடல் வென்றியான் - 1487

ஆழி நெடுங் கை மடங்கல் ஆளி அன்னான் - 1495

ஆழி மன்னன் - 1496

மன்றல் அருந் தொடை மன்னன் - 1498

வண்டு உளர் தாரவன் - 1500

நெய்ந்நிலை வேலவன் - 1512

குசைப் பரியோ(ன்) - 1513

மைந்தன் அலாது உயிர் வேறு இலாத மன்னன் - 1514

மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான் - 1515

வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான் - 1516

வையகம் முற்றும் நடந்த வாய்மை மன்னன் - 1517

கந்து கொல் யானைக் கழல் மன்னர் மேல் மேல் வந்து முந்தி வணங்கி மிடை தாளான் - 1519

இகல் வேந்தன் - 1524

பொய்ச் சொல் பேணா வாய்மொழி மன்னன் - 1525

பொன்குன்று ஒன்று ஒன்றோடு ஒன்றியது என்னக் குவி தோளான் - 1535

மிடல் வேந்தன் - 1538

வண்டு தாங்கிய தொங்கல் மார்பன் - 1541

வையம் ஏழும் ஓர் ஏழும் ஆர் உயிரோடு கூட வழங்கும் அம் மெய்யன், வீரருள் வீரன் - 1553

மணி முடி வேந்தன் - 1572

செயல் அருந் தவங்கள் செய்து இச் செம்மலைத் (இராமன்) தந்த செல்வத் தயரதன் - 1583

பூண்ட புகழ் மன்னன் - 1593

தூயவன், நாயகன் - 1597

தெருளுடை மனத்து மன்னன் - 1603

அன்பு இழைத்த மனத்து அரசன் - 1617

புவனி நாதன் - 1632

வறியோர் தனம் - 1635

திரை ஆர் கடல் சூழ் உலகின் தவம், திருவின் திரு, நிரை ஆர் கலையின் கடல், நெறி ஆர் மறையின் நிலை, கருணாலயன், உலகு ஏழ் உடையான் - 1637

வெவ் வாள் அரசன் - 1639

இணர் ஆர் தரு தார் அரசன் - 1659

மனிதன் வடிவம் கொண்ட மனு - 1672

இரு குன்று அனைய புயத்தான் - 1682

தாவாது ஒளிரும் குடையான் - 1691

புரைசை மத களிற்றான் - 1693

தண்டாத செங்கோல் தயரதன் - 1695

ஆதி அரசன் - 1708

தனித் தாதை - 1738

சான்றோர் புகழும் தனித்தாதை - 1739

நன் சொற்கள் தந்து ஆண்டு என்னை (இராமன்) நாளும் வளர்த்த தாதை - 1741

கண் அகல் மல் தடந் தானையான் - 1766

அரம் பொருத வேல் அரசன் - 1768

சூழி வெங் களிற்று இறை - 1875

அருந் தேரானைச் சம்பரனைப் பண்டு அமர் வென்றான் - 1906

வஞ்சம் இல் மனத்தான் - 1909
மனையில் மெய் எனும் மாதவம் புரிந்தவன் - 2082
அம் மெய் எனும் நல் அணி பூண்ட வேந்தன் - 2130
நெடு முடி அரசர் கோமகன் - 2144
தானவர் வலி தவ நிமிர்ந்த தானை அத் தேன் அமர் தெரியலான் - 2145
முதல்வன் முதலிய முந்தையோர் பழங் கதையையும் புதுக்கிய தலைவன் - 2151
ஏழ் உயர் மத களிற்று இறைவன் - 2156
அருக்கனே அனைய அவ் அரசர் கோமகன் - 2164
நேமி வேந்து - 2166
ஒன்றும் பொய்யா மன்னன் - 2178
நல்லான் - 2183
ஆளுடை மல் உயர் தோளினான் - 2430
நந்தா விளக்கு அனைய நாயகன், நானிலத்தோர் தந்தை, தனி அறத்தின் தாய், தயா நிலை, இகல் வேந்தர் ஏறு - 2434
தண்மை தகை மதிக்கும் ஈந்த தனிக் குடையோன் - 2440
உருளுடை நேமியால் உலகை ஒம்பிய பொருளுடை மன்னவன் - 2646
உயர் மன்னர் மன்னவன் - 2655
ஆழி உழவன் - 2683
அருமை செய் குணத்தின் ஆழியான் - 2704
கனைகடல் நெடுநிலம் காவல் ஆழியான் வனைகழல் தயரதன் - 2706
விரைத் தடந் தாரினான் - 2707
புரவலர்தம் புரவலன், பொய்ப் பகை, மெய்க்கு அணி, புகழின் வாழ்வு - 2710
அலங்காரம் என உலகுக்கு அமுது அளிக்கும் தனிக் குடையான் - 2711
உய்விடத்து உதவற்கு உரியான் - 2717
தரை அளித்த தனி நேமித் தயரதன் - 2867
வாய்மை யாவர்க்கும் சான்று என நின்ற அத் தரும மன்னவன் - 3002
தராவலய நேமி உழவன் தயரதப் பேர் பராவ அரு நலத்து ஒருவன் - 3123
வான் ஆள்பவன் - 3418
நேமியான் - 3451
சூரியன் மரபில் தோன்றி; சுடர் நேமி ஆண்ட ஆரியன்; அமரர்க்காக அசுரரை ஆவி உண்ட வீரியன்; வேள்வி செய்து விண் உலகோடும் ஆண்ட காரியன் கருணை அன்ன கண் அகன் கவிகை மன்னன் - 3776
இயல் தரும் புலமைச் செங்கோல் மனு முதல் யாரும் ஒவ்வாத் தயரதன் - 3777
சூழிமால் யானையார் தொழு கழல் தயரதன், பாழியால் உலகு எலாம் ஒரு வழிப் படர வாழ் ஆழியான் - 3789
உளை வயப் புரவியான் - 3793
வாய்மையும் மரபும் காத்து, மன் உயிர் துறந்த வள்ளல், தூயவன் - 4018
முடியா முடி மன்னன் - 5236
எல்லைப் பூவலயத்தை ஆண்ட புரவலன் - 5881
சம்பரப் பெயருடைத் தானவர்க்கு இறைவனைத் தனு வலத்தால், அம்பரத்து உம்பர் புக்கு, அமரிடைத் தலை துமித்து, அமரர் உய்ய உம்பருக்கு இறைவனுக்கு அரசு அளித்து உதவினான் ஒருவன், நேமி இம்பரில் பணி செய, தசரதப் பெயரினான், இசை வளர்த்தான் - 6152
மிடல் படைத்து, ஒருவனாய், அமரர் கோன் விடையதா வெரிநின் மேலாய், உடல் படைத்து அவுணர் ஆயினர் எலாம் மடிய, வாள் உருவினானும், அடல் படைத்து, அவனியை, "பெரு வளம் தருக!" என்று அருளினானும், கடல் படைத்தவரொடும், கங்கை தந்தவன் வழிக் கடவுள் மன்னன் - 6153
'பொய் உரைத்து உலகினில் சினவினார் குலம் அறப் பொருது, தன் வேல் நெய் உரைத்து, உறையில் இட்டு, அறம் வளர்த்து, ஒருவனாய் நெறியில் நின்றான் மை உரைத்து உலவு கண் மனைவிபால் வரம் அளித்து, அவை மறாதே, மெய் உரைத்து, உயிர் கொடுத்து, அமரரும் பெறுகிலா வீடு பெற்றான் - 6154
நாற் கடல் உடுத்த பாரின் நாயகன் - 6493
மறை வாய்மை ஒரு தானே ஆம் அரசன் - 6756
பொரு திரைப் புணரி வேலித் தேசத்துக்கு இறைவன் ஆன தெசரதன் - 6818
அம்பரத்து அமைந்த வல் வில் சம்பரன் ஆவி வாங்கி, உம்பருக்கு உதவி செய்த ஒருவன் - 9005
வேந்தர் பிரான் தயரதனார் - 9942
பெருந்தகைப் புதல்வனைப் பிரிந்த இன்னலால் உயிர் துறந்து, இருந் துறக்கத்துள் இருந்த மன்னவன் - 10065
நிகழ்த்த அரும் புகழோன் - 10071
செம்மல் - 10075
மெய்யினுக்கு உயிரை ஈந்த வேந்தர்கோன் - 10232
சம்பரந்தன்னை வென்ற தயரதன் - 10348

தரீமுகன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன்; மலைக்குகை போன்ற முகமுடையவன் என்பது இவன் பெயர்ப் பொருள்.

மா கரத்தன, உரத்தன, வலியன, நிலைய,
வேகரத்த, வெங் கண் உமிழ் வெயிலன,
மலையின் ஆகரத்தினும் பெரியன, ஆறு -
ஐந்து கோடி சாகரத்தொடும் - தரீமுகன்
என்பவன் - சார்ந்தான் - 4416

தாடகை

சுகேதுவின் புதல்வி. சுந்தனின் மனைவி. சுந்தன் அகத்தியரின் சினத்தால் இறந்துபட அவரைத் துன்புறுத்தினவள். எனவே அகத்தியர் இவளையும் இவள் புதல்வர்களையும் அரக்கராகும்படி வசவுரை (சாபம்) வழங்கினார். அரக்கியாகி வனத்தில் திரிந்து முனிவர்களுக்கும் அவர்களின் வேள்விகளுக்கும் இடையூறு செய்தவள். விசுவாமித்திரர் அழைத்து வந்த இராமனால் அழிந்தவள். மாரீசனின் தாய். இராவணனின் பாட்டி.

இன் உயிர் கொன்று உழல் வாழ்க்கையள்,
கூற்றின் தோற்றத்தள் ஐ-இரு நூறு மையல்மா
ஒன்றிய வலியினாள் - 359
வெரு வரு தோற்றத்தள் - 361
சூடக அரவு உறழ் சூலக் கையினள் காடு
உறை வாழ்க்கையள் - 362
இறைக் கடை தூடித்த புருவத்தள், எயிறு என்னும்
பிறைக் கடை பிறக்கிட மடித்த பில வாயள்,
மறைக் கடை அரக்கி - 369
கடம் கலுழ் தடங் களிறு கையொடு கை தெற்றா
வடம் கொள நுடங்கும் இடையாள் - 370
வெறிந்த செம் மயிர் வெள் எயிற்றாள் - 375
அல்லின் மாரி அனைய நிறத்தவள் - 387
அல் ஒக்கும் நிறத்தினாள் - 388
தடியுடை எயிற்றுப் பேழ் வாய்த் தாடகை - 390
மை வண்ணத்து அரக்கி - 475
இடித்த வெங் குரல் தாடகை - 567
உலை உருவக் கனல் உமிழ் கண் தாடகை - 662
நாடு அறியாத் துயர் இழைத்த நவை அரக்கி - 2866
வேல் இகல் சினவு தாடகை - 3791

தாரன் (பெயரில்லை)

தேவகுருவாகிய பிரகற்பதியின் மகன்; உருமையைப் பெற்றவன்; வானரப் படைத் தலைவருள் ஒருவன்.

ஈறு இல் வேலையை இமைப்புறும் அளவினில்
கலக்கிச் சேறு காண்குறும் திறல் கெழு
வானரச் சேனை ஆறு-எண் ஆயிர கோடியது
உடன் வர, அமிழ்தம் மாறு இலா மொழி
உருமையைப் பயந்தவன் வந்தான் - 4410

தாருகன்

அரக்கன்; அதிகாயனுக்குத் துணையாகப் போருக்கு வந்தவன்; இலக்குவனால் வெல்லப்பட்டவன்.

தாருகன் என்று உளன் ஒருவன் தான் நெடு
மேருவின் பெருமையான், எரியின்
வெம்மையான், போர் உவந்து உழக்குவான்,
புகுந்து தாங்கினான் தேரினன், சிலையினன்,
உமிழும் தீயினன் - 7846

தாரை

மிகச் சிறந்த அறிவுடைய மகளாகக் காட்டப்படும் தாரை வாலியின் மனைவி. அங்கதனின் தாய். இராம-சுக்கிரீவர் நட்பை வாலிக்கு முன்பே அறிந்தவள். எனவே சுக்கிரீவன் அழைக்கப் போருக்கெழுந்த வாலியைத் தடுக்க முனைந்தவள். மீறிச் சென்ற அவன் இராமனால் வீழ்த்தப்பட விதவையானவள். சுக்கிரீவனுக்கு அரசாட்சியில் துணை நின்றவள். குறித்த காலத்தில் படைகொண்டு வராததால் சுக்கிரீவன் மீது கடுங்கோபமுற்று கிட்கிந்தை வந்த இலக்குவனை இடைமறித்து அமைதிப்படுத்திப் படைவீரரின் வரவு உணர்த்தியவள்.

தாரை என்று அமிழ்தின் தோன்றிய வேயிடைத்
தோளினாள் - 3956
மலைக் குல மயில் - 3957
மயில் இயல் குயில்மொழி - 3961
விரைக் குழல் - 3970
வேல் விழித் தாரை - 4095
அகன்ற செக்கர், வெங்கதிர் விசும்பில் தோன்றும்
மின் எனத் திகழும் மெய்யாள் - 4096
ஆய்வளையா(ள்) - 4310
விரை செய் வார் குழல் தாரை - 4312
பொன்-தோள் தூமன நெடுங் கண் தாரை - 4316
இசையினும் இனிய சொல்லாள் - 4318
பார் குலாம் முழு வெண் திங்கள், பகல் வந்த
படிவம்போலும் ஏர் குலாம் முகத்தினாள் - 4319
மங்கல அணியை நீக்கி, மணி அணி துறந்து,
வாசக் கொங்கு அலர் கோதை மாற்றி,
குங்குமம் சாந்தம் கொட்டாப் பொங்கு வெம்
முலைகள், பூகக் கழுத்தொடு மறையப்
போர்த்த நங்கை - 4320

தானிமாலி

தானி(ய)மாலி என்பது தாந்யமாலி என்ற வடமொழிப் பெயரின் தமிழாக்கம். இராவணன் மனைவி. அதிகாயனின் தாய்.

தானிமாலி - 7991
இந்திரற்கும் தோலாத நன் மகனை ஈன்றாள் - 7995

திங்கள்

கதிர், சந்திரன், நிலா, மதி எனவும் அழைக்கப்படுபவன். தேய்ந்து வளரும் தன்மையன். இதனால் வளரும் பருவத்தில் திங்கட் குழவியாகிறான். குளிர்ந்த கதிர்களை உடைமையால் தண் கதிரோன் ஆகின்றான். அல் (இருள்) ஆண்டான், விண்மீன்களின் வேந்தன் என்பன இவன் சிறப்புக் காட்டுவன. சிவனின் தலையில் இளம்பிறையாகச் சூடப்படுபவன்; களங்கம் உடையவன். இராகு-கேதுகளின் வஞ்சக உருவத்தை மோகினி உருக்கொண்ட திருமாலுக்குக் காட்டியமையால் அவரால் பகைபெற்று பின் உமிழப்பட்டான் முதலான தொன்மங்களைக் கொண்டவன். இராமகாதையுள் சீதையின் குல முதல்வனாகக் காட்டப்படுகின்றான். கதிரவன் போன்று கதை நிகழ்வுகளுக்கு ஏற்ப, தோற்றத்திலும் மறைவிலும் கம்பரின் தற்குறிப்பேற்றத்தால் சிறப்புப் பெறுகிறான்.

திங்கள் - 119
சேண் மதி - 130
பனிதோய் வானின் வெண்மதி - 507
வாள் அரா நுங்கிய மதி - 526
ஆழி வெண் திங்கள் - 549
வண்ண மாலைக் கைபரப்பி, உலகை வளைந்த இருள் எல்லாம் உண்ண எண்ணி, தண் மதியத்து உதயத்து எழுந்த நிலாக் கற்றை - 552
வடு இல் இன் அமுதத் தொடும் வந்தவன், கடல் தோன்றிய திங்கள் - 556
நிலாக் கதிர் - 558
வாள் நிலா - 622
கங்குல் அரசன் கதிர்க் குடை - 627
வீசுகின்ற நிலாச் சுடர், ஈசன் ஆம் மதி - 628
முழு மதி - 749
மாசு இல் மதியின் கதிர் வழங்கு நிழல் - 830
கோணுதற்கு உரிய திங்கட் குழவி-தவழும் - 849
வண்ணக் கதிர் வெண் நிலவு - 884
கோள் உண்ட திங்கள் - 903
வான யாறு அதனை நண்ணிவயின் வயின் வயங்கித் தோன்றும் மீன் எலாம் சூழ நின்ற விரி கதிர்த் திங்கள் - 942
மை தீர் நீரிடைத் தோன்றும் திங்கள் நிழல் - 945
தாவு தண் மதி - 959
சந்திரன் - 961
தண் நிறை நெடு நிலாத் தழைத்தது எங்குமே - 962
வெள்ளை நிற நிலாக் கற்றை - 973
கொழு நிலா - 976
விண் மதி, தண் மதி - 978
தூ நிலா - 983
குழவித் திங்கள் - 984
செயிர் உறு திங்கள் - 1001
உயிரின் கருவே, கனியே, விளை காம விதைக்கு எருவே, மதியே - 1173
மங்கல முழு நிலா மலர்ந்த திங்கள் - 1210
அணங்கு வாள் விட அரா அணுகும் எல்லையும் குணம் கெடாது ஒளி விரி, குளிர் வெண் திங்கள் - 1451
ஒளிர் தண் கதிரோன் - 2593
தரும் கதிர்ச் சீத யாக்கைச் சந்திரன் - 3177
அல் ஆண்டான் - 3184
கால மீனின் வேந்தன் - 3223
அம் கண் மா ஞாலத்தை விளக்கும் ஆய் கதிர்த் திங்கள் - 3511
உவாமதி - 3711
வெள்ளி வெண் மதி - 3817
கலை கொண்டு ஓங்கிய மதியம் - 3868
மாச் சுடர் வெண் மதி - 3870
கார் இயன்ற நிறத்த களங்கம் ஒன்று ஊர் இயன்ற மதிக்கு உளதாம் - 4029
உடுவின் கோமான் - 5468
கொழுங் கதிர்ப் பகைக் கோள் இருள் நீங்கிய கொள்கை, செழுஞ் சுடர்ப் பனிக் கலை எலாம் நிரம்பிய திங்கள் புழுங்கு வெஞ் சினத்து அஞ்சனப் பொறி வரி அரவம் விழுங்கி நீங்கியது ஒத்தது, வேலை சூழ் ஞாலம் - 6592
கரு மணி கண்டத்தான்தன் சென்னியில் கறை வெண் திங்கள் - 6940
முளைக் கொழுங் கதிரின் கற்றை முறுவல் வெண் நிலவு - 8823

திரிசடை

விபீடணனின் மகள். அசோகவனத்தில் சீதைக்கு மருந்தாக நின்றவள். இராவணனின் அழிவினைத் தான் கண்ட கனவின் மூலம் சீதைக்கு உணர்த்தியவள். இராமதூதன் வருகையை முன்னுணர்த்தியவள். இராவணன் பெற்ற மொழி வசையைச் சீதைக்குத் தெரிவித்து அவளுக்கு மனவலிமை அளித்தவள். போர்க்களத்திலே இராம-இலக்குவர் மயங்கிக்கிடந்ததைக் கண்டு

துடித்தபோதும், மாயா சனகனைக் கொண்டு இராவணன் துன்புறுத்திய போதும் சீதைக்கு உண்மையைக் கூறி அவள் மயக்கம் தெளிவித்தவள். இக் கருணைக்கு மாற்றாகச் சீதையால் இலங்கையின் காவல் தெய்வமாக இருக்கும் பேறு பெற்றவள்.

திரிசடை - 5098
அன்பினால் தாயினும் இனியவள் - 5099
முச்சடை - 5227
வீடணன் கன்னி - 5366
கருத்தல் இல் சிந்தையாள் - 5834
அழுதின் செம்மையாள் - 7725
தேடி தவமே என்னத் திரிசடை - 8692
திரிசடையாள், மனவினில் சூடர் மா முக மாட்சியாள் - 9982
வணங்கு நுண் இடைத் திரிசடை, ஓர் இடர் இன்றி இலங்கைக்கு அணங்குதான் என இருத்தி - 10097

திரிசிரா (1)

அரக்கன். மூன்று தலைகளை உடையவன். ஆதலால் திரிசிரா என அழைக்கப்பட்டவன். கரனின் தம்பி. மூக்கறுபட்ட சூர்ப்பணகை வந்து முறையிட இராமனுடன் போருக்குச் சென்றவன். இராமனுடன் போராடி அழிந்தவன்.

திரிசரா - 2925
அளவு இல் ஆற்றலன், முத் தலைக் குரிசில், பொன் முடியன்; முக்கணாண் கைத்தலைச் சூலமே அனைய காட்சியான் - 2987
முத் தலைத் தலைவன் - 3001
திரிசிரா எனும் சிகரம் - 3010
திரிசிரத்தோன் - 6167

திரிசிரா (1)

அரக்கன். இராவணனின் மகன். இவனுக்கும் மூன்று தலை உண்டு. போரில் அதிகாயனுக்குத் துணையாக வந்த இவனை அனுமன் கொன்றான்.

தேவராந்தகன், நராந்தகன், திரிசரா என்னும் மூவர் ஆம், "தகை முதல்வர் ஆம் தலைவரும் முனையின், போவராம்; தகை அழிவராம்" எனத் தனிப் பொருவார் ஆவராம் தகை இராவணற்கு அரும் பெறல் புதல்வர் - 6566
தலை மூன்றுடையான் - 7902
கார் மேல் துயில் மலை போலியை - 7903
கதிர் வேல் திரிசிரா - 9286

திருமகள்

பாற்கடல் கடைந்த பொழுது தோன்றியவள். செந்தாமரை மலரில் வீற்றிருப்பவள். திருமாலின் மனைவியாக அவன் மார்பில் பதிந்தவள். சீதையின் அவதாரமானவள். நரசிங்க அவதாரத்தின் போது இரணியனை அழித்த பின்னும் சீற்றம் தணியாதிருந்த திருமாலின் சீற்றத்தை அகற்றி அமைதிப்படுத்தியவள்.

அகில் சேறு அணிந்த முலைத் திருமங்கை - 13
தாமரை உறங்கும் செய்யாள் - 37
திருமகட்கு இனிய மலர் (தாமரை) - 94
தணி மலர்த் திருமகள் தங்கு மாளிகை இணர் ஒளி பரப்பி நின்று இருள் துரப்பன - 143
அள்ளல் பூமகள் - 620
துடி புக்கா இடைத் திருமகள் - 824
மெய்ப் போதின் நங்கை - 902
செய்ய தாமரைச் செல்வியை, தீம் புனல், கையின் ஆட்டும் களிற்று அரசு - 953
முளரியாள் - 1036
மொய் கொள் சீறடியைச் சேர்ந்த முளரிக்கும் செம்மை ஈந்த தையலாள் அமிழ்த மேனித் தயங்குஒளி - 1125
அல்லி மலர் புல்லும் மங்கை - 1148
சிவப்புறு மலர் மிசைச் சிறந்த செல்வி - 1342
பொன் உயிர்த்த பூ மடந்தை - 1350
மலர்மகள் - 1352
மென்மலராள் - 1405
இந்திரை - 1407
உயர் போதின்மேல் உறை பேதை - 1549
மெய் ஆர் தவமே செய்து, உன் (திருமால்) மிடல் மார்பு அரிதின் பெற்ற செய்யாள் என்னும் பொன் - 1669
மா மலர் மேல் பெண் - 1706
சேல் தடங் கண் திரு - 2138
செம் மா மலராள் - 2592
நேமி பொறுத்தவன் மா மார்வில் திரு - 2595
பங்கயச் செல்வி - 2761
தாமரை இருந்த தையல் - 3135
செந் திருமகள் - 3141
செந் திரு - 2348
வண்ண வாசப் பங்கயத்தவள் - 4507
பதுமத்தாள் - 6040
பூவில் திருவை, அழகின் புனை கலத்தை,

யாவர்க்கும் செல்வத்தை, வீடு என்னும் இன்பத்தை, ஆவித் துணையை, அமுதின் பிறந்தாளை, தேவர்க்கும் தம் மோயை, ஏவினார், பாற் செல்ல - 6351

செந் தாமரைப் பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும் நந்தா விளக்கு, நறுந் தாள் இளங் கொழுந்து, முந்தா உலகும் உயிரும் முறை முறையே தந்தாள் - 6352

தீது இலாஆக உலகு ஈன்ற தெய்வம் - 6353

அமிழ்தின் வந்த செந்திரு - 7693

பதுமத்து இருந்து மாது - 8675

அலர் வாழ் தேவி - 8684

கன்னி நாள் திரு - 8760

விசயம் என இயம்பும் பெண் - 9092

புகழ்மகள் - 9927

பூவின் தையல் - 10239

சேயொளிக் கமலத்தாள் - 10300

பூமகள் - 10306

மலராள் - 10309

மா மலராள் - 10313

செய்ய மா மகள் - 10367

திருமால்

காப்பியத் தலைவன் இராமனாக உருவெடுத்துள்ள திருமாலைக் கம்பர் பலவாறாகச் சிறப்பித்துள்ளார். அண்ணல், அரணியன், அரி, ஆதிப்பண்ணவன், ஆதிவானவர் பிரான், ஆழியான், ஆழிவேந்தன், ஈசன், உயர்ந்த பரஞ்சுடர், உலகளந்தவன், ஐயன், ஒப்பு ஒன்று இல்லாதான், கடல் வண்ணன், கமலத்து அண்ணல் தாதையார், கரியவன், குறள், கோன், சக்கரத்தவன், சதுமுகன் தாதை, சுந்தரன், திகிரியான், திருவின் பெருமான், தூயவன், நாரணன், நெடியோன், நெடுமாயக் கள்வன், நேமிப்பெருமான், நேமியன், பரமன், பேர் ஆயிரமுடையான், மணிவண்ணன், மாயன், முத்தனார், முராந்தகன், முழு முதலோன், மெய்கலந்தமா, வள்ளல், விண்டு, விமலன், வையம் முற்றும் வயிற்றில் அடக்கியவன், வேதம் முடிவு காணாப் பரம்பொருள் என்பன அவற்றுள் சில.

ஏனம், கூர்மம், வாமனம், நரசிம்மம், கண்ணன் எனத் திருமாலின் பிற அவதாரங்களும் போற்றப்பட்டுள்ளன. துழாய் சூடியவன், சங்கு சக்கரங்களை ஆயுதமாகக் கொண்டவன்; பாற்கடலில் ஆயிரந்தலை ஆதிசேடனின் மீது பள்ளி கொண்டவன்; திருமகளை மார்பில் பதித்தவன்; கருடனை வாகனமாகப் பெற்றவன்.

தேவர்கள் வேண்ட இராவணன் முதலான அரக்கர்களை ஒழித்து அறத்தை நிலைநிறுத்த திருமால் இராமாவதாரம் மேற்கொள்கிறார். திருமாலின் நரசிம்ம அவதாரம் இரணிய வதைப் படலத்துள் தனித்துப் போற்றப்பட்டுள்ளது. பிற அவதாரச் செயல்களும், திருமால் பெருமைகளும் காப்பியம் முழுவதும் பரவியுள்ளன.

இராமாவதாரத்தைச் சிறப்பிக்கும் வைணவக் காப்பியமாயினும் சைவ வைணவ ஒற்றுமையை வலியுறுத்துவதும் குறிப்பிடத்தக்கது. திருமாலைச் சங்கர நாராயணனாகப் (கண்ணுதல் பொருந்த வரு கண்ணன் - 831) பாராட்டியிருப்பது ஒரு சான்றாகும்.

அகில் சேறு அணிந்த முலைத் திருமங்கைதன் வீறு அணிந்தவன் மேனி - 13

செறி நறுந் தயிரும், பாலும், வெண்ணெயும், சேந்த நெய்யும், உறியொடு வாரி உண்டு, குருந்தொடு மருதம் உந்தி, மறி விழி ஆயர் மாதர் வனை துகில் வாரும் நீரால், பொறி வரி அரவின் ஆடும் புனிதன் - 26

மாயோன் மார்பில் நன் மணிகள் வைத்த பொற் பெட்டி - 94

இருவர்க்கு ஒரு தனிக் கொழுநன் - 95

செங் கண் மால் - 98

அலை கடல் நடுவண், ஓர் அனந்தன் மீ மிசை, மலை என விழி துயில்வளரும் மா முகில் - 185

கரு முகில் என வளர் கருணை அம் கடல் - 189

திரை கெழு பயோததித் துயிலும் தெய்வ வான் மரகத மலை, பரகதி உணர்ந்தவர்க்கு உதவு பண்ணவன் - 190

துவளத் தாள் மலர் - 193

பொன்வரை இழிவது ஓர் புயலின் பொற்பு உற, என்னை (கம்பர்) ஆள் உடையவன் தோள் நின்று எம்பிரான், சென்னி வான் தடவும் மண்டபத்தில் சேர்ந்து, அரி துன்னு பொற் பீடமேல் பொலிந்து தோன்றினான் - 194

திருவின் நாயகன் - 196

செங் கண் நாயகன் - 197

மன்றல் அம் துளவினான் - 198

அருளின் ஆழியான் - 199

மன்றல் அம் செழுந் துளவு அணியும் மாயனார் - 202

அருள் தரும் கமலக்கண்ணன் - 207

வெந்து எழு கொடு வினை வீட்டும் மெய்ம்முதல் வந்து எழ அருள் தருவான் - 246

தீர்த்தன் - 293

அரா-அணையில் துயில்வோ(ன்) - 296
செங் கண் மால் - 408
அமல மூர்த்தி - 409
மாயன், நாயகன் - 412
நீல நிறத்து நெடுந்தகை, ஆல் அமர் வித்தின் அருங் குறள் ஆனான் - 413
அற்புதன் - 414
அண்டமும் முற்றும் அகண்டமும், மேல் நாள், உண்டவன் ஆம் - 418
தாழ்வு இல் கனக் கரியான் - 419
இலை குலாம் துழாய் முடி ஏக நாயகன், சிறியன் - 429
விரி திரைப் பாற்கடல் பள்ளி மேவினான், கரியவன் - 430
புள் திருப் பாகன் - 613
பைந் துழாய்ச் சோதியான் - 614
வள்ளல் சேக்கைக் கரியவன் வைகுறும் வெள்ளப் பாற்கடல் - 620
பணி அரங்கப் பெரும் பாயற் பரஞ்சுடர் - 638
அல் என்னும் திரு நிறத்து அரி - 648
கயல் பொரு கடலுள் வைகும் கடவுள் - 707
தேம் பொழி துழாய் முடிச் செங் கண் மாலவன் - 739
நேமியான் - 803
திரண்ட தாள் நெடுஞ் செறி பணை மருது இடை ஒடியப் புரண்டு பின் வரும் உரலோடு போனவன் - 815
கண்ணுதல் பொருந்த வரு கண்ணன் - 831
உலகு அளந்தவன் - 857
அண்ணல் கரியோன் - 880
மானுட மடங்கல் - 890
படர் திரைக் கருங் கடல் பரமன் மார்பிடைச் சுடர் மணி - 1028
ஆழியான் - 1038
ஆதி வானவர் பிரான் - 1062
கண்ணன் - 1068
வையம் முற்றும் வயிற்றின் அடக்கிய ஐயன் - 1082
கோன் அணி சங்கம் - 1123
இராமன் என வந்தோன், சங்கினொடு சக்கர முடைத் தனி முதற் பேர், அம் கண் அரசு - 1148
வையமும் வானும் வாய்மடுத்து உண்டவன் மணி அணி உதரம் - 1205
ஆதி அம் சோதி - 1208
நின்று உலகு அளந்த நேமி நெடிய மால் - 1289
வெற்றி காட்டிய கரியமால் - 1292
நாரணன் - 1297
மின்னுடை நேமியான் - 1300
ஒக்க நின்று உலகு அளித்து, யோகின் எய்திய சக்கரத்தவன் - 1315
மின்னும் நேமியன் - 1404
மென் மலராள், நிலமாது எனும் தேவி மாரொடும், தேவர்கள் யாவர்க்கும் ஆவியும், அறிவும், முதல் ஆயவன் - 1405
உலகு யவையும் மன் வயிற்றின் அடக்கிய மாயன் - 1406
ஓங்கு புள் ஊர்தி - 1421
வையகப் போனகன், ஆயிர மௌலியான் - 1428
நேமி நாரணன் - 1584
காதலன் - 1615
ஆதியொடு அந்தம் ஒன்றாம் தன்னாலும் அளப்ப அருந் தான் - 1743
அமரேசன் உந்தி - 2020
அளிக்கும் நாயகன் மாயை புக்கு அடங்கினன் எனினும், களிப்பு இல் இந்தியத்து யோகியைக் கரக்கிலன் - 2056
துளப வானவன் - 2083
சூல் தடங் கருங் கார் புரை தோற்றத்தான் - 2138
தழைத்த தண் துளவினோன் - 2201
விமலன் - 2259
கழல் கால் மாயன் - 2370
படம் செய் நாகணைப் பள்ளி நீங்கினான் - 2468
கடல்வணன் - 2495
நேமி பொறுத்தவன் - 2595
ஆழியில் அறிதுயிலவன் - 2620
சுடர் நேமி - 2652
நான்கு தோள் உந்தியில் உலகு அளித்தான் - 2743
அரா-அணை அமலன் - 2783
திருமால் - 2863
பொன்றா மூவர் - 3017
பொன்னாடை புனைந்தான் - 3069
பங்கயத்து இருந்த பொன்னை ஆகத்தில் (ஒருவன்) வைத்தான் - 3142
அரா-அணைத் துயிலும் அண்ணல் - 3174
சது முகன் தாதை - 3301
பஞ்சு அணை பாம்பணை ஆகப் பள்ளி சேர் அஞ்சனவண்ணன் - 3457
(ஆலின்) அடைக் கிடந்த பாலன் - 3683
ஆய மால் நாகர் தாழ் ஆழியான் - 3796
தடக் கை ஆழியான் - 3917
ஈசன் - 3945

கோள் அவுணன் குறித்த வன் தூணிடைத் தோன்றிய மா நரசிங்கம் - 3972
கார்க் குன்றம் அன்னான் - 3973
கார் எனும் பெயர்க் கரியவன் - 4188
திருவின் நாயகன் இவன் எனத் தே மறை தெரிக்கும் ஒருவன் - 4189
செங் கணான் - 4244
நேமியோன் - 4245
கை அஞ்சு ஆயுதம் உடைய அக் கடவுள் - 4426
தேவர்க்கும் தேவன் - 4500
மூஅடி குறித்து முறை ஈர்-அடி முடித்தான் - 4590
வலம் கொள் நேமி மழை நிற வானவன் - 4629
மெய்ந் நெறி நாயகன் - 4630
பால்மகப் பரவைப் பள்ளிப் பரம்பரன் - 4708
வேதம் அனைத்தும் தேர்தர, எட்டா ஒரு மெய்யன் - 4715
புவனம் தாய பெரு வடிவு உயர்ந்த மாயோன் - 4736
அறத்தகை அரசன் - 4769
விண்டு - 4772
கார் நிறத்து அண்ணல் - 4774
தீயோர் உளர் ஆகியகால், அவர் தீமை தீர்ப்பான், மாயோன் மகரக் கடல்நின்று எழு மாண்பது ஆகி - 4780
கச்சம் ஆகி, மால் ஏந்த ஓங்கு நெடு மந்தர வெற்பு- 4781
ஆதியோடு அந்தம் ஆகித் தோன்றாது நின்றான் - 4783
வேதக் கொழுஞ் சுடர் - 4816
ஊழி நாயகன் - 4846
அரா-அணைப் பள்ளியான் உந்தியில் பயந்த அண்டம் - 4858
கனகனை முருக்கிய முரண் சீயம் - 5041
மாயோன் குறள் - 5052
உலகு எலாம் அளந்த நாயகன் - 5330
உலகு எயிற்றிடை கொள் ஏனம் - 5436
ஐயன் வைகும் ஆல் - 5472
ஏழினோடு ஏழு நாடும் அளந்தவன் - 5474
மெய் கலந்த மா (நரசிங்கம்) - 5615
மூன்று உலகு அடியின் தாயோன் - 5659
தூண்டத் தூண் அதனில் தோன்றும் கோளரி, சுடர் வெண் கோட்டு மண் தொத்த நிமிர்ந்த பன்றி - 5672
தேவர்க்கும் தேவர் ஆய மூர்த்தி - 5720
தனி மாச்சீயம் - 5762
நீரிடைக் கண் துயில் நெடிய நேமி - 5821
புள் உயர்த்தவன் திகிரி - 5843
நேமி - 5874
போர் அணங்கு இடங்கர் கவ்வ, பொது நின்று, "முதலே" என்ற வாரணம் காக்க வந்தான் அமரரைக் காக்க வந்தான் - 5883
முராந்தகன் - 5919
மேரு வில் குழைய தோளால் முப்புரத்து எய்த கோ(ல்) - 5940
ஆயது அங்கு ஓர் குறள் உரு ஆய், அடித் தாய் அளந்து, உலகங்கள் தரக் கொள்வான் மீ எழுந்த கரியவன் - 5949
யாவரும் இறைவன் என்று இறைஞ்சும் மேன்மையர் மூவர் - 6093
உறு திறல் கலுழன்மேல் ஒருவன் - 6157
ஆழி மா வலவன் - 6167
முழுதும் காவலின் பெற்ற திகிரியான் - 6175
தன்னின் முன்னிய பொருள் இலா ஒரு தனித் தலைவன் - 6181
முழுமுதலோன் - 6182
உரவோன் - 6185
அரி - 6186
எற்றை நாளினும் உளன் எனும் இறைவன் - 6190
தாமரைத் தடங் கண்ணினான் பேர் - 6196
வேதத்து உச்சியின் மெய்ப் பொருட் பெயர் - 6210
முன்னை வேதத்தின் முதற் பெயர் - 6213
வேத பாரகன், ஆதி நாயகன் - 6215
தொல்லை நான்மறை வரன்முறைத் துணி பொருட்கு எல்லாம் எல்லை கண்டவன் - 6216
காலால் புவி கொள் நாயகன் - 6220
நான்முகத்து ஒருவற்கும், யாரினும் உயர்ந்த தனக்கு தன் நிலை அறிவுதரும் ஒரு தனித் தலைவன் - 6221
துணை இலான் - 6226
சுருதி ஆதியில் தொடங்குறும் எல்லையில் சொன்ன ஒருவன், யாவருக்கும் நாயகன் - 6228
பிறங்கு தெண் திரைப் பெருங்கடல் புக்கு, இனம் பெயராது, உறங்குவான் - 6237
சித்து என அரு மறைச் சிரத்தின் தேறிய தத்துவம் அவன் - 6249
அளவையான் அளப்ப அரிது; அறிவின் அப் புறத்து உளவை ஆய் உபநிடதங்கள் ஓதுவ; கிளவி ஆர் பொருள்களான் கிளக்குறாதவன் - 6250
அராஅணை அமலன் - 6256
கண்ணினும் கரந்துளன்; கண்டு காட்டுவார் உள் நிறைந்திடும் உணர்வு ஆகி, உண்மையால், மண்ணினும், வானினும், மற்றை மூன்றினும் எண்ணினும் நெடியவன் ஒருவன், எண் இலான் - 6259

சிந்தையின், செய்கையின், சொல்லின், சேர்ந்துளன்; இந்தியம் தொறும் உளன்; உற்றது எண்ணினால், முந்தை ஓர் எழுத்து என வந்து, மும் முறைச் சந்தியும் பதமுமாய்த் தழைத்த தன்மையான் - 6260

காமமும் வெகுளியும் முதல கண்ணிய தீமையும், வன்மையும், தீர்க்கும் செய்கையான் நாமமும், அவன் பிற நலி கொடா நெடுஞ் சேமமும், பிறர்களால் செப்பற் பாலவோ ? - 6261

காலமும் கருவியும் இடனும் ஆய், கடைப் பால் அமை பயனும் ஆய், பயன் துய்ப்பானும் ஆய், சீலமும் அவை தரும் திருவும் ஆய், உளன் ஆலமும் வித்தும் ஒத்து அடங்கும் ஆண்மையான் - 6262

உள்ளுற உணர்வு இனிது உணர்ந்த ஓசை ஓர் தெள் விளி யாழிடத் தெரியும் செய்கையின், உள் உளன்; புறத்து உளன்; ஒன்றும் நண்ணலான்; தள்ள அரு மறைகளும் மருளும் தன்மையான் - 6263

ஓம் எனும் ஓர் எழுத்து அதனின் உள் உயிர் ஆம் அவன், அறிவினுக்கு அறிவும் ஆயினான்; தாமஉமூஉலகமும் தழுவிச் சார்தலால் தூமமும் கனலும்போல் தொடர்ந்த தோற்றத்தான் - 6264

தூயவன் - 6270

வல் வீரைத் துயில்வான் - 6283

நடு ஒக்கும் தனி நாயகன் - 6289

ஆதிப் பண்ணவன் ஆயிர நாமம் - 6291

உலகு யாவும் உடன் தந்தார் - 6306

உலகு தந்தானும், பல் வேறு உயிர்கள் தந்தானும், உள் உற்று உலைவு இலா உயிர்கள்தோறும், அங்கு அங்கே உறைகின்றானும், மலரினில் வெறியும் எள்ளில் எண்ணெயும்; மற்றும் கேளாய்! அலகு இல் பல் பொருளும் பற்றி முற்றிய அரிகாண் - 6308

பொன்கணான் ஆவி உண்ட புண்டரீகக் கண் அம்மான் - 6309

மூன்றுஅவன்குணங்கள்; செய்கைமூன்று; அவன் உருவம் மூன்று; மூன்று கண், சுடர் கொல் சோதி மூன்று; அவன் உலகம் மூன்று; தோன்றலும் இடையும் ஈறும் தொடங்கிய பொருள்கட்கு எல்லாம் சான்று அவன்; இதுவே வேத முடிவு; இது சரதம் - 6310

சாணினும் உளன்; ஓர் தன்மை, அணுவினைச் சத கூறு இட்ட கோணினும் உளன்; மாமேருக் குன்றினும் உளன்; இந் நின்ற தூணினும் உளன்; (நீ) சொன்ன சொல்லினும் உளன் - 6312

உலகு எங்கும் பரந்துளான் - 6313

நாளும் தேடி நான்முகனும் காணாச் சேயவன் - 6316

மன்றல் அம் துளப மாலை மானுட மடங்கல் - 6319

வன் தொழில் ஆழி வேந்தன் - 6333

மிகை செய்வார் வினைகட்கு எல்லாம் மேற்செயும் வினையம் வல்லான் - 6335

அண்ணல் - 6336

தான் தனி ஒருவன், வான் தரு வள்ளல் - 6340

நோக்குறு முகமும் கையும் ஆக்கையும் தாளும் ஆகி, எங்கணும் தானே ஆகி, வாக்கினால் மனத்தினால் மற்று, அறிவினால் அளக்க வாரா மேக்கு உயர் சீயம் - 6343

நேமிப் பெருமான் - 6349

ஒப்பு ஒன்று இல்லாதான் - 6352

உயர்ந்த பரஞ்சுடர் - 6353

பேர் ஈசன் - 6358

உடையான் - 6363

அரணியன் - 6366

ஆதி அம் பரமன் - 6385

வேதமும் முடிவு காணா மெய்ப்பொருள் - 6474

மன்னுயிர் எல்லாம் தானே வருவித்து வளர்க்கும் மாயன், தன் அன உலகம் எல்லாம் தருமமும் எவையும் தானே என்னினும், அடைந்தோர் தம்மை ஏமுற இனிதின் ஓம்பி, பின்னும் வீடு அளிக்கும் - 6475

கமலத்து அண்ணல் தாதையர் - 6499

தேடுவார் தேட நின்ற சேவடி - 6514

இரக்கம் வந்து எதிர்ந்த காலத்து, உலகு எலாம் ஈன்று, மீளக் கரக்கும் நாயகன் - 6650

மௌலித் துளவினான் - 6780

பெருந் திண் மாயன் - 6808

பூசற்கு முயன்று நம்பால், பொரு திரைப் புணரி வேலித் தேசத்துக்கு இறைவன் ஆன தெசரதன் சிறுவனாக, மாசு அற்ற சோதி வெள்ளத்து உச்சியின் வரம்பில் தோன்றும் ஈசற்கும் ஈசன் வந்தான் - 6818

அரு மறை, 'பரம்' என்று ஓதும் நல் நிலை நின்று தீர்ந்து, நவை இலா உயிர்கள் தோறும் தொல் நிலை பிரிந்தான் என்னப் பல வகை நின்ற தூயோன் - 6819

எறி சுடர் நேமியான் - 6832

உலகு சுற்றும் எயிற்றின் இடந்து எழுந்தவன் - 6884

பரு மணி வண்ணன் - 6940

திரையின் வேலை மென் மலர் பள்ளி ஆன ஐயன் - 6947

கரத்து நேமி சங்கமும் தரித்த மால் - 6996

குறள் அளந்தான் திருவடி - 7178

அம்பரம் செம் பொன் உடுத்த நாயகன் - 7226

மாணியாய் உலகு அளந்த நாள் - 7235

மா இரு ஞாலம் முற்றும் வயிற்றிடை வைத்த மாயன் - 7295

ஒருவன் இப் புவனம் மூன்றும் ஓர் அடி ஒடுக்கிக் கொண்டோன் - 7307

முத்தனார் - 7532
கேசவன் சிறுவர் - 7652
புனத் துழாய் மாலையான் - 7657
வன் சிறைப் பறவை ஊரும் வானவன் - 7669
தன் போல்பவர் தானும் இலாத தனிப் பொன்போல் ஒளிர் மேனியான் - 7795
எட்டா ஒருவன் - 7799
திருவின் பெருமான் - 7809
கூர்மத்தின் வெரிநின் வைத்து வானவர் அமுதம் கொண்ட - 7940
செங் கண் நெடுமால் - 8011
உலகம் தாங்கு சக்கரத்தவன் - 8187
எறுழ் வலிக் கலுழன் ஏறும் சுந்தரன், உண்டு உலகு ஏழும் உமிழ்ந்தவன் என்னும் ஊற்றம் கொண்டவன் - 8298
கரங்களில் நேமி சங்கம் தாங்கிய கரியோன் - 8299
எங்கும் உளன் ஒருவன் என இரு நான் மறை தெரிக்கும் செங் கண்ணவன் - 8555
பகை அடும் திகிரி பற்றும் ஏக சாதனன் - 8564
மறைக்கும் எட்டாத பரஞ்சுடர் - 8730
வேண்டு உருவம் கொண்டு எழுந்து, விளையாடு கின்றான், மெய் வேதம் நான்கும் தீண்டு உருவன் அல்லாத திருமா(ல்) - 8740
மரு விரி துளவ மோலி, மாநிலக் கிழத்தியோடும் திரு வொடும் இருந்த மூலத் தேவு - 8752
கன்னி நாள் திருவைச் சேரும் கண்ணன் - 8760
நேமி தாங்கிய கோன் - 8789
செங் கணான் - 8805
யான் எனது எண்ணல் தீர்ந்தார் எண்ணுறும் ஒருவன் - 8851
மூவகை உலகும் தான் ஆய் தன் பெருந்தன்மை தானும் அறிகிலா ஒருவன் - 8941
ஆயிரம் மௌலி அண்ணல் - 8942
ஆணி இவ் உலகுக்கு ஆன ஆழியான் - 8943
மூஉலகின் கோ ஆகிய கொற்றவன் - 8961
நிமிரும் பேர் ஆயிரம் உடையான் - 9035
முந்தை நாள் உலகம் தந்த மூத்தவானோர்கட்கு எல்லாம் தந்தையார் தந்தையார் - 9099
திசைகள் எங்கும் மாண் கலந்து அளந்த மாயன்- 9156
வரம் தரு முதல்வன் - 9172
பாற்கடல் கள்வன் - 9197
மால் - 9309
பாம்புஅணை அமலனே மற்று இராமன் - 9343
சக்கரத் தலைவன் - 9346
அண்டத்தினை அளந்தான் - 9415
எழு திகிரி அமரர் பதி அவன் - 9462
நெடு மாயக் கள்வன் - 9472
முற்றும் அளந்தான் - 9486
இறுதிநாள் வந்து கூட மண்டு நாள், மறித்தும் காட்ட மன்னுயிர் அனைத்தும் வாரி உண்டவன் தானே ஆன தன் ஒரு மூர்த்தி - 9528
பூதம் உண்டவை வயிற்றிடை ஒடுக்கி உமிழ்கிற்போன் - 9688
கோளுற்று உண்டவன் வயிறு - 9696
வேலை சூழ் ஞாலம் உண்டு ஓர் பன்றியாய் எயிற்றுக் கொண்ட பரம்பரன் - 9916
சேண் உயர் மறையை எல்லாம் முறை செய்த செல்வன் - 9994
நேமிப் பண்ணவன் - 10004
சங்கு கைத் தாங்கிய தருமமூர்த்தி - 10027
திரு மூர்த்தியார் - 10164
அம் கண் வான் உலகும் தாய அடி - 10324

திலோத்தமை

வானுலகப் பெண். இராவணன் வானுலகை வென்றதால் அவனது அவையில் பணிப்பெண் ஆனவள்.

திலோத்தமை - 584
செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல - 5147

தீர்க்கபாதன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன். நீண்ட கால்களையுடையவன்

தீர்க்கபாதனும், வினதனும், சரபனும், திரைக்கும் மால் கருங் கடற்கு உயர்ந்துள மைம் முகத்து அனிகம் ஆர்க்கும் எண்ண அருங் கோடி கொண்டு, அண்டமும் புறமும் போர்க்கும் பூழியில் மறைதர, முறையினின் புகுந்தார் - 4425

துந்துபி

போர் செய்து தன் வலிமை காட்ட திருமாலிடம் சென்ற அரக்கன். திருமால் அவனைச் சிவனிடம் அனுப்பினான். சிவன் தேவர்களிடம் அனுப்பினான். தேவர் வாலியிடம் அனுப்பினர். வாலியுடன் போரிட்டுத் தோல்வியுற்று அவனால் கொல்லப்பட்டவன்.

துந்துபி - 3886
துந்துபிப் பெயருடைச் சுடு சினத்து அவுணன், மீது இந்துவைத் தொட நிமிர்ந்து எழு ஒருப்பு இணையினான், மந்தரக் கிரி எனப் பெரியவன் - 3888

தும்புரு

இராவணன் அவையில் அவன் வெற்றிச் சிறப்பினைப் பாடும் கந்தருவன். நாரதன் போன்று இசையில் வல்லவனாவான்.

திசைஉறு கரிகளைச் செற்று, தேவனும்
வசையுறக் கயிலையை மறித்து வான் எலாம்
அசைவுறப் புரந்தரன் அடர்ந்த தோள்களின்
இசையினைத் தும்புரு இசையின் ஏத்தவே - 3078

துமிந்தன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன். (காண்க : மயிந்தன்)

கோடி கோடி நூறாயிரம் எண் எனக் குவிந்த நீடு
வெஞ் சினத்து அரிஇனம் இரு புடை நெருங்க,
மூடும் உம்பரும், இம்பரும், பூழியில் மூழ்க,
தோடு இவர்ந்த தார்க் கிரி புரை துமிந்தன் - 4421

துமிந்தன் - 5343

நயம் தெரிகாவலன் - 6403

வானோர் தம் மருத்துவர் மைந்தன், வலிக்கண்
மிக்கான் - 6888

மயிந்தனும் துமிந்தன் தானும் மழைக்குலம்
கிழித்து வானத்து உயர்ந்து எழும் எருவை
வேந்தர் உடன் பிறந்தாரை ஒத்தார் - 8060

துமிரன்

அரக்கன். சீதையைத் தேடித் தென்திசை வந்த வானரப் படையினர் ஒரு பொய்கைக் கரையில் ஓய்வு எடுத்த பொழுது அப்பொய்கைக்கு உரிமை பாராட்டி வந்தவன். அங்கதனால் அழிக்கப்பட்டவன்.

தண்டா வென்றித் தானவன், தகவு இல்லான் - 4594

மலையே போல்வான்; மால் கடல் ஒப்பான்;
மறம் முற்ற, கொலையே செய்வான்; கூற்றை
நிகர்ப்பான்; கொடுமைக்கு ஓர் நிலையே
போல்வான்; நீர்மை இலாதான்; நிமிர்திங்கள்
கலையே போலும் கால எயிற்றான்; கனல்
கண்ணான் - 4595

பிறங்கு பங்கியான், பெயரும் பெட்பினில்
கறங்கு போன்றுளான் - 4598

காலனே ஆனான் - 4599

இகற்கு ஆதி மூர்த்தியான் - 4600

தூ நிவந்த வேல் துமிரன் - 4603

துவிந்தன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன்.

துவிந்தன் - 5343

துன்மருடன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன்.

காலன் அனைய துன்மருடன் - 5343

துன்முகன் (1)

வானரப் படைத்தலைவருள் ஒருவன். அழகில்லாதவன் என்பது இவன் பெயரின் பொருள். முதற்போரில் அனுமனுடன் இணைந்து இலங்கையின் மேற்கு வாயிலில் போர் புரிந்தவன்.

வகுத்த தாமரை மலர் அயன், நிசிசரர் வாழ்நாள்
உகுத்த தீவினை பொருவரும் பெரு வலி
உடையான் பகுத்த பத்து நூறாயிரப் பத்தினின்
இரட்டி தொகுத்த கோடி வெம் படை கொண்டு,
துன்முகன் தொடர்ந்தான் - 4419

துன்முகன் (2)

இராம - இராவணப் போரில் இராவணனுக்குத் துணைநின்ற அரக்கன். அவன் மந்திரத்துள் ஒருவன். முதற்போரில் அனுமனால் வீழ்த்தப் பட்டவன்.

சில்லி மாப் பெருந் தேரொடும், கரி, பரி, சிறந்த
வில்லின் மாப் படை ஏழ்-இரு கோடிக்கு
வேந்தன் கல்லி மாப்படி கலக்குவான் கனல்
எனக் காந்திச் சொல்லும் மாற்றத்தன்
துன்முகன் என்று அறம் துறந்தோன் - 6557

நோன் கழல் ஆற்றல்சால் துன்முகன் - 7097

துன்முகக் குன்றம் - 7099

தூடணன்

அரக்கன்; கரனின் தம்பி; சூர்ப்பணகை சொற்கேட்டு இராமனை எதிர்த்தவன்; அதில் அவனால் வீழ்த்தப்பட்டவன்.

துணையும் வாம்பரித் தேரினன் தூடணன் - 3015

வெய்யவன் - 3032

கரிய மால் வரை நிகர் கர தூடணர் - 9286

தூம நாட்டத்தன்

அரக்கன். இராவணன் படைத் துணைவருள் ஒருவன். வீரன் பிண உடலைத் தின்பவன்

நாமம் நாட்டிய சவம் எனின், நாள் என்றும்
ஒருவர் ஈம நாட்டிடை இடாமல், தன் எயிற்றிடை
இடுவான் தாமம் நாட்டிய கொடிப் படைப்
பதுமத்தின் தலைவன் தூம நாட்டத்தன்
என்று உளன் தேவரைத் துரந்தான் - 6559

தூமன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன்.

தூமத் தனிப் பெயரோன் - 5344

தூமிரன்

கரடி இனத்தவன். சாம்பவானுக்கு உடன் பிறந்தவன். இராம - இராவணப் போரில் இராமனுக்குத் துணையாகச் சுக்கிரீவன் அழைக்க வந்தவன்.

எறுழ் வலித் தூமிரன் - 4412

தேவராந்தகன்

அரக்கன். இராவணனின் புதல்வன். அதிகாயனுடன் போரிட வந்து அனுமனால் கொல்லப்பட்டவன்.

தேவராந்தகன், நராந்தகன், திரிசிரா என்னும்
மூவர் ஆம், " தகை முதல்வர் ஆம்
தலைவரும் முனையின், போவராம்; தகை
அழிவராம்" எனத் தனிப் பொருவார் ஆவராம்
தகை இராவணற்கு அரும் பெறல் புதல்வர் - 6566

நெடுந் தேவாந்தகன் - 7890

நெடுந் தேரினன் - 7891

நராந்தகன்

அரக்கன். இராவணன் புதல்வன்; அதிகாயனுடன் இணைந்து வானரப் படையை எதிர்த்தவன். அங்கதனால் அழிந்தவன்.

'தேவராந்தகன், நராந்தகன், திரிசிரா என்னும்
மூவர் ஆம், "தகை முதல்வர் ஆம் தலைவரும்
முனையின், போவராம்; தகை அழிவராம்"
எனத் தனிப் பொருவார் ஆவராம் தகை
இராவணற்கு அரும் பெறல் புதல்வர் - 6566

நராந்தகன் - 7934

தேரிடைநின்று கண்கள் தீ உக, சீற்றம் பொங்க,
பாரிடைக் கிழியப் பாய்ந்து, பகலிடைப் பரிதி
என்பான் ஊரிடை நின்றான் என்ன, கேடகம்
ஒரு கை தோன்ற, நீருடை முகிலின் மின்போல்,
வாளொடு நிமிர வந்தான் - 7935

நளன்

தெய்வத் தச்சன். விசுவகர்மாவின் மகன். இராம அவதாரத்திற்குத் துணை செய்ய வானரமாய் வந்தவன். இராமன் ஆணைப்படி இலங்கைக்குக் கடற்பாலம் கட்டியவன்.

தெய்வத் தச்சன் மெய்த் திரு நெடுங் காதலன் - 4427

நளன் - 5343

வானரத் தச்சன், நிந்தனை இலாதவன் - 6675

நளன் எனும் நவையின் நீங்கினான் - 6681

குலை கொளக் குறி நோக்கிய கொள்கையான் - 6720

நளன் என்னும் விலங்கல் அன்னான் - 6886

வெஞ்சினத் தச்சன் - 8433

பேர் எழிலாளன் - 8436

வேலை கட்டவன் - 8616

நாரதர்

இசையில் வல்லவன். வானவன் எனினும் அடிமைப்பட்டதால் தன் இன்னிசையால் இராவணனை மகிழச் செய்யும் பணியாளன்.

தார் மேனித் திரு நாரதன் - 2590

சேண் உயர் நெறி முறை திறம்பல் இன்றியே
பாணிகள் பணி செய, பழுது இல் பண் இடை
வீணையின் நரம்பிடை விளைத்த தேமறை,
வாணியின், நாரதன், செவியின் வார்க்கவே - 3079

நாத வீணை இசை நாரதனார் தம் வேத கீத
அமுது - 6868

நாரத முனிவர் - 7272

நான்முகன்

முப்பெருந் தேவரில் ஒருவன். திருமாலின் உந்தித் தாமரையில் பிறந்தவன்; நான்கு முகம் கொண்டவன். கலைமகளைத் தன் நாவில் நிறுத்தியவன்; அன்னத்தை ஊர்தியாகப் பெற்றவன்; இவ்வுலகையும் உயிரினங்களையும் படைப்பவன்.

அண்ணல். அந்தணன், அம்போருகன், அயன், அலர் உளோன், அறிவன், கமலத்தோன், சதுமுகன், சரோருகன், தவன், தாமரைக் கிழவன்,

திசைமுகன், நாலு முகத்தான், பிதா மகன், பிரமன், புண்டரீகன், புரந்தரன், புராதனன், பூமகன், போக மாமலர் உறை புனிதன், போதினான், போதோன், முதல் அந்தணன், முதல்வன், முன்னவன், வள்ளல், விரிஞ்சன் என்பன போன்று காப்பியத்துள் போற்றப்படுபவன்.

கதையின் எதிர்த்தலைவன் இராவணனின் பாட்டனாகவும் வசிட்டரின் தந்தையாகவும் குறிக்கப்பட்டுள்ளவன். அனுமனால் எரிக்கப்பட்ட இலங்கையை, இராவணன் ஆணையின் படி ஏழு நாட்களில் புதுப்பித்தவன்.

மலர்மேல் கமைப் பெருஞ் செல்வக் கடவுள் - 95
அயனார் - 96
விரை செறி கமல மென் பொகுட்டு மேவிய வர சரோருகன் - 184
நான் முகக் கடவுள் - 187
போக மா மலர் உறை புனிதன் - 188
தாமரைச் செழுந் தவிசு உவந்த அத் தேவு - 192
தூய மா மலர் உளோன் - 203
பிதாமகன் - 204
அலர் உளோன் - 207
பூந் தவிசு உகந்து உளோன் - 212
இ மலரோன் - 312
கந்த மலரில் கடவுள் - 318
வாச நாள் மலரோன் - 392
மலருள் வைகும் பிரமன் - 399
விரிமலர்த் தவிசோன் - 405
பூமகன் உலகு - 406
மாலின் மா மணி உந்தியில் அயன் - 455
அயன் - 456
கஞ்ச மா மலரோன் - 478
செங் கமலத்தோன் - 503
பூந் தண் சேக்கைப் புனிதன் - 566
மலர் உளோன் மைந்தன் மைந்தன் - 589
விரிஞ்சன் - 607
புண்டரீகன் - 613
தூய் மலராளி - 614
திசை முகன் - 671
கமலத்தோன் - 700
பாசடைக் கமலத்தோன் - 729
அன்னம் ஊரும் திசைமுகன் - 801
மலர் அயன் - 1241
வேரி அம் கமலத்தோன் - 1290
இமைப்பு இல் நாட்டம் ஓர் எட்டு உடையான் - 1421
பதுமத்து அண்ணல் - 1843
பங்கயத்து அயன் - 1941
திசைமுக முனி - 2020
விமலன் உந்தியில் பூத்தவன் - 2451
தேன் தரு மலருளான் - 2500
அன்ன ஊர்தி - 2571
உலகு யாவையும் எவ் உயிரும் தந்தான் - 2602
மா வரும் நறு விரை மலர் அயன் - 2629
வரம் தரு இறைவன் - 2701
பூ விலோன் - 2770
நரை திரை என்று இல்லாத நான்முகன் - 2855
மலர்த்திசை முகன் - 2863
பொன்றா மூவர் - 3017
உலகம் ஈன்ற பேர் அந்தணன் - 3094
அந்தணன் நாவில் வைத்தான் - 3142
தாமரையோன் - 3222
தாளுடை மலருளான் - 3363
நல் மலர்ப் பேர் உலகு அளித்தவன் - 3458
தாள் செய் கமலத்தான் - 3524
சீதம் கொள் மலருளோன் - 3530
மூல மா மலர் முன்னவன் - 3567
பதும பீடத்து உழிப் பெருந் தகைமை சான்ற அந்தணன் - 3695
நொடிவு அருங் கமலத்து அண்ணல் - 3803
ஆதி அண்டம் முன்பு அளித்தவன் - 3871
முளரிமேல் வைகுவான் - 3917
தே மலர் மேலவன் - 4046
தரங்க நீர் எழு தாமரை நான் முகன் - 4445
மா வடிவுடை கமல நான்முகன் - 4590
நாலுமுகத்தான் - 4716
முந்து தோன்றி மூன்று ஆம் உலகத்தொடும் முற்று உயிர் ஆய மற்றும் ஈன்றவன் - 4783
முதல் அந்தணன் - 4784
முளரிவந்தான் - 4817
அலர் உளோன் - 4868
முத்தன் - 4928
மலர் அயன் - 5189
வையம் தந்த நான்முகன் - 5222
பூவில் வந்த புராதனன் - 5365
பங்கயத்து ஒருவன் - 5479
பார் பயந்தவன் - 5618
தேவர்க்கும் தேவர் ஆய மூர்த்தி - 5720

தேவு யாவையும், உலகமும், திருத்திய தெய்வக் கோவில் நான்முகன் - 5796
சதுமுகன் - 5800
தாருடைத் தனி மலர் உலகின் தாதை - 5821
மரை மலர்க் கடவுள் - 5830
தாமரைக் கிழவன் - 5874
அந்தணன், உலகம் மூன்றும் ஆதியின் அறத்தின் ஆற்றல் தந்தவன் - 5916
முனிவன் - 5919
உலகம் பூத்த கண் அகன் கமலத்து அண்ணல் - 6038
முழுப் பெருந் தனி முதல் உலகின் முந்தையோன் - 6073
யாவரும் இறைவர் என்று இறைஞ்சும் மேன்மையர் மூவர் - 6093
ஏடு அவிழ் மலர்ப் பேர் ஆசனம் உவந்தவன் - 6129
ஆறிய பெருங் குணத்து அறிவன் - 6148
அக் குளிர் மலர்ப் பேர் ஆசனத்தவன் - 6156
நான்முகன் உலகம் - 6193
மருக் கொள் தாமரை நான்முகன் - 6198
அம்போருகனார் - 6299
பங்கயத்து ஒருவன் - 6337
எண்கணான் - 6342
அல்லி அம் கமலத்து அண்ணல் - 6344
இமையாத எண்கணன் - 6349
போது உறு கிழவன் - 6385
வேதியர் நாயகன் - 6416
அலரின்மேல் அயன் - 6462
காதல் நான்முகன் - 6466
கமலத்து அண்ணல் தாதையார் - 6499
செழுந் தனி மலரோன் - 6511
முனைவர் கோன் - 6567
முன்னது ஆக்கிய மூஉலகு ஆக்கிய முதலோன் - 6587
அன்று உலகு தந்த முதல் அந்தணன் - 6748
கமலத்தோன் உலகு - 6967
அலரின் மேலைத் திசைமுகன் - 7386
வேதியர் தேவன் - 7406
கமலத்து முளைத்த தாதை - 7416
தேவர்க்கும் தேவன் - 7421
மலரின்மேல் இருந்த வள்ளல் - 7427
உலகு ஈன்ற முன்னோன் - 7684
புவி தந்தருளும் தவன் - 7809
மலரின் மேலான் - 8187
பண்டு இவ் அகலிடம் அளித்த அண்ணல் - 8236
மலர் மேல் அவ் வள்ளல் - 8266
அண்டம் படைத்தவன் - 8540
பூவின் வந்த ஆகத்து அந்தணன் - 8738
வாச நாள் மலரோன் - 8742
உலகு எலாம் அமைத்த அண்ணல், நாம பொன் மலர்ப் பீடம்தன்மேல் நான்முகன் - 8751
மூன்று என ஒன்றிய உலகம் முன்னை நாள் ஈன்றவன் - 8791
பங்கயத்து அண்ணல் - 8841
தள மலர்க் கிழவன் - 8850
போதினான் - 9019
தேன் விட்டிடு மலரோன் படை - 9069
கமலம் பூத்தான் - 9081
பார்ப்பான் - 9083
உலகம் தந்த மூத்த வானோர்கட்கு எல்லாம் தந்தையார் - 9099
பனி மலர்த் தவிசின் மேலோன் - 9100
புரந்தரன் - 9172
வம்பு செறிந்த மலர்க் கோயில் மறையோன் - 9183
போதோன் - 9327
பண்டு உலகு அளித்தவன் - 9472
கருவி நான்முகன் - 9645
மேல்நாள் மூஉலகு அளித்த அவன் - 9699
தாமரை அந்தணன் - 9769
நாரணன் திரு உந்தியில் நான்முகன் - 9893
முந்தி வந்து உலகு ஈன்ற முதற் பெயர் அந்தணன் - 9894
முதல்வன் - 9899
மன்றல் மா மலரான் - 9924
விரிஞ்சனாம் யாவருக்கும் மேலாம் முன்பன் பேரன் நாடு - 9925
மலர்மிசை அயன் - 10046
தணப்பு இல தாமரைச் சதுமுகன் - 10049
முந்து நீர் முளைத்த சினையின் பந்தமும் பகுதிகள் அனைத்தையும் செய்தோன் - 10062
வரம் தரு முதல் - 10086
அரு மறைக் கிழவன் - 10094
ஆதி நான் மறைக் கிழவன் - 10100
மூவகைத் திரு மூர்த்தியர் - 10164
புண்டரீகத்துள் வைகும் புராதனன் - 10308
உலகம் ஈன்ற பூ மகன் தந்த அந்தப் புனித மாதவன் - 10312
மலர்த் தவிசோன் - 10324

நிகும்பன்

அரக்கன். இராவணன் படைத்துணைவர்களில் ஒருவன். மந்திரச் சுற்றத்துள்ளும் இடம் பெறுபவன். கும்பகருணன் மகன். வானரப் படைகளை எதிர்த்து அதிகாயனுடன் போரிட வந்த பொழுது அனுமனால் வீழ்த்தப்பட்டவன்.

பொருப்பை மீதிடும் புரவியும், பூட்கையும், தேரும்
உருப்ப விற் படை, ஒன்பது கோடியும்
உடையான், செருப்பெய் வானிடைச் சினக்
கடாய் கடாய் வந்து செறுத்த நெருப்பை
வென்றவன், நிகும்பன் என்று உளன்,
ஒரு நெடியோன் - 6549

எரி விழித்து இடியின் நக்கு பூதலத்து அடித்த
கையன் நிகும்பன் - 6959

அனல் சொரி கண்ணன் - 7973

சூலப்படையான் - 7974

நிலமங்கை

காப்பியத் தலைவி சீதை நிலத்திலிருந்து எடுக்கப்பட்டமையால் நிலமங்கை அவளின் தாயாகிறாள். அரசாட்சியை, நிலமாகிய மகளை மனைவியாகக் கொள்வதன் குறியீடாகக் காண்பது தமிழ்மரபு. அம்மரபும் இதனுள் போற்றப்பட்டுள்ளது.

வல்லியை உயிர்த்த நில மங்கை - 1140

அவனி மாது - 1341

நிவப்புறு நிலன் எனும் நிரம்பு நங்கை - 1342

வண்ண மேகலை நிலமகள் - 1348

புவி எனும் திரு - 1350

மண் - 1352

நில மாது - 1405

பூ மகள் கொழுநன் - 1431

நலம் கிளர் பூமி என்னும் நங்கை - 1565

தூய மண் எனும் திரு - 1578

பெரு நிலக் கிழத்தி - 1972

முது நிலம் - 2378

மூரி நீர் ஆடை இரு நில மடந்தை - 5162

மா நிலமகள் - 6643

பூதலம் என்னும் நங்கை - 7274

பொன் தாழ் குழையாள்தனை ஈன்ற
பூ மா மடந்தை - 8676

வையம் மங்கை - 9432

பார்மகள் - 9927

நானிலக் கிழத்தி - 10300

நல் நெடும் பூமி என்னும் நங்கை - 10330

செகதல மகள் - 10367

நீலமாலை

சீதையின் தோழி. இராமன் வில்லொடித்த செய்தியை அவளுக்கு முதலில் தெரிவித்தவள்.

குன்றம் அன்ன சிலை முறிந்த கொள்கை கண்டு,
குளிர் ம்னத்து ஒன்றும் உண்கண் மதி
முகத்து ஒருத்தி - 720

நெடுந் தடங் கிடந்த கண் நீலமாலை - 721

சுந்தரி - 722

நீலன்

எரியின் கூறாகப் பிறந்தவன். வானரப் படை முழுமைக்கும் தலைவன். இராம இராவணப் போரில் கும்பகருணன், இந்திரசித்து, மாலி முதலானோருடன் பொருது பெரும் பங்காற்றியவன். பிரகத்தன், போர்மத்தன் போன்றோரைப் போரில் அழித்தவன்.

நீலன் - 205

ஆறு பத்து ஏழு கோடி அனீகருக்கு ஏறு கொற்றத்
தலைவர், இவர்க்கு முன் கூறு சேனைப் பதி,
கொடுங் கூற்றையும் நீறு செய்திடும் நீலன் - 4449

பால்வரு பனுவலின் துணிவு பற்றிய சால் பெருங்
கேள்வியின், தானை நாயகன் நீலன் - 6439

நெருப்பின் மகன் - 6885

சேனாபதி - 6888

எரியின் மைந்தன் - 7076

தானைத் தலைவன் - 7715

அன்பு அடை உள்ளத்து அண்ணல் அனலின்தன்
புதல்வன் - 7944

அங்கி தன் நெடு மகன் - 7946

வெங்கண் அடல் நீலன் - 8083

வெங் கத நீலன் - 8279

வயப் போர் நீலன் - 10102

காந்து நீலன் - 10222

செருக் கிளர் நீலன் - 10284

காதல் பவனனுக்கு இனிய நண்பன்
பயந்தெடுத்தவன் - 10355

பதுமுகன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன்.

பதுமகன் - 4423

பரசுராமன்

சமதக்னி முனிவரின்மகன். தாய் இரேணுகை நீர்த்துறைக்குச் சென்றபோது, அங்கு நீராடிக் கொண்டிருந்த காந்தருவன் பால் மனம் நெகிழ்ந்தாள். அதனைத் தன் ஞானக் கண்ணால் கண்ட தந்தையின் ஆணைப்படி தாயைக் கொன்றவன் பரசுராமன். கூர்மையான (பரசு) மழுப் படையை உடையவன். அதனைக் கொண்டு 21 தலைமுறை அரசர்களை அழித்தவன். கார்த்தவீரியார்ச்சுனன் அவர்களில் ஒருவன். கிரவுஞ்ச மலையைத் துளைத்தவன். இராமன் சிவன் வில்லை உடைத்தது கேட்டுச் சினத்துடன் எதிர்வந்தவன். தன் கை திருமால் வில்லைக் கொடுத்து வலிமை காட்டும்படி இராமனைப் போர்க்கழைத்தவன். இராமன் அதனை வளைத்துத் தன் அம்புக்கு இலக்காகப் பரசுராமனின் தவப்பயனை வைத்து அதனைப் பெற்றான். இதனால் தன் சினம் ஒழித்து வாழ்த்தி விடைபெற்றவன்.

வானகம் இருள் கீறிட, ஒளியாய் மின்னும்படி புடை வீசிய சடையன்; மழு உடையான் - 1269

வடி வாய் மழு உடையான் - 1274

நிருபர்க்கு ஒரு பழி பற்றிட, நில மன்னவர் குலமும் கரு அற்றிட, மழுவாள் கொடு களைகட்டு, உயிர் கவரா, இருபத்தொரு படிகால், இமிழ் கடல் ஒத்து அலை எறியும் குருதிப் புனல்அதனில், புக முழுகித் தனிகுடைவான் - 1275

கமை ஒப்பது ஓர் தவமும், சுடு கனல் ஒப்பது ஓர் சினமும் சமையப் பெரிது உடையான் - 1276

மழுவாளன், வெய்யவன் - 1277

உலகத்தோடு எதிர் தோளா(ன்) - 1285

மூ-எழு முறைமை, பாரில் முடியுடை வேந்தை எல்லாம், வேவு எழு மழுவின் வாயால், வேர் அறக் களைகட்டு, அன்னார் தூ எழு குருதி வெள்ளத் துறையிடை, முறையின், எந்தைக்கு ஆவன கடன்கள் நேர்ந்தேன்; அருஞ் சினம் அடக்கி நின்றேன் - 1295

துன்று இருஞ் சடையோன் - 1297

வேத வித்து ஆய மேலோன்மைந்தன் - 1298

பரிவு அறு சிந்தை, அப் பரசுராமன் - 1305

சேவகன் - 1389

மான் மறிக் கரத்தான் மழு ஏந்துவான் - 1630

படை மாண் அரசைப் பல கால் பழுவாய் மழுவால் எறிவான் - 1661

கரண்ட நீர் இலங்கை வேந்தைச் சிறைவைத்த கழற்கால் வீரன் திரண்ட தோள் வனத்தை எல்லாம் சிறியது ஓர் பருவம் தன்னில் இரண்டு தோள் ஒருவன் அன்றோ மழுவினால் எறிந்தான் - 3379

நெடுஞ் சிகை விரா மழுவினான் - 3794

மழுவின் வாளினன் - 5095

தீட்டுறு மழுவாள் வீரன் - 6781

அறத்தினை நோக்கி ஈன்ற தாய் வினை செய்ய அன்றோ கொன்றனன் தவத்தின் மிக்கோன் - 7415

பரத்துவாசன்

இராமனைச் சிருங்கிபேரத்திலிருந்து சித்திரக் கூடத்திற்குச் செல்லும் வழியில் வரவேற்ற முனிவன். இராமன் - சீதை - இலக்குவர்க்கு விருந்தளித்து ஓம்பியவன். தன்னுடனேயே பன்னிரு ஆண்டுகளைக் கழிக்க வேண்ட அயோத்தி அருகில் உள்ளதால் அயோத்தியர் மீண்டும் வந்துவிடுவர் எனக் கூறி இராமன் மறுத்ததை ஏற்றுக் கொண்டவன். சித்திர கூடத்திற்கு வழி காட்டியவன். இராமனை அழைத்துச் செல்ல வந்த பரதன் கூட்டத்திற்கும் விருந்தளித்தவன். இராவணனை வதைத்துச் சீதையை மீட்டு அயோத்தி திரும்பிய வழியில் மீண்டும் இராமனுக்கும் அவனுடன் வந்தாரனைவருக்கும் விருந்தளித்து மகிழ்ந்தவன். இராம - இராவணப் போரில் இராமனுக்குத் துணை நின்றது வானரங்களாதலால், 'அரி இனம் சென்ற சென்ற அடவிகள் அனைத்தும், வானம் சொரி தரு பருவம் போன்று கிழங்கொடு கனி காய் துன்றி விரி புனல் செந்தேன் மிக்கு விளங்க' என (10148) இராமன் வேண்ட வரமளித்தவன்.

பரத்துவன் எனும் நாமப் பரமுனி - 2018

குடையினன்; நிமிர் கோலன்; குண்டிகையினன்; மூரிச் சடையினன்; உரி மானின் சருமன்; நல் மர நாரின் உடையினன்; மயிர் நாலும் உருவினன்; நெறி பேணும் நடையினன்; மறை நாலும் நடம் நவில்தரு நாவான் - 2019

செந் தழல் புரி செல்வன்; திசைமுக முனி செவ்வே தந்தன உயிர் எல்லாம் தன் உயிர் என நல்கும் அந்தணன்; 'உலகு ஏழும் அமை' எனின், அமரேசன் உந்தியின் உதவாமே, உதவிடு தொழில் வல்லான் - 2020

முதல்வன் - 2021

நல் தவ முனி - 2023

மறையோன் - 2027

பூண்ட மாதவன் - 2030

பரத்தின் நீங்கும் பரத்துவன் என்னும் பேர் வரத்தின் மிக்குஉயர் மாதவன் - 2374

மறையின் கேள்வன் - 2378

துறந்த செல்வன் - 2381

இந்து மோலி அன்னான் - 2375

பன்ன அரிய நோன்பின் பரத்துவன் - 2442
பண்டை நூல் தெரி பரத்துவன் - 2512
பரத்துவாசன் - 10130
தன்னை நேர் இலா முனிவரன் - 10131
ஆதபத்திரம், குண்டிகை, ஒரு கையின் அணைத்து, போதம் முற்றிய தண்டு ஒரு கையினில் பொலிய, மாதவப் பயன் உருவு கொண்டு எதிர் வருமா போல், நீதி வித்தகன் நடந்தமை - 10132
பன்னு மா மறைத் தபோதனன் - 10134
அருந்தவன் - 10136
தபோதரின் பெரியோன் - 10138
மறைகளின் இறுதி கண்டான் - 10141
மின்னை ஏய் உமையினானும் விரைமலர் தவிசினானும் நின்னையே புகழ்தற்கு ஒத்த நீதி மாதவத்தின் மிக்கோய் (இராமன்) - 10146
அறிவன் - 10147
விரியும் மாதவன் - 10148
பங்கயத்துப் பரத்துவன் - 10193

பரதன்

திருமாலின் கையிலுள்ள சங்கு பரதனாக, இராமாவதாரத்தின்போது தோன்றியது. தயரதன் - கைகேயிக்கு மகனாகப் பூச நட்சத்திரம், மீன ராசியில் பிறந்தவன். இராமன்பின் பிறந்தவன். கரிய நிறத்தினன். மிக்க அழகுடையவன். கோசலையிடம் வளர்ந்தவன். இராமன்பால் மிக்க அன்புடையவன். இளவல் சத்துருக்கன் எப்பொழுதும் இவனுடன் பிரியாது இருப்பான். இராமன் சீதை திருமணத்தின் பின் சனகனின் தம்பி குசத்துவன் மகளை மணந்தவன். கேகயன் அழைக்க, தம்பி சத்துருக்கனுடன் கேகயம் சென்றவன். அப்பொழுது கைகேயியின் சூழ்ச்சியால் கோசல நாட்டுக்கு உரிமை பெற்றவன். கைகேயியின் பிடிவாதத்தால் இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டி வந்ததால் தயரதன், கைகேயி - பரதன் இருவரையும் தன் மனைவி, மகன் இல்லை என்று துறந்து உயிர் பிரிந்தான். எனவே பரதன் தயரதனுக்குச் செய்ய வேண்டிய ஈமச் சடங்குகள் செய்ய இயலாது போயிற்று. இறுதியில் சீதை மீட்சியின் பின் இராமன் வேண்ட விண்ணுலகிலிருந்து வந்த தயரதன் மீண்டும் அவர்களைத் தம் உறவாக்கிக் கொண்டான்.

அயோத்தி திரும்பி நிகழ்ந்ததறிந்து துன்பத்தின் எல்லை கண்டவன், ஆட்சி பொறுப்பேற்காது இராமனை அழைத்து வர காடு சென்றவன். இராமன் மறுக்க அவன் அறிவுரைப்படி பதினான்கு ஆண்டுகள் மட்டும் அவன் சார்பில் ஆட்சி செய்ய உடன்பட்டு அதன் அறிகுறியாக இராமன் பாதுகைகளைப் பெற்று வந்தவன். தன் தம்பி சத்துருக்கனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து தான் அயோத்திக்குள் செல்லாது நந்தியம்பதியில் தங்கி துறவு மேற்கொண்டு வாழ்ந்தவன்.

பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன என்று எண்ணி, கோசலை தடுத்தும் கேளாது முன் கூறியபடி எரிமூழ்க இருந்தவன். இராமன் வேண்டுதல் பேரில் வந்த அனுமனால் காப்பாற்றப்பட்டவன். இராமன் நாட்டிற்குத் திரும்பியவுடன் அவனுக்கு மகுடம் சூடித் தானும் மகிழ்ச்சியுடன் துணையாய் நின்றவன்.

இராமாயணத்துள் பரதனின் வீரம் வெளிப்படுதற்கு வாய்ப்பில்லை. ஆயினும் அன்பின் உருவமான அவனது உயர்ந்த பண்பு நலன்களும் உடன்பிறப்பு நேயமும் இராமன்பால் கொண்ட ஆழ்ந்த அன்பும் மிகச் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன.

பரதன் - 297
இளைஞன் - 308
இளைய வீரன் - 313
சிறுவன் - 324
பொலங் கழல் குமரன், திரு வளர் மார்பன், தெய்வச் சிலையினன் - 802
அருங் காதலின் பெரியவன் - 1055
பொரு இல் நான்மறை எனும் நடையினான் - 1056
கோதை சூழ் குஞ்சி அக் குமரன் - 1058
தெவ் அடு சிலைக் கை என் சிறுவர் செவ்வியர், அவ் அவர் துறைதொறும் அறம் திறம்பலர் - 1452
பன்ன அரும் பெரும் புகழ்ப் பரதன் - 1455
பண்ணுறு கட கரிப் பரதன் - 1464
பாக்கியம் புரிந்திலாப் பரதன் - 1465
கல்வியும் இளமையும், கணக்கு இல் ஆற்றலும், வில் வினை உரிமையும், அழகும், வீரமும், எல்லை இல் குணங்களும், பரதற்கு எய்திய - 1468
தரைக்கு நாயகன் - 1489
பங்கம் இல் குணத்து எம்பி பரதன் - 1608
மும்மையின் நிறைவு குணத்தவன், குறைவு இலன் - 1609
சிறந்த தம்பி - 1621
வரி வில் எம்பி - 1625
கைகேசி மெய்ப் புதல்வன் - 1696
வஞ்சித்த பேதை சிறுவன் - 1714
இவ் வைய மையல் தோன்றா நெறி வாழ் துணைத் தம் முனை - 1739

மையற் கொடியாள் மகன் - 1914
மெய் எனும் நல் அணி பூண்ட வேந்தன் திருமகன் - 2130
பெரியோர் தம் பெருந்தகை - 2137
பொருப்பு நாண உயர்ந்த புயத்தினான் - 2141
ஆண்தகை - 2144
முருகன் செவ்வியான் - 2148
கூற்று உறழ் வரிசிலைக் குரிசில் - 2158
ஏந்தல் - 2162
கோளரி - 2171
மரகத மலை என வளர்ந்த தோளினான் - 2194
தாள் உறு குரிசில் - 2198
செம்மை நல் மனத்து அண்ணல் - 2219
மன்னர் மன்னவன் - 2220
இளைய அண்ணல் - 2221
வள்ளல் - 2222
வனை முடித்த அக் கொற்ற வேல் நெடுங் குமரன் - 2242
சுந்தரக் குரிசில் - 2245
கோது அறு குணத்தினான் - 2248
நல்லவன் - 2265
சுந்தரத் தோளவன் - 2297
பூ விரி பொலன் கழல் பொரு இல் தானையான் - 2303
காண்தலை நண்ணிய காளை - 2307
அரி ஏறு - 2326
மல் காணும் திரு நெடுந் தோள் மழை காணும் மணி நிறத்தான் - 2328
மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவன், தகவு உடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான் - 2334
தாமரைச் செங்கணான் - 2335
உயர் குணத்து உரவுத் தோளான் - 2338
செவ் வழி உள்ளத்து அண்ணல் - 2340
தூண்தர நிவந்த தோளான் - 2343
சுந்தர வரிவிலான் - 2349
குரகதத் தேர் வலான் - 2350
கழல் கால் மைந்தன் - 2367
தோன்றல் - 2370
திருகிய சீற்றத்தால் செம்மையான், நிறம் கருகிய அண்ணல் - 2397
இருமையும் இழந்த அப் பரதன் - 2404
பனைத்திரள் கரக் கரிப்பரதன் - 2418
சேண் உயர் தருமத்தின் தேவை, செம்மையின் ஆணி - 2421
அவலம் ஈது என எழுதிய படிவம் ஒத்து எய்துவான் - 2423
ஆய்வு அரும் புலத்து அறிவு மேவினாய் - 2482
மறு ஏதும் இலாப் பரதன் - 3395
ஆரம் வீங்கு தோள் தம்பி - 3854
பரதன் பெரிது உத்தமன் - 3977
மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்க செம் மணி மகுடம் நீக்கி, திருவடி புனைந்த செல்வன் - 6499
இயற்கை தாங்கும் பாந்தளின் பெரிய திண்தோள் பரதன், பழியின் தீர்ந்த வேந்தன் - 9004
மறு இல் பரதன் - 10080
வழுவா நீதிப் பரதன் - 10142
மூ வினையைச் செயிர்த்த சிந்தையன் - 10143
முன்பு உருக் கொண்டு ஒரு வழி முற்றுறா அன்பு உருக் கொண்டது ஆம் எனல் ஆகுவான் - 10155
'எண் இல் கோடி இராமர்கள் என்னினும், அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ? புண்ணியம் எனும் நின் உயிர் போயினால், மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ? (கோசலை) - 10181
கலைத் தருமம் நீ அலது இல் எனும் தன்மையாய் - 10183
நேசன் - 10188
பொய் இலாய் - 10192
கோது அறு சிந்தையாய் - 10194
இளைய வேந்தன் - 10195
ஆண்தகை - 10203
சீர் சால் விரத மா தவத்து மிக்கோய் - 10243
அண்ணல் - 10257
பொருப்பு அவிர் தோளன் - 10263
பாடு உறு பெரும் புகழ்ப் பரதன் - 10266
ஈன்றவள் பகைஞன் - 10267
துனை பரி, கரி, தேர், ஊர்தி, என்று இவை பிறவும், தோலின் வினை உறு செருப்புக்கு ஈந்தான் - 10280
கையறு கவலை கூர நாடு உறைந்து உலைந்த மெய் - 10281
மருக் கமழ் தொடையல் மாலை மார்பினன் பரதன் - 10284
பூழியை அடக்கும் கண்ணீர்ப் பரதன் - 10292

பனசன்

வானரப் படைத் தலைவருள் ஒருவன். இராம இராவணப் போரில் தன் வலி காட்டியவன். இராமனுடன் அயோத்தி சென்று அவன் முடிசூடலைக் கண்டு களித்தவன். அவனிடம் பரிசில் பெற்று திரும்பியவன்.

தனி வரும் தடங் கிரி எனப் பெரியவன், சலத்தால், நினையும் நெஞ்சு இற உரும் என உறுக்குறு நிலையன் - 4414

பனசன் - 5343
மூன்று கண் இலன் ஆயினும், மூன்று எயில் எரித்தோன் போன்று நின்றவன் பனசன் - 6891
பங்கம் இல் மேரு ஆற்றல் பனசன் - 8437
வயிரத் தோளான் - 8439
பரு வலிப் பனசன் - 8561
நவை அறு பனசன் - 10358

பிசாசன்

அரக்கர் படைத்தலைவன். இராவணன் மந்திரத்துள் பேசும் உரிமையுடையவன். ஏனைப் படைத்தலைவரோடு போருக்கு வந்தவன். இலக்குவனால் வீழ்த்தப்பட்டவன்.

பிசாசன் என்று ஒரு பெயர் பெற்ற பெய் கழல் நிசாசரன் உருப் புணர் நெருப்பின் நீர்மையான் - 6112
தான் அன்றிப் பிறர் இலா வலியான், இசைந்த வெஞ் சமத்து இயக்கரை வேரொடும் முன்நாள் பிசைந்து மோந்தவன் பிசாசன் என்று உளன் ஒரு பித்தன் - 6556
பிசாசன் எனும் பேர் வெய்யவன் வச்சிரம் வென்ற எயிற்றான் - 8322
வாமப் போர் வயப் பிசாசன் - 8350
போர் மேலினன் வாசி எனும் பொறியான் - 8395
தோற்றும் உரு ஒன்று எனவே துணியா கூற்றின் கொலையால் உழல் கொள்கையன் - 8400

பிரகத்தன்

இராவணன் படைத்தலைவருள் ஒருவனான சம்புமாலியின் தந்தை. சுமாலியின் மகன். இராவணனின் தலைமை அமைச்சன். முதற்போரில் நீலனால் அழிக்கப்பட்டவன்.

பிரகத்தன் என்று ஒரு பித்தன் - 6561
சேனை நாதன் - 6794
சேனை காப்பாளன் - 6812
காட்டிய கால கேயர் கொழு நிணக் கற்றை காலத் தீட்டிய படைக்கை வீரச்சேனையின் தலைவன் - 6963
சுமாலி சேய் - 7084
அரக்கன் - 7091
நிருதன் - 7093

புகைநிறக்கண்ணன்

அரக்கன். இராவணன் படைத்தலைவருள் ஒருவன். போரில் அனுமனால் அழிக்கப்பட்டவன்.

புகை நிறக்கண்ணன் - 6115
வான்புகைக் கண்ணன் - 8303
பகை நிறத்தவர் உயிர் பருகும் பண்பினான் - 8332
புகையின் பொரு கண்ணவன் - 8369
அழற் கொடியோன் - 8370
மலையின் பெரியான் - 8373

பூதம்

தயரதன் செய்த மகட்பேறு வேள்வியில், அவ்வேள்வித் தீயில் தோன்றிப் பிண்டம் கொணர்ந்தது இப்பூதம்.

தீ எரிப் பங்கியும் சிவந்த கண்ணும் ஆய் ஏயென பூதம் ஒன்று எழுந்தது - 265
சோதி மணிப் பொற் கலசத்துச் சுதை அனைய வெண் சோறு ஓர் பூத கணத்து அரசு ஏந்தி - 654

போர் மத்தன்

இராவணனின் போர் வீரர்களில் ஒருவன். கடற்படையினன். அதிகாயனுக்குத் துணையாகப் போர் செய்து நீலனால் கொல்லப்பட்டவன். இரணமத்தன் என்று வடநூல் இவனைச் சுட்டும்.

போரின் மத்தனும், பொரு வயமத்தனும், புலவர் நீரின் மத்து எனும் பெருமையர்; நெடுங் கடற் படையார்; ஆரும் அத்தனை வலி உடையார் இலை; அவரால் பேரும், அத்தனை எத்தனை உலகமும்; பெரியோய் - 6560
கூர்மத்தின் வெரிநின் வைத்து வானவர் அமுதம் கொண்ட நீர் மத்தின் நிமிர்ந்த தோளான், நிறை மத்த மதுவை தேக்கி ஊர்மத்தம் உண்டாலன்ன மயக்கத்தான், உருமைத் தின்பான், போர்மத்தன் என்பான், வந்தான் புகர் மத்தப் பூட்கை மேலான் - 7940
பிறைத்தலை வயிரவாளி மழை எனப் பெய்யும் கையான் - 7948
மின் கரிது என்ன மின்னும் எயிற்றினான், மத்தன் - 7952

மகரக் கண்ணன்

கரனின் மகன். கணவனை அழித்த பகைவனாகிய இராமனின் தலைக்கலத்தில் தான், தன் திரு கழிப்பேன் என்று சூளுரைத்துள்ள தாயின் சூளை நிறைவேற்ற இராம இராவணப் போரில் இராவணன் சார்பில் ஈடுபட்ட அரக்கன். மாயையில் வல்லவன். இராமனால் அழிக்கப் பட்டவன்.

மகரக் கண்ணன், வெவ் வழியவன் - 8408
வண்டு உலாம் அலங்கல் மார்பன் மகரக்கண் மழை ஏறு என்ன திண் திறல் அரக்கன் - 8416
பொன்னுடைத் தாதை வண்டு குடைந்து உணும் பொலம் பொன் தாரன் - 8418
தீயவன், கரன் புதல்வன் - 8419
ஆண்தகை - 8421
மாயத்தால் வகுத்தான் யாண்டும் வரம்பு இலா உருவம் - 8430

மகோதரன்

இராவணன் படைத்தலைவருள் ஒருவன். அவன் மந்திரத்துள் தன் கருத்துரை கூறும் தகுதியுடையவன். மாயம் செய்வதில் வல்லவன். முதல்நாட் போரில் தென்திசை வாயிலுக்குக் காவலாக நின்றவன். மருத்தன் எனும் அரக்கனைச் சனகனாக உருமாற்றிச் சீதை முன் நிறுத்தியவன். இந்திரசித்தும் இலக்குவனும் போர்புரிந்த பொழுது, இந்திரசித்து பிரமாத்திரத்தை விடுவதற்கு வாய்ப்பாக இந்திரவேடத்தோடு வந்து இலக்குவனையும் அவன் துணைவர் களையும் குழப்பியவன். இறுதிப்போரில் இராமனால் கொல்லப்பட்டவன்.

மகோதரப் பெயர்க் கல் தடந் தோளினான் - 6092
சிரத்தவன் - 6098
பேயை யாளியை யானையைக் கழுதையைப் பிணித்தது ஆய தேர்ப் படை ஐ-இரு கோடி கொண்டு அமைந்தான், தாயை ஆயினும் சலித்திடு வஞ்சனை தவிரா மாயையான் உளன், மகோதரன் என்று ஒரு மறவோன் - 6551
காலன் தன் களிப்புத் தீர்த்த மகோதரன் - 6964
ஆன்ற மாயைகள் பலவும் வல்ல மகோதரன் - 7305
மாதிரம் கடந்த தோளான் மந்திர இருக்கை வந்த மோதரன் என்னும் நாமத்து ஒருவன் - 7633
வாள் எயிற்று அரக்கன் - 8537
மோதரன் - 9642
வான் தொடர் குன்றம் அன்ன மகோதரன் - 9711
வெம்புஇகல் அரக்கன் - 9712

மண்டோதரி

இராவணனின் பட்டத்தரசி. தேவர்களின் தச்சனாகிய மயனின் மகள். அக்க குமாரன், இந்திர சித்து ஆகியோரின் தாய். இறுதிவரை இவளைக் கம்பர் மயன் மகள் என்றே அழைப்பது எண்ணற்பாலது. சீதை நிகர்த்த அழகும் கற்பும் உடையவள் என்பதை, சீதையைத் தேடி இலங்கை வந்த அனுமன் இவளைக் கண்டபோது முதலில், இவள் சீதையோ என ஐயுறுவது உணர்த்தும். மிகுந்த அன்புடையவள். இந்திரசித்து இறந்த பொழுது அரற்றும் மொழிகள் மிகுந்த அவலம் காட்டுவன. இராவணன் செயல்களுக்கு எதிர்ப்புக் காட்டாதவள். அவன் மனம் துன்புறும்படி இகழ்ந்தோ, வெறுத்தோ பேசாதவள். அவன் இறந்தவுடன் பிரிவாற்றாது உடன் மறைந்தவள்.

நளிர் திங்கள் மாய நந்திய வாள் முகத்து ஒரு தனி மயன் மகள் - 5029
மன்னவன் தேவி அம்மயன் மடந்தை - 5117
மண்டவுதரத்தவள் - 5432
மயன் மகள் - 5715
நேசத்தால் நிறைந்த நெஞ்சள் - 9230
மயன் பயந்த நெடுங்கண் பாவை - 9928
கணவனோடு உடைந்து போன மயன் மகள் - 9949

மதங்கன்

முனிவர். சுக்கிரீவன் பயந்து வாழும் இரலைமலைக்கு (இருசியமுகப் பருவதம்) வாலி வந்தால் இறப்பான் என்று வசைமொழி அளித்த முனிவர். இவரது தவப்பள்ளியில், சீதையைத் தேடி வரும் வழியில் இராம இலக்குவர் சபரியைக் கண்டனர்.

யானையின் இருக்கை அன்ன மதங்கனது இருக்கை - 3698
கருணையான் இட்ட சாபம் - 3899
வன்னி - 4040

மதன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன்.

மதன் என்பான் - 5343

மந்தரை (கூனி)

கைகேயியின் பணிப்பெண். கேகய நாட்டிலிருந்து அவளுடன் அயோத்தி வந்தவள். கூன் உருவினள். இராமன் தன் சிறு வயதில் இவளது கூன்மீது உண்டை எறிந்து விளையாடியதால் நெஞ்சில் வஞ்சம் கொண்டவள். இராமன் முடி சூடப் போகிறான் என்பதறிந்தவுடன் தன் மன வஞ்சம் தீர்த்துக்

கொள்ள முனைந்தவள். தன் சொல் வன்மையால் தூய சிந்தை கைகேயியின் மனதைத் திரித்து இராமன் வனம் போகவும் பரதன் முடிசூடவும் வழி காட்டியவள்.

கூன் - 1313

துன்ன அருங் கொடு மனக் கூனி - 1445

தோன்றிய கூனியும், துடிக்கும் நெஞ்சினாள்; ஊன்றிய வெகுளியாள்; உளைக்கும் உள்ளத்தாள்; கான்று எரி நயனத்தாள்; கதிக்கும் சொல்லினாள்; மூன்று உலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள் - 1446

காலக் கோள் அனாள் - 1449

வெவ்விடம் அனையவள் - 1452

சூழ்ந்த தீவினை நிகர் கூனி - 1454

கொடிய கூனி - 1459

வேதனைக் கூனி - 1460

மந்தரை - 1466

தீயோ(ள்) - 1470

மதி இலா மனத்தோ(ள்) - 1471

அறிவு இலி - 1473

தீய மந்தரை - 1483

வினை நிரம்பிய கூனி - 1485

உள்ளமும் கோடிய கொடியாள் - 1487

மந்தரைக் கூற்றம் - 2297

அந்தம் இல் வேதனைக் கூனி - 2299

குறியது ஆம் மேனி ஆய கூனி - 4126

மயன்

மண்டோதரியின் தந்தை. மாயாவி, துந்துபி ஆகியோரும் இவன் மக்கள். அசுரர்களின் தச்சன். நினைத்த அளவில் மிகச் சிறப்பாக மண்டபங்களையும் மாட மாளிகைகளையும் கட்டி முடிக்கும் ஆற்றல் பெற்றமையால் தெய்வத்தச்சன் எனவும் போற்றப்படுகிறவன். முகத்தை மேலே நிமிர்த்தி வெயிலையும் காற்றையும் உண்பவன். மானின் முகம் போன்ற வடிவுடையவன்.

ஏமை எனும் தேவ மாதை (அரம்பையருள் ஒருத்தி) விரும்பி, பிரமனிடமிருந்து தாம் வரமாகப் பெற்ற நகருள் அவளுடன் தனியே வாழ்ந்தவன். ஏமையைத் தேடிய இந்திரன் அவர்களைக் கண்டு சினமுற்று மயனைக் கொன்றான். இவன் மீண்டும் உயிர் கொண்ட விதம் அறியுமாறில்லை.

மயன் முதல் தெய்வத் தச்சர் - 96

நூல்முகம் நுனித்த நெறி நூறு வர, நொய்தா மேல் முகம் நிமிர்த்து, வெயில் காலொடு விழுங்கா மான் முக நலத்தவன் மயன் - 4578

தானவன் - 4579

பெருந் திறலினான் - 4581

தெய்வத் தச்சன் - 6071

மான்முகன் - 9956

நயன் அறி மயன் என்று ஓதும் நூல் முகத்து ஒங்கு கேள்வி நுணங்கியோன், வணங்கு நெஞ்சன் கோல் முகத்து அளந்து, குற்றம் செற்று, உலகு எல்லாம் கொள்ளும் மான் முகத்து ஒருவன் - 10318

மயிடன்

அரக்கன். போரின்போது இலக்குவனிடம் அதிகாயன் அனுப்பிய தூதுவன்.

மயிடன் - 7758

மயிந்தன்

வானோர்களின் மருத்துவனான அசுவினி தேவனின் மகன். சிறப்புடை வானரப் படைத் தலைவருள் ஒருவன். இவன் தம்பி துமிந்தன். இருவரும் இணைந்தே பேசப்படுகின்றனர். இராமனிடம் அடைக்கலம் புக வந்த வீடணன் முதலானோரை அனுமன் ஏவ தம்பியுடன் இணைந்து அவர்களை விசாரித்து உண்மை அறிந்தவன். அதனை இராமனிடம் தெரிவித்தவன்.

சயம்தனக்கு ஒரு வடிவு எனத் திறல் கொடு தழைத்த மயிந்தன் - 4420

மயிந்தன் - 5343

நயம் தெரி காவலன் - 6403

வாய்மையான் - 6412

வானோர்தம் மருத்துவர் மைந்தன், வலிக்கண் மிக்கான் - 6888

மயிந்தனும் துமிந்தன் தானும் மழைக்குலம் கிழித்து வானத்து உயர்ந்து எழும் எருவை வேந்தர் உடன் பிறந்தவரை ஒத்தார் - 8060

பங்கம் இல் மயிந்தன் - 8177

மா மயிந்தன் - 10222

மருத்தன் (1)

இராவணனின் தூதுவரில் ஒருவன். சனகனாக மகோதரனால் பொய் உருக் கொண்டவன். மாயம் வல்லவன்.

மருத்தன் - 7278
மருத்தன் என்று உளன் ஓர் மாயையான் - 7725
அரக்கன் மருத்தன் - 8672

மருத்தன் (2)

அதிகாயனுக்குத் துணையாகப் போரிட வந்த அரக்கன். இலக்குவனால் போரில் கொல்லப்பட்டவன்.

மருத்தன் - 7849

மன்மதன்

மாரன், காமன், அனங்கன் என்றழைக்கப்படும் மன்மதன் காதல் தெய்வமாகப் போற்றப்படுபவன். தேவர்களுக்காகச் சிவனின் தவத்தைக் கலைத்து, உருவற்றவனாகும் சாபம் பெற்றவன். மீனக் கொடியுடையவன். கரும்பை வில்லாகக் கொண்டு தாமரை முதலான ஐவகை மலர்களை அம்பாக விடுத்து மானிடரிடையே காமத்தைத் தூண்டுபவன்.

மாரவேள் - 339
மதனன், காமன் ஆச்சிரம் - 340
கொடித் தனி மகரம் கொண்டான் - 401
மன்மதன் - 483
அனங்கன் - 499
மன்மதவேள் - 543
அனங்கவேள் - 585
கன்னல் வார் சிலை கால் வளைத்தே மதன், பொன்னை முன்னிய பூங் கணை மாரியால் - 624
வெய்ய காமன் - 714
வரிசிலை அனங்கன் - 813
பொலங் கொள் திண் தோள் மாரன் - 907
செய்யில் கொள்ளும் தெள் காமன் அமுதச் செஞ்சிலை ஒன்று கையில் பெய்யும் காமன் - 922
தொடை மேவும் கோலைக் கொண்ட மன்மத ஆயன் - 923
வள் உறை வயிர வாள் மகர கேதனன் - 965
தழை உறாக் கரும்பின் சாபத்து அனங்க வேள் - 1071
எய்யும் பொன் சிலை மாரன் - 1095
வேனில் வேள் - 1096
மீன் வரு கொடியவன் - 2625
கற்றைஅம் சடையவன் கண்ணின் காய்தலால் இற்றவன் - 2744
பாடவத் தொழில் மன்மதன் - 2804
சிலையின் மாரன் - 2805
புவனம் அனைத்தையும், ஒரு தன் பூங் கணையால் உயிர் வாங்கும் அவன் - 2863
மீனுடை நெடுங் கொடியினோன் - 3116
மன்றல் தங்கு அலங்கல் மாரன் - 3160
களியுடை அனங்கக் கள்வன் கரந்து உறை கங்குற்காலம் - 3547
தேனின் தெய்வத் திரு நெடு நாண் சிலைப் பூ நின்று எய்யும் பொரு கணை வீரன் - 3565
அல்லும் நன் பகலும் நீங்கா அனங்கன் - 4210
அள்ளல் வெஞ் சர மாரன் - 5005
பழுது இல் மன்மதன் - 5006
மலர்க் காமன் - 5031
காமவேள் - 8834
கண் புக்க வேழ வில்லால், நார நாள் மலர்க் கணையால், நாள் எல்லாம் தோள் எல்லாம் நைய எய்யும் மாரனார் - 9945

மனகதி

இராவணன் தூதரில் ஒருவன்.

மனகதி - 7278

மாதலி

இறுதிப்போரில் இராமனுக்காக வானோர் அனுப்பிய தேரினைச் செலுத்துபவன். மிகுந்த வலிமையும் நேர்மையும் உடையவன். குதிரையின் மனம் உணர்ந்து தேரைச் செலுத்தும் திறனுடையவன்.

மாதலி - 9683
மாவின் மனம் ஒப்ப உணர் மாதலி - 9699
நல்லவன் - 9701
நீதியின் சால்புடை மாதலி - 9780
உளம் கிளர் பெரு வலி உலைவு இல் மாதலி - 9860

மாபெரும்பக்கன்

இராவணன் மந்திரச் சுற்றத்துள் ஒருவன். போர்த் தொடக்கத்தில் தென் திசைக் காவலனாக மகோதரனுடன் இணைந்து போரிட அனுப்பப் பட்டவன்.

மாபெரும்பக்கன் - 6108
இகல் குறித்து எரியும் கண்ணினான் - 6111
தேவரும், தக்க முனிவரும், திசைமுகன் முதலா மூவரும், பக்கம் நோக்கியே மொழிதர, முனிவான், தாவரும் பக்கம் எண் இரு கோடியின் தலைவன், மாபெரும்பக்கன் என்று உளன், குன்றினும் வலியான் - 6554
மால் ஒன்றும் மனத்து வீரன் மாபெரும்பக்கன் - 6964

மாமேகன்

இராவணன் தூதன்.

மாமேகன் - 7278

மாயாவி

அரக்கன். வாலிக்குப் பகைவன். அவனை எதிர்த்தபோது அவனால் கொல்லப்பட்டவன். இவன் காரணமாகவே வாலி - சுக்கிரீவரிடையே பகை தோன்றியது.

முன்னவன் (வாலி) குலப் பகைஞன், மின் எயிற்று வாள் அவுணன் வெம்மையான் - 3835
மாயாவி - 3842

மாரீசன்

மாயத்தில் வல்ல அரக்கன். இராவணனின் மாமன். தாடகையின் மகன். சுபாகு உடன் பிறந்தவன். இராமன் தாடகையை வதைத்த பொழுது தப்பித்தவன். பஞ்சவடியில், இராம இலக்குவருக்கு அஞ்சி ஐம்புலன்களை அடக்கியிருந்தவன். சீதையைக் கவர இராவணன் இவன் துணை வேண்டிய போது அதற்கு இசையாது அறிவுரை பகன்றவன். இராவணன் சீற்றமுற்று ஆணையிட்டபோது மானாக மாறிச் சீதையைத் தன்பால் ஈர்த்தவன். தன்னைப் பிடிக்க வந்த இராமனை வெகுதூரம் தன் பின் ஓடி வரச் செய்தவன். இது மாய மான் என்ற உண்மை உணர்ந்த இராமனின் அம்பால் கொல்லப்பட்டவன். இறக்கும் தறுவாயிலும் இராமன் குரலில் 'சீதை, இலக்குவன்' எனக் கூவி இலக்குவனையும் சீதையிடமிருந்து பிரித்து இராவணனின் கொடுமைக்குத் துணை நின்றவன்.

வெருவரு தாடகை பயந்த வீரன் - 444
இந்தியம் அடக்கி நின்ற மாரீசன் - 3236
கருந் தட மலை அன்னான் - 3237
மாய அரக்கன் - 3311
மாய மாரீசன் - 3317
நேர் இல் மாரீசன் ஆம் மாய மான் - 3796
ஓடை வாள் நுதலினாளை ஒளிக்கலாம் உபாயம் உன்னி, நாடி மாரீசனார் ஓர் ஆடக நவ்வி ஆனார் - 4207
மழைக் கரு நிறத்து மாய அரக்கன் மாரீசன் - 5301
முந்த மான் ஆயினான் - 6167
ஓட்டிய கனக மான் உருவம் ஆகிய சிட்டன் - 6428
மான் என வந்தவன் - 6438
மான் - 10140
வஞ்சக உழை - 10218
வஞ்ச மான் மாரீசன் - 10219

மாலி (1)

இராவணன் படைவீரர்களுள் ஒருவன். அதிகாயனுக்குத் துணையாகப் போரிட வந்து இலக்குவனால் கொல்லப்பட்டவன்.

மாலி - 7849

மாலி (2)

இராவணனின் மாமன்மார்களுக்கெல்லாம் தலைவனாகிய அரக்கன். இராவணனுக்கு அவன் பிழையுணர்த்தி அறிவுரை கூறியவன். இராம - இராவணப் போரில் படைத்தலைவர்களுடன் சென்று எதிர்த்தபோது இலக்குவனால் கைகளை இழந்து தோல்வியுற்றவன்.

மாதுலத் தலைவன் - 6959
பெய் கழல் மாலி - 8322
சாலி வண் கதிர் நிகர் புரவித் தானையான் மூல வெங் கொடுமையின் தவத்தின் முற்றினான் சூலியும் வெருக்கொளத் தேரில் தோன்றுவான், மாலி - 8336
சேமத் திண் சிலை மாலி - 8350
மா மாலி - 8380

மாலியவான்

அரக்கர் குலத் தலைவன். இராவணனின் தாயைப் பெற்றவன். ஆகவே அவனுக்குப் பாட்டன் ஆனவன். பன்முறை இராவணனுக்கு அறிவுரை கூறியபோதும், அவற்றை ஏற்காத அவனால் உதாசீனப் படுத்தப் பட்டவன்.

தாயைப் பயந்தோன் - 6793
மதி நெறி அறிவு சான்ற மாலியவான் - 6817
அவன் தன்(இராவணன்) மூதாதை ஆகிய மூப்பின் யாக்கை வாங்கிய வரிவில் அன்ன, மாலியவான் என்று ஓதும் பூங் கழல் அரக்கன் - 7283
நம்பி குலக் கிழவன் - 7998
மாலி மேல்விளைவது ஓர்வான் - 8847
மூது உணர்ந்த இம் முது மகன் - 9296

முரபன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன்.

முரபன், நகுதோளவன், மூரி முடங்கல் என்னக்
கரபல் நகம் அன்னவை மின் உகக்
காந்துகின்றான் - 6890

மேனகை

வானுலக மங்கை, வானுலகை இராவணன் கைப்பற்றியதால் அவனுக்குப் பணிப்பெண் ஆனவள்.

மேனகை - 507
மேனகை வெள்ளடை உதவ - 5147
அருந்தவ முனிவர்க்கும் அமைந்த வீடு
மீட்குறும் மேனகை - 5852
செவ்வாய் மேனகை - 6865

மைந்நாகம்

அனுமன் கடல் கடக்கையில் மானுட வடிவில் எதிர்ப்பட்ட மலை. இந்திரன் மலைகளின் சிறகரிந்த பொழுது காற்றுக்கு அரசனால் காப்பாற்றப்பட்டு, அவனுக்கு நண்பனானவன். எனவே நண்பன் மகனை விருந்திற்கு எதிர்கொண்டழைத்தவன்.

மைந்நாகம் என்னும் மலை - 4779
உம்பரின் உம்பர் ஒங்கிக் கொழுந்து ஓடி நின்ற
கொழுங் குன்று - 4791

வச்சிரத்து எயிற்றவன்

இராவணன் மந்திரச் சுற்றத்துள் ஒருவன்; படைத்தலைவன்; வச்சிரம் போன்ற வலிமையான பற்களை உடையவன். ஆதலால் வச்சிரத்து எயிற்றவன் எனப் பெயர் பெற்றவன். வச்சிரநந்தன் என்று வால்மீகம் கூறும். போரில் இடபனுடன் எதிர்ந்தவன். இறுதியில் அனுமனால் கொல்லப்பட்டவன்.

வச்சிரத்து எயிற்றவன், பச்சிரத்தம் பொழி பருதிக்
கண்ணினான் - 6098
உச் சிரத்து எரி கதிர் என உருத்து எரி முகத்தன்
நச் சிரப் படை நால்-இரு கோடிக்கு நாதன்,
முச்சிரத்து அயில் தலைவற்கும் வெலற்கு
அரு மொய்ம்பன், வச்சிரத்து எயிற்றவன்,
உளன், கூற்றுவன் மாற்றான் - 6555
வச்சிரம் வென்ற எயிற்றான் - 8322
முச்சிரத்து அயலினான், மூரித் தேரினான். . .
வச்சிரத்து எயிற்றவன் மலையின் மேனியான் - 8333
வீர வச்சிரத்து எயிற்றன் - 8351

வச்சிர முட்டி

இராவணன் போர் வீரருள் ஒருவன். முதல்நாட் போரில் சுக்கிரீவனால் வீழ்த்தப்பட்டவன்.

வெங்கண் வாள் அரக்கன் - 7068
வஞ்சன் - 7070
வச்சிரமுட்டி - 7071

வசிட்டன்

பிரமதேவனின் மகன். அருந்ததியின் கணவன். காமதேனுவைக் (சுரபி) கொண்டு அரசனாய் இருந்த விசுவாமித்திரனுக்கும் உடன் வந்த படைகளுக்கும் விருந்தளித்தவன். காமதேனுவின் பெருமை கண்ட விசுவாமித்திரர் அதனைத் தனக்களிக்க வேண்ட, மறுத்தலால் இருவருக்கு மிடையே பகை உண்டாயிற்று. திரிசங்கிற்குத் தனி விண்ணுலகம் அளித்தலிலும் இப்பகை தொடர்ந்தது.

தயரதனின் அரசியல் நெறியாளன். கலைக்கோட்டு முனியை அழைத்துவரச் செய்து, மைந்தர் அருள் வேள்வி நடக்கத் துணை நின்றவன். தயரதன் புதல்வர்களுக்குப் பெயரிட்டவன். விசுவாமித்திரனுடன் இராம - இலக்குவரை அனுப்பச் செய்தவன். இராமன் - சீதை திருமணத்தை நிகழ்த்துவித்தவன். இராமன் முடி சூட நாள் குறித்தவன். இராமனுக்கு அரசியல் அறம் உரைத்தவன். கைகேயியின் திரிந்த மனதை மாற்ற முயன்று தோற்றவன். தயரதன் இறந்தபின் பரதன் கேகய நாட்டிலிருந்து திரும்பி வரும் வரை அயோத்தி அரசை நடத்தியவன். பரதனுடன் காட்டிற்குச் சென்று இராமனைத் தயரதனுக்கு நீர்க்கடன் செய்ய வைத்தவன். இறுதியில் இராமனுக்கு முடிசூட்டு நாள் குறித்து அதற்குரிய சடங்குகளுடன் மகுடம் சூட்டியவன். இராமகாதை துவக்கம் முதல் இறுதிவரை அயோத்தி ஆட்சிக்குத் துணை நின்றவன்.

அயனையே நிகர் தூய மா முனிவன் - 180
வர சரோருகன் மகன் - 184
அருந் தவர்க்கு அரசன் - 213
கசட்டறு வினைத் தொழில் கள்வராய் உழல்
அசட்டர்கள் ஐவரை அறுவர் ஆக்கிய வசிட்டன் - 255
வசிட்டன் என்னும் ஓர் நல் நெடுந் தவன் - 258
உரை செறி முனிவன் - 275
அரிய நல் தவ முடை வசிட்டன் - 276
தாவா மெய்த் தவன் - 295
கரதலம் உற்று ஒளிர் நெல்லி கடுப்ப விரத மறைப்
பொருள் மெய்ந்நெறி கண்ட வரதன் - 297

பொய் வழி இல் முனி - 300
தவள் மதி புனை அரன் நிகர் முனி - 303
குரு - 330
உரைசெய் மா தவத்து ஓங்கல் வசிட்டன் - 517
அருந்ததி கணவன் - 572
மறைகள் யாவும் கணித்தவன், கலை மறை முனிவன் - 576
சுருதி நூல் உணர வல்ல வர முனி - 579
மாண்ட மா தவத்தோன் - 584
மலருளோன் மைந்தன் - 589
கற்பின் அருந்ததி கணவன் - 801
கோதுஇல் சிந்தை வசிட்டன், ஆணைசெய் கடவுள் ஆம் என, தேவரும் முனிவரும், உணரும், தேவர்கள் மூவரின் நால்வர் ஆம், முனி - 1104
அந்தம் இல் அறிவன் - 1324
நான்மறைத் திசைமுகன் திருமகன் செப்பும் - 1346
பழுது இல் மாதவன் - 1357
பிழைப்பு இல் செய் தவம் வருந்தினான் - 1408
ஒல்கல் இல் தவத்து உத்தமன் - 1411
தத்துவம் நண்ணினான் - 1428
நூல் தட மார்பன் - 1430
மா தவக் கிழவன் - 1570
பிணி அற நோற்று நின்ற பெரியவன் - 1572
முனி - 1646
மொய்ம் மாண் வினை வேர் அற வென்று உயர்வான் - 1647
மென் தோல் மார்பின் முனிவன் - 1671
புனிதன் - 1672
உறை செய் பெருமை உயர் தவத்தோர் ஓங்கல் - 1693
பேராத வாய்மைப் பெரியோன் - 1697
அன்பினன், எவ்வம் இல் இருந் தவ முனிவன் - 1762
விரத மா தவன் - 1896
ஆனா அறிவின் அருந் தவன் - 1916
வரன்முறை தெரிந்து உணர் மறையின் மா தவத்து அரு மறை முனிவன் - 2244
மா வதிட்டன் - 2441
கோ மலரோன் பெற்ற பெருமைத் தவ முனிவன் - 2443
பொன் திணிந்தன சடைப் புனிதன் - 2454
தேன் தரு மலருளான் சிறுவன் - 2500
மூன்று நூல் கிடந்த தோள் முனி - 2511
விரிஞ்சன் மைந்தன் - 10207
புனையும் நூல் முனிவன் - 10274
வேதியன், வடித்த நூல் முனி - 10275
உலகம் ஈன்ற பூமகள் தந்த அந்தப் புனித மாதவன் - 10312
பெரியன் - 10313
வேளையே பொடியதாக விழிக்கும் நீள் நுதலின் வெண்பூம் பூளையே சூடுவானைப் பொருவும் மா முனிவன் - 10317
சித்தம் ஒத்துளன் என்று ஓதும் திரு நகர்த் தெய்வ விரத நன்னூல் வித்தகன் - 10329
பண்பு ஆர் விரத மா தவன் - 10365

வயமத்தன்

இராவணன் படைத்தலைவருள் ஒருவன். கடற்படையுடையவன். இவன் போர்மத்தனின் உடன்பிறப்போ என்ற ஐயமும் உண்டு (அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு 6689 உரை).

போரின் மத்தனும், பொரு வயமத்தனும், புலவர் நீரின் மத்து எனும் பெருமையர்; நெடுங் கடற் படையார்: ஆரும் அத்தனை வலி உடையார் இலை; அவரால் பேரும், அத்தனை எத்தனை உலகமும் - 6560

வருணன்

கடல் தெய்வம். இராமன் சீதையை மீட்கக் கடல் கடக்க நேர்ந்த பொழுது இவனை வழிபட்டு, துணை வேண்டினான். வரக் காலந் தாழ்த்தியமையால் இராமன் சினத்திற்கு ஆளானவன். கடல் கடக்க இராமனுக்குச் சேது கட்டுமாறு அறிவுறுத்தியவன். இவனுக்கெனப் பிற தெய்வங்கள் போன்று தனிப் போர்க்கருவி உண்டு.

நெடுங் கடற்கு இறைவன் - 598
வாம வேல் வருணன் - 1307
வருணன் - 3052
மகர வேலைக் காவலன் - 3080
நீர் வேலை - 4796
பனிக் கடல் பெருங் கடவுள் - 4980
பருணன்தன் பெரும் பாசம் - 6573
எறி கடற்கு இறைவன் - 6594
ஊற்றம் மீக் கொண்ட வேலையான் - 6595
செறி புனற்கு இறைவன் - 6653
மறி கடற்கு இறைவன் - 6654
சுருதி மூர்த்தி - 6656
தெய்வக் கடலவன் படை - 8428
மேற்கின் வேலை வருணன் - 9613

வன்னி

தன் படையும் சுற்றமும் அழிந்தபின் இராவணன் அழைத்த மூலபடையுள் ஒருவன். புட்கரத் தீவு வாழ் அரக்கர்க்குத் தலைவன். இராம இலக்குவர் பெருமையை மாலியவான் மூலம் அறிந்தவன். இராவணனைக் கேள்வி கேட்கும் வல்லமை படைத்தவன். இந்திரசித்து இறந்தபின் சீதையை விடுதல் சரியன்று என்ற இவனை, மூலபலத்தைப் போரில் வழிநடத்திச் செல்பவனாக உணரமுடிகிறது. இறுதியில் இராமனால் அழிந்தவன்.

வன்னி என்பவன், புட்கரத் தீவுக்கு மன்னன் - 9284
தொல்லோன் - 9484

வாயு (காற்று)

வாயு தேவன். அனுமனின் தந்தை. இவனுக்கெனத் தனிச் சிறப்புடைப் போர்க்கருவி உண்டு. சமீரணன், மருத்து, பவனன், மாருதம், அனிலன் என்பன இவனைக் குறிக்கும் மாற்றுப் பெயர்கள். இவன் குசநாபனின் பெண்மக்கள் நூற்றுவரைத் திருமணம் செய்ய வேண்ட அவர்கள் மறுத்ததால் அவர்கள் முதுகை ஒடித்தவன்.

வாயு - 206
சமீரணன் - 402
மருத்து - 4589
முடிவுக் காலத்து அழிவுறக் கடுக்கும் வேகத் தாதை - 4767
காற்றுக்கு இறைவன் - 4794
பவனன் - 5510
அனுமன் தாதை - 6532
சூறை மாருதம் - 7618
திண் காற்றின் கடும் படை - 7629
காற்றுடைச் செல்வன் - 8427
காலவன் படை - 8428
அனிலன் சண்டவேகம் - 10098

வாயுவேகன்

இராவணன் தூதன். காற்றுப் போன்று விரைந்து செல்லக் கூடியவன்.

வாயுவேகன் - 7278

வாலி

இராம காதையுள் இந்திரன் கூறாகத் தோன்றிய வானரம். சுக்கிரீவனின் தமையன். தாரையின் கணவன். அங்கதனின் தந்தை. வானரங்களுக்குத் தலைவனாகி, கிட்கிந்தையை ஆண்டவன். தனியொருவனாகப் பாற்கடல் கடைந்து தேவர்களுக்கு அமுதம் அளித்தவன். நாள்தோறும் எண் திசையும் சென்று சிவனை வழிபடுபவன். அவ்வாறு வழிபடும் பொழுது ஒருநாள் இராவணன் இடையூறு செய்ய அவனைத் தன் வாலில் கட்டிய படியே மலைகளைத் தாண்டித் தன் வழிபாட்டை நிறைவு செய்தவன். இவன் வலியறிந்த இராவணன் இவன் நண்பனானான். சிவன், திருமால் என யார் எதிர்த்தாலும் அவர்கள் வலிமையில் பாதியைத் தனதாகக் கொள்ளும் வரம் பெற்றவன்.

துந்துபி என்ற அரக்கனைக் கொன்று வீசிய பொழுது அவன் உடல் மதங்கமாமுனிவர் தவச் சாலையுள் வீழ்ந்து மாசுபடுத்தியது. அதனால் சினமுற்ற முனிவரின், 'இரலை மலை வரின் வாலி அழிந்துபடுவான்' என்ற வசை மொழிக்கு இலக்கானவன்.

மாயாவி எனும் அரக்கன் இவனை அழிக்க வந்த பொழுது எதிர்த்துப் போரிட்டவன். கிட்கிந்தை யாட்சியைச் சுக்கிரீவனிடம் ஒப்படைத்து, பிலத்துள் ஓடி ஒளிந்த மாயாவியைத் தேடிச் சென்று கொன்றவன். இதற்குப் பல காலம் சென்றமையால் வாலி தான் இறந்துபட்டான் எனக் கருதி பிலத்தின் வாயை அடைத்து, கிட்கிந்தைக்கு அரசனாகிய சுக்கிரீவன் பால் மிக்க சினமுற்றவன். அவன் தன் பக்கம் உள்ள நியாயத்தைக் கூறியும் உடன்படாது அவனை அழிக்கத் துணிந்தவன். வாலிக்கு மதங்கமா முனிவர் இட்ட சாபத்தால் அவன் இரலைமலை செல்ல முடியாதாகையால் சுக்கிரீவன், அங்கு தன் நண்பர்களுடன் வாழ்ந்தான். சுக்கிரீவன் மனைவி உருமையையும் தன்னவளாக்கிக் கொண்டவன் வாலி. சுக்கிரீவனிடம் நட்புக் கொண்ட இராமன் இதையறிந்து, சினங்கொண்டு வாலியைக் கொன்று தலைமையோடு தாரத்தைத் தருவதாகச் சூளுரைத்தான். அதனை நிறைவு செய்ய வாலிபால் சுக்கிரீவனைப் போருக்கு அனுப்ப, இராம சுக்கிரீவர் நட்பறிந்து தாரை தடுத்தபோதும் கேளாது போருக்குச் சென்றவன். அங்கு இராமன் மறைந்திருந்து அம்பெய்ய வீழ்ந்தவன்.

இராமன்பால் மிகுந்த அன்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தவன் வாலி. இராமனே தன்னைக்

கொன்றவன் என்றறிந்த பொழுது மிகவும் துன்புற்று இராமனிடம் வாதாடினவன். இறுதியில் தன் தவறுணர்ந்து தன் மகனை இராமனிடம் அடைக்கலமாக ஒப்படைத்தவன். சுக்கிரீவனுக்கும் ஆறுதலும் அறிவுரையும் வழங்கினவன். இராமனிடம் அவன் உடன் பிறப்புகள் தன் தம்பியை 'அண்ணனைக் கொன்றவன்' எனப் பழித்துரைக்கக் கூடாது எனவும் வரம் பெற்று தன் உடன்பிறப்பு நேயத்தைக் காட்டினவன்.

மருவலர்க்கு அசனி அன்ன வாலி - 205

கறுவு உடைய வாலி - 3752

இந்திரன் புதல்வன் - 3772

கொடுங் குலப் பகைஞன் ஆகிக் கொல்லிய வந்த கூற்று - 3773

விரை செய் தார் வாலி என்ற அளவு இலா வலியினான் - 3787

தகை நெடும் பகைஞன் ஆம் இந்திரன் சிறுவன் - 3800

நாலு வேதம் ஆம் நவை இல் ஆர்கலி வேலி அன்னவன், மலையின்மேல் உளான், சூலிதன் அருள் துறையின் முற்றினான், வாலி என்று உளான், வரம்பு இல் ஆற்றலான் - 3822

நிலனும், நீரும், மாய் நெருப்பும், காற்றும் என்று உலைவு இல் பூதம் நான்கு உடைய ஆற்றலான் - 3824

கிட்டுவார் பொரக் கிடக்கின், அன்னவர் பட்ட நல் வலம் பாகம் எய்துவான், எட்டு மாதிரத்து இறுதி, நாளும் உற்று, அட்ட மூர்த்தி தாள் பணியும் ஆற்றலான் - 3825

வென்றியான் - 3826

இந்திரன் தனிப் புதல்வன் - 3834

வள்ளல் இந்திரன் மைந்தன் - 3874

போர் வாலி - 3891

அரிகள்தம் மன்னவன் - 3892

கொற்ற வாலி - 3895

கொடுந் தொழில் வாலி - 3929

வாலி ஆனது ஓர் வெவ் விடம் - 3944

தன் தோள் வலியால் தகை மால் வரை சாலும் வாலி - 3972

இந்திரன் செம்மல் - 3979

ஊகங்களின் நாயகர் - 3984

இந்திரன் மகன் - 3988

வல் நெடுந் தடந் திரள் புயத்து அடு திறல் வாலி - 3994

அடு திறல் வாலி - 3996

நீரும், நீர் தரும் நெருப்பும், வன் காற்றும், கீழ் நிவந்த பாரும், சார் வலி படைத்தவன் - 4000

வாசத் தாரவன் - 4011

அரி குலத்து அரசு - 4058

செவியுறு கேள்விச் செல்வன் - 4060

சிறியன சிந்தியாதான் - 4061

பஞ்சின் மெல் அடியாள் பங்கன் பாதுகம் அலாது, யாதும் அஞ்சலித்து அறியாச் செங் கை - 4086

சாலக் குன்றினும், உயர்ந்த திண் தோள் குரக்கு இனத்து அரசன் - 4091

பகையாத பண்பினான் - 4099

பொய் உரையாத புண்ணியன் - 4103

செரு அர் தோளன் - 4104

மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல், சங்கை இன்று உணர்தி வாலி செய்கையில் சாலும் - 4127

அடல் வாலி - 4280

போர் வாலி - 4327

வாலி என்று ஓங்கல் ஒப்பான் - 5319

மன்னனோடு (இராவணன்) எதிர்ந்த வாலி - 5689

வன் திறல் ஆய வாலி - 5887

வெஞ் சின வாலி - 5888

குலத் தலைவன் தன்னோடு ஒப்பு இலா உயர்ச்சியோன் - 5892

நீர் கடையும் வாலி - 6160

வரம் கொள் வாலி - 6177

நீலகண்டனும் நேமியும் நேர் நின்று நேரின், ஏலும் அன்னவருடைய வலி அவன்வயின் எய்தும் சாலும் நல்வரம் - 6178

பாழி மாக் கடல் கடைந்துளான் - 6525

அமுது எழ ஆழியைக் கலக்கினான் - 6714

சார்வு இல் வலத்தோர் அந்தரத்தர் அமுது ஆர்கலி காண, மந்திரத்தினொடும் வாசுகியோடும் சுந்தரப் பெரிய தோள்கள் திரித்தான் - 6883

இந்திரன் செம்மல், பண்டு, ஓர் இராவணன் என்பான்தன்னைச் சுந்தரத் தோள்களோடும் வாலிடைத் தூங்கச் சுற்றி, சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன் தேவர் உண்ண மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினான் - 6997

நும்முனை வாலின் சுற்றி, நோன் திசை நான்கும் தாவி, மும் முனை நெடு வேல் அண்ணல் முளரி அம் சரணம் தாழ்ந்த வெம் முனை வீரன் - 7463

கடைந்து தெள் அமுது கொள்ளும் வள்ளல் - 8071

கடல் அனைத்தும் ஊழிக் கால் எனக் கடப்பவன் வாலி - 9287

வானவர் கடைய மாட்டா மறி கடல் கடைந்த வாலி - 9346

வாலி என்று அளவு இல் ஆற்றல் வன்மையான் - 10124

தோடு அணை மலர்மிசைச் செங்கண் வாலி - 10293

விசுவகர்மா (பெயரில்லை)

தேவர்களின் தச்சன். இராமனும் துணைவரும் கடல் கடக்க அணை கட்டிய நளனின் தந்தை. வானுலகம் இராவணனால் அடிமைப்பட்டதால் பிரமன் வழிகாட்ட இலங்கையைத் தன் கட்டிடத் திறனாலும் சிற்ப நூல் அறிவாலும் சிறப்புடையதாக உருவாக்கினான்.

நினைந்த எலாம் உதவும் தச்சன் - 3068
நெடுவான் உறை தச்சன் - 3222
தெய்மாத் தச்சன் - 4842
தெய்வத் தச்சன் - 4852
வானவர் தச்சன் - 4862
விஞ்சை தெள்ளிய கடவுள் தச்சன் - 5941
தாதை (நளனின்) - 6760
கற்ற தேவர்தம் தச்சன் - 6856

விசுவாமித்திரன்

காதியின் மகன். கௌசிகன் என்றும் அழைக்கப்படுபவன். அரசனாக உலகாண்டவன். வன வேட்டையின் போது வசிட்டனைச் சந்தித்தவன். வசிட்டன் காமதேனு மூலமாக இவனுக்கும் இவன் படைகளுக்கும் உணவளித்த திறம் கண்டு, காமதேனுவைத் தான் பெற விரும்பினவன். அதனால் ஏற்பட்ட போரில் தன் புதல்வர் நூற்றுவரை இழந்தவன். தவ வாழ்வின் பெருமையுணர்ந்து தவம் செய்து உயரிய ஆற்றல் பெற்றவன். தன் உடலோடு விண்ணுலகம் செல்ல விரும்பிய திரிசங்குக்காகத் தனியொரு உலகைத் தோற்றுவித்தவன். அம்பரீடன் செய்ய விழைந்த புருட மேதத்திற்காகச் சென்ற சுனச்சேபன் தன்னைக் காப்பாற்ற வேண்டிட அவனுக்காகத் தன் மக்களில் ஒருவனைச் செல்ல ஆணையிட்டவன். அனைவரும் மறுத்ததால் அவர்களைப் புலையராகும்படிச் சபித்தவன். பின்னர் சுனச்சேபனுக்கு அவ்வேள்வியின்போது உயிர் காக்கும் மந்திரத்தை அருளிக் காப்பாற்றினவன். மீண்டும் தவம் செய்து தேவர்களால் 'வேத பாரக'னாகப் போற்றப்பட்டவன்.

அயோத்தி வந்து தசரதனிடமிருந்து இராம இலக்குவரைத் தன் வேள்வி காக்க அழைத்து வந்தவன். வழியில் எதிர்ப்பட்ட தாலைவனத்தின் வெம்மையிலிருந்து தப்பிக்க அவர்களுக்கு இரு மந்திரங்களைக் கற்றுக் கொடுத்தவன். தன் வேள்விக்குத் தடையாய் இருந்த தாடகை முதலானோரைக் கொல்வித்தவன். வேள்வி சிறப்புற நிறைவேறியமையால் இராமனுக்குத் தன்னிடமிருந்த படைக்கலன்களை நல்கினவன். பின் மிதிலைக்கு அழைத்துச் சென்று இராமனை, சீதை திருமணத்திற்கான வில்லை ஒடிக்கச் செய்து அவர்கள் திருமணத்திற்கு வழிகோலினவன்.

மன்னுயிர் அடங்கலும் உலகும் வேறு அமைத்து, தேவரோடு இடம் கொள் நான்முகனையும் படைப்பென் ஈண்டு எனாத் தொடங்கிய துனி உறு முனிவன் - 317
எண் இலா அருந் தவத்தோன் - 325
மண் படைத்த முனி - 327
கறுத்த் மா முனி - 328
முந்தை நான்மறை முனி - 331
நவைக்கண் நீங்கினான் - 332
தேவு மாதவன் - 338
அருந் தவன் - 355
அறிஞன் - 358
இறைவன் - 366
ஐவரை அகத்திடை அடைத்த முனி - 367
அண்ணல் முனிவன் - 374
நான்மறை அந்தணன் - 375
அன்ன மா முனி - 392
தாங்க அருந் தவத்தின் மிக்கோன் - 394
ஆறிய அறிவன் - 395
முனைவன், வினை அற நோற்று நின்ற மேலவன் - 397
மாதவன் - 407
ஏத்த அருங் குணத்தினன் - 434
பவர் சடை அந்தணன் - 439
கோ முனி - 441
குன்று போல் குணத்தான் - 450
பொன்னை ஏர் சடையான் - 467
கோது இலா குணத்தான் - 476
காதி செம்மல் - 477
நூல் தோய்ந்த சிந்தைக் கௌசிகன் - 566
பார்த்திபன், மணித் தடந் தோளினான் - 576
குடைகெழு வேந்தன், இடித்து எழு முரசு வேந்தன் - 577
வெப்புடைக் கொடிய மன்னன் - 578
அரசர்கோன் - 584
கௌசிகன் - 591
தாபதன் - 595
அரச மா தவன், நிரை தவன் - 598
சிறப்புடை முனிவன், அறப் பொருள் உணர்ந்தோ(ன்) - 603
தபோதனன் - 613

வேத பாரகர், மா தபோதன் - 614
அந்தணன் - 615
சுருதி அன்ன வாழி மாதவன் - 634
எண் தவத்து முனிவர் - 635
வார் சடை அரன் நிகர் வரதன் - 680
தூய தவங்கள் தொடங்கிய தொல்லோன் - 692
ஞான முனி - 696
பராவ அரு முனி - 724
கோசிக வேத பாரன் - 1104
அச்சு என நினைத்த முதல் அந்தணன் - 1152
கல்வி கரை உற்ற முனி கௌசிகன் - 1156
மாசு இல் மா தவன் - 3315
காதி காதலன் - 3712
கோசிகப் பெயருடைக் குல முனித் தலைவன் - 6156

விந்தன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன்.

விந்தன் - 5343

வியாழன்

தேவர் குலத்தைச் சார்ந்தவன். விண்ணுலகு இராவணன் வசப்பட்டதால் அவன் அவையில் அடித்தொண்டு புரிந்தவன்.

இந்திரற்கு இமையவர் குரு - 1316
மின்னுடை வேத்திரக் கையர், மெய்புகத்
துன்நெடும் கஞ்சுகத் துகிலர் சோர்விலர்
பொன்னொடு வெள்ளியும் புரந்தராதியர்க்கு
இன் இயல் முறைமுறை இருக்கை ஈய - 3082

விராதன்

குபேரன் உலகில் உள்ள தும்புரு எனும் கந்தருவன். இவன் காம நோய் காரணமாகக் குபேரனால் அரக்கனாக வசைமொழியப் பட்டவன். இராமன் தாள் படும்பொழுது அரக்கநிலை மாறும் என வசை நீக்கம் பெற்றவன். தண்டகவனத்துள் இராம இலக்குவர் சீதையுடன் வந்தபொழுது சீதையை உண்ணுதற்காகக் கவர்ந்தவன். இதனால் இராம இலக்குவரால் அழிக்கப்பட்டவன். முன்னுணர்த்தியபடி வசை நீங்கப்பெற்று மீண்டும் கந்தர்வனானவன். முன்னை உரு கிடைத்தவுடன் இராமனைத் துதித்து விடைபெற்றவன்.

செஞ் சுடர்ச் செறி மயிர்ச் சுருள் செறிந்த
சென்னியன் - 2522
வானினிடையோர் சிந்தையுள்ளும் விழியுள்ளும்
உளன் என்ற திறலோன் - 2532
பூதம் அத்தனையும் ஓர் வடிவு கொண்டு, புதிது
என்று ஓத ஒத்த உருவத்தன்; உரும் ஒத்த
குரலன் காதலித்து அயன் அளித்த, கடை
இட்ட கணிதப் பாத லக்கம் மதவெற்பு அவை
படைத்த வலியான் - 2533
விராதன் எனும் அக் கோர வெங் கண், உரும்ஏறு
அன கொடுந் தொழிலினான் - 2534
நிருதன் - 2550
மத நல் யானை அனையான் - 2560
வெற்றியான் - 2577
வீர விராதன் - 3251
மின் திரண்டனைய பங்கி விராதன் - 3374
வெகுண்டு எழும் இரா அனையன் ஆம் அவ்
விராதன் - 3794
வெவ் விராதன் - 5097
வன் திறல் விராதன் - 10211

விலங்கு நாட்டத்தன்

இராவணன் படைத்தலைவருள் ஒருவன். வீருபாக்கன் என்பது வடமொழிப் பெயர்.

இலங்கை நாட்டன்ன எறி கடல் தீவிடை உறையும்
அலங்கல் வேற் படை ஐ-இரு கோடிக்கும்
அரசன், வலம் கொள் வாள் தொழில் விஞ்சையர்
பெரும் புகழ் மறைத்தான், விலங்குநாட்டத்தன்
என்று உளன் வெயில் உக விழிப்பான் - 6558
வீருபாக்க (ன்) - 6966

வினதன்

வானரப் படைத்தலைவருள் ஒருவன். சீதையைத் தேடிக் கிழக்கு திசை சென்ற வானரப் படைக்குத் தலைவன்.

வினதன் - 4425
மிடல் திசைக்கண் வினதன் - 4456

வீடணன்

இராவணன், கும்பகருணன் முதலியோர் தம்பி. திரிசடையின் தந்தை. அரக்கர் குலத்தவன். ஆயினும் அறவாழ்க்கை மேற்கொண்டவன். நீண்ட கைகளை உடையவன். வேண்டும் உருவெடுக்கும் மாயம் வல்லவன். இராவணன் தவறிழைத்த போது கண்டித்தவன். தூது வந்த

அனுமனைக் கொல்வது பிழை என்று அறிவுறுத்தியவன். சீதையை விட்டு விடும்படி நீதி பல உரைத்தும் கேளர்த இராவணன் சினந்து துரத்தியதால் இராமனிடம் அடைக்கலம் புகுதலே ஏற்றது என வந்தவன். இராமன் அவன் அடைக்கலத்தை ஏற்றுக்கொண்டு இலங்கை அரசு தரப் பெற்றுக் கொண்டவன். அதன் அடையாளமாக இராமன் பாதுகைகளையே தன் சிரம் கொண்டவன்.

இராம இராவணப் போரில் இராமன் வெற்றிக்குப் பெருந்துணையாய் நின்றவன். வானர வீரர்களுக்கு உணவு வழங்குதல் இவன் பொறுப்பாயிற்று. வானரப்படையுள், வானரங்களாக மாறி ஒற்றறிந்த அரக்கரைக் கண்டுபிடித்து அவர் உண்மை உருவை வெளிப்படுத்தினவன். இராவணனின் பக்கபலமாய் நின்ற வீரர்களின் சிறப்புகளை யெல்லாம் வெளிப்படுத்தியவன். கும்பகருணனையும் இராமன் பால் இணைவிக்க முயன்று தோற்றவன். போர்க்களத்தே பன்முறை அரக்கர் மாயங்களை வெளிப்படுத்தியவன். அரக்க வீரரை அழிக்கும் முறைமையை உணர்த்தியவன். வண்டு உருக் கொண்டு இலங்கையுள் புகுந்து இந்திரசித்து நிகழ்த்திய நிகும்பலை யாகத்தைக் கண்டு வந்தவன். அவ் யாகத்தையும் இந்திரசித்தையும் இலக்குவன் அழிக்கத் துணைநின்றவன். இதனால் சினமுற்ற இராவணன் இவன்மீது வேல் எறிய அதனை இலக்குவன் இடை புகுந்து ஏற்றான். இறுதியில் இராவணன் மறைந்தவுடன் அவனுக்கும் பிறர்க்கும் ஈமக்கடன் செய்தவன்.

சீதையை இராமன் ஆணைப்படி அலங்கரித்து அழைத்து வந்து இராமனிடம் சேர்த்தவன். எத்தனை பேர் ஏறினாலும் இடங்கொடுத்து மிக விரைவாக எண்ணிய இடத்திற்குச் செல்லக் கூடிய தனக்குரிய புட்பக விமானத்தில், இராமன் முடிசூட்டு விழா காண இராமன், சீதை, அவன் நண்பர்கள், வானரர், அரக்கர் என அனைவருடனும் அயோத்தி சென்றவன். நண்பர்களுடன் அயோத்தியைச் சுற்றிப் பார்த்து, முடிசூட்டு விழாவைக் கண்டுகளித்தவன். பின் நண்பர்களை அவரவர் இடத்தில் விடுத்து இலங்கை திரும்பி நாடாண்டவன்.

வேந்தர் வேதியர் மேல் உளோர், கீழ் உளோர், விரும்பப் போந்த புண்ணியன் - 4969

தருமம் அன்னான் - 4970

குற்றம் இல்லது ஓர் குணத்தினன் இவன் - 4971

ஆண்மையான், மின்னும் மௌலியன், மெய்ம்மையன் - 5366

வீடணன் நீதியான் - 5914

நீண்ட கையன் - 5915

நனி தீவினையை எல்லாம் வென்றவரின் நன்று உணரும் வீடணன் - 6135

அறிஞரின் மிக்கான் - 6169

மேதாவிகட்கு எல்லாம் மேலான மேன்மையான் - 6364

இளவல் - 6373

உத்தமன் - 6376

நம்பி - 6379

மறு இல் சிந்தையான் - 6380

அறம் தலை நின்றவர்க்கு அன்பு பூண்டனென் - 6381

பொருள் உற உணர்ந்த அப் புலன் கொள் கேள்வியான் - 6387

அறை கழல் வீடணன், அயிர்ப்பு இல் சிந்தையான் - 6397

தகவு உறு சிந்தையன் தரும நீதியன், மகன் மகன் மைந்தன் நான்முகற்கு வாய்மையான் - 6406

அற நிலை வழாமையும், ஆதி மூர்த்திபால் நிறைவரு நேயமும், நின்ற வாய்மையும், மறையவர்க்கு அன்பும் என்று இனைய, மாமலர் இறையவன் தர, நெடுந் தவத்தின் எய்தினான் - 6407

ஆயவன், தருமமும் ஆதி மூர்த்திபால் மேயது ஓர் சிந்தையும், மெய்யும் வேதியர் நாயகன் தர, நெடுந் தவத்தின் நண்ணினன்; தூயவன் - 6416

பெருத்து உயர் தவத்தினானும் பிழைப்பு இலன் - 6468

துன்றி வந்து அன்பு செய்யும் துணைவன் - 6470

கோது இலாதவன் - 6481

கங்குலின் நிறத்தினான் - 6486

பஞ்சு எனச் சிவக்கும் மென் கால் தேவியைப் பிரித்த பாவி வஞ்சனுக்கு இளையன் - 6487

செய் தவம் பயந்த வீரன் - 6492

கரங்கள் மீது சுமந்து செல்லும் கதிர் மணி முடியன் - 6501

சிறப்புப் பெற்றான் - 6504

விளைவினை அறியும் மேன்மை வீடணன் - 6506

அகன் அமர் காதல் ஐய(ன்) - 6507

திருவடி முடியின் சூடி, செங்கதிர் உச்சி சேர்ந்த அரு வரை என்ன, நின்ற அரக்கர்தம் அரசு - 6509

மன் நெடுங் குமரன் - 6512

அந்தம் இல் குணத்தினான் - 6513

வாள் எயிற்று இலங்கை வேந்தன் - 6515

நிருதர் மன்னவன் - 6516

மேயவன் - 6528

செவ் வழி அறிஞன், வெவ் வழி விலங்கி, நல் நெறியை மேவினான் - 6529

முழுது உணர் புலவன் - 6531

எண்ணு நூல் கற்றான் - 6589

இலங்கையர் நாயகன் - 6591
அரக்கர் கோமகற்கு இளவல் - 6674
அரக்கர்பதி - 6750
பண்டு தான் பல நாள் செய்த நல் தவப் பயன் தந்து உய்ப்ப முந்துறப் போந்த நம்பி - 6768
கல்விக்கண் மிக்கோன் - 6774
இராவணற்கு இளவல் - 6895
ஆழி மின் என விளங்கும் பைம் பூண் வீடணன் - 6937
அரக்கர் கோன் - 6976
கவிஞரின் அறிவு மிக்கான் - 7402
சேகு அறத் தெளிந்தோர் நின்னில் யார் உளர்? வருத்தம் செய்யாது ஏகுதி; எம்மை நோக்கி இரங்கலை என்றும் உள்ளாய் (கும்பகருணன்) - 7437
வென்றி வெந் திறலினான் - 7438
நிருதர் கோன் - 7441
நீதியோன் - 7594
நீதியால் வந்தது ஒரு நெடுந் தரும நெறி அல்லால் சாதியால் வந்த சிறு நெறி அறியான் - 7625
நல்லாறுடை வீடணன் - 7780
மூதுணர்வின் மிக்கான், அடல் வீடணன் - 7812
வெந் திறல் சித்தி கண்ட வீடணன் - 7933
அண்ணல் வீடணன் - 8235
ஐயம் இல் வீடணன் - 8330
வெங் கதிர் மௌலிச் செங்கண் வீடணன் - 8456
பொன்னின் மௌலியன் வீடணன் - 8529
செறிந்த தார் நிருதர் வேந்தன் - 8717
அரக்கர்க்கு எல்லாம் மன்னவன் - 8718
அந்தம் இல் குணத்(தன்) - 8721
நோன் புகழ் ஆக்கிய நிருதன் - 8769
புலமை உள்ளத்(தன்) - 8781
நெடுந்தகை வீடணன் - 9089
பனி மலர்த் தவிசின் மேலோன் பார்ப்பனக் குலத்துக்கு எல்லாம் தனி முதல் தலைவன் - 9100
சீற்றம் தீர்ந்தான் - 9109
வீடணன் விளைவது ஓர்வான் - 9151
மெய்க் கொடுந் திறல் வீடணன் - 9329
அன்பின் வீடணன் - 9554
சயம்தனைப் பொரும் தம்பி - 9556
வீடணப் பசு - 9566
இராவணற்கு இளவல் - 9583
வீடணனார் - 9836
தெள்ளியோ(ன்) - 9951
நீதி மனு நெறி யாவையும் பொருந்து கேள்விப் புலமையினோ(ன்) - 9952
தரும சீலன் - 9963
வீடணனாம் மறக் கண் இலாதவன் - 9970
அண்ணல் வீடணன் - 9998
புனித நூல் கற்று உணர் புந்தியோன் - 10002
கருது நூல் வலா(ன்) - 10003
குணங்கள் தூயோன் - 10005
அடல் வீடணன் - 10092
மயக்கு இலான் - 10094
அரக்கர்தம் கோமான் - 10095
தோடு அணைந்த தார் மவுலியான் - 10099
இலங்கையர் வேந்தன் - 10106
வனையும் வார் கழல் இலங்கையர் மன்னன் - 10107
எண்ணின் வழு இலா இலங்கை வேந்து - 10110
மீனுடை அகழி வேலை இலங்கையர் வேந்து - 10112
வென்றி வீடணன் - 10114
வீடணக் குரிசில் - 10137
அறிவினுக்கு அறிவு போல்வான் வீடணன், அலங்கல் தோளான், செறி புயத்து அரக்கன் தம்பி - 10225
வீடணப் புலவர் கோமான் - 10230
எள்ளல் இல்லாத கீர்த்தி வீடணன் - 10234
தூய வீடணன் - 10305
தீது இலா இலங்கை வேந்து - 10323
தேன் இமிர் அலங்கல் பைந் தார் வீடணக் குரிசில் - 10340
எள்ளல் இலாத மொய்ம்பன் - 10342
மின்னை ஏர் மௌலிச் செங் கண் வீடணப் புலவர் கோமான், சராசரம் சுமந்த சால்பின் நின்னையே ஒப்பார் நின்னை அலது இலர் (இராமன்) - 10360
நலம் கொள் பேர் உணர்வின் மிக்கோர் நலன் உறும் நெஞ்சன் - 10364
சரத மா நெறியும் வல்லோன் - 10365
அகன் உற்ற காதல் அண்ணல் அலங்கல் வீடணன் - 10366

வேத(க)வதி (பெயரில்லை)

சனகனின் தம்பியான குசத்துவச முனிவர் மகள். வேதம் ஓதும் பொழுது பிறந்ததால் வேதவதி எனப் பெயர். திருமாலை மணம் புரிய வேண்டித் தவம் இயற்றிய பொழுது இராவணனால் தீண்டப்பட்டவள். இதனால் சினமுற்று, மீண்டும் பிறந்து அவனைக் குலத்தோடு ஒழிப்பதாக வசை மொழிந்தவள். பின் தீ மூழ்கித் தன்னை அழித்துக் கொண்டவள். திருமகளின் கூறாக, சீதையாகத் தோன்றியவள்.

தீயிடைக் குளித்த அத் தெய்வக் கற்பினாள் - 6151

வேள்வியின் பகைஞன்

இராவணன் மந்திரச் சுற்றத்துள் மற்றும் படைத்தலைவருள் ஒருவன். போரில் இலக்குவனால் வெல்லப்பட்டவன். வேள்வியை அழிப்பவன் என்னும் பொருளுடைய பெயரினன். யஜ்ஞஹா எனும் வடமொழிப் பெயரின் தமிழாக்கம் வேள்வியின் பகைஞன்.

வேள்வியின் பகைஞன் - 6114

குன்றில் வாழ்பவர் கோடி நால்-ஐந்தினுக்கு இறைவன், "இன்று உளார் பினை நாளை இலார்" என எயிற்றால் தின்றுளான், நெடும் பல் முறை தேவரைச் செருவின் வென்றுளான், உளன், வேள்வியின்பகைஞன் ஓர் வெய்யோன் - 6552

நெய் அழல் வேள்வி நெடும் பகை - 8322

நெருப்புடை வேள்வியின்பகை - 8351

வேள்விஇரும்பகைஞன் - 8387

(ஆ) நேரடியாக இடம் பெறும் தொகையினர்

அந்தணர்

நான்மறைகளில் வல்லவர். இரு பிறப்பாளர். இரு வினைகளைக் கடந்தவர். முப்பகையை வென்றவர். முப்புரி நூலணிந்தவர். எல்லா உயிர்களையும் தன்னுயிராகப் போற்றுபவர். பிறரிடமிருந்து தானம் பெறுதற்கு உரியர். தீ வளர்த்து வழிபாடு செய்பவர். நல்லவற்றை ஆக்கவும் தீயனவற்றை அழிக்கவும் இயன்ற அறிவாளர். அறநெறி பிழையாதவர்.

அரு மறை நூல் வேதியர்கள் - 236

கலைமறையோர் - 300

தா வரும் இரு வினை செற்று, தள்ள அரும் மூவகைப் பகை அரண் கடந்து முத்தியில் போவது புரிபவர் - 353

ஐயம் இல் சிந்தையர் அந்தணர் - 411

குடையர், குண்டிகை தூக்கினர், குந்திய நடையர், நாசி புதைத்த கை நாற்றலர் கடகளிற்றையும் காரிகையாரையும் அடைய அஞ்சிய அந்தணர் - 773

இரு பிறப்பாளர் - 804

வேத பாரகர் - 1134

ஆரண மறைவாணவர்க்கு இன் அமுது இடுவார் - 1181

அந்தணாளர் முனியவும், ஆங்குஅவர் சிந்தையால் அருள் செய்யவும்,தேவருள் நொந்து உளாரையும்,நொய்துஉய்ந்தாரையும்,மைந்த! எண்ண வரம்பும் உண்டாம்கொலோ? - 1414

வெய்ய தீ - வினையின் நீங்கிய மேலவர் - 1415

ஆவதற்கும் அழிவதற்கும் அவர் ஏவ நிற்கும் விதி - 1416

புலமையோர் - 1429

நல் பயன் தவத்தின் உய்க்கும் நான்மறைக் கிழவர் - 1567

உயிர் எல்லாம் தன் உயிர் என நல்கும் அந்தணன் - 2020

ஏந்து நூல் அணி மார்பினர் - 2076

நலம் பெய் வேதியர் - 2077

மா தவத்து ஒழுகலெம்; மறைகள் யாவையும் ஓதலெம்; ஓதுவார்க்கு உதவுதல் ஆற்றலெம்; மூதெரி வளர்க்கிலெம்; முறையின் நீங்கினோம்; ஆதலின், அந்தணரேயும் ஆகிலேம்! - 2644

அறம் தவா நெறி அந்தணர் - 2649

ஏறு நெறி அந்தணர் - 3122

நிறம் கருகு கங்குல், பகல், நின்ற நிலை நீவா அறம் கருது சிந்தைமுனி அந்தணர் - 4222

தூம வெங்கனல் அந்தணன் - 6196

ஓம நெறி வாணர் - 6756

பூசுரர் - 6977

தேசம் கலந்த மறைவாணர் - 8264

செந் தீ வினை மறைவாணனுக்கு ஒருவன் சிறுவிலை நாள் முந்து ஈந்தது ஓர் உணவின் பயன் எனல் ஆயின - 9755

அமைச்சர்

கல்வியறிவும் பட்டறிவும் ஒருங்கே நிறைந்த மூதறிஞர்; அரசனுக்கு அறிவுரைவழங்கி வழிகாட்டும் 'மந்திரக் குழுவுள்' இடம் பெறுபவர். நீதி நூல் வழி நிற்கும் அறவாளர். நடுநிலைமையாளர்; சினமற்றவர்; தோள்வலியும் உடையவர். எந்தச் செயலையும் வெற்றிபெறச் செய்யும் துணிவும், சூழ்ச்சியும் மிக்கவர். நல்லன தீயனவற்றை நன்கு ஆராய்ந்து, காலம், இடம், கருவி தெரிந்து அரசனுக்கு மருத்துவன் போன்று உதவுபவர். வருவதறிந்து அரசனை நல்வழிப் படுத்துபவர். இதனால் உயிருக்கே தீங்கு வரினும் பின் வாங்காதவர். அறம் போற்றும் நல்லொழுக்கினரான இவர் இப்பதவியை மரபாகவும் பெறுவர்.

வன் திறல் சேர் அமைச்சர் - 235

கதம் கொள் சீற்றத்தை ஆற்றுவான், இனியன கழறி, பதம் கொள் பாகனும் மந்திரி ஒத்தனன், பல் நூல் விதங்களால், அவன் மெல்லென மெல்லென விளம்பும் இதங்கள் - 816

மந்திரக் கிழவர் - 1316

குல முதல் தொன்மையும் கலையின் குப்பையும் பல முதல் கேள்வியும், பயனும், எய்தினார் நலம் முதல் நலியினும் நடுவு நோக்குவார்; சலம் முதல் அறுத்து, அருந் தருமம் தாங்கினார் - 1318

உற்றது கொண்டு, மேல்வந்துஉறு பொருள் உணரும் கோளார்; மற்ற அது வினையின் வந்தது ஆயினும் மாற்றல் ஆற்றும் பெற்றியர்; பிறப்பின் மேன்மைப் பெரியவர்; அரிய நூலும் கற்றவர்; மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார்; - 1319

காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரிந்து கற்ற நூல் உற நோக்கி, தெய்வம் நுனித்து, அறம் குணித்த மேலோர்; சீலமும், புகழ்க்கு வேண்டும் செய்கையும், தெரிந்து கொண்டு பால் வரும் உறுதி யாவும் தலைவற்குப் பயக்கும் நீரார்; - 1320

தம் உயிர்க்கு இறுதி எண்ணார்; தலைமகன் வெகுண்ட போதும், வெம்மையைத் தாங்கி, நீதி விடாது நின்று உரைக்கும் வீரர்; செம்மையின் திறம்பல் செல்லாத் தேற்றத்தார்; தெரியும் காலம் மும்மையும் உணர வல்லார்; ஒருமையே மொழியும் நீரார்; - 1321

நல்லவும் தீயவும் நாடி, நாயகற்கு, எல்லை இல் மருத்துவன் இயல்பின் எண்ணுவார்; ஒல்லை வந்து உறுவன உற்ற பெற்றியின் தொல்லை நல்வினை என உதவும் சூழ்ச்சியார்; - 1322

உமைக்கு நாதற்கும், ஓங்கு புள் ஊர்திக்கும், இமைப்பு இல் நாட்டம் ஓர் எட்டு உடையானுக்கும், சமைத்த தோள் வலி தாங்கினார் ஆயினும், அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே - 1421

நல்லவர் - 1425

தந்தையின் ஆய மந்திரியர் - 2296

ஆற்றலால் அடுத்தது எண்ணும் அமைச்சர் - 3234

ஏவல் செயகிற்றி, எனது (இராவணன்) ஆணை வழி, எண்ணிக் காவல் செய் அமைச்சர் கடன் நீ கடவது உண்டோ? - 3265

அனுமனே முதலிய அமைச்சர் நினைவும், கல்வியும், நீதியும், சூழ்ச்சியும் நிறைந்தார் - 3857

வாய்மை சால் அறிவின் வாய்த்த மந்திர மாந்தர் - 4122

வல்ல மந்திரியர் - 4346

மதி நெறி அமைச்சர் - 5677

மந்திரத் தொழில் நிரம்பிய முதியர் - 6076

பண்டிதர், பழையவர், கிழவர், பண்பினர், தண்டல் இல் மந்திரத் தலைவர் - 6078

சூழ்ச்சியின் கிழவர் - 6081

விருத்த மேதகையவர், வினைஞர் - 6137

மை அறு மரபின் வந்த அமைச்சர் - 6955

அளந்து அறிவு அரியர் ஆய அமைச்சர் - 6956

அறிவுடை அமைச்சன் - 7361

மந்திரியர் - 7722

அரக்கர்

அவுணர், தானவர், நிருதர், நிசிசரர், கண்டகர், யாது தானர், வயவர், புலையர் எனப் பலவாறாகச் சுட்டப்படும் அரக்கரின் அழிவே காப்பியத்தின் அடிப்படை இலக்காகும். பிறரைத் துன்புறுத்தித் தாம் இன்புறுவதைத் தொழிலாகக் கொண்டவர். மானுடரை உணவாகக் கொள்பவர். கொடுஞ்சினம், பொய், வஞ்சனை, செருக்கு முதலான தீய பண்புகளின் உறைவிடமான இவர் குதிரை, யானை, குரங்கு, கரடி, நாய், வேங்கை, யாளி போன்ற விலங்குகளின் முகமுடையவர். இரண்டிற்கு மேற்பட்ட கைகள், கண்கள், கால்கள், மிகப் பெரிய உடம்பு என அஞ்சத்தக்க உருவினர். மாயையில் வல்ல இவ்வரக்கர் அறநெறியை அறவே துறந்தவர். கரு நிறத்தர், நஞ்சினும் கொடியர். பலவித படைக்கலன்களோடு வெம் போர் நிகழ்த்துவதில் பெரு விருப்பர்.

போரில் வந்து சீறுகின்ற போர் அரக்கர் - 110

கொலைதொழில் அரக்கர்தம் கொடுமை - 185

சுடு தொழில் அரக்கர் - 186

அமர கண்டகர் இடி நிகர் வினையம் - 187

கொதி கொள் வேல் அரக்கர் - 195

வஞ்சகர் - 298

தானவர் - 378

தீத் தொழில் இயற்றுவர் - 434

கவருடை எயிற்றினர்; கடித்த வாயினர்; துவர் நிறப் பங்கியர் சுழல் கண் தீயினர் - 439

தூம வேல் அரக்கர் - 441

வஞ்சனை அரக்கர் - 442

வரம்பு அறும் உலகினை வலிந்து, மாய்வு இன்றி, திரம் பயில் அரக்கர் - 1233

அவுணர் - 1331

பொய்வினைக்கு உதவும் வாழ்க்கை அரக்கர் - 1887

கனல் வரு கடுஞ் சினத்து அரக்கர் - 2634

ஆய் வரும் பெரு வலி அரக்கர் - 2635

கரக்க அருங் கடுந் தொழில் அரக்கர் - 2636

இரக்கம் என்று ஒரு பொருள் இலாத நெஞ்சினர், அரக்கர் என்று உளர் சிலர், அறத்தின் நீங்கினார் - 2642

ஊன் நுகர் அரக்கர் தம் வருக்கம் - 2675

செருக்கு அடை அரக்கர் புரி தீமை - 2684

வாள் அவுணர் - 2695

அறிவு இலி அரக்கன் - 2699

வளை எயிற்றவர்கள் - 2798

வெங் கதப் போர் எதிர் இலாதவர் - 2828

கூற்றும் உட்கும் குலத்தினோர் - 2831

ஊனுடைய உடம்பினர் ஆய், எம் குலத்தோர்க்கு உணவு ஆய மானுடர் (சூர்ப்பணகை) - 2837

அல் ஈரும் சுடர் மணிப் பூண், அரக்கர் குலம் - 2844

பேடிப் போர் வல் அரக்கர் - 2854

வெப்பு அழியா நெடு வெகுளி வேல் அரக்கர் - 2865

நெறித் தாரை செல்லாத நிருதர் - 2868

நிருதி - 2869

வென்றி வேற் கை நிருதர் - 2879

தறியின் நீங்கிய, தாழ் தடக் கைத் துணை குறிகொளா, மத வேழக் குழு அனார் - 2901

ஆயிரம் ஆயிரம் களிற்றின் ஆற்றலர் மாயிரு ஞாலத்தை விழுங்கும் வாயினர் தீ எரி விழியினர் - 2911

கமலத்தோன் தரும் வரத்தினர் - 2913

ஆலமும் வெளிது எனும் நிறத்தர் - 2916

குஞ்சரம், குதிரை, பேய், குரங்கு, கோள்அரி, வெஞ் சினக் கரடி, நாய், வேங்கை, யாளி என்று, அஞ்சுற கனல் புரை முகத்தர்; ஆர்கலி நஞ்சு தொக்கெனப் புரை நயனத்தார் - 2919

எண் கையர்; எழு கையர்; ஏழும் எட்டும் ஆய்க் கண் கனல் சொரிதரு முகத்தர்; காலினர்; வண் கையின் வளைத்து, உயிர் வாரி, வாயின் இட்டு உண்கையில் உவகையர் - 2920

உழுவையோடு அரி என உடற்றும் சீற்றத்தார் - 2923

வில்லினர்; வாளினர்; இதழின்மீது இடும் பல்லினர்; மேருவைப் பறிக்கும் ஆற்றலர்; புல்லினர் திசைதோறும்; புரவித் தேரினர்; சொல்லின் முடிக்குறும் துணிவின் நெஞ்சினர் - 2924

நிசிசரர் - 2967

விரிநீர் கடைந்தார் வெருவுற மீது எழு கடு ஆம் ஏனக் கொடியர் - 2970

அளப்ப அரும் பெரு வலி அரக்கர் - 3072

பொய்ந்நிலை மருங்கினர் - 3107

தீவினைப் பாதக அரக்கர் - 3367

அற நெறி நினைக்கிலாதவர் இனம் - 3368

வெங் கண் வாள் அரக்கர் - 3369

மாய வல் அரக்கர், வல்லர் வேண்டு உரு வரிக்க - 3370

மறம்தலை திரிந்த வாழ்க்கை அரக்கர் - 3372

இரக்கமில் அரக்கர் - 3402

நஞ்சு இயல் அரக்கியர் - 3461

கள்ளப் போர் அரக்கர் - 3514

வெஞ் சினம் செய் அரக்கர் - 3552

திறத்து இனாதன, செய் தவத்தோர் உற ஒறுத்து, ஞாலத்து உயிர்தமை உண்டு, உழல் மறத்தினார் - 3564

கண்டகர் ஆய அரக்கர் - 3590

பரல் தரு கானகத்து அரக்கர் - 3619

முற்றிய அரக்கர் - 3650

தவா வலி அரக்கர் என்னும் தகா இருள் பகை - 3806

வாள் அரக்கர் என்னும் தீவினை - 3807

நெய் அடை நெடு வேல் தானை நீல் நிற நிருதர் - 4092

அப் பாதக வஞ்ச அரக்கர் - 4200

அரு வினை அரக்கர் - 4208

நீலமேனி அரக்கர் - 4212

பிறை துளங்குவ அனைய பேர் எயிறு உடைய பேதையர் - 4213

அறத் துறை திறம்பினர் அரக்கர் - 4248

வெம்பு கண்டகர் - 4272

தருக்கிய அரக்கர் - 4372

வேதனை அரக்கர் - 4573

காள நிறத்தோடு ஒப்பவர் - 4713

விலங்கினர் - 4731

இலங்கை வாழும் நீசர் - 4732

புன் தொழில்மேல் நின்ற அரக்கர் - 4773

திருகு வெஞ் சினத்து அரக்கர் - 4849

காயத்தால் பெரியவர், வீரம் கணக்கு இலர், உலகம் கல்லும் ஆயத்தார், அரிதல் தேற்றா மாயத்தார் - 4869

கள்ள வினை வெவ் வலி அரக்கர் - 4902

காலனும் வெருவி ஓடும் அரக்கர் - 4991

அத்திரம் புரை யானை அரக்கன் - 5004

வன்கண் வஞ்சனை அரக்கர் - 5084

வரனும் மாயமும் வஞ்சமும், வரம்பு இல வல்லோர், வயிற்றிடை வாயினர்; வளைந்த நெற்றியில் குயிற்றிய விழியினர்; - 5086

கொடிய நோக்கினர் - 5124

வெருவரு தோற்றத்தர்; விகட வேடத்தர் - 5125

ஆலமே உருவு கொண்டனைய மேனியர் - 5126

கரி, பரி, வேங்கை, மாக் கரடி, யாளி, பேய், அரி, நரி, நாய் என அணி முகத்தினர்; வெரிந் உறு முகத்தினர்; விழிகள் மூன்றினர்; புரிதரு கொடுமையர்; புகையும் வாயினர் - 5127

கரு நிறத்து அரக்கியர் - 5131

முறையின் நீங்கினார் - 5442

தாடகைக்கு இரட்டி எறுழ் வலி தழைத்த தகைமையர், தட வரை பொறுக்கும் சூடகத் தடக் கை, சுடு சினத்து, அடுபோர், அரக்கியர் - 5163

புன் தொழில் அரக்கர் - 5201

நகை இலா முகத்து, பேழ் வாய், வெஞ்சினத்து அரக்கிமார் - 5219

மின் நேர் எயிற்று வல் அரக்கர் - 5339
நெடு வஞ்சகர் - 5350
அந்தம் இல் அரக்கர் குலம் - 5353
ஆலம் அன்னவர் - 5357
நாண் இல் அரக்கியர் - 5360
நன்று ஆம் நல்வினை நல்லோரைத் தின்றார் - 5388
வஞ்சக வடிவான அரக்கர் - 5390
புளிக்கும் கண்டகர் - 5397
புரை உறு புன் தொழில் அரக்கர் - 5402
ஈனம் உறும் பற்றலர் - 5430
பொய்ம் முறை அரக்கர் - 5472
நானிலம் அதனில் உண்டு போர் என நவிலின் அச்சொல், தேனினும் களிப்புச் செய்யும் சிந்தையர் - 5492
யானையும் பிடியும் வாரி இடும் பில வாயர், கொதிக்கும் கண்ணர் - 5495
'வரைகளை இடறுமின்' என்றால், 'மறி கடல் பருகுமின்' என்றால், 'இரவியை விழவிடும்' என்றால், 'எழு மழை பிழியுமின்' என்றால், 'அரவினது அரசனை, ஒன்றோ, தரையினொடு அரையுமின்' என்றால், 'தரையினை எடும், எடும்' என்றால், ஒருவர் அது அமைதல் சமைந்தார் - 5505
வெஞ் செரு வினைத்து எழும் வெள் எயிற்று அரக்கர் - 5539
மேவும் வெஞ் சினத்து அரக்கர் - 5540
வில் மறைக் கிழவர்; நானா விஞ்சையர்; வரத்தின் மிக்கார்; வன் மறக் கண்ணர்; ஆற்றல் வரம்பு இலா வயிரத் தோளார்; தொல் மறக் குலத்தர்; தூணி தூக்கிய புறத்தர்; மார்பின் கல் மறைத்து ஒளிரும் செம் பொன் கவசத்தர்; கடுந்தேர் ஆட்கள் - 5560
பொரு திசை யானை ஊரும் புனிதனைப் பொருவும் பொற்பர்; சுரிபடைத் தொழிலும், மற்றை அங்குசத் தொழிலும் தொக்கார்; நிருதியின் பிறந்த வீரர் நெருப்பு; இடை பரப்பும் கண்ணர்; பரிதியின் பொலியும் மெய்யர் படு மதக் களிற்றின் பாகர் - 5561
கொல் இயல் அரக்கர் - 5566
மலைகளை நகும் தட மார்பர்; மால் கடல் அலைகளை நகும் நெடுந் தோளர்; அந்தகன் கொலைகளை நகும் நெடுங் கொலையர்; கொல்லன் ஊது உலைகளை நகும் அனல் உமிழும் கண்ணினார் - 5623
ஆழிப் பொரு படை நிருதப் பெரு வலி அடலோர் - 5697
ஆண்மைத் தீய வாள் நிருதர் - 5723
நாயே அனைய வல் அரக்கர் - 5931
கற்றிலா அரக்கர் - 5936
கூற்றை விழுங்குவார் - 5966
நீண்ட வாள் அரக்கர் - 6015
கொற்றைக் கார் நிறத்து அரக்கர் - 6057
ஈரம் இல்லா நிருதர் - 6066
திண்ணிய அரக்கர் - 6104
வெம்பு இகல் அரக்கர் - 6117
ஈசன் அருள் செய்தனவும், ஏடு அவிழ் மலர்ப் பேர் ஆசனம் உவந்தவன் அளித்தனவும், ஆய பாசம் முதல் வெம் படை சுமந்து, பலர் நின்றார் - 6129
வேதமும் வேள்வியும் மயக்கி, வேதியர்க்கு ஏதமும் இமையவர்க்கு இடரும், ஈட்டிய பாதகர் - 6436
தீத் தொழில் அரக்கர்தம் மாயச் செய்வினை வாய்த்துளர் - 6456
அற வினை இறையும் இல்லா அறிவு இலா அரக்கன் - 6490
வார் கெழு கனை கழல் அரக்கர் - 6530
அறப் பெரும் பகைஞர்கள் - 6542
கிங்கரப் பெயர்கிரி வேல் அவுணர் - 6576
தா நெடுந் தீமைகள் உடைய தன் மையார் மா நெடுங் கடலிடை மறைந்து வைகுவார் தூ நெடுங் குருதி வேல் அவுணர் - 6631
புலையின் வாழ்க்கை அரக்கர் - 6704
கதிர்க் கொடுங் கண் அரக்கர் - 7040
விதன வெங் கண் இராக்கதர் - 7048
சாவகர் - 7060
கார் நிறத்து அண்ணல் வாள் அரக்கர் - 7119
எறி படை அரக்கர் - 7163
மலை உறப் பெரியோர் ஆய வாள் எயிற்று அரக்கர் - 7289
யாதுதானர் - 7446
மறக் கொடுந் தொழில் அரக்கர்கள் - 7495
வெங் கண் வெள் எயிற்று அரக்கர் - 8352
மின்னும் வெள் எயிற்று அரக்கர் - 8353
வயவர் - 8361
அரக்கர் பண்ணை - 8486
தண்ட வாள் அரக்கர் பாவச் செய்கை, புலையர் - 8694
வெம்பு போர் அரக்கர் - 8778
காப்பு உறு படைக் கைக் கள்வ நிருதர் - 8833
ஆலியின் மொக்குள் அன்ன அரக்கர் - 8846
அயில் எயிற்று அரக்கர் - 9170
சாகத் தீவினின் உறைபவர், தானவர் சமைத்த யாகத்தில் பிறந்து இயைந்தவர், தேவரை எல்லாம் மோகத்தின் பட முடித்தவர், மாயையின் முதல்வர், மேகத்தைத் தொடும் மெய்யினர் - 9256

குசையின் தீவினின் உறைபவர், கூற்றுக்கும் விதிக்கும் வசையும் வன்மையும் வளர்ப்பவர், வான நாட்டு உறைவார் இசையும் செல்வமும் இருக்கையும் இழந்தது, இங்கு, இவரால்; விசையம்தாம் என நிற்பவர், இவர் - 9257

இலவத் தீவினின் உறைபவர், இவர்கள்; பண்டு இமையாப் புலவர்க்கு இந்திரன் பொன்னகர் அழிதரப் பொருதார்; நிலவைச் செஞ்சடை வைத்தவன் வரம் தர, நிமிர்ந்தார்; உலவைக் காட்டு உறு தீ என வெகுளி பெற்றுடையார் - 9258

அன்றில் தீவினின் உறைபவர், இவர்; பண்டை அமரர்க்கு என்றைக்கும் இருந்து உறைவிடம் என்றிட மேருக் குன்றைக் கொண்டு போய், குரை கடல் இட, அறக்குலைந்தோர் சென்று, 'இத் தன்மையைத் தவிரும்' என்று இரந்திடத் தீர்ந்தோர் - 9259

பவளக் குன்றினின் உறைபவர்; வெள்ளி பண்பு அழிந்து, ஓர் குவளைக் கண்ணி, அங்கு, இராக்கதக் கன்னியைக் கூட, அவளின் தோன்றினர், ஐ - இரு கோடியர்; நொய்தின் திவளப் பாற்கடல் வறள்படத் தேக்கினர், சில நாள் - 9260

கந்தமாதனம் என்பது, இக் கருங் கடற்கு அப் பால் மந்தமாருதம் ஊர்வது ஓர் கிரி; அதில் வாழ்வார், அந்தக் காலத்து அவ் ஆலகாலத்துடன் பிறந்தோர்; இந்த வாள் எயிற்று அரக்கர் எண் இறந்தவர் - 9261

மலயம் என்பது பொதிய மாமலை; அதில் மறவோர் நிலயம் அன்னது சாகரத் தீவிடை நிற்கும்; "குலையும் இவ் உலகு" எனக் கொண்டு, நான்முகன் கூறி, "உலைவலீர்! இதில் உறையும்" என்று இரந்திட, உறைந்தார் - 9262

முக்கரக் கையர்; மூ இலை வேலினர்; முசுண்டி சக்கரத்தினர்; சாபத்தர்; இந்திரன் தலைவர்; நக்கரக் கடல் நால் ஒரு மூன்றுக்கும் நாதர்; புக்கரப் பெருந் தீவிடை உறைபவர் - 9263

மறலியை, பண்டு, தம் பெருந் தாய் சொல, வலியால், புற நிலைப் பெருஞ் சக்கர மால் வரைப் பொருப்பின், விறல் கெடச் சிறையிட்டு, அயன் இரந்திட, விட்டோர்; இறலி அப் பெருந் தீவிடை உறைபவர் - இவர்கள் - 9264

வேதாளாக் கரத்து இவர், "பண்டு புவியிடம் விரிவு போதாது உம்தமக்கு; எழு வகையாய் நின்ற புவனம், பாதாளத்து உறைவீர்" என நான்முகன் பணிப்ப, நாதா (இராவணன்) புக்கு இருந்து, உனக்கு அன்பினால், இவண் நடந்தார் - 9265

நிருதி தன் குலப் புதல்வர்; நின் குலத்துக்கு நேர்வர்; "பருதி தேவர்கட்கு" எனத் தக்க பண்பினர்; பானக் குருதி பெற்றிலரேல், கடல் ஏழையும் குடிப்பார்; இருள் நிறத்தவர்; ஒருத்தர் ஏழ் மலையையும் எடுப்பார் - 9266

பார் அணைத்த வெம் பன்றியை அன்பினால் பார்த்த காரணத்தின், ஆதியின் பயந்த பைங் கழலோர்; பூரணத் தடந் திசைதொறும் இந்திரன் புலரா வாரணத்தினை நிறுத்தியே, சூடினர் வாகை - 9267

மறக் கண் வெஞ் சின மலை என இந் நின்ற வயவர், இறக்கம் கீழ் இலாப் பாதாலத்து உறைகின்ற இகலோர்; அறக் கண் துஞ்சிலன், ஆயிரம் பணந் தலை அனந்தன், உறக்கம் தீர்ந்தனன், உறைகின்றது, இவர் தொடர்ந்து ஒறுக்க - 9268

காளியைப் பண்டு கண்ணுதல் காட்டிய காலை, மூள முற்றிய சினக் கடுந் தீயிடை முளைத்தோர்; கூளிகட்கு நல் உடன்பிறந்தார்; பெருங் குழுவாய் வாள் இமைக்கவும், வாள் எயிறு இமைக்கவும், வருவார் - 9269

பாவம் தோன்றிய காலமே தோன்றிய பழையோர்; தீவம் தோன்றிய முழைத் துணை எனத் தறுகண்ணார்; கோவம் தோன்றிடின், தாயையும் உயிர் உணும் கொடியோர்-சாவம் தோன்றிட வட திசைமேல் வந்து சார்வார் - 9270

சீற்றம் ஆகிய ஐம்முகன், உலகு எலாம் தீப்பான், ஏற்ற மா நுதல் விழியிடைத் தோன்றினர், இவரால்; கூற்றம் ஆகிய கொம்பின் ஐம்பாலிடை, கொடுமைக்கு ஊற்றம் ஆகி, பண்டு உதித்தனர் என்பவர், உவரால் - 9271

காலன் மார்பிடைச் சிவன் கழல் பட, பண்டு கான்ற வேலை ஏழ் அன்ன குருதியில் தோன்றிய வீரர், சூலம் ஏந்தி முன் நின்றவர்; இந் நின்ற தொகையார், ஆலகாலத்தின், அமிழ்தின், முன் பிறந்த போர் அரக்கர் - 9272

வடவைத் தீயினை, வாசுகி கான்ற மாக் கடுவை இட, அத் தீயிடை எழுந்தவர், இவர்; இன மழையைத் தடவ, தீ நிகர் குஞ்சியர் இவர்; உவர் தனித் தேர் கடவ, தீந்த வெம் புரத்திடைத் தோன்றிய கழலோர் - 9273

இனையர் இன்னவர் என்பது ஓர் அளவு இலர் ஐய! நினையவும், குறித்து உரைக்கவும், அரிது; இவர் நிறைந்த வினயமும் பெரு வரங்களும் தவங்களும் விளம்பின், அனைய பேர் உலகம் ஆயிரத்து அளவினும் அடங்கா - 9274

அறத்தைத் தின்று, அருங் கருணையைப் பருகி, வேறு அமைந்த மறத்தைப் பூண்டு வெம் பாவத்தை மணம் புணர் மணாளர், நிறத்துக் கார் அன்ன நெஞ்சினர் நெருப்புக்கு நெருப்பாய் புறத்தும் பொங்கிய பங்கியர், காலனும் புகழ்வார் - 9304

நீண்ட தாள்களால் வேலையைப் புறம் செல நீக்கி, வேண்டும் மீனொடு மகரங்கள் வாயிட்டு விழுங்கி தூண்டு வான் உரும் ஏற்றினைச் செவிதொறும் தூக்கி, மூண்ட வான் மழை உரித்து உடுத்து, உலாவரும் மூர்க்கர்; - 9305

மால் வரைக் குலம் பரல் என, மழைக் குலம்
சிலம்பா கால் வரைப் பெரும் பாம்பு கொண்டு
அசைத்த பைங்கழலார்; மேல் வரைப்பு அடர்
கலுழன் வன் காற்று எனும் விசையோர்; நால்
வரைக் கொணர்ந்து உடன் பிணித்தால்
அன்ன நடையார்; - 9306

உண்ணும் தன்மைய ஊன் முறை தப்பிடின்,
உடனே மண்ணில் நின்ற மால் யானையை
வாயிடும் பசியார்; தண்ணின் நீர் முறை தப்பிடின்,
தடக் கையால் தடவி, விண்ணின் மேகத்தை
வாரி, வாய்ப் பிழிந்திடும் விடாயர்; - 9307

உறைந்த மந்தரம் முதலிய கிரிகளை உருவ
எறிந்து, வேல் நிலை காண்பவர், இந்துவால்
யாக்கை சொறிந்து, தீர்வு உறு தினவினர்;
மலைகளைச் சுற்றி அறைந்து, கற்ற மாத்
தண்டினர்; அசனியின் ஆர்ப்பர்; - 9308

சூலம் வாங்கிடின், சுடர் மழு எறிந்திடின், சுடர்
வாள் கோல வெஞ் சிலை பிடித்திடின், கொற்ற
வேல் கொள்ளின் சால வன் தண்டு தரித்திடின்,
சக்கரம் தாங்கின் காலன், மால், சிவன், குமரன்
என்று இவரையும் கடப்பார்; - 9309

ஒருவரே வல்லர், ஓர் உலகத்தினை வெல்ல;
இருவர் வேண்டுவர், ஏழ் உலகத்தையும்
இறுக்க; திரிவரேல், உடன் திரிதரும், நெடு
நிலம்; செவ்வே வருவரேல் உடன் கடல்களும்
தொடர்ந்து, பின் வருமால் - 9310

தசும்பின் பொங்கிய திரள் புயத்து அரக்கர் - 9319

அரக்கர்தான் அவுணரேதான் - 9356

வேக நெடும்படை அரக்கர் - 9396

யாப்புறு காதலர் இராவணற்கு - 9481

எல்லோரும் இராவணனே அனையார் வெல்லா
உலகு இல்லவர் மெய் வலியார் - 9492

தீ மொய்த்த அனைய செங் கண் அரக்கர் - 9527

தாமசத்தினில் பிறந்தவர், அறம் தெறும் தகையர்- 9819

என் பக, தினை அளவையும் கருணையோடு
இசைந்த நட்பு அகத்து இலா அரக்கர் - 10133

அரக்கரில் பூசுரர்

இந்திரசித்து பிரம்மாத்திரம் ஏவ துணை நின்றோர்.

மூல வேள்விக்கு வேண்டுவ கலப்பைகள்
முறையால் கூலம் நீங்கிய இராக்கதப்
பூசுரர் கொணர்ந்தார் - 8602

அரசர்

அரக்கர்களை வேரறுக்கும் முடிவோடு திருமால் அவதரித்தது, கோசல வேந்தன் தயரதன் மைந்தனாக ஆதலின் அரச வாழ்க்கையையும் பல நாட்டு அரசர் பற்றியும் காப்பியம் பேசுகிறது. தம் நாட்டு மக்களை உயிராகக் கொண்டு அவர்களுக்கு வேண்டுவன நல்கும் நல்லாட்சி தரல் இவர் கடமையாக வலியுறுத்தப்படுகிறது. இதற்கு இடையூறாக அமைவோரை அழித்தலும் அறநெறியில் செங்கோலாட்சி செய்யும் தூயவனின், வல்லவனின் பொறுப்பாக உணர்த்தப்படுகிறது. அறம் வெல்லும் பாவம் தோற்கும் எனும் காப்பியப் பாவிகத்தைச் சிறப்பிப்பதாக அரசர் பற்றிய கருத்துகள் அமைகின்றன.

பல் நூல் விதங்களால், அவன் மெல்லென
மெல்லென விளம்பும் இதங்கள் கொள்(கிலா)
இறைவன் - 816

கங்கர், கொங்கர் கலிங்கர், குலிங்கர்கள்,
சிங்களாதிபர், சேரலர், தென்னவர், அங்க
ராசர், குலிந்தர், அவந்திகர், வங்கர்,
மாளவர், சோளர், மராடர் - 1109

மான மாகதர், மச்சர், மிலேச்சர்கள், ஏனை வீர
இலாடர், விதர்ப்பர்கள், சீனர், தெங்கணர்,
செஞ்சகர், சோமகர், சோனகேசர், துருக்கர்,
குருக்கள் - 1110

ஏதி யாதவர், ஏழ் திறல் கொங்கணர், சேதி ராசர்,
தெலுங்கர், கரு நடர், ஆதி வானம் கவித்த
அவனி வாழ் சோதி நீள் முடி மன்னர் - 1111

கைப் போதகம் நிகர் காவலர் - 1264

நர பாலர் - 1283

வையம் மன் உயிர் ஆக, அம் மன் உயிர்
உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு,
ஐயம் இன்றி, அறம் கடவாது, அருள் மெய்யில்
நின்றபின், வேள்வியும் வேண்டுமோ? - 1423

இனிய சொல்லினன்; ஈகையன்; எண்ணினன்;
வினையன்; தூயன்; விழுமியன்; வென்றியன்;
நினையும் நீதிநெறி கடவான் எனில்,
அனைய மன்னற்கு அழிவு உண்டாம்கொலோ? - 1424

சீலம் அல்லன நீக்கி, செம் பொன் துலைத்
தாலம் அன்ன தனி நிலை தாங்கிய ஞால
மன்னற்கு, நல்லவர் நோக்கிய காலம் அல்லது
கண்ணும் உண்டாகுமோ? - 1425

ஓர்வின் நல் வினை ஊற்றத்தினார் உரை, பேர்வு
இல் தொல் விதி பெற்று உளது என்று அரோ,
தீர்வு இல் அன்பு செலுத்தலின், செவ்வியோர்,
ஆர்வம் மன்னவற்கு ஆயுதம் ஆவதே - 1426

விரி இருட் பகையை ஓட்டி திசைகளை வென்று
மேல்நின்று, ஒரு தனித் திகிரி உந்தி, உயர்
புகழ் நிறுவி, நாளும் இரு நிலத்து எவர்க்கும்
உள்ளத்து இருந்து, அருள்புரிந்து வீந்த
செரு வலி வீரன் - 1973

வாய்மை சால் அறிவின் வாய்த்த மந்திர மாந்தரோடும், தீமை தீர் ஒழுக்கின் வந்த திறத் தொழில் மறவரோடும், தூய்மை சால் புணர்ச்சி பேணி, துகள் அறு தொழிலை ஆகி, சேய்மையோடு அணிமை இன்றி, தேவரின் தெரிய நிற்றி - 4122

பகையுடைச் சிந்தையார்க்கும், பயன் உறு பண்பின் தீரா நகையுடை முகத்தை ஆகி, இன் உரை நல்கு, நாவால் - 4123

செய்வன செய்தல், யாண்டும் தீயன சிந்தியாமை, வைவன வந்தபோதும் வசை இல இனிய கூறல், மெய்யன வழங்கல், யாவும் மேவின வெ்கல் இன்மை, உய்வன ஆக்கித் தம்மோடு உயர்வன; உவந்து செய்வாய் - 4125

நாயகன் அல்லன்; நம்மை நனி பயந்து எடுத்து நல்கும் தாய் என, இனிது பேணி, தாங்குதி தாங்குவாரை; ஆயது தன்மையேனும், அற வரம்பு இகவாவண்ணம், தீயன வந்தபோது, சுடுதியால் தீமையோரை - 4128

தண்டம் என்று ஒரு பொருட்கு உரிய தக்கரைக் கண்டவர், பொறுப்பரோ, உலகம் காவலர்? .... வணங்கி வாழ்வரோ, விண்டவர் உறு வலி அடக்கும் வெம்மையோர்? - 6088

அரம்பையர்

தேவமகளிர். இராவணன் அவையில் பணிப் பெண்டிராக அவனால் இழிவு செய்யப்பட்டவர்.

அரம்பையர் - 481

பாடகத்து அரம்பையர் - 2993

பாசிழை அரம்பையர் - 4219

வானத்து அம்சொல் இன்சுவை அரம்பையர் - 6872

கரிய கொண்டலை கருணை அம் கடலினை காணப் பெரிய கண்கள் பெற்று உவக்கின்ற அரம்பையர் - 6900

ஆடவர்

மகளிருக்குக் கற்பு போன்று ஆடவருக்கு வீரம் பேசப்பட்டுள்ளது. மங்கையர் போன்று ஆடவரும் மலர்களாலும் அணிகலன்களாலும் தம்மை அழகு செய்துள்ளனர். வில், வேள், வாள், குந்தம் போன்ற படைகளைக் கைக் கொண்டுள்ளனர். மைந்தர், குரிசில், தோன்றல், வீரர், கொழுநர். . . . எனப் போற்றப்படுகின்றனர்.

அதிர்கழல் ஒழிப்பன; அயில் இமைப்பன, கதிர்மணி அணி வெயில் கால்வ; மான்மதம் முதிர்வு உறக் கமழ்வன; முத்தம் மின்னுவ; மதுகரம் இசைப்பன; மைந்தர் ஈட்டமே - 152

பயம் கெழு குமரர் வட்டு ஆட்டு ஆடு இடம் - 498

வெஞ்சினம் உருவிற்று என்னும் மேனியர், வேண்டிற்று ஈயும் நெஞ்சினர், ஈசன் கண்ணில் நெருப்பு உறா அனங்கன் செஞ்சிலைக் கரத்தர் . . . மைந்தர் தம் குழாங்கள் கண்டார் - 499

வில்லினர், வாளினர், வெறித்த குஞ்சியர் கல்லினைப் பழித்து உயர் கனகத் தோளினர் வல்லியின் மருங்கினர் மருங்கு, மாப்பிடி புல்லிய களிறு என மைந்தர் போயினார் - 749

சுழியும் குஞ்சி மிசைச் சுரும்பு ஆர்த்திட பொழியும் மாமத யானையின் போகின்றான் - 764

ஓர் காளை - 765

சேடகத் தடக்கையாலே, கிளர் ஒளிவாளும் பற்றி சூடகத்தளிர்க்கை,மற்றைச் சுடர்மணிந்தடக்கை பற்றி ஆடகத்து ஓடையானை அழி மதத்து இழுக்கல் ஆற்றில் பாடகக் காலினாரை, பயப்பயக் கொண்டு போனார் - 783

அருக்கனில் ஒளிநம் மேனி ஆடவர் - 787

மிதிக்க நிமிர் துளியின் விளக்கம் அறு மெய்யை, சுதைக் கண் நுரையைப் பொருவு தூசு கொடு, தூய்தர உதிர்த்தனர் இளங்குமரர் - 828

தாள் இணை கழல்கள் ஆர்ப்ப, தார் இடை அளிகள் ஆர்ப்ப வாள்புடை இலங்க, செங்கேழ் மணி அணி வலையம் மின்ன . . .திரிந்தனர் மைந்தர் எல்லாம் - 842

பெருங்களிறு ஏயும் மைந்தர் - 859

வம்பு அவிழ் அலங்கல் மார்பின் மைந்தர் - 894

தண்டுபோல் புயத்தான் - 927

அனகர் - 929

ஆழித்திடம் புயம் பொலிய ஆண்டு ஓர்தார் கெழு வேந்தன் நின்றான் - 940

குரிசில் - 941

தோன்றல் - 942

வேழவில் தடக்கை வீரர் - 943

காதல் கொழுநர் - 947

தார் அணி தோளினான் - 953

தாழ நின்ற ததை மலர்க்கையினால் ஆழிமன் ஒருவன் - 956

வனைஅருங் கழல் மைந்தர் - 958

வாள் உழவன் - 998

வாள் தொழில் மைந்தர் - 1000

நறை கமழ் அலங்கல் மாலை நளிர் நறுங் குஞ்சி மைந்தர் - 1017

தூ அகல் இல் குந்த மற மைந்தர்கள் - 1857

இராவணன் மனைவியர்

இராவணனுக்கு மண்டோதரி, தானிமாலி எனப் பெயர் சுட்டப்பட்டோர் மட்டுமின்றி அரக்கியர், விஞ்சை மகளிர் என எண்ணற்றோர் உரிமை மகளிராகச் சுட்டப்படுகின்றனர்.

கிள்ளைபோல் மொழியார் - 3143

அனந்தம் நூறாயிரம் அரக்கர் மங்கையர் - 9929

இயக்கியர், அரக்கியர், உரகர் ஏழையர்
மயக்கம் இல் சித்தியர், விஞ்சை மங்கையர் - 9936

இருவர்

இந்திரசித்துவுடன் வந்த போர் வீரர்; தூமிராட்சன், மாபக்கன் என அழைக்கப்படுபவர்.

சீர்த்தடம் பெருஞ்சில்லி அம்தேரினைக் காத்து
நின்ற இருவரைக் கண்டனன். ஆர்த்த தம்
பெருஞ்சேனை கொண்டு, அண்ட மேல்
ஈர்த்த சோரிப் பரவை நின்று ஈத்தலால் - 8156

உரகர் (பாதாள உலகத்தார்)

உரகர் - 1048

நாகர் கோதையர் - 1132

நாகியர் - 4860

செங்கண் நாகர் - 4884

நரம்பினும் இனிய சொல் நாக நாடியர் - 5820

அரவின் நாட்டிடை மகளிர் - 6193

நஞ்சும் அஞ்சும் விழி நாகியர் - 6872

ஒற்றர்

பக்திக் காப்பியமாயினும் பாட்டுடைத் தலைவனும் எதிர்த் தலைவனும் கதைத் தொடர்புடைய பலரும் அரசர்களாக அமைகின்றனர். எனவே அரசு உறுப்புகளுள் ஒருவரான ஒற்றரும் காப்பியக் களனுள் இடம் பெறுகின்றனர். உரோமபதன் நாட்டுக்குத் தயரதன் வருகையை முதற்கண் அவனது ஒற்றர்களே அவனுக்குத் தெரிவிக்கின்றனர். செயல்திறன் சிறப்பாக வேண்டப்படும் இவர்கள் தம் உரு மறைத்து மறைந்து ஒழுகுவர். பிடிபடும் நிலையில் தண்டிக்கப்படுதலும் உண்டு. இராவணன் ஒற்றர் குரங்குகளாக உருமாறி வானரப் படையுள் கலந்து ஒற்றறிகையில் பிடிபட்டனர். இராமனின் தூதராக அவன் செய்திகளை இராவணனுக்குக் கொண்டு சென்றனர்.

ஒற்றர் - 237

இலங்கை வேந்தன் ஏவ, ஒற்றர் வந்து அளவு
நோக்கி, குரங்கு என உழல்கின்றார் - 6768

வினையம் மிக்(கோர்) - 6778

கணிதர்

தயரதன் அவையில் இடம் பெறுபவர். அரசர்களுக்கு எவ்வினைக்கும் கால, நேரம் கணித்துத் தருபவர். சோதிடக் கலையிலும் வல்லவர். நிமித்தங்களுக்கும் பயன் சொல்பவர். இவர்தம் அறிவுரைப்படியே அரசர் எச்செயலையும் செய்வர்.

உரை தெரி கணிதர் - 1398

சோதிட வித்தகர் - 1439

கணித நூல் உணர்ந்த மாந்தர் - 1572

குசத்துவன் மகளிர்

சனகனின் தம்பி மக்களாகிய இவர்கள் மூவரையும் இராமன் தம்பியர் மூவரும் மணந்தனர். இராமர் - சீதை மணநிகழ்வின் பின் இது நிகழ்ந்தது.

பரதன் - மாண்டவி, இலக்குவன் - ஊர்மிளை , சத்துருக்கன் - சுருத கீர்த்தி என இத்திருமண உறவு அமைந்தது.

குசத்துவப் பேர் நெய்ந் நிறை வேலவன்
மங்கையர் மைந்நிறை கண்ணியர், வான்
உறை நீரார், மெய்ந் நிறை மூவர் - 1260

சான்றோர்

அறவாழ்க்கையின் வழிகாட்டிகள். உலகியல் உணர்ந்தோர். பல்துறைப் புலமையர். பிறரையும் நலம் பயக்கும் நூல் நெறியில் செலுத்துபவர். நன்மை தீமை தெரிந்து இம்மை மறுமைக்குத் துணையாயவற்றை அறிவுறுத்தும் அறிவுக்கண் பெற்ற அறிஞர்.

மும்மை புரி வன் கயிறு கொய்து, செயல்
மொய்ம்பால் தம்மையும் உணர்ந்து தரை
கண்டு, விரைகின்ற, அம்மையினொடு
இம்மையை அறிந்து நெறி செல்லும்
செம்மையவர் - 833

நணுகவும் அரியதா நடக்கும் ஞானத்தர் - 1218

நூற்கடல் அன்னவர் சொற் கடன் நோக்கி - 1257

ஓர்வின் நல் வினை ஊற்றத்தினார் உரை பேர்வு
இல் தொல் விதி பெற்று உளது - 1426

சாதுகை மாந்தர் - 1560
உலகத்து எங்கும் உள்ளவை உணர்ந்தார் உள்ளம் - 1595
நெறியோர் - 1736
நெறி அறிஞர் - 1811
திருந்தினார் - 1952
சிறந்தார் - 2188
அறிஞர் - 2243
இருமை நோக்குறும் சான்றவர் - 2463
நெறிநின்றார் - 2571
உறுவது தெரிவோர் - 2629
வீட்டினுக்கு அமைவது ஆன மெய்ந்நெறி வெளியிற்று ஆகக் காட்டுறும் அறிஞர் - 3705
துறையோர் - 4119
பொரு அரும் புலமை நூலோர் - 4130
ஆன்று அமை கேள்வியர் - 6079
சிட்டர் - 6123
ஒளி உற உயர்ந்தவர் - 6457
கருணையோர் - 6515
புகுதி கூர்ந்துள்ளார் - 7237
மெய்ம்மை உற்றவர் முற்றும் ஓர்ந்தார் - 7304
செஞ்சொல் அறிவாளர் - 8264
முதியார் உணர் வேதம் - 8681
நெறி கலந்தோர் - 8745
பேர் அருளாளர் - 9579
ஞானக் கண் உடையார் - 9831
நூல் இயல் தரும நீதி நுனித்து அறம் குணித்த மேலோர் - 10124
நல் நெறி அறிவு சான்றோர், நான்மறைக் கிழவர், மற்றைச் சொல் நெறி அறிவு நீரார், தோம் அறு புலமைச் செல்வர், பல் நெறிதோறும் தோன்றும் பருணிதர், பண்பின் கேளிர், மன்னவர்க்கு அரசன் பாங்கர், மரபினால் சுற்றமன்னோ - 10343

சிந்தர்

உடல் வளர்ச்சியில் குறைபாடுடையோர்; குறளையரை விட நெடியோர் சிந்தர். அரண்மனைப் பணியில் இடம்பெற்றுள்ளவர். சீதை இராமன் திருமணத்திற்காக அயோத்தி சென்றோருடன் சென்றவர்.

வாமமேகலையாரிடை, வாலதி பூமி தோய் பிடி சிந்தரும் போயினார் காமர் தாமரை நாள் மலர் கானத்துள் ஆமைமேல் வரும் தேரையின் ஆங்கு அரோ - 770
கூனொடு குறளும் சிந்தும் சிலதியர் குழாமும் - 797

சேனைத் தலைவர் ஐவர்

இராவணனின் படைத்தலைவர். பஞ்ச சேனாபதியர் என்றழைக்கப்படுவர். அசோகவனத்துள் அனுமனைப் பிடிக்க வந்து அவனால் அழிக்கப் பட்டவர்.

சேனைத் தலைவர் ஐவர் - 5600
ஐவரும் பெரும் பூதம் ஓர் ஐந்தும் ஒத்து இயைந்தார் - 5615
வலம் தரு தோளவர் ஐவரும் வந்தார் - 5647
தீயவர் - 5653
வெஞ்சின அரக்கர் ஐவர் - 5664
காலன் உட்கும் ஐவர் - 5665
தந்திரத் தலைவர் - 5677
சேனைக் காவலர் ஓர் ஐவர் உளர் பண்டு தேவர் வானைக் காவலும் மானமும் மாற்றிய மறவர் - 6578

தயரதன் தேவியர் (அறுபதினாயிரவர்)

தயரதனின் மனைவியர். அவன் இறந்தபின் உடன்கட்டை ஏறியவர்.

அறுபதினாயிரர் அரசன் தேவியர் - 1779
இராமன் அல்லது, மன் உயிர் புதல்வரை மற்றும் பெற்றிலார் - 1780
தண்டலைக் கோசலைத் தலைவன் மாதர் - 1784
மாழை உண் கண் தேவியர் - 1908
களங்கம் நீத்த மதி முகத்தார் - 1910

திசைக் காவலர்

எண் திசைக் காவலர் - 6194
திசை காவலர் எண்மரும் - 6795
நெடுந் திசை காவலர் - 7889
மூவகை உலகும் சூழ்ந்த முரண் திசை முறையின் காக்கும் காவலர் எண்மர் - 8755

தூதுவர்

இரு பெரும் வேந்தர்க்கிடையே நிகழும் கதையை அடிப்படையாகக் கொண்டதாதலின் இதனுள் தூதர்களின் பங்கும் சிறப்பாக அமைகிறது. நல்ல கல்வியும், அரசன் கூறியவற்றைத் தெளிவாக எடுத்துரைக்கும் திறனும் உடையவர். தன் தலைவனுக்கும் கூறும்

செய்திக்கும் உண்மையானவர். இராவணன் தூதுவர் போர் முடிவுகளை உடனுக்குடன் அவனுக்குத் தெரிவிப்பவராக விளங்கினர்.

நற்செய்தியுடன் தூதாக வருபவர்களுக்குத் தகவல் பெற்றோர் பரிசளிப்பதை, இராமனின் திருமணச் செய்தி கொணர்ந்த சனகன் தூதருக்குத் தயரதன் பொன் திணி கலங்களும் தூசும் அளிப்பதில் காணலாம். பரதனும் அயோத்தியிலிருந்து தன்னிடம் வந்த தூதருக்குப் பரிசளித்தான். மிகவும் துன்பகரமான செய்தி தரும் தூதர், அரசனின் சினத்திற்கும் ஆளாகின்றனர். இந்திரசித்தின் மறைவைத் தெரிவித்த இராவணன் தூதர் அவனால் கொல்லப்பட்டனர். இவற்றால் தூதர் பணி இன்றியமையாதது என்பதுடன் துன்பம் பல சூழ்ந்தது என்பதும் அறியப்படுகிறது.

தூதுவர் - 247
நேர் துன்றிய கனை கழல் தூதர் - 737
உடன் புலந்தவர்க்கு உதவி செய் புதிய தூது - 963
பொரு இல் தூதுவர் - 2102
பொய் இலார் - 2102
மறைத்த புரை தேர்வுற்று
ஏதம் இல் அறத் துறை நிறுத்திய இராமன் தூதர் - 4573
பூதலப் பரப்பின், அண்டப் பொகுட்டினுள், புறத்துள், பொய்தீர் வேதம் உற்று இயங்கு வைப்பின், வேறு வேறு இடத்து வேந்தர், மாதரைக் கொலை செய்தார்கள் உளர் என வரினும், வந்த தூதரைக் கொன்றுளார்கள் யாவரே, தொல்லை நல்லோர்? - 5977
பகைப் புலன் நணுகி, உய்த்தார் பகர்ந்தது பகர்ந்து, பற்றார் மிகைப் புலன் அடக்கி, மெய்ம்மை விளம்புதல் விரதம் பூண்ட தகைப் புலக் கருமத்தோர் - 5918
வாய்மொழியே புகல்வான் - 7772
ஈறு இன்று ஓதிய கல்வியாளர் - 8294
பொய்யார் தூதர் - 8671
ஆதரத் தூதர் - 10315

நால்வர் (1)

இராவணன் அவையில் அங்கதனை எதிர்த்து அவனால் அழிக்கப்பட்டவர்.

பற்றுமின், கடிதின், நெடும் பார் மிசை எற்றுமின் என நால்வரை ஏவினான் - 7012

நால்வர் (2)

கும்பகருணனை எழுப்ப முயன்று தோற்ற கிங்கரர் நால்வர்.

நால்வர் சென்றார்; தென் திசைக் கிழவன் தூதர் தேடினர் திரிவர் என்ன, குன்றினும் உயர்ந்த தோளான் கொற்ற மாக் கோயில் புக்கார் - 7314
கிங்கரர் நால்வர் - 7315

நால்வர் (3)

இராமன் முடிசூடப் போவதைக் கோசலைக்கு அறிவிக்கச் சென்ற மங்கையர்.

ஆண்டை அந்நிலை ஆக அறிந்தவர் பூண்ட காதலர், பூட்டு அவிழ் கொங்கையர் நீண்ட கூந்தலர், நீள் கலை தாங்கலர் ஈண்ட ஓடினர், இட்டு இடை இற்றிலர் - 1399
மாடு சென்றனர் மங்கையர் நால்வரே - 1400
தொண்டை வாயினிர் - 1401
நின் நெடும் புதல்வன் தனை, நேமியான் தொல் நெடும் முடி சூட்டுகின்றான் என்றார் - 1402

படை வீரர்

அரசர் வலிமைக்குத் தோள்கொடுப்பவர், நாட்டைக் காப்பவர்.

அனிகம் - 573
வயப்புடைப் படை - 574
தீமை தீர் ஒழுக்கின் வந்த திறத் தொழில் மறவர் - 4122
வாலி சேனை - 4212
உரைசெய் வானர வீரர் உவந்து உறை அரசர் வீதி - 4312
அடு புலி அனைய வீரர் - 5737
புக்க படைஞர் புடை காப்போர் புணர்க் கணக்கர் - 5928
உலகு சேரினும் பிசை தொழில் மறவர் - 6080
கூற்றினும் கொலை வல்லார் - 6268
சின வேழக் கன்று புல்லிய கோள் அரிக் குழு எனக் கனல்கின்ற தறுகண்ணார் - 6269
வயவர் - 6272
இகல் வெய்யோர் - 6275
வெய்யார் - 6304
விடம் அல விழி எனும் வெகுளிக் கண்ணினர் - 6543
தளம் வலி சேனை - 6677
செரு மலி வீரர் - 6837

நஞ்சு கக்கி எரி கண்ணினர், நாமக் கஞ்சுகத்தர், கதை பறிய கையர், மஞ்சு உகக் குமுறு சொல்லினர், வல் வாய்க் கிஞ்சுகத்த கிரி ஒத்தனர் - 6873

அலகு இலா அரக்கன் சேனை, அரியின் தானை - 6973

வென்றி வானர வீரர் - 7109

கனைகழல் அரக்கர் தானை - 7298

வெற்றியர் - 7659

தகைப் பெருங் கவியின் தானை - 7826

குரங்கு எனப் பெயர் கொடு திரியும் கூற்றம் - 8046

திறம் தரு கவியின் சேனை - 8099

கவிக் குல வீரச் சிங்கம் அன்ன போர்த் தலைவரில் தலைவர் - 8352

உள் அழியா வேகத்து அடல்வீரர் - 8403

நெடு மைந்தர் - 8481

மாசு அறு தானை மர்க்கட வெள்ளம் - 8860

விறலோர், மிகு திறலோர் - 9095

பேரர் என்பார்கள் ஆகும் பெற்றியின் பெற்றித்து ஆமே சூரர் என்று உறைக்கற் பாலார் துஞ்சும் போது உணர்வின் சோராத் தீரர் - 9145

ஓத வேலையின் நாயகர் (இராவணன் படைத்தலைவர்) - 9278

மிடலோர் - 9484

பல் படை நூல் வல்லார் - 9487

உரமும் கல்வியும் உடையவன் செரு - 9542

பணியாளர்

அரசர் குல மகளிருக்குத் துணையானவர்

தாயரின் பரி சேடியர் - 560

சிலதியர் குழாம் - 799

தாதியர் - 1118

தாதிமார் - 2387

பப்பரர்

பாரம் சுமப்பவர்.

அரத்த நோக்கினர் அல் திரள் மேனியர் பரித்த காவினர் பப்பரர் ஏகினார் - 768

பருவத்தேவர்

இலங்கையின் பெருஞ்சோலையைப் பாதுகாக்கும் காவலராகிய ஆறு பருவங்களுக்கும் உரிய தேவர்.

நீர் இடு துகிலர்; அச்ச நெருப்பிடு நெஞ்சர்; நெக்குப் பீர்டும் உருவர்; தெற்றிப் பிணங்கிடு தாளர்; பேழ்வாய் ஊர் இடு பூசல், ஆர உளைத்தனர்; ஓடி உற்றார் பார் இடு பழுவச் சோலை பாரிக்கும் பருவத் தேவர் - 5483

பொதுமக்கள்

கம்பர் தம் காவியத்துள் பொதுமக்களுக்கு மிகச் சிறந்ததோரிடம் அளித்துள்ளார். இராமன் திருமணம், இராமனுக்கு முடி சூடுவதாகத் தயரதன் அறிவித்த சூழல், பின் காடேகல் போன்ற காப்பியத்தின் முதன்மை நிகழ்வுகளில் இவர்தம் பங்கேற்பும், மனநிலையும், கருத்துக் கணிப்பும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. பொதுமக்களின் உளம் காட்டும் உளவியலறிஞராகக் கம்பர் இங்கு வெளிப்படுகிறார். இராமன், சீதை, தயரதன், சனகன் முதலானோரின் மாண்பும் தம் மக்களிடம் அவர்கள் கொண்டுள்ள செல்வாக்கும் காப்பியப் பின்னிகழ்வுகளும் இன்ன பிறவும் பொதுமக்கள் கூற்றாக முன்மொழியப்படுகின்றன. அவற்றின் பெருமை கருதி ஒரு சில சான்றிற்காக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அரசாட்சி நிகழ்ந்த போதிலும் மக்களுக்கு, எதிர் கருத்துகளை வழங்கக் கூடிய பேச்சுரிமை இருந்ததை இவை காட்டுவதும் அறியத்தக்கது.

வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால் கொள் என முன்பு கொடுப்பதை அல்லால் வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து, இப் பிள்ளை முன் இட்டது பேதைமை என்பார் - 695

முரசு அறைதலும் மானமுதியரும் இளையோரும் விரை செறி குழலாரும் விரவினர் விரைகின்றார் உரை செறி கிளையோரும் உவகையின் உயர்கின்றார் கரை தெரிவு அரிது ஆகும் இரவு ஒரு கரை கண்டார் - 1179

பாகு இயல் பவளச் செவ்வாய் பணைமுலை பரவை அல்குல் தோகையர் குழாமும் மைந்தர் சும்மையும் துவன்றி, எங்கும் ஏகுமின் ஏகும் என்று என்று இடை இடை நிற்றல் அல்லால் போகில; மீளகில்லா பொன் நகர் வீதி எல்லாம் - 1562

உய்ந்தது இவ்வுலகம் என்பார்; ஊழிகாண்கிற்பாய்; என்பார்; மைந்த நீ கோடி எங்கள் வாழ்க்கை நாள் யாவும் என்பார்; ஐந்து அவித்து அரிதின் செய்த தவம் உனக்கு ஆக என்பார்; பைந்துழாய்த் தெரியலாய்க்கே நல்வினை பயக்க என்பார் - 1582

செயல் அருந்தவங்கள் செய்து, இச் செம்மலைத் தந்த செல்வத் தயரதற்கு என்ன கைம்மாறு உடையம் யாம் தக்கது? என்பார் - 1583

தாய் கையில் வளர்ந்திலன், வளர்ந்தது தவத்தால் கேகயன் மடந்தை, கிளர் ஞானம் இவன் ஆள ஈகையில் உவந்த அவ் இயற்கை இது என்றால், தோகை அவள் பேர் உவகை சொல்லல் அரிது என்பார் - 1591

ஆளான் பரதன் அரசு என்பார், ஐயன், இனி மீளான், நமக்கு விதி கொடிதே காண் என்பார்; கோள் ஆகி வந்தவா, கொற்ற முடிதான் என்பார்; மாளாத நம்மின் மனம் வலியார் ஆர்? என்பார் - 1707

ஆதிஅரசன், அருங்கேகயன் மகள் மேல் காதல் முதிர, கருத்து அழிந்தான் ஆம் என்பார்; சீதை மணவாளன் தன்னோடும் தீக் கானம் போதும், அது அன்றேல், புகுதும் எரி என்பார் - 1708

மக்களை மறந்தனர் மாதர்; தாயரைப் புக்க இடம் அறிந்திலர் புதல்வர், பூசலிட்டு உக்கனர்; உயங்கினர், உருகிச் சோர்ந்தனர் துக்கம் நின்று அறிவினைச் சூறையாடவே - 1801

ஆரும் பின்னர் அழுது அவலித்திலர்; சோரும் சிந்தையர், யாவரும் சூழ்ந்தனர்; வீரன் முன் வனம் மேவுதும் யாம் எனா, போரென்று ஒல்லொளி கைம்மிகப் போயினார் - 1836

மகளிர்

ஆடவர் உயிராக உணர்த்தப்படும் மகளிர், அவரால் பாதுகாக்கப்பட வேண்டியவராகவும் சுட்டப்படுகின்றனர். மகளிர் அணிகலனாகக் கற்பு வற்புறுத்தப்படுவதோடு அவர்களுக்குக் கல்வியும், செல்வமும் இன்றியமையாததாகவும் கம்பர் காட்டுவது குறிப்பிடத்தக்கது. ஈதலும், விருந்தயர்தலும் அவர்தம் கடமையாக உணர்த்தப்படுகிறது. உடன் கட்டை ஏறும் கற்புடை மகளிருக்கு அவர் மறைந்தபின் சிறப்பானதொரு புத்துலகமும் காட்டப்படுகிறது.

பெருந் தடங் கண் பிறைநுதலார்க்கு எலாம், பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால், வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும், விருந்தும், அன்றி வளைவன யாவையே? - 67

பொற்பின், நின்றன, பொலிவு; பொய் இலா நிற்பின், நின்றன, நீதி, மாதரார் அற்பின் நின்றன, அறங்கள்; அன்னவர் கற்பின் நின்றன, கால மாரியே - 90

கமல வாள் முக வடிவுடை மடந்தையர் வாழ்த்து எடுப்ப - 254

நகர மாந்தர் - 292

அவனித் திரு, அந் நகர் உறை செனம் - 305

ஏழையர் அனைவரும் - 309

தாதியர், செவிலியர், தாயர், தவ்வையர், மா துயர் உழந்து உழந்து அழுங்கி மாழ்கினர் - 530

டாகினும் தித்தியாநின்ற சொல் சிவந்த வாய்ச்சியர் - 747

ஆடவர் உயிர் - 752

அறல் இயல் கூந்தல், கண் வாள், அமுது உகு குமுதச் செவ் வாய் விறலியரோடு - 791

தெரிவையர், செப்ப அருந் திருவின் நல்லார் - 800

ஒருவு இல் பெண்மை என்று உரைக்கின்ற உடலினுக்கு உயிர் - 2059

தெரிவைமார்க்கு ஒரு கட்டளை எனச் செய்த திரு - 2078

ஆறு தன்னுடன் வரும் அம் சொல் மாதரை ஊறு கொண்டு அலைக்க, தன் உயிர் கொண்டு ஓடினோன் - 2207

அங்கி நீரினும் குளிர, அம்புயத் திங்கள் வாள் முகம் திரு விளங்குற, சங்கை தீர்ந்து, தம் கணவர் பின் செலும் நங்கைமார் புகும் உலகம் நண்ணினார் - 2239

மகளிரின் இரங்கும் நெஞ்சினான் - 2256

மாகதர்

அரசவையில் மங்கலப் பாடல்கள் பாடி இருந்தேத்துபவர்.

மாகதகர்கள் 236

முனிவர்

இராம காதையின் பெரும் பகுதி இராமனின் வன வாழ்க்கையைப் பேசுவதாதலாலும் அரசர்களின் ஆதரவைப் பெற்றவர்களாதலாலும் முனிவர் அதிகமாக இடம்பெற்றுள்ளனர். தவம் செய்தலும் வேள்வி புரிதலும் இவர்தம் பண்பாகிறது. முப்பகை வென்று, ஐம்புலனடக்கி, காமனை வென்ற பெருமைக்குரியவர். எதிர்காலத்தில் நடக்கவிருப்பதையும் அறிந்த அறிவினர். பிறவிப் பிணியறுத்தல் இவர் தம் வாழ்க்கை இலக்கு. இவர்தம் வேள்விக்கும், தவத்திற்கும் இராமன் தன் வன வாழ்க்கையின் போது பாதுகாவலாய் நின்றான். அவனுக்கு இவர்கள் நல்லாசியும் பிறவும் வழங்கினர்.

விரைசுவார் முனிவர் - 99

முனிவரும் ஒக்கும் திண் பொறி அடக்கிய செயலால் - 101

நல் தவத்தினோர்கள் - 115

ஆசு அறும் அரும் தவத்தவர் - 218

நல் பொருள் தரும் முனிவர் - 231

வித்தக முனிவர் - 281

துணி அறு முனிவர் - 295

தா வரும் வினை செற்று, தள்ள அரும் மூவகைப் பகைஅரண் கடந்து, முத்தியில் போவது புரிபவர் - 353
வேத பாரகர் - 614
முப் பகை வென்றார் - 691
ஊக்கம் உள்ளத்து உடைய முனிவரால் காக்கல் ஆவது, காமன் கை வில் - 924
ஆய்ந்து உணர் கேள்வி அருந் தவர் - 1262
பருவரல் இன்பம் என்று இரண்டும் ஒக்க நோக்கிய யோகர் - 1816
இன்புறும் உரை செறி முனிவர் - 1846
சுருதி கற்று உயர் தோ மிலர் - 1934
தபோதனர் - 1935
சுருதியோர் - 1951
புனிதர் - 1984
வினை வென்றோர் - 2017
களிப்பு இல் இந்தியத்து யோகி - 2056
பொய் வணக்கிய மா தவர் - 2079
சடை கொள் சென்னியர், தாழ்வு இலர் - 2080
வினையின் நீங்கிய வேதியர் - 2082
அவித்த ஐம் புலத்தவர் - 2266
பின்னு சடையோர் - 2442
மெய் கொள் வேத மெய்யர் - 2586
பண்டைய அயன் தரு பாலகில்லர், முண்டர், மோனர் - 2633
வேண்டின வேண்டினர்க்கு அளிக்கும் மெய்த் தவம் பூண்டுளர் ஆயினும், பொறையின் ஆற்றலால், மூண்டு எழு வெகுளியை முதலின் நீக்கினார் - 2638
நிவந்த வேதியர் - 2650
வேதியர்கள் வேத மொழி வேறு பல கூற, காதல் மிகு நின்று, எழில் கமண்டலுவின் நல் நீர் மா தவர்கள் வீசி, நெடு மா மலர்கள் தூவ - 2678
முழுது உணர் முனிவர் - 2779
யோகிபோல் பற்று நீத்த(வர்) - 3169
முப் பகைத் தளை அரி தவத்தர் - 3338
தோம் இல் சிந்தனைச் சேகு அறு நோன்பினர் - 3343
உடலமும் மிகை என்று எண்ணுவர் - 3367
விரதியர் - 4134
அங்கத்து இந்தியம் அவித்த தனி யோகி - 4223
இருவினையும், இடைவிடா எவ் வினையும், இயற்றாதே, இமையோர் ஏத்தும் திருவினையும், இடு பதம் தேர் சிறுமையையும், முறை ஒப்பத் தெளிந்து நோக்கி, "கரு வினையது இப் பிறவிக்கு" என்று உணர்ந்து, அங்கு அது களையும், கடை இல் ஞானத்து அரு வினையின் பெரும் பகைஞர் ஆண்டு உளர் ஈண்டு இருந்தும் அடி வணங்கற்பாலார் - 4473
முந்தைநாள் சிந்தை மூண்ட வினை வரும் நெறியை மாற்றும் மெய் உணர்வோர் - 4627
மிடல் உறு புலன்கள் வென்ற மெய்த் தவர் - 4750
நித்தம் நியமத் தொழிலர் ஆய், நிறையும் ஞானத்து உத்தமர் - 4999
புரியும் நல் நெறி முனிவர் - 5027
தீது தீர் முனிவர் - 5201
நன்று ஆக நல்வினை நல்லோர் - 5388
பெயரா இருவினை துடைத்தவர் அறிவு - 5584
விஞ்சைதனை அறிந்தும் அறியாதான்போல, அவிஞ்சை எனும் பொய்யை மெய்போல் நடிக்கின்ற யோகி - 5926
முனிவர் காக்கும் முற்றுறு மும்மைச் செந் தீ - 5933
முனைவர் - 6077
முற்று அறிவர் - 6158
சொல் வரம் பெரிய மா முனிவர் - 6161
பகல் மதிக்கு உவமை ஆம் விபுதர், தபோதனர் - 6163
காடு பற்றியும், கன வரை பற்றியும், கலைத் தோல் மூடி முற்றியும், முண்டித்தும், நீட்டியும் முறையால் வீடு பெற்றவர் - 6219
மங்கலம் பொருந்திய தவத்து மா தவர், கங்குலும் பகலும் அக் கடலுள் வைகுவார் - 6623
தீபமே அனைய ஞானத் திரு மறை முனிவர் - 6669
தம் மனம் பற்று அறு முனிவர் - 6703
ஏய்ந்த தம் உடம்பு இட்ட உயிர்க்கு இடம் ஆய்ந்து கொள்ளும் அறிஞர் - 6709
பெருமையும் சிறுமைதானும் முற்றுறு பெற்றி ஆற்ற அருமையின் அகன்று, நீண்ட விஞ்சையுள், அடங்கி, தாமும் உருவமும் தெரியாவண்ணம் ஒளித்தனர், உறையும் மாயத்து இருவரை ஒருங்கு காணும் யோகியும் என்னல் ஆனான் - 6770
இடை உறு கருமத்தின் எல்லை கண்டவர் கடை உறு நோக்கினின் காணும் காட்சியான் - 7125
வினை அறு முனிவர் - 7218
தவன் நுணங்கியர் - 7386
குறைவு இல் நோன்பினோர் சொல் எனப் பிழைப்பு இலாச் சூலம் - 7530
கமையுடை முனிவர் - 8745
இருடி - 9088
தம் அடங்கு முனிவர் - 9902
கவ்வை இல் முனிவரர் - 10001
பல் பெரு முனிவர் - 10053
நீள் தரத்து உவாசவர் வேள்வியர் தண்டகம் - 10130
நோன்பின் மாதவர் - 10326

முனிவர் மனைவியர்

முனிவராகிய தமது கணவருக்கு வேண்டும் பணிகளை வனத்தில் உடன் உறைந்து செய்பவர்.

தாயரின் முனிவர் தம் தருமப் பன்னியர் - 2462

மெய்க்காப்பாளர்

அரசனுக்கு மட்டுமின்றி அவனுடன் செல்லும் மகளிருக்கும் மெய்க்காப்பாளர் பாதுகாவலாக அமைகின்றனர்.

காரணம் இன்றியேயும் கனல் எழ விழிக்கும்
கண்ணார் வீர வேத்திரத்தார், தாழ்ந்து
விரிந்த கஞ்சுகத்து மெய்யார், தார் அணி பூவி
மேலார், தலத்து உளார், கதித்த சொல்லார் - 798

வந்திகர்

அரசன் துதி பாடுவோர். இவர் நின்றேத்துபவர். அரசன் அல்லது அரசகுலத்தவர் செல்லுமிடந்தோறும் உடன் செல்பவர்.

ஏறு கொண்டு எழும் மல்லர் இடிப்பினை மாறு
கொண்டன, வந்திகர் வாழ்த்து - 2118

வந்திகர் - 7637

வள்ளுவர்

அரசன் தரும் தகவல்களை, உரியோர்க்கும் பொதுமக்களுக்கும் யானை மீது முரசு ஏற்றி அதனை ஒலிக்கச் செய்து தெரிவிக்கும் அரசுப் பணியாளர்.

வள்ளுவர் யானை மீமிசை நன்பறை அறைந்தனர் - 292

எழுக வெம் படைகள் என்றான்; 'எ' என்னும்
அளவில் எங்கும் முழு முரசு எற்றி கொற்ற
வள்ளுவர் முடுக்க - 6056

வாயிற் காப்பாளர்

அரண்மனை வாயிலைக் காப்பவர். இவர் மூலமாக அரண்மனையுள் செல்ல, பிறர் அனுமதி பெற வேண்டும்.

படிகாரிர் - 2102

(இராவணன் வாயில் காப்பாளரை வீடணன் இராமனுக்கு அறிமுகப்படுத்துகிறான்).

வட திசை வயங்கு ஒளி வாயில் வைகுவோர்,
இடை இலர், எண்-இரு கோடி என்பரால்;
கடையுக முடிவினில் காலன் என்பது என்?
விடை வரு பாகனைப் பொருவும் மேன்மையோர் - 6535

மேல் திசை வாயிலின் வைகும் வெய்யவர்க்கு
ஏற்றமும் உள, அவர்க்கு இரண்டு கோடி மேல்;
கூற்றையும் கண்-பொறி குறுகக் காண்பரேல்
ஊற்றுறு குருதியோடு உயிரும் உண்பரால் - 6536

தென் திசை வாயிலின் வைகும் தீயவர்
என்றவர் எண்-இரு கோடி என்பரால்;
குன்று உறழ் நெடியவர் கொடுமை கூறி என்?
வன் திறல் யமனையும் அரசு மாற்றுவார் - 6537

கீட்டிசை வாயிலின் வைகும் கீழவர் ஈட்டமும்
எண்-இரு கோடி என்பரால்; கோட்டு இருந்
திசை நிலைக் கும்பக்குன்றையும் தாள்
துணை பிடித்து, அகன் தரையின் எற்றுவார் - 6538

விண்ணிடை விழித்தனர் நிற்கும் வெய்யவர்
எண்-இரு கோடியின் இரட்டி என்பரால்;
மண்ணிடை வானவர் வருவர் என்று, அவர்
கண் இலர், கரை இலர், கரந்து போயினார் - 6539

பிறங்கிய நெடு மதில் பின்னும் முன்னரும்,
உறங்கலர், உண் பதம் உலவை ஆதலால்,
கறங்கு எனத் திரிபவர் கணக்கு வேண்டுமேல்,
அறைந்துளது ஐ-இரு நூறு கோடியால் - 6540

இப்படி மதில் ஒரு மூன்று; வேறு இனி
ஒப்ப அரும் பெருமையும் உரைக்க வேண்டுமோ?
மெய்ப் பெருந் திரு நகர் காக்கும் வெய்யவர்
முப்பது கோடியின் மும்மை முற்றினார் - 6541

சிறப்பு அவன் செய்திடச் செல்வம் எய்தினார்,
அறப் பெரும் பகைஞர்கள், அளவு இல்
ஆற்றலர், உறப் பெரும் பகை வரின் உதவும்
உண்மையர் இறப்பு இலர், எண்-இரு நூறு
கோடியே - 6542

"விடம் அல, விழி" எனும் வெகுளிக் கண்ணினர்
"கடன் அல, இமைத்தலும்" என்னும் காவலர்,
வட வரை புரைவன கோயில் வாயிலின்
இடம் வலம் வருபவர், எண்-எண் கோடியால் - 6543

அன்றியும், அவன் அகன் கோயில் ஆய் மணி
முன்றிலின் வைகுவார் முறைமை கூறிடின்,
ஒன்றிய உலகையும் எடுக்கும் ஊற்றத்தார்;
குன்றினும் வலியவர்; கோடி கோடியால் - 6544

வானரர்

இராமாவதாரத்தின்போது பெயர் சுட்டப்படாத நிலையில் அமையும் தேவர்கள் வானரங்களாகப் பிறந்தனர். சுக்கிரீவன் தலைமையில் இவர்கள் இராமனின் படைகளாகச் செயல்பட்டனர். முதற்கண் சீதையைத் தேடும் பணியில் ஈடுபட்டனர். அவள் இலங்கையில் சிறை வைக்கப்பட்டிருப்பது அறிந்தவுடன் போருக்கெழுந்தனர். இடைப்பட்ட கடலை நளனின் தலைமையில் சேது கட்டித் கடந்தனர். ஆடவர் திலகனான இராமனுக்கு

அன்பினராகவும் அறவாழ்வினராகவும் அமைந்த இவர்கள் போரிலும் சிறந்து விளங்கினர். இவர்தம் போர் செய்முறை,

குன்று கோடியும் கோடிமேல் கோடியும் குறித்த
வென்றி வானர வீரர்கள் முகம்தொறும் வீச
ஒன்றின் நால்வரும் ஐவரும் இராக்கதர் உலந்தார்
பொன்றி வீழ்ந்தன, பொரு கரி, பாய் பரி பொலந்தேர் - 8546

என அவர்தம் இயல்பிற்கேற்ப அமைந்து சிறந்தது.

நாகபாசத்தால் கட்டுண்டபோது கருடனாலும், பிரம்மாத்திரத்தால் வீழ்ந்தபோது அனுமன் கொணர்ந்த மருத்து மலையாலும் உயிர் பெற்றனர். போரின் முடிவிலும் இராமன் தேவரிடம் பெற்ற வரத்தால் இறந்த வானரங்கள் உயிர் பெற்றனர். போரில் ஈடுபட்ட எழுபது வெள்ள வானர வீரரும் கிட்கிந்தையிலிருந்த வானர மகளிரும் அயோத்தி சென்று இராமன் முடிசூடல் கண்டு மகிழ்ந்தனர்.

வானரங்கள் - 199

கோள் உறுத்தற்கு அரிய குரக்கினம் - 4301

வானராதிபர் ஆயிரர் - 4408

ஊன்றி மேருவை எடுக்குறும் மிடுக்கினுக்கு உரிய தேன் தெரிந்து உண்டு தெளிவுறு வானரச் சேனை - 4409

ஈறு இல் வேலையை இமைப்புறும் அளவினில் கலக்கிச் சேறு காண்குறும் திறல் கெழு வானரச் சேனை - 4410

மொய்ம்பு மால் வரை புரை நெடு வானரம் - 4411

முனியும்ஆம் எனின் அருக்கனை முரண் அற முருக்கும், தனிமை தாங்கிய உலகையும் சலம் வரின் குமைக்கும், இனிய மாக் குரங்கு - 4413

இடியும், மாக் கடல் முழக்கமும் வெருக் கொள இசைக்கும் முடிவு இல் பேர் உறுக்கு உடையன, விசையன முரண் கொடிய கூற்றையும் ஒப்பன - 4415

உயர்ந்த வெஞ் சின வானரப் படை - 4420

நீடு வெஞ்சினத்து அரி இனம் - 4421

கறங்கு போல்வன, காற்றினும் கூற்றினும் கடிய, பிறங்கு தென் திரைக் கடல் புடைபெயர்ந்தெனப் பெயர்வ, மறம் கொள் வானரம் - 4422

ஏழும் ஏழும் என்று உரைக்கின்ற உலகங்கள் எவையும் தாழும் காலத்தும், தாழ்வு இலாத் தட வரைக் குலங்கள் சூழும் தோற்றத்த, வலி கொள் தொள்ளாயிரகோடிப் பாழி வெம் புயத்து அரி - 4424

எண்ணின், நான்முகர் எழுபதினாயிரர்க்கு இயலா; உண்ணின், அண்டங்கள் ஓர் பிடி உண்ணவும் உதவா; கண்ணின் நோக்குறின், கண்ணுதலானுக்கும் கதுவா, மண்ணின்மேல் வந்த வானர சேனையின் வரம்பே! - 4430

ஒடிக்குமேல், வட மேருவை வேரோடும் ஒடிக்கும்; இடிக்குமேல், நெடு வானக முகட்டையும் இடிக்கும்; பிடிக்குமேல், பெருங் காற்றையும் கூற்றையும் பிடிக்கும் குடிக்குமேல், கடல் ஏழையும் குடங்கையின் குடிக்கும் - 4431

மாறு இல் கொற்றவன் நினைத்தன முடிக்குறும் வலியர் - 4432

செரு மத யாக்கையர், திருக்கு இல் சிந்தையர், தரும தயா இவை தழுவும் தன்மையர் - 4530

வயிரத் தோள் வயப் போர் கெழு வீரர் - 4541

குன்று புரை தோளவர் - 4592

மறவோர் - 4593

அறம் கொள் சிந்தையர் - 4598

அறிவின் நீடினார் - 4606

ஊதைபோல் விசையின் வெங் கண் உழுவை போல் வயவர் - 4620

பொரு இலர் - 4639

ஆடவர் திலகனுக்கு அன்பினார் - 4654

குன்று உறழ்ந்தென வளர் குவவுத் தோளினர் - 4659

தவன வேகத்தினர் - 4666

நல்ல சொல் வல்லர், வாய்மை வளர்க்கும் மாண்பினர் - 4695

ஏச அருங் குணத்தர் - 4707

போர் கெழு கொற்ற நெடு வீரர் - 4714

வானவர்

வானவர் வேண்டுதல் காரணமாகவே இராவணாதியரை அழிக்கத் திருமால் இராமனாகத் தோன்றியதால் இவர்தம் வரவும் காப்பியத்துள் பெருவழக்காயிற்று. இயக்கர், விஞ்சையர், சித்தர், கின்னரர், உரகர் (நாகர்), சாரணர், கந்தர்ப்பர் எனப் பல வகையினர் வானவராகக் காணப்படுகின்றனர். ஒவ்வொரு வருக்கும் தனியுலகு அமைந்துள்ளது. தேவர், புலவர், அமரர், உம்பர், வான் உளோர் எனவும் சுட்டப்படுகின்றனர்,

இந்திரன் இவர்களின் தலைவன். இராவணன் இவனை வெற்றி கொண்டதால் தேவர் அனைவரும் அடிமையாயினர். இராவணன் இட்ட ஏவலைச் செய்வதுடன் அவனுக்கு அஞ்சி வாழும் வாழ்க்கையினராயினர்.

இன்னபோது இவ்வழி நோக்கும் என்பதை
உன்னலர், கரதலம் சுமந்த உச்சியர்,
மின் அவிர் மணி முடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர், முறை முறை துறையில் சுற்றவே - 3074

என்ற இவர்தம் இழிநிலை இராவண வதையால் மாற்றமுற்றது. தமது விடுதலைக்காக ஏங்கி நின்ற இவர்கள், இராமன் அரக்கர் மாயையால் துன்புற்ற வேளைகளில் தாமும் மனம் நொந்து வருந்தினர். அதே போல் இராமன் பெறும் வெற்றிகளைத் தம் வெற்றியாகக் கொண்டு களித்தனர். மலர் தூவி வாழ்த்தினர். அரம்பையர், உரகர் ஆகியோர் பற்றிய குறிப்புகள் பலவானமையால் தனித்து சுட்டப்பட்டுள்ளனர்.

சந்திராதித்தர் இமைப்பு இலர் திரிவ - 95

அமரர் - 98

விண்ணவர், இயக்கர், விஞ்சையர், முதலினோர், எவரும் உரைசெய்வார் ஆனார் - 99

விண் புகலால் தேவரும் ஒக்கும் - 101

இமையவர் உலகம் - 102

உம்பர் நாட்டவர் - 121

உம்பர் நாடு - 124

பொன்னுலகு - 132

தேவர்தம் நகர் - 151

வான் உளோர் - 186

சேய் உயர் விசும்பு உளோர் - 203

மாசு அறு சுரர் - 210

தேவர் - 246

அண்டர்கள் - 251

உம்பர் - 286

கற்பக நாட்டு நல் நகர் - 315

சாரணர் - 316

அண்டத்து அரசு ஆளும் வினையோர் - 507

நிராசனர் - 593

சுமந்த மாதிரக் காவலர் (எண் திசைக் காவலர்) - 611

அமராபதி - 642

விஞ்சை வேந்தர் - 850

வினை அறு துறக்க நாட்டு விண்ணவர் - 929

வானத் தெய்வ மங்கையர் - 1132

பொன்னுலகம் - 1923

ஒளித்து நின்றுளர் ஆயினும் உருத் தெரிகின்ற பரிமுக மாக்கள் - 2056

புத்தேளிர் - 2572

வான் நாடியர் - 2598

புலவர் - 2700

இமையோரோடும் வருணங்கள் வகுத்திட்ட காலம் - 2714

மின் அவிர் மணி முடி விஞ்சை வேந்தர்கள் - 3074

மங்கையர் திறத்து ஒரு மாற்றம் கூறினும்
தங்களை ஆம் எனத் தாழும் சென்னியர்
அங்கையும் உள்ளமும் குவிந்த ஆக்கையர்
சிங்க ஏறு என, திறல் சித்தர் சேரவே - 3075

அன்னவன் அமைச்சரை நோக்கி ஆண்டு
ஒரு நல் மொழி பகரினும் நடுங்கும் சிந்தையர்
'என்னை கொல் பணி'? என இறைஞ்சுகின்றனர்
கின்னரர், பெரும் பயம் கிடந்த நெஞ்சினர் - 3076

கற்பகத் தரு, நிதிகள் (சங்கநிதி, பதுமநிதி) - 3085

கங்கையே முதலிய கடவுட் கன்னியர்
செங்கையில் அரிசியும் மலரும் சிந்தினர்
மங்கல முறை மொழிகூறி வாழ்த்தவே - 3087

தண்டல் இல் தவம் செய்வோர் - 3228

பண்ணவன் - 3329

சேடர் - 3531

ஒழிப்ப அருந் திறல் பல் பூத கணம் - 3695

காண் தகு கொள்கைஉம்பர்இல் - 4741

தெய்வ மடந்தையர் - 4752

விஞ்சையர் மகளிர் - 4860

விஞ்சை நாட்டு அளக வல்லியர், கரும்பு இயல் சித்தியர் - 5820

பைந் நாகம் நிகர்க்கும் வீரர் - 6008

மாகத்தார் - 6040

இந்திரன் பதி - 6193

நெடுந் தேவர் - 6350

பொரு அரும் அமரர் - 6509

விசும்பு உறைவோர் - 7194

மேலை நாள் மூவா மருந்து உண்ட தேவர் - 7721

வான் நாட்டு மயில்கள் - 8675

கந்தர்ப்பர் - 9223

ஆற்றல் சால் அமரர் - 9782

துப்பு உறச் சிவந்த வாய் விஞ்சைத் தோகையர் - 9999

விண் உறைவோர், வான் உறை மடந்தைமார் - 10304

(இ) கதை(மாந்தர்) வழி அறியப்படுவோர்

அஞ்சனை

அனுமனின் தாய். காற்றின் துணைவி.

அஞ்சனை - 3765

கவிக் குலத்தினுள் நோற்றனள் - 10205

அத்திரி

இராம இலக்குவரும், சீதையும் சித்திர கூடத்தினின்றும் நீங்கி தண்டகவனம் செல்லும் வழியில் அவர்களை வரவேற்று விருந்தளித்த முனிவர். அத்திரி எனில் காம வெகுளி மயக்கங்கள் அற்றவன் என்பது பொருளாகும். இவரது மனைவி அனசூயை ஆவாள்.

அத்திரிப் பெயர் அருந்தவன் - 2517

காமம் முதல் ஆம் முக் குறும்பு அற எறிந்த
வினை, வால், முனிவன் - 2518

அதிதி

காசிபன் மனைவி; திருமாலின் வாமன அவதாரத்தின் போது அவன் தாயானவள்.

அதிதி - 413

அம்பரீடன்

ஓர் அரசன். புருடமேத யாகம் செய்தவன். அதற்காக ரிசிக முனிவனிடமிருந்து அவன் மகன் சுனச்சேபனைப் பெற்றவன்.

குதை வரி சிலை வாள் தானைக் கோமன்
அம்பரீடன், சுதை தரு மொழியன், வையத்து
உயிர்க்கு உயிர் ஆய தோன்றல் - 599

கொற்றவன் - 600

அயன்

தயரதன் தந்தை. இந்துமதியைச் சுயம் வரத்தில் பெற்றவன்.

வில் என்னும் நெடு வரையால் வேந்து என்னும்
கடல் கலக்கி, எல் என்னும் மணி முறுவல்
இந்துமதி என்னும் திருவை, அல் என்னும் திரு
நிறத்த அரி என்ன; அயன் என்பான்- மல்
என்னும் திரள் புயத்துக்கு அணி என்ன
வைத்தானே! - 648

அயன் புதல்வன் தயரதன் - 649

அருந்ததி

வசிட்டரின் மனைவி. கற்பிற்கு எடுத்துக் காட்டாக அமைபவள். திருமணத்தின் போது கணவனும் மனைவியும் அம்மி மிதித்து அருந்ததி பார்ப்பது மரபு.

அருந்ததி - 1137

கலங்கல் இல் கற்பின் அருந்ததி கண்டார் - 1250

இக்குவாகு (இச்சுவாகு)

தயரதனின் முன்னோன். இக்ஷ்வாகு என்பதன் தமிழ்ப் பெயர் இக்குவாகு என உள்ளது. நீண்ட நாள் தவம் செய்துப் பிரம்மனை மகிழ்வித்தவன். அதன் பயனாகப் பிரம்மன் இவனுக்கு ஓர் அழகிய மணி மண்டபத்தை அன்பளிப்பாக அளித்தான்.

பிணி அரங்க, வினை அகல, பெருங் காலம்
தவம் பேணி, மணி, அரங்கு நெடு முடியாய்!
மலர் அயனே வழிபட்டு, பணி அரங்கப்
பெரும் பாயற் பரஞ் சுடரை யாம் காண,
மணி அரங்கம் தந்தானை அறியாதார்
அறியாதார்! - 638

கன்னல் தோளான் - 10308

இக்குவாகு - 10309

இரணியகசிபு

இரணியனின் தம்பி. பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலுக்கடியில் ஒளிந்தவன். அதனால் வராக அவதாரம் எடுத்து திருமாலால் அழிக்கப்பட்டவன்.

பொற்கணான், தம்பி, என்று இனைய போர்த்
தொழில் வில் கொள் நாண் பொருத தோள்
அவுணர் - 5197

வயிற்றினுள் உலகு ஏழினோடு ஏழையும்
வைக்கும் அயிர்ப்பு இல் ஆற்றல் என்
(இரணியன்) அனுசன் - 6239

இரணியன் (இரணியாட்சன்)

காசிப முனிவர்க்கும் திதிக்கும் பிறந்த அரக்கன். பிரகலாதனின் தந்தை. பொன் நிறத்தவன் ஆகையால் இரணியன் எனப்பட்டவன். இவன் தம்பி இரணியகசிபு. திருமாலின் வாயில் காவலராகிய ஜய, விஜயன் என்பவர்களே ஒரு சாபத்தால் இரணியன், இரணியகசிபு எனப் பிறந்தவர். இரணியன் தன்னை அனைவருக்கும் மேலான முதற் கடவுளாகக் கற்பித்துக் கொண்டவன். தான் பெற்ற வரபலத்தால் ஆணவம் கொண்டு வானவர் முதலாயினாரைத் துன்புறுத்தியவன். பிரகலாதன் அறிவுறுத்தியும் அறிவு பெறாதவன். தன் மகன் என்றும் பாராது பன்முறை பலவிதமாக அவனைக் கொல்ல முனைந்து தோற்றவன். இறுதியில் தான் பெற்ற வரம் பழுதாகும் வகையில். திருமாலின் நரசிம்ம அவதாரத்தால் அழிந்தவன்.

கனகன் - 5041

கயிலையின் திரண்ட முரண் தொடர் தடந்தோள் கனகன் - 5154

பொற்கணான் - 5197

கொற்றக் கனகன் - 5762

இரணியன் - 6188

கண்தலம் பசும் பொன்னவன் - 6200

ஊழியும் கடந்து உயர்கின்ற ஆயுளான், உலகம் ஏழும் எழும் வந்து அடி தொழ அரசு வீற்றிருந்தான் - 6208

கொடியோன், உணர்வு இல் நெஞ்சினன் - 6226

தீயோன் - 6229

உலகு எலாம் உயர்ந்தோன் - 6244

விரை உள அலங்கலான் - 6245

உரவோன் - 6262

எரி ஏழு தறுகண்ணான் - 6275

நெஞ்சு கொதிப்பான் - 6283

திண் கோடைக் கதிரின் தெறு கண்ணான் - 6286

அருந் திறலோன் - 6302

கண் கொடியோன் - 6303

அவுணர் வேந்தன் - 6311

பேர் அடாநின்ற தாளொடு உலகு எலாம் பெயரப் பேர்வான் - 6317

வனை கழலவன் - 6331

ஏமை (பெயரில்லை)

அசுரத் தச்சன் மயனின் காதலி. தேவலோக மங்கை. இந்திரன் அறியாவகையில், தோழி சுயம்பிரபையின் உதவியுடன் ஒரு பிலத்துள் இருந்த மயனின் அழகிய நகரில் அவனுடன் வாழ்ந்தவள்.

அரம்பையருள் ஆங்கு ஓர் நல் நுதலினாள் - 4579

திருந்திழை, முருந்து நிகர் மூரல் நகையாள் - 4581

ஐராவதம்

பிரகலாதனைக் கொல்ல இரணியன் ஆணையின்படி இந்திரன் அனுப்பிய அவனது யானை. பிரகலாதனைக் கொல்லத் துணிந்த போது அவன் தன் திருமால் பற்றினைக் கூறியதால் பின் வாங்கியது. இரணியன் அச்சுறுத்தலால் மீண்டும் அவனைக் கொல்லப் புகத் தன் தந்தங்களை இழந்தது.

விசையின் திண் பணை வெஞ் சின வேழம் - 6279

மையல் காய் கரி - 6280

இருங் களிறு - 6282

ஒற்றை உரக் கரி - 6283

நாகம் - 6285

காகுத்தன்

இராமன் குல முன்னோன். இச்சுவாகுவின் பேரன். அமராபதியை அரக்கரிடமிருந்து மீட்டு இந்திரன் முதலிய வானோர்க்கு உதவியவன். அசுரர்களுடன் போரிட்டபோது இந்திரன் விடை ஏறாக மாறி இவனைச் சுமந்து திரிந்தான்.

தான் தனக்கு வெலற்கு அரிய தானவரை,
"தலைதுமித்து, என வான் தரக்கிற்றிகொல்"
என்று குறை இரப்ப, வரம் கொடுத்து, ஆங்கு
ஏன்று எடுத்த சிலையினன் ஆய், இகல்
புரிந்த இவர் குலத்து ஓர் தோன்றலை, பண்டு,
இந்திரன்காண், விடை ஏறாய்ச் சுமந்தானும் - 639

முந்தைப் போர் கெழு புலவர்க்கு ஆகி அசுரரைப் பொருது வென்றோன் - 1586

மிடல் படைத்து, ஒருவனாய், அமரர் கோன்
விடையதா வெரிநின் மேலாய், உடல்
படைத்து அவுணர் ஆயினர் எலாம் மடிய
வாள் உருவினான் - 6153

காசிபன்

திருமாலின் வாமன அவதாரத்தின் போது தந்தையானவன்.

காலம் நுனித்து உணர் காசிபன் என்னும்
வால் - அறிவன் - 413

காதி

விசுவாமித்திரனின் தந்தை, குசநாபனின் மகன்.

கவன வேகத் துரங்கக் காதி - 403
முடியுடை வேந்தர் வேந்தன், புகழ் மகோதயத்தில்
வாழும் மன்னவன் காதி - 404

காலகேயர்

காசிபருக்குக் கலை என்பாளிடம் பிறந்த அசுரர்கள். கடலில் இருந்தவர்கள். இராவணன் இவர்களை, இவர்தம் மக்களோடு அழித்ததாகக் கூறப்படுகிறது.

காலகேயர் - 6570
தெள்ள அருங் காலகேயர் - 9242

காளி

சிவனின் துணைவியாகச் சுட்டப்படுபவள். கையில் சூலம் ஏந்தியவள். அவனோடு நடனமாடித் தோற்றவள். போர்த் தெய்வமாக, கொற்றவையாகப் போற்றப்படுவதால் போர்க்களம் மணப் பெருங்களமாக, மங்கல வாழ்க்கை தொடங்கும் களமாகப் பேசப்பட்டுள்ளது.

சூலத்தால் காளியை ஒக்கும் - 101
மணப் பெருங் களத்தில் மோடி மங்கல
வாழ்க்கை வைப்பு - 8221
காளியைப் பண்டு கண்ணுதல் காட்டிய காலை
மூள முற்றிய சினக் கடுந் தீயிடை முளைத்தோர்
கூளிகட்கு நல் உடன் பிறந்தார் - 9269

குசநாபன்

குசன் எனும் அரசனின் நான்கு புதல்வர்களுள் ஒருவன். இவன் நூறு பெண் குழந்தைகள் பெற்றவன். வாயு தேவனால் முதுகொடியப் பெற்ற இவர்களைப் பரமதத்தனுக்கு மணம் செய்வித்தவன்.

குசநாபன் - 400
புவனம் முற்றுடைய கோ - 403

குசநாபன் மகளிர்

குசநாபன் பெண்மக்கள் நூற்றுவர். இவர்களை வாயு விரும்பி திருமணம் புரிய வேண்டினான். இவர்கள் தம் தந்தையை அணுகுமாறு கூறினர். இதனால் கோபம் கொண்ட வாயு இவர்களின் முதுகை ஒடித்தான். இவர்கள் தவழ்ந்து சென்று தந்தையிடம் முறையிட்டனர். பிரமதத்தன் என்னும் முனிவனுக்கு இவர்களைக் குசநாபன் மணம் செய்வித்தான். முனிவன் இவர்களது முதுகினைத் தடவிக் கொடுக்க கூன் நிமிர்ந்து பண்டை உருவம் பெற்றனர்.

குசநாபற்கே ஐ-இருபதின்மர் அம்சொல் துவர்
இதழ்த் தெரிவை நல்லார், கன்னியர் - 400
ஒளிவளை மகளிர் - 401
தையலார், திரு அனார் - 402
அவன் (பிரமதத்தன்) மலர்க்கைகளை நீவ
கூன் நிமிர்ந்து அழகு வாய்த்தார் - 403

குசன்

பிரமனால் தோற்றுவிக்கப் பட்டவன். அரசன். விசுவாமித்திரனின் முன்னோன். இவனுக்கு நான்கு புதல்வர்கள். அவர்களில் ஒருவன் குசநாபன். பிறர் குதாம்பன், ஆதூர்த்தன், வசு என்போர்.

பிரமன் அன்று அளித்த வென்றிப் பெருந்தகைக்
குசன் என்று ஓதும் அரசர்கோன் - 399

குபேரன்

இயக்கர்களின் அரசன். மிகுந்த செல்வம் கொண்டவன். இராவணனால் வெல்லப்பட்டுத் தன் நிதியம், இலங்கை முதலானவற்றை இழந்தவன். இராமன் முதலானோர் பயணித்த புட்பக விமானத்திற்குச் சொந்தக்காரன். இதனையும் இராவணன் கவர்ந்தான்.

குபேரன் - 2347
தனதன் - 2579
செங்கையோன் - 2770
இறுகின நிதியின் கிழவன் - 5504
நிதி நெடுங் கிழவன் - 5620
குரண்டம் ஆடு நீர் அளகையின் ஒளித்து உறை
குபேரன் - 6571
தெய்வ நிதிக் கிழவன் - 7766

இயக்கர் வேந்தனுக்கு அரு மறைக் கிழவன்
அன்று ஈந்த துயக்கு இலாதவர் மனம் எனத்
தூயது, சுரர்கள் வியக்க வான் செலும்
புட்பகவிமானம் உண்டு - 10094

குவலையாசுவன்

இராமனின் முன்னோர்களில் ஒருவன். துந்து என்னும் அரக்கனைக் கொன்றவன். எனவே துந்துமாரன் என்றும் அழைக்கப்படுவான்.

துந்து எனும் தானவனைச் சுடு சரத்தால்
துணித்தான் - 647

கேகசி (பெயர் சுட்டப்படவில்லை)

சூர்ப்பணகையின் தாய்; சாலகடங்கடன் எனும் அரக்க மன்னனின் மகள்.

அருந்ததி கற்பின் எம் (சூர்ப்பணகை) மோய்,.
தாரணி புரந்த சாலகடங்கட மன்னன் தையல் - 2781

கைடவன்

மது, கைடவன் எனும் உடன்பிறந்த அரக்கரில் தம்பி கைடவன். இவர்கள் தம்மை திருமாலே அழிக்க வேண்டும் என்ற வரம் பெற்றவர்கள். இராமாயணக் காலத்தில் கைடவன் இராவணன் மகன் அதிகாயனாகப் பிறந்துள்ளான்.

மது கைடவர் என்பவர், வானவர் தம் பதி
கைகொடு கட்டவர், பண்டு ஒரு நாள், அதி
கைதவர், ஆழி அனந்தனையும், விதி
கைம்மிக, முட்டிய வெம்மையினார் - 7792
கதிர்தான் நிகர் கைடவன் - 7801
மதுவின் அனுசன் - 9350

கௌசிகை

காதி மன்னனின் புதல்வி. விசுவாமித்திரனுடன் பிறந்தவள். ரிசிகனின் மனைவி. அம்பரீடன் தன் புருடமேதத்திற்கு ஒரு மகனைத் தரும்படி வேண்ட மூவரில் இளையவனைத் தனக்குரித்தாக்கினாள். மூத்தவனைத் தந்தை விரும்ப இடைப் பிறந்த சுனச்சேபன் அம்பரீடனுடன் சென்றான். ரிசிகன் பிரம்ம லோகம் சென்ற போது கௌசிகையைக் கௌசிக மாநதியாக உலகு காக்கச் செய்தான்.

புகழ் மகோதயத்தில் வாழும் மன்னவன்
காதிக்கு யானும் (விசுவாமித்திரர்) கவுசிகை
என்னும் மாதும் வந்துதிப்ப - 404
மெல்லியலாள் - 405
எம் முனாள் நங்கை இந்த இருநதி ஆயினாள் - 406
முன்னோள் - 604

சகரர்

இராமனின் முன்னோர். சகரனின் புதல்வர் (அறுபதினாயிரவர்). சகரர் என்றே பெயர் பெற்றனர். கடலைத் தோண்டிப் பாதளம் சென்றமையால் கடலுக்குச் சாகரம் என்ற பெயர் இவர்களால் உண்டாயிற்று.

ஆர்கலி அகழ்ந்தோர் - 1586
மகர வேலை மண் தொட்ட வண்டு ஆடு தார் சகரர் - 1629

சடையன்

கம்பரை ஆதரித்த வள்ளல். வெண்ணெய் நல்லூரில் வாழ்ந்தவர். கம்பர் தம் இராம காதையுள் ஆயிரம் பாடல்களுக்கொரு முறையாக, ஆயிரத்துள் ஒருவராக இவரை வைத்துப் போற்றித் தம் செஞ்சோற்றுக் கடன் தீர்த்துள்ளார். இராமனுக்கு, வெண்ணெயூர்ச் சடையன் தங்கள் மரபினோர் கொடுக்க வாங்கி, வசிட்டனே புனைந்தான் மௌலி எனத் தம் நன்றியைப் புலப்படுத்தியுள்ளார். காப்பியம் பிறந்த களமாக வெண்ணெய் நல்லூரைச் சுட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சடையன் வெண்ணெய்நல்லூர் - 11
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்து அன
சடையன் வெண்ணெய் அண்ணல் - 394
விரி நல்நீர் பண்ணை வெண்ணெய்ச் சடையன்
தன் புகழ் - 552
சடையன் வெண்ணெயில் தஞ்சம் என்றோர்களைத்
தாங்கும் தன்மை - 6682
மழை என்று ஆசங்கை கொண்ட கொடை மீளி
அண்ணல் சரராமன் வெண்ணெய் - 8264

சத்தியவிரதன் (பெயரில்லை)

இராமன் குல முன்னோன். உருத்திரன் எனும் அரசனை வென்றவன்.

உருத்திரனைச் சாய்த்தான் - 647

சமதக்கினி

பரசுராமனின் தந்தை.

வேத வித்து ஆய மேலோன் - 1298
தீட்டுறு மழு வாள் வீரன் தாதை - 6781

சமயவாதியர்

காலையின் நறு மலர் ஒன்றக் கட்டிய
மாலையின் மலர் புரை சமய வாதியர் - 6265

சாலகடங்கடன்

அரக்கர்க்கரசன். சூர்ப்பணகையின் தாய் கேகசியின் தந்தை.

தாரணி புரந்த சாலகடங்கட மன்னன் - 2781

சிபி

இராமன் குல முன்னோன். தன்னிடம் தஞ்சம் அடைந்த புறாவிற்காக அதன் எடைக்கு எடைத் தன் தசையறிந்து கொடுக்க முன்வந்து முழுவதுமாகத் தன்னை அளித்தவன்.

மென் புறவின் மன் உயிர்க்கு, தன் உயிரை
மாறாக வழங்கினன் - 643
நயந்தார் உய்ய தங்கள் இன் உயிரும்
கொடுத்தார் தமர் - 1101
துலை புக்க பெரியோன் - 6471
புக்கு அடைந்த புறவு ஒன்றின் பொருட்டாகத்
துலை புக்க மைக் கடங்கார் மதயானை
வாள் வேந்தன் - 7624
புறவு ஒன்றின் பொருட்டு இன் யாக்கை புண்
உற அரிந்த புத்தேள் அறவன் - 9579

சுதாசன்

இராமன் குல முன்னோன். அரிய பெரிய வேள்விகள் நூறு செய்தவன்.

இவர் (இராம இலக்குவர்) குலத்தோன் முன்
ஒருவன், செயற்கு அரிய பெரு வேள்வி
ஒரு நூறும் செய்து அமைந்தான் - 646

சுந்தோபசுந்தர்

சுந்தன், உபசுந்தன் என்னும் பெயரையுடைய அசுரர்கள், ஒரு தாய் மக்கள். திலோத்தமைக் காகத் தம்முள் சண்டையிட்டு அழிந்தவர்.

தம் தோள் வலி மிக்கவர் தாம் ஒரு தாய் வயிற்றின்
வந்தோர் மடமங்கை பொருட்டு மலைக்கலுற்றார்
சிந்து ஓடு அரி ஒண் கண் திலோத்தமை
காதல் செற்ற சுந்தோப சுந்தப் பெயர்த்
தொல்லையினோர் - 3982

சுமாலி

அரக்கன் பிரகத்தனின் தந்தை.

சுமாலி - 7084

சுரபி (காமதேனு)

வேட்டையாட வந்த விசுவாமித்திரனுக்கும் அவன் படைகளுக்கும் வசிட்டன் சுரபியாகிய காமதேனு மூலமாக விருந்தளித்தான். அது கண்டு வியந்த விசுவாமித்திரன் அதனைத் தனக்கருள வேண்டினான். வசிட்டனுக்கு அதில் விருப்ப மின்மையால் அவன் உடன் செல மறுத்தது. தன் உடம்பிலிருந்து படைக் கருவிகளுடன் போர் வீரர்களை வரவழைத்து, தன்னை எதிர்த்தவர் களைப் போரிட்டழித்தது.

சுரபி - 572
வயப்புடை படைகட்கு எல்லாம் கோது அறும்
அமுதம் இக்கோ உதவிய கொள்கை - 574
நீடு அருஞ் சுரா - 575
பப்பரர் யவனர் சீனர் சோனகர் முதல பல்லோர்
கைப்படை அதனோடும் கபிலை மாட்டு
உதித்த (னர்) - 578

சுனச்சேபன்

ரிசிக முனிவனின் மகன். விசுவாமித்திரனின் உடன்பிறப்பாகிய கௌசிகை இவனது தாய். அம்பரீடன் தான் நடத்தவிருக்கும் புருடமேத யாகத்திற்குப் பலியிட ஒரு மானிடனைத் தேடி வந்த பொழுது இவனது பெற்றோர், பொருள் பெற்று இவனை அனுப்பி வைத்தனர். இதனால் மனம் நொந்தவன். வழியே கண்ட விசுவாமித்திரரிடம் முறையிட்டவன். அவன் இரு மந்திரங்களைக் கற்றுக் கொடுத்தவன். அவை கொண்டு வேள்வியில் பலியாகாமல் தப்பித்தவன்.

செவ்விய குரிசில் - 602
விடலை - 603
கோ மருகன் - 606
பிரச மென் தாரோன் - 607

திரிசங்கு

அயோத்தியை ஆண்ட அரசன். உடலோடு விண்ணுலகு புக விரும்பி வசிட்டனிடம் சென்று சாபம் பெற்று புலையன் ஆனவன். விசுவாமித்திரரிடம் செல்ல அவர் அதற்குரிய வேள்வி செய்து விண்ணுலகம் அனுப்பினார். தேவர்கள் ஏற்காது கீழே தள்ள வெகுண்டு, இவனை அந்தரத்திலேயே தங்கச் செய்த விசுவாமித்திரர் இவனுக்காகப் புத்துலகம் படைக்கத் தொடங்கினார். பின் தேவர்கள் அமைதிப்படுத்த விண்மீன் கூட்டங்களில் ஒன்றானவன்.

வன்திறல் அயோத்தி வாழும் மன்னவன் திரிசங்கு - 587
அரசர் கோமான் - 589
ஈனன் - 591
புலையன் - 592
புரைசை மா களிற்று வேந்தன் - 594
நீசன் - 595

திலீபன்

இராமனின் முன்னோன். சந்திரஜித், சந்திரஜேதா என்ற பெயர்களும் வழங்கப் படுகின்றன.

சந்திரனை வென்றவன் - 647

துந்து

அரக்கன்; இராமன் குல முன்னோனாகிய குவலையாசுவனால் கொல்லப்பட்டவன்.

துந்து - 647

துர்க்கை (பெயரில்லை)

காவல் தெய்வம்.

கலை ஊர் கன்னி - 101

தேவராதன் (பெயரில்லை)

சனகனின் முன்னோன். பெரிய வீரன். சிவனின் வில்லைப் பெற்றவன்.

கோளுடை விடை அனான் குலத்துள்
தோன்றியவாளுடை உழவன் ஓர் மன்னன் - 679

நந்தி

சிவனின் வாகனம். இராவணன் கயிலை மலையைத் தூக்கியபோது, குரங்குகளால் தீங்கு வரும் என்று அவனுக்கு வசை மொழிந்தவன்.

மேல் உயர் கயிலையை எடுத்த மேலை நாள்
நாலு தோள் நந்திதான் நவின்ற சாபத்தால்
கூலவான் குரங்கினால் குறுகும் கோள் - 6150

நரசிங்கம்

இரணியனை அழிக்க, திருமால் எடுத்த அவதாரம்.

நசை திறந்து இலங்கப் பொங்கி, "நன்று,
நன்று" என்ன நக்கு, விசை திறந்து உருமு
வீழ்ந்தென்ன ஓர் தூணின் வென்றி இசை
திறந்து உயர்ந்த கையால் எற்றினான்;
எற்றலோடும் திசை திறந்து, அண்டம் கீறச்
சிரித்தது, அச் செங் கண் சீயம் - 6315
முதல் அரி - 7882
நகம் படை ஆகக் கொல்லும் நரசிங்கம் - 8562

நிமி

இராமன் குல முன்னோன். கடல் கடைந்து அமுது அளித்தவன்.

உரை குறுக நிமிர் கீர்த்தி இவர் குலத்தோன்
ஒருவன் காண்-நரை திரை மூப்பு இவை மாற்றி
இந்திரனும் நந்தாமல், குரை கடலை
நெடுவரையால் கடைந்து, அமுது கொடுத்தான் - 640

நிருதி

தென்மேற்குத் திசைக்காவலன்.

நிருதி - 9266

பகீரதன்

இராமன் குல முன்னோன். வானிலிருந்த கங்கையை நிலவுலகிற்குக் கொண்டு வந்தவன்.

ஏடு அவிழ் கொன்றைப் பூ நின்ற மவுலியையும்,
புக்கு அளந்த புனற் கங்கை,பூ வான் நின்று
கொணர்ந்தானும், இவர்குலத்து
ஓர் மன்னவன் - 645
கங்கை அவனியில் கொணர்ந்தோன் - 1586
கங்கை தந்தவன் - 6153

பிரகலாதன்

நரசிம்ம அவதாரமெடுத்துத் திருமாலால் அழிக்கப்பட்ட இரணியனின் மகன். தந்தைக்கு மாறாகத் திருமால் மீது அசைவற்ற நம்பிக்கையும் பக்தியும் உடையவன். தன் பகையை வழிபடும் மகனை அழிக்க இரணியன் போர் வீரரைக் கொலை செய்ய ஏவுதல், பாம்புகளை விட்டுக் கடிக்கச் செய்தல், யானை காலில் தலையை இடறச் செய்தல், கல்லைக் கட்டிக் கடலில் பாய்ச்சுதல் எனப் பலவாறு முயன்றும் பிரகலாதனுக்குச் சிறிதும் ஊறு நிகழவில்லை.

சாணினும் உளன்; ஓர் தன்மை அணுவினைச் சதகூறு இட்ட கோணினும் உளன்; மாமேருக் குன்றினும் உளன்; இந்நின்ற தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும்உளன்

என்று இவன் கூறியபடி, இரணியன் சுட்டிய தூணினின்று நரசிங்கம் வெளிப்பட்டது. இரணியன் அழிந்தபின் தேவர்களால் மூவுலகிற்கும் தலைவனாக முடிசூட்டப்பட்டவன். இறைவனால் அழியா வரமும் பெற்றவன்.

ஆயவன் தனக்கு அரு மகன், அறிஞரின் அறிஞன் தூயர் என்பவர் யாரினும் மறையினும் தூயான் நாயகன் தனி ஞானி, நல் அறத்துக்கு நாதன் தாயின் மன்னுயிர்க்கு அன்பினன், உளன் ஒரு தக்கோன் - 6207
ஆழி ஐயன் - 6208
ஞான நாயகன் இருந்தனன் - 6211
துணை இலான் தனைத் துணை என உடையவன் - 6226
தேவர் செய்கையான் - 6229
தாயின் மன்னுயிர்க்கு அன்பினன், தூயவன் தனைத் துணை என உடைய அவ் ஒருவன் - 6270
முனிவு இலான், தூயவன் - 6271
ஐயன் - 6273
தோன்றல் - 6275
திருப் பெயர் மறவாதான் - 6276
பொய் அற்றான் - 6280
பொன்னைக் கொல்லும் ஒளிப் புகழ் பொய்யான் - 6284
வீரன் - 6285
நடு ஒக்கும் தனி நாயகன் நாமம் விடுக்கிற்கின்றிலன் - 6289
தடக் கையினான் - 6290
மறை ஒல்லை உணர்ந்தான் - 6291
நல் அறிவாளன் - 6316
அனகன் - 6331
உலகு எலாம் புகழ நின்றான் - 6333
அறம் பிழையாச் செய்கையான் - 6354
செயிர் சேரா உள்ளத்தாய் - 6355
மினைத் தொழு வளைத்து என்ன மிளிர் ஒளியாய் - 6359
தொல் மறை வல்லோய் நாம மறை ஓதாது ஓதி நனி உணர்ந்தான் - 6363
தன் தாதை யாக்கையை மாயவன் பிளந்திட மகிழ்ந்த மைந்தன் - 6367
பாழி சால் இரணியன் புதல்வன் - 6368

பிரகலாதன் குரு (பெயரில்லை)

இரணியன், பிரகலாதனுக்கு எல்லா வேதங்களையும் கற்பிக்க அழைத்த ஆசிரியன். எவ்வளவு முயன்றும் இவனால் பிரகலாதனை 'நமோ நாராயணாய' என்பதை மாற்றி 'இரணியாய நம' எனக் கூறச் செய்ய முடியவில்லை.

அந்தணன், எல்லை இல் அறிஞன் - 6209
மூ தக்கோன் - 6210
வேத பாரகன் - 6215
ஊற்றம் இல்லவன் - 6222
மறையவன் - 6225
வேதியன் - 6227
தா இல் வேதியன் - 6229
முனிவன் - 6244

பிரமதத்தன்

சூளியின் மைந்தன். குசநாபன் மகளிரை மணந்தவன். அவர்களின் கூனைத் தன் மலர்க்கையால் தடவி நேர் செய்தவன்.

நிறை தவன் சூளி நல்கும் திமிர் அறு பிரமதத்தன் - 402

பிருகு

ஒரு முனிவன். இவன் மைந்தன் இரசிகன், விசுவாமித்திரரின் தமக்கை கௌசிகையை மணந்தவன்.

பிருகுவின் மதலை ஆய இரிசிகன் - 405

பிருது (பெயரில்லை)

இராமன் குல முன்னோன்.

பேதித்த உயிர் அனைத்தும் பெரும் பசியால் வருந்தாமல், சோதித்த தன் வரிசிலையால் நில மடந்தை முலை சுரப்ப, சாதித்த பெருந்தகை - 637
அடல் படைத்து அவனியை பெரு வளம் தருக என்று அருளினான் - 6153

மது

மது கைடபர் என்று இணைத்துப் பேசப்படும் அரக்கர்களில் ஒருவன். பிரமனிடமிருந்து வேதங்களைப் பறித்துச் சென்ற இவர்களிட மிருந்து திருமால் அவற்றை மீட்டார். இதனால் கோபமுற்ற இவர்கள் கடலைக் கலக்கினர். இராமாவதாரத்துள் மது கும்பகர்ணனாகப் பிறந்தவன்.

கருங்கடல் கலக்கும் மதுகயிடவரை - 837

மது கைடவர் என்பவர், வானவர்தம் பதி கைகொடு கட்டவர், பண்டு ஒரு நாள், அதி கைதவர், ஆழி அனந்தணையும் விதி கைம்மிக, முட்டிய வெம்மையினார் - 7792

மது ஆனவன் - 7801

மனு

இராமனின் குலமாகிய சூரிய குலத்தின் முதல்வன் மனு. இவன் முழுப்பெயர் வைவசுவதமனு என்பதாகும்.

உலகப் படைப்பிற்காகப் பிரமன் படைத்த உபப் பிரமர்கள் ஒன்பதின்மர். அதில் ஏழாமவன் ஆதித்தன். இவன் காசிபப் பிரசாபதிக்கும் அதிதிக்கும் தோன்றி விவசுவான் எனப்பட்டான். இவன் மகன் மனு, என இராமனின் குலமரபு உணர்த்தப்படுகிறது. (அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு தரும் குறிப்பு).

ஆதித்தன் குல முதல்வன் மனு - 637

மாந்தாதா

இராமன் குல முன்னோரில் ஒருவன். புலியும் மானும் ஒரே துறையில் நீர் உண்ணும் படியான அமைதியான நல்லாட்சியை நடத்தியவன்.

புலிப் போத்தும் புல்வாயும் ஒரு துறையில் நீர் உண்ண உலகு ஆண்டோன் - 641

மாந்தா - 3613

மார்க்கண்டேயன்

மிருகண்டு முனிவர் புதல்வன். சிவனருளால் என்றும் பதினாறு ஆனவன்.

நஞ்சினை மிடற்று வைத்த நகை மழுவாளன், நாளும் தஞ்சு என, முன்னம் தானே தாதை பால் கொடுத்து, சாதல் அஞ்சினேன், அபயம் என்ற அந்தணற்கு ஆகி, அந்நாள் வெஞ்சினக் கூற்றை மாற்றும் மேன்மையின் மேன்மை உண்டோ - 6476

மாவலி

அரக்கர் குலத்தரசன். தன் வலிமையால் பிறரைத் துன்புறுத்த வானவர் திருமாலிடம் முறையிட்டனர். அவர் குறை தீர்க்க உறுதியளித்த திருமால் வாமன வேடம் கொண்டு வந்து மூவடி மண் கேட்டான். ஒப்புக் கொண்ட மாவலி மீது மூன்றாவது அடி வைக்கப் பாதாளத்துள் வீழ்ந்தான்.

ஊனம் இல் ஞாலம் ஒடுங்கும் எயிற்று ஆண் ஏனம் எனும் திறல் மாவலி - 410

தீயவன் - 412

உலகு எல்லாம் வென்றவன் - 415

ஆண்தகை - 416

வெந் திறலா(ன்) - 417

அவுணர் வேந்தன் - 8743

முசுகுந்தன்

இராமன் குல முன்னோரில் ஒருவன். திலீபன் என்ற பெயரும் உண்டு. அரக்கருக்கும் வானோருக்கும் இடையே நிகழ்ந்த போரில் வானோருக்குத் துணையாகத் தனித்துப் போர் புரிந்து வெற்றி பெற்றவன்.

இவர் குலத்தோன் வில் பிடித்த அறம் என்ன ஒருதனியே திரிந்து அமராபதி காத்தோன் - 642

முந்தைப் போர் கெழு புலவர்க்கு ஆகி அசுரரைப் பொருது வென்றோன் - 1586

முருகன்

சிவனின் மைந்தன். ஆறு முகமும் பன்னிரு தோளும் கொண்ட அழகன். சூரனைக் கொன்றவன். கிரவுஞ்ச மலையைத் தகர்த்தவன். மயிலை ஊர்தியாகப் பெற்றவன். வேற்படையினன்.

மயில் ஊர் கந்தன் - 79

முருகன் - 2148

சூர் அறுத்தவன் - 2652

இரு-மூன்று வதனத்தோன் - 3141

வெந் திறல் வேல் கொடு சூர் அடும் வீரச் சுந்தரன் - 3600

தெவ் ஆறு முகத்து ஒருவன் - 4468

முக்கண் நோக்கினன் முதல் மகன் அறுவகை முகமும் திக்கு நோக்கிய புயங்களும் - 4974

சூர் தடிந்தவன் - 5618

முரண் தொழில் முருகன் - 5687

குன்று இசைத்து அயில் உற எறிந்த கொற்றன் - 5875

மழுவலான் மைந்தன் - 7652

சிலைத் தொழில் குமரன் - 8563

குமரன் - 9309

யமதங்கி

பரசுராமனின் தந்தை.

தீட்டுறு மழுவாள் வீரன் தாதை - 6781

ரகு

இராமனின் முன்னோன். இந்திரனையும் இவ்வுலகையும் வென்ற சிறப்புடையவன்.

ரகு என்பான், வரி சிலையால் இந்திரனைவென்று,
திசை இரு நான்கும் செரு வென்றான் - 647

ரிசிகன் (இரிசிகன்)

பிருகு முனிவனின் மகன். விசுவாமித்திரரின் தங்கையாகிய கௌசிகையின் கணவன். தவ வலிமையில் சிறந்தவன். திருமாலின் கார் முகத்தைப் பெற்றவன். பின் அதனைத் தன் மகன் சமதக்னிக்குக் கொடுத்தவன்.

அம்பரீடன் 'புருடமேதம்' (நரபலி) செய்ய ஒரு மகனை வேண்டியபோது தன் மகன் சுனச் சேபனைக் கொடுத்தவன். உலக வாழ்வை முடித்து பிரம்மலோகம் சென்றபோது தன் மனைவியை நதியாக உருவெடுத்து உலகை உய்விக்கச் செய்தவன்.

இரிசிகன், அருமறையவன் - 405
மாதவர்க்கு அரசு - 406
நல் தவ ரிசிகன் - 600
மைத்துனன் (விசுவாமித்திரர்) - 604
பாரில் ஈட்டிய தவத்தின் மிக்க இரிசிகன் - 1292

ரேணுகா

பரசுராமனின் தாய்.

அறத்தினை நோக்கி ஈன்ற தாய் வினை செய்ய
அன்றோ கொன்றனன் தவத்தின் மிக்கான் - 7415

வசிட்டன் மைந்தர்

திரிசங்கு மன்னனை உடலோடு விண்ணுலகம் செலுத்த விசுவாமித்திரர் முனைந்தபோது அதற்கு உடன்பட மறுத்தவர். இதனால் 'புன்தொழில் கிராதர் ஆகும்படி' விசுவாமித்திரர் இவர்களுக்கு வசைமொழி தர அப்படியே மாறியவர்.

வசிட்டன் மைந்தர் - 592

வான்மீகி

ஆதிகாவியம் எனப் போற்றப்படும் இராமாயணத்தை வடமொழியில் முதன்முதலாக எழுதியவர். கம்பராமாயணத்திற்கு அடிப்படையானது இவரது நூல்.

மராமரம் ஏழ்துளை எய்த எய்தவற்கு எய்திய
மாக்கதை செய்த செய் தவன் - 5
பொய்இல் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி - 6
தேவபாடையின் இக்கதை செய்தவர் மூவர்
ஆனவர் தம்முளும் முந்திய நாவினான் - 10
வாங்க அரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி - 32
வான்மீகன் என்னும் நல் நான் மறையான் - 8025

விசுவாமித்திரன் புதல்வர்

வசிட்டனுக்கும் விசுவாமித்திரர்க்கும் இடையே காமதேனு பொருட்டாக உயிரிழந்தவர். சுனச்சேபனுக்குப் பதிலாக நரபலிக்குச் (புருடமேதம்) செல்ல மறுத்ததால் தந்தையால் புலையராகும்படி, வசை பெற்றவர். எண்ணிக்கையில் நூற்றுவர்.

வெப்புடைக் கொடிய மன்னன் தனயர்கள் - 578
ஐ இருபதின்மர் மைந்தர் - 580
அழுங்கல் இல் சிந்தையீர் - 605

விநாயகன்

யானைகளைப் பாடும் பொழுது சிவ மைந்தன் விநாயகன் எண்ணப்படுகிறான். ஆரியன் தனி ஐங்கரக் களிற்றினை அரிஅர புத்திரனாகிய ஐயனாரின் வாகனமான யானை எனவும் கொள்வர் (அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு)

ஆரியன் தனி ஐங் கரக் களிறு - 4845
ஐங் கர கரி - 7879

விபாண்டகன்

காசிபனின் மகன். கலைக்கோட்டு முனிவனின் தந்தை.

மாசு அறு சுரர்களோடு மற்றுளோர்தமையும் ஈன்ற
காசிபன் அருளும் மைந்தன், விபாண்டகன்
கங்கை சூடும் ஈசனும் புகழ்தற்கு ஒத்தோன்,
இருங் கலை பிறவும் எண்ணின் தேசுடைத்
தந்தை ஒப்பான்,திருவருள் புனைந்த மைந்தன் - 210

இரண்டாம் பகுதி

சமூகவியல்

மொழி (தமிழ்)

ஒரு சமூகத்தை இனங்காண்பதில் இன்றியமையாத இடம் கொள்வது மொழி. எனவே அது இங்கு முன்னிறுத்தப்பட்டுள்ளது. தமிழ் மொழியின் பெருமை, முத்தமிழாக மாண்புறு பான்மை, இலக்கியம், கவிஞர் பற்றிய கம்பர் சிந்தனைகள், முதல் புலவனாக எண்ணப்படும் அகத்தியர் பற்றிய குறிப்புகள், இராமகாதை பற்றிய அவரின் எண்ணம் ஆகியனவும் இதனுள் இடம் பெற்றுள்ளன. உயிர் எழுத்துகளின் முதலான அகரமாக இராமன் சுட்டப்படுதும், பொதிகையில் தமிழ்ச் சங்கம் இருந்ததும் சிறப்பாக அறியத்தக்கன.

தமிழ்

உழக்கும் மறை நாலினும், உயர்ந்து உலகம் ஒதும் வழக்கினும் மதிக்கவியினும் மரபின் நாடி நிழல் பொலி கணிச்சி மணி நெற்றி உமிழ் செங்கண் தழல்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான் - 2671

தண் தமிழ்த் தென்றல் - 3546

தமிழ் நிகர் நறவம் - 4557

சாந்து அளாவிய கலவை மேல் தவழ்வுறு தண்தமிழ்ப் பசுந் தென்றல் - 5044

தென்தமிழ் - 4646

என்றும் உள தென்தமிழ் - 2677

நீண்ட தமிழ் - 2666

முத்தமிழ் - 4645

சிறப்பு

உயிர்களின் முதலின் வைத்த ஓர் எழுத்தினன் (இராமன்) - 9856

தென்தமிழ் நாட்டு அகன் பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம் - 4477

முத்தமிழ்

இயற்றமிழ் (இலக்கியம்)

தீம் கவி - 32

தொடுக்குறு கவி - 10315

தமிழ் நெறி வழக்கம் - 9638

நாமுதல் படுவ மெய்யும் நாமநூல் பொருளும் - 36

புவியினுக்கு அணி ஆய், ஆன்ற பொருள் தந்து புலத்திற்று ஆகி அவி அகத்துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி சுவி உறைத் தெளிந்து தண் ணென் ஒழுக்கமும் தழுவி, சான்றோர் கவி என - 2732

நல் இயல் கவிஞர் நாவில் பொருள் குறித்து அமர்ந்த நாமச் சொல் என, செய்யுள் கொண்ட தொடை என, தொடையை நீக்கி எல்லையில் சென்றும் தீரா இசை என, பழுது இலாத பல் அலங்காரப் பண்பே காகுத்தன் பகழி - 7292

கடிகையர் கவி - 809

மூதுரைப் பெருங்கவிகளும் பிதிர்களும் மொழிவர் - 4973

கற்புடை மடந்தையர் கதையுளோர்கள் - 5240

ஆற்றல் நல் நெடுங்கவிஞன் ஓர் அங்கதம் உரைப்ப போற்ற அரும் புகழ் இழந்த பேர் ஒருவன் - 7264

புவி புகழ் சென்னி பேர் அமலன் தோள் புகழ் கவிகள் - 4555

சிறப்பு

காதைகள் சொரிவன செவி நுகர் கனிகள் - 82

செஞ்சொற் கவி இன்பம் (சீதை) - 502

நிலவரைத் தருபொருள் வழித் தண்தமிழ் நிரப்பும் புலவர் சொல் துறை புரிந்தவும் போன்றன சரங்கள் - 7497

இராமாயணம்

உலகு எலாம் பெயர பேராக்காதை - 9123

உலகொடு ஈர்வுறாக் காதை - 8772

காசுஇல் கொற்றத்து இராமன் கதை - 4

துறை அடுத்த விருத்தத் தொகை கவி - 7

பொய் இல் கேள்விப் புலமையினோர் புகல் தெய்வ மாக்கவி - 6

வைத வைவின் மராமரம் துளை எய்த எய்தவற்கு எய்திய மாக்கதை - 5

வாங்க அரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான் தீம்கவி, செவிகள் ஆரத் தேவரும் பருகச் செய்தான் - 32

நடையின் நின்று உயர் நாயகன் தோற்றத்தின் இடை நிகழ்ந்த இராமாவதாரப் பேர்த் தொடை நிரம்பிய தோம் அறு மாக்கதை சடையன் வெண்ணெய் நல்லூர் வயின் தந்ததே - 11

புன்கவி (நச்சு இலக்கியம்)

இறையும் ஞானம் இலாத . . . புன்கவி - 9

நொய்தின் நொய்ய சொல் நூல் - 5

புன்கவி எனத் தெளிவு இன்றி - 106

கவிஞர் / படைப்பாளர்

அருங்கவிப் புலவர் - 6842

கற்பகம் அனையை அக் கவிஞர் நாட்டிய சொற் பொருள் ஆம் எனத் தோன்றல் சான்றது (பம்பை) - 3713

செவ்விய மதுரம் சேர்ந்த நல்பொருளின் சீரிய கூரிய தீம் சொல் வவ்விய கவிஞர் - 93

பொய் இல் கேள்விப் புலமையினோர் - 6

முத்தமிழ்த் துறையின் முறை நோக்கிய உத்தமக் கவிஞர் - 8

முறையின் நூல் உணர்ந்தோர் - 9

சரதநாள் மலர் யாவையும் குடைந்தன, தடவிச் சுரத நூல் தெரி விடர் என, தேன்கொண்டு தொகுப்ப பரத நூல் முறை நாடகம் பயன் உறப் பகுப்பான் இரதம் ஈட்டுறும் கவிஞரைப் பொருவின தேனீ - 4185

பல் இயல் உலகு உறு பாடை பாடு அமைந்து எல்லை இல் நூற்கடல் ஏற நோக்கிய நல் இயல் நவை அறு கவிஞர் நா வரும் சொல் எனத் தொலைவு இலாத் தூணி தூக்கினான் - 7130

செவிகளால் பல கேட்டிலர் ஆயினும் தேவர்க்கு அவி கொள் நான்மறை அகப்பொருள் புறப்பொருள் அறிவார் கவிகள் ஆகுவார் காண்குவார் மெய்ப்பொருள் - 6220

சிறப்பு

கவிஞரின் அறிவு மிக்காய் (வீடணன்) - 7402

அகத்தியன்

என்றும் உள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான் - 2677

நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான் - 2666

தமிழ் முனி - 8942

மாறு இலாத் தமிழ்முனி வனத்தை நண்ணினான் ஊறு இலா முனிவரன் உவந்து முன் வர - 10213

குடங்கையில் வாரிதி அனைத்தும் கொண்டவன் - 10214

அலைநெடும் புனல் அறக் குடித்தலால், அகம் நிலை பெற நிலைநெறி நிறுத்தலால், நெடு மலையினை மண்உற அழுத்தலால், தமிழ்த் தலைவனை நிகர்த்தது அத் தயக்கு தானையே - 2287

கல்வி வலார்

எண்இல் நுண் நூல் ஆய்ந்தே கடந்தான் அறிவு என்னும் அளக்கர் (தயரதன்) - 172

நூல்வரைத் தொடர்ந்து, பயத்தொடு பழகி நுணங்கிய நுவல அரும் உணர்வு - 100

பரிணிதர் தெரித்த நூலில் நல்நயம் உணர்ந்தோன் - 585

பல்நூல் விதங்களால் அவன் மெல்லென மெல்லென விளம்பும் இதங்கள் - 816

இசைத்தமிழ்

அருங்கல மின்னார் தந்த பல்லாண்டு இசை - 1246

பாடகச் செம் பதும மலர்ப் பாவையர் பல்லாண்டு இசைப்ப - 240

வாசமதுமலர் ஓதியர் குழிலினோடு உற கூறு பல்லாண்டு ஒலி - 1113

கமல வாள்முக வடிவுடை மடந்தையர் வாழ்த்து எடுப்பவே - 254

கூறு பாடலும் குழலின் பாடலும் வேறு வேறு நின்று இசைக்கும் வீதிவாய் - 87

தெள்விளிச் சிறியாழ்ப் பாணர் தேம் பிழி நறவம் மாந்தி வள்விசிக் கருவிபம்ப வயின்வயின் வழங்கு பாடல் - 39

மந்திர கீத ஓதை - 809

சிறப்பு

குழல் வண்டு தமிழ்ப்பாட்டு இசைக்கும் - 3736

பதங்களில் தண்ணுமை, பாணி, பண், உற விதங்களின் விதிமுறை சதி மிதிப்பவர் மதங்கியர்; அச் சதி வகுத்துக் காட்டுவ சதங்கைகள் - 143

நாடகத்தமிழ்

கரம்பயில் முரசு இனம் கறங்க, கைதொடர் நரம்பு இயல் இமிழ் இசை நவில நாடகம் அரம்பையர் ஆடிய அரங்கு - 5401

தமிழ்நாடு

அகன் தமிழ் நாடு - 4476

வண் தமிழுடைத் தென்திசை - 4522

தென் தமிழ் நாடு - 4646

இனிய தென் தமிழ் நாடு - 4644

அத்திருத்தகு நாட்டினை அண்டர்நாடு ஒத்திருக்கும் என்றால் உரை ஒக்குமோ எத்திறத்தினும் ஏழ் உலகும் புகழ் முத்தும் முத்தமிழும் தந்து, முற்றலால் - 4645

துறக்கம் உற்றார் மனம் என்ன துறைகெழு நீர்ச் சோணாடு - 4476

மக்கட் பாகுபாடு

இராமாயணத்துள் காணப்படும் பல்வேறு இன, குல மாந்தர் பற்றி இதில் தொகுத்துரைக்கப் படுகிறது. தொல்காப்பியர் அடிப்படையிலான மக்கட்பாகுபாடு முன் அமைகிறது. பின் நில அடிப்படையிலான பகுப்பு உள்ளது. அடுத்து

தொழில் அடிப்படையில் அகரவரிசை அமைகிறது. ஒவ்வொரு பிரிவின் கீழும் அதற்கு உரியோரின் குலம் / இனத்தைச் சுட்டும் சொற்கள், அவர் தம் இயல்பு, உரிமை, செயல், சிறப்பு என்பன அடுக்கப் பட்டுள்ளன. அடைப்புக்குறியுள் உள்ள பெயர்கள் குறிப்பிட்ட அச் செய்திக் குரியோரைச் சுட்டுகின்றன.

முனிவர்கள் அந்தணர்களாகவும் சுட்டப் பட்டுள்ளமையின் அந்தணர் பின் அவர் பற்றிய குறிப்புகள் தொடர்ந்துள்ளன.

ஒப்பனைக்கு எனத் தனிப்பணியாளர் இருந்துள்ளனர். நெய்தல் தொழிலாளரும் கம்மியர் என அழைக்கப்பட்டுள்ளனர். இராவணன் அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணி காணப்படுகிறது. அறுவை மருத்துவம் பேசப்பட்டுள்ளது என்பன சில சிறப்புச் செய்திகளாகும்.

நீண்டது ஓர் பெருங் கொடை அருங் கடன்
நேர்ந்தான். - 9665

இலக்குவன்

சுற்று ஆர்ந்த கச்சில் சுரிகை புடை தோன்ற
ஆர்த்து, வில் தாங்கி, வாளிப் பெரும் புட்டில்
புறத்து வீக்கி, பற்று ஆர்ந்த செம் பொன்
கவசம், பனி மேரு ஆங்கு ஓர் புற்று ஆம் என
ஓங்கிய தோளொடு, மார்பு போர்க்க. - 1719

அடியில் சுடர் பொன் கழல் ஆர்கலி நாண ஆர்ப்ப,
பிடியில் தடவும் சிலை நாண் பெரும் பூசல்
ஓசை, இடியின் தொடர, - 1720

கட்டினன் சுரிகையும் கழலும்; பல் கணைப்
புட்டிலும் பொறுத்தனன்; கவசம் பூட்டு அமைத்து
இட்டனன்; எடுத்தனன் வரி வில்; ஏந்தலைத்
தொட்டு, அடி வணங்கி நின்று, - 2403

மங்கலம் தேவர் கூற, வானவ மகளிர் வாழ்த்தி,
பங்கம் இல் ஆசி கூறி, பலாண்டு இசை பரவ,
பாகத் திங்களின் மோலி அண்ணல் திரிபுரம்
தீக்கச் சீறிப் பொங்கினன் என்ன, தோன்றிப்
பொலிந்தனன் - போர்மேல் போவான். - 8944

பொலங் கொண்டல் அனைய மேனிப் புரவலன்,
பொருமி, கண்ணீர் நிலம் கொண்டு படர நின்று,
நெஞ்சு அழிவானை, தம்பி வலம் கொண்டு,
வயிர வல் வில் இடம் கொண்டு, வஞ்சன்
மேலே, சலம் கொண்டு, கடிது சென்றான்,
'தலை கொண்டு வருவென்' என்றே - 8946

குகன்

கட்டிய சுரிகையன், கடித்த வாயினன்,
வெட்டிய மொழியினன், விழிக்கும் தீயினன்,
கொட்டிய துடியினன், குறிக்கும் கொம்பினன்,
'கிட்டியது அமர்' எனக் கிளரும் தோளினான் - 2311

'துடி எறி; நெறிகளும், துறையும், சுற்றுற
ஒடியெறி; அம்பிகள் யாதும் ஓட்டலிர்;
கடி எறி கங்கையின் கரை வந்தோர்களைப்
பிடி; எறி, பட' எனா, பெயர்த்தும் கூறுவான்: - 2315

கும்பகருணன்

உடன் இருத்தி, உதிரத்தொடு ஒள் நறைக்
குடன் நிரைத்தவை ஊட்டி, தசைக் கொளீஇ,
கடல் நுரைத் துகில் சுற்றி, கதிர்க் குழாம்
புடை நிரைத்து ஒளிர் பல் கலன் பூட்டினான் - 7344

பேர விட்ட பெரு வலி இந்திரன்
ஊர விட்ட களிற்றொடும் ஓடு நாள்,
சோர விட்ட சுடர் மணி ஓடையை
வீரபட்டம் என, நுதல் வீக்கினான் - 7345

மெய் எலாம் மிளிர் மின் வெயில் வீசிட,
தொய்யில் வாசத் துவர் துதைந்து ஆடிய
கையின் நாகம் என, கடல் மேனியில்,
தெய்வம் நாறு செஞ் சாந்தமும் சேர்த்தினான் - 7346

விடம் எழுந்ததுபோல், நெடு விண்ணினைத்
தொட உயர்ந்தவன் மார்பிடைச் சுற்றினான்,
இடபம் உந்தும், எழில் இரு - நான்கு தோள்,
கடவுள் ஈந்த கவசமும் கட்டினான் - 7347

படை எழுச்சி

வயிர் ஒலி, வளை ஒலி, வன் கார் மழை ஒலி,
முரசு ஒலி மண்பால் உயிர் உலைவுற
நிமிரும் போர் உறும் ஒலி, - 5508

'எழுக, வெம் படைகள்!' என்றான்; 'ஏ' எனும்
அளவில், எங்கும்' முழு முரசு எற்றி, கொற்ற
வள்ளுவர் முடுக்க, முந்தி, பொழி திரை
அன்ன வேலை புடை பரந்தென்னப் பொங்கி,
வழுவல் இல் வெள்ளத் தானை, தென் திசை
வளர்ந்தது அன்றே! - 6056

வீரரும் விரைவில் போனார்; விலங்கல் மேல்
இலங்கை, வெய்யோர் பேர்வு இலாக் காவற்
பாடும், பெருமையும், அரணும் ,கொற்றக் கார்
நிறத்து அரக்கர் என்போர் முதலிய, கணிப்பு
இலாத, வார் கழல் அனுமன் சொல்ல, வழி
நெடிது எளிதின் போனார். - 6057

ஊழி திரியும் காலத்தும் உலையா நிலைய
உயர் கிரியும், வாழி வற்றா மறி கடலும்,
மண்ணும், வட பால் வான் தோய, பாழித்
தெற்கு உள்ளன கிரியும் நிலனும் தாழ, பரந்து
எழுந்த ஏழு - பத்தின் பெரு வெள்ளம் மகர
வெள்ளத்து இறுத்ததால். - 6060

ஆயிரம் ஐந்தொடு ஐந்து ஆம், ஆழி அம் தடந்
தேர்; அத் தேர்க்கு ஏயின இரட்டி யானை;
யானையின் இரட்டி பாய் மா; போயின பதாதி - 5559

தீயினில் செவ்வே வைத்து, சின்னங்கள் வேறு
வேறு வாயினில் ஊது வீரர் - 5731

மேகம் எத்தனை, அத்தனை மால் கரி, விரிந்த
நாகம் எத்தனை, அத்தனை தேர்; நனி நாளாப்
போகம் எத்தனை, அத்தனை புரவியின் ஈட்டம்;
ஆகம் உற்றன எத்தனை, அத்தனை அனிகம். - 9311

இன்ன தன்மைய யானை, தேர், இவுளி என்று
இவற்றின் பன்னு பல்லணம், பருமம், மற்று
உறுப்பொடு பலவும், பொன்னும் நல் நெடு
மணியும் கொண்டு அல்லது புனைந்த சின்னம்
உள்ளன இல்லன, மெய்ம் முற்றும் தெரிந்தால் - 9312

இப் பெரும் படை எழுந்து இரைத்து ஏக, மேல்
எழுந்த துப்பு உதிர்ந்தன தூளியின் படலம்
மீத் தூர்ப்ப, தப்பு இல் கார் நிறம் தவிர்ந்தது;
கரி மதம் தழுவ, உப்பு நீங்கியது, ஓங்கு நீர்
வீங்கு அலை உவரி - 9313

பாசறை

உறை (பாசறை) - 8703

அந்தம் இலாதது ஓர் உறையுள் - 6516

கவிக்குலம் துன்னு பாசறைச் சூழல்கள் - 6852

பாடி வீடு - 6512

தானை வைப்பு - 6513

அளக்க அரிது ஆகிய கணக்கொடு அயல்
நிற்கும் விளக்குஇனம் இருட்டினை விழுங்கி
ஒளி கால, உளக் கடிய காலன் மனம் உட்கும்
மணி வாயில் இளக்கம் இல் கடற்படை
இருக்கையை எதிர்ந்தான். - 4905

பொன்னினும் மணியினானும் நான் முகன்
புனைந்த பொற்பின் நல் நலம் ஆக வாங்கி,
நால் வகைச் சதுரம் நாட்டி, இன்னர் என்னாத
வண்ணம், இறைவர்க்கும் பிறர்க்கும் எல்லாம்
நல்நகர் நொய்தின் செய்தான்; தாதையும்
நாண் உட்கொண்டான். - 6760

போர் அணி வகுத்தல்

சேனைத் தூசி (முன்னணிப் படை) - 9368

நமர் கொடிப் படையை எல்லாம், "இன்று எழுக"
என்க! - 6127

வற்கம் ஆயின மாப் படையோடும் சென்று - 7109

யானை, இரதம், அயல் பண்ணு புரவி, படை
வீரர், தொகு பகுதி - 9465

தார் செல - 7374

சேண் உறு தார்க் கொடி - 7372

சூழ்ந்த தார் நெடும் படை - 3001

கடை செல - 7374

நெற்றி (படையின் முன் பகுதி) - 6750

அரக்கர் தானை கொழுந்து முந்தி வந்து
உற்றது (முன்னணிப்படை) - 9076

இரண்டு கை - 7936

மாப் படைக் கூழையின் நெற்றி நின்றானை - 7134

வீரிய! விதியின் எய்தி, பதினெழு வெள்ளத்தோடும்,
மாருதி, மேலை வாயில் உழிஞைமேல்
வருவதானான்; ஆரியன், அமைந்த வெள்ளம்
அத்தனையோடும், வெற்றிச் சூரியன் மகனைத்
தன்னைப் பிரியலன் நிற்கச் சொன்னான் - 6950

அன்றியும், பதினேழ் வெள்ளத்து அரியொடும் அரசன் மைந்தன்; தென் திசை வாயில் செய்யும் செரு எலாம் செய்வதானான்; ஒன்று பத்து ஆறு வெள்ளத்து அரியொடும் துணைவரோடும் நின்றனன், நீலன் என்பான், குண திசை வாயில் நெற்றி - 6951

இம்பரின் இயைந்த காயும் கனியும் கொண்டு, இரண்டு வெள்ளம் வெம்பு வெஞ் சேனைக்கு எல்லாம் உணவு தந்து உழலவிட்டான்; உம்பியை, வாயில்தோறும் நிலை தெரிந்து உணரச் சொன்னான்; தம்பியும் தானும் நிற்பதாயினான்; சமைவு ஈது' என்றான் - 6952

காட்டிய காலகேயர் கொழு நிணக் கற்றை காலத் தீட்டிய படைக் கை வீரச் சேனையின் தலைவ! தெள்ளி ஈட்டிய அரக்கர் தானை இருநூறு வெள்ளம் கொண்டு, கீட்டிசை வாயில் நிற்றி, நின் பெருங் கிளையினோடும் - 6963

காலந்தன் களிப்புத் தீர்த்த மகோதர! கர்லையே போய், மால் ஒன்றும் மனத்து வீரன் மாபெரும்பக்கனோடும் கூலம் கொள் குரங்கை எல்லாம் கொல்லுதி - வெள்ளம் ஆன நால் - ஐம்பதோடும் சென்று, நமன் திசை வாயில் நண்ணி - 6964

இந்திரன் பகைஞ! - அந் நாள் காற்றினுக்கு அரசன் மைந்தன் கடுமை நீ கண்டது அன்றோ? நூற்று - இரண்டு ஆய வெள்ளம் நுன் பெரு படைஞர் சுற்ற, மேல் திசை வாயில் சேர்த்தி, விடிவதன் முன்னம் வீர! - 6965

இந் நெடுங் காலம் எல்லாம் இமையவர்க்கு இறுதி கண்டாய்; புன் நெடுங் குரங்கின் சேரல் புல்லிது; புகழும் அன்றால்; அந் நெடு மூலத்தானை அதனொடும், அமைச்சரோடும், தொல் நெடு நகரி காக்க - விருபாக்க!' என்னச் சொன்னான். - 6966

கட கரி புரவி ஆள் தேர், கமலத்தோன் உலகுக்கு இப்பால் புடை உள பொருது, கொண்டு, போர் பெறாப் பொங்குகின்ற இடை இடை மிடைந்த சேனை இருநூறு வெள்ளம் கொண்டு, வட திசை வாயில் காப்பேன் யான் என வகுத்து விட்டான். - 6967

தடந் திரைப் பரவை அன்ன **சக்கர யூகம்** புக்குக் கிடந்தது - 9003

அன்னான் வரும் அளவின்தலை, நிலை நின்றன அனிகம்; பின் ஆனதும் முன் ஆனது; பிறிந்தார்களும் செறிந்தார் - 7898

சிறப்பு

ஐயனும், அமைந்து நின்றான், ஆழியான் அளவின் நாமம் நெய் சுடர் விளக்கின் தோன்றும் நெற்றியே நெற்றியாக, மொய் மயிர்ச் சேனை பொங்க, முரண் அயில் உகிர் வாள் மொய்த்த கைகளே கைகள் ஆக, கடைக் கூழை திரு வால் ஆக. - 5570

சென்று வெங் களத்தை எய்தி, சிறையொடு துண்டம், செங் கண், ஒன்றிய கழுத்து, மேனி, கால், உகிர், வாலொடு ஒப்ப, பின்றல் இல் வெள்ளத் தானை முறை படப் பரப்பி, பேழ் வாய் அன்றிலின் உருவம் ஆய அணி வகுத்து, அமைந்து நின்றான் - 8452

அகழி தூர்த்தல்

அகழி தூர்த்தல் - 7018

முற்றுகையிடல்

விதியின் எய்தி, பதினேழு வெள்ளத்தோடும் மாருதி மேலை வாயில் **உழிஞைமேல்** வருவதானான் - 6950

உளைப்புறும் ஒத வேலை ஓங்கு அலை ஒடுங்கத் தூர்ப்ப, அளப்ப அருந் தூளிச் சுண்ணம் ஆசைகள் அலைக்க, பூசல் இளைப்ப அருந் தலைவர், முன்னம் ஏவலின், எயிலை முற்றும் வளைத்தனர், விடிய, தத்தம் வாயில்கள் தோறும் வந்து - 6970

நூற் கடல் புலவராலும் நுனிப்ப அரும் வலத்தது ஆய வேற் கடல் தானை ஆன விரி கடல் விழுங்கிற்றேனும், கார்க் கடல் புறத்தது ஆக, கவிக் கடல் வளைந்த காட்சி, பாற்கடல் அழுவத்து உள்ளது ஒத்தது, அப் பதகன் மூதூர் - 6972

அலகு இலா அரக்கன் சேனை அகப்பட, அரியின் தானை, வலைகொலாம் என்ன, சுற்றி வளைத்ததற்கு உவமை கூறின், கலை குலாம் பரவை ஏழும் கால் கிளர்ந்து எழுந்த காலத்து உலகு எலாம் ஒருங்கு கூடி, ஒதுங்கினவேயும் ஒக்கும். - 6973

சிறப்பு

இராமனை முற்றுகையிடல்

ஓசனை நூற்றின் வட்டம் இடைவிடாது உறைந்த சேனைத் தூசி வந்து அண்ணல் தன்னைப் போக்கு அற வளைந்து சுற்றி, வீசின படையும் அம்பும் மிடைதலும் - 9368

'எல்லோம் எல்லோம் ஒன்றி வளைந்து, இந் நெடியோனை வல்லே வல்லே போர் வலி முற்றி மலையோமேல், வெல்லோம் வெல்லோம்!' என்றனன், வன்னி; மிடலோரும், 'தொல்லோன் சொல்லே நன்று' என, அ.'.தே துணிவுற்றார். - 9484

போர்

போர் நிகழ்வினைக் குறிப்பன

வில் உமிழ் பகழி - 7688

வன் திண் சிலையின் வயிரக் காலால் வடித் திண் வாளி ... ... உதைப்பித்தான் -

ஒன்று போல்வன, ஆயிரம் பகழி கோத்து உய்த்தான் - 5791

கொண்ட மா மரத்தை அம்பின் கூட்டத்தால், காட்டத் தக்க கண்டம் ஆயிரத்தின் மேலும் உள என, கண்டம் கண்டான்; - 7146

வில்லிடை கிழித்த மிடல் வாளி - 6132

நேரே குலை உறக் குளித்த வாளி - 7289

மழைபோல் சிலை சிந்தின கணை - 2976

வரி வில் பகழி சிந்த - 3044

சிலை மாமேகம் சோனை பட குடர்சூறை பட சுடர் வாளோடும் தானைபட, தனியானைபட - 2322

புண் உற வாளி தூர்த்தல் - 4209

வில்லின் நாணினைச் செவ் வழிக் கோதையின் தெறிக்க - 7139

வாயில் கனல் வெங் கடு வாளி இனம் பாய - 8972

ஏழினொடு ஏழு வாளி அழுந்தாது கழன்றிடப் பெய்து - 3427

சிலை வழங்கு அசனி மாரி - 8462

பகு வாயில் அயில் பகழி சில விதைத்தான் - 9056

தேரும் மதமாவும் வரை ஆளியொடு வாசி மிகுசீயம் முதலா ஊரும் அவை யாவும் கடாயினர்கள் உந்தினார்களால் காரும் உரும் ஏறும் எரி ஏறும் நிகர் வெம்படையொடு அம்பு கடிதின் தூரும் வகை தூவினர்; துரந்தனர்கள் எய்தனர், தொடர்ந்தனர்களால் - 9444

மாறி மாறி, வரி சிலை வாங்கினான் நூறு நூறினோடு ஐ - இருநூறு அவை வேறு வேறு திசை உற, வெங் கணை நூறி நூறி, இராமன் நுறுக்கினான். - 9889

ஊக்கிய படைகள் - 5633

இவர் பொன் தோளின் சுரிகையால் அவன் உருவிக் குத்தலும் - 5702

அரக்கர் தம் ஆற்றற்கு ஏற்ற எறிவன,எய்வ, பெய்வ, ஏற்றுறு படைகள் யாவும் - 8470

பின்னும் அங்கு ஓர் மராமரம் கையின் வாங்கி வேரொடும் சுழற்றி விட்டான் - 7153

விண்ட வாள் அரக்கன் மீது, விசும்பு எரி பறக்க, விட்டான், பண்டை மால் வரையின் மிக்கது ஒரு கிரி - 7146

தாக்கிய பரிகள் - 5633

நூக்கிய கரிகள் - 5633

நூக்கிய களிறும், தேரும், புரவியும், நூழில் செய்ய - 7162

சிறப்பு

வார் மதக் கரிகளின் கோடு வாங்கி, மாத் தேர் படப் புடைக்கும்; அத் தேரின் சில்லியால், வீரரை உருட்டும்; அவ் வீரர் வாளினால், தாருடைப் புரவியைத் துணியத் தாக்குமால் (அனுமன்) - 5634

உறுக்கி, தனி எதிர் நின்றவன் உரத்தில், தனது ஒளிர் பல் இறுக்கி, பல நெடு வாய் மடித்து, எரி கண்தொறும் இழிய, முறுக்கிப் பொதி நிமிர் பல்விரல் நெரிய, திசை முரியக், குறுக்கிக் கரம், நெடுந் தோள் புறம் நிமிரக் கொடு குத்த, (இராவணன்) - 7200

போர்த் தொடக்கம்

சீர்த்தது போர் - 5720

போர் நிகழ் முறை

வஞ்சின முரைத்தல்/வீரவுரை

பராவும் தொல் செரு முறை வலிக்கு உரியன பகர்ந்து, விராவு நல் அமர் விளைக்குதும், யாம் - 7505

இடித்து, உரப்பி, 'வந்து போர் எதிர்த்தியேல் அடர்ப்பென்' என்று, அடித்தலங்கள் கொட்டி, வாய் மடித்து,அடுத்து, அலங்கு தோள் புடைத்து நின்று, உளைத்த பூசல் புக்கது என்ப-மிக்கு இடம் துடிப்ப, அங்கு, உறங்கு வாலி திண் செவித் துளைக்கணே (சுக்கிரீவன்) - 3946

விடம் திரண்டனைய மெய்யான் அவ்வுரை விளம்பக் கேளா, 'இடம் புகுந்து இனைய செய்த இதனொடு சீற்றம் எஞ்சேன்; தொடர்ந்து சென்று உலகம் மூன்றும் துருவினென் ஒழிவுறாமல் கடந்து, பின் குரங்கு என்று ஓதும் கருவையும் களைவன்' என்றான் (அக்ககுமாரன்) - 5690

'என் தோள் வலிஅதனால் எடுத்து யான் எற்றவும், இறவா நின்றாய்எனின், நீ பின் எனை, நின் கைத் தல நிரையால், குன்றே புரை தோளாய்! மிடல் கொடு குத்துதி; குத்தப் பொன்றேன்எனின், நின்னோடு எதிர் பொருகின்றிலென்' என்றான் (அனுமன் > இராவணன்) - 7182

ஒன்று உண்டு இனி உரை நேர்குவது; உன் மார்பின், என் ஒரு கை, குன்றின்மிசை கடை நாள் விழும் உரும்ஏறு எனக் குத்த, நின்று, உன் நிலை தருவாய்எனின், நின் நேர் பிறர் உளரோ? இன்றும் உளை; என்றும் உளை; இலை, ஓர் பகை' என்றான் (இராவணன் > அனுமன்) - 7198

'எறிகுவென் இதனை நின்மேல்; இமைப்புறும் அளவில் ஆற்றல் மறிகுவது அன்றி, வல்லை மாற்றினைஎன்னின், வன்மை அறிகுவர் எவரும்; பின்னை யான் உன்னோடு அமரும் செய்யேன்; பிறிகுவென்; உலகில், வல்லோய்! பெரும் புகழ் பெறுதி' என்றான். (அனுமன் > கும்பகருணன்) - 7471

மாற்றம் அ.·.து உரைப்பக் கேளா, மலை முழை திறந்தது என்னக் கூற்று உறழ் பகுவாய் விள்ள நகைத்து, 'நீ கொணர்ந்த குன்றை ஏற்றனென்;

ஏற்ற காலத்து, இறை அதற்கு ஒற்கம் எய்தின், தோற்றனென், உனக்கு; என் வன்மை சுருங்கும்' என்று அரக்கன் சொன்னான் (கும்பகருணன் > அனுமன்) - 7472

'என்னொடு பொருதியேல், இன்னும், யான் அமர் சொன்னன பரிவல்' என்று, அரக்கன் சொல்லலும், 'முன், "இனி எதிர்க்கிலேன்" என்று முற்றிய பின், இகல் பழுது' என, பெயர்ந்து போயினான் (அனுமன் > கும்பகருணன்) - 7534

காக்கிய வந்தனைஎன்னின், கண்ட என் பாக்கியம் தந்தது, நின்னை; பல் முறை ஆக்கிய செரு எலாம் ஆக்கி, எம்முனைப் போக்குவென், மனத்துறு காதல் புன்கண் நோய் (கும்பகருணன் > இராமன்) - 7555

ஏதி வெந் திறலினோய்! இமைப்பிலோர் எதிர், பேது உறு குரங்கை யான் பிணித்த கைப் பிணி, கோதை வெஞ் சிலையினால், கோடி வீடுஎனின், சீதையும் பெயர்ந்தனள், சிறை நின்றாம்' என்றான் (கும்பகருணன் > இராமன்) - 7556

என்றலும், முறுவலித்து, இராமன், 'யானுடை இன் துணை ஒருவனை எடுத்த தோள் எனும், குன்றினை அரிந்து யான் குறைக்கிலேன் எனின், பின்றினென் உனக்கு; வில் பிடிக்கிலேன்' என்றான் (இராமன் > கும்பகருணன்) - 7557

பெய்தவத்தினோர் பெண்கொடி, எம்முடன் பிறந்தாள் செய்த குற்றம் ஒன்று இல்லவள், நாசி வெஞ்சினத்தால் கொய்த கொற்றவ! மற்று அவள் கூந்தல் தொட்டு ஈர்த்த கை தலத்திடைக் கிடத்துவென்; காக்குதி என்றான் (கும்பகருணன் > இலக்குவன்) - 7506

அல்லினால் செய்தத நிறத்தவன் அனையது பகர மல்லினால் செய்த புயத்தவன் மாற்றங்கள் நும்பால் வில்லினால் சொல்லின் அல்லது வெந்திறல் வெள்கச் சொல்லினால் சொலக் கற்றிலம் யாம் எனச் சொன்னான் (இலக்குவன் > கும்பகருணன்) - 7507

உம்பிக்கு உயிர்ஈறு செய்தான் ஒருவன் தம்பிக்கு உயிர் ஈறு சமைத்து, அவனைக் கம்பிப்பது ஓர் வன்துயர் கண்டிலனேல் நம்பிக்கு ஒரு நன்மகனோ,இனி நான் (அதிகாயன்) - 7737

கிட்டிப் பொருது, அக்கிளர் சேனை எலாம் மட்டித்து, உயர் வானரர் வன் தலையை வெட்டித் தரை இட்டு இரு வில்லினரைக் கட்டித் தருவென்; இது காணுதியால் (அதிகாயன்) - 7738

'உன்மேல் அதிகாயன் உருத்துளனாய் நல் மேருவின் நின்றனன்; நாடி அவன் தன்மேல் எதிரும் வலி தக்குளையேல், பொன் மேனிய! என்னொடு போதுதியால் (அதிகாயன் > இலக்குவன்) - 7775

'சையப் படிவத்து ஒரு தந்தையை முன் மெய் எப்படிச் செய்தனன் நும் முன், விரைந்து, ஐயப்படல், அப்படி இப் படியில் செய்யப்படு கிற்றி; தெரித்தனெனால் (அதிகாயன் > இலக்குவன்) - 7776

"கொன்றான் ஒழிய, கொலை கோள் அறியா நின்றானொடு நின்றது என், நேடி?" எனின், தீன் தாதை படும் துயர், தந்தையை முன் வென்றானை இயற்றுறும் வேட்கையினால் (அதிகாயன் > இலக்குவன்) - 7777

வானோர்களும், மண்ணினுளோர்களும், மற்று ஏனோர்களும், இவ் உரை கேண்மின்; இவன் தானே பொருவான்; அயலே தமர் வந்து ஆனோரும் உடன் பொருவான், அமைவான் (அதிகாயன் > இலக்குவன்) - 7778

'எழுவாய், இனி என்னுடன்' என்று, எரியும் மழு வாய் நிகர் வெஞ் சொல் வழங்குதலும், தழுவா, 'உடன் ஏகுதி; தாழல்!' எனத் தொழுவார் தொழு தாள் அரி சொல்லுதலும் - 7779

'வில் எடுக்க உரியார்கள், வெய்ய சில வீரர், இங்கும் உளர்; மெல்லியோய்! கல் எடுக்க உரியானும் நின்றனன்; அது இன்று நாளையிடை காணலாம்; எல் எடுத்த படை இந்திராதியர் உனக்கு இடைந்து உயிர் கொடு ஏகுவார்; புல் எடுத்தவர்கள் அல்லம்; வேறு சில போர் எடுத்து, எதிர் புகுந்துளோம் (அனுமன் > இந்திரசித்து) - 8075

'என்னொடே பொருதியோ? அது அன்று எனின், இலக்குவப் பெயரின் எம்பிரான் - தன்னொடே பொருதியோ? உன் தந்தை தலை தள்ள நின்ற தனி வள்ளலாம் மன்னொடே பொருதியோ? உரைத்தது மறுக்கிலோம்' என, வழங்கினான் - பொன்னொடே பொருவின் அல்லது ஒன்றொடு பொருப் படா உயர் புயத்தினான். (அனுமன் > இந்திரசித்து) - 8076

கல்கொண்டும் மரங்கள் கொண்டும் கைக் கொண்டும் களித்து நும்வாய்ச் சொல் கொண்டும் மயிரின் புன் தோல் தோள் கொண்டும் தள்ளி வெள்ளிப் பல் கொண்டும் மலைகின்றாரின் பழி கொண்டு பயந்தது; யான்ஓர் வில்கொண்டு நின்றபோது விறல் கொண்டு மீள்திர் போலாம் (இராவணன் > வானரங்கள்) - 7155

'இருவிர் என்னொடு பொருதிரோ? அன்றுஎனின், ஏற்ற ஒருவிர் வந்து, உயிர் தருதிரோ? உம் படையோடும் பொருது பொன்றுதல் புரிதிரோ? உறுவது புகலும்: தருவல், இன்று உமக்கு ஏற்றுளது யான்' எனச் சலித்தான் (இந்திரசித்து > இலக்குவன்) - 8501

'வாளின், திண் சிலைத் தொழிலினின், மல்லினின், மற்றை ஆளுற்று எண்ணிய

படைக்கலம் எவற்றினும், அமரில் கோளுற்று, உன்னொடு குறித்து, அமர் செய்து, உயிர் கொள்வான் சூளுற்றேன்; இது சரதம்' என்று, இலக்குவன் சொன்னான் (இலக்குவன் > இந்திரசித்து) - 8502

'முன் பிறந்த உன் தம்முனை முறை தவிர்த்து, உனக்குப் பின்பு இறந்தவன் ஆக்குவென்; பின் பிறந்தோயை முன்பு இறந்தவன் ஆக்குவென்; இது முடியேனேல், என், பிறந்ததனால் பயன் இராவணற்கு?' என்றான் (இந்திரசித்து > இலக்குவன்) - 8503

'இலக்குவன் எனும் பெயர் உனக்கு இயைவதே என்ன, இலக்கு வன் கணைக்கு ஆக்குவென்; "இது புகுந்து இடையே விலக்குவன்" என விடையவன் விலக்கினும், வீரம் கலக்குவன்; இது காணும், உன் தமையனும் கண்ணால்' (இந்திரசித்து > இலக்குவன்) - 8504

'அறுபது ஆகிய வெள்ளத்தின் அரக்கரை அம்பால், இறுவது ஆக்கிய இரண்டு வில்லீரும் கண்டு இரங்க, மறுஅது ஆக்கிய எழுபது வெள்ளமும் மாள, வெறுவிது ஆக்குவென், உலகை இக் கணத்தின் ஓர் வில்லால் (இந்திரசித்து > இலக்குவன்) - 8505

'கும்பகன்னன் என்று ஒருவன், நீர் அமரிடைக் கொன்ற தம்பி, அல்லன் நான்; இராவணன் மகன்; ஒரு தமியேன்; எம்பிமாருக்கும், என் சிறு தாதைக்கும், இருவீர் செம் புணீர்கொடு கடன் கழிப்பேன்' எனத் தீர்ந்தான் (இந்திரசித்து > இலக்குவன்) - 8506

அரக்கர் என்பது ஓர் பெயர் படைத்தீர்க்கு எலாம் அடுத்த புரக்கும் நன்கடன் செயஉளன், வீடணன் போந்தான் கரக்கும் நுந்தைக்கு நீ செயக் கடவன கடன்கள் இரக்கம் உற்று, உனக்கு அவன் செயும் என்றனன் இளையோன் - 8507

ஆர்ப்பொலி

அன்னார் தாமும் ஆர்கலி எழும் என ஆர்த்தார் - 9485

கொல் இயல் அரக்கர் நெஞ்சில் குடி புக அச்சம், வீரன் வில் என இடிக்க, விண்ணோர் நடுக்குற, வீரன் ஆர்த்தான் - 5566

தழிய வானர மாக் கடல் சாய்தலும், பொழியும் வெம் படைப் போர்க் கடல் ஆர்த்தவால் ஒழியும் காலத்து உலகு ஒரு மூன்றும் ஒத்து அழியும் மாக் கடல் ஆர்ப்பு எடுத்தென்னவே - 7050

"இறந்தனன், இளவல்" என்னா, இறைவியும் இடுக்கண் எய்தும்; மறந்தனர் உறங்குகின்ற வஞ்சரும் மறுகி, "மீளப் பிறந்தனர்" என்று கொண்டு, ஓர் பெரும் பயம் பிடிப்பர் அன்றே; அறம் தரு சிந்தை ஐய! ஆர்த்தும்' என்று அனுமன் சொன்னான். 8273

'அழகிது' என்று அண்ணல் கூற, ஆர்த்தனர் கடல்கள் அஞ்சிக் குழைவுற, அனந்தன் உச்சிக் குன்றின்நின்று அண்டகோளம் எழ மிசை, உலகம் மேல் மேல் ஏங்கிட, இரிந்து சிந்தி மழை விழ, மலைகள் கீற, மாதிரம் பிளக்க மாதோ. - 8274

இடிக்கின்ற அசனி என்ன இரைக்கின்றது, இராமன் போர் வில்; வெடிக்கின்றது அண்டம் என்ன, படுவது தம்பி வில் நாண்; அடிக்கின்றது என்னை வந்து; செவிதொறும் அனுமன் ஆர்ப்பு; பிடிக்கின்றது உலகம் எங்கும், பரிதி சேய் ஆர்ப்பின் பெற்றி - 8278

அங்கதன் அவனும் ஆர்த்தான்; அந்தரம் ஆர்க்கின்றானும், வெங் கத நீலன்; மற்றை வீரரும், வேறு வேறு, பொங்கினர் ஆர்த்த ஓசை அண்டத்தும் புறத்தும் போன; சங்கை ஒன்று இன்றித் தீர்ந்தார் பாசத்தை, தருமம் நல்க - 8279

காந்து வெஞ் சுடர்க் கவசம் அற்று உகுதலும், கண்தொறும் கனல் சிந்தி, ஏந்து வல் நெடுந் தோள் புடைத்து ஆர்த்து, அங்கு ஓர் எழு முனை வயிரப் போர் வாய்ந்த வல் நெடுந் தண்டு கைப்பற்றினன்; 'வானரப் படை முற்றும் சாந்து செய்குவனாம்' என முறை முறை அரைத்தனன், தரையோடும். (கும்பகருணன்)- 7604

சங்கொலித்தல்

மின்ஆர்வானம் இற்று உறும் என்றே, விளி சங்கம் கொன்னே ஊதி, தோள் புடை கொட்டிக்கோடு சார்ந்தார் - 9485

சொன்ன சங்கினது ஓசை துளக்குற 'என்ன சங்கு?' என்று இமையவர் ஏங்குற, அன்ன சங்கை பொறாமையினால், அரி --- தன்ன வெண் சங்கு தானும் முழங்கிற்றால் - 9732

ஆசையும் விசும்பும் அலை ஆழியும் தேசமும் மலையும் நெடுந் தேவரும் கூச, அண்டம் குலுங்க, குலம் கொள் தார் வாசவன் சங்கை மாதலி வாய்வைத்தான். - 9734

போர் இடைப் பிற ஒலிகள்

முழங்கின முரசம்; வேழம் முழங்கின; மூரித் திண் தேர் முழங்கின; முகரப் பாய்மா முழங்கின; முழு வெண் சங்கம் முழங்கின; தனுவின் ஓதை முழங்கின; கழலும் தாரும் முழங்கின; தெழிப்பும் ஆர்ப்பும் முழங்கின, முகிலின் மும்மை. - 7911

மின் ஆர் வானம் இற்று உறும்' என்றே, விளி சங்கம் கொன்னே ஊதி, தோள் புடை கொட்டிக்கொடு சார்ந்தார் - 9485

ஆர்த்தார் அன்னார்; அன்ன கணத்தே, அவர் ஆற்றல் தீர்த்தானும் தன் வெஞ் சிலை நாணைத் தெறிப்புற்றான் - 9486

சாரி திரிதல்

நானாவிதப் பெருஞ் சாரிகை திரிகின்றது நவிலார், போனான் இடை புகுந்தான், எனப் புலன் கொள்கிலர், மறந்தார், 'தானாவதும் உணர்ந்தான், உணர்ந்து, உலகு எங்கணும் தானே ஆனான்; வினை துறந்தான்' என, இமையோர்களும் அயிர்த்தார் - 9414

சண்டக் கடு நெடுங் காற்றிடை துணிந்து எற்றிட, தரைமேல் கண்டப் படு மலைபோல், நெடுமரம் போல், கடுந்தொழிலோர் துண்டப் பட, கடுஞ் சாரிகை திரிந்தான், சரம் சொரிந்தான் அண்டத்தினை அளந்தான் எனக் கிளர்ந்தான் நிமிர்ந்து அகன்றான். - 9415

நின்றார், திரிந்தார் நெடுஞ்சாரி நிலம் திரிந்த வன் தோள் குயவன்திரி மட்கலத்து ஆழி அன்ன - 3980

வட்டம் ஓடினார் - 8575

கரடிப்போர்

அடர்ந்தன கிரிகளை அசனிஏறு எனத் தொடர்ந்தன, மழை பொழி தும்பிக் கும்பங்கள் இடந்தன, மூளைகள் இனிதின் உண்டன, கடந்தன, பசித்தழல் கரடி காதுவ - 8048

மற்போர்

உயர் மல்லின் மலைந்தார் - 5660

மல் இட்ட தோள் - 3431

மற்கு நோக்கிய திரள் புயம் - 3481

எடுப்பர் பற்றி உற்று ஒருவரை ஒருவர் விட்டு எறிவர் கொடுப்பவர் வந்து உரம் குத்துவர் கைத்தலம் குளிப்ப கடுப்பினில், பெருங் கறங்கு எனச் சாரிகை பிறங்கத் தடுப்பர், பின்றுவர், ஒன்றுவர், தழுவுவர், விழுவர் (வாலி-சுக்கிரீவன்) - 3990

வாளாலே பொரல் உற்றான், இற்று அதுமண் சேராமுனம், வயிரத் திண் தோளாலே பொர முடுகிப்புக்கு, இடை தழுவிக் கோடலும் உடல் முற்றும், நீள் ஆர் அயில் என மயிர் தைத்திட, மணி நெடுவால் அவன் உடல் நிமிர்வுற்று மீளாவகை, புடை சுற்றிக் கொண்டது; பற்றிக் கொண்டனன் மேலானான் - 5703

பற்றிக் கொண்டவன், வடிவாள் என ஒளிர், பல் இற்று உக, நிமிர் படர்கையால் எற்றி, கொண்டலின் இடைநின்று உமிழ்சுடர் இன மின் இனம் விழுவன என்ன, முற்றிக் குண்டலம் முதல் ஆம் மணி உக, முழை நால் அரவு இவர் குடல் நால, கொற்றத் திண் சுவல், வயிரக் கைகொடு குத்தி, புடை ஒரு குதி கொண்டான் - 5704

நீத்து ஆய் ஓடின உதிரப் பெருநதி நீராக, சிலை பாராக, போய்த்தாழ் செறிதசை அரி சிந்தினபடி பொங்க, பொரும் உயிர் போகாமுன், மீத் தாம் நிமிர் சுடர் வயிரக் கைகொடு பிடியா விண்ணொடு மண் காண தேய்த்தான் (அனுமன் - அக்ககுமாரன்) - 5705

வந்தவனை நின்றவன் வலிந்து எதிர் மலைத்தான் அந்தகனும் அஞ்சிட நிலத்திடை அரைத்தான் எந்திரம் எனக் கடிது எடுத்து அவன் எறிந்தான் கந்துகம் எனக் கடிது எழுந்து எதிர் கலந்தான் - 6917

செறிந்து உழல்கறங்கு அனையர் மேனிநிலை தேரார் பிறிந்தனர் பொருந்தினர் எனத் தெரிதல் பேணார் எறிந்தனர்கள் எய்தினர்கள், இன்னர் என, முன் நின்று அறிந்திலர் (சுக்கிரீவன் - இராவணன்) - 6919

உறுக்கினர், ஒருவரை ஒருவர்; உற்று இகல் முறுக்கினர், முறை முறை; அரக்கன் மொய்ம்பினால் பொறுக்கிலாவகை நெடும் புயங்களால் பிணித்து இறுக்கினான்; இவன் சிறிது உணர்வும் எஞ்சினான் (சுக்கிரீவன் - கும்பகருணன்) - 7538

தட்டினார்; தழுவினார்; மேல் தாவினார்; தரையினோடும் கிட்டினார், கிடைத்தார்; வீசிப் புடைத்தனர் கீழும் மேலும் கட்டினார்; காத்தார்; ஒன்றும் காண்கிலர், இறவு; கண்ணுற்று, ஒட்டினார்; மோதி வட்டம் ஓடினார்; ஆதி போனார் (அனுமன் - அகம்பன்) - 8575

விற்போர்

வழிபாடு

வில்லினைத் தொழுது, வாங்கி, ஏற்றினான் - 9367

நாண் ஒலித்தல்

போர் ஆர் சிலை நாணி புடைப்பு ஒலியும் - 9491

மெய்க் குரல் சாபம் - 5302

உரும் ஏறு உறழ் வெஞ்சிலை நாண் ஒலி - 5230

சிலை கொள்நாண் நெடிய கோதை ஒலி ஏறு - 2539

பார வெஞ் சிலையின் நாண் ஒலி படைத்த பொழுதே - 2538

வரி சிலை முடுகு நாண் ஒலி - 2985

தறி பொரு களி நல் யானை சேவகம் தள்ளி ஏங்க, துறு சுவல் புரவி தூங்கித் துணுக்குற, அரக்கர் உட்க, செறி கழல் இருவர் தெய்வச் சிலை ஒலி பிறந்தது அன்றே எறி கடல் கடைந்த மேல்நாள், எழுந்த பேர் ஓசை என்ன - 8837

என்று சென்று, அடர்த்து இடைத்து, ஓர் சீய ஏறு அடர்ந்ததைக் குன்று வந்து சூழ் வளைந்த போல், தொடர்ந்து கூடலும், 'நன்று இது!' என்று, ஞாலம் ஏழும் நாகம் ஏழும் மானும் தன் வென்றி வில்லை வேத நாதன் நாண் எறிந்த வேலைவாய் - 9374

கதம் புலர்ந்த, சிந்தை வந்த, காவல் யானை; மாலொடு மதம் புலர்ந்த; நின்ற வீரர் வாய் புலர்ந்த; மா எலாம் பதம் புலர்ந்த வேகம் ஆக, வாள் அரக்கர் பண்பு சால் விதம் புலர்ந்தது; என்னின், வென்ற வென்றி சொல்ல வேணுமோ? - 9375

ஏழு வேலையும் ஆர்ப்பு எடுத்து என்னலாம், வீழி வெங் கண் இராவணன் வில் ஒலி; ஆழி நாதன் சிலை ஒலி, அண்டம் விண்டு ஊழி பேர்வுழி, மா மழை ஒத்ததால் - 9738

அரக்கன் அன்று எடுத்து ஆர்க்கின்ற ஆர்ப்பும், போர்ப் பொருப்பு மெய் வில் தெழிப்பும் உண்டேகொலாம் குரைக்கும் வேலையும் மேகக் குழாங்களும் இரைத்து இடிக்கின்ற, இன்றும் ஓர் ஈறு இல! - 9743

அம்பு எய்தல்

தூங்கு தூணியிடைச் சுடு செஞ் சரம் வாங்குகின்ற வலக்கை - 3056

உரம் கொண்ட தடஞ்சிலையின் உயர் நெடு நாண் உள் கொளுவா - 7629

சமையும் உன் வாழ்க்கை இன்றோடு என்று, தன் சங்கம் ஊதி அமை உருக் கொண்ட கூற்றை நாண் எறிந்து உருமின் ஆர்த்தான் - 7915

முரண் தொகுஞ் சிலை இமைப்பினில் முறையுற வாங்கி, புரண்டு தோள் உறப் பொலன் கொள் நாண் வலம்படப் போக்கி, திரண்ட வாளிகள் சேவகன் மரகதச் சிகரத்து இரண்டு தோளினும் இரண்டு புக்கு அழுந்திட, எய்தான். - 7255

நூறு நூறு போர் வாளி ஓர் தொடை கொடு நொய்தின், மாறு இல் வெஞ் சினத்து இராவணன் மகன் சிலை வளைத்தான் - 5788

ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், கோடி என்று உணரா துன்று பத்திய இராகவன் சுடுசரம் - 2954

வன் திண் சிலையின் வயிரக் காலால், வடித் திண் சுடர் வாளி, ஒன்று, பத்து, நூறு, நூறாயிரமும் உரைப்பித்தான் - 5593

அத் திறத்தினில், அனகனும், ஆயிரம் பத்தி பத்தியின் எய்குவ பல்கணை சித்திரத்தினில் சிந்தி - 8124

தொடுப்பது சுடர்ப் பகழி ஆயிரம் நிரைத்தவை துரந்த துறை போய்ப் படுப்பது, வயப் பகைஞர் ஆயிரரை அன்று, பதினாயிரவரை; கடுப்பு அது; கருத்தும் அது; கட்புலன் மனம் கருதல் கல்வி இல - 9436

வெடிக்கின்றன திசை யாவையும்; விழுகின்றன இடி வந்து இடிக்கின்றன சிலை நாண் ஒலி; இரு வாய்களும் எதிராக் கடிக்கின்றன, கனல் வெங்கணை; கலி வான் உற விசைமேல் பொடிக்கின்றன, பொறி வெங் கனல் இவை கண்டனர், புலவோர் - 9043

ஒன்றுமே தொடை; கோல் ஒரு கோடிகள் சென்று பாய்வன - 9434

அங்கதன் நெற்றிமேலும், தோளினும், ஆகத் துள்ளும் புங்கமும் தோன்றாவண்ணம், பொரு சரம் பலவும் போக்கி, வெங்கணை இரண்டும் ஒன்றும் வீரன் மேல் ஏவி, மேகச் சங்கமும் ஊதி, விண்ணோர்தலை பொதிரெறிய ஆர்த்தான் - 7925

ஆழி மன்னனும், முறுவல் எய்தி, வாய் அம்பு ஓர் ஆறு வாங்கி, பொன் நெடுந் தடந் தேர் பூண்ட புரவியின் குரங்கள் போக்கி,வில் நடு அறுத்து, பாகன் தலையையும் நிலத்தில் வீழ்த்தான் - 8423

பத்துச் சிலை எடுத்தான், கணை தொடுத்தான், பல முகிலா தொத்துப் படு நெடுந் தாரைகள் சொரிந்தாலெனத் துரந்தான் - 9759

கதிர் முகப் பகழி எண் இரண்டினோடு இரண்டு ஒரு தொடை தொடுத்து எய்தான் - 7508

தூசியொடு நெற்றி இரு கையினொடு பேர் அணி கடைக் குழை தொகுத்து, ஊசி நுழையா வகை சரத்து அணி வகுக்கும்; அவை உண்ணும் உயிர்; - 9437

ஆடல் பருந்தொடு கழுகும் பேயும் பசிப் பிணி தீருமாறு விருந்திடு வில்லின் செல்வன் விழா அணி விரும்பி நோக்கி (இராமன் வில்லாற்றல்) - 10006

வெங் கோலின் கோவை - 9786

துனையும் வேகத்தால் உருமேறும் துண்ணென்ன வனையும் காலின் செல்வன, தன்னை மறவாதே நினையும் ஞானக் கண் உடையார்மேல் நினையாதார் வினையும் போலச் சிந்தின - 9831

பல் பெரும் பகழி மாரி - 6930

வில்லின் மாரி - 387

துமிலத் திண் செருவின் வாளிப் பெரு மழை சொரியத் தோன்றும் - 6839

பகழியின் புயல் - 7511

அம்பு மதிலமைத்தல்

தொடைப் பெரும் பகழியின் மாரி தூர்த்து, உற அடைப்பென் என்று அடைத்தனன் விசும்பின் ஆறு எலாம் - 7547

மாதிரம் மறைந்தன; வயங்கு வெய்யவன் சோதியின் கிளர் நிலை தொடர்தல் ஓவின; யாதும் விண் படர்கில; இயங்கு கார் மழை மீது நின்று அகன்றன விசும்பு தூர்த்தலால் - 7548

இனக் கொடும் பகழியின் மதில் - 7549

சுருக்கம் உற்றது படை; சுருக்கத்தால் இனிக் கரக்கம், உற்று ஒரு புறத்து' என்னும் கண்ணினால், அரக்கருக்கு அன்று செல்வு அரியதாம்வகை சரக் கொடு நெடு மதில் சமைத்திட்டான்அரோ - 9466

அடுத்த கூர் வாளியின் அரணம் - 9475

ஒரு படைக்கு மாற்று ஆகும் படை

தாக்குகின்றன நுழைகில; தலையது, தாமரைத் தடங் கண்ணான் நோக்கி, 'இங்கு இது சங்கரன் கவசம்' என்று உணர்வுற நுனித்து உன்னி, ஆக்கி அங்கு அவன் அடுபடை தொடுத்துவிட்டு அறுத்தனன்; அது சிந்தி வீக்கு இழந்தது வீழ்ந்தது, வரை கழல் விரி சுடர் வீழ்ந்தென்ன - 7603

மாற்று ஒரு தடந் தேர் ஏறி, மாறு ஒரு சிலையும் வாங்கி, ஏற்ற வல் அரக்கன்தன்மேல், எரிமுகக் கடவுள் என்பான் ஆற்றல் சால் படையை விட்டான், ஆரியன்; அரக்கன் அம்மா, வேற்றுளை, 'தாங்க!' என்னா, வெய்யவன் படையை விட்டான் - 7927

இது காத்திகொல் என்னா, எடுத்து இசிகப் படை எய்தான் அது காப்பதற்கு அதுவே உளது என்னா தொடுத்து அமைந்தான் - 9064

ஆயது ஓர் அமைதியின், அறிவினின் அறிவான் நாயகன் ஒருவனை நலிகிலது உணர்வான், ஏயினன், இருள் உறு தாமதம் எனும் அத் தீவினை தரு படை தெறு தொழில் மறவோன் - 9792

இனையன நிகழ்வுற, எழு வகை உலகும் கனை இருள் கதுவிட, உயிர் இடை கதற, வினை உறு தொழிலிடை விரவலும், விமலன் நினைவுறு தகையினன் நெறியுறு முறையின் - 9796

கண்ணுதல் ஒருவனது அடு படை கருதிப் பண்ணவன் விடுதலும், அது நனி பருக; எண்ணுறு கனவினொடு உணர்வு என, இமையில், துண்ணெனும் நிலையினின் எறி படை தொலைய. - 9797

ஆர்த்து வெஞ்சினத்து ஆசுரப் படைக்கலம், அமரர் வார்த்தை உண்டது, இன் உயிர்களால் மறலிதன் வயிற்றைத் தூர்த்தது, இந்திரன் துணுக்குறு தொழிலது, தொடுத்து தீர்த்தன் மேல் செலத் துரந்தனன், உலகு எலாம் தெரிய - 9799

நுங்குகின்றது இவ்வுலகை ஓர் நொடி வரை என்ன எங்கும் நின்று நின்று அலமரும்அமரர் கண்டு இரைப்ப மங்குதல் வல் உருமேற்றின் மேல் எரி மடுத்தென்ன அங்கி தன் நெடும்படை தொடுத்து, இராகவன் அறுத்தான் - 9800

மயன் படைக்கலம் துரந்தனன் தயரதன் மகன் மேல் - 9804

மாந்தர்க்கு இல்லையால் வாழ்வு என வருகின்ற அதனைக் காந்தர்ப்பம் எனும் கடுங் கொடுங் கணையினால் கடந்தான் - 9806

பண்டு நான்முகன் படைத்தது, கனகன் இப்பாரைத் தொண்டு கொண்டது மது எனும் அவுணன் முன் தொட்டது உண்டு இங்கு என் வயின்; அது துரந்து உயிர் உண்பென் என்னா தண்டு கொண்டு எறிந்தான் ஐந்தொடு ஐந்துடைத் தலைவன் - 9807

கண்டு, 'தாமரைக் கண்ணன் அக் கடவுள் மாக் கதையை அண்டர் நாயகன் ஆயிரம் கண்ணினும் அடங்காப் புண்டரீகத்தின் முகை அன்ன புகர் முகம் விட்டான், உண்டை நூறுடை நூறுபட்டுளது என உதிர்த்தான் - 9810

மாயையின் படை தொடுப்பன் என, இராவணன் மதித்தான் - 9811

துறத்தல் ஆற்று உறு ஞானமாக் கடுங்கணை தொடர. . . . மாய்ந்தது அம்மாயை - 9826

சூலம் கொண்டான் அண்டரை எல்லாம் தொழில் கொண்டான் - 9827

சங்காரத்தான் கண்டை ஒலிப்ப, தழல் சிந்த, பொங்கு ஆரத்தான் மார்பு எதிர் ஓடிப் புகலோடும், வெங் காரத்தான் முற்றும் முனிந்தான்; வெகுளிப் பேர் உங்காரத்தால் உக்கது, பல் நூறு உதிர் ஆகி - 9834

நிருதி திக்கில் நின்றவன் வென்றிப்படை நெஞ்சில் கருதி தன்பால் வந்தது அவன் கைக் கொடு காலன் விருதைச் சிந்தும் வில்லின் வலித்து, செலவிட்டான் - 9839

அவ்வாறு உற்ற ஆடு ஆரவம் தன் அகல் வாயால் கவ்வா நின்ற மால் வரை முற்றும் அவை கண்டான், 'எவ் வாய்தோறும் எய்தின' என்னா, எதிர் எய்தான், தவ்வா மெய்ம்மைக் காருடம் என்னும் படை தன்னால் - 9843

அனுமன், அங்கதன் இராம இலக்குவர்க்குப் போர் ஊர்தியாதல்

நூறு பத்துடை நொறில் பரித் தேரின்மேல் நுன்முன் மாறுஇல் பேர் அரக்கன் பொர, நிலத்து நீ மலைதல் வேறு காட்டும், ஓர் வெறுமையை; மெல்லிய எனினும் ஏறு நீ, ஐய என்னுடைத் தோளின் மேல் என்றான் - 7233

'நன்று நன்று' எனாநாயகன் ஏறினான். . . ஈன்ற கன்று தாங்கிய தாய் என மாருதி களித்தான் - 7234

தொளை கொள்வான் நுகச் சுடர்நெடுந் தேர்மிசைத் தோன்றி வளைகொள் வெள் எயிற்று அரக்கன் செஞ்செருத்தொழில் மலைய 'கிளை கொளாது இகல்' என்று எண்ணி மாருதி கிடைத்தான் 'இளைய வள்ளலே ஏறுதி தோள் மிசை' என்றான் - 7501

ஏறினான் இளங்கோளரி - 7502

இளைய கோவை அனுமனும் உடன் வந்து உற்றான், தோளின் மேல் ஆதிஐய என்று அடிதொழுது நின்றான், ஆளி போல் மொய்ம்பினானும் ஏறினான் - 8101,8102

வந்தான் நெடுந்தகை மாருதி மயங்கா முகம் மலர்ந்தான் 'எந்தாய் கடிது ஏறாய் எனது இரு தோள் மிசை என்றான் 'அந்தாக' என்று உவந்து ஐயனும் அமைவு ஆயினன், இமையோர் சிந்தாகுலம் துறந்தார், அவன் நெடுஞ்சாரிகை திரிந்தான் - 9034

வல்லையின் அணுக வந்து வணங்கினன் வாலி மைந்தன் 'சில்லி அம் தேரின் மேலான் அவன், அமர் செவ்விது அன்றால் வில்லியர் திலதம் அன்ன நின் திருமேனி தாங்கப் புல்லியன் எனினும் என் தோள் ஏறுதி, புனித' என்றான் - 7907

ஆம் என, அமலன் தம்பி அங்கதன் அலங்கல் தோள் மேல் தாமரைச் சரணம் வைத்தான் - 7908

மாருதி அலங்கல் மாலை மணி அணி வயிரத் தோள் மேல் வீரனும் வாலி சேய்தன் விறல் கெழு சிகரத் தோள் மேல் ஆரியற்கு இளைய கோவும் ஏறினர்; அமரர் வாழ்த்தி வேரிஅம் பூவின் மாரி சொரிந்தனர் இடைவிடாமல் - 8458

அனுமன் இலக்குவனைத் தோள்மீதேற்றித் தானும் போரிடல்

சுற்றும் வால்கொடு; தூவும்; துவைக்கும் விட்டு எற்றும்; வானின் எடுத்து எறியும்; எதிர் உற்று மோதும்; உதைக்கும்; உறுக்குமால் கொற்ற வில்லி அன்று ஏறிய கூற்றமே - 8141

பார்க்கும் அஞ்ச, உறுக்கும் பகட்டினால் தூர்க்கும் வேலையை; தோள்புடை கொட்டி நின்று ஆர்க்கும், ஆயிரம் தேர் பிடித்து அம்கையால் ஈர்க்கும் ஐயன் அன்று ஏறிய யானையே - 8142

சிறப்பு

அனுமன் யானைப்படையை அழித்தல்

மிகுதியால் பல, விசையால் பல, மிடலால் பல, இடறும் கதியால் பல, தெழியால் பல, காலால் பல, வாலின் நுதியால் பல, நுதலால் பல, நொடியால் பல, பயிலும் குதியால் பல, குமையால் பல, கொன்றான் அறம் நின்றான் - 7884

பறித்தான் சில, பகிர்ந்தான் சில, வகிர்ந்தான் சில, பணை போன்று இறுத்தான் சில, இடந்தான் சில, பிளந்தான் சில, எயிற்றால் கறித்தான் சில, கவர்ந்தான் சில, கரத்தால் சில பிடித்தான் முறித்தான் சில திறத்து ஆனையின் நெடுங் கோடுகள் முனிந்தான். - 7885

வாரிக் குரை கடலில் புக விலகும்; நெடு மரத்தால் சாரித்து அலைத்து உருட்டும்; நெடுந் தலத்தில் படுத்து அரைக்கும்; பாரில் பிடித்து அடிக்கும்; குடர் பறிக்கும்; படர் விசும்பின் ஊரில் செல, எறியும்; மிதித்து உழக்கும்; முகத்து உதைக்கும் - 7886

வாலால் வர வளைக்கும், நெடு மலைப் பாம்பு என; வளையா, மேல் ஆளொடு பிசையும்; முழுமலை மேல் செல, விலக்கும்; ஆலாலம் உண்டவனே என, அகல் வாயின் இட்டு அதுக்கும்; தோல் ஆயிரம் இமைப்போதினின் அரிஏறு எனத் தொலைக்கும் - 7887

கரத்தினில் திரியா நின்ற மரத்தினைக் கண்ட மாகச் சரத்தினின் துணித்து வீழ்த்த தறுகணான் தன்னை நோக்கி, உரத்தினைச் சுருக்கிப் பாரில் ஒடுங்கினான், தன்னை ஒப்பான் சிரத்தினில் குதித்தான்; தேவர் திசைமுகம் கிழிய ஆர்த்தார் - 8435

கும்பகருணன் போர் முறை

குன்று கொண்டு எறியும்; பாரில் குதிக்கும்; வெங் கூலம் பற்றி ஒன்று கொண்டு ஒன்றை எற்றும்; உதைக்கும்; விட்டு உழக்கும்; வாரித் தின்று தின்று உமிழும்; பற்றிச் சிரங்களைத் திருகும்; தேய்க்கும்; மென்று மென்று இழிச்சும்; விண்ணில் வீசும்; மேல் பிசைந்து பூசும் - 7449

வாரியின் அமுக்கும்; கையால் மண்ணிடைத் தேய்க்கும்; வாரி நீரிடைக் குவிக்கும்; அப்பால், நெருப்பிடை நிமிர வீசும்; தேரிடை எற்றும்; எட்டுத் திசையினும் செல்லச் சிந்தும்; தூரிடை மரத்து மோதும்; மலைகளில் புடைக்கும் சுற்றி - 7450

மாயப் போர்

வஞ்சனை பரப்பச் செய்யும் மாயப் போர் ஆற்றல் - 9006

விசும்பு போயினன், மாயையின் பெருமையான்; மேலைப் பசும் பொன் நாட்டவர் நாட்டமும் உள்ளமும் படரா, அசும்பு விண்ணிடை அடங்கினன், முனிவரும் அறியாத் தசும்பு நுண் நெடுங் கோலொடு காலமும் சார - 8605

அனையன் நின்றனன்; அவ் வழி, மகோதரன் அறிந்து, ஓர் வினையம் எண்ணினன், இந்திர வேடத்தை மேவி, துனை வலத்து அயிராவதக் களிற்றின்மேல் தோன்றி, முனைவர் வானவர் எவரொடும் போர் செய மூண்டான் - 8606

அரக்கர், மானிடர், குரங்கு, எனும் அவை எலாம் அல்லா உருக்கள் யா உள, உயிர் இனி உலகத்தின் உழல்வ, தருக்கும் போர்க்கு உடன் வந்தனவாம் எனச் சமைத்தான்; வெருக்கொளப் பெருங் கவிப் படை குலைந்தது, விலங்கி - 8607

கோடு நான்குடைப் பால் நிறக் களிற்றின்மேல் கொண்டான் ஆடல் இந்திரன்; அல்லவர் யாவரும் அமரர், சேடர், சிந்தனை முனிவர்கள்; அமர் பொரச் சீறி, ஊடு வந்து உற்றது என் கொலோ, நிபம்? என உலைந்தார் - 8608

ஆர்த்தவன், அனைய போழ்தின், 'அழிவு இலாத் தேர் கொண்டு அன்றிப் போர்த் தொழில் புரியலாகாது' என்பது ஓர் பொருளை உன்னி, பார்த்தவர் இமையாமுன்னம், 'விசும்பிடைப் படர்ந்தான்' என்னும் வார்த்தையை நிறுத்திப் போனான், இராவணன் மருங்கு புக்கான் (இந்திரசித்து) - 9115

மல்லின் மா மாரி அன்ன தோளினான், மழையின் வாய்ந்த கல்லின் மா மாரி, பெற்ற வரத்தினால், சொரியும் காலை (இந்திரசித்து) - 9155

மாயையும் மாற்றும்

மார்பிடை நின்ற வாளிவாயிடை வெயிலின்
வாரும் சோரியன், விசும்பினூடு ஓர் இமைப்
பிடைத் தோன்றா நின்றான் கார் உரும் ஏறும்,
காற்றும், கனலியும், கடைநாள் வையம்
பேர்வுறு காலம் என்ன, பெருக்கினன்,
தவத்தின் பெற்றான் (மகரக்கண்ணன்) - 8424

காலவன் படையும், தெய்வக் கடலவன் படையும்,
காலக் கோல வன் சிலையில் கோத்து
கொடுங் கணையோடும் கூட்டி, மேலவன்
தூரத்தலோடும், விசும்பின் நின்று எரிந்து,
வெய்தின் மால் இருங்கடலின் வீழ்ந்து
மறைந்தன, மழையும் காற்றும் (இராமன்) - 8428

'மாயை என்றன, வல்லவை யாவையும், வழங்கி,
தீ இருட் பெரும் பரப்பினைச் செறிவு உறத்
திருத்தி, நீ ஒருத்தனே உலகு ஒரு மூன்றையும்
நிமிர்வாய்; போய் உருத்து, அவர் உயிர்
குடித்து உதவு'எனப் புகன்றான்
(இராவணன் > மகோதரன்) - 8536

'மந்திரம் உளதால், ஐய! உணர்வுறும் மாலைத்து;
அ.'து உன் சிந்தையின் உணர்ந்து, செய்யற்
பாற்று எனின், செய்தி; தெவ்வர் தந்திரம்
அதனைத் தெய்வப் படையினால் சமைப்பின்
அல்லால், எந்தை! நின் அடியர் யாரும் எய்தலர்,
நின்னை' என்றான் - 8595

'அன்னது புரிவென்' என்னா, ஆயிர நாமத்து
அண்ணல் தன்னையே வணங்கி வாழ்த்தி,
சரங்களைத் தெரிந்து தாங்கி, பொன் மலை
வில்லினான்தன் படைக்கலம் பொருந்தப்
பற்றி, மின் எயிற்று அரக்கர்தம்மேல் ஏவினான்
வில்லின் செல்வன் (இலக்குவன்) - 8596

தேவர்தம் படையை விட்டான் என்பது சிந்தை
செய்யா, மா பெரும் தேரில் நின்ற மகோதரன்
மறையப் போனான்; யாவரும் இரிந்தார் எல்லாம்,
இன மழை கழிய ஆர்த்து, கோ இளங் களிற்றை
வந்து கூடினார்; ஆடல் கொண்டார் - 8598

உதவிப் படை

மாற்றுத் தேர் அவண் வந்தன வந்தன வாரா,
வீற்று வீற்று உக, வெயில் உமிழ் கடுங்
கணை விட்டான் - 7259

அந்தரம் அன்னது நிகழும் அவ் வழி,
இந்திரன் தமரொடும் இரியல் எய்திட,
சிந்துவும் தன் நிலை குலைய, சேண் உற
வந்தது, தசமுகன் விடுத்த மாப் படை - 7582

போர்க்களத்திற்கு அரசர் வருநிலை

மண்டுகின்ற செருவின் வழக்கு எலாம்
கண்டு நின்று, கயிலை இடந்தவன்,
புண் திறந்தன கண்ணினன், பொங்கினான்,
தின் திறல் நெடுந் தேர் தெரிந்து ஏறினான் - 7110

ஓதுறு கருங்கடற்கு ஒத்த தானையான் தீது
உறு சிறு தொழில் அரக்கன் சீற்றத்தால்
போது உறு பெருங்களம் புகுந்துளான் எனத்
தூதுவர் நாயகற்கு அறியச் சொல்லினார் - 7123

நாற் கடல் உலகமும், விசும்பும், நாள்மலர் தூர்க்க,
வெஞ் சேனையும் தானும் தோன்றினான் மால்
கடல் வண்ணன், தான் வளரும் மால் இரும்
பாற்கடலோடும் வந்து, எதிரும் பான்மைபோல் - 7133

ஊழியின் உருத்திரன் உருவு கொண்டு, தான்,
ஏழ் உயர் உலகமும் எரிக்கிகின்றான் என
வாழிய வரிசிலைத் தம்பி மாப்படைக்
கூழையின் நெற்றி நின்றானை, கூடினான் - 7234

போர் இறுதி

மூள் அமர் தொலைவுற முரசு அவிந்த - 4253

போர் வெற்றிக் கொண்டாட்டம்

இராவணன் எழுந்து பொங்கி, தன்னையும்
கடந்து நீண்ட உவகையன், சமைந்த கீதம்
கின்னரர் முதலோர் பாட, முகத்திடைக் கிடந்த
கெண்டைக் கன்னி நன் மயில் அன்னாரை
நெடுங் களியாட்டம் கண்டான் - 8819

முரசும், மா முருடும், முரல் சங்கமும் உரை செய்
காளமும், ஆகுளி ஓசையும், விரைசும் பல்
இயம், வில் அரவத்தொடும், திரைசெய்
வேலைக்கு ஓர் ஆகுலம் செய்தவே - 7051

வென்று கொண்டு அமரர் முன்பு அணிந்த
வாகை மாலையும் மருங்கு உற - 9657

யாக சாதனன் மௌலியொடும் பொறித்து
ஓகை மாதவர் உச்சியின் வைத்த நின்
வாகை நாள் மலர் - 9205

சிறப்பு

ஆக்கையின் நின்று வீழ்ந்த அரக்கன் தன்
தலையை அம்கை தூக்கினான், உள்ளம்
கூர்ந்த வாலி சேய் தூசி செல்ல, மேக்கு
உயர்ந்து அமரர் வெள்ளம் அள்ளியே
தொடர்ந்து வீசும் பூக்கிளர் பந்தல் நீழல்
அனுமன் மேல் இளவல் போனான் - 9657

போர் வெற்றி

அன்பளிப்பு

'அம்புயம் அனைய கண்ணன்தன்னை யான்
அரியின் ஏறு தும்பியைத் தொலைத்தது
என்னைத் தொலைக்குவென்; தொடர்ந்து
நின்ற தம்பியைத் தடுத்தியாயின், தந்தனை
கொற்றம் என்றான்; வெம்புஇகல் அரக்கன்,
'அ.'தே செய்வேன்'என்று, அவனின் மீண்டான் - 9712

பிற

ஆயுதங்களின் இருப்பிடம்

சேமத்து ஆர் வில் - 1102
படைமக்கலச் சாலை - 5977

படைக்கலச் சாலை அழிவு

வில்லும், வேலும், வெங் குந்தமும் முதலிய விறகாய் எல்லுடைச் சுடர் எனப் புகர் எ.ஃகு எலாம் உருகி, தொல்லை நல் நிலை தொடர்ந்த, பேர் உணர்வு அன்ன தொழிலால் சில்லி உண்டையின் திரண்டன படைக்கலச் சாலை - 5977

அம்பில் பெயர் பொறித்தல்

பறித்த வாளியைப் பருவலித் தடக் கையால் பற்றி. . . பொறித்த நாமத்தை அறிகுவான் நோக்கினன் - 4012
'இராமன்' என்னும் செம்மை சேர் நாமம் தன்னை, கண்களின் தெரியக் கண்டான் - 4013

படைக் கருவிகளுக்கு வழிபாடு

தெய்வ வான் பெரும் படைகட்கு வரன் முறை திருந்து மெய்கொள் பூசனை இயற்றினம் விடும் இது விதியால் - 8530
துய்ய தெய்வ வான் படைக்கு எலாம் வரன்முறை துரக்கும் மெய் கொள் பூசனை விதிமுறை இயற்றி, மேல் வீரன் 'மொய்கொள் போர்க் களத்து எய்துவாம் இனி' என முயன்றான் - 8628

படைக்கலன்களைப் பாதுகாத்தல்

வாம வேல் வருணனை, மான வெஞ்சிலை சேமி என்று உதவி - 1307
பாம்பின் தரு வெம்படை பாசுபதத்தினோடும் தேம்பல் பிறை சென்னி வைத்தான் தரு தெய்வ ஏதி ஓம்பித் திரிந்தேன்(இந்திரசித்து) - 8013

நஞ்சு பூசிய கருவிகள்

வாயின் அதிவிட நீர் - 848
நச்சு அடை படை - 5807

சிறப்பு

மேவினம்; பிரிதல் ஆற்றேம்; வீர! நீ விதியின் எம்மை ஏவின செய்து நிற்றும், இளையவன் போல' என்று தேவர் தம் படைகள் செப்ப, செவ்விது என்று அவனும் நேர பூவைப் போல் நிறத்தினாற்குப் புறத்தொழில் புரிந்த அன்றே - 396
காம்பு அனைய தோளியை ஒளித்த படு கள்வன், நாம் புக அமைத்த பொறி நன்று - 4563
வானவர் எறிந்த தெய்வ அடு படை வடுக்கள் - 5495
உழிஞையைத் துடைக்க, நொச்சிஉச்சியில் கொண்டது உன் ஊர் - 6957
தனு நெடுந் தரையில் ஊன்றி...மைந்தன் நிற்ப - 4316
பாகர் கால் சிலையின் தூண்டும் உண்டை ஆம் எனவும் பற்றா - 7942
அந்தக் கூனி கூன் போக உண்டை தெறித்த போது - 7288

போரில் சமாதான முயற்சி

இப் பகையைத் தீர ஒட்டல்ஆம் போரில், ஒன்னார் ஒட்டினும் உம்பி ஒட்டான் - 6813

படைகளுக்கு உணவு

இம்பரின் இயைந்த காயும் கனியும் கொண்டு, இரண்டு வெள்ளம் வெம்பு வெஞ் சேனைக்கு எல்லாம் உணவு தந்து உழலவிட்டான் உம்பியை - 6952
'இரவும் நன் பகலும் பெரு நெடுஞ் செரு இயற்றி, உரவு நம் படை மெலிந்துளது; அருந்துதற்கு உணவு வரவு தாழ்த்தது; வீடண! வல்லையின் ஏகி, தரவு வேண்டினென்' என்றனன், தாமரைக்கண்ணன். - 8528
புரிக எனப் புலவர் கோமான் ஏயின கருமம் நோக்கி எய்திய இலங்கை வேந்தன் மேயின உணவு கொண்டு, மீண்டு, அவை உறையுள் விட்ட ஆயின ஆக்கி - 8703
பொருந்து பொன் பெருங் கோயிலுள், போர்த் தொழில் வருந்தினர்க்கு, தம் அன்பினின் வந்தவர்க்கு, அருந்துதற்கு அமைவு ஆயின ஆக்குவான், விருந்து அமைக்க மிகுகின்ற வேட்கையான் - 9617
நறவும் ஊனும், நவை அற நல்லன பிறவும், ஆடையும், சாந்தமும், பெய்ம் மலர்த் திறமும், நானப் புனலொடு சேக்கையும் புறமும் உள்ளும் நிறையப் புகுந்தவால் - 9619

தோல்வியுற்றோர்

புல் எடுத்தவர்கள் - 8075

புறங்கொடுத்தோர்

ஏற்றம் இனிச் செயல் வேறு இலை; ஈர்வீர் நாற்றம் நுகர்ந்து உயர் நாசியை; நாமக் கோல் தரு திண் பணை கொட்டினிர், கொண்டு, ஊர் சாற்றுமின், "அஞ்சினர்" என்று உரைதந்தே - 8307

கவந்தம் ஆடுதல்

ஆனை ஆயிரம், தேர் பதினாயிரம், அடல் பரி ஒரு கோடி; சேனை காவலர் ஆயிரம் பேர் படின், கவந்தம் ஒன்று எழுந்தாடும்; கானம் ஆயிரம் கவந்தம் நின்று ஆடிடின், கவின் மணி கணில் என்னும்; ஏனை அம் மணி ஏழரை நாழிகை ஆடியது இனிது அன்றே. - 9513

உறவுப் பெயர்

இருவரிடையே அமையும் தொடர்பு உறவு ஆகிறது. தொடரும் வாழ்க்கைச் சூழலால் உருவாகிறது. பிறப்பின் வழி வருவது முதன்மை யானது மட்டுமின்றி மிகச் சிறப்பானதாகத் தானே இயற்கையாய் அமையும் பெருமையுடைய தாகிறது. இதனைக் கருத்திற் கொண்டு உறவு பற்றிய பொதுச் சொற்கள்; பெற்றோர்கள், தாய்-தந்தை; குழந்தை-பொது ஆண்-பெண்; அண்ணன் - தம்பி; அக்கா- தங்கை என்பன முறையே வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

பின் பலவாறாக உருவாக்கிக் கொள்கின்ற உறவுகள் அகரவரிசையில் அமைந்துள்ளன.

மானிடர் வாழ்வில் நட்பு இன்றியமையாத இடம் கொள்வது. நட்பு உறவாகப் போற்றப்படும் சிறப்புடையது. இதனைக் கம்பர் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளார். எனவே அடுத்து நட்பு தொடர்பான சொற்கள் ஆண்-பெண் என்ற பகுப்புடன் காட்டப்பட்டுள்ளன.

உறவாகாவிடினும் உறவுபோல் செயல் படுகின்ற, ஏற்றம் பெறுகின்ற அகவையிலும் பட்டறிவிலும் உயர்ந்த பெரியோரை உணர்த்தும் சொற்கள் அடுத்து இடங் கொண்டுள்ளன.

உறவிற்கு எதிரான பகைமை பற்றிய சொற்கள் இறுதியாகத் தொடர்கின்றன.

கம்பர் பேரனை மகன்மகன் என்கிறார். கொள்ளுப்பேத்தி பற்றிய குறிப்பும் உண்டு.

ஐயன் என்ற சொல் தந்தை, அண்ணன், தம்பி, கணவன், மகன் எனப் பல உறவுகளையும் சுட்டுவது குறிக்கத்தக்கது.

கணவன், தம்பி உறவுகளையும் மைந்தன் என்று அழைப்பதன் மூலம் இவ்வுறவுகளின் நெருக்கம் வலியுறுத்தப்படுகிறது.

தன்னுள்ளிருந்து உருவாவதால் மகனைத் தோன்றல் என்பதும், திருமண உறவை ஆயிரங்காலத்துப் பயிராக உருவகிப்பதால் கான்முளை என்பதும் பொருந்தி நிற்கின்றன.

உறவு - பொதுச்சொல்

உறவு - 2769
உற்றார் - 4025
மெய்ம்மை உற்றவர் - 7304
மெய் உறவோர் - 3613
காதலர் - 7274
கிளை - 9342
இருங் கிளை - 1046
கிளை சுற்றம் - 1955
கிளைதரு சுற்றம் - 7304
நாறு தன் குலக்கிளை - 6896
கிளைஞர் - 5382
மன் பெருங் கிளைஞர் - 4388
உன் கிளைஞர் - 1479
ஒன்றாகிய உன் கிளையோர் - 3612
கிழவர் - 6078
உன் குலத்து உள்ளோர் - 1479
பொரு இல் கேண்மையர் - 6375
கேள் - 4147
சுற்றமும் - 1481
கிளை சுற்றமும் - 1955
பொரு இல் சுற்றமும் - 1315
விருந்தினர் (புதிதாக வந்தவர்) - 3354
அம்மை - 2219
அம்மனை - 3703
தமர் - 840
துன்னினர் - 420
பழையவர் - 6079
உமர் - 3412
புக்க வழி (கணவன் வழி) - 5224
போந்த வழி (தந்தை வழி) - 5224

வழித்தோன்றல் (வாரிசு)

பகலவன் மருமகன் - 9141
பகலோன் குல மருமான் - 9071
சூரியன் மருமான் - 10138
புலத்தியன் மருமான் - 7499

குழந்தை

மகவு - 1854
ஏவா மகவு - 1691
சொல் மாறா மகப் பெற்றவர் அருந்துயர் துறந்தார் - 1380
கண்ணுள் மணிபோல் மகவு - 1680
பொருள் - 5175

பெற்றோர்

ஈன்றவர் - 3665
பயந்தவர்கள் - 427
பயந்தெடுத்தவர் - 4662
பெற்றவர் - 1380

உடன் பிறந்தோர்

உடன் பிறப்பு - 7438
உடன் பிறந்தான் - 7506
உடன் பிறந்தேன் - 2848
உடன் உதித்தவர்களோடு ஒருவன் - 6508

முன்னோர்

அண்ணல் - 2185
தம் குலக் குரவர்கள் - 1329
முன்னையர் - 2298
தொல்லோர் - 1358
நாயகன் - 2202
நும் குலத்து உந்தையர் - 4031
முதலவன் முதலிய முந்தையோர் (ஆதித்தன், மனு, மாந்தாதா, சிபி, முசுகுந்தன்) - 2151
மேலவர் - 1326

மூத்தோர்

மூத்தவர் - 2259
குலம் புக்கு ஆன்ற முதியர் - 4034
முதிஞர் - 1581
மூது உணர்ந்த இம் முதுமகன் - 9296
விருத்தன் - 6715
விருத்தர் - 2248

பெரியோர்

ஆரியன் - 8458
சிட்டர் - 6123
குரவர் - 2480
தம் குலக் குரவர்கள் - 1329
நல் பெருங் குரவர் - 2481
பரவு கேள்வியும், பழுது இல் ஞானமும், விரவு சீலமும், வினையின் மேன்மையும் உர விலோய்! தொழற்கு உரிய தேவரும், "குரவரே" எனப் பெரிது கோடியால் - 2480
குருக்கள் - 2164
தெளிவு உடையோர் - 4042

சிறுவர்

சிறுவர் - 6155
சிறார் - 2887
பல் விதச் சிறார் - 4262
சிறியன் - 6183
கோள் இலாச் சிற்றை யாளனை - 9747
சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல் - 4126
காலம், மேல் விளை பொருள், உணரும் கற்பு இலாப் பாலன் - 6136
பாலமை - 4089
பிள்ளைமை - 6142
பால் நுகர் புதலவர் - 8910
பேதைப் பிள்ளை - 6244
வினை தேரா நம்பியர் - 6117
இளைஞர் - 6077

தாய்

தாய் - 171
ஈன்ற நல் தாய் - 1057
சிதைவு அகல் காதல் தாய் - 4330
தோன்றாத் தாய் - 6823
நற்றாய் - 1466
அம்மனை - 3703
அம்மா - 5226
அம்மை - 2219
அமா - 8693
அவ்வை - 1494
அன்னாய் - 1641
உலகின் தம் அனை - 6145
அன்னை - 603
அன்னே - 509
ஈன்றாள் - 1739
ஈன்றவள் - 3967
என்னையர் - 3610
இருவரைப் பயந்தவள் - 1794
பயந்து நம்மைப் புரந்தாள் - 1734
பெற்றவள் - 600
பிராட்டி - 1750
மாதா - 8651
பேர் உலகின் மாதா அனையாள் (சீதை) - 3411
மோய் - 2781
யாய் - 4661
செவிலி - 2371

தந்தை

கந்தனார் தந்தையார் - 9099
முந்தை நாள், உலகம் தந்த முத்த வானோர்கட்கு எல்லாம் தந்தையார் - 9099
அத்தன் - 6660
அத்தா - 6308
அப்பா - 9338
என் ஆனை வல்லன் - 6358
ஈன்றவர் - 3665
ஐயன் - 1825
தாதை - 1058
நெடுந் தாதை - 1049
காட்டாதன காட்டிய தாதை - 8004
பதி - 1734
பிதா - 405

பெற்றவன் - 1575
எந்தாய் - 422
எந்தை - 1356
ஈன்று எடுத்த எந்தை - 7674
எந்தையாய் உலகை ஈன்றுளான் - 8789
தந்தை தந்தை பண்டு உற்ற சழக்கு எல்லாம் எந்தை தீர்த்தனன் - 8150
உந்தை - 1479
நுந்தை - 1480

சிற்றன்னை

சிற்றவை - 1575
சிறுதாய் - 1716

வளர்ப்புத்தாய்

செவிலியர் - 530

சிறியதந்தை (தந்தையின் தம்பி)

சிறு தாதை - 4140
தந்தை - 7777

கணவன்

கற்பின் அருந்ததி கணவன்(வசிட்டன்) - 801
அருங் கணவர் - 5810
துணைக் கணவன் - 3387
துணைக் கணவர் - 8362
இல் - 5240
இறை - 1531
இறைவன் - 3389
ஐயன் - 1511
காதலன் - 406
இன் உயிர்க் காந்தன் - 5173
திரு மடந்தை காந்தன் - 1696
கேள்வர் - 2044
உயர் கேள்வர் - 1531
சீதை கொண்கன் - 1561
கொழுநன் - 1648
திருமணத்தான் - 685
துணை - 5371
துணைவன் - 1673
நாயகர் - 408
மணம் புணர் மணாளர் - 9304
மணவாளன் - 1708
மைந்தர் - 4944
வேந்தன் - 1010

மனைவி

மனைவி - 4358
இல் - 5903
தாரம் - 1654
தாரம் ஆம் அரு மருந்து - 3852
மனை வாழும் தாரம் - 3247
துணை - 5371
என் துணைக் குல மங்கை - 3556
துணைவி - 6978
தெரிவையர் - 8166
ஆர் உயிர் தேவி - 4043
ஆரியன் தேவி - 3458
பெருந் தேவி - 6032
மன்னவன் தேவி - 5117
நங்கைமார் - 8038
பன்னி - 2520
கோதமன் தன் பன்னி - 665
மனை - 8154
பைந் தார் எங்கள் இராமன் பத்தினி - 4691
ஒருத்தன் மனை உற்றாள் - 6120
ஒரு மாமுனிவன் மனை - 1679
நும் மனை - 311
மாதர் - 7414
வாணுதல் - 7276
இளந்தேவி - 2369
இளைய மாது - 1912
இளையவள் (சுமித்திரை) - 658
மாற்றவள் - 1479
ஆசு இல் பரதாரம் - 6122

தமையன் / அண்ணன்

என்னையர் - 2143
அரன் இருந்த மலை எடுத்த அண்ணாவோ - 2840
தமையன் - 8635
முன்பன் - 1585
முன்பர் - 4036
தம்பிமுன் - 1883
முன் வந்தவன் - 8670
நல் உறுப்பு அமையும் நம்பியரில் முன்னவன் - 3792
தம்முனை - 1716
முன் பிறந்த உன் தம்முனை - 8503
முதல் தோன்றினன் - 2257

முதல்வர் ஆன மூவர்க்கும் நால்வர் ஆன தம்பி (சத்துருக்கன்) - 9005
முந்தைச் சீரியன் - 4146
மூத்தவன் - 434
மூத்தவர் - 2259
மூத்த வேந்தன் - 2785
மூத்தான் - 2367
மூது ஆனவன் - 8689
உன் ஐ - 1479
உம் ஐயன் - 7915
எந்தை நீ காத்தி என்றான் - 4702
என் துணை - 2320
தோழன் - 5091
பெருமகன் - 3463

தம்பி

தம்பி - 618
உரிமைத் தம்பி - 4080
உடன் பிறப்பு என்னும் பாசத்தால் பிணிப்புண்ட அத் தம்பி - 4011
சிறந்த தம்பி - 1621
தாமரைக் கண்ணன் தம்பி - 8168
தாழ்வு இலா ஒரு தம்பியோன் - 7387
வார் கழல் தம்பி - 8196
அனுசன் - 5718
செவ்வி இளஞ்சிறுவர்கள் - 653
இளந்தோன்றல் - 2262
இளவல் - 1884
இளைஞர் - 1581
இளைய கோ - 407
இளைய தோன்றல் - 2237
இளைய பைங் குரிசில் - 1052
இளைய மைந்தன் - 1880
இலங்கை வேந்தற்கு இளையவன் - 9148
கருங் கோளரிக்கு இளையான் - 9046
ஒரு தனி நாயகற்கு இளையோன் - 9059
திருமால் தனக்கு இளையோன் - 9070
ஐய - 1736
குமர - 6127
சிறுவ - 3535
துணை - 3838
துணைவர் - 6547
பிறந்தனை பின்பு - 6409
பின் தோன்றினான் - 2726
பின்பிறந்தார் - 2332
பின் பிறந்தோய் - 8503
பின் வந்தவன் - 8670
பின் வந்தோன் - 2934
பின்னவன் - 1604
மைந்தன் - 4072
எம்பி - 1608
உம்பி - 6813
உம்பியர் - 5202
நும்பி - 1610

தமக்கை / அக்கா

தவ்வை - 1494
தவ்வையர் - 530
என் முன்னவள் - 406
எம் முனாள் நங்கை - 407

தங்கை

தங்கையர் - 1878
மருந்து அனைய தங்கை - 3124
இளையவள் - 3104
இளைய நங்கை - 3256
இளையேன் - 2871
எங்கை - 3211
எங்கையர் (என் தங்கையர்) - 2143
உங்கை - 5202

மகன்

மகன் - 1346
அருமகன் - 1341
தலை மகன் - 735
கன்னி அருந்ததி காரிகை காணா நல் மகன் - 1254
பெரு மகன் - 1341
மா மகன் - 1553
முறை மகன் - 1796
ஆண் - 8419
எந்தை - 8015
ஐயன் - 1674
காதலன் - 1615
அருங்காதலன் - 4795
நின் காதற்கு - 1642
கான் முளை - 1653
வயிற்று ஓர் கிளை தந்தாள் - 1907
குமரர்கள் - 302

குமரன் - 1278
உரை சால் குமரன் - 1659
செவ்விய குமரர் - 1762
பொரு அருங் குமரர் - 1753
குருசில் - 450
சிறுவன் - 1862
மறிக் கொளும் சிறுவர் - 8167
மன்னனவன் செம்மல் - 3051
சேய் - 171
தனையன் - 2472
தனையர் - 260
தோன்றல் - 1057
பிள்ளை - 1573
பிள்ளாய் - 9121
புத்திரர் - 6375
புதல்வன் - 1477
தம் குலப் புதல்வர் - 1329
முதல் மணிப் புதல்வன் - 1359
மக்கள் - 1938
குலமக்கள் - 7422
ஏவா மகவு - 1691
கண்ணுள் மணி போல் மகவு - 1690
மஞ்சர் - 1135
மதலை - 200
மைந்தன் - 1351
இன் சொல் மைந்தன் - 1692
உரிமை மைந்தர் - 1375
நீடு வாழி மா மைந்தன் - 10222
விடலை - 1690

சிறப்பு

உரு அறியாப் பிள்ளை - 1701
சொல் மறா மகப் பெற்றவர் அருந்துயர் துறந்தார் - 1380
எனது உயிர் போல் வரு மகன் (அக்க குமாரன்) - 7187
அமுது எழ ஆழியைக் கலக்கினான் மகன் (அங்கதன்) - 6714
வாலி காதலன்(அங்கதன்) - 4346
தாரை சேய் - 4602
காலுடைச் சிறுவன் (அனுமன்) - 8192
சமீரணன் தனயன் (அனுமன்) - 5889
மருத்தின் மைந்தன் (அனுமன்) - 6014
மாருதத்தின் காதல்(அனுமன்) - 7715
வாயுவின் தனயன் (அனுமன்) - 8746
அஞ்சனை மதலை (அனுமன்) - 8475
இராவணி(இந்திரசித்து) - 8014
இராவணன் தனையன் (இந்திரசித்து) - 8499
இராவணன் தோன்றல் (இந்திரசித்து) - 8500
தசமுகன் தனி மகன்(இந்திரசித்து) - 8518
தென் தலை ஆழி தொட்டோன் சேய் (இந்திரசித்து) - 9177
பொய் அறச் சிறிது என்று எண்ணும் பெருமையான் புதல்வன் (இந்திரசித்து) - 9162
மண்டோதரி மகன் - 7996
சுடரோன் மகன் (இராமன்) - 9895
அயனார் மகனுக்கு அளித்தது (உருத்திரமூர்த்தி) - 8668
திசை முகன் மகன் - 9140
கோதமன் காதலன் (சதானந்தன்) - 617
இந்திரன் காதல்(சயந்தன்) - 5096
அருக்கன் மா மகன்(சுக்கிரீவன்) - 10221
அலரி காதலன்(சுக்கிரீவன்) - 10348
வெய்யோன் மகன் - 9095
கதிரவன் காதல் மைந்தன் (சுக்கிரீவன்) - 8201
குன்றினை வலம் செய் தேரோன் மகன் (சுக்கிரீவன்) - 10366
சூரியன் தோன்றல் (சுக்கிரீவன்) - 5888
சூரியன் மகன் (சுக்கிரீவன்) - 4146
சோதியான் மகன் (சுக்கிரீவன்) - 5910
முக்கண் நோக்கினன் முதல் மகன் (சிறந்த மகன் முருகன்) - 4974
காதி செம்மல் (விசுவாமித்திரன்) - 477
இவன் சிறுதாதை என்னா மூலமே தந்த நுந்தை ஆம் என முறையின் நிற்றி வல்லை உய்த்தனை கொணர்தி உன்தன் ஓங்கு அருமகனை - 4140

மகள்

மகள் - 657
தனி மகள் - 6462
மா மகள் - 1253
கைகயர் கோ மகள் - 2197
வீடணன் கன்னி - 5366
சனகன் காதல் பெண் - 4703
கேகயர் கோன் கொம்பு - 1695
கேகயன் தனையை - 1494
மிதிலை மன்னன் தன் பெருந் தனையை - 6032
சனகன் தையல் - 1664
நங்கை - 666
கேகயன் நங்கை - 1863
பயந்த நங்கை - 7693

கேகயன் பயந்த நங்கை - 1844
மயன் பயந்த நெடுங் கண் பாவை - 9928
மகவு - 413
வன் கேகயர் கோன் மங்கை - 1640
மடந்தை - 5087
கேகயன் மடந்தை - 1591
சனகரின் மடந்தை - 5178
மயன் மடந்தை - 5116
மாது - 676

அக்கா/தங்கை கணவன்

மைத்துனன் - 604
கொல்லாத மைத்துனனைக் கொன்றாய் - 9926

அண்ணன் மனைவி

கேள் - 1994
மங்கை கொழுந்தி - 5091

கணவன் தம்பி

மஞ்சன் - 5244

அத்தை/மாமி

அத்தையர் - 1878
கானிடை அத்தை - 5760
மாமியர் - 1820
சிறக்கும் மாமியர் மூவர் - 5377

மாமன்

மாதுலன் - 14

மருமகன்

மருமகன் - 6428
கோ மருமகன் - 606
மருகர் - 3241

மருமகள்

மருகி - 1838
மன் பெரு மருகி - 6032
மருமக்கள் - 1265

பங்காளிகள்

நேயர் வருதாயம் - 6442

பாட்டன்/தாத்தா

மூதாதை - 1309
மலர் மேல் அயன்தன் முதலோர் தம் தாதை தாதை (திருமால்) - 8251
முந்தை நாள், உலகம் தந்த வானோர்கட்கு எல்லாம் தந்தையார் தந்தையார் - 9099
தாயைப் பயந்தோன் (மாலியவான் - இராவணனின் தாத்தா) - 6793

சிறப்பு

எந்தைக்கும் எந்தை (கவந்தன் > இராமன்) - 3693

பாட்டி

பாட்டி - 7005

பேரன்

பேரன் - 7842
இந்திரற்கு மகன் மகன் (அங்கதன்) - 4295
நான்முகத்தோன் சேம் மதலை (விச்சிராவசு) - 7709
நான்முகன் தகை மகன் - 6567

கொள்ளுப்பேரன்

அயன் மகன் மகன் மகன் (இராவணன்) - 5715
வையம் தந்த நான் முகன் மைந்தன் மகன் மைந்தன் - 5715
மகன் மகன் மைந்தன் நான்முகற்கு வாய்மையான் - 6406
நான்முகன் தகை மகன் சிறுவன் - 6567

கொள்ளுப் பேத்தி

பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி (சூர்ப்பணகை) - 2770

நண்பர்

நண்பு - 509
அருநட்பு - 4271
இன் உயிர் நட்பு - 3964
மெய் உறு கேண்மை - 4331
தோழமை - 3451
ஆண் தொழிற்கு ஏன்றவர் நண்பர் - 6079
தாய் எனத் தகைய நண்பீர் - 4700
நவை இலா நண்பர் - 5712
காதல் பவனனுக்கு இனிய நண்பன் - 10355
ஆர் உயிர்க் காதலான் - 4044
தாயே அனைய கருணையான் துணை - 5931
துணைவன் - 5256
துணைவர் - 1659
உறுவலித் துணைவர் - 4754
ஏவல் செய் துணைவர் - 3915
தொல்லைத் துணைவர் - 10235
தோழர் - 2124
ஆவி வேறு இலாத் தோழர் - 5676
நட்டவர் - 6443
ஆவி ஒன்று ஆக நட்டான் - 5890

பண்பினர் - 6078
பழையம் - 5032
மித்திரர் - 6375
மேவினார் - 2614
தோழி - 1011
அன்புடைத் தோழி - 1087
ஓதையள் - 722
சேடி - 1007
சேடியர் - 1083
சேடிமார்கள் - 4939
துணைவி - 5099
பாங்கு அனாள் - 1015

ஆசிரியர்

குரு - 1316
இந்திர குரு - 10314

மாணாக்கன்

அருக்கன் மாணாக்கன் - 10209

தலைவர்

அண்ணல் - 2185
நாயகன் - 2202

விருந்து

விருந்தினர் - 3354

பிறர்

பிறர் - 5239
அயலான் - 4028
ஏதிலன் ஒருவன் - 10198
ஏதிலார் - 4044
தகை உடைவாள் எனும் தயங்கு வெய்யவன் நகை இள வெயில் என தொங்கல் நாற்றியே - 1223

மாலை

பொன்னரி மாலை - 977
எல் வான் சுடர் மாலை - 2599
சுடர்க்கு எலாம் நாயகம் அனையது ஓர் மாலை - 458
சென்னி நீள் மாலையான் - 4513
வெயில் புரை மாலை - 6788

வடம்

வடம் கொள் பூண் முலை - 83
வடங்கள் - 721
அக்குவடம் - 4571

பிற

கழுத்தில் சாத்திய மணி உமிழ் கதிர் - 1218

ஏசு இல் போர் அரக்கன் மார்பினிடை பறித்து, எருவை வேந்தன் வீசிய வடக மீக் கோள் ஈது - 4622

இணைவு

அறை மணித் தாரினோடு ஆரம் - 4394

பூணும் ஆரமும் - 496

முத்தொடு செம்பொன் ஆரம் - 145

ஆரத்தொடு கவசம் - 7189

தோள் அணிகள்

பொது

தோள் அணிக்குலம் பல உள - 3492

சவிச் சுடர்க் கலன் அணிந்த பொன் தோள் (ஆடவர்) - 5846

தரு மணி இமைக்கும் தோள் - 6940

பூண் எறிந்த குவடு அனைய தோள் - 8062

பூண் செய் தோளுக்கு, இமை உற இமைக்கும் செங்கேழ் இன மணி முத்து - 1126

பொன் திணிந்த தோள் - 5619

தாமப் பொன் தோள் - 7238

தொடி

தொடி - 4370

தொடி துணிந்தன தோள் - 2952

தொடியின் தோள் - 4601

தொடி மணி இமைக்கும் தோள் - 6941

வடம்

வடம் தரு தடம் கொள் புய மைந்தர் - 4994

நவமணிக்காழ் - 10355

வலயம் (வாகு)

அங்கதம் (ஆடவர்) - 9213

ஆழித் தடம் புயம் பொலிய - 940

மகரிகை வயிரக் கிம்புரி வலயம் - 5151

அடல் கடந்த தோள் அலங்கு போர் வலயங்கள் இலங்க - 9651

கொற்றப் பொன் தோள் பூட்டிய வலயம் - 7151

சுடர் மணி வலயம் - 9721

செங்கேழ் மணி அணி வலையம் - 842

நிலை முக வலயம் - 735

பந்தி செய் வயிரங்கள் பொறியின்பாடு உற அந்தம் இல் சுடர் மணி அழலின் தோன்றலால், சுந்தரத் தோள் அணி வலயம், தொல்லை நாள் மந்தரம் சுற்றிய அரவை மானுமே - 1214

பொன் ஆர் வலயத் தோளான் - 1677

மாண்ட பொன் மணி அணி வலயம் - 1216

வடித்ததோள் வலயத்தின் வயங்கு காசு - 3954

விரிந்த வலயங்கள் மிடை தோள் படர - 3113

வெங்கண் அங்க வலயங்கள் - 2531

வளை

பொங்கு தோள் வளை - 9213

பெய் வளைத் தோளி - 2775

மார்பணிகள்

இழை குழாம் முலை - 1136

சில் இயல் ஒதி கொங்கைத் திரள் மணிக் கனகச் செப்பு - 1128

கோண் இலா வான மீன்கள் இயைவன கோத்தது என்கோ வாள் நிலா வயங்கு செவ்வி வளர் பிறை வகிர்ந்தது என்கோ நாணில் ஆம் நகையில் நின்றநளிர் நிலாத் தவழ்ந்தது என்கோ பூண் நிலாம் முலை மேல் ஆர முத்து - 1124

கை அணிகள்

பொது

மற்றைச் சுடர் மணித்தடக்கை - 783

பொன் திணிந்த பொரு இல் தடக்கை - 2106

கையைக் கொய்தான் விலை அறா மணிப்பூணோடும் - 9158

கங்கணம்

கங்கணம் - 8518

தவளக் கங்கணம் - 2531

தாலம் சார்ந்த மாசுணம் எனக் கங்கணம் தழுவ - 9650

கடகம்

கடகம் - 496

கடகக்கை - 860

இருங்கடகக் கரதலம் - 656

எரி மணிக்கடகம் - 854

காப்பு

காப்பு - 1134

கோவை

கோவையின் பெரு வட முத்தம் கோத்தன, காவல் செய் தடக்கையின் நடுவண் காந்துவ - 1215

சூடகம்

சூடகம் - 362

சூடகத் தளிர்க்கை - 783

சூடகத்தடக்கை - 5163

பொன் சூடக வால் வளை - 698

தொடி

தொடி உலாம் கமலச்செங்கை - 941
தொடிக்கை மக்கள் - 5614
பைந்தொடி - 518
பொன் தொடி தளிர்க்கைச் சங்கம் - 939
பொற்றொடி - 806

வண்டு

வண்டு - 1138

வளை(யல்)

வளை பயில் முன்கை (பெண்) - 990
ஆய்வளை - 2996
ஆய வெள்வளை - 59
எல்வளை - 1531
ஒளிவளைமகளிர் - 401
கோல் வளை மகளிர் - 3016
நிரை வளைத் தளிர்க்கரம் - 3101
நிரை வளை மகளிர் - 5818
பல்வளை - 1021
பால்வளை - 1558
பெய் வளைத்தளிர் - 1615
வளை ஒலி முன் கை - 10029
வெள்வளை - 4313
மிடையும் வெள்வளை - 463
மடவார் இறை கழன்ற சங்கு ஆர்த்திட (சங்கு வளையல்) - 1364
சங்கம் - 523
சங்கு இனம் (சங்கு வளையல்) - 1024
வெண்சங்கு இயம்பின - 1554

கைவிரல் அணி

மோதிரம்

மோதிரம் - 10151
வண்ண மோதிரம் - 6047
வனையும் மா மணி நல் மோதிரம் - 4519
ஓர் ஆழி - 5290
ஒளி மணி ஆழி - 6048
மணி ஆழி - 5296

இடையணிகள்

மேல் ஒற்றை மா மணி உமிழ் உதரபந்தனம் - 1220
சுற்றும் மணிபுக்க இழைமிக்கு இடை துவன்றி - 1143

கச்சு

அலம் வரு நிழல் உமிழ் அம்பொன் கச்சு (ஆடவர்) - 1222

கலாபம்

கலாபம் (பதினாறு கோவையுள்ள மாதரின் இடையணி) - 788
கற்றை விரி பொற்கடை பயிற்றுறு கலாபம் - 1143
பருமணிக் கலாபம் - 804

காஞ்சி

காஞ்சி - 8834

தாரகை

புறம் செய் மேகலையின் தாழத் தாரகைச் சும்மை - 1129

நாண் / அரைநாண்

நாண் (ஆடவர்) - 900
கண்டநாண் (ஆடவர்) - 8139
முஞ்சி (அந்தணரின் புல்லால் ஆகிய அரைநாண்) - 414

பட்டிகை

முகை விரி சுடர் ஒளி முத்தின் பத்தி வான் தொகை விரி பட்டிகைச் சுடர் - 1223

மேகலை

ஆய்ந்த மேகலை - 134
கிளை கொள் மேகலை - 1492
கொன் சேர் அல்குல் மேகலை - 510
நிறை அசல் அல்குல் புல்கும் மேகலை - 1017
வண்ணமேகலை - 623
வாம மேகலை - 770
விரி மணி மேகலை - 2283
மெல் அரிக்குரல் மேகலை ஆர்த்து எழ - 4314
கலை சார் அல்குல் - 4483
ஓர் இன மணிக் கலையினாள் - 986
நளிர்கலை - 1810
தழங்கிய கலைகள் - 523
நூல் - 4949

தொடையணிகள்

கிம்புரி

(சுறாமீனின் திறந்த வாய் வடிவில் செய்யப்பட்டது) காசொடு கண் நிழல் கஞல, கைவினை ஏசறு கிம்புரி (ஆடவர்) - 1224
மீள்வு இல் கிம்புரி மணிக் கடி சூத்திரம் வீக்கி - 9646

கால் அணிகள்

கழல்

கழல் (ஆடவர்) - 152
பொன் அடிக்கழல்கள் ஆர்ப்ப - 3706
சித்திரச் சேவடிக்கழல் - 7126

அதிர்கழல் - 730
மாறு அதிர்கழல் - 734
அறை இருங்கழல் - 5238
இணை கழல்கள் - 842
ஒண் நிறக்கழல் - 4279
திகழ்ந்து ஒளிர் கழல் - 733
கருங்கழல் வீரர் - 860
வனை கருங்கழல் மைந்தரும் - 958
கறங்கு வார் கழல் கலன் கலிப்ப - 3937
கனைகழல் - 986
கனையும் வார் கழல் - 3677
நேர் துன்றிய கனை கழல் - 737
கயிறு சேர் கழல் - 9421
கல் தொடுத்தன்ன போலும் கழலினான் - 1957
மின் போல் குரை கழல் - 5504
மொய்கழல் - 6072
செறிகழல் - 660
தொடுகழல் - 1081
பல்கழல் - 3619
பூங்கழல் - 2162
பூங்கழலார் - 661
பூங்கழல் வார் சிலை மீளி பொலிந்தான் - 3601
பைங்கழல் - 1051
கால் வரைப் பெரும் பாம்பு கொண்டு அசைத்த பைங்கழலார் (அரக்கர்) - 9306
பொருகழல் - 6074
பொன் உருவப் பொருகழல் - 2864
பொன்னொடும் பொருகழல் - 2420
செஞ்சுடர் ஆய் மணிப் பொலன் கழல் - 3072
தாரினின்பொலங்கழல் தழங்க - 4391
பூ வரு பொலன் கழல் - 1317
பூ விரி பொலன் கழல் - 2303
பம்பு பொற் கழல்கள் - 7425
பொன் உயிர்க்கும் கழல் - 643
அடியில் சுடர் பொன் கழல் - 1720
சேவடி அடைந்த பொன் கழல் - 175
பொன்றாத பொலங் கழல் - 2600
பொன்னை உற்ற பொலங் கழல் - 1821
வனைந்த பொன் கழல் - 1607
கதிர வாள் வயிரக் கழற் கால் - 7334
நுனிப்ப அரு நுண் வினைச் சிலம்பு நோன் கழல் - 1225
பொன்னுடை வனை கழல் - 1300
வார்க்குறு வனைகழல் - 6427
புனையும் வார்கழல் - 4519
பொன்னின் வார்கழல் - 4285
வார் ஏறு கழல் - 7781
வார் கெழு கனை கழல் - 6530
வாரொடு தொடர் கழல் மைந்தர் - 1443
வாரொடு தொடர்ந்த பைம் பொற் கழல் - 8566
வீக்கிய கழற் கால் - 810
வீக்கிய கனைகழல் - 515

கிண்கிணி

பயிர் உறு கிண்கிணி (மகளிர்) - 1001
பயில் குரல் கிண்கிணிப் பதத்த பாவையர் - 4556
பொன்சேர் மென் கால் கிண்கிணி - 510

சதங்கை

சதங்கைகள் - 144
தழைக்கும் மின் ஒளிப்பொன் மலர்ச்சதங்கை - 9648
தாள்அரிச் சதங்கை ஆர்ப்பத்தவழ்கின்ற பருவம் தன்னில் - 9234
மழலை அம் சதங்கை - 8262

சாலகம்/கொலுசு

கோத்த பாத சாலகம் (மகளிர்) - 1138
பாதசாலகம் - 4949

சிலம்பு

சிலம்பு(மகளிர்) - 368
அடி இணைச் சிலம்பு - 129
சிலம்பு சூல் கால் - 452
சிலம்பு பூண்ட மாந்தளிர் எய்த - 8826
தெள் ஒளிச் சிலம்பு - 1810
பண்சிலம்பு - 893
பாதச் சிலம்பு - 4816
பூஞ்சிலம்பு அரற்று அடி - 9656

நூபுரம்

நூபுரம் (மகளிர்) - 2765
நூபுர மடந்தையர் - 6915
கருங்கண்ணியர் நூபுர இழை - 778
ஆர்க்கும் நூபுரங்கள் - 4315
கனக நூபுரம் - 1089
நாகச் சிரம் செய் நூபுரம் - 1138

பரிபுரம்

பரிபுரம் - 788

பாடகம்

பாடகம் - 123
பயில் பாடக மெல் அடி - 4204
பாடகத்து அரம்பையர் - 2993

இணைவு

குண்டலங்களும், மவுலியும், ஆரமும், கோவை, தண்டை, தோள்வளை, கடகம் என்று இனையன - 7523
பரந்த மேகலையும், கோத்த பாத சாலகமும், நாகச்சிரம் செய் நூபுரமும், வண்டும், சிலம்பொடு சிலம்பி ஆர்ப்ப - 1138
மொய்ம் மணிப் பத்தியால் - 747
முத்து அணி அணிவாரும், மணி அணி முனிவாரும், பத்தியின் நிமிர் செம்பொற் பல கலன் மகிழ்வாரும், புனைவாரும் - 1195
நீள் அரவச் சரி, தாழ், கை, நிரைத்தாள்; ஆள் அரவப் புலி ஆரம் அணைத்தாள்; யாளியினைப் பலதாலி இசைத்தாள்; கோள் அரியைக் கொடு தாழ் குழை இட்டாள் - 3588

விலங்குகள் ஒப்பனை

யானை

பொன் ஆர் ஓடை - 6282
கொடும்படை வயிரக் கோடு - 7947
கும்பம் உற்ற உயர் நெற்றியின் விசித்து, ஒளி குலாம் உம்பருக்கு அரசன் மால் கரியின் ஓடை, எயிறு ஒண் கிம்புரிப் பெரிய தோள் வளையொடும் கிளரவே - 2528

குதிரை

ஒளிர் பொற் குரன் நெரிந்தவும் . . . குதிரை - 5772

கலைகள்

ஆடலும் இசையும் மிகுதியாகப் பேசப் பட்டுள்ளன. ஓவியர், வினைவர் எனவும் அழைக்கப்பட்டுள்ளனர். பலவிதமான இசைக் கருவிகள் இயம்பப்பட்டுள்ளன. பல்லாண்டு மங்கல மகளிர் மொழியாகச் சிறப்பிக்கப் பட்டுள்ளது. பண்கள் பற்றிய பதிவுகள் உள.

பொது

கலைவாலாளன் - 219

ஆடல்

பொது

ஆடல் - 4535
நல்லார் ஆடு இயல் பாணிக்கு ஒக்கும் - 4180
அபிநயம் தெரிக்கின்றார் - 982
களி நடம் புரிய - 6035
பயில் நடம் பாவகத்து ஆடுவார்கள் - 9621
நடன் நவில - 9462
நடனம் - 4573
விழுநடனம் - 4859
நிருத்தம் ஆடினர் - 2653

ஆடுபவர்

ஆடுவார்கள் - 4859
ஆடல் நுண் இடையார் - 9189
நாரியர், அரு நடம் நடிப்ப - 3088
நிருத மாக்கள் - 4940
பாணி தள்ளா நடம்புரி தடங்கண் மாதர் - 4872
அரம்பையர் விசும்பின் ஆடும் ஆடல் - 481
கூடி நான்கு உயர் வேலையும் கோக்க நின்று ஆடினான் (சிவன்) - 5012
ஆடல் மிக்க பூதங்கள் தொடர்ந்து புகழ்ந்தன - 4813

சிறப்பு

நடம் திறன் நவில்வுறு நங்கைமார் முகம், படம் திறந்து உருவலின், பொலியும் பான்மை போல் - 4256
கூற்று உறழ் நயனங்கள் சிவப்ப , கூன் நுதல் ஏற்றி வாள் எயிறுகள் அதுக்கி இன்தளிர் மாற்ற அருங் கரதலம் மறிக்கும் மாது, ஒரு சீற்றம் ஆய் அவிநயம் தெரிக்கின்றாரினே - 982

பிற

ஏனைய பிறவும் கண்டார்க்கு இந்திரசாலம் என்ன, தான் அவை உருவில் தோன்றும் பாவனைத் தகைமை சான்றோர், மான் அமர் நோக்கினாரை மைந்தரைக் காட்டி, வாயால் ஆனையை விளம்பி, தேரை அபிநயத்து இயற்றி உற்றார். - 8830

ஆடலும் பாடலும்

கூடு பாணியின் இசையொடும், முழவொடும் கூட, தோடு சீறுஅடி விழி மனம் கையொடு தொடரும் ஆடல் - 5852
வஞ்சி அஞ்சும் இடை மங்கையர், வானத்து அம் சொல் இன் சுவை அரம்பையர், ஆடி, பஞ்சமம் சிவணும் இன் இசை பாட - 6872
தென்நகு குடம், உள் பாடல் சித்தியர் இசைப்பத் தீம்சொல் பன்னக மகளிர் வள்வார்த் தண்ணுமைப் பாணி பேண பொன்னகர்த் தரளப் பந்தர் கற்பகப் பொதும்பர், பொன் தோள் இன்நகை அரம்பை மாரை ஆடல் கண்டு இருக்கின்றாரும் - 5020
தந்திரி நெறியில் தாக்குறு கருவி தூக்கினர் எழுவிய சதியின், முந்துறு குணிலொடு இயைவுறு குறட்டில், சில்லரிப் பாண்டிலில், முறையின், மந்தர கீதத்து இசைப் பதம் தொடர, வகை உறு கட்டளை வழாமல், அந்தர வானத்து அரம்பையர், கரும்பின் பாடலார், அருகு வந்து ஆட 5158

கூத்து

ஆட்டில் நின்று அயர்வது - 5713

பல் முறை கூடு சாரியின் குப்புற்றுக் கூத்து நின்று ஆடி - 9968

மண்ணும் முழவின் ஒலி, மங்கையர் பாடல் ஓதை, பண்ணும் நரம்பின் பகையா இயல் பாணி ஓதை, கண்ணும் முடை வேய் இசை, கண்ணுளர் ஆடல்தோறும் விண்ணும் மருளும்படி விம்மி எழுந்த அன்றே - 886

கூத்தாடுபவர்

கூத்தரின் திமிதம் இட்டுத் திரியும் - 6716

விதங்களின் நடித்திடு விகற்ப வழிமேவும் மதங்கியர் - 4226

கலிநடக் கழைக் கண்ணுளர் என நடம் கவின - 3729

கூத்து வகைகள்

குமண்டை - 6670

கள் இசை அரக்கர் மாதர் களியிடும் குரவை - 4872

குண்டலம் திருவில் வீச குரவையில் குழறு வாரும் - 5022

துணங்கைப் பறை துவைப்ப - 7716

இலயத்தின் தொழில் பண்ணி மடக்கோ இல்லா வார் படிமக் கூத்து அமைவிப்பான், நடக் கால் காட்டும் கண்ணுளர் - 9591

நாடகம்

பரத நூல் முறை நாடகம் - 4185

பல்வித நாடகத் தொழிலினை நடிப்ப - 2993

நடித்து வாழ் தகைமையதோ அடிமைதான் - 5054

கவந்த நாடகம் - 2995

அலகைகள் நாடகம் நடிப்ப - 10139

இசை

பொது

அமுத இசை - 7631

இசை பல் ஞிமிறு பன்ன - 4226

இசையுறு குரலும் - 10289

இன் இசை - 1937

இன் நிறத் தேன் இசை - 5105

ஏழ் இசை - 1037

அமுத ஏழ் இசை - 286

தம் ஏழ் அமைந்த இசை - 2175

தழங்கு இசை வழங்கும் கண் - 4996

தேன் இசை முரல - 794

தேன் இசை மாந்தினர் - 4865

பாங்கு இசை - 2041

வரம்பு இல் இன்னிசை - 5851

வாய் திறந்து இசைத்தான் - 3681

கூடு பாணியின் இசை - 5852

கை தொடர் நரம்பு இயல் இமிழ் இசை - 5401

தழங்கு பல்லியத்து அமலை - 5610

பண் கனிந்த பாடல் கானம் - 8282

வங்கியம் வகுத்த கானம் வயங்கிய மழலை வாயர் - 8829

கீதம் - 2407

கின்னரம் பயில் கீதங்கள் - 871

மந்திர கீதம் - 809

வயிரியர் மதுர கீதம் - 705

நன்றி கொள் மங்கல நாதம் - 202

பாடல் - 4992

அமிழ்தின் ஆன்ற பாடல் - 8836

ஆரிய அமிழ்தப் பாடல் - 4180

நறை செவிப் பெய்வது என்ன நைவள அமுதப் பாடல் - 791

அளந்த பாடல் - 5026

எழுவு பாடல் - 4641

கமுக வார் நெடுங் கனக ஊசலில் அமுத பாடலார் - 4615

கிளை உறு பாடல் - 5156

கூறு பாடல் - 87

தெய்வப்பாடல் - 922

பண் கனிந்து எழுபாடல் - 1548

இலக்கண மரபிற்கு ஏற்ற எழுவகை நரம்பின் நல்யாழ் அலத்தகத் தளிர்க்கை நோவ், அளந்து எடுத்து அமைத்த பாடல் - 4939

பண் - 486

பண் அடைவு - 1400

களி உறக் கனிந்த காமர் பண் - 4619

நாற் பெரும் பண் - 5012

பண்ணின் நோக்கும் பரா அமுது - 1936

பாண் - 458

பாணி - 886

வாணி முந்தின பாணியின் பங்கி அம்பரம் எங்கும் விம்மின - 1554

வார் விசிக் கருவியோர் வகுத்த பாணி - 3088

தேமறை - 3079

இசைப்பவர்/பாடுபவர்

அம் கை நரம்பினால் நாடி, நாற்பெரும் பண்ணும் நயப்புறப் பாடினான் புகழ் பாடுகின்றார் சிலர் - 5012

பாடுவார் பலர் - 4859

கீதம் நின்ற பேதங்கள் இயம்பினர் பேதையர் - 4813
மங்கையர் அமுத கீதம் - 705
விருந்து என மகளிர் ஈந்த தெள் விளிப் பாணித் தீம் தேன் - 490
அமுதம் ஊறும் மங்கையர் பாடல் கேட்டு, கின்னரம் மயங்கும் மாதோ - 851
தெள் அரிப் பாண்டி (பாண்டி என்னும் தக்கேசிப் பண்ணினால் ஆகிய இசைப்பாட்டில் வல்ல பாணர்) - 796
பொருநர் பாட்டு இசை - 135
தேன் அளைந்து செவி உற வார்த்தென, வான் அளைந்தது மாகதர் பாடல் - 2117
புதுக்கொண்ட வேழம் பிணிப்போர் புனை பாடல் ஓதை - 888
அரம்பையர், பாணி கொட்டி மங்கல கீதம் பாட - 4949
அலகையும் ஐயன் கீர்த்தியைப் பாடின - 446
கீதங்கள் இசைத்தனர் கின்னரர் - 4813
சமைந்த கீதம் கின்னரர் முதலோர் பாட - 8819
எண்ண அரிய மறையினொடு கின்னரர்கள் இசை பாட - 632
தென் நகு குடம், உள் பாடல் சித்தியர் இசைப்பத் தீம் சொல் பன்னக மகளிர் வள் வார்த் தண்ணுமைப் பாணிபேண - 5020
விஞ்சையர் பாடல் - 4535
பாணியின் அளந்து இசை படிக்கின்றான் என வீணையின் இசை பட வேதம் பாடுவான் - 3339
அண்டர்தம் செவியின் உண்ணும் அமிழ்து எனல் ஆய அன்றே - 8448
பாணியின் தள்ளி, கால மாத்திரைப் படாது பட்ட நாணியின் முறையின் கூடாது, ஒரு வழி நடையின் செல்லும் ஆணியின் அழிந்த பாடல் நவின்றனர் அனங்க வேள்தன் துணியின் அடைத்த அம்பின் கொடுந் தொழில் துறந்த கண்ணார் - 8828

இசைக்கருவிகள்

பொது

இயம் - 2276
இயங்கள் - 7456
இன் இயம் - 778
கொற்ற நல் இயங்கள் - 789
தெருவின் ஆர்ப்புறும் பல் இயம் - 4635

பம்பு

பம்பு - 1955

அம்பலி

அம்பலி - 8445

ஆகுளி

ஆகுளி - 6871

ஆனகம்

ஆனகம் (படகம்) - 8821

உறுமை

உறுமை - 8445

ஊமை

ஊமை - 8445

காசு

காசு - 12

கடுவை

கடுவை - 5730

கண்டை

கண்டை - 9662
ஆயிரம் கண்டம் - 9828

கணுவை

கணுவை - 8445

கம்பலி

கம்பலி - 8445

கரடிகை

கரடிகை - 8445

காளம் (எக்காளம்)

காளம் - 808
அசனி ஈன்ற காளம் - 9534
உரை செய் காளமும் - 7051
காளத்தின் பொகுட்டு - 7485
காகளம் - 236

கின்னரம்

கின்னரம் - 153
வான மாதர் கீதம் ஒத்த கின்னரங்கள் இன் நரம்பு வருடுதொறும் கிளக்கும் ஓதை - 4474

குடம்

தென்நகு குடம் - 5020

கும்பிகை

கும்பிகை - 8445

குழல்

குழல் - 4508
குழல் இசை - 135
குழலின் பாடல் - 87
கொழுங்குழல் - 4847

தழுவிய குழல் - 3102
தொளை கட்டிய கிளை முட்டிய சுருதிச் சுவை அமுது - 1930
பண்தொடர் பாண் குழல் - 2125
மென் குழல் - 923
துளை - 153
துளை முகத்தின் சுருதி - 2113
தொளை உறு புழை வேய் தூங்கு இசைக் கானம் - 5156
வேய்ங்குழல் - 4097
கொன்றை வேய்ங்குழல் - 65
கண்ணும் முடை வேய் இசை - 886
குழுவு நுண் தொளை வேய் - 2073
பயிர் கிளை வேயின் கீதம் - 705

குறடு

குறடு - 5851

கொம்பு

கொம்பு - 808
கொம்பு அலம்பின - 1554

கொல்லி

கொல்லி - 2058

கோடு

கோடு - 5732
கோடு அலம்பின - 7033
வயிர் ஒலி - 153
வயிர்கள் - 702

சகடை

சகடைகள் - 5730

சங்கு / சங்கம்

சங்கமும் - 808
அதிர் குரல் சங்கம் - 9534
வெண்சங்கம் ஆர்ப்புற - 288
ஏங்கும் சங்கு இசை - 3650
ஏங்கிய சங்கு இனம் - 5630
ஓசை முழங்கின சங்கம் எங்கும் - 3154
தழுவு சங்கு - 1059
சங்குகள் முரன்றன - 1200
முரல் சங்கு - 827
முழை தொடர் சங்கு - 4950
விளி கொள் சங்கு - 10289
நல் மாப் பணிலங்கள் முரல - 5557
மூக்கில் தாக்குறும் மூரி நந்தும் - 88
வலம்புரி முழங்கும் ஓதை - 809
வளை ஒலி - 153

சிறப்பு

மங்கலம் இசைக்கும் சங்கம் - 1568
மா தவர் வாழ்த்து ஒலியோடு முந்திய சங்கம் முழங்கின மாதோ - 1246

சச்சரி

சச்சரி - 5741
சச்சரித் திறத்தின் ஓசை - 5023

சில்லரி

சில்லரி - 5156
நிரம்பு சில்லரிப் பாணியும் - 5851

சின்னம்

சின்னம் - 7322
தழுவு சின்னம் - 2228
தீ எழு பொன்னின் சின்னம் - 5734
தீயினில் செவ்வே வைத்து சின்னங்கள் வேறு வேறு வாயினில் ஊது வீரர் - 5731

செண்டை

செண்டை - 8445

தக்கை

தக்கை - 8445

தடுவையின் மரம்

தடுவையின் மரம் - 5737

தண்ணுமை

தண்ணுமை - 144
தண்ணுமை வார் ஒலி - 1808
ஊன் அளைந்த உடற்கு உயிர்ஆம் எனத் தான் அளைந்து தழுவின, தண்ணுமை - 2117
வீக்கின் தாக்குறும் தண்ணுமை - 88
தீம்சொல் பன்னக மகளிர் வள்வார்த் தண்ணுமைப் பாணி பேண - 5020
பொருநர் தண்ணுமைக்கு அன்னமும் போகலா - 4635

தாரை

தாரை - 1200
தாரை பேரிகை பொங்கின - 1200

தாளம்

தாளம் - 808
கோடியர் தாளம் கொட்டல் - 4180
வழங்கு பேர் அருஞ்சதிகள் - 4847

திமிலை

திமிலை - 5737
வெங்குரல் திமிலை - 5730
திமிலை தாக்க - 5737

துடி

துடி - 824
பொலந்துடி - 5100
துடிகளின் நவை தீர் வட்ட வான் கண் - 7490
துடியன் - 1954

துத்தரி

துத்தரி - 1955

துந்துமி

துந்துமி - 263
அந்தர துந்துமி - 246

தூரி

தூரி - 8445
பெட்கும் தூரியம் - 6871
தூரியக் குரலின் - 2931
வள் வார்த் தூரியம் துவைப்ப - 4179

படகம்

போர்த்த சங்கப் படகம் புடைத்திட - 7115

பணவம்

போர்ப்பணவம் - 8445

பணை

பணை - 808
தார்ப் பெரும் பணை - 4161
நாமக்கோல் தரு திண் பணை கொட்டினிர் - 8307
நெடும் பணை - 1059
தழுவு சங்குடன் நெடும் பணை தழங்கிட - 1059
தோலுடை நெடும் பணை துவைக்குந்தோறும் - 3083
போர்ப் பெரும் பணை பொம் என் முழக்கமா - 2899
பணைக்குலமும் - 8954

பம்பை

பம்பை - 1955
பம்பை பம்பின - 1554

பறை

பறை - 289
அறை பறை துவைப்ப - 793
நேர்தாக்கின் தாக்குறும் பறை - 88
வெங்குரலின் பறை - 5741
துணங்கைப் பறை துவைப்ப - 7716
வெள்ளக் கலிப்பறை - 29

சிறப்பு

வள்ளுவர் யானை மீமிசை நன் பறை அறைந்தனர் - 292

பாண்டில்

பாண்டில் - 5156
நிறை பாண்டில் - 5851

பாரி

நெடுங்கடல் விளம்பும் பாரி - 4992

பீலி

வரி கண் பீலிப் பேர் ஒலி - 8447

பேரி

பேரி - 2228
பேரி கலித்தன - 8326
அம் மழை குழைவுற முழங்கிடும் குழாம் கொள் பேரி - 744
ஈட்டிக் கொட்டிய பேரி - 5494
கொட்டும் பேரி - 1431
குமுறு பேரி - 4535
குமுறு பேரியின் இடி வனம் மிடைந்தன - 4389
தழங்கு பேரி - 2876
பிறங்கு பேரியும் .... இரட்டல் - 5111
பேரிகை பொங்கின - 1200
மங்கல பேரி - 808
யாம பேரி - 1551
மாப் பேரி கொட்டி - 8445
வார் இயங்கு மழையின் குரல் மானும் பேரி - 6871

முரசு

அதிர்ந்து எழு முரசு - 249
ஆர்த்து எழு முரசு - 809
இடிக்கும் முரசு - 827
இடி குரலின் முரசு - 635
இடிக் குரல் முரசு - 732
இரட்டுறும் முரசம் - 9096
ஊறு கொண்ட முரசு உமிழ் ஓதை - 2118
எற்றிய முரசு ஒலி - 3650
கடி மண முரசம் - 76
ஆனை மேல் மண முரசு - 738
கரம் பயில் முரசு இனம் கறங்க - 5401
குமுறின முரசக் கொண்மூ - 5674
கொண்டலின் முரசு அறைந்து - 2264

கோடணை முரசினம் குளிறு சேனையர் - 2925
தார்முரசம் - 8445
நிரைத்த வார் முரசும் - 775
மங்கல முரசு இனம் மழையின் ஆர்த்தன - 1200
மண்ணுறு முரசு இனம் - 1308
மண்ணுறு முரசு இனம் மழையின் ஆர்ப்புற - 1314
முரசினம் கறங்கிட - 275
முரைசு எய்து கடைத்தலையான் - 323
முரசு அறை செழுங்கடை - 184
முரசு எறிந்து அதிர் கழல் முழங்கு தானை அவ்வரசு - 730
மழையின் மா முரசு - 2897
யாணர் அணி முரசு - 1178
விசையுறு முரசு - 10289
வெற்றி சேர் முரசு - 314
வள் வார் முரசம் - 165
முரைசம் ஆர்ப்ப - 1359
கொற்ற மண்கணை குமுற - 2226

முருடு

முருடொடு பல் இயம் முழங்கி ஆர்த்தன - 272
அங்கண் முருடு - 6871
முருடு இரண்டு முழங்குறத் தாக்கு ஒலி - 2902

முழவம்

வயிரியர் முழவம் முழக்கும் இன் இசை - 462

முழவு

முழவு - 35
மண்ணும் முழவு - 886
முழவின் தெய்வப் பாணி - 8836
வேலை என்னும் மண்ணும் மணி முழவு அதிர - 632

முழா

முழா - 2124

யாழ்

யாழ் மொழி - 6858
யாழ் இசை மொழி - 4135
மழலை யாழ் - 4870
வண்டினின் பொலியும் நல் யாழ் - 8448
இறங்குவ மகரயாழ் எடுத்த இன் இசை நிறங் கிளர் பாடலான் நிமிர்வ - 140
இன் இசை மணி யாழின் இசை மது நுகர்வார் - 1190
கரும்பையும் சுவை கைப்பித்த சொல்லியர், காமரம் கனியாழின் நரம்பின் இன் இசை செவிபுக - 5031
குறி நரம்பு எறிவுற்று எழுவு தண் தமிழ் யாழ் - 2073
தெள்விளிச் சிறி யாழ்ப் பாணர் - 39
நரம்பின் நான்ற தேன் தாரை கொள் நறு மலர் யாழ் - 458
நரம்பினோடு இனிது பாடி - 855
நெய் திரள் நரம்பின் தந்த மழலையின் இயன்ற பாடல் - 487
நாம யாழ் - 5010
பாலை யாழ் - 3161
முரல் நல் யாழ் - 3102
மகர யாழ் - 135
கேடு இலா மகர யாழ் - 858
செயிரியர் மகர யாழின் தேம் பிழி தெய்வ கீதம் - 705
தேம்பிழி மகர யாழ் - 35
யாம யாழ் - 4480
விளரி நல் யாழ் - 4097
முறையின் யாழ் நரம்பு எழ எழும் ஒலி - 1809

சிறப்பு

இலக்கண மரபிற்கு ஏற்ற எழுவகை நரம்பின் நல்யாழ் - 4939
இசையின் கிழவர்தம் மனையன கிளை பயில் வளை யாழ் - 81
உள்ளுறை உணர்வு இனிது உணர்ந்த ஓசை ஓர் தெள் விளி யாழிடைத் தெரியும் செய்கையின் - 6263

வங்கியம்

வங்கியம் பல தேன் விளம்பின - 1554
வேய் (மூங்கிலால் ஆகியது) - 8445

வீணை

கண்டினின் குயின்ற வீணை நரம்பொடு கமழும் தேறல் - 8448
நாத வீணை இசை - 6868
தார் மேனித் திரு நாரதன் வீணை இசைத் தேன் - 2590
வீணையின் இசைபட வேதம் பாடுவான் - 3339
அவன் குணங்கள் வீணையில் பாடுகெனோ - 992
சேண் உயர் நெறி முறை திறம்பல் இன்றியே பாணிகள் பணி செய, பழுது இல் பண் இடை வீணையின் நரம்பிடை விளைத்த தேமறை, வாணியின், நாரதன்,செவியின் வார்க்கவே - 3079
தம்தாம் உலகத்திடை விஞ்சையர் பாணி தள்ளும் கந்தார வீணைக் களி செஞ்செவிக் காது நுங்க - 4814
விஞ்சை மன்னர்பால் விரசு மங்கைமார், நஞ்சு, வீணையின் நடத்து பாடலான் - 4614

மகர வீணை - 153
நல் இயல் மகர வீணை - 703
தைவரு மகர வீணை - 487
மகர வீணையின் மந்தர கீதம் - 4863
மாடகம் பற்றினள் மகர வீணை - 993

பிற

அமைதி கூடுவாரிடை இன்னியம் கொட்டுவார் - 4859
ஏழிசைக்கருவி - 7117
களம் தவா நெடுங் கருவியில் கைகளில் செயிரியர் கலைக் கண்ணால் அளந்த பாடல் - 5026
கிளை கட்டிய கருவிக் கிளர் இசை - 1930
நரம்பு கண்ணகத்துள் உறை நறை - 5851
வள் விசிக்கருவி பம்ப - 39

இணைவு

பல் இயம் - 153
நாமக் கடல் பல் இயம் - 8026
பல்வகைப் பொங்கு இயம் பலவும் கறங்கின - 1554
பல் இயம் துவைப்ப - 274
துவைத்த பல் இயம் - 286
நானாப் பல் இயம் துவைக்கும் - 5681
பல் இயம் கடிப்பினில் இடிக்கும் பல்படை - 438
மொழிந்தன பல் இயம் - 248
வல் இயங்கள் நெருங்கி மயங்கும் - 873
காகளமும் பல் இயமும் கனை கடலின் மேல் முழங்க - 236
பணைநிரந்தன பாட்டு ஒலி நிரந்தன - 1365
அமிழ்த ஏழ் இசை நரம்பு இயல் கின்னரம் முதல நன்மையே நிரம்பின - 8807
பேரி ஆம் முழவு ஒலித்தன - 1552
மத்தளம் முதலிய வயங்கு பல் இயம் - 2292
முருடொடு பல் இயம் முழங்கி ஆர்த்தன - 272
கார் எனச் சங்கு, பேரி முழங்கிய தானை - 758
கொம்பொடும் கோடு தாரை குடர் பறித்து ஊத வந்தான் - 5732
தடுவையின் மரங்களோடு சகடைகள் திமிலை தாக்க - 5737
வார்த் தொழில் புணரும் தெய்வ மங்கல முரசும் சங்கும் தூர்த்தன - 6510
சங்கு ஒலி, வயிரின் ஒசை, ஆகுலி, தழங்கு காளம் பொங்கு ஒலி, வரி கண் பீலிப் பேர் ஒலி, வேயின் பொம்மல், சிங்கத்தின் முழக்கம், வாசிச் சிரிப்பு, தேர் இடிப்பு, திண் கைம் மங்குலின் அதிர்வு, வான மழையொடு மலைந்த அன்றே - 8447
கும்பிகை, திமிலை, செண்டை, குறடு, மாப் பேரி கொட்டி, பம்பை, தார், முரசம், சங்கம், பாண்டில், போர்ப் பணவம், தூரி, கம்பலி, உறுமை, தக்கை, கரடிகை, துடி, வேய், கண்டை, அம்பலி, கணுவை, ஊமை, சகடையோடு ஆர்த்த அன்றே - 8445
தொளை உறு புழை வேய்த் தூங்கு இசைக் கானம் துயிலுறாது ஒரு நிலை தொடர, இளையவர் மிடறும் இந் நிலை இசைப்ப, கின்னரர் முறை நிறுத்து எடுத்த கிளை உறு பாடல், சில்லரிப் பாண்டில், தழுவிய முழவொடு கெழுமி, அளை உறும் அரவும் அமுது வாய் உகுப்ப, அண்டமும் வையமும், அளப்ப - 5156
நரம்பு கண்ணகத்துள் உறை நறை, நிறை பாண்டில் நிரம்பு சில்லரிப் பாணியும், குறடும், நின்று இசைப்ப, அரம்பை மங்கையர் அமிழ்து உகுத்தாலன்ன பாடல் வரம்பு இல் இன்னிசை, செவிதொறும் செவிதொறும் வழங்க - 5851
பண் தரு கிளவிச் செவ்விப் பல்லியத்து ஒழுகு தீம் தேன், கண்டினின் குயின்ற வீணை நரம்பொடு கமழும் தேறல், வண்டினின் பொலியும் நல் யாழ் வழியுறு நறவம், வானத்து அண்டர்தம் செவியின் உண்ணும் அமிழ்து எனல் ஆய அன்றே - 8448

இசைக்கு உரியபண்கள்

இளி

இளி அறை இன் சொல் இயைந்தன - 3577

உழை

உழை கலித்தன - 778

கந்தாரம்

கந்தார வீணைக்களி செஞ்செவிக் காது நுங்க - 4814
அறைதும்பி கந்தாரத்தின் இன் இசை பன்னிக் களி கூறும் - 4914

காமரம்

காமரம் களி வண்டு - 5461
காமரம் கனிந்தெனக் கனிந்த மென் மொழி - 1802
காமரம் முரலும் பாடல் - 3135

கிளை

மகர வீணையின் கிளை ஒலி - 153

குச்சரி

குச்சரித் திறத்தின் ஓசை களம் கொள - 5023

சிந்து

சிந்து ஒக்கும் சொல் - 9223

செவ்வழி

தும்பி காலைச் செவ்வழி முரல்வ - 45

புன்தலைப் புனம் காப்புடைப் பொங்கரில் சென்று இசைக்கும் நுளைச்சியர் செவ்வழி - 65

தாரம்

ஈனி தாரம் இயம்பிய வண்டுகள் - 7025

தெளி நூல் யாழ் அம் தாரத்தின் - 4914

நைவளம்

நைவளம் (நவிற்று மொழி) - 1150

பஞ்சமம்

பஞ்சமம் சிவணும் இன் இசை பாட - 6872

அறுபதம் ஐந்தினைப் பாடுகின்றது - 4459

விளரி

விளரிச் சொல்லியர் - 4867

இசைப்பாடல்கள்

கூறு பாடல் (வாய்ப்பாட்டு) -

சாமகீதம்

சாமகீதம் - 1554

வேத கீத அமுது அள்ளி விழுங்க - 6868

வீணையின் இசைபட வேதம் பாடுவான் (சாம வேதப் பாடல் இராவணன்) - 3339

பல்லாண்டு

தோகையர் பல்லாண்டு - 236

பல்லாண்டு இசை பரவ - 804

அருங்கல மின்னார் தந்த பல்லாண்டு இசை 1246

பாடகச் செம் பதும மலர்ப் பாவையர் பல்லாண்டு இசைப்ப - 240

குழலினோடு உற கூறு பல்லாண்டு ஒலி மழலை யாழ் இசையோடு மலிந்தவே - 1113

வள்ளைப் பாட்டு

வள்ளியோர் மனைச் சிலம்புவ மங்கல வள்ளை - 60

வள்ளைமாக்கள் - 2133

இசை இலக்கணம்

தந்திரி நெறி (யாழ் நூல்) - 5158

சங்கை இல் பெரும் பாண் உற்ற நிறத்துறை (பெரும்பாணர் வகுத்த இசை) - 8829

பிற

பருந்தொடு நிழல் சென்றன்ன இயல் இசைப் பயன் துய்ப்பாரும் - 46

ஓவியம்

ஓவியம் புரை நலார் - 5711

உயிர் பெய் ஓவியம் - 3088

உயிர் இலா ஓவியம் - 4556

ஓவம் - 828

எழுத்து இயல் - 6258

எழுது பாவை - 2556

சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை - 5088

தொழில் - 2016

எழுதிய படிவம் - 2423

தீட்டிய படிவம் - 9627

ஓவியக் கலைஞர்

ஓவியர் - 828

அமுதில் கோல் தோய்த்து அவயவம் அமைக்கும் தன்மை - 483

வல்லார் எழுதுவார்க்கு எழுத ஒண்ணா நீதியை நோக்கி (சீதை) - 4498

ஓவியர்க்கு எழுத ஒண்ணா உருவத்தன் (இராமன்) - 5890

வினைவர் - 4481

திருத்துவான் சித்திரம் - 6137

ஓவியரின் ஓவம் புதுக்கினர் என தருண மங்கையர் பொலிந்தார் - 828

சிறப்பு

கலிங்கத் திரையினுள் பொலி சித்திரப் பாவையின் செயலார் - 5970

சித்திரச் சுவர் நெடுஞ் சேனை தீட்டிய பத்தி - 2292

சித்திரப் பத்தி - 4885

பைம் பொன் சித்திரம் நுனித்த பத்தி - 6849

வான்தனில் வரைந்தது ஓர் மாதர் ஓவியம் போன்றனள் (சூர்ப்பணகை) - 2758

தேவுதெண் கடல் அமிழ்து கொண்டு அனங்கவேள் செய்த ஓவியம் புகையுண்டதே ஒக்கின்ற உருவாள் (அசோக வனச் சீதை) - 5079

வான் உலகின், வையத்து ஒக்க உறைவோர் உருவம் ஓவியம் அலால் - 4559

சிற்பம்

சிற்பம் - 7298

சிற்பக் கலைஞர்

தச்சர் - 9

சிற்பமும் மயன் மனம் வருந்திச் செய்தது - 4553

கலை நிகழிடம்

அன்னம் ஆடு இடங்களும் - 4528

ஆடல் அரங்கம் - 5465

அரு நடக் கிரியை ஆய்ந்திருப்பார் - 4860

ஆடல் தானம் - 4946

நாடகம் அரம்பையர் ஆடிய அரங்கு - 5401

சந்தப் பூம் பந்தர் வேய்ந்த தமனிய அரங்கில்,
தம்தம் சிந்தித்தது உதவும் தெய்வ மணி
விளக்கு ஒளி தரும் சேக்கை, வந்து ஒத்தும்
நிருத மாக்கள் விளம்பின நெறி வழாமை
கந்தர்ப்ப மகளிர் ஆடும் நாடகம்
காண்கின்றாரை - 4940

தோன்றிகள் அரங்கின் மாடே விளக்கு இனம் ஒத்த - 4179

சிறப்பு

தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கம்
தாங்க கொண்டல்கள் முழவின் ஏங்க,
குவளை கண் விழித்து நோக்க தெண்திரை
எழினி காட்ட தேம்பிழி மகர யாழின் வண்டுகள்
இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ - 35

நம்பிக்கை

நம்பிக்கைகளே வாழ்வின் அடிப்படையாக, உயிர் இயக்கமாக அமைதல் வெளிப்படை, தனி மனித நம்பிக்கைகள் ஒட்டு மொத்த சமுதாயத்திற்குமாக அமையும் பொழுது அவை சமுதாய நம்பிக்கையாக மாறுகின்றன. கம்பர் காலத்தின் தமிழ்ச் சமுதாய நம்பிக்கைகள் இங்கே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அகரவரிசை மேற்கொளப்படினும் தொடர்புடையன இணைந்திருத்தல் சிறப்பு என்ற கண்ணோட்டத்தில் சிலவிடங்களில் மீறலும் உள்ளது. ஒருசில நம்பிக்கைகள் பல துணைக் கூறுகளைக் கொண்டுள்ளன. அவையும் முறையே ஒருங்கே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

இறை நம்பிக்கையைத் தரும்பொழுது இது வைணவக் காப்பியமாதலின் திருமால், அவனது எட்டெழுத்துப் பெருமை ஆகியனவும் உடன் தரப்பட்டுள்ளன. கனவு பற்றிய நம்பிக்கைகள் நிமித்தத்துடன் தொடர்பு கொள்வதால் அது நிமித்தங்களின் கீழ் இடம் பெறுகிறது.

கம்பராமாயணம் புராணங்களின் உறை விடமாகத் தொன்மக் காப்பியமாக மலர்ந்துள்ளது. எனவே தனித்து விளக்கம் பெற்றுள்ளது. தொன்மத்தின் பாற்படும் இடங்கள், கடவுளர், தேவர் தொடர்பான கதைகள், கதை மாந்தருடன் தொடர்புறும் தொன்மங்கள், ஊழிக்காலம் பற்றிய விளக்கங்கள் விலங்குகள் பற்றியன என இது மிக நீண்டு அமையக் காணலாம். 'கம்பன் கதைக் களஞ்சிய'த்தை இப்பகுதி கொண்டு உருவாக்கும் அளவிற்குப் பரந்து விரிந்து அமைகிறது.

காப்பியக் களனில் வேள்விகளும் இன்றியமையாத இடம் கொள்கின்றன. எனவே அவையும் தனித்து அமைகின்றன. பல்வகை வேள்விகள், செய்முறை, செய்வோர் எனப் பகுத்துரைக்கப்பட்டுள்ளன.

இறை நம்பிக்கை அற்றவரையும் கம்பர் சுட்டுகிறார். கனவு, காண்பவர் உளம் சார்ந்தது என்பதையும் வெளிப்படுத்துகிறார். ஊழிக் காலத்தைப் பாடுவதில் கம்பர் பெருவிருப்பு காட்டுவதை அப்பகுதி புலப்படுத்தும்.

'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற நம்பிக்கையே இக் காப்பியத்தின் அடிப்படை இலக்கு என்பதும் சுட்டத்தக்கது.

அறம்

அ.ஃகல் இல் அறநெறி - 2208

வழி வரு தருமம் - 2209

எல்லை தீர் அறம் - 3682

கடிதா, அறனே! இது கா - 3392

உய்திறம் உடையார்க்கு அன்றோ, அறன் வழி
ஒழுகும் உள்ளம் - 7441

ஆய்வினை உடையர் ஆகி, அறம் பிழையாதார்க்கு
எல்லாம் ஏய்வன நலனே அன்றி, இறுதி வந்து
அடைவது உண்டோ? - 6668

அறம் தலை நின்றார்க்கு இல்லை அழிவு எனும்
அறிஞர் வார்த்தை - 9173

ஆக்கமும், கேடும், தாம் செய் அறத்தொடு பாவம்
ஆய போக்கி, வேறு உண்மை தேறார் பொரு
அரும் புலமை நூலோர் தாக்கின ஒன்றோடு
ஒன்று தருக்குறும் செருவில் தக்கோய்
பாக்கியம் அன்றி, என்றும் பாவத்தைப்
பற்றலாமோ? - 4130

அறத்தினது இறுதி, வாழ்நாட்கு இறுதி;
அ.ஃது உறுதி - 4129

தன்னையும் தெறும் தருமம் என்று இறை மனம்
தாழான் (இராவணன்) - 6565

தூயவை துணிந்த போது, பழி வந்து
தொடர்வது உண்டோ? - 7413

தருநெறி தருமமே காட்ட - 8793

பாவம் தோற்றது தருமமே வென்றது இப்படையால் - 4444

காண்க : அறம் ப. 314

பாவம்

பொது

பழிவரு நெறி - 2209

பதகன் (பாவி) - 2209

ஆதன் (பாவி) - 2215

அறம் கடந்தவர் செயல் இது - 7265

பிழைப்பரோ கேடு சூழ்ந்தார் - 5482

அறம் கெட முயன்றவன், அருள் இல் நெஞ்சினன், பிறன்கடைநின்றவன், பிறரைச் சீறினோன், மறம்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன், துறந்த மா தவர்க்கு அருந் துயரம் சூழ்ந்துள்ளோன் - 2199

குரவரை, மகளிரை, வாளின் கொன்றுளோன், புரவலன்தன்னொடும் அமரில் புக்கு உடன் விரவலர் வெரிநிடை விழிக்க, மீண்டுளோன், இரவலர் அரு நிதி எறிந்து வௌவினோன் - 2200

"தழைத்த தண் துளவினோன் தலைவன் அல்லன்" என்று அழைத்தவன், அறநெறி அந்தணாளரில் பிழைத்தவன், பிழைப்பு இலா மறையைப் பேணலாது, இழைத்த வன் பொய் எனும் இழுதை நெஞ்சினோன் - 2201

தாய் பசி உழந்து உ'பிர் தளர, தான் தனி, பாய் பெரும் பாழ் வயிறு அளிக்கும் பாவியும், நாயகன் பட நடந்தவனும் - 2202

தாளினில் அடைந்தவர்தம்மை, இதற்கு ஒரு கோள் உற, அஞ்சினன் கொடுத்த பேதையும், நாளினும் அறம் மறந்தவனும் - 2203

பொய்க் கரி கூறினோன், போருக்கு அஞ்சினோன், கைக் கொளும் அடைக்கலம் கரந்து வவ்வினோன், எய்த்த இடத்து இடர் செய்தோன், என்று இன்னோர் - 2204

அந்தணர் உறையுளை அனலி ஊட்டினோன், மைந்தரைக் கொன்றுளோன், வழக்கில் பொய்த்துளோன், நிந்தனை தேவரை நிகழ்த்தினோன் - 2205

கன்று உயிர் ஓய்ந்து உகக் கறந்து பால் உண்டோன், மன்றிடைப் பிறர் பொருள் மறைத்து வவ்வினோன் நன்றியை மறந்திடும் நயம் இல் நாவினோன் - 2206

ஆறு தன்னுடன் வரும் அம் சொல் மாதரை ஊறு கொண்டு அலைக்க, தன் உயிர் கொண்டு ஓடினோன், சோறு தன் அயலுளோர் பசிக்கத் துய்த்துளோன் - 2207

எ'.கு எறி செருமுகத்து, ஏற்ற தெவ்வருக்கு ஒ'.கினன், உயிர் வளர்த்து உண்ணும் ஆசையான், அ'.கல் இல் அறநெறி ஆக்கியோன் பொருள் வெ'.கிய மன்னன் - 2208

அழிவு அரும் அரசியல் எய்தி, ஆகும் என்று, இழி வரு சிறு தொழில் இயற்றி, ஆண்டு, தன் வழி வரு தருமத்தை மறந்து, மற்று ஒரு பழி வரு நெறி படர் பதகன் - 2209

தஞ்சு என ஒதுங்கினர் தனது பார் உளோர், எஞ்சல் இல் மறுக்கினோடு இரியல் போயுற, வஞ்சி சென்று இறுத்தவன் வாகை மீக் கொள, அஞ்சின மன்னவன் - 2210

கன்னியை அழி செயக் கருதினோன், குரு பன்னியை நோக்கினோன், பருகினோன், நறை, பொன் இகழ் களவினில் பொருந்தினோன் - 2211

ஊண் அல உண் வழி நாயின் உண்டவன், "ஆண் அலன், பெண் அலன், ஆர்கொலாம்?" என நாணலன், நரகம் உண்டு என்னும் நல் உரை பேணலன், பிறர் பழி பிதற்றி - 2212

மறு இல் தொல் குலங்களை மாசு இட்டு ஏற்றினோன், சிறு விலை எளியவர் உணவு சிந்தினோன், நறியன அயலவர் நாவில் நீர் வர உறு பதம் நுங்கிய ஒருவன் - 2213

வில்லினும் வாளினும் விரிந்த ஆண் தொழில் புல்லிடை உகுத்தனென், பொய்ம்மை யாக்கையைச் சில் பகல் ஓம்புவான் செறுநர் சீறிய இல்லிடை இடு பதம் ஏற்க, என் கையால் - 2214

ஏற்றவற்கு, ஒரு பொருள் உள்ளது, இன்று என்று மாற்றலன், உதவலன், வரம்பு இல் பல் பகல் ஆற்றினன் உழற்றும் ஓர் ஆதன் - 2215

சிதைவு அகல் காதல் தாயை, தந்தையை, குருவை, தெய்வப் பதவி அந்தணரை, ஆவை, பாலரை, பாவைமாரை, வதை புரிகுநர்க்கும் உண்டாம் மாற்றல் ஆம் ஆற்றல்; மாயா உதவி கொன்றார்க்கு ஒன்றானும் ஒழிக்கலாம் உபாயம் உண்டோ? - 4330

புலம் தெரி பொய்க்கரி புகலும் புன்கணார் குலங்களின், அவிந்தனர் - 5546

கோபமும் மறனும் மானக் கொதிப்பும் என்று இனைய எல்லாம் பாபம் நின்ற இடத்து நில்லாப் பெற்றி போல் - 3148

புண்ணியம்

மாயாப் புண்ணியம் - 7403

புண்ணியம் பொருந்தாத முயற்சி போல் - 6718

பொழுது நீட்டிய புண்ணியம் போனபின், பழுது செல்லும் அன்றே, மற்றைப் பண்பு எலாம்? - 9866

இறைவன்

இறைவவன் - 9527

இறைவ - 2728

இறை - 192

அண்ணல் - 7463

அமரர்கோன் - 9164

ஆதியான் - 8757

ஈசன் - 9730

ஈன்றவனே(ா) எப்பொருளும் - 3682

கடவுள் - 923

ஆணை செய் கடவுள் - 1317

பெருங்கடவுள் - 7602

செல்வன் - 7307

தெய்வம் உண்டு - 8934

தெவ் - 4468

தேவு - 192
பரஞ்சுடர் - 10111
பரம் - 9075
பரம்பரன் - 3688
பரம்பொருள் - 6218
பரமன் - 186
மன்பெரும்பரமார்த்தம் - 10052
பரமேட்டி - 8665
பழையோர் - 9073
புராதனா - 6659
புனிதன் - 186
பெருமான் - 9077
மூவா முதல் ஈசன் - 8961
மூலமே இல்லா முதல்வன் - 3683
மூன்று கவடு ஆய் முளைத்து எழுந்தமூலம் - 36
மூலகாரணத்தவன் - 3477
மூலத்தேவு - 8752
வள்ளல் - 9172
வினைப்பகைவ(ன்) - 9077
பல் இயல் நெறியின் பார்க்கும் பரம் பொருள் என்ன யார்க்கும் 'இல்லை' 'உண்டு என்ன நின்ற' - 1128
பேதியாது நிமிர் பேத உருவம் பிறழ்கிலா, ஓதி ஓதி உணரும்தொறும் உணர்ச்சி உதவும் வேதம், வேதியர், விரிஞ்சன், முதலோர் தெரிகிலா, ஆதி தேவர்; அவர் எம் அறிவினுக்கு அறிவுஅரோ - 2516
பனி நின்ற பெரும் பிறவிக் கடல் கடக்கும் புணை பற்றி, நனி நின்ற சமயத்தோர் எல்லாரும், "நன்று" என்ன, தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி - 2567
அணங்கு ஆர் பாகனை ஆசை தோறும் உற்று, உணங்கா நாள்மலர் தூய், உள் அன்பினால் இணங்கா, காலம் இரண்டொடு ஒன்றினும் வணங்கி - 4101
வரிசிலை நெடியோன் பேர் படைத்தவற்கு அடியவருக்கு அடியரும் பெறுவார், வேர் படைத்த வெம் பிறவியில் துவக்குணா, வீடு - 8623
வலம் கொள் நேமி மழை நிற வானவன் அலங்கு தாள் இணை தாங்கிய அம் மலை விலங்கும் வீடு உறுகின்றன; மெய்ந் நெறி புலன் கொள்வார்கட்கு அனையது பொய்க்குமோ? - 4629
உன் ஒரு துணைவன் தூய தாள் ஒருங்குடை உணர்வினோர், ஓய்வு இல் மாயையின் பெருங் கடல் கடந்தனர் பெயரும் பெற்றி - 5324
இறப்பு எனும் பதத்தை விட்டாய் இராமன் என்பளவும் மற்று இப் பிறப்பு எனும் புன்மை இல்லை - 7404
எல்லை தீர் அறத்தின் சான்றவன் - 3682

திருமால் பெருமை

காண்பார்க்கும் காணப்படு பொருட்கும் கண் ஆகி, பூண்பாய்போல் நிற்றியால், யாது ஒன்றும் பூணாதாய், மாண்பால் உலகை வயிற்றி ஒளித்து வாங்குதியால்; ஆண்பாலோ? பண்பாலோ? அப்பாலோ? எப்பாலோ? - 3684
எங்கும் உளன் ஒருவன் என இருநான் மறை தெரிக்கும் செங்கண்ணவன் இவனே - 8555
தன்னுளே உலகங்கள் எவையும் தந்து, அவை தன்னுளே நின்று, தான் அவற்றுள் தங்குவான், பின் இலன் முன் இலன், ஒருவன், பேர்கிலன்; தொல் நிலை ஒருவரால் துணியற்பாலதோ? - 6247
சாங்கியம், யோகம் என்று இரண்டு தன்மை வீங்கிய பொருள் எலாம் வேறு காண்பன; ஆங்கு அவை உணர்ந்தவர்க்கு அன்றி, அன்னவன் ஓங்கிய மேல் நிலை உணரற்பாலதோ? - 6248
சித்து என அரு மறைச் சிரத்தின் தேறிய தத்துவம் அவன்; அது தம்மைத் தாம் உணர் வித்தகர் அறிகுவர்; வேறு வேறு உணர் பித்தரும் உளர் சிலர்; வீடு பெற்றிலார் - 6249
அளவையான் அளப்ப அரிது அறிவின் அப் புறத்து உளவை ஆய் உபநிடதங்கள் ஓதுவ; கிளவி ஆர் பொருள்களான் கிளக்குறாதவன் களவை (மாயை)யார் அறிகுவார்? மெய்ம்மை கண்டிலார் - 6250
மூவகை உலகும் ஆய், குணங்கள் மூன்றும் ஆய், யாவையும் எவரும் ஆய், எண் இல் வேறுபட்டு, ஓவல் இல் ஒரு நிலை ஒருவன் செய்வினை தேவரும் முனிவரும் உணரத் தேயுமோ? - 6251
கருமமும், கருமத்தின் பயனும், கண்ணிய தருமுதல் தலைவனும், தானும் தான்; அவன் அருமையும் பெருமையும் அறிவரேல் அவர், இருமை என்று உரைசெயும் கடல்நின்று ஏறுவார் - 6252
மந்திரம் மா தவம் என்னும் மாலைய, தந்துறு பயன் இவை, முறையின் சாற்றிய நந்தல் இல் தெய்வம் ஆய், நல்கும் நான்மறை அந்தம் இல் வேள்விமாட்டு அவிசும் ஆம் அவன் - 6253
முற்பயப் பயன் தரும், முன்னில் நின்றவர், பிற்பயப் பயன் தரும், பின்பு போல் அவன்; தற் பயன் தான் தெரி தருமம் இல்லை; அ.்து அற்புத மாயையால் அறிகிலார் பலர் - 6254

ஒரு வினை, ஒரு பயன் அன்றி உய்க்குமோ,
இரு வினை என்பவை இயற்றி இட்டவை;
கருதின கருதின காட்டுகின்றது, தரு பரன்
அருள்; இனிச் சான்று வேண்டுமோ? - 6255

ஓர் ஆவுதி, கடைமுறை வேள்வி ஓம்புவார், அரா
அணை அமலனுக்கு அளிப்பரேல்; அது
சராசரம் அனைத்தினும் சாரும் என்பது பராவ
அரு மறைப் பொருள்; பயனும் அன்னதால் - 6256

பகுதியின் உட் பயன் பயந்தது; அன்னத்தின்
விகுதியின் மிகுதிகள் எவையும், மேலவர்
வகுதியின் வசத்தன; வரவு போக்கது;
புகுதி இல்லாதவர் புலத்திற்று ஆகுமோ? - 6257

எழுத்து இயல் நாளத்தின் எண் இலா வகை,
முழுத் தனி நான்முகன் முதல முற்று உயிர்
வழுத்து அரும் பொகுட்டது ஓர் புரையின்
வைகுமால், விழுத் தனிப் பல் இதழ் விரை
இலா முகிழ் - 6258

கண்ணினும் கரந்துளன்; கண்டு காட்டுவார்
உள் நிறைத்திடும் உணர்வு ஆகி,
உண்மையால், மண்ணினும், வானினும்,
மற்றை மூன்றினும் எண்ணினும் நெடியவன்
ஒருவன், எண் இலான் - 6259

சிந்தையின், செய்கையின், சொல்லின், சேர்ந்துளன்;
இந்தியம்தொறும் உளன்; உற்றது
எண்ணினால், முந்தை ஓர் எழுத்து என வந்து,
மும் முறைச் சந்தியும் பதமுமாய்த் தழைத்த
தன்மையான் - 6260

காமமும் வெகுளியும் முதல கண்ணிய
தீமையும், வன்மையும், தீர்க்கும் செய்கையான்
நாமமும், அவன் பிற நலி கொடா நெடுஞ்
சேமமும், பிறர்களால் செப்பற்பாலவோ? - 6261

காலமும், கருவியும் இடனும் ஆய், கடைப் பால்
அமை பயனும் ஆய், பயன் துய்ப்பானும் ஆய்,
சீலமும் அவை தரும் திருவும் ஆய், உளன்
ஆலமும் வித்தும் ஒத்து அடங்கும்
ஆண்மையான் - 6262

உள்ளுற உணர்வு இனிது உணர்ந்த ஓசை ஓர்
தெள் விளி யாழிடைத் தெரியும் செய்கையின்,
உள் உளன்; புறத்து உளன்; ஒன்றும்
நண்ணலான்; தள்ள அரு மறைகளும்
மருளும் தன்மையான் - 6263

ஓம் எனும் ஓர் எழுத்து அதனின் உள் உயிர்
ஆம் அவன், அறிவினுக்கு அறிவும் ஆயினான்;
தாம மூஉலகமும் தழுவிச் சார்தலால்,
தூமமும் கனலும்போல் தொடர்ந்த
தோற்றத்தான் - 6264

காலையின் நறு மலர் ஒன்றக் கட்டிய மாலையின்
மலர் புரை சமய வாதியர் சூலையின் திருக்கு
அலால், சொல்லுவோர்க்கு எலாம், வேலையும்
திரையும்போல் வேறுபாடு இலான் - 6265

அவ் அரியினுக்கு அடியவர் அவன்சீர் நண்ணுவர்
எனும் பொருள் நவை அறத் தெரிப்பான் - 5585

உலகு தந்தானும், பல் வேறு உயிர்கள்
தந்தானும், உள் உற்று, உலைவு இலா
உயிர்கள்தோறும், அங்கு அங்கே
உறைகின்றானும், மலரினில் வெறியும்
எள்ளில் எண்ணெயும்; மற்றும் கேளாய்!
அலகு இல் பல் பொருளும் பற்றி முற்றிய
அரிகாண் - 6308

மூன்றுஅவன்குணங்கள்; செய்கைமூன்று;
அவன் உருவம் மூன்று; முன்று கண், சுடர்
கொள் சோதி மூன்று; அவன் உலகம்
மூன்று; தோன்றலும் இடையும் ஈறும்
தொடங்கிய பொருள்கட்கு எல்லாம் சான்று
அவன்; இதுவே வேத முடிவு; இது சரதம்
என்றான் - 6310

சாணினும் உளன்; ஓர் தன்மை, அணுவினைச்
சத கூறு இட்ட கோணினும் உளன்; மா மேருக்
குன்றினும் உளன்; இந் நின்ற தூணினும்
உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்;
இத் தன்மை காணுதி விரைவின் என்றான்;
"நன்று" எனக் கனகன் சொன்னான் - 6312

மன்னுயிர் எல்லாம் தானே வருவித்து வளர்க்கும்
மாயன், தன் அன உலகம் எல்லாம் தருமமும்
எவையும் தானே என்னினும், அடைந்தோர்
தம்மை ஏமுற இனிதின் ஓம்பி, பின்னும் வீடு
அளிக்கும் என்றால், பிறிது ஒரு சான்றும்
உண்டோ? - 6475

உன்னை உள்ளபடி அறியோம்; உலகை
உள்ள திறம் உள்ளோம்; பின்னை அறியோம்;
முன் அறியோம்; இடையும் அறியோம்;
பிறழாமல்; நின்னை வணங்கி, நீ வகுத்த
நெறியில் நிற்கும் இது அல்லால், என்னை,
அடியோம் செயற்பால? இன்ப - துன்பம்
இல்லோனே! - 8662

துன்ப விளையாட்டு இதுவேயும், உன்னைத்
துன்பம் தொடர்பு இன்மை, இன்ப விளையாட்டு
ஆம்; எனினும், அறியாதேமுக்கு இடர் உற்றால்,
அன்பு விளையும், அருள் விளையும், அறிவு
விளையும். அவை எல்லாம், முன்பு, பின்பு,
நடு, இல்லாய்! முடித்தால் அன்றி, முடியாவே - 8666

எனக்கும் (நான்முகன்) எண் வகை ஒருவற்கும்,
இமையவர்க்கு இறைவன், தனக்கும், பல் பெரு
முனிவர்க்கும், உயிருடன் தழீஇய அனைத்
தினுக்கும், நீயே பரம் என்பதை அறிந்தார்
வினைத் துவக்குடை வீட்ட அருந் தளை
நின்று மீள்வார் - 10053

என்னைத்தான் முதல் ஆகிய உருவங்கள்
எவையும் முன்னைத் தாய் தந்தை எனும்
பெரு மாயையில் மூழ்கி, தன்னைத்தான்
அறியாமையின், சலிப்ப; அச்சலம் தீர்ந்து,
உன்னைத் தாதை என்று உணர்குவ, முத்தி
வித்து, ஒழிந்த - 10054

ஐ - அஞ்சு ஆகிய தத்துவம் தெரிந்து அறிந்து, அவற்றின் மெய் எஞ்சாவகை மேல் நின்ற நினக்குமேல் யாதும் பொய் எஞ்சா இலது என்னும் ஈது அரு மறை புகலும்; வய்யம் சான்று; இனி, சான்றுக்குச் சான்று இலை வழக்கால் - 10055

அளவையால் அளந்து, "ஆம்", "அன்று", என்று அறிவுறும் அமைதி உளவை யாவையும் உனக்கு இல்லை; உபநிடத்து உனது களவை ஆய்ந்து உறத் தெளிந்திலது ஆயினும், கண்ணால், துளவை ஆய் முடியாய்! "உளை நீ" எனத் துணியும் - 10056

கரணம் என்று உள உன்னை வந்து அறிவு காணாமே, அரணம் அல்லவர்க்கு இவை கடந்து அகல்வு அரிது ஆக, மரணம் தோற்றம் என்று இவற்றிடை மயங்குப; அவர்க்குஉன் சரணம் அல்லது ஓர் சரண் இல்லை, அன்னவை தவிர்ப்பான் - 10057

தோற்றம் என்பது ஒன்று உனக்கு இல்லை; நின்கணே தோற்றும் ஆற்றல் சால் முதல் பகுதி; மற்று அதனுள் ஆம், பண்பால் காற்றை முன்னுடைப் பூதங்கள்; அவை சென்று, கடைக்கால் வீற்று வீற்று உற்று வீவுறும்; நீ என்றும் விளியாய் - 10058

என் உருக் கொடு இவ் உலகினை ஈனுதி; இடையே உன் உருக் கொடு புகுந்து நின்று ஓம்புதி; உமைகோன் தன் உருக் கொடு துடைத்தி; மற்று இது தனி அருக்கன் முன் உருக் கொடு பகல் செயும் தரத்தது முதலோய்! - 10060

ஓங்காரப் பொருள் தேருவோர்தாம் உனை உணர்வோர்; ஓங்காரப் பொருள் என்று உணர்ந்து, இரு வினை உகுப்போர்; "ஓங்காரப் பொருள் ஆம்", "அன்று" என்று ஊழி சென்றாலும், ஓங்காரப் பொருளே பொருள் என்கலா உரவோர் - 10061

அண்டமும் அகிலமும் அறிவு அரு நெறியால் உண்டவன் ஒரு பெயர் உணர்குநர் உறு பெறு எண் தவ நெடிதுஎனின், இறுதியில் அவனைக் கண்டவர் உறு பொருள் கருதுவது எளிதோ? - 2630

எட்டெழுத்து (ஓம் நமோ நாராயணாய)

காமம் யாவையும் தருவதும், அப் பதம் கடந்தால், சேம வீடு உறச் செய்வதும், செந் தழல் முகந்த ஓம வேள்வியின் உறு பதம் உய்ப்பதும், ஒருவன் நாமம்; அன்னது கேள்; நமோ நாராயணாய! - 6230

மண்ணின்நின்று மேல் மலர் அயன் உலகு உற வாழும் எண் இல் பூதங்கள், நிற்பன திரிவன, இவற்றின் உள் நிறைந்துள கரணத்தின் ஊங்கு உள உணர்வும், எண்ணுகின்றது இவ் எட்டு எழுத்தே; பிறிது இல்லை - 6231

முக் கண் தேவனும், நான்முகத்து ஒருவனும் முதலா, மக்கள்காறும், இம் மந்திரம் மறந்தவர் மறந்தார்; புக்குக் காட்டுவது அரிது; இது பொதுவுறக் கண்டார் ஒக்க நோக்கினர்; அல்லவர் இதன் நிலை உணரார். - 6232

தோற்றம் என்னும் அத் தொல் வினைத் தொடு கடல் சுழிநின்று ஏற்று நன் கலன், அருங் கலன் யாவர்க்கும், இனிது மாற்ற மங்கலம், மா தவர் வேதத்தின் வரம்பின் தேற்ற மெய்ப் பொருள், திருந்த மற்று இதின் இல்லை, சிறந்த - 6333

உன் உயிர்க்கும் என் உயிர்க்கும் இவ் உலகத்திலுள்ள மன்னுயிர்க்கும் ஈது உறுதி என்று உணர்வுற மதித்துச் சொன்னது இப்பெயர் என்றனன் அறிஞரின் தூயோன் - 6234

இறைக் கொள்கை

வான்நின்று இழிந்து, வரம்பு இகந்த மா பூதத்தின் வைப்பு எங்கும் ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறத்தும் உளன் என்ப - 1313

உண்ட பேதமை மயக்குஅற வேறுபட்டு உருவம் கொண்டு, மெய் உணர்பவன் கழல் கூடியது - 465

ஆரைச் சொல்லுவது, அந்தணர் அரு மறை அறிந்தோர், ஓரச் சொல்லுவது எப் பொருள், உபநிடதங்கள், தீரச் சொல் பொருள் தேவரும் முனிவரும் செப்பும் பேரைச் சொல்லுவது அல்லது, பிறிதும் ஒன்று உளதோ - 6217

வேதத்தானும், நல் வேள்வியினானும், மெய் உணர்ந்த போதத்தானும், அப் புறத்துள எப் பொருளானும், சாதிப்பார் பெறும் பெரும் பதம் தலைக்கொண்டு சமைந்தேன்; ஓதிக் கேட்பது பரம்பொருள் இன்னம் ஒன்று உள்தோ? - 6218

அண்டம் பலவும், அனைத்து உயிரும், அகத்தும் புறத்தும் உள ஆக்கி, உண்டும் உமிழ்ந்தும், அளந்து இடந்தும், உள்ளும் புறத்தும் உளை ஆகிக் கொண்டு, சிலம்பி தன் வாயின் கூர்நூல் இயையக் கூடு இயற்றி, பண்டும் இன்றும் அமைக்கின்ற படியை ஒருவாய் - பரமேட்டி! - 8665

அறிந்தே இருந்து, அறியேம், அவன் நெடு மாயையின் அயர்ப்போம்; பிறிந்தோம் இனி முழுது ஐயமும்; பெருமான் உரை பிடித்தோம்; எறிந்தோம் பகை முழுதும்; இனித் தீர்ந்தோம் இடர், கடந்தோம்; செறிந்தோர் வினைப் பகைவா! எனத் தொழுதார், நெடுந் தேவர் - 9077

மூல முதல் ஆய், இடையும் ஆய், இறுதி ஆய் எவையும் முற்றும் முயலும் காலம் எனல் ஆயினன் இராமன் - 9440

நோய்க்கும், நோய் தரு வினைக்கும், நின் பெரும் பெயர் நொடியின், நீக்குவாய்! நினை நினைக்குவார் பிறப்பு என, நீங்கும் - 9824

பகுதி என்று உளது, யாதினும் பழையது பயந்த விகுதியால் வந்த விளைவு, மற்று அதற்கு மேல் நின்ற புகுதி, யாவர்க்கும் அரிய அப் புருடனும், நீ; இம் மிகுதி உன் பெரு மாயையினால் வந்த வீக்கம் - 10051

முன்பு பின்பு இரு புடை எனும் குணிப்பு அரு முறைமைத் தன் பெருந் தன்மை தான் தெரி மறைகளின் தலைகள், "மன் பெரும் பரமார்த்தம்" என்று உரைக்கின்ற மாற்றம் அன்ப! நின்னை அல்லால், மற்று இங்கு யாரையும் அறையா - 10052

அண்டத்து உம்பர் எண்தரும் குணங்கள் இன்றி, முதல் இடை ஈறு இன்றி ஆகி, பண்டை நான்மறைக்கும் எட்டாப் பரஞ்சுடர் - 10111

ஊழ்வினை

செல்லுறு கதியின் செல்லும் வினை - 28

ஊழ் வினை உன்னுவேன் - 5380

இறத்தலும் பிறத்தல் தானும் என்பன இரண்டும், யாண்டும், திறத்துளி நோக்கின், செய்த வினை தரத் தெரிந்த அன்றே - 4129

எக்குலங்களின் யாவரே யாயினும் இருவினை எல்லோர்க்கும் ஒக்கும்; ஊழ்முறை அல்லது, வலியது ஒன்று இல் என, உணர்வுற்றான் - 5039

எக்குலத்து யாவர்க்கும் வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும் - 4057

கன்மத்தை ஞாலத்தவர் யார் உளரே கடப்பார் - 5311

துரக்கும் மெய்யுணர்வு இரு வினைகளை - 7494

முறை நின்ற உயிர் - 365

விதியை யார் தீர்கிற்பார் - 7442

முன்னை ஊழ் வினையினால் முடிக்கில் ஆம் - 673

இழைத்த தொல் வினையையும் கடக்க எண்ணுதல் தழைத்த பேர் அருளுடைத் தவத்தின் ஆகுமேல் - 1337

தருவது விதியே என்றால் தவம் பெரிது உடையரேனும் வருவது வரும் நாள் அன்றி வந்து கைகூட வற்றோ - 3146

சூலமும் திகிரியும் சொல்லும் தாங்கிய மூலம் வந்து உதவிய மூவர்க்கு ஆயினும் காலம் என்று ஒரு வலை கடக்கல் ஆகுமோ - 2447

உயரும் சார்வு இலா உயிர்கள் செய்வினைப் பெயரும் பல்கதி பிறக்குமாறு போல் - 86

தேறிய மனத்தான் செய்த நல்வினைப் பயன்கள் எல்லாம் மாறிய பிறப்பில் தேடி வருவ போல் - 395

நதியின் பிழை அன்று நறும் புனல் இன்மை; அற்றே, பதியின் பிழை அன்று; பயந்து நமைப் புரந்தாள் மதியின் பிழை அன்று; மகன் பிழை அன்று; மைந்த! விதியின் பிழை; நீ இதற்கு என்னை வெகுண்டது என்றான். - 1734

வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள், தாழ் வினைஅது வர, சீரை சாத்தினான்; சூழ் வினை நான்முகத்து ஒருவன் சூழினும், ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற்பாலதோ! - 1764

தவம்

நாம் செய்த தவம் உண்டு - 8934

நோற்ற நோன்பு - 5188

உகம் பல் காலமும் தவம் செய்து பெரு வரம் உடையான் - 6548

பல் நெடுங்காலம் நோற்று, தன்னுடைப் பண்பிற்கு ஏற்ற பின் நெடுங் கணவன் தன்னைப் பெற்று - 10330

அற்ற கரத்தொடு உன் தலை நீயே அனல் முன்னில் பற்றினை உய்த்தாய்; பற் பல காலம் பசி கூர உற்று, உயிர் உள்ளே தேய, உலந்தாய்; பினை அன்றோ பெற்றனை செல்வம்? பின் அது இகழ்ந்தால் பெறல் ஆமோ? - 3245

திறத் திறனாலே, செய் தவம் முற்றித் திரு உற்றாய். . . . அறத் திறனாலே எய்தினை அன்றோ? (இராவணன்) - 3246

கொல்லாத விரதத்தார் - 9171

துறவு

இறக்கையும், சிலர் ஏகலும், மோகத்தால் பிறக்கையும், கடன் என்று, பின் பாசத்தை மறக்கை காண், மகனே! வலி ஆவது; துறக்கைதானும்? என்றாள் - மனம் தூய்மையாள் - 10184

நிமித்தங்கள்

பொது

எல்லியில் யான் இவன் இரண மாளிகை செல்லிய போதினும், திரிந்த போதினும், நல்லன நிமித்தங்கள் நனி நிகழ்ந்தன - 6460

தீய நிமித்தம் - 2943

துன் நிமித்தம் - 9377

சொலத் தகாத் துன்னிமித்தங்கள் எங்கணும் வரத் தொடர்வ - 6165

ஆயிரம் உற்பாதங்கள் ஈங்கு வந்து அடுத்த - 6825

கெடக் குறி - 4768

நன்னிமித்தம்

முனியொடு மிதிலையில் முதல்வன் முந்துநாள், துனி அறு புருவமும், தோளும், நாட்டமும், இனியன துடித்தன; ஈண்டும், ஆண்டு என நனி துடிக்கின்றன; ஆய்ந்து நல்குவாய் - 5101

நஞ்சு அனையான், வனத்து இழைக்க நண்ணிய வஞ்சனை நாள், வலம் துடித்த; வாய்மையால் எஞ்சல; ஈண்டு தாம் இடம் துடிக்குமால்; "அஞ்சல்" என்று இரங்குவாய்! அடுப்பது யாது? என்றாள் - 5103

என்றலும், திரிசடை, இயைந்த சோபனம்! நன்று இது! நன்று! எனா, நயந்த சிந்தையாள், 'உன் துணைக் கணவனை உறுதல் உண்மையால்; அன்றியும், கேட்டி' என்று, அறைதல் மேயினாள் - 510.4

உன் நிறம் பசப்பு அற, உயிர் உயிர்ப்புற,
இன் நிறத் தேன் இசை, இனிய நண்பினால்,
மின் நிற மருங்குலாய்! - செவியில், மெல்லென
பொன் நிறத் தும்பி வந்து, ஊதிப் போயதால் - 5105

ஆயது தேரின், உன் ஆவி நாயகன்
ஏயது தூது வந்து எதிரும் என்னுமால்;
தீயது தீயவர்க்கு எய்தல் திண்ணம்; என்
வாயது கேள்' என, மறித்தும் கூறுவாள் - 5106

தீயநிமித்தம்

அகம்பன் என்று அமைந்த கல்விச் செவ்வியான்,
இவ்வயின் உளஆம் தீயநிமித்தம் என்று
இயம்பலுற்றான் - 2943

குருதி மாமழை சொரிந்தன மேகங்கள் குமுறி
பருதி வானவன் ஊர்வளைப்புண்டது, பாராய்
கருதுவீர! நின்கொடிமிசைக் காக்கையின்
கணங்கள் பொருது வீழ்வன, புலம்புவ,
நிலம் படப் புரள்வ - 2944

வாளின் வாய்களை ஈ வளைக்கின்றன வயவர்
தோளும் நாட்டமும் இடம் துடிக்கின்றன,
தூங்கி மீள் மொய்ம்புடை இவுளி வீழ்கின்றன
விரவி ஞாளியோடு நின்று உளைக்கின்ற
நரிக்குலம் பலவால் - 2945

பிடி எலாம்மீதம் பெய்திட பெருங் கவுள் வேழம்
ஒடியுமால் மருப்பு உலகமும் கம்பிக்கும்
உயர்வான் இடியும் வீழ்ந்திடும் எரிந்திடும்
பெருந்திசை எவர்க்கும் முடியின் மாலைகள்
புலாலொடு முழுமுடை நாறும் - 2946

கொடுத்த வில்லை, அக் கொண்டல் நிறத்தினான்
எடுத்து வாங்கி, வலம் கொண்டு, இடக்
கையில் பிடித்த போது, நெறி பிழைத்தோர்க்கு
எலாம் துடித்தவால், இடக் கண்ணொடு
தோளுமே - 3053

மலர்க் கருங்குழல் சோர்ந்து, வாய்வெரீஇ, சில
மாற்றங்கள் பறைகின்றாள்; உலக்கும் இங்கு
இவள் கணவனும்; அழிவும் இவ் வியன்
நகர்க்கு உளது, என்றான் - 5036

நிலம் துடித்தன; நெடுவரை துடித்தன; நிருதர்தம்
குலமாதர் பொலந் துடிக்கு அமை மருங்குல்
போல், கண்களும், புருவமும், பொன் தோளும்
வலம் துடித்தன; மாதிரம் துடித்தன; தடித்து
இன்றி, நெடுவானம் கலந்து இடித்தன;
வெடித்தன, பூரண மங்கல கலசங்கள் - 5038

மறந்தனென்; இதுவும் ஓர் மாற்றம் கேட்டியால்;
அறம் தரு சிந்தை என் ஆவி நாயகன், பிறந்த
பார் முழுவதும் தம்பியே பெறத் துறந்து, கான்
புகுந்த நாள், வலம் துடித்ததே - 5102

ஓங்கு இருந் தடந் தேர் பூண்ட உளை வயப் புரவி
ஒல்கித் தூங்கின வீழ, தோளும் கண்களும்
இடத்துத் துள்ள, வீங்கின மேகம் எங்கும் குருதி
நீர்த் துள்ளி வீழ்ப்ப, ஏங்கின காகம் ஆர்ப்ப,
இருள் இல் விண் இடிப்ப மாதோ; - 5683

ஒன்னார் வெலத்தகா அமரரும் அவுணரும்
செருவில் விட்டன விடாத குலத்த கால்வய
நெடுங் குதிரையும் அதிர் குரல் குன்றும்,
இன்று வலத்த கால் முந்துறத் தந்து, நம்
மனையிடைப் புகுவ - 6165

வாயினும் பல்லினும் புனல் வறந்து உலறினார்,
நிருதர்; வைகும் பேயினும் பெரிய பேம்
நரிகளும் புரிதரும்; பிறவும் எண்ணின்,
கோயிலும் நகரமும், மடநலார் குழலும்,
நம் குஞ்சியோடும், தீயின் வெந்திடுமலால்
ஒரு நிமித்தம் பெறும் திறனும் உண்டோ? - 6166

துடித்த, கண்ணினொடு இடத் திரள் தோள்கள் - 6877

தொடங்கிய வேள்வியின் தூம வெங்கனல்
அடங்கியது அவிந்துளது, அமையுமாம் அன்றே?
இடம் கொடு வெஞ் செரு வென்றி இன்று எனக்கு
அடங்கியது என்பதற்கு ஏது ஆகுமால் - 8996

அடல் வலி அரக்கற்கு அப் போழ்து, அண்டங்கள்
அழுந்த, மண்டும் கடல்களும் வற்ற, வெற்றிக்
கால் கிளர்ந்து உடற்றும் காலை, வடவரை
முதல ஆனமலைக் குலம் சலிப்ப மானச், சுடர்
மணி வலயம் சிந்தத் துடித்தன, இடத்த
பொன் தோள் - 9721

உதிர மாரி சொரிந்தது, உலகு எலாம்;
அதிர வானம் இடித்தது; அரு வரை
பிதிர வீழ்ந்தது, அசனி; ஒளி பெறாக்
கதிரவன்தனை ஊரும் கலந்ததால் - 9722

வாவும் வாசிகள் தூங்கின; வாங்கல் இல்
ஏவும் வெஞ்சிலை நாண் இடை இற்றன;
நாவும் வாயும் உலர்ந்தன; நாள்மலர்ப்
பூவின் மாலை புலால் வெறி பூத்ததால் - 9723

எழுது வீணை கொடு ஏந்து பதாகைமேல்
கழுகும் காகமும் மொய்த்தன; கண்கள் நீர்
ஒழுகுகின்றன, ஓடு இகல் ஆடல் மா;
தொழுவில் நின்றன போன்றன சூழிமா - 9724

பிற

எத்தனை காலம் காப்பன், யான் இந்த மூதூர்
என்று அம் முத்தனை வினைவினேற்கு
முரண் வலிக்குரங்கு ஒன்று உன்னைக்
கைத்தலம் அதனால் தீண்டிக் காய்ந்த
அன்று என்னைக் காண்டி சித்திரநகரம்,
பின்னை சிதைவது திண்ணம் என்றான் - 4928

இணைவு

ஏகும் அளவையின் வந்தன, வலமும் மயில்,
இடமும் காகம் முதலிய, முந்திய தடை
செய்வன, கண்டான்; நாகம் அனன், 'இடை
இங்கு உளது இடையூறு' என நடவான்;
மாகம் மணி அணி தேரொடு நின்றான்,
நெறிவந்தான் - 1267

நின்றே, நெறி உணர்வான், ஒரு நினைவாளனை
அழையா, நன்றோ? பழுது உளதோ? நடு
உரை நீ, நயம் என்ன, குன்றே புரை தோளான்
எதிர், புள்ளின் குறி கொள்வான், இன்றே வரும்
இடையூறு; அது நன்றாய்விடும் என்றான் - 1268

கனவு

மனந்தலை வரும் கனவு - 3108

மூலம் இல் கனவு - 2392

துயில் இலை ஆதலின், கனவு தோன்றல; அயில்
விழி அனைய கண் அமைந்து நோக்கினேன்;
பயில்வன பழுது இல, பழுதின் நாடு என;
வெயிலினும் மெய்யன விளம்பக் கேட்டியால் - 5107

எண்ணெய் பொன் முடி தொறும் இழுகி, ஈறு
இலாத்திண் நெடுங் கழுதை பேய் பூண்ட
தேரின்மேல் அண்ணல் அவ் இராவணன்,
அரத்த ஆடையன், நண்ணினன், தென்புலம்
நவை இல் கற்பினாய்! - 5108

மக்களும், சுற்றமும், மற்றுளோர்களும்,
புக்கனர் அப் புலம்; போந்தது இல்லையால்;
சிக்கு அற நோக்கினென்; தீய, இன்னமும்
மிக்கன, கேட்க என விளம்பல் மேயினாள் - 5109

ஆண் தகை இராவணன் வளர்க்கும் அவ் அனல்
ஈண்டில; பிறந்தவால், இனம் கொள் செஞ் சிதல்;
தூண்ட அரு மணி விளக்கு அழலும் தொல்
மனை கீண்டதால், வான ஏறு எறிய, கீழை நாள் - 5110

பிடி மதம் பிறந்தன; பிறங்கு பேரியும்,
இடி என முழங்குமால், இரட்டல் இன்றியே;
தடியுடை முகிற்குலம் இன்றி, தா இல் வான்
வெடிபட அதிருமால்; உதிரும், மீன் எலாம் - 5111

வில் - பகல் இன்றியே, இரவு விண்டு அற
எல் பகல் எறித்துளது என்னத் தோன்றுமால்;
மல் பக மலர்ந்த தோள் மைந்தர் சூடிய
கற்பக மாலையும் புலவு காலுமால் - 5112

திரியுமால், இலங்கையும் மதிலும், திக்கு எலாம்
எரியுமால்; கந்தர்ப்ப நகரம் எங்கணும்
தெரியுமால்; மங்கல கலசம் சிந்தின
விரியுமால்; விளக்கினை விழுங்குமால், இருள் - 5113

தோரணம் முறியுமால், துளங்கி; சூழி மால்
வாரணம் முறியுமால், வலத்த வாள் மருப்பு;
ஆரண மந்திரத்து அறிஞர் நாட்டிய
பூரண குடத்து நீர் நறவின் பொங்குமால் - 5114

விண் தொடர் மதியினைப் பிளந்து, மீன் எழும்;
புண் தொடர் குருதியின் பொழியுமால் மழை;
தண்டொடு, திகிரி, வாள், தனுவென்று இன்னன,
மண்டு அமர் புரியுமால், ஆழி மாறு உற - 5115

மங்கையர் மங்கலத் தாலி, மற்றையோர்
அங்கையின் வாங்குநர் எவரும் இன்றியே,
கொங்கையின் வீழ்ந்தன; குறித்த ஆற்றினால்,
இங்கு, இதின் அற்புதம், இன்னும் கேட்டியால் - 5116

மன்னவன் தேவி, அம் மயன் மடந்தைதன்
பின் அவிழ் ஓதியும், பிறங்கி வீழ்ந்தன;
துன் அருஞ் சுடர் சுடச் சுறுக்கொண்டு ஏறின;
இன்னல் உண்டு எனும் இதற்கு ஏது ஈது எனா - 5117

என்றனள் இயம்பி, 'வேறு இன்னும் கேட்டியால்,
இன்று, இவண், இப்பொழுது, இயைந்தது ஓர்
கனா; வன் துணைக் கோள் அரி இரண்டு மாறு
இலாக் குன்றிடை உழுவையும் குழுக்
கொண்டு ஈண்டியே - 5118

வரம்பு இலா மத கரி உறையும் அவ் வனம்
நிரம்புற வளைந்தன; நெருக்கி நேர்ந்தன;
வரம்பு அறு பிணம்படக் கொன்ற; மாறு இலாப்
புரம் புக இருந்தது ஓர் மயிலும், போயதால் - 5119

இந்திரன் சிந்துரச் சென்னி யானை - 6562

மேல் இந்திரன் சிறு கண் யானை - 2695

தேவேந்திரன் சின மா - 9053

மும் மா மத வெண் நிற முன் உயர்தாள் வெம் மா - 2592

இமையேர் தந்தி - 6183

ஓடைக் களிறு - 7710

கொம்பு நாலுடைக் குலக் கரி - 7509

கொம்பு ஒத்தன நால் ஒளிர் கோள் வயிரக் கம்பக் கரி - 2608

கோடு நான்குடைப் பால் நிறக் களிறு - 8608

துனை வலத்து அயிராவதக் களிறு - 8606

தாங்கு கொம்பு ஒரு நான்கு கால் ஓங்கல் - 7389

மருப்பு இறா மத களிறு - 2918

மந்தரம் வேலையில்வந்ததும் வானத்து இந்திரன் ஊர் பிடி என்னலும் (ஐராவதத்தின் துணையாகிய அப்பிரமு என்னும் பெண் யானை) - 3600

கஜேந்திரன்

போர் அணங்கு இடங்கர் கவ்வ, பொது நின்று, "முதலே" என்ற வாரணம் - 5883

மா கரி - 6659

பொய்கையின் இடங்கர் கவ்வ, 'புராதனா! போற்றி' என்று கை எடுத்து அழைத்த யானை - 6689

திசையானைகள்

திக்கயங்கள் [ஐராவதம், புண்டரீகம், வாமநம், குமுதம், அஞ்சனம், புட்ப தந்தம், சார்வ பௌமம், சுப்பிர தீகம்] - 3156

திசைக் கரிகள் - 3112

திசை கட்டிய மால் கரி - 2594

திசை சுற்றிய கரி - 2965

திசை நிலை யானை - 6713

திசைப் போர் மத யானை - 9610

எண் திசைப் பெருங் களிற்றிடை மணி - 9662

எஞ்சல் இல் திசையில் நின்ற யானை - 3522

ஒரு திக்கின் மா - 4281

குலக் கயம் - 7481

அரக்குற்று எரி பொறிக் கண் திசைக் கரி -

ஆன்ற எண் திசை உலகு எலாம் சுமக்கின்ற யானை - 6569

இமையாத் திசை யானை - 8245

உரங்களின் உயர் திசை ஓம்பும் ஆனையின் கரங்கள் - 2745

ஊழிக்கும் உயர்ந்து ஒரு நாள் ஒருவாப் பாழித் திசை நின்று சுமந்த பணைச் சூழிக்கரி - 7785

கம்பம் இல் திசையில் நின்ற களிறு - 2986

கோட்டு இருந் திசை நிலைக் கும்பக் குன்று - 6538

செம்புக்கும் சிவந்த செங் கண் திசை நிலைக் களிறு - 6935

திக்கு உறும் செறி பரம் தெரிய நின்ற, திரள் பொன் கைக் குறுங்கண் மலை - 2518

திசையின் வாழ் வன்பு உலக் கரி - 3887

நிறைந்த மதத் திசை யானை - 2836

பரம் கிடந்த மாதிரம் பரித்த, பாழி யானை - 3159

முரண் திசைப் பணைக் கை யானை - 7328

வண்டு அலங்கு நுதல் திசைய வயக் களிற்றின் தோள் - 3070

வாழித் திக்கின் மயக்கின் மதம் தாழ் வேழம் - 6278

கீழ்த்திசை காவல் செய்யும் கைந் நாகம் - 4779

நீடுறு கீழ்த் திசை நின்ற யானை - 5274

வாடாது திக்கின் மதவரை - 9611

மேல் உற இராவணற்கு அழிந்து வெள்கிய நீல் உறு திசைக் கரி - 5405

திசைய வயக் களிற்றின் மருப்பு ஒடிய அடர்ந்த பொன் தோள் - 3070

உயிர் வறந்தும் உதிரம் வறந்தும் தம் மயர் வறந்தும் மதம் மறவாதன புயலவன் திசைப் போர் மதயானையின் இயல் பரம்பரை ஏழ் இரு கோடியால் - 9610

கொடாது நிற்றலின் கொற்ற நெடுந்திசை எடாது நிற்பன, நாட்டம் இமைப்பு இல வடாது திக்கின் மதவரையின் வழிக் கடாம் முகத்த, முளரிக் கணக்க வால் - 9611

பிற

குமுதம் நாறும் மதத்தன, கூற்றன சமுதரோடு மடிந்தன, சார்தரும் திமிரமா அன்ன செய்கைய, இத்திறம் அமிர்தின் வந்தன ஐ இரு கோடியால் - 9608

ஏறு நான்முகன் வேள்வி எழுந்தன ஊறும் மாரியும் ஓங்கு அலை ஓதமும் மாறும் ஆயினும் மாமதமாய் வரும் ஆறு மாறில ஆறு இரு கோடியால் - 9609

பிற தொன்மங்கள்

அண்டம்

ஈசன் உண்ட அண்டம் - 3945

அண்டத்துக்கு அப் புறம் நின்று உலகம் ஆக்கும் கரு - 8741

மலரோன் வைத்த நீள் இருங் கனக முட்டை நெடுஞ்சுவர் - 6338

அண்ட கோளச் சூழ் இருஞ் சுவர் - 6328

அண்ட மூலத்துக்கு அப்பால் - 6649

அரும் புறத்து அண்டமும் உருவி, அப்புறம் பெரும் புறக் கடல் - 6638

அணங்கு

அணங்கினுக்கு அணங்கு (சீதை) - 3388

அரக்கர்

வாள் அரக்கர் குலம் - 392

இருள் நிற வஞ்சகர் - 8311

மைந் நிற அரக்கர் - 8415

கற்றிலா அரக்கர் - 5936

வஞ்சனை அரக்கர்தம் வடிவு - 4151

மலைகளைச் சுற்றி அறைந்து, கற்ற மாத் தண்டினர் - 9308

தானவர் - 9299

துந்து எனும் தானவன் - 647

அந்த காலத்து அவ் ஆலகாலத்துடன் பிறந்தோர்; இந்த வாள் எயிற்று அரக்கர் எண் இறந்தவர் - இறைவ! - 9261

அரக்கியர் - 4955

ஆலகால விடம்

ஆலகாலம் - 8073

ஆலம் கண்டு அஞ்சி ஓடும் அமரர் - 7433

முது கடற் கடு - 6267

கவந்தம்

கவந்தம் ஆடுவ - 2993

கவந்த பந்தக் களி நடம் - 2650

தொண்டை நீங்கிய கவந்தம் - 3013

கோடிகள் பல படும் குழாம் குழங்களாய் ஆடின, அறு குறை அறுக்கும் ஆக்கைகள் - 8984

ஆனை ஆயிரம், தேர் பதினாயிரம், அடல் பரி ஒரு கோடி; சேனை காவலர் ஆயிரம் பேர் படின், கவந்தம் ஒன்று எழுந்தாடும்; கானம் ஆயிரம் கவந்தம் நின்று ஆடிடின், கவின் மணி கணில் என்னும்; ஏனை அம் மணி ஏழரை நாழிகை ஆடியது இனிது அன்றே - 9513

துருவச் சக்கரம்

கோள் இரு நாலினோடு ஒன்று கூடின ஆளுறு திகிரி - 2696

தெய்வமணி

ஆண்தகை தன் மோதிரம் அடுத்த பொருள் எல்லாம் தீண்டு அளவில், வேதிகை செய் தெய்வ மணி கொல்லோ? - 5295

நாவல் மரம்

நாவலம் பெருந்தீவு என்னா நளிர் கடல் வளாக வைப்பில், காவல் மூன்று உலகும் ஓதும் கடவுள் மா மரத்தைக் கண்டான் - 8750

புட்பக விமானம்

நெடும் புட்பகம் - 10108

பொன் திகழ் புட்பகம் - 8880

அண்டமே போன்றது ஐயன் புட்பகம் - 10111

விரை செறி அலங்கல் மாலைப் புட்பக விமானம் - 10288

இயக்கர் வேந்தனுக்கு அரு மறைக் கிழவன் அன்று ஈந்த, துயக்கு இலாதவர் மனம் எனத்தூயது, சுரர்கள் வியக்க வான் செலும் புட்பக விமானம் - 10094

ஏழ் இரண்டு ஆகிய உலகம் ஏறினும் பாழ் புறம் கிடப்பது, படி இன்றாயது, ஓர் சூழ் ஒளி மானம் - 10258

பத்து நால் என அடுக்கிய உலகங்கள் பலவின் மெத்து யோனிகள் ஏறினும் வெளியிடம் மிகுமால்; - 10109

மங்கலம் நீங்கினாரை, ஆர் உயிர் வாங்கினாரை, நங்கை! இக் கடவுள் மானம் தாங்குறும் நவையிற்று அன்றால் - 8699

பேய்

பேய் - 346

மாயாப் பேய் - 1649

சிலர் பொதி பேயின் பண்டாரத்திடை இட்டார் தம் உடல் - 5706

கொழுங் குறைத் தசை என ஈர்ந்து கொண்டு, அது விழுங்குறு பேய் - 4160

தழல் வெங் கண் பேய் - 1523

துள்ளிய கழல் கண் பேய்கள் தோள் புடைத்து ஆர்ப்ப - 5684

புலன் இல் பேய் - 3514

போனகம் நுகரும் பேய்கள் - 8414

புளிக்கும் கண்டகர் புண்ணீருள் குளிக்கும் பேய் குடையும் தோறும் - 5397

பேய் முகப் பிணி - 2541

அலகு - 446

அலகை - 2404

பாழ் வயிற்று அலகை - 3028

புலவு நாறு அலகை - 7688

அலகையின் குழுவும் - 6042

இழுதை - 1331

கழுது - 2968

வன் கழுது - 2961

கழுதும் விழி துயின்றன - 3748

விழி குழி கழுதுகள் - 7858

நெடுங் கழுது முள் எயிறு தின்று, பசி மூழ்கிட இருந்த - 4229

விண்ணின் நீளிய நெடுங் கழுது - 5400

பாற்று இனம் ஆர்த்தன - 2906

சிறு கண் கூளி - 2409

மீளிகள் பூண்டன - 2905
வெம்போர் மீளியின் இனம் - 5506

சிறப்பு

பேர் இடங்கரின் கொடுங் குழை அணிந்தன பேய்கள் - 9818
அலகை தூண் எறிந்தன, கையெடுத்து ஆடின துணங்கை - 7480
கடக்கார் என்னப் பொங்கு கவந்தத்தொடு கைகள் தொடக்கா நிற்கும் பேய் இலயத்தின் தொழில் பண்ணி மடக்கோ இல்லா வார் படிமக் கூத்து அமைவிப்பான் நடக் கால் காட்டும் கண்ணுளர் ஒக்கும் - 9591

பூதம்

மற்றைய பூதம் - 6651
ஒழிப்ப அருந் திறல் பல் பூத கணம் - 3695
ஓர் பூத கணத்து அரசு - 654
வெவ்வியது ஒரு பெரும் பூதம். . .வவ்விய தன் கையின் வளைத்து வாய்ப் பெயும் - 3663
மாதங்கம் தின்று உய்ந்து இவ் வனத்தின்தலை வாழும் பூதம் - 3673
விடத்தின் கனல் பூதம் பிணிக்கும் கையும்; பெய் பில வாயும் - 3675
மண்ணின் நின்று மேல் மலர் அயன் உலகு உறவாழும் எண் இல் பூதங்கள் - 6231
அந்தணர் வேள்வியின் ஆக்கி, ஆணையின் வந்துற விடுத்தது ஓர் வய வெம் பூதம் - 5876
ஆடல் மிக்க பூதங்கள் தொடர்ந்து புகழ்ந்தன - 4813
கூளிகள் பூண்டன - 2905
சிவந்த சாதகர் - 2409
வேதாளம் - 9265

வடவை

வாயிடை எரியுடை வடவை - 5641
(கடலில் உள்ள நீர் கொந்தளித்து எழாத படி அந்த நீரைச் சுவறச் செய்யும் தீயைத் தன்முகத்தில் கொண்டுள்ளதாய்க் கடவுளால் அமைக்கப்பெற்ற ஒரு பெண் குதிரை)
பச்சை வெம் புரவி -
பாகவன் - 3655
கனலி காற்று வடவை - 8348
கடல் கிடந்தது நின்றதன்மேல் கதழ் வட கடுங் கனல் - 7338
வடவா அனல் - 3200
வேலை வட அனல் - 5933
சுடர்க் குதிரையின் வாய் முகத்திடை நிமிர்ந்து வடவேலை பருகும் தீ - 2541
மூசு அரி - 10357

வலம்புரிச் சங்கு

புரந்தரன் செருவில் தந்து போயது, புணரி ஏழும் உரம் தவிர்த்து, ஊழி பேரும் காலத்தின் ஒலிக்கும் ஓதை கரந்தது வயிற்றில், கால வலம்புரி கையின் வாங்கி சிரம் பொதிர்ந்து அமரர் அஞ்ச ஊதினான் திசைகள் சிந்த - 8453

வேள்வி

பொது

வேள்வி

இணை அறு வேள்வி - 7674
இரு வேள்வி - 592
உரை செறி வேள்வி - 607
மண்பால் அமரர் வரம்பு ஆரும் காணாத எண்பால் உயர்ந்த, எரி ஓங்கும் நல் வேள்வி - 3687
தவ வேள்வி - 324
தேவர் வவ்வி நுகர் பெரு வேள்வி - 653
நான் மறை புகழும் வேள்வி - 72
நெய் அழல் வேள்வி - 8322
நெய் ஆர் பெரு வேள்வி - 8688
நெய் தவழ் வேள்வி - 411
பெரு வேள்வி - 326
செயற்கு அரிய பெரு வேள்வி - 646
முந்து வேள்வி - 1356
அனல் - 9556
அனையின் துறை ஐம்பதொடு ஐம்பதும் - 2591
ஏந்துவ நூல் அணி மார்பினர் ஆகுதிக்கு இயைய - 2076
எரித்தலை - 4878
காந்து எரி - 1811
பொங்கு எரி - 3385
மூதெரி - 2644
ஓமம் இயற்ற - 6363
ஓமத்து அனல் - 8950
உலை கொள் வெங் கனல் பொதி ஓமம் - 8977
தழங்கு எரியின் ஓமம் - 8965
மகம் - 3305
முறை தரு மகம் - 608
யாகம் - 432

வேள்வி நிகழிடம்

நின்றது ஓர் சயித்தம் கண்டான் - 5477
தேட அரு வேரம் - 5486
பொன்னால் வில் இடு வேரம் - 5485

வேத நூல் முறைமையால் வேள்வி முற்றுவேற்கு ஈது அலாது இல்லை, வேறு இருக்கற்பாலதே - 431

வேள்விக்கு உரியன

அங்கிக் குண்டம் - 5934
காந்து குண்டத்தில் அடங்கு எரி எழுப்புவ - 2076
கூனை அங்கியின் குண்டம் - 6607
சந்தின் அடையின் படலை வேதிகை தடம் தோறு அந்தி இடு அகில் புகை - 4223
வளர்க்கும் அவ் அனல் - 5110
ஓம வெம் கனல் - 441
சோதி மங்கலத் தீ - 5951
தகவு உறு அத் தழல் - 403
ஓம வெங் குழி உகு நெய் - 970
நெய் பொழி வேள்வி - 5942
ஆரண மந்திரம் அமைய ஓதிய பூரண மணிக்குடம் - 8976
வேள்விக்கு வேண்டற் பால கலப்பையும் விறகும் நெய்யும் - 8931

அவி உணவு

தேவர் தம் நாவுள் ஆகுதியை நயக்கும் வேள்வி - 338
தூம வெங் கனல் அந்தணர் முதலினார் சொரிந்த ஓம வேள்வியின் இமையவர் பேறு - 6196
பொழிந்த நெய் ஆகுதி (வாய் வழி பொங்கி எழுந்த கொழுங் கனல்) - 691

நிகழ்த்து முறை

வேதநூல் முறைமையால் வேள்வி - 431
தொல் நெறி வாய்ந்த நல் வேள்வி - 1242
ஒடுங்கல் இல் உலகம் யாவும் உவந்தன உதவி வேள்வி தொடங்கின - 3773
இரும்பு அனைய கரு நெடுங் கோட்டு இணை ஏற்றின் பணை ஏற்ற பெரும் பியலில் பளிக்கு நுகம் பிணைத்து, அதனோடு அணைத்து ஈர்க்கும் வரம்பு இல் மணிப் பொன் கலப்பை வயிரத்தின் கொழு மடுத்திட்டு உரம் பொரு இல் நிலம், வேள்விக்கு, அலகு இல் பல சால் உழுதேம் - 681

வேள்வி - வகைகள்

திருமணம்

உன் புதல்வன் வேள்வி - 730

நிகும்பலை

நிகும்பலை வேள்வி - 8930
கடி வேள்வி - 8960
மந்திர வேள்வி - 8998
முருங்கு அழல் வேள்வி முற்றி, முதல் அற முடிக்க மூண்டான் - 8932
அனலுக்கு ஓக்கிய எருமைகள் மறிந்தன; மறியும் ஈர்ந்தவால் - 8980
ஓம வெங் கனல் அவிந்து, உழைக் கலப்பையும் காமர் வண் தருப்பையும் பிறவும் கட்டுஅற, வாம மந்திரத் தொழில் மறந்து, நந்துறு தூம வெங்கனல் எனப் பொலிந்து தோன்றினான் - 8990

படைக்கல வேள்வி

'காலம் ஈது' எனக் கருதிய இராவணன் காதல், ஆல மா மரம் ஒன்றினை விரைவினில் அடைந்தான்; மூல வேள்விக்கு வேண்டுவ கலப்பைகள் முறைமையால் கூலம் நீங்கிய இராக்கதப் பூசுரர் கொணர்ந்தார் - 8602
அம்பினால் பெருஞ் சமிதைகள் அமைத்தனன்; அனலில் தும்பை மா மலர் தூவினன்; காரி எள் சொரிந்தான்; கொம்பு பல்லொடு, கரிய வெள்ளாட்டு இருங் குருதி, வெம்பு வெந் தசை, முறையின் இட்டு, எண்ணெயால் வேட்டான் - 8603
வலம் சுழித்து வந்து எழுந்து எரி, நறு வெறி வயங்கி, நலம் சுரந்தன பெருங் குறி முறைமையின் நல்க - 8604

பரிவேள்வி

நன்றி கொள் அரி மகம் - 259
அயங் கெழு வேள்வியோடு அமரர்க்கு ஆக்கிய வயங்கு எரி - 2155
வாம் பரி வேள்வி - 271

புருடமேதம்

வதை புரி புருடமேதம் - 599

மகவருள் வேள்வி

காதலரைத் தரும் வேள்வி - 654
நல் பெற்ற வேள்வி - 2435
புதல்வரை அளிக்கும் வேள்வி - 208
வன் திறல் மைந்தரை அளிக்கும் மா மகம் - 261

நிகழ் முறை

ஆயதற்கு உரியன கலப்பை யாவையும் ஏயெனக் கொணர்ந்தனர், நிருபர்க்கு ஏந்தலும், தூய நல் புனல் படீஇ, சுருதி நூல் முறை சாய்வு அறத் திருத்திய சாலை புக்கனன் - 262
முழங்கு அழல் மும்மையும்முடுகி, ஆகுதி வழங்கியே, ஈர் அறு திங்கள் வாய்த்த பின், தழங்கின துந்துமி; தா இல் வானகம் விழுங்கினர் விண்ணவர், வெளி இன்று என்னவே - 263
முகமலர் ஒளிதர மொய்த்து, வான் உளோர், அக விரை நறு மலர் தூவி, ஆர்த்து எழ, தகவுடை முனியும், அத் தழலின் நாப்பணே, மக அருள் ஆகுதிவழங்கினான் அரோ - 264

ஆயிடை, கனலின்நின்று, அம் பொன் தட்டம் மீத்
தூய நல் சுதை நிகர் பிண்டம் ஒன்று, சூழ்
தீ எரிப் பங்கியும், சிவந்த கண்ணும் ஆய்,
ஏயென, பூதம் ஒன்று எழுந்தது ஏந்தியே - 265

வைத்தது தரைமிசை, மறித்தும் அவ் வழி
தைத்தது பூதம், அத் தவனும், வேந்தனை,
'உய்த்த நல் அமிர்தினை; உரிய மாதர்கட்கு,
அத் தகு மரபினால், அளித்தியால்' என்றான் - 266

வாம் பரி வேள்வியும், மகாரை நல்குவது
ஆம் புரை ஆகுதி பிறவும், அந்தணன்
ஓம்பிட முடிந்தபின், உலகு காவலன்
ஏம்பலோடு எழுந்தனன் யாரும் ஏத்தவே - 271

செய்ம் முறைக் கடன்அவை திறம்பல் இன்றியே
மெய்ம் முறைக் கடவுளோர்க்கு ஈந்து,
விண்ணுளோர்க்கு அம் முறை அளித்து, நீடு
அந்தணாளர்க்கும் கைம் முறை வழங்கினன்,
கனக மாரியே - 273

வேந்தர்கட்கு, அரசொடு, வெறுக்கை, தேர், பரி,
வாய்ந்த நல் துகிலொடு, வரிசைக்கு ஏற்பன
ஈந்தனன்; பல் இயம் துவைப்ப ஏகி, நீர்
தோய்ந்தனன் சரயு நல் துறைக்கண் எய்தியே - 274

வேள்வி செய்தோர்

அந்தணர் வேள்வி - 5876

அனையின் துறை ஐம்பதொடு ஐம்பதும், நூல்
வினையின் தொகை வேள்வி நிரப்பிய மா
முனைவன் (இந்திரன்) - 2591

முனிவர் காக்கும் முற்றுறு மும்மைச் செந் தீ - 5933

விண்ணவர்க்கு ஆக்கிய முனிவன் வேள்வி - 433

தக்கன் நல் வேள்வி - 678

தக்கனார் வேள்வி - 677

வானவரும் செயல் ஆற்றா நெய் தவழ்
வேள்வி (மாவலி) - 411

மிதிலையர் கோமான் புரியும் வேள்வி - 451

வம்பின் மாலை தாழும் மாமணி மௌலித் தார்ச்
சனகன் பெரு வேள்வி - 634

சென்னி நீள் மாலையான் வேள்வி - 4513

தருவனத்துள் யான் இயற்றும் தகை
வேள்வி (விசுவாமித்திரன்) - 324

ஈண்டு இருந்து இயற்றுவென் யாகம், யான்' எனா,
நீண்ட பூம் பழுவத்து நெறியின் எய்தி, பின்
வேண்டுவ கொண்டு, தன் வேள்வி மேவினான்,
காண்தகு குமரரைக் காவல் ஏவியே. - 432

எண்ணுதற்கு, ஆக்க, அரிது இரண்டு மூன்று நாள்
விண்ணவர்க்கு ஆக்கிய முனிவன் வேள்வியை,
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்,
கண்ணினைக் காக்கின்ற இமையின் காத்தனர் - 433

வெஞ்சிலை மைந்தன் போனான், நிகும்பலை
வேள்வியான் (இந்திரசித்து) - 8930

தானவர் சமைத்த யாகம் - 9256

வேள்விப் பயன்

துனி அறு வேள்வி - 8852

தெருள் தரு வேள்வி - 272

வேள்வி ஆதிய புண்ணியம் - 6243

புண்ணியம் தொடர் வேள்விகள் - 1348

முற்றிய வேள்வி - 1377

அங்கி மேல் வேள்வி செய்து அரிதின் பெற்ற
நின் சிங்க ஏறு (இராமன்) - 1863

ஆயிரம் மௌலி அண்ணல் மெய்ச்சிலை,
விரிஞ்சன் தானே வேள்வியின் வேட்டுப்
பெற்ற கைச் சிலை - 8942

ஓர் ஆவுதி கடை முறை வேள்வி ஓம்புவார்,
அரா அணை அமலனுக்கு அளிப்பரேல்;
அது சரா சரம் அனைத்தினும் சாரும் என்பது
பராவ அரு மறைப் பொருள்; பயனும்
அன்னதால் - 6256

சிறப்பு

உயர்ந்த வேள்வித் துறை எலாம் கரையும்
கண்டான்(ன்) (சனகன்) - 7666

வையம் மன் உயிர் ஆக, அம் மன் உயிர்
உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு
ஐயம் இன்றி, அறம் கடவாது, அருள்
மெய்யில் நின்ற பின், வேள்வியும் வேண்டுமோ? - 1423

அனல் படு கையன் (திருமால்) - 414

செந்தழல் முகந்த ஓம வேள்வியின் உறு பதம்
உய்ப்பதும் ஒருவன் நாமம் அன்னது கேள்
நமோ நாராயணாய - 6230

வேத வேள்வியின் கரை (திருமால்) - 6245

நான் மறை அந்தம் இல் வேள்விமாட்டு
அவிசும் ஆம் அவன் (திருமால்) - 6253

யாகசாதனன் (யாகத்தால் பதவி அடைந்த
இந்திரன்) - 9205

பழக்க வழக்கம்

நம்பிக்கைகள் போன்று ஒரு சமூகத்தின் இயல்பினை வெளிக்காட்டுவனவாக அதன் பழக்கவழக்கங்களும் அமைகின்றன. இக் காப்பியம் அரசர் வாழ்க்கையைத் தரும் அரசக் காப்பியமாகவும் நிற்றலின் அவர் தம் பழக்க வழக்கங்களேமிகுதியாக உள. எனவே முதற்கண் அவை வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. அனைத்து மக்களுக்கும் பொதுவாக அமைவன அகர வரிசையில் பின் தொடர்கின்றன. அவற்றிலும் அரசரினச்சார்பு மிகுதியாக அமையக் காணலாம்.

சடங்குகளில் நீராடல் இன்றியமையா இடம் கொள்கிறது. வாழ்த்தும் போதும் மலர்தூவல் சிறப்பிடம் கொள்கிறது. விழவில் பாலிகைகள் இடம்பெறுதலும் அறிய முடிகிறது.

அரசிளங் குமரர் பிறப்புச் சிறப்பு

"இறை தவிர்ந்திடுக பார், யாண்டு ஓர் ஏழ்; நிதி
நிறைதரு சாலை தாள் நீக்கி, யாவையும்
முறை கெட, வறியவர் முகந்து கொள்க"
எனா, அறை பறை' என்றனன் அரசர் கோமகன் - 289

படை ஒழிந்திடுக; தம் பதிகளே, இனி,
விடை பெறுகுக, முடி வேந்தர்; வேதியர்,
நடையுறு நியமமும் நவை இன்று ஆகுக;
புடை கெழு விழாவொடு பொலிக, எங்கணும் - 290

'ஆலையம் புதுக்குக; அந்தணாளர்தம்
சாலையும், சதுக்கமும், சமைக்க, சந்தியும்;
காலையும் மாலையும், கடவுளர்க்கு, அணி
மாலையும் தீபமும், வழங்குக' என்றனன் - 291

என்புழி, வள்ளுவர், யானை மீமிசை
நன் பறை அறைந்தனர்; நகர மாந்தரும்,
மின் பிறழ் நுசுப்பினார்தாமும், விம்மலால்,
இன்பம் என்ற அளக்க அரும் அளக்கர்
எய்தினார் - 292

பண்ணையும் ஆயமும், திரளும் பாங்கரும்,
கண் அகன் திரு நகர் களிப்புக் கைம்மிகுந்து,
எண்ணெயும், களபமும், இழுதும், நானமும்,
சுண்ணமும், தூவினார் வீதிதோறுமே - 294

இத்தகை மா நகர், ஈர் அறு நாளும்
சித்தம் உறும் களியோடு சிறந்தே,
தத்தமை ஒன்றும் உணர்ந்திலர் - 295

அரசிளங் குமரர் கல்வி

சவுளமொடு உபநயம் விதிமுறை தருகுற்று,
'இ(வ்)அளவது' என ஒரு கரை பிறிது இலவா,
உவள் அரு மறையினொடு ஒழிவு அறு
கலையும் தவள் மதி புனை அரன் நிகர்
முனி தரவே - 303

உபநயன விதிமுடித்து, மறை ஓதுவித்து, இவரை
வளர்த்தானும் வசிட்டன் காண் - 660

வீரனும் இளைஞரும் வெறிபொழில்களின் வாய்
ஈரமொடு உறைதரு முனிவரரிடை போய்,
சோர் பொழுது அணிநகர் துறுகுவர் - 308

அரசு உரிமை

முத்தவற்கு உரித்து அரசு எனும் முறைமையின்
உலகம் 1475

இளம் பதம் 3835

தொல் பதவி 2475

மெய்த் திருப்பதம் 5088

இந்திரப் பெரும் பதம் 6143

நீயும் நின் தாதையும் நீங்க, நின் குலத் தாயம்
வந்தவரொடும் தனையர் இல்லையால்;
ஆயது கருதினம் - 4664

அரசர் உரிமை

தீது அறு குணத்தால் மிக்க செழு மறை தெரிந்த
நூலோர், 'மே தகு பொருள்கள் யாவும்
வேந்தருக்கு' என்கைதன்னால் - 574

திண் தேர் அரசன் ஒருவன் குலத் தேவி மார்
(பலதார மணம்) - 910

அரசர் நூலணிதல்

சுருதி நூல் விடா இறைவர் - 2479

மார்பின் அணி நூலர் - 3120

மின் துன்னு நூலின் மணி மார்பு - 3467

மும்மை நூல் மார்பினர் - 9289

மேவ அருஞ் சுடர் ஒளி விளங்கும் மார்பின் நூல் - 1219

அரசர் முடிசூடுதல்

நண்ணி, நாகணை வள்ளலை நான்மறைப்
புண்ணிய புனல் ஆட்டி, புலமையோர்
எண்ணும் நல்வினை முற்றுவித்து ஏற்றினான்,
வெண் நிறத்த தருப்பை விரித்து அரோ - 1429

ஐயனை மகுடம் சூட்டற்கு ஏயும் மங்கலங்கள்
ஆன யாவையும் இயையக் கொண்டு, தூய
நான் மறைகள் வேதபாரகர் சொல்ல,
தொல்லை வாயில்கள் நெருக்கம் நீங்க,
மாதவக் கிழவன் வந்தான் - 1570

கங்கையே முதல ஆய கன்னி ஈறு ஆன தீர்த்த
மங்கலப் புனலும், நாலு வாரியின் நீரும்,
பூரித்து, அங்கியின் வினையிற்கு ஏற்ற
யாவையும் அமைத்து, வீரச் சிங்க ஆசனமும்
வைத்து, செய்வன பிறவும் செய்தான் - 1571

மறையோர் ஆசி வழங்க, வானுளோர்
நறை தோய் நாள்மலர் தூவ, நல் நெறிக்கு
இறையோன்தன் இளையோன், அவ் ஏந்தலை,
துறையோர் நூல்முறை மௌலி சூட்டினான் - 4119

பெருநிலக் கிழத்தியோடும் உரியமா மலராளோடும்
உகந்தனர் ஒருவு இல் செல்வம் கரியவன்
உய்த்தற்கு ஒத்தகாப்பு நாள் நாளை என்றான் - 10313

'சூழ் கடல் நான்கின் தோயம், எழுவகை ஆகச்
சொன்ன ஆழ் திரை ஆற்றின் நீரோடு
அமைத்தி இன்று' என்ன, 'ஆம்' என்று,
ஊழியின் இறுதி செல்லும் தாதையின்
உலாவி, ஒன்றா ஏழ் கடல் நீரும் தந்தான்,
இருந்து உய்ய மருந்து தந்தான் - 10319

எரி மணிக் குடங்கள் பல் நூற்று யானை மேல்
வரிசைக்கு ஆன்ற விரி மதிக் குடையின்
நீழல், வேந்தர்கள் பலரும் ஏந்தி, புரை மணிக்
காளம் ஆர்ப்ப, பல்லியம் துவைப்ப, பொங்கும்
சரயுவின் புனலும் தந்தார், சங்குஇனம்
முரல மன்னோ - 10320

மாணிக்கப் பலகை தைத்து, வயிரத் திண்
கால்கள் சேர்த்தி, ஆணிப்பொன் சுற்றி முற்றி,
அழகுறச் சமைத்த பீடம், ஏண் உற்ற பளிக்கு
மாடத்து இட்டனர்; அதனின் மீது பூண் உற்ற
திரள் தோள்வீரன் திருவொடும் பொலிந்தான்
மன்னோ - 10321

திருமுடி ஆட்டும் நல் நீர் - 10324

மங்கல கீதம் பாட, மறை ஒலி முழங்க, வல்
வாய்ச் சங்குஇனம் குமுற, பாண்டில்
தண்ணுமை ஒலிப்ப, தா இல் பொங்கு
பல்லியங்கள் ஆர்ப்ப, பூ மழை பொழிய,
விண்ணோர், எங்கள் நாயகனை வெவ்வேறு
எதிர்ந்து, அபிடேகம் செய்தார் - 10322

மாதவர், மறைவலாளர், மந்திரக் கிழவர், மற்றும்
மூதறிவாளர், உள்ள சான்றவர் முதல் நீராட்ட,
சோதியான் மகனும், மற்றைத் துணைவரும்,
அனுமன் தானும், தீது இலா இலங்கை
வேந்தும், பின் அபிடேகம் செய்தார் - 10323

தெய்வ நீராடற்கு ஒத்த செய் வினை வசிட்டன்
செய்ய, ஐயம் இல் சிந்தையான் அச் சுமந்திரன்
அமைச்சரோடும் நொய்தினின் இயற்ற,
நோன்பின் மாதவர் நுனித்துக் காட்ட எய்தின
இயன்ற பல் வேறு, இந்திரற்கு இயன்ற என்ன - 10326

அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடை
வாள் ஏந்த, பரதன் வெண் குடை கவிக்க,
இருவரும் கவரி பற்ற, விரை செறி குழலி
ஓங்க, வெண்ணையூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி,
வசிட்டனே புனைந்தான், மௌலி - 10327

வெள்ளியும் பொன்னும் ஒப்பார் விதி முறை
மெய்யின் கொண்ட ஒள்ளிய நாளின்,
நல்ல ஓரையின், உலகம் மூன்றும் துள்ளின
குனிப்ப, மோலி சூடினான் கடலின் வந்த
தெள்ளிய திருவும், தெய்வப் பூமியும், சேரும்
தோளான் - 10328

அரசவைக் காட்சி

மங்கல கீதம் பாட, மறையவர் ஆசி கூற, சங்கு
இனம் குமுற, பாண்டில் தண்ணுமை துவைப்ப,
தா இல் பொங்கு பல்லியங்கள் ஆர்ப்ப, பொரு
கயல் கருங்கண் செவ் வாய் பங்கய
முகத்தினார்கள் மயில் நடம் பயில மாதோ - 10336

மந்திரக் கிழவர் சுற்ற, மறையவர் வழுத்தி ஏத்த,
தந்திரத் தலைவர் போற்ற, தம்பியர் மருங்கு
சூழ, சிந்துரப் பவளச் செவ் வாய்த் தெரிவையர்
பல்லாண்டு கூற, இந்திரற்கு உவமை ஏய்ப்ப
எம்பிரான் இருந்த காலை - 10338

தோலுடை நெடும் பணை துவைக்குந்தோறு
எலாம், காலன் நின்று, இசைக்கும் நாள்
கடிகை - 3083

நரம்பு கண்ணகத்துள் உறை நறை, நிறை
பாண்டில் நிரம்பு சில்லரிப் பாணியும், குறடும்,
நின்று இசைப்ப, அரம்பை மங்கையர் அமிழ்து
உகுத்தாலன்ன பாடல் வரம்பு இல் இன்னிசை,
செவிதொறும் செவிதொறும் வழங்க - 5851

உலாவரல்

அரசு வீற்றிருந்து ஆளவும், ஆய் மணிப் புரசை
யானையின் வீதியில் போதவும், விரசு
கோலங்கள் காண விதி இலேன் - 5380

அரசர் செலவு (பயணம்)

காகளமும் பல் இயமும் கனை கடலின் மேல்
முழங்க, கானம் பாட, மாகதர்கள், அரு
மறை நூல் வேதியர்கள், வாழ்த்து எடுப்ப,
மதுரச் செவ்வாய்த், தோகையர் பல்லாண்டு
இசைப்ப, கடல் தானை புடை சூழ, சுடரோன்
என்ன ஏகி, அருநெறி நீங்கி, உரோமபதன்
திருநாட்டை எதிர்ந்தான் அன்றே - 236

நித்திய நியமம் முற்றி, நேமியான் பாதம் சென்னி
வைத்த பின், மறை வல்லோர்க்கு வரம்பு அறு
மணியும் பொன்னும், பத்தி ஆன் நிரையும்,
பாரும், பரிவுடன் நல்கி, போனான் - முத்து
அணி வயிரப் பூணான், மங்கல முகிழ்த்த
நல் நாள் - 803

இரு பிறப்பாளர் எண்ணாயிரர், மணிக் கலசம்
ஏந்தி, அரு மறை வருக்கம் ஓதி, அறுகு நீர்
தெளித்துவாழ்த்தி, வரன் முறை வந்தார்,
கோடி மங்கல மழலைச் செவ்வாய்ப் பரு
மணிக் கலாபத்தார், பல்லாண்டு இசை பரவப்
போனான் - 804

முறையின் மொய்ம் முகில் என முரசு ஆர்த்திட...
தேர்மிசை நடந்தான் - 1364

'எழுக சேனை' என்று ஏவினன்; எய்தினன்
தொழுது, கேகயர் கோமகன் சொல்லொடும்,
தழுவு தேரிடைத் தம்பியொடு ஏறினான்,
பொழுதும் நாளும் குறித்திலன் போயினான் - 2109

யானை சுற்றின; தேர் இரைத்து ஈண்டின;
மான வேந்தர் குழுவினர்; வாளுடைத்
தானை சூழ்ந்தன; சங்கம் முரன்றன;
மீன வேலையின் விம்மின, பேரியே - 2110

கொடி நெருங்கின; தொங்கல் குழீஇயின;
வடி நெடுங் கண் மடந்தையர் ஊர் மடப்
பிடி துவன்றின; பூண் ஒளி போர்ந்தன,
இடி துவன்றின மின் என, எங்குமே - 2111

பண்டி எங்கும் பரந்தன; பல் இயம்
கொண்டு இயம்பின கொண்டலின்; கோதையில்
வண்டு இயம்பின; வாளியின் வாவுறும்
செண்டு இயங்கு பரியும் செறிந்தவே - 2112

துளை முகத்தின் சுருதி விளம்பின;
உளை முகத்தின உம்பரின் ஏகிட,
விளை முகத்தன வேலையின் மீது செல்
வளை முகத்தன வாசியும் வந்தவே - 2113

வில்லின் வேதியர், வாள் செறி வித்தகர்,
மல்லின் வல்லர், சுரிகையின் வல்லவர்,
கொல்லும் வேல் குந்தம் கற்று உயர் கொற்றவர்
தொல்லை வாரணப் பாகரும் சுற்றினார் - 2114

எறி பகட்டினம், ஆடுகள், ஏற்றை மா,
குறி கொள் கோழி, சிவல், குறும்பூழ், நெடும்
பொறி மயிர்க் கவுதாரிகள், போற்றுறு
நெறியின் மாக்களும் முந்தி நெருங்கினார் - 2115

ஊன் அளைந்த உடற்கு உயிர் ஆம் எனத்
தான் அளைந்து தழுவின, தண்ணுமை;
தேன் அளைந்து செவி உற வார்த்தென,
வான் அளைந்தது, மாகதர் பாடலே - 2117

ஊறுகொண்ட முரசு உமிழ் ஓதையை
வீறு கொண்டன, வேதியர் வாழ்த்து ஒலி;
ஏறு கொண்டு எழும் மல்லர் இடிப்பினை
மாறுகொண்டன, வந்திகர் வாழ்த்துஅரோ! - 2118

குரிசிலும், தம்பியைக் கூவி, 'கொண்டலின்
முரசு அறைந்து, "இந் நகர் முறைமை
வேந்தனைத் தருதும் ஈண்டு" என்பது
சாற்றி, தானையை, "விரைவினில் எழுக!
"என, விளம்புவாய்' என்றான் - 2264

நான நெய் விளக்கு நால் இரு கோடி நங்கையர்
அங்கையில் எடுப்ப - 5148

தொளை உறு புழை வேய்த் தூங்கு இசைக்
கானம் துயிலுறாது ஒரு நிலை தொடர
இளையவர் மிடறும் இந்நிலை இசைப்ப கின்னரர்
முறை நிறுத்து எடுத்த கிளை உறு பாடல்,
சில்லரிப் பாண்டில் தழுவிய முழவொடு கெழுமி
அளை உறும் அரவும் அமுது வாய் உழுப்ப
அண்டமும் வையமும் அளப்ப - 5156

அன்ன பூஞ் சதுக்கம், சாமரை, உக்கம் ஆதியாம்
வரிசையின் அமைந்த, உன்னரும் பொன்னின்,
மணியினின் புனைந்த இழைக் குலம், மழைக்
கருங்கடைக் கண், மின் இடை, செவ் வாய்,
குவி முலை, பணைத் தோள் வீங்கு தேர்
அல்குலார் தாங்கி, நல் நிறக் காரின் வரவு
கண்டு உவக்கும் நாடக மயில் என நடப்ப; - 5157

தந்திரி நெறியில் தாக்குறு கருவி தூக்கினர்
எழுவிய சதியின், முந்துறு குணிலோடு
இயைவுறு குறட்டில், சில்லரிப் பாண்டிலில்,
முறையின், மந்தர கீதத்து இசைப் பதம்
தொடர, வகை உறு கட்டளை வழாமல்,
அந்தர வானத்து அரம்பையர், கரும்பின்
பாடலார், அருகு வந்து ஆட; - 5158

மாலையும், சாந்தும், கலவையும், பூணும்,
வயங்கு நுண் தூசொடு, காசும், சோலையின்
தொழுதிக் கற்பகத் தருவும், நிதிகளும்,
கொண்டு பின் தொடர, பாலின் வெண் பரவைத்
திரை கருங் கிரிமேல் பரந்தெனச் சாமரை
பதைப்ப, வேலைநின்று உயரும் முயல் இல்
வெண் மதியின், வெண்குடை மீதுற விளங்க - 5161

கேடகத்தோடு, மழு, எழு, சூலம், அங்குசம்,
கப்பணம், கிடுகோடு, ஆடகச் சுடர் வாள்,
அயில், சிலை, குலிசம் முதலிய ஆயுதம்
அனைத்தும், தாடகைக்கு இரட்டி எறுழ் வலி
தழைத்த தகைமையர், தட வரை பொறுக்கும்
சூடகத் தடக் கை, சுடு சினத்து, அடு போர்,
அரக்கியர் தலை தொறும், சுமப்ப - 5163

உணர்வு இல் நெஞ்சினர் , ஊமர், உரைப்பொருள்
புணரும் கேள்வியர் அல்லர், பொறி இலர்,
கொணரும் கூனர், குறளர், கொழுஞ் சுடர்
துணரும் நல் விளக்கு ஏந்தினர், சுற்றினார் - 6786

விளக்கு ஒரு விளக்கம் தாங்கி, மின் அணி
அரவின் சுற்றி, இளைப்புறும் மருங்குல் நோவ,
முலை சுமந்து இயங்கும் என்ன, முளைப்
பிறை நெற்றி வான மடந்தையர், முன்னும்
பின்னும் வளைத்தனர் வந்து சூழ, வந்திகர்
வாழ்த்த வந்தான் - 7637

இரண்டுபாலும் கொற்ற மங்கலங்கள் ஆர்ப்ப
இராவணன் கோயில் புக்கான் - 8205

ஐ இரு கோடி செம்பொன் மணி விளக்கு அம்
கை ஏந்தி, மை அறு வான நாட்டு மாதரும்,
மற்றை நாட்டுப் பை அரவு அல்குலாரும்,
பலாண்டு இசை பரவ, தங்கள் தையலர்
அறுகு தூவி வாழ்த்தினர் தழுவ, சார்ந்தான் - 8207

அனந்தம் நூறாயிரம் அரக்கர் மங்கைமார்,
புனைந்த பூங் குழல் விரித்து அரற்றும்
பூசலார், இனம் தொடர்ந்து உடன் வர,
எய்தினாள் என்ப - 9929

சிந்தொடு, குறளும், கூனும், சிலதியர் குழாமும்,
தெற்றி வந்து, அடிவணங்கிச் சுற்ற, மணி
அணி விதான நீழல், நங்கையும்
நடக்கலுற்றாள் - 1139

சிறப்பு

ஊழியின் இறுதி காணும் வலியினது உயர்
பொன் தேரின், ஏழ் உயர் மதமா அன்ன
இலக்குவன் கவிகை ஏந்த, பாழிய மற்றைத்
தம்பி பால் நிறக்கவரி பற்ற, பூழியை
அடக்கும் கண்ணீர்ப் பரதன் கோல்
கொள்ளப் போனான் - 10292

வீடணக் குரிசில், மற்றை வெங் கதிர்ச் சிறுவன்
வெற்றிக் கோடு அணை குன்றம் ஏறி,
கொண்டல் தேர் மருங்கு செல்ல, தோடு
அணை மவுலிச் செங்கண் வாலி சேய் தூசி
செல்ல, சேடனைப் பொருவும் வீர மாருதி
பின்பு சென்றான் - 10293

உருப்பசி உடைவாள் எடுத்தனள் தொடர, மேனகை வெள்ளடை உதவ, செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல, அரம்பையர் குழாம் புடை சுற்ற, கருப்புரச் சாந்தும், கலவையும், மலரும், கலந்து உமிழ் பரிமளகந்தம், மருப்புடைப் பொருப்பு ஏர் மாதிரக் களிற்றின் வரிக் கை வாய் மூக்கிடை மடுப்ப - 5147

நான நெய் விளக்கு நால் இருகோடி நங்கையர் அங்கையில் எடுப்ப. . . பால்நிறத்து அன்னக் குழாம் படர்ந்தென்னப் பற்பல மங்கையர் படர - 5148

அரசரை எதிர் கொளல் (வரவேற்பு)

கொழுந்து ஓடிப் படர் கீர்த்திக் கோவேந்தன் அடைந்தமை சென்று ஒற்றர் கூற, கழுந்து ஓடும் வரி சிலைக் கைக் கடல் தானை புடை சூழ, கழற் கால் வேந்தன், செழுந் தோடும் பல் கலனும் வெயில் வீச, மாகதர்கள் திரண்டு வாழ்த்த, எழுந்து ஓடும் உவகையுடன் ஓசனை சென்றனன் அரசை எதிர்கோள் எண்ணி . - 237

எய்த, அத் திரு நெடுந் தேர் இழிந்து, இனிய தன் மொய் கொள் திண் சேனை பின் நிற்க, முன் சேறலும், கையின் வந்து, 'ஏறு' என, கடிதின் வந்து ஏறினான்; ஐயனும், முகம் மலர்ந்து, அகம் உறத் தழுவினான் - 1045

தழுவி நின்று, அவன் இருங் கிளையையும், தமரையும், வழு இல் சிந்தனையினான், வரிசையின் அளவளாய், 'எழுக முந்துற' எனா, இனிது வந்து எய்தினான் - 1046

இரதம் ஆண்டு இழிந்த பின்னர், இரு மருங்கு, இரண்டு கையும், பரதனும் இளைய கோவும், பரிந்தனர் ஏந்த, பைந் தார் வரதனும் எய்தி, மை தீர் மா தவர்த் தொழுது, நீதி விரத மெய்த் தாதை பாதம் வணங்கி, மாடு இருந்த வேலை - 1237

அண்ணற்கு எதிர்கொளற்கு இயைந்த எல்லாம் நன்று கொண்டு, 'இன்னும் நீயே நணுகு' என அவனை ஏவி தன் துணைத் தேவிமாரும் தம்மொடும் தழுவ, தானும் நின்றனன் நெடிய வாயில் கடைத்தலை நிறைந்த சீரான் - 4366

உரைத்த செஞ் சாந்தும், பூவும், சுண்ணமும், புகையும், ஊழின் நிரைத்த பொற்குடமும், தீப மாலையும், நிகர் இல் முத்தும், குரைத்து எழு விதானத்தோடு தொங்கலும், கொடியும், சங்கும் இரைத்து இமிழ் முரசும், முற்றும் இயங்கின, வீதி எல்லாம் - 4367

எங்கு இருந்தான் நும் கோமான் என்றலும் எதிர்கோள் எண்ணி மங்குல் தோய் கோயில் கொற்றக் கடைத்தலை மருங்கு நின்றான் என்றான் - 4369

சுண்ணமும் தூசும் வீசி, சூடகத் தொடிக் கைம் மாதர், கண் அகன் கவரிக் கற்றைக் கால் உற, கலை வெண் திங்கள் விண் உற வளர்ந்தது என்ன வெண் குடை விளங்க, வீர வண்ண வில் கரத்தான் முன்னர், கவிக்குலத்து அரசன் வந்தான் - 4370

அருக்கியம் முதல ஆன அருச்சனைக்கு அமைந்த யாவும் முருக்கு இதழ் மகளிர் ஏந்த, முரசுஇனம் முகிலின் ஆர்ப்ப, இருக்கு இனம் முனிவர் ஓத, இசை திசை அளப்ப, யாணர்த் திருக் கிளர் செல்வம் நோக்கி, தேவரும் மருளச் சென்றான் - 4371

வழியனுப்புதல்/விடை கொடுத்தல் / விடைபெறல்

தொத்துஉறுமலரும், சாந்தும் சுண்ணமும் இனைய தூவி, 'வித்தக சேறி' என்றார் வீரனும் விரைவது ஆனான் - 4753

வந்தித்து அழுது, மும்மை வலம் கொடு இறைஞ்சினன் அன்போடு, எழுது பாவையும், ஏத்தினள்; ஏகினன் இப்பால் - 5428

வந்தனை என்னா போர்த் தொழில் மாருதி போனான் - 6005

அய்யனும் அவர்கள்தம்மை அகம் மகிழ்ந்து, அருளின் நோக்கி, வய்யகம், சிவிகை, தொங்கல், மா மணி மகுடம், பொன் பூண், கொய் உளைப் புரவி, திண் தேர், குஞ்சரம், ஆடை இன்ன மெய் உறக் கொடுத்த பின்னர், கொடுத்தனன் விடையும் மன்னோ - 10347

'மருங்கு இனி உரைப்பது என்னோ, மறு அறு துணைவற்கு?' என்னா, கருங் கைம் மாக் களிறும், மாவும், கனகமும், தூசும், பூணும், ஒருங்குற உதவி, பின்னர் உதவினன் விடையும் மன்னோ - 10362

சிறப்பு

இனைய ஆறு உரைசெயா, இனிதின் ஏகுதி எனா வனையும் மாமணி நல் மோதிரம் அளித்து அறிஞ! நின் வினை எலாம் முடிக! எனா விடை கொடுத்து உதவலும் - 4519

அரசர் அன்பளிப்பு

ஆங்கு அவர் அம்மொழி உரைப்ப அரசன் மகிழ்ந்து அவர்க்கு அணி, தூசு ஆதி ஆய பாங்கு உள மற்றவை அருளி - 217

நேர் துன்றிய கனை கழல் தூதர் கொள்க எனா பொன் திணி கலங்களும் தூசும் போக்கினான் - 737

தூயவள் உவகை போய் மிக, சுடர்க்கு எலாம் நாயகம் அனையது ஓர் மாலை நல்கினாள் - 1458

ஈடு நோக்கி வந்து எய்திய தூதர்க்குக் கோடி மேலும் நிதியம் கொடுத்தனன் - 2107

கேட்டலும் பேர் ஆரம் கொண்டு எதிர் நீட்டினான் உவகையின் நிமிர்ந்த நெஞ்சினான் - 5831

சம்பரன்தன்னை வென்ற தயரதன் ஈந்த காலத்து உம்பர்தம் பெருமான் ஈந்த ஒளி மணிக் கடகத் தோடும், கொம்புடை மலையும், தேரும், குரகதக் குழுவும், தூசும், அம்பரம்தன்னை நீத்தான் அலரி காதலனுக்கு ஈந்தான் - 10348

அங்கதம் இலாத கொற்றத்து அண்ணலும், அகிலம் எல்லாம் அங்கதன் என்னும் நாமம் அழகுறத் திருத்துமாபோல், அங்கதம் கன்னல் தோளாற்கு அயன் கொடுத்ததனை ஈந்தான்; அங்கு அதன் பெருமை மண்மேல் ஆர் அறிந்து அறையகிற்பார்? - 10349

பின்னரும், அவனுக்கு ஐயன் பெரு விலை ஆரத்தோடும் மன்னும் நுண் தூசும், மாவும், மதமலைக்கு அரசும்; ஈயா, 'உன்னை நீ அன்றி, இந்த உலகினில் ஒப்பு இலாதாய்! மன்னுக, கதிரோன் மைந்தன்தன்னொடும் மருவி' என்றான் - 10350

மாருதிதன்னை ஐயன் மகிழ்ந்து, இனிது அருளின் நோக்கி, 'ஆர் உதவிடுதற்கு ஒத்தார், நீ அலால்? அன்று செய்த பேர் உதவிக்கு யான் செய் செயல் பிறிது இல்லை; பைம் பூண் போர் உதவி திண் தோளாய்! பொருந்துறப் புல்லுக!' என்றான் - 10351

என்றலும், வணங்கி நாணி, வாய் புதைத்து, இலங்கு தானை முன்தலை ஒதுக்கி நின்ற மொய்ம்பனை முழுதும் நோக்கி, பொன் திணி வயிரப் பைம் பூண் ஆரமும், புனை மென் தூசும், வன் திறல் கயமும், மாவும் வழங்கினன், வயங்கு சீரான் - 10352

பூ மலர்த் தவிசை நீத்து, பொன் மதில் மிதிலை பூத்த தேமொழித் திருவை ஐயன் திருவருள் முகத்து நோக்க, பா மறைக் கிழத்தி ஈந்த பரு முத்த மாலை கைக் கொண்டு ஏமுறக் கொடுத்தாள், அந்நாள், இடர் அறிந்து உதவினாற்கே - 10353

சந்திரற்கு உவமை சான்ற, தாரகைக் குழுவை வென்ற, இந்திரற்கு ஏய்ந்ததாகும் என்னும் முத்தாரத்தோடு கந்து அடு களிறு, வாசி, தூசு, அணிகலன்கள் மற்றும் உந்தினன், எண்கின் வேந்தற்கு - உலகம் முந்து உதவினானே - 10354

நவ மணிக் காழும், முத்தும், மாலையும், நலம் கொள் தூசும், உவமை மற்று இலாத பொன் பூண், உலப்பு இல பிறவும், ஒண் தார்க் கவன வெம்பரியும், வேகக் கதமலைக்கு அரசும், காதல் பவனனுக்கு இனிய நண்பன் பயந் தெடுத்தவனுக்கு ஈந்தான் - 10355

பத வலிச் சதங்கைப் பைந்தார்ப் பாய் பரி, பணைத் திண் கோட்டு மதவலிச் சைலம், பொன் பூண், மா மணிக்கோவை, மற்றும் உதவலின் தகைவ அன்றி, இல்லன உள்ள எல்லாம் சதவலி தனக்குத் தந்தான் - 10356

'பேச அரிது ஒருவர்க்கேயும், பெரு விலை; இதனுக்கு ஈதுக் கோ, சரி இலது' என்று எண்ணும் ஒளி மணிப்பூணும், தூசும், மூசு அரிக்கு உவமை மும்மை மும்மதக் களிறும், மாவும், கேசரிதனக்குத் தந்தான் கிளர் மணி முழவுத் தோளான் - 10357

வளன் அணி கலனும் தூசும், மா மதக் களிறும் மாவும், நளனொடு குமுதன், தாரன், நவை அறு பனசன், மற்றோர் உளம் மகிழ்வு எய்தும் வண்ணம் உலப்பில பிறவும் ஈந்தான் களன் அமர் கமல வேலிக் கோசலக் காவலோனே - 10358

அவ் வகை அறு பத்து ஏழு கோடியாம் அரியின் வேந்தர்க்கு எவ் வகைத் திறனும் நல்கி, இனியன பிறவும் கூறி, பவ்வம் ஒத்து உலகில் பல்கும் எழுபது வெள்ளம் பார்மேல் கவ்வை அற்று இனிது வாழக் கொடுத்தனன், கடைக் கண் நோக்கம் - 10359

மின்னை ஏர் மௌலிச் செங் கண் வீடணப் புலவர் கோமான் தன்னையே இனிது நோக்கி, 'சராசரம் சுமந்த சால்பின் நின்னையே ஒப்பார் நின்னை அலது இலர், உளரேல்; ஐய! பொன்னையே இரும்பு நேரும் ஆயினும் பொரு அன்று' என்றான் - 10360

என்று உரைத்து, அமரர் ஈந்த எரி மணிக் கடகத்தோடு வன் திறல் களிறும், தேரும், வாசியும், மணிப் பொன் பூணும் பொன் திணி தூசும், வாசக் கலவையும், புது மென் சாந்தும் நன்று உற, அவனுக்கு ஈந்தான் நாகணைத் துயிலைத் தீர்ந்தான் - 10361

சிருங்கபேரம்அது என்று ஓதும் செழு நகருக்கு இறையை நோக்கி, 'மருங்கு இனி உரைப்பது என்னோ, மறு அறு துணைவற்கு?' என்னா, கருங்கைம் மாக் களிறும், மாவும், கனகமும், தூசும், பூணும் ஒருங்குற உதவி, பின்னர் உதவினன் விடையும் மன்னோ - 10362

வரிசையறிதல்

வேந்தர்கட்கு, அரசொடு, வெறுக்கை தேர், பரி, வாய்ந்த நல் துகிலொட்டு, வரிசைக்கு ஏற்பன ஈந்தனன்; பல் இயம் துவைப்ப ஏகி, நீர் தோய்ந்தனன் சரயு நல் துறைக்கண் எய்தியே - 274

மா தவரை முற்கொள வணங்கி, நெடுமன்னன் பாத மலரைத் தொழுது, கண்கள் பனி சோரும் தாதை அருகு இட்ட தவிசில், தனி இருந்தாள் போதினை வெறுத்து, அரசர் பொன் மனை புகுந்தாள் - 1151

அனையவன், மண்டபம் அணுகி, அம் பொனின் புனை மணி ஆதனம் பொலியத் தோன்றினான்; முனிவரும், மன்னரும், முறையின் ஏறினார்; சனகனும், தன் கிளை தழுவ, ஏறினான் - 1202

தழுவி நின்று அவன் இருங் கிளையையும் தமரையும் வழு இல் சிந்தனை யினான் வரிசையின் அளவளாய் - 1046

மற்றும் சுற்றத் துளார்க்கும் வரன்முறை உற்ற தன்மை வினாவி உவந்தபின் 2105

குரிசிலது ஏவலால், அக் குரகதத் தேர் வலானும், வரிசையின் வழாமை நோக்கி, மரபுளி வகையின் ஏற்ற, கரி, பரி, இரதம், காலாள், கணக்கு அறு கரை இல் வேலை, எரி மணி திரையின் வீசும் கங்கையாறு ஏறிற்று அன்றே - 2350

ஏந்து செல்வத்து இமையவர் ஆம் என, கூந்தல் தெய்வ மகளிர் கொண்டாடினார் வேந்தர் ஆதி சிவிகையின் வீங்கு தோள் மாந்தர்காறும், வரிசை வழாமலே - 2386

வரிசையின் வழாமை நோக்கி, மாருதி மாதர் வெள்ளம் கரை செயல் அரிய வண்ணம் கொணர்ந்தனன் - 10127

அடைக்கலம் புகுதல்

அருளுடையவீர நின் அபயம் யாம் என்றார் - 2646

மன்னவர்க்கு அரசன் மைந்த! மற்று இவன் சுற்றத் தோடும் உன் அடைக்கலம் என்று உய்த்தே உயர்கரம் உச்சி வைத்தான் - 4079

நெய் அடைநெடுவேல் தானை நீல்நிற நிருதர் என்னும் துய் அடை கனலி அன்ன தோளினன், தொழிலும் தூயன் கைஅடை ஆகும் என்று, அவ் இராமற்குக் காட்டும் - 4092

நவை உறும் உலகிற்கு எல்லாம் நாயக! நீயே சீறின், கவயம் நின் சரணம் அல்லால், பிறிது ஒன்று கண்டது உண்டோ? இவை உனக்கு அரியவோதான், எனக்கு என வலி வேறு உண்டோ? அவயம், நின் அவயம்! என்னா அடுத்து அடுத்து அரற்றுகின்றான் - 6655

குடல் குறைத்து, குருதி குடித்து இவர் உடல் முருக்கியிட்டு உண்குவேன் என்றலும் அடல் அரக்கியர் அன்னை நின்பாதமே விடலம் மெய்ச் சரண் என்று விளம்பலும் - 9984

சிறப்பு

செம்மையின் தருமத்தின் செயலின் தீங்கின்பால் வெம்மையின் ஒழுக்கத்தின் மெய்ம்மை மேவினீர் என்மகன் என்பது என்? நெறியின், ஈங்கு, இவன் நும்மகன், கையடை நோக்கும் ஈங்கு என்றான் - 1397

பாய் இருள் சீய்க்கும் தெய்வப் பருதியைப் பழிக்கும் மாலை, மா இருங் கரத்தால், மண்மேல் அடியுறையாக வைத்து, தீயன சிறியோர் செய்தால், பொறுப்பது பெரியோர் செய்கை; ஆயிர நாமத்து ஐயா! சரணம்' என்று அடியில் வீழ்ந்தான் - 6661

அடைக்கலம் ஏற்றல்

அபயம் என்ற பொழுதத்தே அபயதானம் ஈதலே கடப்பாடு - 6481

தன் அடி தாழ்தலோடும் தாமரைத் தடங்கணானும், பொன் உடைவாளை நீட்டி, நீ இது பொறுத்தி என்றான் - 4093

தாமரைக்கண்ணன் தங்கள் முழுமுதல் குலத்திற்கு ஏற்ற முறைமையால் உவகை மூள வழுவில் அபயம் உன்பால் வழங்கினன், அவன் பொற்பாதம் தொழுதியால், விரைவின் என்று கதிரவன் சிறுவன் சொன்னான் - 6485

புகல் புகுந்திலரேல் புறத்து அண்டத்தின் அகல் வரேனும், என்அம்பொடு வீழ்வரால்; தகவுஇல் துன்பம் தவிருதிர்நீர் எனா - 2647

எஞ்சும் உலகு அனைத்தும் இப்பொழுதே என்று நெஞ்சு நடுங்கும் நெடுந்தேவரை நோக்கி அஞ்சன் மின் என்னா அருள் சுரந்த நோக்கினால் கஞ்சமலர் பழிக்கும் கை அபயம் காட்டினான் - 6350

எறிந்த காலையில், வீடணன் அதன்நிலை எல்லாம் அறிந்த சிந்தையன், ஐய! ஈது என் உயிர் அழிக்கும் பிறிந்து செய்யல் ஆம் பொருள் இலை என்றலும் பெரியோன் அறிந்து போக்குவல், அஞ்சல், நீ என்று இடை அணைந்தான் - 9558

அன்னை, அஞ்சன் மின், அஞ்சன்மின் நீர் எனா - 9985

துறவியின் உறவு பூண்ட தூயவர் துணைவன் என்னை உற உவந்து அருளி, மீளா அடைக்கலம் உதவினானே! அறவினை இறையும் இல்லா அறிவு இலா, அரக்கன் என்னும் பிறவியின் பெயர்ந்தேன், பின்னும் நரகினின் பிழைப்பதானேன் - 6490

நிற்கு அபயம் என்றான் உயிரைத் தன் உயிரின் ஓம்பாக் கய்யன் - 6478

அரசர் இருப்பிடம் பிறர் சார்தல்

முகந்தனர் திருவருள் முறையின் எய்தினார் திகழ்ந்து ஒளிர் கழல் இணை தொழுது செல்வனைப் புகழ்ந்தனர் - 733

சுற்றம் அப்புறம் நிற்க, சுடு கணை வில் துறந்து, அரை வீக்கிய வாள் ஒழித்து, அற்றம் நீத்த மனத்தினன், அன்பினன், நல் தவப் பள்ளி வாயிலை நண்ணினான் - 1962

இறப்புச் சடங்கு

நன் கடன் - 8507

செய்யக் கடவ செயற்கு உரிய சிறுவர் - 1914

நுந்தைக்கு நீ செயக் கடவன கடன்கள் - 8507

கையினால் எள் நீர் நல்கி கடன் கழிப்பார் - 7408

மெய்ம்மை ஆதிநூல் மரபினாலே கடன்களும் ஆற்றி, ஏற்றி மா துயர் நரகம் நண்ணா வண்ணமும் காத்தி மன்னோ - 7436

நாமம் நாட்டிய சவம் எனின், நாள் என்றும் ஒருவர் ஈம நாட்டிடை இட(ாம)ல் - 6559

எண்ணெய் உண்ட பொன் எழில் கொள் மேனி (தைலத்தில் தோய்ந்த தயரதன் உடல்) - 2225

தயரதன் இறுதிச் சடங்கு

பற்றி, அவ்வயின் பரிவின் வாங்கினார்,
சுற்று நான்மறைத் துறை செய் கேள்வியார்;
கொற்ற மண்கணை குமுற, மன்னனை,
மற்று ஒர் பொன்னின் மா மானம் ஏற்றினார் - 2226

கரை செய் வேலைபோல், நகரி, கை எடுத்து,
உரை செய் பூசலிட்டு, உயிர் துளங்குற,
அரச வேலை சூழ்ந்து, அழுது, கைதொழ,
புரசை யானையில் கொண்டு போயினார் - 2227

சங்கும் பேரியும், தழுவு சின்னமும்
எங்கும் எங்கும் நின்று இரங்கி ஏங்குவ,
மங்குல் தோய் நகர் மகளிர் ஆம் என,
பொங்கு கண் புடைத்து அழுவ போன்றவே - 2228

மாவும், யானையும், வயங்கு தேர்களும்,
கோவும், நான் மறைக் குழுவும், முன் செல,
தேவிமாரொடும் கொண்டு, தெண் திரை
தாவு வார் புனல் சரயு எய்தினார் - 2229

எய்தி, நூலுளோர் மொழிந்த யாவையும்
செய்து, தீக் கலம் திருத்தி, செல்வனை,
வெய்தின் ஏற்றினார்; 'வீர! நுந்தைபால்
பொய் இல் மாக் கடன் கழித்தி போந்து' என்றார் - 2230

சடாயு இறப்புச் சடங்கு

இந்தனம் எனைய என்ன, கார் அகில் ஈட்டத்
தோடும் சந்தனம் குவித்து, வேண்டும்
தருப்பையும் திருத்தி, பூவும் சிந்தினன்;
மணலின் வேதி தீது அற இயற்றி, தெண்
நீர் தந்தனன்; தாதைதன்னைத் தடக்
கையான் எடுத்துச் சார்வான் - 3536

ஏந்தினன் இரு கைதன்னால்; ஏற்றினன் ஈமம்தன்
மேல்; சாந்தொடு மலரும் நீரும் சொரிந்தனன்;
தலையின் சாரல் காந்து எரி களுல மூட்டி,
கடன் முறை கடவாவண்ணம் நேர்ந்தனன்
நிரம்பும் நல் நூல் மந்திர நெறியின் வல்லான் - 3537

குளித்தனன், கொண்டல் ஆற்று குளித்த பின்
கொண்ட நல் நீர் அளித்தனன் - 3538

பூட்டிய கைகளால் அப்புள்ளினுக்கு அரசை
கொள்க என்று ஊட்டிய நல் நீர் - 3539

பல் வகைத் துறையும், வேதப் பலிக் கடன்
பலவும், முற்றி, வெல் வகைக் குமரன்
நின்ற வேலையின், வேலை சார்ந்தான் தொல்
வகைக் குலத்தின் வந்தான் துன்பத்தால்,
புனலும் தோய்ந்து, செல்வகைக்கு உரிய
எல்லாம் செய்குவான் என்ன, வெய்யோன் - 3540

பிறர்

பின்னர், வீடணன், பேர் எழில் தம்முனை,
வன்னி கூவி, வரன்முறையால், மறை
சொன்ன ஈம விதி முறையால் தொகுத்து,
இன்னல் நெஞ்சினொடு இந்தனத்து எற்றினான் - 9948

கடன்கள் செய்து முடித்து, கணவனோடு
உடைந்து போன மயன் மகளோடு உடன்
அடங்க வெங் கனலுக்கு அவி ஆக்கினான்
குடம் கொள் நீரினும் கண் சோர் குமிழியான் - 9949

மற்றை யோர்க்கும் வரன்முறையால் வகுத்து
உற்றதீக் கொடுத்து உண்குறுநீர் உகுத்து - 9950

புக்கனன் புனலிடை, முழுகிப் போந்தனன்,
தக்க நல் மறையவன் சடங்கு காட்ட, தான்,
முக் கையின் நீர் விதி முறையின் ஈந்தனன் - 2455

கையினால் எள் நீர் நல்கி கடன் கழிப்பார் - 7408

முக் கைப் புனல் உகுப்பென் தம்பிக்கு - 7722

என்று என்று ஏங்கி, இரங்கி இன்புனல் சென்று,
அங்கு ஆடுதல் செய்து தீர்ந்த பின் - 4693

யாணர் நீர்க் கங்கை யாற்றங்கரை, அடியேற்கும்,
தன் செங்கையால் கடன் செய்க என்று
செப்புவாய் - 5376

சிறப்பு

தைலம் ஆட்டல்

செய்யக் கடவ செயற்கு உரிய சிறுவர் ஈண்டையார்
அல்லர்; எய்தக் கடவ பொருள் எய்தாது
இகவா என்ன இயல்பு எண்ணா மையற்
கொடியாள் மகன் ஈண்டு வந்தால் முடித்தும்
மற்று, என்ன தையற் கடல்நின்று எடுத்து,
அவனைத் தயிலக் கடலின் தலை உய்த்தான் - 1914

துன்னரும் தயிலத்தோணி வளர்த்துமின் - 9246

பிற

இரவிதன் குலத்து, எந்தை முந்தையோர் பிரத
பூசனைக்கு உரிய பேறு இலேன் (பரதன்) - 2234

ஆட்சி மாற்றம்

நல் நெடும் பெரும் படை நல்கல் - 2420

அரசர் - பிற

தன நேர் இல்லா மங்கையர் செங்கைத் தளிர்
மானே! அன்னே! தேனே! ஆர் அமிழ்தே
என்று அடிபோற்றி முன்னே முன்னே,
மொய்ம் மலர்தூவி, முறை சார, பொன்னே
சூழும் பூவின் ஒதுங்கிப் பொலிகின்றாள் - 509

அரசின் வாழ்க்கை நன்று கொல் - 5887

நிரம்பினான் ஒருவன் காத்த நிறை அரசு இறுதி
நின்ற வரம்பு இலாததனை, மற்று ஓர்
தலைமகன் வலியின் கொண்டால், அரும்புவ,
நலனும் தீங்கும் - 4143

தாங்கல் ஆற்றும் கோள் இலா மன்னன் நாட்டுக்
குடி எனக் குலைவ கண்டான் - 8589

பணியும் தானவர் ஆதியர் பல் முடி மணியினால்
விளங்கும் மணித் தாளினான் - 6787

துறுமலர் வாகை சூடல் (போர்க்குரிய பூசூடல்) - 9136

சமநிலையுடையோரிடம் போர்புரிதல்

யானே செல எண்ணுவென் எய்த அவன் தான்
நேர்வது தீது எனவே தணிவேன் வானே நிலனே
முதல் மற்றும் எலாம் கோளே எனை வெல்வது
ஓர் கொள்கையதோ - 8406

பிற பழக்கவழக்கங்கள்

அடித்தளமிடல்

இனி முடிக்கும் வென்றிக்கு அடி மணி இட்டாய் 6941

அந்தணர் பிறரை வணங்குவது இல்லை

தாழ்தலும், தகாது செய்தது என்னை, நீ தருமம்
அன்றால் கேள்வி நூல் மறைவலாள
என்றனன் - 3780

உணவு அருந்து முறை

கனியும், கந்தமும், காயும், தூயன
இனிய யாவையும் கொணர, யாரினும்
புனிதன் மஞ்சனத் தொழில் புரிந்து, பின்
இனிது இருந்து, நல் விருந்தும் ஆயினேன் - 3819

மஞ்சன விதி முறை மரபினாடியே எஞ்சல்
இல் இன் அமுது - 379

வருந்தித் தான்தர வந்த அமுதையும்
'அருந்தும்நீர்' என்று அமரரை
ஊட்டினான், விருந்துமெல் அடகு
உண்டு விளங்கினான் - 1952

உடன்கட்டை ஏறுதல்

இழையும் ஆரமும் இடையும் மின்னிட,
குழையும் மா மலர்க் கொம்பு அனார்கள்
தாம் தழைஇல் முண்டகம் தழுவு கானிடை
முழையில் மஞ்ஞைபோல், எரியில் மூழ்கினார் - 2238

நல் கடன் இது; நம் உயிர் நாயகர்
மற்கடம் தெற மாண்டனர்; வாழ்வு இலம்;
இல் கடந்து இனி ஏகலம் யாம் எனா,
வில் கடந்த நுதல் சிலர் வீடினார் - 5960

ஈகை

ஈட்டிய மெய்ப்பொருள் உள்ளன எல்லாம்
வேட்டவர் வேட்டவை வேண்டளவு ஈந்தான் - 1261

ஈந்து, அளவு இல்லது ஓர் இன்பம் நுகர்ந்தே - 1262

நல்ல தவர்க்கும் எலாம் கன்றுடைப் பசுவின்
கடல் நல்கினாள் - 1407

பரித்த செல்வம் ஒழியப் படரும் நாள், அருத்தி
வேதியர்க்கு ஆன்குலம் ஈந்து - 5094

மறையவர்தங்கட்கு எல்லாம் மணியொடு முத்தும்
பொன்னும், நிறை வளம் பெருகு பூவும்,
சுரபியும், நிறைத்து, மேல் மேல் 'குறை இது'
என்று இரந்தோர்க்கு எல்லாம் குறைவு அறக்
கொடுத்து - 10346

சிறப்பு

பிறை முகத்தலை, பெட்பின் இரும்பு போழ்
குறை நறைக் கறிக்குப்பை, பருப்பொடு நிறை
வெண்முகத்தின் நிறத்து அரிசிக்குவை,
உறைவ - கொட்பின ஊட்டிடம் தோறெலாம் -

கடைக் கூட்டு (இறுதி ஆசை)

இக்கடன்கள் உடையீர்! நீர் எம் வினை தீர்த்து,
உம்முடையகைக்கு அடைந்தான் உயிர் காக்கக்
கடவீர், என் கடைக் கூட்டால் (கும்பகருணன்) - 7624

மண்ணும் நீராய் வந்த புனலை, மகனே!
வினையேற்கு உண்ணும் நீராய் உதவி,
உயர் கான் அடைவாய்! என்றான் (தயரதன்) - 1660

கண்ணேறு கழித்தல்

தாதியர் செவிலியர் தாயர் தவ்வையர் மாதுயர்
உழந்து அழுங்கி மாழ்கினர் யாது கொல்
இது என எண்ணல் தேற்றலர் போதுடன்
அயினி நீர் சுழற்றிப் போற்றினர் - 530

கள்ளுண்ணல்

அம்சொலினார் பெண், ஆர் அமுது அன்னவர்,
பெய்து, எவரும் உண்ணாதன கூர் நறவு
உண்ட தசும்பு எண்ணாயிரம் ஆயினும்,
ஈகுவெனால் - 7765

காண்க : கள்ளுண்ணாமை ப.321

காப்புச் செய்தல்

காப்பின் நாண் 1653

நெய் வளர் விளக்கம் ஆட்டி, நீரொடு பூவும் தூவி,
தெய்வமும் பராவி, வேத பாரகர்க்கு ஈந்து, செம்
பொன் ஐயவி நுதலில் சேர்த்தி ஆய் நிற
அயினி சுற்றி கை வளர் மயில் அனாளை
வலம் செய்து, காப்பும் இட்டார் - 1134

மந்திரத்து அயினி நீரால் வலஞ் செய்து,
காப்பும் இட்டார் - 9997

காலமறிதல்

புனல் உற்று உருவு செப்பின் காலம் அறிவுற்று
உணர்தல் - 4220

கூடல் இழைத்தல்

குழைத்த பூங் கொம்பு அனாள் ஒருத்தி கூடலை
இழைத்தனள், அது அவள் இட்டபோது எலாம்
பிழைத்தலும் - 994

மின் நகு மணி விரல் தேய, வீழ் கணீர் துன்ன
அரும் பெருஞ் சுழி அழிப்ப, சோர்வினோடு
இன்நகை நுளைச்சியர் இழைக்கும் ஆழி சால்
புன்னை ஆம் பொதும்பரும் - 6391

கையுறை

மங்கலம் முதலவாய மரபினின் கலப்பை யாவும்
அங்கு அவர் கொணர்ந்து, பெண்மைக்கு
அரசியைத் தொழுது சூழ - 10128

எல்லை நீத்த அருத்தியன், 'தேனும் மீனும்
அமுதினுக்கு அமைவது ஆகத்
திருத்தினென் கொணர்ந்தேன் - 1966

கொண்டாட்டம்

ஆடினர் பாடினர் அங்கும் இங்குமாய் ஓடினர்
உவகை மா நறவு உண்டு ஓர்கிலார் - 193

பண்ணையும் ஆயமும் திரளும் பாங்கரும்
கண் அகன் திருநகர் களிப்புக் கைம்மிகுந்து
எண்ணெயும் களபமும் இழுதும் நானமும்
சுண்ணமும் தூவினார் வீதி தோறுமே - 294

ஆர்த்தனர்; களித்தனர்; ஆடிப்பாடினர்; வேர்த்தனர்;
தடித்தனர்; சிலர்த்து மெய்ம்மயிர் போர்த்தனர்;
மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்; தூர்த்தனர்
நீள் நிதி, சொல்லினார்க்கு எலாம் - 1433

ஆடுகின்றனர்; பண் அடைவு இன்றியே
பாடுகின்றனர்; பார்த்தவர்க்கே கரம்.
சூடுகின்றனர்; சொல்லுவது ஓர்கிலர் - 1400

எழுந்து துள்ளினர் மங்கல கீதம் பாடினார்?

சொரிந்தனர் மலர் மழை; சுண்ணம் தூவினர்;
விரிந்து ஒளிர் காசு, பொன், தூசு, வீசினர்;
பரிந்தனர்; அழகினைப் பருகினார் கொலோ,
தெரிந்திலம், திருநகர் மகளிர் செய்கையே! - 1234

ஆர்த்தன-பரவை ஏழும், அவனியும், அமரர் நாடும்,
வார்த் தொழில் புணரும் தெய்வ மங்கல முரசும்
சங்கும்; தூர்த்தன, கனகமாரி; சொரிந்தன, நறு
மென் சுண்ணம்; போர்த்தது வானத்து, அன்று,
அங்கு, எழுந்தது துழனிப் பொம்மல் - 6510

அத்தொழில் கண்ட வானோர் ஆவலம் கொட்டி
ஆர்த்தார் - 7939

சிறப்பு

சந்தம் இவை தாஇல்மணி ஆரம் இவை யாவும்
சிந்துரமும் இங்கு இவை; செறிந்த மதவேழப்
பந்திகள், வயப்பரி, பசும்பொனின் வெறுக்கை,
மைந்தா! வறியோர் கொள வழங்கு என
நிரைப்பார் - 1587

வெற்றியைக் கொண்டாடுதல்

ஓட்டி நாயகன் வென்றி நாள் குறித்து ஒளிர்
முளைகள் அட்டி வைத்தன பாலிகை - 7490

சமூக விதிகள்

பொது

இல் முறை - 1532

வினவினாட்கு எதிர் ஓர் மாற்றம் விளம்பவும்
வேண்டும் - 4321

பெண் பற்றியன

பெண் என உட்கும் பெரும் பழிக்கு நாணும் - 1509

ஆண் எனக் கூறும்; இவ் உருத் தீண்டுதல்
கூடுமோ? - 5363

தயரதன் தொல் குலத் தனையன்; தம்பியோடு
உயர் குலத்து அன்னை சொல் உச்சி
ஏந்தினான், அயர்வுஇலன், இவ் வழி உறையும்;
அன்னவன் பெயரினைத் தெரிகுதிர்,
பெருமையீர்!' என்றாள் (கணவன் பெயரை
மனைவி சொல்வதில்லை) - 3355

பிறையுடை நுதலார்க்கு ஏற்ற பிறந்த இற் கடன்கள்
செய்ய, இறையுடை இருக்கை முதூர் என்றும்
இருக்காதீர் (மகள் வீட்டில் தந்தை தங்காமை) - 7668

தாயர்க்கு அடுத்த பணி செய்து இவண் இருத்தி
(மருமகள் கடமை) - 5287

வினையினேனும், இவ் இலங்குவில் கரத்திலும்
இருக்கவே அவள் கலன் கழித்தனள்; இது
கற்பு மேவிய பொலன் குழைத் தெரிவையர்
புரிந்துளோர்கள் யார் - 3920

விதவையர்

மங்கல அணியை நீக்கி, மணி அணி துறந்து,
வாசக் கொங்கு அலர் கோதை மாற்றி,
குங்குமம் சாந்தம் கொட்டாப் பொங்கு வெம்
முலைகள், பூகக் கழுத்தொடு மறையப்
போர்த்த நங்கையைக் கண்ட வள்ளல்,
நயனங்கள் பனிப்ப நைந்தான் - 4320

தாலி களைதல்

நகு பொன் பூண் எறிந்தனர் - 7480

"பெருந் திருக் கழித்தல் ஆற்றாள் கணவனைக்
கொன்று போந்தோன் கருந் தலைக் கலத்தின்
அல்லால்; கடனது கழியேன்" என்றாள் - 8407

ஏங்கலம்; இவன் சிரத்து இருந்து அலால் திரு
வாங்கலம்' என்று அழும் மாதரார் பலர் - 5809

ஆண் பற்றியன

மட மெல்லியலார் தம்மைப் போல் நிலத்தின்
மேல் விழுந்து அழுவதோ யான் - 2713

சாட்சி

சான்று இமையோர்குலம் ஆக, மன்ன! நீ அன்று
ஏன்ற வரங்கள் இரண்டும் ஈதி, என்றாள் - 1502

மன்னவன் இரவி மைந்தன் வான் துணையாக
நட்ட பின்னை - 10117

தற்கொலை

மருந்து அரு நெடுங் கடு உண்டு மாய்துமோ - 4652

தீயினை எய்தி, இரைத்து எழுந்து ஒன்று
பூசலிடும் உலகோருடன் நின்று பூசனை
செய்கின்ற நேசன் - 10188

திருமணம்

எண்ணுறு சுடர் வானத்து இந்திரன் முடி சூடும்
மண்ணுறு திரு நாளே ஒத்தது அம் மண
நாளே - 1197

மங்கலச் செய்ய கோலம் - 9432

கோவையும் குழையும் மின்ன, கொண்டலின்
முரசம் ஆர்ப்ப, தேவர்நின்று ஆசி கூற, முனிவர்
சோபனங்கள் செப்ப, பாவையர் குழாங்கள் சூழ,
பாட்டொடு வான நாட்டுப் பூவையர் பலாண்டு
கூற, புதுமணம் புகுகின்றாரை - 4954

நெய் அடை தீ எதிர் நிறுவி, "நிற்கு இவள்
கையடை" என்ற அச் சனகன் கட்டுரை - 4239

சீதை - இராமன் திருமணம்

தளம் கிளர்மணிகால, தவழ் சுடர் **உமிழ் தீபம்,**
இளங்குளிர் முளை ஆர்நல் பாலிகை
இனம், எங்கும் விளிம்புபொன் விரைநாற,
வெயிலொடு நிலவு ஈனும் பளிங்குடை
உயர்திண்ணைப் பத்தியின் வைப்பாரும் - 1184

நீந்த அருங் கடல் என, நிறைந்த வேதியர்,
தோய்ந்த நூல் மார்பினர், சுற்ற, தொல் நெறி
வாய்ந்த நல் வேள்விக்கு, வசிட்டன், மை அற
ஏய்ந்தன கலப்பையோடு இனிதின் எய்தினான் - 1242

தண்டிலம் விரித்தனன்; தருப்பை சாத்தினன்;
மண்டலம் விதிமுறை வகுத்து, மென் மலர்
கொண்டு நெய் சொரிந்து, எரி குழும, மூட்டினன்;
பண்டு உள மறை நெறி பரவிச் செய்தனன் - 1243

மன்றலின் வந்து, மணத் தவிசு ஏறி, வென்றி
நெடுந் தகை வீரனும், ஆர்வத்து இன் துணை
அன்னமும், எய்தி இருந்தார்; ஒன்றிய
போகமும் யோகமும் ஒத்தார் - 1244

கோமகன் முன் சனகன், குளிர் நல் நீர் 'பூமகளும்
பொருளும் என, நீ என் மா மகள் தன்னொடும்
மன்னுதி' என்னா, தாமரை அன்ன தடக்
கையின், ஈந்தான் - 1245

அந்தணர் ஆசி, அருங் கல மின்னார்
தந்த பல்லாண்டு இசை, தார் முடி மன்னர்
வந்தனை, மா தவர் வாழ்த்து ஒலியோடு
முந்திய சங்கம் முழங்கின மாதோ - 1246

வானவர் பூ மழை, மன்னவர் பொன் பூ
ஏனையர் தூவும் இலங்கு ஒளி முத்தம்,
தான் நகு நாள்மலர், என்று இவைதம்மால்,
மீன் நகு வானின் விளங்கியது, இப் பார் - 1247

வெய்ய கனல்தலை வீரனும், அந் நாள்,
மை அறு மந்திரம் மும்மை வழங்கா,
நெய் அமை ஆவுதி யாவையும், நேர்ந்தான்,
தையல் தளிர்க் கை தடக் கை பிடித்தான் - 1248

வலம் கொடு தீயை வணங்கினர், வந்து,
பொலம் பொரி செய்வன செய் பொருள் முற்றி
இலங்கு ஒளி அம்மி மிதித்து, எதிர் நின்ற
கலங்கல் இல் கற்பின் அருந்ததி கண்டார் - 1250

மற்று உள, செய்வன செய்து, மகிழ்ந்தார்;
முற்றிய மா தவர் தாள் முறை சூடி,
கொற்றவனைக் கழல் கும்பிடலோடும்,
பொற்றொடி கைக்கொடு நல் மனை புக்கான் - 1251

ஆர்த்தன பேரிகள்; ஆர்த்தன சங்கம்;
ஆர்த்தன நான்மறை; ஆர்த்தனர் வானோர்;
ஆர்த்தன பல் கலை; ஆர்த்தன பல்லாண்டு;
ஆர்த்தன வண்டு இனம்; ஆர்த்தன வேலை - 1252

கேகயன் மா மகள் கேழ் கிளர் பாதம்,
தாயினும் அன்பொடு தாழ்ந்து வணங்கா,
ஆய தன் அன்னை அடித் துணை சூடி,
தூய சுமித்திரை தாள் தொழலோடும் - 1253

அன்னமும், அன்னவர் அம் பொன் மலர்த் தாள்
சென்னி புனைந்தனள்; சிந்தை உவந்தார்,
கன்னி, அருந்ததி, காரிகை, காணா,
'நல் மகனுக்கு இவள் நல் அணி' என்றார் - 1254

பங்குனி உத்தரம் ஆன பகற்போது,
அங்க இருக்கினில், ஆயிர நாமச்
சிங்கம் மணத் தொழில் செய்த திறத்தால்,
மங்கல அங்கி, வசிட்டன் வகுத்தான் - 1258

எண் இல கோடி பொன், எல்லை இல் கோடி
வண்ண அருங் கலம், மங்கையர் வெள்ளம்,
கண் அகல் நாடு, உயர் காசொடு தூசும்,
பெண்ணின் அணங்கு அனையாள் பெறுக!'
என்றார் - 1256

பிற

மெய்த்த தாதை விரும்பினன் நீட்டிய
கைத்தலங்களை, கைகளின் நீக்கி, வேறு
உய்த்த போது, தருப்பையில் ஒண் பதம்
வைத்த வேதிகைச் செய்தி மனக் கொள்வாள் - 5092

ஐயனுக்கு, அங்கி, முன்னர், அங்கையால் பற்றும்
நங்கை கை எனல் ஆயிற்று அன்றே - கை
புக்க மணியின் காட்சி! - 6053

மணவினை முடித்து, என் கையை மந்திர
மரபின் தொட்ட கணவன் - 7674

துக்கச் சூழல்

கொடி அடங்கின மனைக் குன்றம்; கோ முரசு
இடி அடங்கின; முழக்கு இழந்த பல் இயம்;
படி அடங்கலும், நிமிர் பசுங் கண் மாரியால்,
பொடி அடங்கின, மதில் புறத்து வீதியே - 1804

தூய்மை செய்தல்

வாங்கிய ஆழிதன்னை, வஞ்சர் ஊர் வந்ததாம்
என்று ஆங்கு உயர் மழைக் கண் நீரால்
ஆயிரம் கலசம் ஆட்டி - 6049

நலம் வினாவுதல்

எதிர் வரும் அவர்களை, எமையுடை இறைவன்,
முதிர் தரு கருணையின், முகமலர் ஒளிரா,
'எது வினை? இடர் இலை? இனிது நும் மனையும்?
மதி தரு குமரரும் வலியர்கொல்?' எனவே - 311

வழு இலர் வலியர் அன்றோ, மக்களும் மனையும் - 10247

நாமமிடல்

ஆழியான் அளவின் நாமம் நெய் சுடர் விளக்கின் தோன்றும் நெற்றியே நெற்றியாக - 5570

நாள் பார்த்தல்/சோதிடம்

இந்திர குருவும் அன்னார் எனையவர் என்ன நின்ற மந்திர விதியினாரும், வசிட்டனும், வரைந்து விட்டார் சந்திர கவிகை ஓங்கும் தயரத ராமன் தாமச் சுந்தர மவுலி சூடும் ஓரையும் நாளும் தூக்கி - 10314

அந்தணாளார்கள் கூடினர் நாளொடு கோளும் நின்றமை நாடினர், உலகு இனி நவை இன்று என்றனர் - 287

பொழுதும் நாளும் குறித்திலன் போயினான் - 2109

நிகழ்வுத் தொடக்கம்

நித்திய நியமம் முற்றி, நேமியான் பாதம் சென்னி வைத்த பின், மறை வல்லோர்க்கு வரம்பு அறு மணியும் பொன்னும், பத்தி ஆன் நிரையும், பாரும், பரிவுடன் நல்கிப், போனான் முத்து அணி வயிரப் பூணான், மங்கல முகிழ்த்த நல் நாள் - 803

நீராடல்

மங்கல மஞ்சனம் மரபின் ஆடியே - 1207

திரை செய் பூம் புனல் ஆடல் - 3743

எழு முறை மூழ்கி எழுந்தவன் - 8356

பூ நீர் ஆட்டுவார் அமரர் மாதர் - 4937

சங்கு இனம் தவழ் கடல் ஏழில் தந்தவும், சிங்கல் இல் அரு மறை தெரிந்த தீர்த்தமும், கங்கையே முதலிய கலந்த நீரினால், மங்கல மஞ்சனம் மரபின் ஆடியே - 1207

மஞ்சனம் ஆட்டி - 6928

நானம் ஆர்ந்த - 4984

மஞ்சனத்துக்கு ஏற்ற நான நெய் ஊட்டப்பட்ட நவை இல கலவை தாங்கி - 9993

மரபின், மா பெரும் புறக்கடல் மஞ்சனம் மருவி - 6193

நகரம் களி சிறப்ப நெய் ஆர்ஆடல் - 8671

நானம் நெய் நன்கு உரைத்து, நறும்புனல் ஆன கோது அற ஆட்டி - 9620

மஞ்சன விதியின் வேதத்து ஓகை மங்கலங்கள் பாடி, ஆட்டினர், உம்பர் மாதர். - 9995

புனைந்திலன் மௌலி; குஞ்சி மஞ்சனப் புனித நீரால் நனைந்திலன் - 1607

சிறப்பு

கன்னி நீக்க அருங் கங்கையும் கைதொழா, 'பன்னி நீக்க அரும் பாதகம், பாருளோர், என்னின் நீக்குவார், யானும், இன்று என்-தந்த உன்னினென் நீக்கினென்; உயர்ந்தனென் யான்' என்றாள் - 1942

நோன்பு

நல் அறம் தொடர்ந்த நோன்பு - 4137

மா தவம் தொடங்கி நோன்பு இழைத்தவர் - 1380

விரதம் உற்று, அறத்தில் நின்றார்க்கு - 7677

தேவரும் கைதொழ நோற்று இருந்தனன், நோன் சிலையோன் - 2101

சிந்தையான், இந்தியங்களை அவித்து இருத்தல் மேயினான் - 2514

விரதவேடம் நீ என்கொல் வேண்டுவான் - 2470

பலி கொடுத்தல்

பலி ஈவது -

பழி

கன்று உயிர் ஒய்ந்து உகக் கறந்து பால் உண்டோன் - 2206

பழியஞ்சுதல்

வழி கெட வரினும், தம் தம் வாழ்க்கை தேய்ந்து இறினும், மார்பம் கிழிபட அயில் வேல் வந்து கிடைப்பினும், ஆன்றோர் கூறும் மொழிகொடு வாழ்வது அல்லால், முறை கெடப் புறம் நின்று ஆர்க்கும் பழி பட வாழ்கிற்பாரும் பார்த்திவர் உளரோ? பாவம்! - 7697

பால் முகம் உற்ற பெரும் பழி அன்றோ மால் முகம் உற்று, ஒரு மாதை வதைத்தல்? - 8872

மண் குலைகின்றது; வானும் நடுங்கிக் கண் குலைகின்றது; காணுதி, கண்ணால்; எண் குலைகின்றது இரங்கல் துறந்தாய்! பெண் கொலை செய்கை பெரும் பழிஅன்றோ - 8873

மாதை ஒறுத்தல் வசைத் திறம் அன்றோ? - 8871

'"சான்றவர் பழி உரைக்கு அஞ்சித் தன் உயிர் போன்றவர் மடிதர, போந்துளான்" என ஆன்ற பேர் உலகு உளோர் அறைதல் முன்னம், யான் வான் தொடர்குவென்' என மறித்தும் கூறுவான் - 4660

'ஆகினும், ஐய! உண்டால், ஆர்க்கேனும் அமரின் அஞ்சிச் சாகினும், பெயர்ந்த தன்மை பழி தரும்; நரகில் தள்ளும் - 9352

பிறந்த குழந்தையைக் காணு முறை

மா முனிதன்னொடு, மன்னர்மன்னவன், ஏமுறப் புனல் படீஇ, வித்தொடு இன் பொருள் தாம் உற வழங்கி, வெண் சங்கம் ஆர்ப்பு, கோ மகார் திருமுகம் குறுகி நோக்கினான் - 288

புத்திடம் புகுதல்

'இருளிடை எய்துவது இயல்பு அன்றாம்' என பொருள் உற உணர்ந்த அப் புலன் கொள் கேள்வியார், மருளுறு சோலையின் மறைந்து வைகினார் - 6387

புதுமனை புகல்

திரு நகர் முழுவதும் திருத்த நோக்கிய, பொரு கழல், இராவணன் அயற்குப் பூசனை வரன் முறை இயற்றி, 'நீ வழிக் கொள்வாய்' என்றான் அரியன தச்சற்கும் உதவி, ஆணையால் - 6074

கின்னர மிதுனம் பாட. . . . பன்னக மகளிர் சுற்றிப் பலாண்டு இசை பரவ, பண்ணைப் பொன்நகர் வீதிதோறும் புதுமனை புகுகின்றார் - 4953

பெயர் சூட்டல்

பொய் வழி இல் முனி, புகல்தரு மறையால், இவ் வழி, பெயர்கள் இசைத்துழி, இறைவன் கை வழி, நிதி எனும் நதி கலைமறையோர் மெய் வழி உவரி நிறைத்தன மேன்மேல் - 300

"என் ஓர் இன் உயிர் மென் கிளிக்கு யார் பெயர் ஈகேன்? மன்ன!" என்றலும், "மாசு அறு கேகயன் மாது, என் அன்னைதன் பெயர் ஆக" என அன்பினொடு, அந்நாள், சொன்ன மெய்ம் மொழி சொல்லுதி - 5422

பெரியோரிடம் பழகு முறை

வந்தவள் தன்னைச் சென்னி மண் உற வணங்கி, வாசச் சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையின் புதைத்து, மற்றைச் சுந்தரத் தடக் கை தானை மடக்குறத் துவண்டு நின்றான் அந்தி வந்து அடைந்த தாயைக் கண்ட ஆன் கன்றின் அன்னான் - 1598

சுற்றிய சேலையால் செறி வாய் புதைத்த செங்கையன் - 3083

திலகம் மண் உற வணங்கினர் - 5605

பெரியோருக்குப் பதிலளித்தல்

வினாவினாட்கு எதிர் ஓர் மாற்றம் விளம்பவும் வேண்டும் - 4321

எழுதலும், 'இருத்தி' என்று இராமன் ஏயினான், முழுது உணர் புலவனை; முளரிக் கண்ணினான் பழுது அற வினவிய பொருளைப் பண்பினால் தொழுது உயர் கையினான், தெரியச் சொல்லினான் - 6531

பெரியோரைப் பணிதல்

வாலி காதலனை முந்தை வணங்கினன்; எண்கின் வேந்தைக் காலுறப் பணிந்து, பின்னை, கடன்முறை கடவோர்க்கு எல்லாம் ஏலுற இயற்றி - 6013

தையலை நோக்கிய தலையன், கையினன், வையகம் தழீஇ நெடிது இறைஞ்சி, வாழ்த்தினான் - 6028

கரங்கள் மீச் சுமந்து செல்லும் கதிர் மணி முடியன் . . . . . கருணை வள்ளல் இரங்கினன் நோக்கும்தோறும், இரு நிலத்து இறைஞ்சு கின்றான்; வரங்களின் வாரி அன்ன தாள் இணை வந்து வீழ்ந்தான் - 6501

மெய்ந்நெறி நாயகன் தனை நாளும் வணங்கிய தூய நல் தவர் பாதங்கள் சூடினார் - 4630

பைந்தொடி தாள்கள் பணிந்தான் - 6004

மூவர்க்கும் இளைய வள்ளல், முடிமிசை முகிழ்த்த கையன், தேவர்க்கும் தேவன் தாளும், செறி கழல் இளவல் தாளும், பூவர்க்கம் பொழிந்து வீழ்ந்தான்; எடுத்தனர் பொருந்தப் புல்லி - 10282

என்றலும், வணங்கி நாணி, வாய் புதைத்து, இலங்கு தானை முன்தலை ஒதுக்கி நின்ற மொய்ம்பனை - 10352

கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தனன்; இருண்ட குஞ்சி மண் உறப் பணிந்து, மேனி வளைத்து, வாய் புதைத்து நின்றான் - 1965

இருத்தி ஈண்டு என்னலோடும் இருந்திலன்; எல்லை நீத்த அருத்தியன் - 1966

தொழுது வாங்கினன் - 5428

வணங்கிய சென்னியன், மறைத்த வாயினன், நுணங்கிய கேள்வியன், நுவல்வதாயினான் - 6448

எழுந்து அடி வணங்கல் ஆற்றான் இரு கையும் அரிதின் ஏற்றித் தொழும் தொழிலானை நோக்கித் துணுக்குற்ற மனத்தன் - 8287

பொழுது அறிவித்தல்

காம விற்கு உடை கங்குல் மாலை கழிந்தது, என்பது கற்பியா, தாம் ஒலித்தன பேரி; அவ் ஒலி, சாரல் மாரி தழங்கலால், மா மயில் குலம் என்ன, முன்னம் மலர்ந்து எழுந்தனர், மாதரே - 1545

சூலமே துறந்து சுற்றிய சேலையால் செறிய வாய்புதைத்த செங்கையன் தோலுடை நெடும் பணை துவைக்குந்தோறு எலாம் காலன் நின்று இசைக்கும் நாள் கடிகை கூறவே - 3083

வஞ்சினம் / சூளுரை (போர்க்களத்தின் புறம்)

உலகம் ஏழினோடு ஏழும் வந்து அவன் உயிர்க்கு உதவி விலகும் என்னினும் வில்லிடை வாளியின் வீட்டி தலைமையோடு நின் தாரமும் உனக்கு இன்று தருவென் (இராமன்) - 3855

தாயே அனைய கருணையான் துணையை ஏதும் தகைவு இல்லா நாயே அனைய வல் அரக்கர் நலியக் கண்டால் நல்காயோ நீயே உலகுக்கு ஒரு சான்று, நிற்கே தெரியும் கற்பு அதனில் தூயேன் என்னின், தொழுகின்றேன் எரியே அவனைச் சுடல் என்றாள் (சீதை) - 5931

புவிப்பாவை பரம்கெட போரில் வந்தோரை எல்லாம் அவிப்பானும் அவித்து அவர் ஆக்கையை அண்டம் முற்றக் குவிப்பானும் எனக்கு ஒரு கோவினைக் கொற்ற மௌலி கவிப்பானும் நின்றேன் இது காக்குநர் காமின் என்றான் - 1722

விண்நாட்டவர் மண்ணவர் விஞ்சையர் நாகர் மற்றும் எண் நாட்டவர், யாவரும் நிற்க, ஓர் மூவர் ஆகி மண் நாட்டவர், காட்டுநர், வீட்டுநர் வந்தபோதும் பெண் நாட்டம் ஒட்டேன் இனிப் பேர் உலகத்துள் என்னா (இலக்குவன்) - 1723

ஐய நான் அஞ்சினேன், இந்நறவின் அரிய கேடு கையினால் அன்றியேயும் கருதுதல் கருமம் அன்றால் வெய்யது ஆம்மதுவை இன்னம் விரும்பினேன் என்னின், வீரன் செய்ய தாமரைகள் அன்ன சேவடி சிதைக்க என்றான் (சுக்கிரீவன்) - 4365

'முற்றும் முதலாய் உலகம் மூன்றும், எதிர் தோன்றிச் செற்ற முதலோரொடு செறுத்தது ஓர் திறத்தும், வெற்றி உனது ஆக விளையாது ஒழியின், என்னைப் பெற்றும் இலை; யான் நெறி பிறந்தும் இலென் என்றான் (இந்திரசித்து) - 6130

'அரசன் அன்னவை உரைசெய, மறையவன் அஞ்சி, சிரதலம் கரம் சேர்த்திடா, "செவித் தொளை சேர்ந்த உரகம் அன்ன சொல் யான் உனக்கு உரைசெயின், உரவோய்! நரகம் எய்துவென்; நாவும் வெந்து உகும்" என நவின்றான் - 6225

என்னலும், எடுத்த கூர் வாள் இரு நிலத்து இட்டு, மீண்டு, மன்னவன், 'மைந்தன் தன்னை மாற்றலார் வலியால் கொண்ட சின்னமும், அவர்கள் தங்கள் சிரமும் கொண்டு அன்றிச் சேர்கேன்; துன்னரும் தயிலத் தோணி வளர்த்துமின்' என்னச் சொன்னான் (இராவணன்) - 9246

அருந்துயர்க் கடலுளாள் அம்மனை, அமுத கண்ணன் பெருந்திருக்கழித்தல் ஆற்றாள், 'கணவனைக் கொன்று பேர்ந்தோன் கருந்தலைக் கலத்தின் அல்லால் கடனது கழியேன்'என்றாள் (கரன் மனைவி) - 8407

பரதன் வஞ்சினம்

முந்து செய்த சபதம் முடிப்பனால் - 10185

தாள்உறுகுரிசில் அத்தாய் சொல் கேட்டலும் கோள் உறு மடங்கலின் குமுறி விம்முவான் நாள்உறு நல் அறம் நடுங்க, நாவினால் சூளுறு கட்டுரை சொல்லல் மேயினான் - 2198

அறம்கெட முயன்றவன், அருள்இல்நெஞ்சினன் பிறன்கடை நின்றவன், பிறரைச் சீறினோன் மறம்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன் துறந்த மா தவர்க்கு அருந்துயரம் சூழ்ந்துளோன் - 2199

குரவரை, மகளிரை, வாளின் கொன்றுளோன் புரவலன்தன்னொடும் அமரில் புக்கு உடன் விரவலர் வெரிநிடை விழிக்க, மீண்டுளோன், இரவலர் அருநிதி எறிந்து வௌவினோன் - 2200

தழைத்த தண்துளவினோன், தலைவன் அல்லன் என்று அழைத்தவன், அறநெறி அந்தணாளரில் பிழைத்தவன், பிழைப்பு இலா மறையைப் பேணலாது இழைத்த வன்பொய் எனும் இழுதை நெஞ்சினோன் - 2201

தாய்பசி உழந்து உயிர் தளர, தான் தனி, பாய்பெரும் பாழ் வயிறு அளிக்கும் பாவியும் நாயகன் பட நடந்தவனும் நண்ணும் அத் தீ எரி நரகத்துக் கடிது செல்க யான் - 2202

தாளினில் அடைந்தவர் தம்மை, தற்கு ஒரு கோள்உற, அஞ்சினன் கொடுத்த பேதையும் நாளினும் அறம் மறந்தவனும் நண்ணுறும் மீள அரு நரகிடைக்கடிது வீழ்க, யான் - 2203

பொய்க் கரி கூறினோன், போருக்கு அஞ்சினோன் கைக்கொளும் அடைக்கலம் கரந்து வவ்வினோன், எய்த்த இடத்து இடர்செய்தோன் என்று இன்னார் புகும் மெய்க்கொடு நரகிடை விரைவின் வீழ்க யான் - 2204

அந்தணர் உறையுளை அனலி ஊட்டினோன், மைந்தரைக் கொன்றுளோன், வழக்கில் பொய்த்துள்ளோன், நிந்தனை தேவரை நிகழ்த்தினோன், புகும் வெந் துயர் நரகத்து வீழ்க, யானுமே - 2205

கன்று உயிர் ஒய்ந்து உகக் கறந்து பால் உண்டோன் மன்றிடைப்பிறர் பொருள் மறைத்து வவ்வினோன் நன்றியை மறந்திடும் நயம் இல் நாவினோன் என்று இவர் உறு நரகு என்னது ஆகவே. - 2206

ஆறு தன்னுடன் வரும் அம் சொல் மாதரை ஊறு கொண்டு அலைக்க, தன் உயிர் கொண்டு ஓடினோன் சோறு தன் அயலுளோர் பசிக்கத் துய்த்துளோன் ஏறும் அக் கதியிடை யானும் ஏறவே - 2207

எ.ˆ.கு எறி செருமுகத்து, ஏற்ற தெவ்வருக்கு ஒ.ˆ.கினன் உயிர் வளர்த்து உண்ணும் ஆசையான் அ.ˆ.கல் இல்அறநெறி ஆக்கியோன் பொருள் வெ.ˆ.கிய மன்னன், வீழ் நரகின் வீழ்க யான் - 2208

அழிவு அரும் அரசியல் எய்தி, ஆகும் என்று இழி வரு சிறு தொழில் இயற்றி, ஆண்டு, தன் வழி வரு தருமத்தை மறந்து, மற்று ஒரு பழி வரு நெறி படர் பதகன் ஆக, யான் - 2209

தஞ்சு என ஒதுங்கினர் தனது பார் உளோர் எஞ்சல் இல் மறுக்கினோடு இரியல் போயுற வஞ்சி சென்று இறத்தவன் வாகை மீக் கொள அஞ்சின மன்னவன் ஆக, யானுமே - 2210

கன்னியை அழிசெயக் கருதினோன், குரு பன்னியை நோக்கினோன், பருகினோன் நறை பொன் இகழ் களவினில் பொருந்தினோன், எனும் இன்னவன் உறு கதி என்னது ஆகவே - 2211

ஊண் அல உண்வழி நாயின் உண்டவன்
ஆண் அலன் பெண்அலன், ஆர்கொலாம்? என்
நாணலன், நரகம் உண்டு என்னும் நல் உரை
பேணலன், பிறர் பழி பிதற்றி, ஆக யான் - 2212

மறு இல்தொல் குலங்களை மாசு இட்டு
ஏற்றினோன் சிறுவிலை எளியவர் உணவு
சிந்தினோன் நறியன அயலவர் நாவில் நீர்
வர உறு பதம் நுங்கிய ஒருவன், ஆக யான் - 2213

வில்லினும் வாளினும் விரிந்த ஆண் தொழில்
புல்லிடை உகுத்தனென், பொய்ம்மை
யாக்கையைச் சில் பகல் ஒம்புவான் செறுநர்
சீறிய இல்லிடை இடு பதம் ஏற்க, என் கையால் - 2214

ஏற்றவற்கு ஒருபொருள் உள்ளது, இன்று என்று
மாற்றலன், உதவலன், வரம்பு இல் பல் பகல்
ஆற்றினன் உழற்றும் ஓர் ஆதன் எய்தும் அக்
கூற்று உறு நரகின் ஓர் கூறு கொள்க, யான் - 2215

பிணிக்கு உறு முடை உடல் பேணி, பேணலார்த்
துணிக்குறு வயிர வாள் தடக் கைதூக்கிப் போய்,
மணிக் குறு நகை இள மங்கைமார்தள் முன்,
தணிக்குறு பகைஞரைத் தாழ்க, என்தலை - 2216

கரும்பு அலர் செந்நெல் அம் கழனிக் கானநாடு
அரும்பகை கவர்ந்து உண, ஆவி பேணினென்
இரும்பு அலர் நெடுந்தலை ஈர்த்த காலொடும்
விரும்பலர் முகத்து, எதிர்விழித்து நிற்க, யான் - 2217

சிறப்பு

ஆம் எனில் ஏழ்இரண்டு ஆண்டில் ஐய! நீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலம்
கோமுறை புரிகிலை என்னின், கூர்எரி
சாம்இது சரதம் நின் ஆணை சாற்றினேன் - 2507

வரவேற்பு

அருக்கியம் முதலினோடு ஆசனம் கொடுத்து
இருக்க என இருந்த பின் இனிய கூறலும் - 220

'பிதிர்ந்தது எம் மனத் துயர்ப் பிறங்கல்' என்று
கொண்டு, அதிர்ந்து எழு முரசுடை அரசர்
கோமகன் முதிர்ந்த மா தவமுடை முனியை,
கண்களால், எதிர்ந்தனன், ஓசனை
இரண்டொடு ஒன்றினே - 249

இழிந்து போய் இரதம், ஆண்டு, இணை கொள்
தாள் மலர் விழுந்தனன், வேந்தர்தம் வேந்தன்;
மெய்ம்மையால், மொழிந்தனன் ஆசிகள் -
முதிய நான்மறைக் கொழுந்து மேல் படர்தரக்
கொழுகொம்பு ஆயினான். - 252

பணிந்து, மணி செற்றுபு குயிற்றி அவிர் பைம்பொன்
அணிந்த தவிசு இட்டு, இனிது அருத்தியொடு
இருத்தி, இணைந்த கமலச் சரண் அருச்சனை
செய்து, 'இன்றே துணிந்தது, என் வினைத்தொடர்'
எனத் தொழுது சொல்லும் - 319

வந்து எதிர்ந்த முனிவனை வள்ளலும்
சிந்தை ஆர வணங்கலும், சென்று எதிர்,
அந்தம் இல் குணத்தான் நெடிது ஆசிகள்
தந்து, கோசிகன்தன் மருங்கு எய்தினான் - 564

கோதமன் தரு கோ முனி கோசிக
மாதவன்தனை மா முகம் நோக்கி, 'இப்
போது நீ இவண் போத, இப் பூதலம்
ஏது செய்த தவம்?" என்று இயம்பினான் - 565

அம் முனி வரலோடும் அழகனும் அலர் தூவி
மும்முறை தொழுதான்; அம் முதல்வனும்
எதிர் புல்லி - 2021

வேதியர்கள் வேத மொழி வேறு பல கூற, காதல்
மிக நின்று, எழில் கமண்டலுவின் நல் நீர் மா
தவர்கள் வீசி, நெடு மா மலர்கள் தூவ, போது
மணம் நாறு குளிர் சோலை கொடு புக்கான் - 2678

குடங்கையில் வாரிதி அனைத்தும் கொண்டவன்
தடங் கணான்தனை எதிர் தழுவி, சாபமும்,
கடுங் கணைப் புட்டிலும் கவசம்தானும், அத்
திடம் படு சுரிகையும், சேர ஈந்தனன் - 10214

அருந்ததி கணவன் வேந்தற்கு அருங் கடன்
முறையின் ஆற்றி, "இருந்தருள் தருதி" என்ன,
இருந்துழி "இனிது நிற்கு விருந்து இனிது
அமைப்பென்" என்னா - 572

நனி கால் நீர் ஆட்டி, அமிழ்து அன்ன சுவை இன்
அடிசில் அன்போடு ஊட்டி, மனன் உள் குளிர,
இன் உரை உரைத்தாள் - 4576

'நினையும் நல் வரவு ஆக, நும் வரவு' என
நிரம்பி, 'மனையும் மக்களும் வலியரே?'
என்றனன், மறவோன் - 9279

வலம் வருதல்

வலம் கொண்டு - 8946

வலஞ் செய்து ஏக - 10115

வழிபாடு

தெய்வ கீதங்கள் பாட - 1576

மந்திர கீதம் - 809

அணங்கு ஆர் பாகனை ஆசை தோறும் உற்று
உணங்கா நாள்மலர் தூய் உள் அன்பினால்
இணங்கா, காலம் இரண்டினொடு ஒன்றினும்
வணங்க(ாது) - 4101

தேவரும், அவன் தாள் அலால் அருச்சனை
செய்யார் - 6197

பொங்குபல் முரசம் ஆர்ப்ப இல்உறை தெய்வம்
போற்றி, கொங்குஅலர் கூந்தல், செவ்வாய்,
அரம்பையர், பாணி கொட்டி மங்கல கீதம் பாட
மலர்ப்பலி வகுக்கின்றாரை - 4949

சந்தி வந்தனைத் தொழில் - 6517

மாலைவாய் நியமம் செய்து மரபுளி இயற்றி - 1974

கோது அறு தவத்துத் தம் குலத்துளோர் தொழும்
ஆதிஅம் சோதியை அடி வணங்கினான்
காது இயல், கயல் விழிக் கன்னிமார்களை,
வேதியர்க்கு அருமறை விதியின் நல்கியே - 1208

வாக்குறுதி / வரம் வேண்டல்

ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால் என் சேய்
அரசு ஆள்வது, சீதை கேள்வன் ஒன்றால்
போய் வனம் ஆள்வது எனப் புகன்று நின்றாள்
தீயவை யாவையினும் சிறந்த தீயாள் - 1504

ஓவிய உருவ நாயேன் உளது ஒன்று பெறுவது
உன்பால் பூவியல் நறவம் மாந்தி, புந்தி வேறு
உற்ற போழ்தில் தீவினை இயற்றுமேனும்,
எம்பி மேல் சீறி, என் மேல் ஏவிய பகழி
என்னும் கூற்றினை ஏவல் என்றான் - 4068

இன்னம் ஒன்று இரப்பது உண்டால், எம்பியை
உம்பிமார்கள் தன்முனைக் கொல்வித்தான்
என்று இகழ்வரேல் தடுத்தி தக்கோய் - 4069

நீதியால் வந்தது ஒரு நெடுந் தருமநெறி அல்லால்
சாதியால் வந்த சிறுநெறி அறியான், என் தம்பி
ஆதியாய் உனை அடைந்தனன் அரசர் உருக்
கொண்டு அமைந்த வேதியா! இன்னம் உனக்கு
அடைக்கலம் யான் வேண்டினேன் - 7625

தம்பி என நினைந்து, இரங்கித் தவிரான்,
அத்தகவு இல்லான், நம்பி! இவன் தனைக்
காணின் கொல்லும், இறை நல்கானால்
உம்பியைத்தான், உன்னைத்தான், அனுமனைத்
தான் ஒரு பொழுதும் எம்பி பிரியானாக
அருளுதி யான் வேண்டினேன் - 7626

மூக்கு இலா முகம் என்று முனிவர்களும்
அமரர்களும் நோக்குவார் நோக்காமை நுன்
கணையால் என் கழுத்தை நீக்குவாய், நீக்கிய
பின் நெடுந்தலையைக் கருங்கடலுள்
போக்குவாய், இது நின்னை வேண்டுகின்ற
பொருள் என்றான் - 7628

எனக்கு நீ அருள், இவ்வரம், தீவினை தனக்கு
வாழ்விடம் ஆய சழக்கியர் மனக்கு நோய்
செயல் என்றனள் (சீதை அனுமனிடம்) - 9987

உனக்கு அமைந்தது ஒன்று வரை என, அழகன்
தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும்
மகனும் தாயும் தம்பியும் ஆம் வரம் தருக
எனத் தாழ்ந்தான் - 10079

கோட்டு வார்சிலைக் குரிசிலை அமரர்தம்
குழாங்கள் மீட்டும் நோக்குறா, வீர! நீ
வேண்டுவ வரங்கள் கேட்டியால், என
அரக்கர்கள் கிளர் பெருஞ் செருவில் வீட்ட,
மாண்டுள குரங்கு எலாம் எழுக! என விளம்பி - 10084

பின்னும் ஓர் வரம், வானரப் பெருங்கடல் பெயர்ந்து
மன்னு பல்வனம் மால்வரைக் குலங்கள்,
மற்று இன்ன துன் இடங்கள், காய்கனி கிழங்
கோடு தேன் துற்ற, இன் உண் நீர் உளவாக!
என இயம்பிடுக என்றான் - 10085

தொழுது நின்ற தன் தம்பியை, தோய் கணீர்
எழுது மார்பத்து இறுகத் தழுவினான், அழுது
வேண்டுவது உண்டு, ஐய! அவ் வரம் பழுது
இல் வாய்மையினாய்! தரற்பாற்று என்றான் - 10168

என்னது ஆகுங்கொல் அவ்வரம் என்றியேல்,
சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்
மின்னு தீயிடை யான் இது வீடுவென், மன்னன்
ஆதி, என் சொல்லை மறாது என்றான் - 10169

வாக்குறுதி (வரம்) அளித்தல்

உள்ளம் உவந்துள செய்வேன்; ஒன்றும்
லோபேன்; வள்ளல் இராமன் **உன்
மைந்தன் ஆணை** என்றான் - 1501

வாய் தந்தேன் என்றேன் இனி யானோ அது
மாற்றேன் - 1523

ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் - 1538

மண்ணிடை விழுந்த என்னை வானிடை வயங்கு
வள்ளல் கண்ணிடை நோக்கி உற்ற
கருணையான், சனகன் காதல் பெண்
இடையீட்டின் வந்த வானரர் இராமன் பேரை
எண்ணிடை உற்றகாலத்து இறகு பெற்று
எழுதி என்றான் - 4703

**வரம் கொண்டான், இனி மறுத்தல் வழக்கு
அன்று** என்று ஒரு வாளி உரம்கொண்ட தடஞ்
சிலையின் உயர் நெடுநாண் உள் கொளுவா
சிரம் கொண்டான் கொண்டதனைத் திண்
காற்றின் கடும்படையால் அரம் கொண்ட
கருங்கடலின் அழுவத்துள் அழுத்தினன் - 7629

வரம் தரும் முதல், மழுவலான், முனிவரர், வானோர்,
புரந்தராதி மற்ற ஏனையோர், தனித்தனி
புகழ்ந்து ஆங்கு, அரந்தை வெம்பிறப்பு
அறுக்கும் நாயக! நினது அருளால் குரங்கு
இனம் பெறுக! என்றனர், உள்ளமும் குளிர்ப்பார் - 10086

தெவ் வரம்பு அறு கானிடைச் செலுத்தினாட்கு
ஈந்த அவ் வரங்களும் இரண்டு, அவை
ஆற்றினார்க்கு ஈந்த இவ்வரங்களும் இரண்டு
என்றார் தேவரும் - 10082

சிறப்பு

சரம் தாழ் வில்லாய்! தந்த வரத்தை, தவிர்க்க
என்றல் உரம்தான் அல்லால், நல் அறம்
ஆமோ - 1528

வாழ்த்து

அந்தணர் ஆசி ஓதை - 809

மறையோர் ஆசி வழங்க - 4119

மொழிந்தனர் ஆசிகள் முப்பகை வென்றார் - 691

தொழும் தொறும் தொழும் தொறும் ஆசி
சொல்லுவார் - 2639

நல்லோர் ஓகை விளம்பிட - 697

பலாண்டு இசை பரவ, தங்கள் தையலர் அறுகு
தூவி வாழ்த்தினர் தழுவச் சார்ந்தான் - 8207

கங்கையே முதலிய கடவுட் கன்னியர்
கொங்கைகள் சுமந்து இடை கொடியின்
ஒல்கிட, செங்கையில் அரிசியும் மலரும்
சிந்தினர், மங்கல முறை மொழி கூறி,
வாழ்த்தவே - 3087

ஆசி கூறினர்; ஆர்த்தனர்; ஆய் மலர்
வீசி வீசி, வணங்கினர்; விண்ணவர்
ஊசல் நீங்கினர்; உத்தரிகத்தொடு
தூசு வீசினர்;-- நல் நெறி துன்னினார் - 8131

'''நல் அறமும் மெய்ம்மையும், நான்மறையும்,
நல் அருளும், எல்லை இலா ஞானமும்,
ஈறு இலா எப் பொருளும், தொல்லை சால்
எண் குணனும், நின் சொல் தொழில் செய்ய,
மல்லல் உரு ஒளியாய்! நாளும்வளர்க, நீ!" - 6361

ஊழி ஓர் பகலாய் ஓதும் யாண்டு எலாம்,
உலகம் ஏழும் எழும் வீவுற்ற ஞான்றும்,
இன்று என இருத்தி, என்றாள் - 5299

பெரியோய் என்றும் அற்று இடையூறு செல்லா
ஆயுளை ஆக என்றான் - 9576

சிறப்பு

அது கண்டனர் விண் உறைவோர்கள் எம்மை
ஆண்டான் வலன் என்று அலர் தூஉய்
நெடிது ஆசி சொன்னார் - 4811

விருந்து

அறத்தவரை அண்மும் விருந்தும் எனல் ஆகியது - 5296

விருந்து அவன் அமைத்தபின் விரும்பினன் - 2679

தத்தம் இல் இருந்து, தாமும் விருந்தொடும்
தமரினொடும் அந்தணர் அமுத உண்டி
அயிலுறும் அமலைத்து எங்கும் - 53

தம் இல்லுழை வந்த போதே உற்றார் செயல்
மற்றும் உண்டோ? - 4797

விருந்து கண்டபோது என் உறுமோ? என்று
விம்மும் - 5083

பொருந்து பொன் பெருங்கோயிலுள் போர்த்
தொழில் வருந்தினர்க்கு, தம் அன்பினின்
வந்தவர்க்கு அருந்துதற்கு அமைவு ஆயின
ஆக்குவான் விருந்து அமைக்க மிகுகின்ற
வேட்கையான் - 9617

சிறப்பு

விருந்தினர் முகம் கண்டு அன்ன விழா அணி
விரும்பு வாரும் - 46

விளக்கேற்றுதல்

நயம் கிளர் நான நெய் அளாவி, நந்தல் இல்
வியன் கருப்பூரம் மென் பஞ்சின் மீக்கொளிஇ,
கயங்களில் மரை மலர்க் காடு பூத்தென,
வயங்கு எரிக் கடவுளும், விளக்கம் மாட்டவே - 3084

பழமொழிகள்

முப்பதிற்கும் மேற்பட்ட பழமொழிகளைக் கம்பர் கையாண்டுள்ளார். புராணக் காப்பியத்துள் உலகியலை மிகுவிக்க இவை துணையாகின்றன. சில ஓரிருமுறைக்கு மேல் பயன்பட்டுள்ளன. 'வெந்த புண்ணிடை வேல்' மிக அதிகமாகப் பத்துமுறைக்கு மேல் கூறப்பட்டுள்ளது. அடுத்த நிலையில் 'உள்ளங்கை நெல்லிக் கனி' பயிற்சி காட்டுகிறது.

பொது

பெயர்ச்சுட்டு

அறிஞர் வார்த்தை - 9174

உலகு உரைக்கும் உரை - 2833

ஓர் சொல் - 9886

முதுமொழிப் பதம் - 9294

பழமொழி - 2870

மூதுரை - 4973

வாய்மை - 5899

பழமொழிகள்

அகத்து இயல் முகத்துக் காட்ட - 6502

உள்ளத்தின் உள்ளதை, உரையின் முந்துற
மெள்ளத் தம் முகங்களே விளம்பும் - 6452

அடுத்தவும் எண்ணிச் செய்தல் அண்ணலே
அமைதி அன்றோ - 3302

அதிசயம் ஒருவரால் அமைக்கல் ஆகுமோ?
துதி அறு பிறவியின் இன்ப துன்பம்தான்
விதி வயம் என்பதை மேற்கொளாவிடின்,
மதி வலியால் விதி வெல்ல வல்லமோ?. - 3508

அறம் தலை நின்றார்க்கு இல்லை அழிவு - 9173

அன்னதே முடிந்தது ஐய அறம் வெல்லும்
பாவம் தோற்கும் - 4929

மீள அருந் தருமம் தன்னை வெல்லுமோ பாவம் - 3375

ஆகுவது ஆகும் காலத்து அழிவதும் அழிந்து
சிந்திப் போகுவது அயலே நின்று போற்றினும்
போதல் திண்ணம் - 7437

அங்கையில் நெல்லி - 10027

கரதலம் உற்று ஒளிர் நெல்லி கடுப்ப - 297

கை உறு நெல்லியங் கனி - 5252

கையுறு நெல்லி அம் கனி - 10044

கை உறை நெல்லித் தன்மையின் - 4711

கைத்தலை நெல்லி - 8213

கைத்து ஒன்று நெல்லி அம் கனி - 6246

கைந் நிலை நெல்லியங் கனி கைந் நெல்லிக் கனி - 646

உண்ணா நஞ்சம் கொல்கிலது - 2186
எரியிடை வீழ்ந்த விட்டில் - 7699
விரி சுடர் விளக்கம் கண்ட விட்டில் - 3295
விளக்கின் வீழ் விட்டில் - 8909
விளக்கு எதிர் வீழ்ந்த விட்டில் - 7658
கனி வரும் காலத்து பூக்கொய்யக் கருதலாமோ - 7423
கூவத்தின் சிறு புனலைக் கடல் அயிர்த்தது ஒவ்வாதோ? - 6464
கூவலில் புக்கு வேலை கோட்படும் என்று கொள்ளேல் - 8698
செய்யவர்ச் சேர்ந்துளாரும் செய்யராய்த் திகழ்வர் அன்றே - 1125
தம்பி உடையான் பகை அஞ்சான் - 9183
தன்னைக் கொல்வது துணிவரேல் தனக்கு அது தகுமேல் முன்னர்க் கொல்லிய முயல்க என்று அறிஞரே மொழிந்தார் - 8532
தாய்தன்னை அறியாத கன்று இல்லை தன் கன்றை ஆயும் அறியும் உலகின் தாய் ஆகின் - 2570
தீமை நன்மையைத் தீர்த்தல் ஒல்லாது எனும் வாய்மை - 5899
தீயது தீயவர்க்கு எய்தல் திண்ணம் - 5106
தும்பு உளது எனின் அன்றோ சுகம் உளது - 1995
நீரைக் கொடு நீர் எதிர் நிற்க ஒணுமே? - 7808
நெஞ்சம் தருக்கினர் கெடுவர் என்றல் தத்துவ நிலையிற்று அன்றே - 3267
"பாம்பு அறியும் பாம்பின் கால்" என மொழியும் பழமொழியும் பார்க்கிலீரோ? - 2870
பின்றாது உடற்றும் பெரும் பாவம் - 8676
பிழைப்பரோ கேடு சூழ்ந்தார் - 5482
புகை உடைத்து என்னின், உண்டு பொங்கு அனல் அங்கு - 4123
'எல் உண்டாகின் நெருப்பு உண்டு' எனும் இது ஓர் சொல் - 9886
புன்மை தொடங்கல் புகழுக்கு அழிவு - 8874
பூவும் நல் வெறியும் ஒத்து ஒருவ அரும் பொதுமையாய் ஆவ நீ ஆவது - 4065
மலரினில் வெறியும் எள்ளில் எண்ணெயும் - 6308
புலிதானே புறத்து ஆக, குட்டி கோட்படாது என்ன ஒலி ஆழி உலகு உரைக்கும் உரை - 2833
பொன்னைத் தீயிடைப் பெய்தல் அப் பொன்னுடைத் தூய்மை தன்னைக் காட்டுதற்கு - 10073
பொன்றுதல் ஒருகாலத்தும் தவிருமோ பொதுமைத்து அன்றோ இன்று உளார் நாளை மாள்வார் - 9125
மை அறு நிலத்து இயல் நீர் இயல் என்னும் நீர்தால் - 7353
வெந்த புண்ணிடை வேல் - 9195
எரி வெந்த விரி புண் வீழ் ஆசு இல் அயில் வாளி - 4219
புண்ணில் கோல் இட்டாலன - 5223
புண்ணினைக் கோல் உறுத்தனைய பொம்மலால் - 10021
புண் திறந்ததில் எரி நுழைந்தாலெனப் - 5080
மாயா புண்ணுள்ளே கோல் இட்டு - 5759
மெய் உற வெந்த புண்ணினூடு உறு வேல் - 3480
புண்ணிடை அயில் - 2432
வன் கைவேல் வெம் புண் நுழைகிற்க - 1509
வெந்த கொடும் புணில் வேல் நுழைந்தது ஒப்ப - 1514
வெந் தீ புண்மேல் நுழையத் துடிக்கின்றனள் போல், புரண்டாள் - 3438
வெந்துறு புண்ணின் வேல் நுழைந்தென்ன - 5159
புண்ணில் உற்றது ஓர் எரி - 8644
வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால் - 2809

மரபுத் தொடர்

காலங்காலமாக இன்பம், துன்பம் எனக் குறிப்பிட்ட சூழலில் கூறப்படும் பொதுவான மொழிகள் மரபுத் தொடராகின்றன. அவை ஒன்றைப் பற்றிய மதிப்புரையாக, சூழல்களுக்குத் தகுந்த விளக்கமாக, மெய்ப்பாடு புலப்படுத்துவதாக உலகியல் சுட்டுவதாக, ஆற்றுப்படுத்துவதாக எனப் பலவாக அமைகின்றன. இவற்றின் பால் மிகுந்த பற்றுடையவராகக் காணப்படும் கம்பர், கதைப் போக்கில் தகுந்த இடங்களில் சிறப்பாகப் பயன் கொண்டுள்ளார். அகர வரிசையில் இவை அடுக்கப்பட்டுள்ளன. ஒரே பொருள் தருவன அடுத்தடுத்து உள. மரபுத் தொடரினை அவ்வண்ணமே பயன் கொளாமல் அதன் பொருளைத் தம் மொழியில் கம்பர் நவின்றிருக்கும் பாங்கு அறிந்து இன்புறத்தக்கது.

அடி முதல் முடியின் காறும் - 5265
அது ஓர் அறிவின் தகு செயலோ - 1284
அந்தரம் வருதலும் அனைய தீர்தலும் சுந்தரத் தோளினீர் தொன்மை நீரவால் - 3512
அலக்கணும் இன்பமும் அணுகும் நாள் அவை விலக்கும் என்பது மெய்யிற்று ஆகுமோ? - 3510
அழிவினை எய்துவான் அறிவு நீங்கினான் - 6372
அற்றதால் முகத்தினில் விழித்தல் - 7369
அறம் துணை நுமக்கு உற்றான் தன் வாய்மையை அழிக்கும் ஆயின் பிறந்திலன் அன்றே? ஒன்றோ? நரகமும் பிழைப்பது அன்றால் - 4333
அன்பு அழி சிந்தையர் - 4333
அன்று தொட்டு இன்று காறும் - 3803

அனகன் இந் நகர் எய்தியது, ஆதியால், சனகன்செய்த தவப் பயனால் - 1089
ஆ முனையின் சிறு கூழ் - 2325
ஆயிரம் கால் எடுத்து உரைத்தான் - 7499
ஆறா ஆற்றல் நெருப்பு உறப் பொங்கும் வெம்பால் நீர் உற்றது அன்ன நீரான் - 6662
ஆனனம் (திருவாய்) மலர்ந்தனன் - 199
ஆன பேர் உறைஇலா நிறைவை யார் அறிகுவார் - 1049
ஒழிந்த பேர் உயிர்கள் எல்லாம் அரக்கர்க்கு உறையும் போதா - 4868
இவ் அரக்கர் ... ... உறை இடவும் போதார் - 5344
ஆலை மென் கரும்பு அனான் - 1002
ஆவி ஒன்று உடல் இரண்டு - 5711
உடல் இரண்டுக்கும் உயிர் ஒன்று ஆனான் - 2716
இடர்தன்னை வென்றார் அன்றே வீரர்கள் ஆவார் - 3669
இப்பகல் அன்று எனின் நாளையின் அல்லால் முப்பகல் தீர்கிலம் - 8319
இந்திரன் பகை எனும் இவனை என் சரம் அந்தரத்து அருந்தலை அறுக்கலாது எனின். . . நெடு மைந்தரில் கடை எனப்படுவன் - 8481
இந்திர போகம் - 9622
அனைய பேர் உலகம் ஆயிரத்து அளவினும் அடங்கா - 9274
இரும்பு உண்ட நீர் - 3420
இரும்பு கண்டனைய நெஞ்சம் - 4490
இறந்து இறந்து உய்கின்றேன்யான் - 7646
இறுதியே இயைவது ஆனால் இடை ஒன்றால் தடை உண்டாமோ? - 7313
இறை திறம்பினனால்; என்னே, இழிந்துளோர் இயற்கை - 4016
இன்று உலப்பினும், நாளையே உலப்பினும், சில நாள் சென்று உலப்பினும் நினக்கு அன்றி பிறர்க்கு என்றும் தீரான் - 6574
ஈது ஒரு கிழமைத்து (முறை) ஆமோ? - 9629
உருகியது உலகம் - 2826
உழுந்து இட இடம் இலை உலகம் எங்கணும் - 754
உழுந்து உருள் பொழுது - 8914
எள் இட இடமும் இன்றி - 4176
நடு எள்தனை இடவும் ஓர் இடம் இலாவகை - 1847
எந்திரம் அனைய வாழ்க்கை - 9161
எரிகின்ற கிச்சின் உருக்கு இட்டு உய்த்தனன் என்னக் கிளராமுன், 'சிச்சி' என, தன் மெய்ச் செவி பொத்தி, தெருமந்தான்; - 3243
எரி புகு நெய் - 7102
கனலி நெய்யால் கனன்றது - 8438
காய் கனல்தலை நெய் சொரிந்தென - 1469
தீயிடை உகுத்த நெய் - 3132
வெப்பு அகலா எரி வெந் தழல் வெந்த செப்பு அகல் வெண்ணெயின் நோன்மை - 8319
எரியின் இட்ட மெழுகு - 5286
தீ உறு மெழுகு - 4087
பஞ்சி எரி உற்ற தென - 9449
தொத்துறு கனலின் வீழ்ந்த பஞ்சு - 9356
தடை செய்குநர் தேவரேனும் துய்யைச் சுடு வெங் கனலின் சுடுவான் துணிந்தேன் - 1728
என் உயிர் துறந்த போது அலால் ஊன்றியது பெரும் படர் துடைக்க ஒண்ணுமோ? - 3665
ஓர் உரை கணக்கு உரைத்துமேனும் - 9518
ஒன்று ஒழித்து ஒன்று ஆம் - 6943
ஒன்றாக நினைய, ஒன்றாய் விளைந்தது என் கருமம்; அந்தோ! - 6923
கடலிடைக் கோட்டம் தேய்த்துக் கழிவது கருமம் அன்றால் - 7417
கடன் ஒன்று எம்பால் கொண்டிலை - 8270
திண் நெடுங் கோல் பிடித்து ஒழுகுறு குருடர் கூட்டம் போல் - 7825
கண்ணின் நீர் உகுத்தலின் கண்டது இல்லை - 2453
கல்லும் மரங்களும் உருக நோக்கும் - 6501
கலியது காலம்வந்து கலந்ததோ - 4022
கார் உண் வார்சுவைக் கதலியின் கனியினைக் கழியச் சேரும் ஊசியின் சென்றது - 4000
குலச் சிறுமை செய்தாய் - 6123
கைத்து ஓர் பசை இல்லை - 863
கொல்லன் ஊது உலையில் கனல் என்ன - 1506
குழந்தையை உயிர்த்த மலடி - 5292
சோர் தொறும் சோர் தொறும் உயிர்த்துத் தோன்றினான் - 6020
தினை அளவையும் கருணையோடு இசைந்த - 10133
தீயவர் தீய செய்தால் தீயவர் தெரியின் அல்லால் தூயவர் துணிதல் உண்டே - 5476
தோட்டு அமைந்த பொதும்பரில் தூங்கு தேன் ஈட்டம் என்ன சென்று, ஈ இனம் - 4638
நஞ்சினால் செய்த நெஞ்சு - 7224
நஞ்சு நக்கினார் போல நடுங்குவாள் - 2817
நல்லன நிமித்தம் பெற்றேம் - 3784
நன்மையின் தொடர்ந்தார்க்கு உண்டோ கேடு - 6424
நன்மையும் தீமை அன்றே, நாசம் வந்து உற்ற போது? - 3268
நாயினும் கடைப்பட்டோன் -

நாயே அனைய வல் அரக்கர் - 5931
நின்றன எனக்கும் நிற்கும் நேர் - 3811
நின்றேனும் நின்றேன் நெடுமரம் போல் நின்றேனே - 3500
நீ அவை அறிதி அன்றே? நினக்கு நான் உரைப்பது என்னோ? தூயவை துணிந்த போது, பழி வந்து தொடர்வது உண்டோ? - 7413
நீண்டேன் மரம் போல நின்று - 3499
நீர் மேல் பாசி - 8582
பறந்து போதும் கொல் என்று பதைக்கின்றார் - 2116
நெஞ்சு கொதிப்பான் - 6283
நெருப்புக்கும் நெருப்பு - 4707
நெல் ஒக்கும் புல் - 3140
பழி இது பாவம் என்று பார்க்கிலை - 7650
பாக்கியம் அன்றி, என்றும், பாவத்தைப் பற்றலாமோ - 4130
பார்த்த போது அவனும், மற்று அத் தாபதன் தம்பி பாதத்து ஆர்த்தது ஓர் துகளுக்கு ஒவ்வான் - 7296
பிள்ளை உரை - 5289
புல் எடுத்தவர்கள் அல்லம் - 8075
புல்வாய் புலி கண்டது - 3414
மண்ணிடை மாக்கள் கடல் கண்டோம் என்பர், யாவரே முடிவு உற கண்டார் - 4441
மத்து உறு தயிரின் உள்ளம் மருகினான் - 8209
மனிதர் ஆளின் என், இராக்கதன் ஆளின் என் வையம் - 9341
மாதா அனையாய் - 3396
மாறிச் செல்லும் உருளுறு சகட வாழ்க்கை - 7410
முன்பு இழைத்த வறுமையின் முற்றினோர், பொன் பிழைக்கப் புலம்பினர் போலவே - 1617
மெலியவர் பாலதேயோ ஒழுக்கமும் விழுப்பம் தானும்? - 4022
வரன் முறை அறியா வார்த்தை - 6962
வல்லியம் மருங்கு கண்ட மான் - 7649
வலிக்கு ஒரு வரம்பும் உண்டோ - 9637
வலியவர் மெலிவு செய்தால், புகழ் அன்றி, வசையும் உண்டோ? - 4022
வழிப்பகை உடையவன் - 1294
வாய் தந்தேன் என்றேன் இனி யானோ அது மாற்றேன் - 1523
வாய் தரதக்கச் சொல்லி - 7002
வாழ்க்கை நாள் வறிது வீழ்ப்பான் - 3398
வித்து இன்றி விளைவது ஒன்று இல்லை - 6246
விரும்பலர் முகத்து எதிர் விழித்து நிற்க - 2217
விளக்கின் முன் இருள் உண்டாமோ? - 5189
விளையாடி பிழைப்ப செய்தாய் - 6932
விதி நின்றது பிடர் பிடித்து உந்த நின்றது - 7366
விதி செய்த தீமை - 674
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ? - 3333
போகா விதியை யார் விலக்கற்பாலார்? - 4339
வெய்யோன் பனி வென்ற படி - 650
"வென்றவர் தோற்பர்; தோற்றவர் வெல்குவார்; எவர்க்கும் மேலாய் நின்றவர் தாழ்வர்; தாழ்ந்தோர் உயர்குவார்; நெறியும் அ.'.தே" என்றனர் அறிஞர் அன்றே! ஆற்றலுக்கு எல்லை உண்டோ? - 7308
வேண்டேன் இம்மா மாயப்புன் பிறவி வேண்டேனே - 3499
வேதனைக்கு இடம் ஆதல் வீரதை அன்று - 4216

பொழுதுபோக்கு

பல்வகை ஆடல், பாடல் முதலான பொழுது போக்குகளுக்கிடையே எருமை, சேவல் சண்டைகளும் அன்றே நிகழ்த்தப்பட்டுள்ளமை அறிய வருகிறது. சூதாடலில் மகளிரும் ஈடுபட்டுள்ளனர்.

பொது

விளையாட்டு - 5210
இனிது உண்டாடல் - 3297
பண்ணை - 5017
பம்பு தேன் அலம்ப ஒல்கி பண்ணையின் ஆடல் - 894
திரு விளையாடல் - 5187

பொழுதுபோக்கு இடம்

கல் ஆர் மலர் சூழ் கழி வார் பொழிலோடு எல்லாம் உள. . . மெல் ஒதியர் தாம் விளையாடு இடமே - 1177
குயில் இனம் வதுவை செய்ய, கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை அயில் விழி மகளிர் ஆடும் அரங்கினுக்கு அழகு செய்ய - 45

சிறப்பு

பந்தினை இளையவர் பயில் இடம், மயில் ஊர் கந்தனை அனையவர் கலை தெரிகழகம் சந்தன வனம் அல, சண்பக வனம் ஆம் நந்தன வனம் அல, நறை விரி புறவம் - 79

அம்மானை

தம் மனத்தில் சலத்தர் மலைத் தலை வெம்மை உற்று எழுந்து ஏறுவ மீளுவ, தெம் முனைச் செருமங்கை தன் செங் கையால் அம்மனைக் குலம் ஆடுவ போன்றவே - 9420

ஆடல்

ஆடு அரங்கு - 1061

அன்னம் மென் நங்கையர் ஆடு மண்டபம் - 154
மகளிர் ஆடு அரங்குகள் - 4967
அரங்கிடை மடந்தையர் ஆடுவர் - 138
அரிவையர் களி கூர, நாடகம் நவில்வாரும் - 1192
அமரர் நாடியர் துன்னி ஆடு இடங்கள் - 4528

குரவையாடல்

குரவை - 65
குண்டலம் வெயில் வீசக் குரவைகள் புரிவார் - 1187

ஆடல் பாடல்

கேகயம் தோகைகள் கிளர மடந்தைமார் என, நாடகம் வயிந்தொறும், நவின்ற; தொடர்ந்து பாணரின் பாங்கு இசை முரன்றன தும்பி - 2041

உண்டிவில்/கவண் கல்

பாணிவில் உமிழ் உண்டை - 1447

ஊசல்

ஊசல் - 710
தொடர் ஊசல் - 4219
பூக ஊசல் - 1099
உழை உலாம் நெடுங் கண் மாதர் ஊசல் - 3936
வீட்டின் ஊசல் - 5923
கமுக வார் நெடுங் கனக ஊசலில், அமுத பாடலார், மருவி ஆடுவார் - 4615
மணி வன் கால் ஊசல் - 4224
மரகதக் கமுகு பூண்ட ஊசல் - 488
பொன் தலை மரகதப் பூகம் தேர்வு உறச் சுற்றிய மணிவடம் தூங்கும் ஊசல் - 3105
வாசம் நாறு ஊசல் - 862
ஊசலாட - 325
ஆரமும் அகிலும் துன்றி, அவிர் பளிக்கு அறை அளாவி, நாரம் நின்றன போல் தோன்றி, நவ மணித் தடங்கள்நீடும் பாரமும், மருங்கும், தெய்வத் தருவும் நீர்ப் பண்ணை ஆடும் சூர் அரமகளிர் ஊசல் துவன்றிய சும்மைத்து அன்றே - 3816
நிறை தேன் வனைந்த வேங்கையில், கோங்கினில், வயின் தொறும் தொடுத்துக் குனிந்த ஊசலில், கொடிச்சியர் எடுத்த இன் குறிஞ்சி கனிந்த பாடல் கேட்டு, அசுணமா வருவன - 2069

கழங்கு

கழங்கு - 834
மேல்நிவந்து எழுந்த மாட வெண்நிலா முன்றில் நண்ணி, வான மீன் கையின் வாரி மணிக்கழங்கு ஆடுவார் - 5017
கழங்கும் பந்தும் குன்று கொடு ஆடும் கரம் - 4924

காற்றாடி விடுதல்

மாகால் விசைக்க வடம் மண்ணிலுற வாலோடு ஆகாயம் உற்ற கதலி - 4824

சிற்றில்

குற்ற பாகு கொழிப்பன கோள் நெறி கற்றிலாத கருங் கண் நுளைச்சியர் முற்றில் ஆர முகந்து, தம் முன்றிலில், சிற்றில் கோலிச் சிதறிய முத்தமே - 61

சூது

துப்பு ஒன்று திரள் சூது - 4489
கடகமும், குழையும், பூணும், ஆரமும், கலிங்க நுண் நூல் வடகமும், மகர யாழும் வட்டினி கொடுத்து, வாசத் தொடையல் அம் கோதை சோர, பளிக்கு நாய் சிவப்பத் தொட்டு; படை நெடும் கண்ணார் ஆடும் பண்ணைகள் பலவும் கண்டார் - 496
விஞ்சை மன்னவர் முடியும், பூணும் மாலையும், பணையம் ஆக பொன்அணி பலகைச் சூது துயில்கிலர் பொருகின்றாரும். - 5019

நீர் விளையாட்டு

துறை ஆடும் முகிழ் இள முலையார் - 2009
புதுப் புனல் குடையும் மகளிர் - 42
மானின் நோக்கியர் மைந்தரோடு ஆடிய ஆன நீர் விளையாடல் - 960

பட்டி மண்டபம்

பன்ன அருங் கலை தெரி பட்டி மண்டபம் - 154
மருந்தினும் இனிய கேள்வி செவி உற மாந்துவாரும் - 46
காதைகள் சொரிவன செவி நுகர் கனிகள் - 82

பந்து

பந்து - 995
பந்தினை இளையவர் பயில் இடம் - 79
பந்துகள் மடந்தையர் பயிற்றுவார் - 137
வந்து கை புகின் சிவந்து, காட்டும் கந்துகம் - 495
கழங்கும் பந்தும் குன்று கொடு ஆடும் கரம் - 4924

பறவை வளர்ப்பு

இட்டு நீத்த பைங்கிளி - 4752
கிள்ளையொடு பூவைகள் வளர்த்தல் - 5289
மகளிரோடு ஓதும் கிள்ளையே - 140
‘‘‘என் ஓர் இன் உயிர் மென் கிளிக்கு யார் பெயர் ஈகேன்? மன்ன!’’ என்றலும், ‘‘மாசு அறு கேகயன் மாது, என் அன்னைதன் பெயர் ஆக’’ என அன்பினொடு, அந்நாள், சொன்ன மெய்ம் மொழி சொல்லுதி - 5422

வட்டு

பயங் கெழு குமரர் வட்டு ஆட்டு ஆடு இடம்
பலவும் கண்டார் - 498

விலங்குப் போர்

எருமைப் போர்

எருமை நாகு ஈன்ற செங் கண் ஏற்றையோடு
ஏற்றை, 'சீற்றத்து உரும் இவை' என்னத்
தாக்கி, ஊழுற நெருக்கி, ஒன்றாய் விரி இருள்
இரண்டு கூறாய் வெகுண்டன; அதனை நோக்கி,
அரி இனம் குஞ்சி ஆர்ப்ப, மஞ்சுற
ஆர்க்கின்றாரும் - 48

சேவல் போர்

கறுப்புறு மனமும், கண்ணில் சிவப்புறு சூட்டும்
காட்டி, உறுப்புறு படையின் தாக்கி, உறுபகை
இன்றிச் சீறி, வெறுப்பு இல, களிப்பின் வெம்
போர் மதுகைய, வீர வாழ்க்கை மறுப்பட ஆவி
பேணா வாரணம் பொருத்துவாரும் - 47

விலங்கு வளர்ப்பு

மற்றைக் குழைவுடை உழையை, வல்லை
பற்றினை தருதி ஆயின், பதியிடை அவதி
எய்தப் பெற்றுழி, இனிது உண்டாடப் பெறற்கு
அருந்தகைமைத்து என்றாள் - 3297

இணைவு

ஊடவும், கூடவும், உயிரின் இன் இசை பாடவும்,
விறலியர் பாடல்கள் கேட்கவும் ஆடவும்,
அகன் புனல் ஆடி அம் மலர் சூடவும் பொழுது
போம் சிலர்க்கு, அத் தொல் நகர் - 158

கரியொடு கரி எதிர் பொருத்தி, கைப் படை வரி
சிலை முதலிய வழங்கி, வால் உளைப்
புரவியில் பொரு இல் செண்டு ஆடி, போர்க்
கலை தெரிதலின், பொழுது போம் சிலர்க்கு,
அச் சேண் நகர் - 160

நந்தன வனத்து அலர் கொய்து, நவ்விபோல்
வந்து; இளையவரொடு வாவி ஆடி, வாய்ச்
செந்துவர் அழிதரத் தேறல் மாந்தி, சூது
உந்தலின் பொழுது போம் சிலர்க்கு, அவ்
ஒள் நகர் - 161

உண்ணா அமுது அன்ன கலைப் பொருள்
உள்ளது உண்டும், பெண் ஆர் அமுதம்
அனையார் மனத்து ஊடல் பேர்த்தும், பண்
ஆன பாடல் செவி மாந்திப் பயன் கொள்
ஆடல் கண்ணால் நனி துய்க்கவும், கங்குல்
கழிந்தது அன்றே - 889

சிறப்பு

முழங்கு திண் கட கரி மொய்ம்பின் ஊரவும், எழும்
குரத்து இவுளியொடு இரதம் ஏறவும், பழங்கணோடு
இரந்தவர் பரிவு தீர்தர வழங்கவும், பொழுது
போம் சிலர்க்கு, அம் மாநகர் - 159

வாழ்வியல்

இராமன் கதை பேசுவது மட்டுமே கம்பரின் நோக்கமன்று; அவன் கதை வழி மானிடரின் வாழ்க்கையைச் சீர் செய்வதும் ஆகும். இதனை இப்பகுதி தெளிவுறுத்தும். அக்கால வாழ்வியலும் உடன் விளங்கும். கம்பர் காணவிழைந்த தமிழ்ச் சமூகமும் (இன்ப கனவுலகு) இதனுள் புலப்படும்.

வாழ்நெறி

தக்க இன்ன, தகாதன இன்ன, என்று
ஒக்க உன்னலர் ஆயின், உயர்ந்துள
மக்களும் விலங்கே; மனுவின் நெறி
புக்க வேல், அவ் விலங்கும் புத்தேளிரே - 4054

செய்வன செய்தல், யாண்டும் தீயன
சிந்தியாமை வைவன வந்தபோதும் வசை
இல இனிய கூறல், மெய்யன வழங்கல்,
யாவும் மேவின - வெ.ல் இன்மை,
உய்வன ஆக்கித் தம்மோடு உயர்வன;
உவந்து செய்வாய் - 4125

முறையும், வாய்மையும், முயலும் நீதியும்,
அறையும் மேன்மையோடு அறனும் ஆதி ஆம்
துறையுள் யாவையும், சுருதி நூல் விடா
இறைவர் ஏவலால் இயைவ காண்டியால் - 2479

சீலமும் தருமமும் சிதைவு இல் செய்கையாய்
தங்கு பேர் அருளும் தருமமும், துணையாத்
தம் பகைப் புலன்கள் ஐந்து அவிக்கும்
பொங்கு மா தவமும், ஞானமும், புணர்ந்தோர் - 98

வழி கெட வரினும், தம் தம் வாழ்க்கை தேய்ந்து
இறினும், மார்பம் கிழிபட அயில் வேல் வந்து
கிடைப்பினும், ஆன்றோர் கூறும் மொழிகொடு
வாழ்வது அல்லால், முறை கெடப் புறம் நின்று
ஆர்க்கும் பழிபட வாழ்கிற்பாரும் பார்த்திவர்
உளரோ? - 7697

உண்டிலென் நறவம்; பொய்ம்மை உரைத்திலென்;
வலியால் ஒன்றும் கொண்டிலென்; மாய
வஞ்சம் குறித்திலென்; யாரும் குற்றம் கண்டிலர்
என்பால்; உண்டே? நீயிரும் காண்டிர் அன்றே?
பெண்டிரின் திறம்பினாரைத் துறந்தது
பிழையிற்று ஆமே? - 9106

புறன் நின்றவர் இகழும்படி, நடுவின் தலை
புணராத் திறன் நின்று, உயர் வலி என்? அது
ஓர் அறிவின் தகு செயலோ? அறன் நின்றதன்
நிலை நின்று, உயர் புகழ் ஒன்றுவது அன்றோ,
மறன் என்பது? மறவோய்! இது வலி என்பது
வலியோ - 1284

கற்றுறு மாட்சி என்கண் இன்றாயினும், உற்று
உறு பொருள் தெரிந்து உணர்தல் ஓயினும்,
செற்றுறு சூழ்ச்சியின் துணிவு சோரினும் - 6144

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி
முற்ற வல்லாரும் இல்லை; அவை வல்லர்
அல்லாரும் இல்லை எல்லாரும் எல்லாப்
பெருஞ்செல்வமும் எய்தலாலே இல்லாரும்
இல்லை உடையவர்களும் இல்லை மாதோ - 166

பொற்பின் நின்றன, பொலிவு பொய் இலா
நிற்பின், நின்றன, நீதி; மாதரார்
அற்பின் நின்றன அறங்கள்: அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே - 90

கள்வார் இலாமைப் பொருள் காவலும்
இல்லை; யாதும் கொள்வார் இலாமைக்
கொடுப்பார்களும் இல்லை மாதோ - 165

கூற்றம் இல்லை, ஓர் குற்றம் இலாமையால்;
சீற்றம் இல்லை, தம் சிந்தையின் செம்மையால்;
ஆற்றல் நல் அறம் அல்லது இலாமையால்,
ஏற்றம் அல்லது, இழித்தகவு இல்லையே - 70

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லை, ஓர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்;
வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால் - 84

அரு மறையவனும் சில் நாள் அறம் பொருள்
இன்பம் முற்றி, விரிமலர்த் தவிசோன்,
தன்பால் விழுத்தவம் புரிந்து மீண்டான் - 405

தெருளும் நல் அறமும், மனச் செம்மையும்,
அருளும், நீத்தபின், ஆவது உண்டாகுமோ - 1417

பண்பு / செயல் அடிப்படையில் மக்கள்

ஞானியர்

வீட்டினுக்கு அமைவது ஆன மெய்ந்நெறி
வெளியிற்று ஆகக் காட்டுறும் அறிஞர் - 3705

சிற்குணத்தர் - 2

துய்க்கு இலார் - 4790

முத்தர் - 10109

முழுதுணர்ந்தவர்கள் - 6155

முற்று உணர்ந்த முதியரும் - 4036

முந்தை நாள் சிந்தை மூண்ட வினை வரும்
நெறியை மாற்றும் மெய் உணர்வோர் - 4627

மாயையின் பிரிந்தோர்க்கு எல்லாம் மனோலயம்
வந்தது ஒத்தான் - 10270

பெரியோர்

அருளாளர் - 6754

செஞ் சொல் அறிவாளர் 8264

அடுக்கும், ஈது அடாது, என்று ஆன்ற ஏதுவோடு
அறிவு காட்டி இடிக்குநர் - 5204

ஒன்றிலே நிற்றல் போலாம் உத்தமர்க்கு உரியது - 7306

கலையோர் - 9092

குரவர் - 2480

நல்பெருங் குரவர் - 2481

மிகை உறு குரவர் - 6424

ஆன்று அமை கேள்வியர் - 6079

குற்றம் இல் கேள்வியர் - 6446

ஒருங்கு கேள்வியின் துறை அறி துணைவர் - 6397

நுண்புலம் நுணங்கு கேள்வி நுழைவினர் - 4834

புலன் கொள் கேள்வியார் - 6387

பால் வரு பனுவலின் துணிவு பற்றிய சால்
பெருங் கேள்வியன் - 6439

அறன் நெறி கலந்தோர் - 8745

நல் நெறி அறிவு சான்றோர் - 10343

சிட்டர் செயல் செய்திலை - 6123

மதி நெறி அறிவு - 6817

மற்றைச் சொல் நெறி அறிவு நீரார் - 10343

நடையில் படு நீதியர் - 7798

நூலோர் வினையம் - 4123

பொரு அரும் புலம் நூலோர் - 4130

பண்டிதர் - 6078

பண்பின் கேளிர் - 10343

பருணிதர் - 8311

புந்தியோர் - 9892

தோம் அறு புலமைச் செல்வர் - 10343

மதி அறி புலவர் - 4480

முனைவர் - 6843

மேதாவி - 6364

மேலோர் - 6696

வித்தகர் - 6449

விருத்த மேதகையவர் - 6137

பெரியோர் இயல்பு

பரவு கேள்வியும், பழுது இல் ஞானமும்,
விரவு சீலமும், வினையின் மேன்மையும்,
உர விலோய்! தொழற்கு உரிய தேவரும்
குரவரே எனப் பெரிது கோடியால் - 2480

உலகு அனைத்தும் தெரியும் செல்வர் - 8741

உய்விடம் அளிக்கும் அருளாளர் - 6754

தெளிந்து தீவினையைச் செற்றார் பிறவியின்
தீர்வர் என்னா விளிந்திலா உணர்வினோரும் - 4359

நூல் இயல் தரும நீதி நுனித்து அறம் குணித்த
மேலோர் - 10124

நூல் வலி காட்டும் சிந்தை - 6936

நுண் பொருள் நுண்ணிதின் பார்க்கின்றார் - 5174

நூற் கடல் புலவர் - 6972

பெயரா இரு வினை துடைத்தவர் அறிவு - 5584
எல்லா விதத்தும் உணர்வோடு நண்ணி அறனே இழைக்கும் உரவோன் வல்லான் ஒருத்தன் - 8265
நீர் கெழு தன்மை - 6530
தீயவை செய்வர் ஆகின், சிறந்தவர், பிறந்த உற்றார் தாய்அ(வ்)வை, தந்தைமார் என்று உணர்வரோ தருமம் பார்ப்பார் - 7413
நித்தம் நியமத் தொழிலர் ஆய், நிறையும் ஞானத்து உத்தமர் - 4999
பல் நெறி தோறும் தோன்றும் பருணிதர் - 10343
புலக் குறி அற நெறிபொருந்த நோக்கினார் - 6404
பேர் அருளாளர் என்பார் கறவையும் கன்றும் ஒப்பார் தமர்க்கு இடர் காண்கில் - 9579
கீழ் உளோர்கள் கீழ்மையே விளைத்தார்; மேலோர் சீர்த்தவர் செய்யத் தக்க கருமமே செய்தார் என்ன - 8827
பொருளும், காமமும், என்று இவை போக்கி, வேறு இருள் உண்டாம் என எண்ணலர்; ஈதலும் அருளும், காதலின் தீர்தலும், அல்லது, ஓர் தெருள் உண்டாம் என எண்ணலர் சீரியோர் - 5902
மறுமை கண்ட மெய்ஞ் ஞானியர் - 6602
முன்பயன் உணர்ந்த தூயோர் மொழியொடும் பழகி, முற்றி - 8824
யான் எனது எண்ணல் தீர்ந்தார் - 8851
பெருமையோர் ஆயினும், பெருமை பேசலார்; கருமமே அல்லது பிறிது என் கண்டது? - 3916
ஆரியன் அவனை நோக்கி, ஆர் உயிர் உதவி, யாதும் காரியம் இல்லான் போனான்; கருணையோர் கடமை ஈதால்; பேர் இயலாளர், "செய்கை ஊதியம் பிடித்தும்" என்னார்; மாரியை நோக்கிக் கைம்மாறு இயற்றுமோ, வையம்? என்றான் - 8272
செப்பின், மேலவர் சீறினும் அது சிறப்பு ஆதல் தப்புமே - 6621
சென்று தேய்வு உறுவரோ, புலவர் சீறினால்? ஒன்று நூறு ஆயின உவரி முத்து எல்லாம் - 6641
தெருண்ட மேலவர், சிறியவர்ச் சேரினும், அவர்தம் மருண்ட புன்மையை மாற்றுவர் எனும் இது வழக்கே - 820
தீயவரொடு ஒன்றிய திறத்து அரு நலத்தோர், ஆயவரை, அந் நிலை அறிந்தனர், துறந்தாங்கு - 832
சான்றவர் உணர்வினுக்கு உணர்வும், ஆயினான் (இறைவன்) - 3708
தீர்வு அரும் இன்னல் தம்மைச் செய்யினும், செய்ய சிந்தைப் பேர் அருளாளர் தம்தம் செய்கையின் பிழைப்பது உண்டோ - 6489
மறம் திறம்பல், "வலியம்" எனா, மனம் புறம் திறம்ப எளியவர்ப் பொங்குதல்; அறம் திறம்பல், அருங்கடி மங்கையர் திறம் திறம்பல் தெளிவு உடையோர்க்கு எலாம் - 4042
தம் நிலை நீங்கிச் சென்றால் ஆரிடைத் தோலார் மேலோர், அறிவிடை நோக்கின் அம்மா? - 6696

சிறியோர்

ஏழையர் உள்ளம் என்ன இருண்டன - 8180
கல்லாதவர் - 7902
தெளிவு இலார் - 7401
பொய் கிளர் வன்மையில் புரியும் புன்மையோர் - 3658
அறிஞர் ஆய்ந்த நயத் துறை நூலின் நீதி துறந்து அமைதல் - 6981
கண்ணீர் ஆற்றி, தலை சுமந்து இரு கை நாற்றி, துக்கமே உழப்பம் என்றால், சிறுமையாய்த் தோன்றும் அன்றே? - 8906
முடியும் நாள் தானே வந்து முற்றினால், துன்ப முந்நீர் படியுமாம், சிறியோர் தன்மை; நினக்கு இது பழியிற்றாமால்; குடியும் மாசு உண்டது என்னின் - 8902
அமைந்து அடங்கி வாழா, அடாத பொருள் எய்திச் செருக்கி, இடையே, திரு இழந்த சிறியோர் - 3183
பெண்கள் பால் வைத்த நேயம் பிழைப்பரோ, சிறியோர் பெற்றால் - 41
மெய் தெரியாது, மேல் தெளிந்த சிந்தையரும், சிறியார்களோடு அளிந்தபோது, அறிதற்கு எளிது ஆவரோ - 4988

வஞ்சகர்

அழிவு செய்யும் பாவ காரியர் - 6158
இருள் தரும் புரத்து இழுதையர் - 2962
இரக்கமும் பாழ்பட எம்பி ஈறுகண்டு அரக்கரை வென்று நின்று, ஆண்மை ஆள்வெனேல் மரக் கண் வன் கள்வனே, வஞ்சனேன் - 8780
மைக் கரு மனத்து ஒரு வஞ்சகன், மாண்பு இலன், பொய்க்கரி கூறிய கொடுஞ் சொல் - 2998
வஞ்சர் வாள் முகம் கண்டது ஓர் பொழுதினில், தெரியும் கைதவம் உண்டுஎனின், அ·து அவர்க்கு ஒளிக்க ஒண்ணுமோ - 6451
உலந்தன மனத்து ஓர் அருள் இல் வஞ்சரைத் தஞ்சம் என்று அடைந்தவர் அனைய - 5979
தாய் பசி உழந்து உயிர்தளர, தான் தனி, பாய் பெரும் பாழ் வயிறு அளிக்கும் பாவி - 2202
அழிவு அரும் அரசியல் எய்தி, ஆகும் என்று, இழி வரு சிறு தொழில் இயற்றி, ஆண்டு, தன் வழி வரு தருமத்தை மறந்து, மற்ற ஒரு பழி வரு நெறி படர் பதகன் - 2209

யோகியர்

யோகியர் - 789

யோகமுறு பேர் உயிர்கள் - 2669

அங்கத்து இந்தியம் அவித்த தனி யோகியர் - 4223

மெய்ந் நெறி புலன் கொள்வார் - 4629

ஏய்ந்த தம் உடம்பு இட்ட உயிர்க்கு இடம் ஆய்ந்து கொள்ளும் அறிஞர் - 6709

தன் நோக்கிய நெஞ்சுடை யோகியர் - 3435

மாயைப் புணர்ப்பு அறக் கல்வி, தம் இயல்பு எய்தும் கருத்தர் - 5948

கற்று, அங்கியின் நெடு வாயுவின் நிலை கண்டவர், கதியால் மற்று அங்கு ஒரு வடிவு உற்று - 7195

உழந்து பெற்ற யோகத்தின் பெற்றியாலே, தன் உடல் துறந்து, தான் அத் தனிமையின் இனிது சார்ந்தாள் (சபரி) - 3706

சிறப்பு

ஈர் ஐம்பது ஊழிக்காலம் இருந்தனன் யோகத்து இப்பால் (திருமால்) - 409

வடா திசை முனியும் நண்ணி, மலர்க் கரம் நாசி வைத்து, ஆங்கு, இடாவு பிங்கலையால் நைய, இதயத்தூடு எழுத்து ஒன்று எண்ணி, விடாது பல் பருவம் நிற்ப, மூல மா முகடு விண்டு, தடாது இருள் படலை மூட - 609

ஐயன் விஞ்சைதனை அறிந்தும் அறியாதவன் போல், அவிஞ்சை எனும் பொய்யை மெய்போல் நடிக்கின்ற யோகி போன்றான் போகின்றான் (அனுமன்) - 5926

வள்ளியோர்

உள்ளி உள்ள எல்லாம் உவந்து ஈயும் அவ் வள்ளியோர் - 15

உள்ளது மறாது உதவும் வள்ளலையும் - 835

ஒள்ளிய உணர்வு கூட, உதவலர் எனினும் ஒன்றோ, வள்ளியர் ஆயோர் செல்வம் மன்னுயிர்க்கு உதவும் அன்றே - 6697

இரவலர்

உலர்ந்த வன்கண் உலோபர் கடைத்தலைப் புலர்ந்து நிற்கும் பரிசிலர் - 2127

ஒன்றும் வேண்டலர் ஆயினும், ஒருவர்பால் ஒருவர் சென்று வேண்டுவரேல், அவர் சிறுமையின் தீரார் - 6597

கோட்டி மக்கள் - 2132

வாழ்வியல் சிந்தனைகள்

அடைக்கலம்

கையடை - 1397

அறப் பெருந் துணைவர், தம்மை அபயம் என்று அடைந்த நின்னைத் துறப்பது துணியார், தங்கள் ஆர் உயிர் துறந்த போதும் - 7404

அடைந்தோர்க்கு ஆகி, மன் உயிர் கொடுத்த வன்மை - 9578

அடைக்கலம் புகுந்தவன் அழியப் பார்ப்பது என்? - 9560

தாம் பிழை செய்தாரேனும்; "தஞ்சம்!" என்று அடைந்தோர்தம்மை நாம் பிழை செய்யலாமோ? நலியலீர்; விடுதீர்! என்றான் - 6772

வெற்றியே பெறுக, தோற்க, வீக வீயாது வாழ்க, பற்றுதல் அன்றி உண்டோ, அடைக்கலம் பகர்கின்றானை - 6469

அடைக்கலம் கூறுகின்றான்; துன்றி வந்து அன்பு செய்யும் துணைவனும் அவனே; பின்னைப் பின்றும் என்றாலும், நம்பால் புகழ் அன்றிப் பிறிது உண்டாமோ - 6470

அறம்

அறம் எனும் தெய்வம் - 7239

அறத்தினது எளிமை - 5822

படரும் நல் அறம் - 2097

நல் அறத்தின் செல்நெறி - 2612

தயா முதல் அறத்தினைத் தழீஇயது - 2429

ஊனம் இல் அறநெறி - 126

குன்றா மறையும், தருமமும் - 8676

அருள் தரும் திறத்து அறன் அன்றி, வலியது உண்டாமோ - 2962

பொது நின்ற நீதி - 5894

தருமம் என்று அறிஞர் சொல்லும் தனிப்பொருள் - 9574

தருமம் பற்றிய தக்கவர்க்கு எலாம், கருமம் கட்டளை - 4110

பொறியின் யாக்கையதோ? புலன் நோக்கிய அறிவின் மேலது அன்றோ, அறத்தாறுதான் - 4050

முன்பு நின்று இசை நிறீஇ, முடிவு முற்றிய பின்பும் நின்று உறுதியைப் பயக்கும் பேரறம் - 1867

ஆய்வுறு மனத்தேன் ஆகி அறம் தலைநிற்பது ஆனேன் - 2772

ஆயது செய்கை என்பது, அறத் துறை நெறியின் எண்ணி, தீயவர்ச் சேர்க்கிலாது, செவ்வியோர்ச் சேர்த்து, செய்தல் - 3696

அறம் துணை ஆவது அல்லால், அரு நரகு அமைய நல்கும் மறம் துணை ஆக, மாயாப் பழியொடும் வாழ மாட்டேன்; துறந்திலேன் மெய்ம்மை, எய்தும் பொய்ம்மையே துறப்பது அல்லால் - 9105

மறத்தல் செய்கிலாத் தருமத்தை மறப்பதும் வழக்கு அன்று - 1358

இறப்பினும், திரு எலாம் இழப்ப எய்தினும், துறப்பிலர் அறம் எனல் சூரர் ஆவதே 1868

ஆய்வினை உடையர் ஆகி, அறம் பிழையாதார்க்கு எல்லாம் ஏய்வன நலனே அன்றி, இறுதி வந்து அடைவது உண்டோ? மாய் வினை இயற்றி, முற்றும் வருணன் மேல் வந்த சீற்றம் தீவினை உடையார் மாட்டே தீங்கினைச் செய்தது அன்றே - 6668

அறிஞர் ஆய்ந்த நயத்துறை நூலின் நீதி நாம் துறந்து அமைதல் நன்றோ? புயத் துறை வலியரேனும், பொறையொடும் பொருந்தி வாழ்தல் சயத்துறை அறனும் அ.தே - 6981

அறத்தினால் அன்றி, அமரர்க்கும் அருஞ் சமம் கடத்தல் மறத்தினால் அரிது என்பது மனத்திடை வலித்தி - 7267

அறத்தினைப் பாவம் வெல்லாது என்னும் அது அறிந்து, ஞானத் திறத்தினும் உறும் என்று எண்ணி தேவர்க்கும் தேவைச் சேர்ந்தேன் - 9109

வெல்லுமோ தீவினை, அறத்தை மெய்ம்மையால் - 5144

அறம் வெல்லும், பாவம் தோற்கும் இருமையும் நோக்கின் - 9574

புலம்பி உள்ளம் இன்னலுற்று அயரல்; வெல்லாது, அறத்தினைப் பாவம் - 8234

கீழ்மையோர் சொற்கொடு கெடுதல் நேர்தியோ? வாழ்மைதான், அறம் பிழைத்தவர்க்கு, வாய்க்குமோ - 6374

உய் திறம் உடையார்க்கு அன்றோ, அறன் வழி ஒழுகும் உள்ளம் - 7441

பூவின் மேல் புனிதற்கேனும், அறத்தினது இறுதி, வாழ்நாட்கு இறுதி; அ.து உறுதி, அன்ப! - 4129

உளையா அறம் வற்றிட ஊழ் வழுவுற்ற சீற்றம் - 1730

புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம், என்னும் ஈது ஒரு அருமறைப் பொருளே - 97

ஆக செய்தக்கது இல்லை; அறத்தினின்று ஏகல் என்பது அரிது என்று, எண்ணினான் - 2099

ஆறி நின்று அறம் ஆற்றலர் வாழ்வு என பாறி வீந்தது செல்வம் - 2393

தலையொடும் திரிவர் அன்றே புன்மக்கள் தருமம் பூணாப் புலமக்கள் தருமம் பூண்டால் - 7422

இறந்திலன் செருக் களத்து இராமன் தாதை; தான், அறம் தலை நிரம்ப, மூப்பு அடைந்த பின்னரும் துறந்திலன் என்பது ஓர் சொல் உண்டானபின் பிறந்திலென் என்பதின் பிறிது உண்டாகுமோ - 1340

'ஈறு இல் நல் அறம் பார்த்து இசைத்தேன்; இவட் சீறி நின்று இது செப்புகின்றேன் அலேன்; ஆறி நின்றது அறன் அன்று; அரக்கியைக் கோறி' என்று எதிர் அந்தணன் கூறினான் - 382

மாக யாறு யாவையும் வாரி அற்றன; ஆகையால், தகவு இழந்து, அழிவு இல் நன் பொருள் போக, ஆறு ஒழுகலான் செல்வம் போன்றவே - 4255

தாக்கின ஒன்றோடு ஒன்று தருக்குறும் செருவில், தக்கோய்! பாக்கியம் அன்றி, என்றும், பாவத்தைப் பற்றலாமோ? - 4130

அறத்தாறு அழுங்கத் தேற்றாது செய்வார்களைத் தேறுதல் செவ்விது அன்றால் - 3976

மறம் செய்கை எய்தினார் பின் செல்வது இல்லாப் பெருஞ் செல்வம் நீ தந்தாய் - 3689

மாண்டார், மாண்டார்; நீ இனி மாள்வார் தொழில் செய்ய வேண்டா, வேண்டா; செய்திடின், உய்வான் விதி உண்டோ? ஆண்டார் ஆண்டார் எத்தனை என்கேன் அறம் நோனார் ஈண்டார் ஈண்டு ஆர் நின்றவர் எல்லாம் இலர் அன்றோ? - 3252

நவை அறக் கலங்கலா அறநல்நெறி காண்டலின் விலங்கு அலாமை விளங்கியது - 4049

காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரிந்து கற்ற நூல் உற நோக்கி, தெய்வம் நுனித்து அறம் குணித்த மேலோர் - 1320

அறிவு

அறிவாளன் - 5222

நல் அறிவாளர் - 4262

பேரறிவாளன் (அனுமன்) - 6467

அறிவனை நோக்கினான் அறிவின் மேல் உளான் - 6447

ஆரணம் காட்ட மாட்டா அறிவினுக்கு அறிவும் அன்னோன் - 5883

மேதா (இலக்குவன்) - 8689

மதியின் கூர்மையான் (சடாயு) - 2694

அறிவினுக்கு அறிவு போல்வான் வீடணன் - 10225

ஆற்றலாளர் அறிவு - 4448

அறிவினுக்கு அவதி இல்லை - 6468

நன்று தீது, என்று இயல் தெரி நல் அறிவு - 4053

கேட்டு உணர் கல்வியோடு ஞானமும் கிடைத்தது - 3807

நல் அறிவு கை தர - 2637

அறம் தரு தவத்தை ஆயும் அறிவினால் - 6980

நல் வாய்மை பொது நெறி நிலையது ஆகப் புணர்த்துதல் புலமைத்து - 6817

நூலினால் நுணங்கிய அறிவு - 6136

அடா நெறி அறைதல் செல்லா அருமறை அறைந்த நீதி விடா நெறிப் புலமை - 1029

மிகைப் புலம் - 6426

நூல் வரைத் தொடர்ந்து, பயத்தொடு பழகி, நுணங்கிய நுவல அரும் உணர்வே - 100

குலம் புக்கு ஆன்ற முதியர் - 4034

பொருளினை உணர வேறு புறத்தும் ஒன்று உண்டோ, புந்தித் தெருளினை உடையர் ஆயின் - 8269

தொக ஒருங்கிய ஞானம் - 7229

மதி எனும் பண்பதாகி (சிந்தித்தல்) - 4502

அறத்து அலாது செல்லாது, நல் அறிவு வந்து அணுக, பிறத்தல் ஆற்றுறும் பேதைமை பிணிப்புறத் தம்மை மறத்தலால் தந்த மாயையின் மாய்ந்தது அம் மாயை - 9826

தீவினை, நல்வினை, என்னத் தேற்றிய பேய் வினைப் பொருள்தனை அறிந்து பெற்றது ஓர் ஆய் வினை மெய்யுணர்வு அணுக, ஆசு அறும் மாயையின் மாய்ந்தது மாரிப் பேர் இருள் - 4252

துரக்கும், மெய்யுணர்வு இரு வினைகளை - 7494

மறுகி ஏறிய முனிவு எனும் வடவை வெங் கனலை, அறிவு எனும் பெரும் பரவைஅம் புனலினால், அவித்தான் - 4965

இயைந்த நீதி வளையா வரும் நல் நெறி நின் அறிவு ஆகும் அன்றே? (இலக்குவன்) - 1730

பழியொடும் பொருந்தி, பின்னை எண்ணுறு நரகின் வீழ்வது அறிஞரும் இயற்றுவாரோ - 7416

பத இயல் அறிவு பயத்தால் அதின் நல பயன் உளது உண்டோ? - 5509

விரகு (பட்டறிவு) - 2244

அறிவின்மை

நொப்பம் - 8254

வெள்ளியை - 421

தெருண்ட அறிவில்லவர் சிந்தையின் முந்தி இருண்டன - 3576

இயங்கு உறு புலன்கள் அங்கும் இங்கும் கொண்டு ஏக ஏகி, மயங்குபு திரிந்து நின்று மறுகுறும் உணர்வு - 498

உணர்வைச் சுட்டுச் சோர்தல் பழுது - 1919

தேறாது அறிவு அழிந்தார் - 1705

அறிவு இலான் அறைந்த பொய்யின் போம்படி ஆக்கினன் - 8512

காசு அடை விளங்கிய காட்சித்து ஆயினும், மாசு அடை பேதைமை இடை மயக்கலால், ஆசு அடை நல் உணர்வு - 3716

புன் தொழிலினால் இசை பொறுத்தல் புலமைத்தோ - 6121

காலம், மேல் விளை பொருள், உணரும் கற்பு இலாப் பால - 6136

என் நீ அயர்கின்றது, அறிவு இலார் போல் - 8908

அன்பு

அழிவு இல் அன்பு எனும் ஆர் அமிர்து ஊட்டினார் - 1939

அன்பத்துக்கு எல்லை உண்டோ - 2345

அன்பினுக்கு அவதி இல்லை - 3763

அன்பினுக்கு எல்லை காணார் - 1581

அன்பின் சிறந்தாயது ஓர் பூசனை யார்கண் உண்டே - 4800

அன்பு உருகு சிந்தை யொடும் ஆ உருகுமா போல், என்பு உருகி, நெஞ்சு உருகி, யார் உருக கில்லார் - 1588

ஊறு பேர் அன்பினாள் - 1008

நவையின் நீங்கும் உறு வலி, அன்பின் ஊங்கு ஒன்று உண்டு என உணர்வது உண்டோ - 1891

உள்ளத்து அன்பினால் அமைந்த காதல் தெரிதரக் கொணர்ந்த என்றால், அமிழ்தினும் சீர்த்த அன்றே? - 1967

என்பு தோல் உடையார்க்கும், - இலார்க்கும், தம் வன் பகைப் புலன் மாசு அற - மாய்ப்பது என்? முன்பு பின்பு இன்றி, மூவுலகத்தினும், அன்பின் நல்லது ஓர் ஆக்கம் - உண்டாகுமோ - 1422

காதல் என்றதுவும் ஓர் கள்ளின் தோன்றிற்றே - 10202

அன்பு எனும் விடம் உண்டாரை ஆற்றல் ஆம் மருந்தும் உண்டோ - 3166

அன்பால் அறிவு அழிந்து அயரும் வேலை - 5764

அற்றம் நீத்த மனத்தினன், அன்பினன் (குகன்) - 1962

ஒழிந்த என் இனி? ஒண்ணுதல் தாதைதன் பொழிந்த காதல் தொடர, பொருள் எலாம் அழிந்து மன்றல் கொண்டாடலின், அன்புதான் இழிந்துள்ளார்க்கும் இராமற்கும் ஒத்ததே - 1116

ஆசை

ஆசை நோய்க்கு மருந்தும் உண்டாம் கொலோ - 559

பெருஞ்செல்வம் ஆம் கள்ளினால் அதிகம் களித்தான் - 4287

மனத்து ஆசையால், வெருளும் நோய் விடக் கண்ணின் விழுங்கலால், தெருள் இலா உலகில், சென்று, நின்று வாழ் பொருள் எலாம், அவள் பொன் உரு ஆயவே - 621

ஆண் / ஆண்மை

உரிமை மைந்தரை பெறுகின்றது, உரு துயர் நீங்கி, இருமையும் பெறற்கு என்பது பெரியவர் இயற்கை - 1375

சொல் மறா மகப் பெற்றவர் அருந்துயர் துறந்தார் - 1380

சேய் ஒக்கும், முன் நின்று ஒருசெல் கதி உய்க்கும் நீரால் - 171

தனையர் ஆயினார், தந்தை தாயரை வினையின் நல்லது ஓர் இசையை வேய்தலோ? நினையல் ஒவிடா நெடிய வன்பழி புனைதலோ? ஐய புதல்வர் ஆதல்தான் - 2483

நீ கரன் புதல்வன் கொல்லோ? நெடும் பகை நிமிர வந்தாய்; ஆயது கடனே அன்றோ, ஆண் பிறந்து அமைந்தார்க்கு? ஐய! ஏயது சொன்னாய் என்றான் இசையினுக்கு இசைந்த தோளான் - 8419

பழிப்பு அறு நிலைமை ஆண்மை - 3695

அறை கழல் அலங்கல் வீரர் ஆயவர் புரிவது ஆண்மைத் துறை எனல் ஆயிற்று அன்றே - 4024

உடைந்தவர்க்கு உதவான் ஆயின், உள்ளது ஒன்று ஈயான் ஆயின், அடைந்தவர்க்கு அருளான் ஆயின், அறம் என் ஆம்? ஆண்மை என் ஆம் - 6472

சஞ்சலம் கலந்த போது, தையலாரை, உய்ய வந்து, அஞ்சல்! அஞ்சல்! என்கிலாத ஆண்மை என்ன ஆண்மையே - 714

ஆறுடன் செல்பவர், அம் சொல் மாதரை வேறு உளார் வலி செயின், விலக்கி, வெஞ் சமத்து ஊறுற, தம் உயிர் உகுப்பர்; என்னையே தேறினள் துயரம் நான் தீர்க்ககிற்றிலேன் - 3922

ஆறு தன்னுடன் வரும் அம் சொல் மாதரை ஊறு கொண்டு அலைக்க, தம் உயிர் கொண்டு ஓடினோன், சோறு தன் அயலுளோர் பசிக்கத் துய்த்துளோன், ஏறும் அக் கதியிடை யானும் ஏறவே - 2207

வில்லினும் வாளினும் விரிந்த ஆண் தொழில் - 2214

'அறத்துறை அன்று, வீரர்க்கு அழகும் அன்று, ஆண்மை அன்று, மறத் துறை அன்று, சேமம் மறைந்து உறைந்து ஒதுங்கி வாழ்தல் நிறத்து உற வாளி கோத்து நேர் வந்து நிற்கும் ஆகின் புறத்து உற எதிரே வந்து போர் தரப் புகல்தி' என்றான் - 6985

வந்து எனைக் கரம் பற்றிய வைகல்வாய், இந்த இப் பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்ற, செவ் வரம் தந்த வார்த்தை திருச் செவி சாற்றுவாய் - 5378

உரவு ஏதும் இலார் உயிர் ஈதும் எனா, கரவே புரிவார் உளரோ - 1162

இச்சைத் தன்மையினால் பிறர் இல்லினை நச்சி, நாளும் நகை உற, நாண் இலன், பச்சை மேனி புலர்ந்து, பழி படுஉம் கொச்சை ஆண்மையும், சீர்மையில் கூடுமோ - 5903

நன் சொற்கள் தந்து ஆண்டு, என நாளும் வளர்த்த தாதை தன் சொல் கடந்து எற்கு அரசு ஆள்வது தக்கது அன்றால் - 1741

இல்லறம்

ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார் - 1244

ஒருவருக்கு ஒருவர் தோலார், ஒத்தனர் உயிரும் ஒன்றே இருவரது உணர்வும் ஒன்றே என்ற போது யாவர் வெல்வார் - 1019

நடிக்கும் மயில் என்னவரும் நவ்வி விழியாரும் வடிக்கும் அயில் வீரரும் மயங்கினர் திரிந்தார் - 827

இறப்பு

இறப்பு எனும் மெய்ம்மையை, இம்மை யாவர்க்கும் மறப்பு எனும் அதனின் மேல் கேடு மற்று உண்டோ - 1333

உயிர் புறத்து உற்ற காலை, உள் நின்ற உணர்வினோடும், செயிர் அறு பொறியும் அந்தக்கரணமும் சிந்துமாபோல் - 9170

இறந்தான் அல்லன் அரசன் இறவாது ஒழிவான் அல்லன் மறந்தான் உணர்வு என்று உன்னா - 1640

உண்டாள் விடத்தை என, உடலும் உணர்வும் உயிர்ப்பும் உடன் ஒய்ந்தாள் - 8674

மாயா பந்த மா வினையம் மாளப் பற்று அறு பெற்றி யோர்க்கும் உந்த அரு நிலையது ஆகி, உடன் உறைந்து உயிர்கள்தம்மை அந்தகர்க்கு அளிக்கும் நோய் - 2930

ஈகை

பழங் கணோடு இரந்தவர் பரிவு தீர்தர வழங்கவும், பொழுது போம் சிலர்க்கு - 159

ஈட்டுநல் புகழ்க்கு ஈட்டிய யாவையும், வேட்ட, வேட்டவர் கொண்மின் விரைந்து - 2132

உள்ளன யாவையும் உதவி, பூண்டவும் கொள்ளையிற் கொள்க எனக் கொடுக்கின்றாரினே - 1235

ஆவுக்கு ஆயினும், அந்தணர்க்கு ஆயினும், யாவர்க்கு ஆயினும், எளியவர்க்கு ஆயினும், சாவப் பெற்றவரே, தகை வான் உறை தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவார் - 2651

வெள்ளியை ஆதல் விளம்பினை, மேலோர் வள்ளியர் ஆகில் வழங்குவது அல்லால், எள்ளுவ என் சில? இன் உயிரேனும் கொள்ளுதல் தீது; கொடுப்பது நன்றால் - 421

சந்தம் இவை; தா இல் மணி ஆரம் இவை; யாவும் சிந்துரமும் இங்கு இவை; செறிந்த மதவேழப் பந்திகள், வயப்பரி, பசும் பொனின் வெறுக்கை மைந்த! வறியோர் கொள வழங்கு என நிரைப்பார் - 1587

பல் பதினாயிரம் பசுவும், பைம் பொனும், எல்லை இல் நிலனொடு, மணிகள் யாவையும் நல்லவர்க்கு உதவினான்; நவிலும் நான்மறைச் செல்வர்கள் வழுத்துற, தேர்வந்து ஏறினான் - 1228

ஈட்டு நல் புகழ்க்கு ஈட்டிய யாவையும், வேட்ட வேட்டவர் கொண்மின், விரைந்து எனக் கோட்டி மாக்களைக் கூவுவ போல்வன - 2132

செந் தீ வினை மறைவாணனுக்கு ஒருவன், சிறுவிலை நாள், முந்து ஈந்தது ஓர் உணவின் பயன் எனல் ஆயின - 9755

மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்கள்; மாயாது ஏந்திய கைகொடு இரந்தவர்; எந்தாய்! வீந்தவர் என்பவர்; வீந்தவரேனும், ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே - 422

மள்கல் இல் **பெருங் கொடை** மருவி, மண்உளோர் உள்கிய பொருள் எலாம் உதவி, அற்ற போது எள்கல் இல் இரவலர்க்கு ஈவது இன்மையால், வெள்கிய மாந்தரின், வெளுத்த மேகமே - 4251

ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் ஈட்டி வைத்த பாவ பண்டாரம் - 6856

எடுத்து ஒருவர்க்கு ஒருவர் ஈவதனின் முன்னம் தடுப்பது நினக்கு அழகிதோ, தகவு இல் வெள்ளி? கொடுப்பது விலக்கு கொடியோய் உனது சுற்றம் உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி விடுகின்றாய் - 425

அடுப்ப வரும் பழி செய்ஞ்ஞரும் அல்லர்; கொடுப்பவர் முன்பு, கொடேல் என நின்று, தடுப்பவரே பகை; தம்மையும் அன்னார் கெடுப்பவர்; அன்னது ஓர் கேடு இலை என்றான் - 423

ஏற்றவற்கு, ஒரு பொருள் உள்ளது, இன்று என்று மாற்றலன், உதவலன், வரம்பு இல் பல் பகல் ஆற்றினன் உழற்றும் ஓர் ஆதன் எய்தும் விக் கூற்று உறு நரகின் ஓர் கூறு கொள்க, யான் - 2215

கண்டிலை முன்பு; சொல்லக் கேட்டிலை கடன் ஒன்று எம்பால் கொண்டிலை; கொடுப்பது அல்லால் குறைஇலை; இதுநின் கொள்கை; உண்டு இலை என்ன நின்ற உயிர் தந்த உதவியோனே பண்டு இலை நண்பு; நாங்கள் செய்வது என்? பகர்தி என்றான் - 8270

விழைவுறு வேட்கையோடும் வேண்டினர்க்கு உதவ வேண்டி, குழைதொறும் கனகம் தூங்கும் கற்பகம் நிகர்த்த கொன்றை - 4181

ஈவதனை மேற்கொண்ட செம் மன்னர் புகழ் வேட்ட பொருளே போல் தேய்ந்ததால் - 687

ஈகையின்மை

உளப் பரும் பிணிப்பு அறா **உலோபம்** ஒன்றுமே அளப்பவுருங் குணங் களை அழிக்குமாறு போல் - 363

கட்டுரையின் தம கைத்து உள போழ்தே இட்டு, இசைகொண்டு, அறன் எய்த முயன்றோர் உள் தெறு வெம் பகை ஆவது உலோபம்; விட்டிடல் என்று விலக்கினர் தாமே - 424

மாற்றான், உதவான், கடு **வச்சையன்** போல் - 908

உலர்ந்த வன்கண் உலோபர் - 2127

மேன்மேல் உள் நிறை செல்வம் நல்காது ஒளிக்கின்ற உலோபர் ஒத்த - 6692

நீத்தமும் வானமும் குறுக, நெஞ்சிடைக் கோத்த அன்பு உணர்விடைக் குளிப்ப மீக் கொள, ஏத்தவும், பரிவின் ஒன்று ஈகலான் பொருள் காத்தவன் புகழ் எனத் தேயும் - 2757

மெள்ள, நள்ளிகள், புழை அடைத்து ஒடுங்கின, வச்சை மாக்கள்போல் - 4268

உதவி

அலக்கண் உற்றேற்கு உற்று உதவற்கு, அடைவு உண்டு அன்றோ - 3738

உளம் குளிர்ந்து உதவுவாரும் - 936

ஏதிலாரும், எளியர் என்றால், அவர் தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்து அரோ - 4044

விசும்பின் ஒங்கினான் உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே - 427

எரியா நின்ற ஆர் உயிருக்கு இரங்கினால், ஈது இசை அன்றோ? - 3731

சிறப்பு

இடு கண்ணினர் இடர்உறு மூப்பினர் ஏக நெடுகு கூனல் வால் நீட்டின உருகுறு நெஞ்சக் கடுவன் மாதவர்க்கு அருநெறி காட்டுவ காணாய் - 2075

உலகியல்

இன்னதாம் என்னல் ஆமோ உலகியல் இகழல் அம்மா - 5689

ஆர் அனார் உலகு இயற்கை அறிதக்கார் - 9945

நதியினும் குளத்தும் பூவா நளினங்கள் குவளையோடு மதி நுதல் வல்லி பூப்ப, நோக்கிய மழலைத் தும்பி அதிசயம் எய்தி, புக்கு வீழ்ந்தன; அலைக்கப் போகா புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார் - 898

துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது - 1995

தெள்ளியோர் உதவ, பெருஞ் செல்வம் ஆம் கள்ளினால் அதிகம் களித்தான் - 4287

செல்வர்க் கண்டு அடி பணிவது என்ன - 2733

அறன் நிரம்பிய அருளுடை அருந் தவர்க் கேனும், பெறல் அருந் திருப் பெற்ற பின், சிந்தனை பிறிது ஆம் - 1476

பெறல் அருந் திருப் பெற்று, உதவிப் பெருந் திறம் நினைந்திலன்; சீர்மையின் தீர்ந்தனன்; அறம் மறந்தனன்; அன்பு கிடக்க, நம் மறம் அறிந்திலன்; வாழ்வின் மயங்கினான் - 4270

மெய்ம்மை உற்றார் சிலர், அல்லவரே பலர் என்பது உண்மை பெற்றாருழைப் பெற்ற பயன் பெறும் பெற்றி அல்லால் அற்றார் நவை என்றலுக்கு ஆகுநர் ஆர் கொல் - 3978

மறுமை கண்ட மெய்ஞ் ஞானியர் ஞாலத்து வரினும், வெறுமை கண்ட பின், யாவரும் யார் என விரும்பார்; குறுமை கண்டவர் கொழுங் கனல் என்னினும் கூசார்; சிறுமை கண்டவர் பெருமை கண்டு அல்லது தேறார் - 6602

பிறந்தார் பெயரும் தன்மை பிறரால் அறிதற்கு எளிதோ - 1640

மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம் - 2853

ஊறு ஞானத்து உயர்ந்தவர் ஆயினும், வீறு சேர் முலைமாதரை வெல்வரோ - 925

உள்ளம்

இன்பமும் துன்பம் தானும் உள்ளத்தோடு இயைந்த அன்றே - 3166

உள்ளத்தின் உலைவு உற்றார் - 2997

துன்பம் கோளுறக் குலுங்கி, உள்ளம் தேறுவது அரிது; செய்கை மயங்கினென்; திகைத்து நின்றேன் - 8925

சோகபங்கம் துடைப்பு அரிதால் - 2099

தெரிவுறு துன்பம் வந்து ஊன்ற, சிந்தையை எரிவுசெய்து ஒழியும் ஈது இழுதை நீரதால் - 3509

வஞ்சனை, தீவினை, மறந்த மா தவர் நெஞ்சு எனத் தெளிந்த நீர் - 4260

சோகம் வந்து உறுவது, தெளிவு தோய்ந்து அன்றோ - 5412

ஆற்றலன் ஆகி, அன்பால் அறிவு அழிந்து அயரும் வேலை, சீற்றம் என்று ஒன்றுதானே மேல் நிமிர் செலவிற்று ஆகி, தோற்றிய துன்ப நோயை உள்ளுறத் துரந்தது அம்மா! ஏற்றம் சால் ஆணிக்கு ஆணி எதிர் செலக் கடாயது என்ன - 5764

சிந்தனை முழுதும் சிந்த தெளிவு இலார் - 7401

கடியுமாறு அன்றி சோர்ந்து கழிதியோ கருத்து இலார் போல் - 8902

பொருள் தீங்கு இல் கேள்விச் சுடர் புக்கு வழங்கல் இன்றிக் குருடு ஈங்கு இது என்ன, குறிக்கொண்டு கண்ணோட்டம் குன்றி, அருள் தீர்ந்த நெஞ்சின் கரிது - 3205

ஏழையர் உள்ளம் என்ன இருண்டன - 8180

வாயினும் மனத்தினும் வெறுத்து வாழ்துமேல், ஓயும், நம் வலி - 6091

சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால் ஓர்ந்து உணர்வு இல்லவர் உள்ளம் ஒப்பது - 3710

நைவளம் நவிற்று மொழி நண்ண வரலோடும், வையம் நுகர் கொற்றவனும், மா தவரும், அல்லார் கைகள் தலைபுக்கன; கருத்துளதும் எல்லாம் தெய்வம் என உற்ற; உடல் சிந்தை வசம் அன்றோ - 1150

உயிர்ப் புறத்து உற்ற தன்மை உணர்த்தினார் உள்ளத்து உள்ளது அயிர்ப்பினில் அறிதிர் என்றே - 8832

சிற்றிடைச் சீதை என்னும் நாமமும் சிந்தை தானும் உற்று, இரண்டு ஒன்று ஆய் நின்றால் ஒன்று ஒழித்து ஒன்றை உன்ன மற்றொரு மனமும் உண்டோ? மறக்கல் ஆம் வழி மற்று யாதோ - 3150

வருத்தமும் பழியுமே வயிறு மீக் கொள இருத்தும் என்றால், எமக்கு இனியது யாவதோ? அருத்தி உண்டு ஆயினும், அவலம்தான் தழீஇ, கருத்து வேறு உற்றபின், அமிர்தும் கைக்குமால் - 4380

உள்ளத்தின் உள்ளதை, உரையின் முந்துற, மெள்ளத் தம் முகங்களே விளம்பும்; ஆதலால், கள்ளத்தின் விளைவு எலாம் கருத்து இலா இருள் பள்ளத்தின் அன்றியே வெளியில் பல்குமோ - 6452

சிறப்பு

ஆகும் நல்வழி; அவ்வழி என்மனம் ஆகுமோ? இதற்கு ஆகிய காரணம், பாகுபோல் மொழிப் பைந்தொடி, கன்னியே ஆகும்; வேறு இதற்கு ஐயுறவு இல்லையே - 626

உறவு

அந்த நல் பெருங் குரவர் ஆர் எனச் சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினால் தந்தை தாயர் என்று இவர்கள் தாம் அலால், எந்தை கூற வேறு எவரும் இல்லையால் - 2481

பிறிவு எனும் பீழை தாங்கள் பிறந்த நாள் தொடங்கி என்றும் உறுவது ஒன்று இன்றி, ஆவி ஒன்றென நினைந்து நின்றான் (இராவணன்) - 7708

நயந்தார் உய்ய, தங்கள் இன் உயிரும் கொடுத்தார், தமர் - 1101

ஒளிப்பாரோடும் உறவு உண்டோ - 3736

ஊனமுற்றோர்

அந்தர் - 2011

ஊமர் - 521

மூங்கையான் - 32

பிச்சர் - 6171

நிறை மக உடையவர், நெறி செல் ஐம்பொறி குறை மக குறையினும் கொடுப்பராம் உயிர் - 1796

சிந்தொடு, குறளும், கூனும், சிலதியர் குழாமும், தெற்றி வந்து, அடி வணங்கிச் சுற்ற - 1139

உணர்வு இல் நெஞ்சினர், ஊமர், உரைப் பொருள் புணரும் கேள்வியர் அல்லர், பொறி இலர், கொணரும் கூனர், குறளர், கொழுஞ் சுடர் துணரும் நல் விளக்கு ஏந்தினர், சுற்றினார் - 6786

ஒழுக்கம்

வேத நூல் மரபுக்கு ஏற்ற ஒழுக்கமே பிடிக்க வேண்டும் - 7412

பெறுதற்கு அரியகுலம் சுரக்கும், ஒழுக்கம் குடிக்கு எலாம் - 69

மனக்கு உறு நெறி செலல் ஒழுக்கின் பாலதோ... - 2150

அறத்தை நோக்கி, ஒப்பழியச் செய்கிலார் உயர் குலத்துத் தோன்றினோர் - 2865

உறும் போகம் எல்லாம், நலன் உள்வழி, உண்பர் அன்றே - 901

கல்வி

கல்வி - 67

ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து, எண்இல் கேள்வி ஆகும் முதல் திண் பணை போக்கி, அருந் தவத்தின் சாகம் தழைத்து, அன்பு அரும்பி, தருமம் மலர்ந்து, போகங் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே - 167

காதைகள் - 82

அளவை நூல் - 4622

கணக்கு (கணிதநூல்) - 5884

சுருதி நூல் விடா இறைவர் - 2479

தரும நூல் -

துறையோர் நூல் முறை - 4119

நல்நூல் - 5389

தொன்மையின் நல்நூல் - 4024

நாம நூல் மனு முதல் யாவையும் - 6421

நூல் வரும் தகையன (புரவி நூல்) - 1230

நூல் முகம் (யோக நூல்) - 4578

பண்டை நூல் - 3782

சுரத நூல் தெரிவிடர் (காமநூல் அறிந்த காமுகர்) - 4185

மந்திரம் கெழுமு நூல் மரபு - 3800

ஒது அப் பெரு நூல்கள் உலப்பு இலவால் - 6298

நீதிக் கல்வி - 4364

நூல் ஏந்து கேள்வி - 4781

யாவரும் கற்கும் கல்வி - 6245

ஆய்வு அரும்புலத்து அறிவு - 2482

கற்றுறு மாட்சி - 6144

சாலும் நூல் உணர் கேள்வி - 4212

நல் பெருங் கல்விச் செல்வம் நவை அறு நெறியை நண்ணி - 8824

போதமும், பொருந்து கேள்விப் புரை அறு பயனும் - 5882

துறத்தல் ஆற்று உறு ஞான மாக் கடுங் கணை தொடர, அறத்து அலாது செல்லாத, நல் அறிவு வந்து அணுக பிறத்தல் ஆற்றுறும் பேதமை பிணிப்புறத் தம்மை மறத்தலால் தந்த மாயையின் மாய்ந்தது, அம்மாயை - 9826

கற்றல்

பார் உலகு எங்கும் பேர் இருள் சீக்கும் பகலோன்முன் தேர் முன் நடந்தே ஆரிய நூலும் தெரிவுற்றீர் (அனுமன்) - 4724

காதல் நான்முகனாலும் கணிப்ப அரிய கலை அனைத்தும் கதிரோன் முன் சென்று ஓதினான் - 6466

வீட்டினுக்கு அமைவது ஆன மெய்ந்நெறி வெளியிற்று ஆகக் காட்டுறும் அறிஞர் என்ன, அன்னவள் கழறிற்று எல்லாம் கேட்டனன் என்ப மன்னோ கேள்வியால் செவிகள் முற்றும் தோட்டவர் உணர்வின் உண்ணும் அமுதத்தின் சுவையாய் நின்றான் - 3705

கலை பல பயில்வாரும் - 1191

சொல் நிறை கேள்வியின் தொடர்ந்த மாந்தர் - 4264

கற்பித்தல்

என்று ஓர் அந்தணன், எல்லை இல் அறிஞனை ஏவி, நன்று நீ இவற்கு உதவுதி மறை என நவின்றான் சென்று மற்றுஅவன் தன்னொடும் ஒரு சிறை சேர்ந்தான் அன்று நான்மறை முதலிய ஓதுவான் அமைந்தான் - 6209

சிறப்பு

கல்வியின் திகழ் கணக்காயர் கம்பலைப் பல்விதச் சிறார் எனப் பகர்வ பல் அரி - 4262

இத இயல் இயற்றிய குரவர் யாரினும், மத இயல் களிற்றினாய்! மறு இல் விஞ்சைகள் பதவிய இருமையும் பயக்க, பண்பினால் உதவிய ஒருவனே, உயரும் என்பரால் - 2497

குருக்கள் - 6198

கற்றோர்

துறையோர் - 4119

பாண்டிதர் - 4728

மூதக்கோய் - 6210

தீது அறு குணத்தால் மிக்க செழுமறை தெரிந்த நூலோர் - 574

பாயிரம் உணர்ந்த நூலோர் - 7645

ஆக்கமும், கேடும் தாம் செய் அறத்தொடு பாவம் ஆய போக்கி, வேறு உண்மை தேறார், பொரு அரும் புலமை நூலோர் - 4130

பொய் இல் கேள்விப் புலமையினோர் - 6

மருந்தினும் இனிய கேள்வி செவி உற மாந்துவாரும் - 46

கற்று அறிந்தவர் என அடங்கி - 2080

அணங்குறும் அவிச்சை கெட, விச்சையின் அகம்பாடு உணர்ந்து, அறிவு முற்று பயன் உற்றவரை ஒத்தாள் - 1155

வேதம், நீதி நூல், இலக்கணம், நோக்கிய இயல்பர் எய்தினார் சலக் குறி இலர் என, அருகு சார்ந்தனர் புலக் குறி அற நெறி பொருந்த நோக்கினார் - 6404

அயர்வு இல் கேள்வி சால் அறிஞர் வேலை முன், பயில்வு இல் கல்வியார் பொலிவு இல் பான்மைபோல் - 3817

கலை யாவையும் முற்றுறக் கற்றுண்டாய் - 5836
கற்று உணர் மாருதி - 5995
காற்றின் மகன் கலை கற்றான் - 5999
செறி பெருங் கேள்வியாய் - 6447
தாயினான் வேலை யோடும் அயிந்திரப் பரவை தன்னை - 8594
நூலை நயந்து, நுண்ணியது உணர்ந்தீர் - 4719
நெறிதரு மாருதி என்னும் நேர் இலா அறிஞன் - 6447
நூல்முகம் முற்றும் நுணங்க உணர்ந்தாய் (இந்திரசித்து) - 8872
தென் சொல் கடந்தான் வடசொல் கலைக்கு எல்லை தேர்ந்தான் (இராமன்) - 1741
நீண்ட நூல்வலாய் (இராமன்) - 4446
எண் உறு கல்வி உள்ளத்து இளையவன் (இலக்குவன்) - 4209
தொல்லை ஆன்ற நூல் அறிஞ (இலக்குவன்) - 4343
இருங் கலை துணிந்த கேள்வியன் (சடாயு) - 2694
எண்ணு நூல் கற்றாய் (வீடணன்) - 6589
கவிஞரின் அறிவு மிக்காய் - 7402
செவ்வழி அறிஞன் - 6529
முழுது உணர் புலவன் - 6531
வீடணப் புலவர் கோமான் - 10360

கல்லாதார்

கற்றிலா அரக்கர் - 5936
மடப் பிள்ளைகள் - 9
மூடர் - 5486
கல்வி நோக்கா மதியிலி மறையச் செய்த தீமை - 3152
கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் என, போயிற்று அன்றே - 388

கள்ளுண்ணாமை

நனை நறுந்துளி நஞ்சு மயக்கவும் தனை உணர்ந்திலன் - 4293
வஞ்சமும் களவும், பொய்யும், மயக்கமும் மரபு இல் கொட்பும், தஞ்சம் என்றாரை நீக்கும் தன்மையும், களிப்பும், தாக்கும்; கஞ்ச மெல் அணங்கும் தீரும், கள்ளினால், அருந்தினாரை நஞ்சமும் கொல்வது அல்லால், நரகினை நல்காது அன்றே - 4363

காமம்

திறம் திறம்பிய காமச் செருக்கினால் மறந்து, தம்தம் மதியின் மயங்கினார், இறந்து இறந்து, இழிந்து ஏறுவதே அலால், அறம் திறம்பினார், ஆர் உளர் ஆயினார் - 5900
வேதனை செய் காம விடம் மேலிட மெலிந்தாய்; தீது உரை செய்தாய்; இனைய செய்கை சிதைவு அன்றோ - 3262
காமத்தால் கனலும் வெந் தீ சீலத்தால் அவிவது அன்றி, செய்யத்தான் ஆவது உண்டோ - 3170
கற்றவர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்கல் ஆமோ - 3150
வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே வதிந்தது அன்றே - 3153
உன்ன அருந் துறவு பூண்ட உணர்வுடை ஒருவனே போல், தன்னையும் துறக்கும் தன்மை காமத்தே தங்கிற்று அன்றே - 1018
தூமகேது புவிக்கு எனத் தோன்றிய வாம மேகலை மங்கையரால் வரும் காமம் இல்லை எனின், கடுங் கேடு எனும் நாமம் இல்லை; நரகமும் இல்லையே - 1427

செஞ்சோற்றுக் கடன்

நீர்க்கோல வாழ்வை நச்சி, நெடிது நாள் வளர்த்துப் பின்னைப் போர்க் கோலம் செய்து விட்டாற்கு உயிர்கொடாது அங்குப் போகேன் - 7426
கருத்து இலா இறைவன் தீமை கருதினால் அதனைக் காத்துத் திருத்தலாம் ஆகின் அன்றோ திருத்தலாம் தீராது ஆயின் பொருத்து உறுபொருள் உண்டாமோ? பொருதொழிற்கு உரியர் ஆகி ஒருத்தரின் முன்னம் சாதல், உண்டவர்க்கு உரியது அம்மா - 7428

சொல்

வெள்ளை இன் அமிழ்து என்ன தீம்சொல் - 977
நல் பெருங் கல்விச் செல்வம் நவை அறு நெறியை நண்ணி, முன் பயன் உணர்ந்த தூயோர் மொழியொடும் - 8824
பகையுடைச் சிந்தையார்க்கும், பயன் உறு பண்பின் தீரா நகையுடை முகத்தை ஆகி, இன் உரை நல்கு, நாவால் - 4123
வெயில் முறைக் குலக் கதிரவன் முதலிய மேலோர், உயிர் முதல் பொருள் திறம்பினும் உரை திறம்பாதோர் - 1470
வாசகம் வல்லார் முன் நின்று, யாவர் வாய் திறக்க வல்லார் - 895
செல் இடத்து அல்லது ஒன்று உரைத்தல் செய்கலா நல் அறிவாளரின், அவிந்த, நா எலாம் - 4262
நெடுஞ் சொல் (கொடுமையான சொல்) - 1514

தவம்

துன் அருந் தவத்தின் எய்தும் துறக்கம் - 3169

மை அறு விசும்பில், மண்ணில் மற்றும் ஓர் உலகில் முற்றும் மெய் வினை தவமே அன்றி மேலும் ஒன்று உளதோ - 2363

மன்னும் செல்வத்திற்கு உண்டு வரம்பு; இதற்கு(தவம்) என்ன கேடு உண்டு? இவ் எல்லை இல் இன்பத்தை உன்னு, மேல் வரும் ஊதியத்தோடு என்றான் - 2100

செய்த செய்தவம் அரும்சிறப்பு உதவ - 2637

மெய்ந் நெறி புலன் கொள்வார்கட்கு அனையது (வீடுபேறு) பொய்க்குமோ - 4629

உண்ண உள; பூச உள; சூட உள; ஒன்றோ வண்ண மணி ஆடை உள, மற்றும் உள பெற்றேன் அண்ணல்! அவை முற்றும் அறவிட்டு வினைவெல்வான் எண்ண அரிய பல்பகல் இருந்தவம் இழைத்தேன் (சுயம்பிரபை) - 4584

காடு பற்றியும், கன வரை பற்றியும், கலைத் தோல் மூடி முற்றியும், முண்டித்தும், நீட்டியும் முறையால் வீடு பெற்றவர் - 6219

பெய்த ஐம் பொறியும், பெருங் காமமும், வைத வெஞ் சொலின், மங்கையர் வாட் கணின் எய்த வஞ்சக வாளியும், வென்று நல் செய் தவம் பல செய்குநர் தேவரால் - 4628

நீதியும், தருமம் நின்ற நிலைமையும், புலமைதானும்; ஆதி அம் கடவுளாலே அருந் தவம் ஆற்றிப் பெற்றாய் - 7406

ஏவின படைக்கலம் யாவும், செய்த மா தவத்து ஒருவனைச் சிறு தொழில் தீயோன் வைத வைவினில் ஒழிந்தன - 9559

குறித்து ஓர் பொருட்கு முன்நாள் ஈட்டிய தவமும், பின்னர் முயற்சியும் இயைந்தது ஒத்தார் - 3807

சிறப்பு

தொளை கொள் தாழ் தடக்கைந் நெடுந் துருத்தியில் தூக்கி, அளவு இல் மூப்பினர் அருந்தவர்க்கு, அருவி நீர் கொணர்ந்து, களப மால்கரி குண்டிகைச் சொரிவன - 2074

கண்டனன் அரசன், காணா, 'கலை மறை முனிவர்க்கு அல்லால் திண் திறல் வலியும் தேசும் உள எனல் சீரிது அன்றால்; மண்டலம் முழுதும் காக்கும் மொய்ம்பு ஒரு வலன் அன்று' என்னா ஒண்தவம் புரிய எண்ணி, உம்பர்கோன் திசையை உற்றான் - 583

இந் நளின நாட்டத்தான் தவம் செய, தவம் செய்த தவம் என்? - 2749

சொன்னான் நிருதர்க்கு இறை; அம் மொழி சொல்லலோடும், அந் நாளில் நிரம்பிய அம் மதி, ஆண்டு ஓர் வேலை முந் நாளின் இளம் பிறை ஆகி முளைத்தது என்றால், எந் நாளும் அருந் தவம் அன்றி, இயற்றல் ஆமோ - 3199

துணிவு

நிச்சயம் எனும் கவசம்தான் நிலைநிற்பது அன்றி, அச்சம் என்னும் ஈது ஆர் உயிர்க்கு அருந் துணை ஆமோ? - 3016

துணிவற்றோர்

வச்சை ஆம் எனும் பயம் மனத்து உண்டு என வாழும் கொச்சை மாந்தரைக் கோல்வளை மகளிரும் கூசார் - 3016

துறவு

அருஞ்சிறப்பு அமைவரும் துறவு - 1334

பிறந்து இறந்து உழலும் பாசப் பிணக்குடைப் பிணியின் தீர்ந்தார், துறந்து அரும் பகைகள் மூன்றும் துடைத்தவர் - 5200

மக்களை, குரவர்தம்மை, மாதரை, மற்றுளோரை, ஒக்கும் இன் உயிர் அன்னாரை, உதவி செய்தாரோடு ஒன்ற, துக்கம், இத் தொடர்ச்சி என்று துறப்பரால், துணிவு பூண்டோர்; மிக்கது நலனே ஆக, வீடுபேறு அளிக்கும் அன்றே - 7414

துறப்பு எனும் தெப்பமே துணை செய்யா விடின் பிறப்பு எனும் பெருங்கடல் பிழைக்கல் ஆகுமோ - 1333

துறப்பதே தொழிலாகத் தோன்றினோர் தோன்றியக்கால் மறப்பரோ தம்மை அது அன்றாகில் - 2566

சிறப்பு

துறவியின் உறவு பூண்ட தூயவர் துணைவன் என்னை உற உவந்து அருளி மீளா அடைக்கலம் உதவினானே அறவினை இறையும் இல்லா, அறிவு இலா, அரக்கன் என்னும் பிறவியின் பெயர்ந்தேன் பின்னும் நரகினின் பிழைப்பதானேன் - 6490

நட்பு

ஆவி வேறுஇலாத் தோழர் - 5676

ஆயம் 1831

தொல் அருங் காலம் எல்லாம் பழகினும், தூயர் அல்லார் புல்லலர்; உள்ளம் தூயார் பொருந்துவர், எதிர்ந்த ஞான்றே - 6484

பழையம் யாம் என பண்பு அல செய்வரோ பருணிதர், பயன் ஓர்வார் - 5032

அரிய, தாம் உவப்ப, உள்ளத்து அன்பினால் அமைந்தகாதல் தெரிதரக் கொணர்ந்த என்றால், அமிழ்தினும் சீர்த்த அன்றே? பரிவினின் தழீஇய என்னின் பவித்திரம் எம்மனோர்க்கும் உரியன, இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ என்றான் - 1967

இப்பார் குலாம் செல்வ! நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன் யான், இன்னலின் இருக்கை நோக்கித் தீர்கிலேன், ஆனது, ஐய! செய்குவென் அடிமை என்றான் - 1969

'தீராக் காதலன் ஆகும்' என்று கருணையின் மலர்ந்த கண்ணன் யாதினும் இனிய நண்பா! இருத்தி ஈண்டு எம்மொடு' என்றான் - 1970

'என் உயிர் அனையாய் நீ, இளவல் உன் இளையான்; இந் நன்னுதலவள் நின்கேள்; நளிர் கடல் நிலம் எல்லாம் உன்னுடையது; நான் உன் தொழில் உரிமையின் உள்ளேன் - 1995

ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ? வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ? தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ? ஏழமை வேடன் இறந்திலன்' என்று எனை ஏசாரோ - 2317

மற்று, இனி உரைப்பது என்னே? வானிடை, மண்ணில் நின்னைச் செற்றவர் என்னைச் செற்றார்; தீயரே எனினும், உன்னோடு உற்றவர் எனக்கும் உற்றார்; உன் கிளை எனது; என் காதல் சுற்றம், உன் சுற்றம்; நீ என் இன் உயிர்த் துணைவன் என்றான் - 3812

நன்றி கொன்று, அரு நட்பினை நார் அறுத்து, ஒன்றும் மெய்ம்மை சிதைத்து, உரை பொய்த்துளார்க் கொன்று நீக்குதல் குற்றத்தில் தங்குமோ - 4271

ஆடின மயில்கள்; பேசாது அடங்கின குயில்கள் அன்பர் கேடுறத் தளர்ந்தார் போன்றும், திரு உறக் கிளர்ந்தார் போன்றும் - 4173

வஞ்சனை அரக்கனை நெருக்கி, நெடு வாலால் அஞ்சினுடன் அஞ்சு தலை தோள் உற அசைத்தே, வெஞ் சிறையில் வைத்தும் இலென்; வென்றும் இலென்; என்றால், தஞ்சம் ஒருவர்க்கு ஒருவர் என்றல் தகும் அன்றோ - 5431

ஒன்றிய உணர்வே ஆய ஓர் உயிர்த் துணைவ உன்னை இன்றியான் உளனாய் நின்று, ஒன்று இயற்றுவது இயைவது அன்றால் - 6930

எழலி வண்ணன், மன்னுயிர் அனையகாதல் துணைவனை, வரவு காணான் உன்னிய தருமம் எல்லாம் உன்னொடு முடிந்த என்னா தன் உணர்வு அழிந்து, சிந்தை அலமந்து தளர்ந்து சாய்ந்தான் - 6920

அனுமனை வாலி சேயை சாம்பனை அருக்கன் தந்த கனைகழல் காலினானை கருணை அம் கடலும் நோக்கி நினைவதற்கு அரிது நும்மைப் பிரிக என்றல்; நீவிர் வைப்பும் எனது; அது காவற்கு இன்று என் ஏவலின் ஏகும்' என்றான் - 10363

தீநட்பு

தீயவர்ச் சேர்தல் செய்தார் தூயவர் அல்லர், சொல்லின், தொல் நெறி தொடர்ந்தோர் - 3370

சிற்றினத்தவரொடும் செறிதல் சீரிதோ - 6435

நடுவுநிலைமை

இருமை நோக்கி நின்று, யாவர்க்கும் ஒக்கின்ற அருமை ஆற்றல் அன்றோ அறம் காக்கின்ற பெருமை என்பது - 4027

நிலையாமை

நின்றும் சென்றும், வாழ்வன யாவும் நிலையாவால்; பொன்றும் என்னும் மெய்ம்மை - 3254

இறத்தலும் பிறத்தலும் இயற்கை என்பதை மறத்தியோ, மறைகளின் வரம்பு கண்ட நீ - 2444

நில்லா உலகின் நிலை நேர்மையினால் வல்லாரும் உணர்ந்திலர் - 3289

எவ்வம் ஓங்கிய இறப்பொடு பிறப்பு இவை என்ன, கவ்வு மீனொடு முழுகின, எழுவன, கரண்டம் - 3724

விண்ணு நீர் மொக்குளின் விளியும் யாக்கையை எண்ணி, நீ அழுங்குதல் இழுதைப் பாலதால்; கண்ணின் நீர் உகுத்தலின் கண்டது இல்லை; போய் மண்ணு நீர் உகுத்தி, நீ மலர்க்கையால் என்றான் - 2453

வரம்பு இல தோற்றும் மாக்கள் இறக்குமாறு இது என்பான்போல்; முன்னை நாள் இறந்தான், பின்நாள், பிறக்குமாறு இது என்பான்போல் பிறந்தனன் பிறவா வெய்யோன் - 1976

பகை

அருப்பம் என்று பகையையும் ஆர் அழல் நெருப்பையும் இகழ்ந்தால் அது நீதியோ - 7108

அறிஞரே ஆயினும், அரிய தெவ்வரைச் செறிஞரே ஆவரேல், கெடுதல் திண்ணமாம் - 6434

பழி

வேத நூல் வரன்முறை விதிக்கும் ஐம் பெரும் பாதகம் - 3657

வேறு ஒரு குலத்தோன் தேவியை நயந்து, சிறை வைத்த செயல் நன்றோ? பாவியர் உறும் பழி இதின் பழியும் உண்டோ - 6119

மாதை ஒறுத்தல் வசைத்திறம் - 8871

பால்முகம் உற்ற பெரும்பழி அன்றோ மால்முகம் உற்று ஒருமாதை வதைத்தல் - 8872

மிகைப் புலம் தருமமே வேட்ட போது, அவர் தொகைக் குலம் துறந்து போய்ச் சார்தல் அன்றியே, நகைப் புலம் பொதுவுற நடந்து, நாயக! பகைப் புலம் சார்தலோ? பழியின் நீங்குமோ? - 6426

பிறவி

குயிற்றிய அண்டம் குஞ்சை இட்டிலா முட்டைக் கூட்டில் பயிற்றிய பருவம் ஒத்த காலத்துள், அமுது பல்கும் எயிற்று வன்பகு வாயுள் புக்கு இருக்குந, இருக்கை எய்தி வயிற்றின் வந்து, அந்நாள், இந்நாள் வாழும் மன்னுயிர்கள் மன்னோ - 6323

என்பு பெறாத இழி பிறவி - 6357

மாசு உறு பிறவி போல வருவது போவது ஆகி - 488

மெய் உற உணர்வு செல்லா அறிவினை வினையின் ஊக்கும் பொய் உறு பிறவி போல - 3543

பிறவி என்னும் இவ் இருஞ் சிறை கடத்தலின் இனியது யாவதோ - 1334

தன்னைத் தான் உணரத் தீரும், தகை அறு பிறவி - 4360

துறுத்தலும் நல் அறத் துறையும் அல்லது புறத்து ஒரு துணை இலை, பொருந்தும் மன்னுயிர்க்கு - 2444

முறையும் முடிவும் இலை, மொய் உயிர் - 3291

பித்த மயக்கு ஆம் சுறவு எரியும் பிறவிப் பெரிய கடல் கடக்க, உய்த்து மீண்ட நாவாயில், தாமும் போவார் ஒக்கின்றார் - 1911

தோன்றலும், இறத்தல்தானும், துகள் அறத் துணிந்து நோக்கின், மூன்று உலகத்தி னோர்க்கும், மூலத்தே முடிந்த அன்றோ - 4088

இறத்தலும் பிறத்தல்தானும் என்பன இரண்டும், யாண்டும் திறத்துளி நோக்கின், செய்த வினை தரத் தெரிந்த அன்றே - 4129

எக் குலத்து யாவர்க்கும், வினையினால் வரும், மேன்மையும் கீழ்மையும் - 4057

வினைஎனும் சிறை துறந்து உயர் பதம் விரவினார் - 3798

யோனிகள் - 10109

விரிஞ்சுறப் பற்றிய பிறவி வெந் துயர்ப் பெருஞ் சிறை வீடு பெற்ற பெற்றியார் - 2637

புண்ணிய நறு நெய்யில் பொரு இல் காலம் ஆம் திண்ணிய திரியினில், விதி என் தீயினில் எண்ணிய விளக்கு அவை இரண்டும் எஞ்சினால், அண்ணலே! அவிவதற்கு, ஐயம் யாவதோ? - 2449

ஆய்வுறு பெருங்கடல் அகத்துள் ஏயவன் பாய்திரை வருதொறும் பரிதற் பாலனோ? தீவினைப் பிறவி வெஞ் சிறையில் பட்ட யாம், நோய், உறு துயர் என நுடங்கல் நோன்மையோ - 3627

புகழ்

பூணினும் புகழே அமையும் என்று இனைய பொற்பில் நின்று - 105

யாரொடும் பகை கொள்ளலன் என்றபின் போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங்காது - 1419

ஞாலம் தனில் என்றும் உள்ளார் எல்லாம் ஓத உவக்கும் புகழ்கொள்ளாய்; எள்ளா நிற்கும் வன் பழி கொண்டு என் பயன் என்றான் - 1520

பிறந்து இறந்து போய்ப் பெறுவதும் இழப்பதும் புகழே - 1472

பெண் / பெண்மை

பெருந் தடங் கண் பிறை நுதலார்க்கு எலாம், பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால், வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும், விருந்தும், அன்றி, விளைவன யாவையே - 67

நாணுடை நங்கை நலம் கிளர் செங்கேழ்ப் பாணி, இவன் படர் செங்கை படாதேல் வாள் நுதல் மங்கையும் வாழ்வு இலள் - 693

தங்கள் நாயகரின் தெய்வம்தான் பிறிது இலை என்று எண்ணும் மங்கைமார் சிந்தை போலத் தூயது - 408

தள்ளா நிலை சால் மெய்ம்மை தழுவா வழுவா வகை நின்று, எள்ளா நிலை கூர் பெருமைக்கு இழிவுஆம் கணவன் குறையக் குறைவாள் - 1657

கணவன் புகழுக்கு அழிவாள் - 1658

என்னை நீங்கி இடர்க் கடல் வைகுறும் மன்னர் மன்னனை வற்புறுத்தாது, உடன் துன்னு கானம் தொடரத் துணிவதோ? அன்னையே! அறம் பார்க்கிலை ஆம் என்றான் - 1624

பண்டு வரும் குறி பகர்ந்து, பாசறையின் பொருள் வயினின், பிரிந்து போன வண்டு தொடர் நறுந் தெரியல் உயிர் அனைய கொழுநர் வர மணித் தேரோடும் கண்டு மனம் களி சிறப்ப, ஒளி சிறந்து, மெலிவு அகலும் கற்பினார் போல், புண்டரிகம் முகம் மலர, அகம் மலர்ந்து பொலிந்தன பூம் பொய்கை எல்லாம் - 631

ஒன்றா நின்ற ஆர் உயிரோடும் உயர் கேள்வர் பொன்றா முன்னம் பொன்றினர் - 1531

இழையும் ஆரமும் இடையும் மின்னிட குழையும் மாமலர்க்கொம்பு அனார்கள் தாம் தழையில் முண்டகம் தழுவு கானிடை முழையில் மஞ்ஞைபோல் எரியில் மூழ்கினார் - 2238

விலங்கு எழில் தோளினாய், வினையினேனும், இவ் இலங்கு வில் கரத்திலும், இருக்கவே, அவள் கலன் கழித்தனள்; இது கற்பு மேவிய பொலன் குழைத் தெரிவையர் புரிந்துளோர்கள் யார் - 3920

மங்கலம் முதலவாய மரபினின் கலப்பை யாவும் அங்கு அவர் கொணர்ந்து, பெண்மைக்கு அரசியைத் தொழுது சூழ - 10128

ஈண்டு நான் இருந்து, இன் உயிர் மாயினும், மீண்டு வந்து பிறந்து தன் மேனியைத் தீண்டலாவது ஓர் தீவினை தீர் வரம் வேண்டினாள், தொழுது என்று விளம்புவாய் - 5379

என்றும் இனி மணமும் இலை என்று இருந்தோம், இவன் ஏற்றின் நன்று; மலர்க் குழல் சீதை நலம் பழுது ஆகாது - 689

கற்பு அழியாமை என் கடமை - 3450

காவல் திண் கற்பு அமைந்தார் தம் பெருமை தாம் கழறார் - 2858

வெள்ளம் சிலம்பு பாற்கடலில் விரும்பும் துயிலை வெறுத்து அளியும் கள்ளும் சிலம்பும் பூங் கோதைக் கற்பின் கடலில் படிவாற்கு - 3568

தையல்தன் கற்பும், தன் தகவும் தம்பியும் மை அறு கருணையும், உணர்வும், வாய்மையும் செய்ய தன் வில்லுமே, சேம மாகக் கொண்டு, ஐயனும் போயினான், அல்லின் நாப்பணே - 1886

ஆயிடை, அணங்கின் கற்பும் ஐய! நின் அருளும், செய்ய தூய நல் அறனும் என்று, இங்கு இனையன தொடர்ந்து காப்ப, போயினன் - 6044

சொல் பிரியாப் பழி சுமந்து தூங்குவேன்; நல் பிறப்பு உடைமையும் நாணும் நன்றுஅரோ! கற்புடை மடந்தையர், கதையுளோர்கள் தாம் இல் பிரிந்து உய்ந்தவர் யாவர் யான் அலால் - 5240

வெற்றி நாணுடை வில்லியர் வில் தொழில் முற்ற, நாண்இல் அரக்கியர், மூக்கொடும் அற்ற நாணினர் ஆயின போது அன்றி, பெற்ற நாணமும் பெற்றியது ஆகுமோ - 5360

பொன் பிறங்கல் இலங்கை, பொருந்தலர் என்பு மால் வரை ஆகிலதே எனின், இற் பிறப்பும், ஒழுக்கும், இழுக்கம் இல் கற்பும், யான் பிறர்க்கு எங்ஙனம் காட்டுகேன் - 5361

வருந்தல் இல் மானம், மா அனையர் மாட்சியர் பெருந் தவம் மடந்தையர் - 5246

இம் மனையின் மாட்சியை வளர்த்த எம்மோயினை - 10062

சிறப்பு

குலத்தில் வந்து, இல்லின் மாண்புடை நங்கையர் மனத் தவம் நவிலற் பாலதோ - 5140

உலகுடை நாயகன் தன் துணைப் பெருந்தேவி தவத்தொழில் - 5371

ஒருவன் இல் உறை தவத்தி - 6121

அறம் திறம்பல் அருங்கடி மங்கையர் திறம் திறம்பல் - 4042

தாம் உறு காமத் தன்மை தாங்களே உரைப்பது என்பது ஆம் எனல் ஆவது அன்றால், அருங் குல மகளிர்க்கு அம்மா - 2776

பெண்கனி (சீதை) - 511

எண் இல கோடி பொன், எல்லை இல கோடி வண்ண அருங் கலம், மங்கையர் வெள்ளம், கண் அகல் நாடு, உயர் காசொடு தூசும் பெண்ணின் அணங்கு அனையாள் பெறுக! என்றார் - 1256

கோது அறு தவத்துத் தம் குலத்துளோர் தொழும் ஆதி அம் சோதியை அடிவணங்கினான் காது இயல், கயல் விழிக் கன்னிமார்களை, வேதியர்க்கு அருமறை விதியின் நல்கியே - 1208

அருக்கியம் முதலிய கடன்கள் ஆற்றி, வேறு உரைக்குவது இலது என உவந்து தான் அருள் முருக்கு இதழ்ச் சாந்தை யாம் முகநலாள் தனை, இருக்கொடு விதிமுறை இனிதின் ஈந்தனன் - 233

பெண் எனப் பிழைத்தாய் அல்லை; யான் பிசைந்து உன்னை தின்ன எண்ணுவென், பின்னை என் உயிர் இழப்பன் என்றான் - 3383

பெண் கொலை செய்கை பெரும் பழி - 8873

ஆவி உண் என, வடிக் கணை தொடுக்கிலன்; உயிர்க்கே துண்ணெனும் வினைத்தொழில் தொடங்கியுளளேனும் பெண் என மனத்திடை பெருந்தகை நினைந்தான் - 374

பெண் என உட்கும், பெரும் பழிக்கு நாணும் - 1509

பெண் கொடு வினை செயப் பெற்ற நாட்டினில் கண் கொடு பிறத்தலும் கடை என்றார் சிலர் - 1790

உரியது அன்று என ஓர்கின்றது உண்டு, அது என் பெரிய பேதைமைச் சில் மதிப் பெண்மையால் - 5356

பெண்மையால் உரைசெயப் பெறுதிரால் என உண்மையான் அனையவட்கு உணரக் கூறினான் - 3323

தெண் திரை உலகம் தன்னில், செறுநர் மாட்டு ஏவல் செய்து பெண்டிரின் வாழ்வர் அன்றே? இது அன்றோ தேவர் பெற்றி - 3525

உம் குலத் தலைவன், தன்னோடு ஒப்பு இலா உயர்ச்சியோனை வெங் கொலை அம்பின் கொன்றார்க்கு ஆள் தொழில் மேற்கொண்டீரேல் எங்கு உலப்புறும் நும் சீர்த்தி? நும்மொடும் இயைந்தது என்றால் மங்குலின் பொலிந்த ஞாலம் மாதுமை உடைத்து மாதோ - 5892

அறிதற்கு ஒவ்வா நல் நுதல் மகளிர் சிந்தை நல் நெறிப் பால அல்ல - 2775

பங்கயத்து ஒருவனும், விடையின் பாகனும், சங்கு கைத் தாங்கிய தரும மூர்த்தியும், அங்கையின் நெல்லிபோல் அனைத்தும் நோக்கினும் மங்கையர் மன நிலை உணர வல்லவரோ - [illegible]

மதுக் கொண்ட மாந்தர் மடவாரின் [illegible] ஓதை - [illegible]

புரவலன் தேவிதன்னைத் [illegible] வஞ்சித்து எய்துதல் [illegible] அறத்து உளது ஒக்கும் [illegible] அமர்த்தலை வென்று [illegible] மறத்துறை வளர்த்தி [illegible]

பொறையுடைமை

கோல் மேற்கொண்டும் குற்றம் அகற்றக் குறி கொண்டார் போல், மேல் உற்றது உண்டு எனின் நன்று ஆம் பொறை - 1519

சிறியவர் தீமை செய்தால், ஆறுவாய், நீ அலால், மற்று ஆர் உளர் - 4323

வினைசெயல்வகை

ஆகுநர் யாரையும் துணைவர் ஆக்கி, பின் ஏகுறு நாளிடை எய்தி, எண்ணுவ சேகு அறப் பல் முறை தெருட்டி, செய்தபின் வாகை என்று ஒரு பொருள் வழுவற் பாலதோ - 4247

திருந்தினார் வயின் செய்வன தேயுமோ - 1952

நன்மையின் தொடர்ந்தார்க்கு உண்டோ கேடு - 6324

நன்றி ஈது என்று கொண்டால், நயத்தினை நயந்து, வேறு வென்றியே ஆக, மற்றுத் தோற்று உயிர் விடுதல் ஆக, ஒன்றிலே நிற்றல் போலாம், உத்தமர்க்கு உரியது - 7306

ஒன்று ஊக்கி, ஒன்று இழைத்தல் உணர்வு, உடைமைக்கு உரித்து அன்றால்; பின் தூக்கின், இது சாலப் பிழை பயக்கும் - 5055

பல் வினை தீயன பரந்த போது ஒரு நல்வினை ஒத்தது நடந்த தானையே - 7583

தீவினை

கள்ளவினை - 3048

புகையினொடு பங்கம் உற்றனைய வினை - 3749

சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல் - 4216

ஆதி அந்தங்கள் இதனின் மற்று இல்லை பேர் உலகின்; வேதம் எங்கனம், அங்கனம், அவை சொன்ன விதியால், கோது இல் நல்வினை செய்தவர் உயர்குவர்; குறித்துத் தீது செய்தவர் தாழ்குவர்; இது மெய்ம்மை தெரியின் - 6241

எய் வினை இறுதி இல் செல்வம் எய்தினான், ஆய்வினை மனத்து இலான், அறிஞர் சொல் கொளான், வீவினை நினைக்கிலான், ஒருவன், மெய் இலான், தீவினை என, இருள் செறிந்தது எங்குமே - 4877

பிற

நிறம் திறம்பினும், நியாயமே திறம்பினும் நெறியின் திறம் திறம்பினும், செய் தவம் திறம்பினும் செயிர் தீர் மறம் திறம்பினும், வரன் முறை திறம்புதல் வழக்கோ - 1472

பெற்ற தாய் தந்தையோடு தேசிகற் பிழைத்து, சூழ்ந்த சுற்றமும் கெடுத்து ளோர் - 10118

நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும், பொறையின் நீங்கிய தவமும் பொங்கு அருள் துறையின் நீங்கிய அறமும், தொல்லையோர் முறையின் நீங்கிய அரசின் முந்துமோ - 2474

பொன் நோக்கியர்தம் புலன் நோக்கிய புன்கணோரும், இன் நோக்கியர் இல் வழி எய்திய நல்விருந்தும் தன் நோக்கிய நெஞ்சுடை யோகியர் தம்மைச் சார்ந்த மென் நோக்கியர் நோக்கமும் ஆம் என மீண்டது அவ்வேல் - 3435

நான்காம் பகுதி

இயற்கை

விண்வெளி

கம்பரின் விண்வெளி அறிவை உணர்ந்து கொள்ள இப்பகுதி உதவும். இராம இலக்குவர் பரத சத்துருக்கனர் பிறப்பு நேரம் குறித்திருப்பது சுட்டத்தக்கது.

அண்டம்

அண்டம் - 2630

அரும் புறத்து அண்டம் - 6638

அயன் செய் அண்டம் - 3933

கறுத்தது அண்டம் - 6517

கோவை நின்ற பேர் அண்டமும் - 7241

தாரை உண்ட பேர் அண்டங்கள் - 6622

பல் ஆயிர கோடி அண்டம் - 6346

விசும்பின் மேக்கு உயர் எட்டஅரு நெடுமுகடு - 5326

அண்டப் பொகுட்டு - 5917

அண்டப் பித்திகை - 3953

பித்தி - 7057

அண்ட கோளம் - 3516

அயனுடை அண்டம் - 3912

ஏழேழ் நிலை வகுத்த அண்டப் பெருங்கோயில் - 3686

ஒற்றை அண்டம் - 6190

ஈன்றானை ஈன்ற சுவணத் தனி அண்டம் ஒன்றுமோ,
வானம்? அன்றி உலகம் பதினால் உள்ள
வென்றிமா கடலும் ஏழ் ஏழ் மலை உள்ள
என்னவேயாய் நின்றது ஓர் அண்டம் பகிரண்டம் - 6318

குயிற்றிய அண்டம் குஞ்சை இட்டிலா
முட்டைக் கூட்டில் - 6323

மண்டலம்

இந்து மண்டிலம் - 9764

திங்கள் மண்டலம் - 4082

இரவி மண்டிலம் - 9764

சண்ட வெங் கதிர ஆகித் தழங்கு இருள்
விழுங்கும் தா இல் மண்டலம் - 5934

மூரி மண்டலம் - 4113

கோள் மதி மண்டலம் - 7833

வான்

அருக்கன் உயர் வான் - 4826

பேர் வான் - 4796

பேர் உலகம் மூடும் நீள்வான் - 4819

இருண்டது நீல வானம் - 4151

சவிபடு தகைசால் வானம் - 5016

அந்தரம் - 6911

உம்பர் - 4161

சேண் எலாம் விரியும் கற்றைச் சேயொளி - 5480

மாகம் - 6780

நீண்ட மாகம் - 3865

மேக்கு - 4830

நீள்வாய் விசும்பும் - 4806

விசும்பு எனும் பதம் - 5335

சேண் நாடு மீஉயர் விசும்பையும் கடக்க
வீங்கினான் - 5629

விண்ணகம் - 4150

வியோம கூடம் - 9368

சிறப்பு

ஆர்த்து எழு துகள் விசும்பு அடைத்தலானும்,
மின் கூர்த்து எழு வாள் எனப் பிறழும்
கொட்பினும், தார்ப் பெரும் பணையின் விண்
தழங்கு காரினும், போர்ப் பெருங் களம் எனப்
பொலிந்தது உம்பரே - 4161

கோள்கள்

கோள் (அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி,
இராகு, கேது, சூரியன், சந்திரன்) - 596

விசைகொடு விசாகத்தை நெருக்கி ஏறினான்
குசன் (அங்காரகன்) (தீயநிமித்தம்) - 9784

செவ்வாயை நிகர்த்தன செக்கரை ஒத்தமேகம்- 3987

காலக் கோள் அனாள் (கூனி) - 1449

விண்மீன்

அந்தர நெடு வான் மீன் அவண் அலர்குவது என்ன- 1185

கொள்ளையின் சுற்று மீன்கள் - 796

கோண் இலா வான மீன்கள் - 1124

துன்னி அல் கலந்து இலங்கு பல் மீன்
அரும்பிய வானம் - 484

மீ நெருங்கிய வானகம் - 4308

விதியது வகையால் வான மீன் இனம் - 1121

புள்ளிக் குறி இட்டென ஒள் மீன் பூத்த வானம்
பொலி கங்குல் நள்ளில் - 551

எவ்வாயும் எழுந்த கொழுஞ்சுடர் மீன்கள் - 3987

இந்து வெண்குடை நீழலில், தாரகை இனம் பூண்டு- 5847

மீனுடை எயிற்றுக் கங்குல் கனகனை வெகுண்டு - 890

வயின் வயின் வயங்கித் தோன்றும் மீன் எலாம்
சூழ நின்ற விரி கதிர்த் திங்கள் ஒத்தான் - 942

மை வான் நிறத்து, மீன் எயிற்று வாடை உயிர்ப்பின்
வளர் செக்கர்ப் பைவாய் அந்திப்பட அரவே - 545

விரிந்த திவலை பொதிந்த மணி விசும்பின் மீனின் மேல் விளங்க - 549

உடுக்குலம் - 9765

தாவு தண்மதி தன்னொடும் **தாரகை** ஓவு வானம் - 959

வானத் தாரகை - 845

தாரா கணம் - 597

வான நாள் - 4851

நீடு நாள்களும் - 3870

அரவு (ஆயில்யம்) - 289

பங்குனி உத்தரம் ஆன பகற்போது - 1258

பூசம் - 283

மகம் - 285

விசாகம் - 9784

தூமகேது புவிக்கு . . . கடுங்கேடு - 1427

ராசி

அலவன் வாழ்வுற - 284

தூய கற் கடகமும் - 280

மடங்கலும் - 285

மகரமீன் - 3887

மீனம் - 283

இணைவு (கதைத் தலைவர் பிறப்பு)

வேய் புனர்பூசமும் . . . தூய கற்கடகமும் எழுந்து துள்ளவே (இராமன்) - 280

பூசமும் மீனமும் பொலிய (பரதன்) - 283

அனைபுகும் அரவினோடு அலவன் வாழ்வுற (இலக்குவன்) - 284

மடங்கலும் மகமுமே வாழ்வின் ஓங்கிட (சத்துருக்கன்) - 285

திதி

பஞ்சமிப் பெயர் படைத்துள திதி - 10090

பயிரியல்

வித்து முதலாக, வளர் நிலையில் பெருமரமாதல் ஈறாக இங்கு வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. மரங்களும் மலர்களும் மிகச் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளன. மாற்றுப்பெயர் உடையனவற்றிற்கு அவையும் அவற்றின் கீழ் சுட்டப்பட்டுள்ளன. மலர்களுள் தாமரை இன்றியமையா இடம் கொண்டுள்ளது. இராமனும் சீதையும் இதற்குக் காரணமாகின்றனர். எனவே அது தனித்துக் காட்டப்பட்டுள்ளது. ஊமத்தங்காய் உண்டால் மயக்கம் ஏற்படும் போன்ற செய்திகளும் அறிய வருகின்றன.

பொது

வித்து

வித்து - 5280

விளைவிற்கு எல்லாம் நல் வித்து - 8211

முளை

அங்குரம் - 2098

வித்து முளைத்த அங்குரம் - 5280

தளிர்

அரித்தளிர் - 560

சந்த மென் தளிர் - 3157

நறுந் தளிர் - 879

கொழுந்து - 237

ஓங்கி ஓங்கி வளர்ந்து உயர் கீர்த்தியின் பூங் கொழுந்து - 1112

நறுந் தாள் இளங் கொழுந்து - 6352

தெள்ளு தேம் குழை - 767

நளிர் - 502

பல்லவங்கள் - 529

ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் - 2762

சிறப்பு

ஏலக் கோடு ஈன்ற பிண்டி இளந் தளிர் - 4492

பிண்டி அம் தளிர் - 866

மாந்தளிர் - 854

தளிர்களோடு இனிய காயும் - 5444

குயிற்குலம் விழையும் தண் தளிர்ச்சூழலும் - 5456

கொழுந்தே அனையாள் - 3439

இலை

இலை - 20

வள்ளி புடை சுற்றி உயர் சிற்ற(றி)லை மரம் தோறுறும் - 4229

பச்சிலை - 10008

மரனும் இலை ஒடுங்கின - 3747

அடை - 6299

ஆலின் அடையோ - 3683

சாகம் - 4916

தோடு - 5471

சிறப்பு

ஆல் இலை - 550

சினை ஆலின் இலை - 6290

இளவரிக் கவட்டுஇலைஆர் - 7131

சந்தின் அடை - 4223

மிடை பாசடை (நெருங்கிய பசுமையான தாமரை இலை) - 2968
சில குழை - 7888
ஒரு கொய்யல் தழை - 920
வார் அளித் தழை - 3741
இலை முகப் படம் (பனையோலை) - 735
அடை கிடந்த பாலன் - 3683

பூக்கள்

பொது

பூ - 19
கொடிப் பூ - 3995
நாறு பூங் குழல் நங்கையர் - 774
பொன்னே சூழும் பூ - 509
மென் பூக் கைக் கொண்டு மோந்தாள் - 909
செருகும் மென் பூ - 1133
புது மென் பூ - 2012
விரிந்த பூ - 394
வெறி கொள் பூ - 2935
வேரி அம் பூ - 8458
அன்று அலர்ந்த பூ - 1703
பூப் பொதி அவிழ்ந்தன - 3340
குடைந்து வண்டு உறையும் மென் பூக் கொய்து நீராட - 892

அலர்

அலர் மழை - 4433
போதினின் நாற்றம் - 448
நாற்றம் மல்கு போது - 502
தாது கொண்ட போது - 3872
தேன் ஒழுகு போது - 3157
மீன் அனைய நறும் போது - 2688

மலர்

ஆய் மலர் - 9602
எள் குலா மலர் - 525
கள்ளுடை மலர்கள் - 4166
தே மலர் - 2123
உரம் கொள் தே மலர் - 3762
சிந்தும் சந்தத் தே மலர் - 866
தேன் படி மலர் - 5093
அணி இழை எனல் ஆகும் நகு மலர் - 912
நறுமலர்க் குப்பை - 3709
நாள் அறா நறுமலர் - 2009
மொய் உறு நறு மலர் முகிழ்த்தவாம் - 3073
மை அறு நறு மலர் மலர்ந்தவாம் - 526
நறை மலர் - 2087
உணங்கா நாள் மலர் தூய் - 2087
ஊற்று ஆர் நறை நாள் மலர் - 630
தான் நகு நாள்மலர் - 4101
நறை தோய் நாள்மலர் தூவ - 908
நீத்த நீர்ப் பொய்கையில் நிறைந்த நாள் மலர் - 1247
பூத்த நாள் மலர் - 4119
நிலாம் மலர் - 6518
நிறை மலர்க் குலம் - 2253
நிறை வாசப் பனி மலர் - 2108
மணம் கிளர் மலர் - 6726
மன்றல் அம் புது மலர் - 1187
நறு முழு மென் மலர் - 2013
மொய்ம் மலர் - 749
வாவி மாமலர் - 7194
விரிமலர்த் தென்றல் - 509
வெண்மலர் - 1405
வெள்ளச் சேகு அறு மலர் - 541
தாது உகு வீ - 5440
இணர் - 9529
தொத்துஉறு மலரும் - 560

பிற

பூக் கடல் - 1659
பூ மழை - 4753
பரந்த பூ மழை - 5461
பூவின் மாரி - 394
மலர்வெள்ளம் - 447
இன மலர்க் குலம் வாய் விரித்து இள வாச மாருதம் வீச - 3813
கந்த மா மலர்க் காடுகள் - 4825
மலரில் கணி கொள் நாளத்தில் - 1546
துறும் போதினில் தேன் துவைத்து உண்டு உழல் தும்பி ஈட்டம் - 4968

சிறப்பு

கற்றைப் பூங் குழல் - 901
பூ நிறக் கண்கள் - 5057
பூவின் மெல்லியல் - 6211
பூ இயல் நறவம் - 5835
நாள்மலர் புனைவார் - 4068
காலையின் நறு மலர் ஒன்றக் கட்டிய மாலையின் மலர் - 1558
சேகரப் போது (தலை உச்சியில் சூடற்குரிய பூ) - 6265
துறுமலர் வேயும் செய்கை - 1133
- 928

நறு மலர்த்தொடை நாயகன் - 570
தான மா மணிக் கற்பகம் தாங்கிய ஊனம் இல் மலர் ஆடை - 2383
பூ அணை - 861
பூம் பள்ளி - 996
கமழ் சேக்கை - 561
மடலுடை நறு மென் சேக்கை - 4081
விரை செய் பூஞ் சேக்கை - 988
நங்கை தன் பாதமும் கரங்களும் அனைய பல்லவம் தாதொடும் குழையொடும் அடுத்த, தண் பனிச் சீத நுண் துளி, மலர் அமளி - 525
தூய செந் தேன் பொழிகின்ற பூவின் வேய்ந்த பந்தரை - 976
வயங்கு பூம் பந்தரும் - 966
வானோர் வாழ்த்தி, 'இன்று எமது வினை முடிந்தது' எனச் சொரிந்தார் மலர் மாரி இடைவிடாமல் - 235
அறம் கொள் நாள்மலர்க் கோயில்கள் இதழ்க் கதவு அடைப்ப - 454
ஏடு - 6129
பொன்பால் பொருவும் விரை அல்லி புல்லிப் பொலிந்த பொலந்தாது - 3736
மந்தாரம் உந்து மகரந்தம் - 4814

மலர் வகை

அசோக மலர்

செறி இதழ் வன சோகம் - 2006

அடப்பமலர்

அடும்பு ஆக்கிய தொடைச் செஞ்சடை முதலோன் (சிவன்) - 9076

அல்லி

எரிவீழ் அல்லி - 8361

ஆம்பல் - 497
தாரை வன் தலைத் தண் இள ஆம்பல் - 4636
அரத்த ஆம்பல்கள் - 1782
ஏய் தடத்து .... ஆம்பல் - 4605
மீன் என விளங்கிய வெள்ளி ஆம்பல் வீ - 2085

சேதாம்பல் - 3183

குமுதம் - 74
குமுதப் பூ - 784
புல்லுற மலர்ந்த (கண்) குமுதப் பூ - 5832
பைங் குமுதப் போதும் - 4495
வண் குமுதங்கள் - 1547

விரைக் குமுத வாய் - 5709

நவ்வி நோக்கியர் இதழ் நிகர் குமுதம் - 3724

அனிச்சம்

அனிச்சப் போதின் - 1130

இலவங்கம்

கோடு உலாம் நாகப் போதோடு இலவங்க மலரும் - 858

இலவம்

இலவினும் - 5968
துவள்வு இல் இலவம் - 4495
இலவு - 2070
இலவு இதழ் - 1188
இலவச் செவ்வாய் - 217
வெள் எயிற்று இலவம் - 796

ஊமத்தம்

நல் மத்தை - 5311

எருக்கு

வெள் எருக்கம் - 9940
தேவதேவன் செறிசடைக் கற்றையுள் கோவை மாலை எருக்கொடு கொன்றையின் - 1946

எள்

எள் ஒத்த கோல மூக்கின் ஏந்திழை - 979

கரந்தை

கரந்தை சூடி - 9196

கருவிளை

கருவிளை மலர் - 9996
விளையின் மென் பூ - 4179

காந்தள்

காந்தளின் முகை - 2007
காந்தள் அம் போது - 854
செறி கோலக் காந்தளின் மலர் - 2003
நல் நெடுங் காந்தள் போது - 4178
தேன் உக மலர்ந்த சந்தச் சேயிதழ்க் காந்தட் செம்பூ - 4174
கை என மலர வேண்டி அரும்பிய காந்தள் - 865
இணைந்த காந்தளின் தாங்கிய செங் கை தம் தலையின் மேல் உளார் - 1797

தோன்றி - 4179

கோடல்கள் (வெண் காந்தள்) - 4173
தாளுடைக் கோடல் - 4175
கோடல் உரிபோல் ஆராயின் ஏதும் இலையாதி - 8262

காயாம்பூ

காயாம் பூவையும் பொருவான் - 4198

கடிகொள் காயாவும் - 1050
காயா நறும் போதோ - 544

காசை

பூவை நிறவ - 2270
எள் இல் பூவையும் - 9463

குசும்பை - 569

குசும்பையின் நறுமலர் - 7814

குமிழ்

குமிழ் - 4345
தொள்ளைக் குமிழும் - 4498

குரவம்

குரா - 5418
குரா அரும்பு - 4206

குருந்தம்

குருந்தம் நின்று அரும்பின - 2043

குவளை

குவளையின் எழில் - 1564
கண்போல் மணிக் குவளாய் - 3739
கருங் குவளையும் - 4198
களை கட்டவர் தளை விட்டு எறி குவளைத் தொகை - 1930
கொள்ளையின் அலர் கருங் குவளை நாள்மலர் கள் உகுவன - 3186
கோது அறு குவளை - 4942
தேம் குவளைக் குலம் - 4634
படர் பூங் குவளை நாள் மலரோ - 544
பழுவ நாள் குவளை - 2734
பனி மலர்க் குவளை - 845
மணி நெடுங் குவளை - 8833
மை அவாம் குவளை எல்லாம், மாதர் கண்மலர்கள் பூத்த - 931
வாசக் குவளை நாள்மலரும் - 3732
வாசம் உண்டுஉறை குவளை - 2733
விரிந்த குவளை - 373

உற்பலம் - 4195

கட்ட காவி - 459
மாமலரின் வாசக் காவி விரி நாள் மலர் - 1849
நும் காவி நாள்மலர் - 4299
குவலயம் சிறுமைகூர - 4173

செங்கழுநீர் - 66
நாறு வளர்க்குறும் சேறுநாறுவ (செங்கழுநீர்) பூக்கள் - 4643
கழுநீர் கொள்ளை - 33
ஊன்றிய கழுநீர் நாளத் தாளினால் - 980

நீலம் - 923
நிகழும் கள் நெடு நீலம் - 7023
நீர் உள எனின் உள, மீனும் நீலமும் - 1757
நல் நீலக் கண் - 920
நீலம் செங்கிடை - 497
நீலோற்பலமோ - 544
நெய்தலும் - 4198
செய்களின் மடுவில், நல் நீர்ச் சிறைகளில் நிறையப் பூத்த நெய்தல் - 784

பானல் - 6389
அணி பானல் - 4625
பானல் அம் கண்கள் - 862
விள்ளும் வீயுடைப் பானலும் - 569

கூதாளி

சிங்கல் இல் சிறு கூதாளி - 4486
மலர்ந்த கூதாளம் ஒத்த - 4180

கொன்றை

நிறை தேன் பொங்கு கொன்றை - 456
ஏடு அவிழ் கொன்றைப் பூ - 645
கொன்றைகள் சொரி போதின் குப்பைகள் - 2001
குழைதொறும் கனகம் தூங்கும் கற்பகம் நிகர்த்த கொன்றை - 4181

கடுக்கை (சரக்கொன்றை) - 24
நறை விரி கடுக்கை மென்பூ - 4178

கோங்கு

கோங்கு அரும்பு - 859
அம் மலர் விரி கோங்கின் முற்றுறு முகை - 2010
கோங்கு - 2587

செங்கிடை

சேதாம்பலுக்கு அயலே கிடந்த செங்கிடை மலர் - 3737
சேடு உறு நறுமுகை விரிந்த செங்கிடை - 4261

செருந்திமலர்

செருந்தியின் மலர் - 2006

தாழம்பூ

தாழையின் சோறு நாறுவ - 4643
கருந்தகைய தன்சினையை கைதை மடல் காதல் தரும்தகைய போது கிளையில் புடை தயங்க - 4225

நந்தியாவட்டை

நந்தியின் திரட் பூ - 4486

நரந்தம்

விரிந்தன நரந்தம் முதல் வெண்மலர் - 4997

நாகப் போது / வெட்சிப்பூ

கோடு உலாம் நாகப் போதோடு - 858

புதிய தேன் உதவும் நாகத் தண் மலர் - 845

நொச்சி

நொச்சிப் பூ - 6957

பித்திகை

வாசம் திணியும் இதழ்ப்பித்திகை கத்திகை - 887

பிடவம்

ஆய்ச்சியர் முழவில் பிழிந்த பால் வழி நுரையினைப் பொருவின பிடவம் - 4194

புன்னை

பொன் விரி புன்னைகள் - 64

பூளை

பூளை வீ - 339

வெண்பூம் பூளை - 10317

மாருதம் அறைந்த பூளை - 7271

மகிழம்பூ

இலஞ்சியம் - 5272

மந்தாரம்

மந்தாரம் கொண்டு - 914

மல்லிகை

மல்லிகை மலர் - 4892

மன்றல்வாய் மல்லிகை - 6524

மல்லிகைத் தென்றல் வந்து எதிர்ந்த போது - 3160

தணியும் மது மல்லிகைத் தாமம் - 887

எல்லியைக் காண்டலும் மலர்ந்த ஈட்டினால் மல்லிகைக் கானமும் வானமும் ஒத்ததே - 6519

முருக்க மலர்

முருக்க இதழ் மடந்தையர் - 220

முருக்கின் பூவை - 4493

கவிர் - 5016

கேட்கும் மென் மழலைச் சொல் ஓர் கிஞ்சுகம் கிடந்த வாயாள் - 974

முல்லை

முல்லை - 1832

மெல் இணர் முல்லை - 4206

தேம் தளவுகள் - 2007

வெண் தளவப் போது - 1702

மகளிர் முரல் மென் குறு முறுவல் ஒத்து அரும்பின, முல்லை - 4183

வாகை மலர்

வாகை நாள் மலர் - 9205

வேங்கை மலர்

வேங்கை நாறின - 4195

வேங்கையின் மலர் - 2053

பிற

சின்னப்பூ - 1133

நதியினும் குளத்தும் பூவா நளினங்கள் குவளையோடு மதி நுதல் வல்லி பூப்ப, நோக்கிய மழலைத் தும்பி அதிசயம் எய்தி, புக்கு வீழ்ந்தன; அலைக்கப் போகா - புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார் - 898

சரதநாள் மலர் யாவையும் குடைந்தன, தடவி ....தேன் கொண்டு தொகுப்ப தேனீ - 4185

தாமரை

தாமரை - 35

தாமரை மலர் - 4419

அளகவண்டு சூழ் நிறை நறுந்தாமரை - 4529

இகல் அங்கம் புல்லிக் கொண்ட தாமரை மென்பூ மலர் - 921

ஏடு அவிழ் நொய்து அலர்தாமரை - 1449

ஒண் தாமரை வாள் முகம் - 910

ஓங்கு செந் தாமரை - 3495

ஓர் வெண் தாமரையின் மலர் - 550

காமர் தாமரை நாள்மலர்க் கானம் - 770

கூனல் தாமரை - 6946

செஞ்செவே சேற்றில் தோன்றும் தாமரை - 1977

செய்ய தாமரைகள் - 931

சேக்கை ஆகி மலர்ந்த செந்தாமரைப் பூக்கள் - 558

சேயிதழ்த் தாமரை - 5266

தண்டு இருந்த பைந் தாமரை தாள் - 7024

தரங்க நீர் எழு தாமரை - 4445

தளம் கொள் தாமரை - 823

தாமரை கெழுமு செம்பூத் துளித்தன - 3538

தாமரைச் செழுந் தவிசு - 192

தாள் உயர் தாமரைத் தளங்கள் - 2747

தாள்தொறு மலர்ந்தன முதிர்ந்த தாமரை - 4261

நறவு நாறிய நாள்நறுந் தாமரை - 4987

தே மரு தாமரை - 2850

நீந்த அரும் புனலிடை நிவந்த தாமரை - 10036

பச்சிலைத் தாமரை பகல் கண்டால் என - 5275

புதுநறுந் தாமரை பூண்டு - 3882

பொதி அவிழ் தாமரைப் பூவை ஒப்பதோ - 2748

மருக் கொள் தாமரை - 6198
மலர்ந்தது ஒரு தாமரைப் போது - 550
மழை படப் பொதுளிய மருதத் தாமரை தழை - 4268
மென்தாமரைப் பூவும் - 757
வண்ண நறுந் தாமரை மலரும் - 3732
வண்ணப் பூ எலாம் மலர்ந்த பொய்கைத் தாமரை பொலிவது ஒத்தாள் - 943
வளத் தடந் தாமரை - 6379
வாவி விரி தாமரை - 1849
விரை செறி தாமரை - 534
விரைத் தடந் தாமரை - 1761

பிற

மற்றும் ஓர் அண்டமும், அயனும், வந்து எழ, பொன் தடந் தாமரை பூத்த போன்றதே - 1220
தாமரைக் காடு - 191
கொங்கின் பொலிந்த தாமரையின் குழு - 6061
தாமரைப் பெருவனம் - 8359
விரிந்த செந்தாமரைக்காடு - 10162
பிறங்கு தாமரை வனம் - 454
தாமரை வளையம் - 3171
தளை அவிழ்ந்த கொழுந் தடந் தாமரை வளையம் - 7022
வாசம் கலந்த மரை நாள நூலின் வகை - 8264
பூளை வீ புரை பனிப் புயற்குத் தேம்பிய தாள தாமரைமலர் - 526

அம்புயம் - 897
அம்போருகம் - 6299
அரவிந்தம் - 2790
அவ் அல்லி மலர் புல்லும் மங்கை இவள் ஆம் என வசிட்டன் மகிழ்வுற்றான் - 1148
கஞ்ச மா மலர் - 478
கஞ்சத்துக் களிக்கும் இன்தேன் கவர்ந்து உணும் வண்டு - 1135
தாழ் கஞ்சம் - 5425
நளிர் இரும் பனிக்குத் தேம்பாக் கஞ்சம் - 3765

கமலம் - 74
அல்லி அம் கமலம் - 5878
அனல்போல் விரிந்தது உயர் கமலம் - 3183
எல் ஒன்று கமலச் செங் கண் இராமன் - 3130
ஒளிர்தரு கமலம் - 301
கடி கமழ் கமலத்தின் சேந்துஒளி விரியும் - 1988
கமலப் பொதி - 75
கமலவாள் முக வடிவுடை மடந்தையர் - 254
கமலவாவி - 4624
களிப்பினை உணர்த்தும் செவ்விக் கமலங்கள் - 494
கறங்கு தண் புனல், கடி நெடுந் தாளுடைக் கமலம் - 454
சுற்றுறு கமலம் பூத்த தொடு கடல் திரையின் செல்ல - 806
செஞ் செவே கமலம் - 896
தண் நறுங் கமலங்காள் - 711
திருக் கிளர் கமலப் போது - 787
துறை எலாம் கமலம் - 891
நறுங் கமல மென் பூ - 4492
நெகிழ்ந்த செங் கமலப் போது - 784
பாசு அடை கமலம் - 729
புல்லிதழ் கமலத் தெய்வப்பூ - 4506
புலரிஅம் கமலம் - 589
வண்டு உறை கமலம் - 2733
விரை மென் கமலம் - 3733
விரை செய் கமலப் பெரும்போது - 554
விரை செறி கமல மென் பொகுட்டு - 184
கமலக் காடது - 4553

தம்மி மிடைந்து என ஆள் மிடைந்தன - 760

நளினம் - 146
நாரம் உண்டு அலர்ந்த செங் கேழ் நளினம் - 5279
பூவா நளினங்கள் - 898

பங்கயம் - 54
அரிமலர்ப் பங்கயம் - 3715
வண்ண வாசப் பங்கயம் - 4507
பாசடை பொய்கை பூத்த பங்கயம் - 6845
நீள் கந்தம் நாறு பங்கயத்து கானம் - 108
பங்கய ராசி (கூட்டம்) - 1556
பங்கயம் வால் நிலா உறக் குவிவ - 89
பள்ளி நீங்கிய பங்கயப் பழன நல் நாரை - 457

பதுமம் - 123
செம் பதும மலர் - 240

புண்டரீகம் - 631
புண்டரீகப் புது மலர் - 3638
நெறிப் புண்டரீகம் - 7009

மரை - 4078
சேற்று இள மரை மலர் சிறந்தவாம் - 2272
வட்ட நாள்மரை மலர் - 459
கயங்களில் மரை மலர்க்காடு பூத்தென - 3084

முளரி - 563
முளரிப் போது - 1771
செம் முளரி - 299

முள்ளரை முளரி - 49
முள் இலா முளரிச் செங்கேழ் மலர் - 4947
முளரி ஈட்டம் - 1843
முளரிக் கானம் - 4867
முண்ட(க)த் திரி தண்டு - 9501

சிறப்புச் சுட்டு

ஏந்து அலர்த் திருவொடும் - 191
பூ - 5272
அள்ளல் பூ - 620
பூ மலர் - 10353
போது - 38
உயர் போது - 1549
செய்ய போது - 483
அள்ளல் மலர் - 1259
கந்த மலர் - 318
எறி நீரில் எழு நாளக் கந்த மலரை - 3119
சிவப்புறு மலர் - 1342
சீதம் கொள் மலர் - 3530
செழுந் தனி மலர் - 6511
செறி மலர் - 4394
தணி மலர் - 143
தள மலர் - 3714
தாழ நின்ற ததை மலர் - 956
திரு மகட்கு இனிய மலர் - 94
தூய மா மலர் - 203
தே மலர் - 4046
தேன் அவாம் மலர் - 4191
நெடு மலர் - 4517
புனை மலர் - 3805
மாமலர் - 1355
மா வரும் நறு விரை மலர் - 2629
மை அறு மலர் - 480
வம்பு செறிந்த மலர் - 9183
வாச நாள் மலர் - 392
மலர்ப் பள்ளி - 45
மலர் மேல் கமைப் பெருஞ் செல்வக் கடவுளும் - 95
வைகறை மலரும் மாமலர் - 3190

சிறப்பு

பொன்பால் பொருவும் விரை அல்லி புல்லிப்
பொலிந்த பொலந்தாது தன்பால் தழுவும் குழல்
வண்டு, தமிழ்ப்பாட்டு இசைக்கும் தாமரையே! - 3736
அவ் வாசகம் உணரக் கேட்ட அப்பொழுது அலர்ந்த
செந்தாமரையினை வென்றது அம்மா! - 1602
காலன் மேனியின் கருகு இருள் கடிந்து, உலகு
அளிப்பான் நீல ஆர்கலி, தேரொடு நிறை
கதிர்க் கடவுள், மாலின் மா மணி உந்தியில்
அயனொடு மலர்ந்த மூல தாமரை முழுமலர்
முளைத்தென, முளைத்தான் - 455
எல்லி அம் குவளைக் கானத்து இடைஇடை
மலர்ந்து நின்ற அல்லி அம் கமலம் கண்டாள்
அண்ணல் தன் வடிவம் கண்டாள் - 2737
அழகுடைய மண்டலங்கள் மூன்றின் மேல்
என்றும் மலராத புண்டரிக மொட்டின்
பொகுட்டே புரை (திருமால் உறைவிடம்) - 3686
பொற்றொடி மகளிர் ஊரும் பொலன் கொள்
தார்ப் புரவி வெள்ளம், சுற்றுறு கமலம் பூத்த
தொடு கடல் திரையின் செல்ல, கொற்ற
வேல் மன்னர் செங் கைப் பங்கயக் குழாங்கள்
கூம்ப, மற்று ஒரு கதிரோன் என்ன, மணி
நெடுந் தேரில் போனான் (தயரதன்) - 806
தண் அம் தாமரையின் தனிப் பகைஞன் - 3179
சுடிகைப் பூங் கமலம் (மகளிர்) - 860
கமலக் கண்ணன் (இராமன்) - 207
தேமரு தெரியல் வீரன் கண் எனத் தெரிந்த
செய்ய தாமரை - 3544
அல்லித் தாமரைக் கண்ணனை அன்பு உறப் புல்லி - 2724
ஆயிரமாம் தவ்வாது இரவும் பொலி தாமரையின்
வெவ்வேறு அலர் கண்ணினன் - 2588
தேன் தரு கமலச் செவ் வாய் - 980
புரை தபு கமல நாட்டம் பொருக்கென விழித்து
நோக்கி - 1896
தாமரை மலர் முகம் - 226
விரைத் தாமரை வாள்முகம் விட்டு விளங்க வீரன்
சிரித்தான் (அனுமன்) - 4798
ஓர் நேரிழை தனிச் சுடர்த் தாமரை முகத்துச்
சாபமும் குனித்தது - 984
கரகமலம் - 190
"அஞ்சன்மின்" என்னா, அருள் சுரந்த நோக்கினால்,
கஞ்ச மலர் பழிக்கும் கை அபயம் காட்டினான் - 6350
பொன் தாமரை போல் கை - 1642
பங்கயச் செங் கால் - 102
அம் மலர்க் கமலத் தாளால் தீண்டினன்
(இலக்குவன்) - 4351
தாக்கணங்கு உறை தாமரைத் தாளினால்
நூக்கினான் அக்கதவினை நொய்தினின் - 4303
ததை மலர்த் தாமரை அன்னத் தாளினால்
உதைபடச் சிவப்பன உரவுத் தோள்களே - 141
ஆண்டு ஓர் வெற்பினை மேய வீரன் அமலத்
திண்கரமும் காலும் வதனமும் கண்ணும்
ஆன கமலத் திண் காடு பூத்த காள மா
மேகம் ஒத்தான் - 6839

மால் உண்ட நளினப் பள்ளி - 44
நாளம்கொள் நளினப் பள்ளி - 2735
தாளை ஏய் கமலத்தாள் (திருமகள்) - 932
பங்கயத்து இருந்த பொன் - 3142
பூந் தவிசு உகந்து உளோனும் (நான்முகன்) - 212
வேரி அம்கமலத் தோனும் - 1290
நாள் செய்த கமலத்து அண்ணல் - தாள் செய்ய கமலத்தானே முதலினர் - 3524
அளியின் பொங்கும் அங்கணன் ஏவும் அயில் வாளிக் களியில் பட்டார் வாள் முகம், மின்னும் கரை இல்லாப் புளினத் திட்டின் கண் அகன் வாரிக் கடல் பூத்த நளினக் காடே ஒப்பன - 9588

பாளை

பாளைகள் - 462
வென்று உயர் தெங்கு இளம் பாளை - 4636
கூந்தல் அம் கமுகின் பாளை - 854
வெள்ளிக் கும்பத்து இளங் கமுகின் பாளை - 551

வடு

வடி - 401
மா வகிர் - 1851

குரும்பை

குரும்பை (தென்னை) - 9229
குரும்பைக் குலம் - 3208
குரும்பை நீர் முரஞ்சும் சோலைக் குலிந்தம் - 4624
தெங்கின் குரும்பை - 1850

காய்

காய் - 4382
நெடுங் காய் - 6703
இளம் கழல் பசுங்காய் - 8201
கழல் திண் பசுங் காய் - 9408

கனி

கனி - 622
செங்கனி - 651
தீம்கனி - 4177
கொவ்வைப் பழனும் - 4495
கூன் இளந் தாழையின் மிடறு தாங்கும் விருப்புடைத் தீம் கனி - 4640
செம்மாந்த தெங்கின் இளநீரை - 906
